# ஸ்ரீ ராம் சந்த்தர்ஜி (பாபுஜி) யின்

## சுயசரிதம் – பாகம் 2

## 3 தொகுதிகள் (1944–1955)

## முதல் தொகுதி

## தகுதியாக்கம்

1944 மே மாதம் முதல் செப்டம்பர் வரை

உருது மொழி மூல நூலிலிருந்து ஆங்கிலத்தில்

மொழிபெயர்த்து அறிமுகம் மற்றும் குறிப்புகளுடன்

தொகுத்தவர்: **S.P.** ஸ்ரீ வஸ்தவா.

# பதிப்பாளரின் குறிப்பு

வணக்கத்திற்குய ஸ்ரீ பாபுஜி அவர்களின் குடும்பத்தாரின் சார்பில் ஸ்ரீ ராம் சந்த்தரின் சுயசரிதம் பாகம் 2 – ன் முதல் தொகுதியாகிய தகுதியாக்கம் (Preparation) என்ற புத்தகத்தைப் பதிப்பித்து வெளியிடுவதில் நான் மிகப்பெரும் மகிழ்ச்சியடைகிறேன். இது உருது மொழியில் எழுதப்பட்ட மூலப் பிரதியிலிருந்து லக்கிம்பூர் கேரியைச் சேர்ந்த பேராசிரியர் டாக்டர் S.P. ஸ்ரீ வஸ்தவா அவர்களால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு அறிமுகம் மற்றும் குறிப்புகளுடன் தொகுக்கப்பட்டுள்ளது. பொதுவாக மனித குலத்துக்கும், குறிப்பாக வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜியின் பக்தர்கள் மற்றும் சீடர்களுக்கும் நன்மையளிப்பதற்காக இது வெளியிடப்படுகிறது. இதன் இரண்டாவது தொகுதியாக, “பொது அறிவிப்பு” (DECLARATION) என்ற புத்தகமும், மூன்றாவது தொகுதியாக “பங்களிப்பு” (CONTRIBUTION) என்ற புத்தகமும், அடுத்தடுத்து வெளியிடப்படும்.

வணக்கத்திற்குரிய பாபுஜியின் சுயசரிதத்தின் இரண்டாம் பாகமாகிய இந்தப் பதிப்பு, அவருடைய ஆயுட்காலத்திற்குப் பிறகு, அதில் உள்ளது உள்ளபடியே, எதுவும் மறைக்கப்படாமல் தொகுக்கப்பட்டுள்ளது. ஸ்தூல உடம்பை விட்டு மெய்யுடம்பு எய்தியிருந்த ஸ்ரீ லாலாஜி சாகேப் அவர்களுடனும் மற்றும் பழங்கால மகான்களாகிய மாமனிதர்கள் பலருடனும் பாபுஜி நீடித்த தொடர்பு கொண்டவராக இருந்து, அவர்கள் சொல்லக் கேட்டு எழுதி வைத்த குறிப்புக்களிலிருந்து இப்புத்தகம் தொகுக்கப்பட்டுள்ளது. ஆன்மீகம் மற்றும் தெய்வீகத் தன்மைகளில் உண்மையான தகுதிச் சிறப்பு மிகுந்த ஒரு மாஸ்டர் உருவாக்கப்படுகின்ற செயல்முறையை இது வெளிப்படுத்துகிறது. எந்த விதத்திலும் தன்னைப் பெரிதாகக் கருதாமல் தனக்கென சொந்த ஈடுபாடுகள் அற்றவராக, கிட்டத்தட்ட தன்னந்தனியாக, அவரே

சொன்னதுபோல எந்த வேலையும் இன்றியே எப்போதும் வேலையில் சுறுசுறுப்பாக, மனிதகுலத்தின் நன்மைக்காக அவர் முனைப்புடன் ஈடுபட்டிருந்ததை வியப்புடன் பார்க்கும் வாய்ப்பைப் பெற்ற வயதில் வளர்ந்தவனாக இருந்தது, ஸ்ரீ பாபுஜியின் மூத்த மகனாக இருக்கும் அரிதான தனிச் சலுகையை நான் பெற்றிருந்தேன். டாக்டர் S.P. ஸ்ரீ வஸ்தவா அவர்கள் 1955 ஆம் ஆண்டில் ஸ்ரீ பாபுஜியிடம் வந்து சேர்ந்ததில் இருந்தே அவர் பாபுஜியின் குடும்பத்தில் ஒருவராகவே கருதப்பட்டிருந்தவர் என்பதால், அவருக்கு எங்கள் இதயம் நிறைந்த நன்றியைக் கூறுவது நிச்சயமாக அவருக்குச் சங்கடமாகவே இருக்கும். ஒரு விதத்தில் பாபுஜியின் குடும்பத்தில் ஒருவன் என்று சொல்லிக்கொள்வது அனைவருக்குமே பொருந்தும். ஆனால் வணக்கத்திற்குரிய பாபுஜியின் இதயத்திற்கு டாக்டர் ஸ்ரீ வஸ்தவா எவ்வளவு நெருங்கியவராகவும், பிரியமுள்ளவராகவும் இருந்தார் என்பது அனைவரும் அறிந்த ஒரு விஷயம்; அதை விவரித்துச் சொல்லத் தேவையில்லை. வணக்கத்திற்குரிய மாஸ்டரின் ஆயுட்காலத்தில், அவரே தன்னிடம் ஒப்படைத்த இந்த மிகப்பெரிய பணியை டாக்டர் ஸ்ரீ வஸ்தவா இப்போது நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொண்டிருக்கிறார். வணக்கத்திற்குரிய மாஸ்டர் ஸ்ரீ பாபுஜி தனது முழுமையான மெய்யொளியுடன் எந்நாளும் உலகிற்குக் கிடைக்கச் செய்வதற்கான இப்பணியை அவர் நிறைவேற்றுவதற்கு நமது முழு மனத்தோடு நாம் ஆதரவளிக்க வேண்டும்.

ஸ்ரீ ராம் சந்த்ரா மிஷன், ஷாஜஹான்பூர் (உத்திரபிரதேசம்), இந்தியாவின் நிறுவனத் தலைவராக (ஸ்தாபனத் தலைவராக) விளங்கும் ஸ்ரீ ராம் சந்த்தர் அவரால் தோற்றுவிக்கப்பட்ட இந்த ஸ்தாபனம் மற்றும் பயிற்சி முறையின் உயிர் மூச்சாக அவர் திகழ்கின்றார். எங்கள் தந்தையும், ஷாஜஹான்பூர் (உத்திரபிரதேசம்) மாஸ்டர் ஸ்ரீ ராம் சந்த்தர் ஜி மரியாதையுடன் மற்றும் அன்புடன் பாபுஜி என்று அறியப்படுகிறவரின்

இயற்கையான மற்றும் சட்டபூர்வமான வாரிசுகள் மற்றும் வம்சாவளியினர் என்ற முறையில், என் சகோதரர்கள் ஸ்ரீ உமேஷ் சந்த்தர் சக்ஸேனா மற்றும் ஸ்ரீ சர்வேஷ் சந்த்தர் சக்ஸேனா ஆகிய இருவருடன் நானும் சேர்ந்து “ஸ்ரீ ராம் சந்த்தரின் சுய சரிதம் பாகம் – 2” என்ற இப்புத்தகத்தை மூன்று தொகுதிகளாக, அவருடைய எந்நாளும் நிலைக்கும் வழிகாட்டுதல் மற்றும் நல்லாசிகளுடன், சத்திய நிலையை நாடும் ஒவ்வொரு சாதகருடைய நன்மைக்காகவும், பதிப்பித்து வெளியிடுகிறோம்.

விஜயதசமி (ஸ்ரீ பிரகாஷ் சந்த்தர் சக்சேனா)

அக்டோபர் 2, 1987 வழக்கறிஞர்,

ராய்பகதூர் பில்டிங்ஸ்,

(ஸ்ரீ ராம்சந்த்ரா மிஷன்)

ஷாஜஹான்பூர்(உ.பி.) – இந்தியா.

# அறிமுகம்

புலன்களால் உணரக்கூடிய மற்றும் புலன்களுக்கு அப்பாற்பட்டதாகிய இரண்டு உலகங்களிலும் மிக விழுமியதான (மேன்மைமிக்க) குறிக்கோளுக்கான பாதையில் வழிகாட்டுதலுக்காக ஒரு முழுமையான விதத்தில், ஸ்ரீ பாபுஜி ஆகிய நித்திய ஜீவிதம் பெற்றவரின் புனிதமான ஞாபகங்களுடன் வணக்கத்திற்குரிய நமது மாஸ்டரின் சுயசரிதம் இரண்டாம் பாகமாகிய இது, மகிழ்ச்சி நிரம்பிய இதயத்தின் உணர்வுகளோடு மனித குலத்திற்கு அளிக்கப்படுகிறது. மூன்று தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்த மிகப் பெரிய கருத்துத் தொகுப்பு, மாஸ்டரின் சீடர்களைக் கொண்ட விரிந்து பரந்த உலகம் முழுவதற்கும் பல்வேறு விதங்களில் மிக முக்கியமானதாக இருக்கிறது. மனித வாழ்க்கையின் நோக்கத்தையும் அதன் மெய்ப்பொருளையும் கண்டறிவதில், ஆராய்வதில் மற்றும் மெய்யாக உணர்வதில் மட்டுமன்றி சத்திய நிலையை எய்துவதிலும் கூட ஆர்வம் கொண்ட மானிட இனத்தவராகிய, இன்னும் பரந்த வட்டத்திற்கும் கூட இது மிகவும் அவசியமாக இருக்கிறது. முதலாவதாக, இது மாஸ்டர் என்கிற ஒரு தனி மனிதரை தன்னுடைய மாஸ்டருக்கு மட்டுமே பணிவோடு கீழ்ப்படிந்து நடப்பதில் ஒரு அசாத்தியமான துணிவு மற்றும் நம்பிக்கையோடு விளங்குகின்ற, வேறு யாராலும் பின்பற்ற முடியாத ஒரு உதாரண புருஷராக வெளிப்படுத்திக் காண்பிக்கிறது. அவர் தன் மாஸ்டரின் தவறாத, எப்போதும் புதியதாக விளங்கும் வழிகாட்டுதலின் கீழ், மற்ற அனைத்தும் மதிக்கின்ற, அடங்கி நடக்கின்ற விதத்தில் மனிதனின் மிகப்பெரிய மாண்பினை புனிதம் பெறச் செய்கின்ற ஒரே நோக்கத்துடன் முன்னேறிச் சென்றார் என்பதை இது தெளிவுபடுத்துகிறது. இரண்டாவதாக, மாஸ்டருடைய ஆயுட்காலத்தில் ஒரு மிகவும் குறிப்பிடத்தக்க பகுதியில் அவர் செய்த பணிகளின் வளர்ச்சியின் போக்கினைக் காண்பதற்கான ஒரு வாய்ப்பினை இது அளிக்கின்றது.

இந்த ஆய்வின் மூன்றாவது படியில், மானிட முயற்சிகளின் பதிவு செய்யப்பட்ட சம்பவங்களின் துவக்கத்தைக் கடந்து, வெறும் யூகங்களின் பகுதிகளில் இழக்கப்பட்டுவிட்ட காலம் முதலாக இன்றைய காலம் மற்றும் வரும் காலம் வரையில் ஒரு நீண்ட காலகட்டத்தில் இந்திய மண்ணில், இனம் மற்றும் தட்ப வெப்ப எல்லைகள் அனைத்தையும் தாண்டியதாக இருக்கும் மனித கலாசாரத்தின் நீண்ட சரித்திரத்தின் அற்புதமான ஒரு மதிக்கத்தக்க அத்தியாயத்தில் சேர்த்துக்கொள்வதற்கு, இவை யாவற்றையும் ஒட்டு மொத்தமாக இணைக்கும் போது அது பரம்பொருளைப் பற்றிய விஞ்ஞானம் (பிரம்ம வித்யா) அல்லது யோக முறை ஒழுக்கம் என்று சொல்லப்படுகின்ற கொள்கை மற்றும் பயிற்சியை உடைய ஒரு தொடர்ச்சியான முறைப்படுத்தப்பட்ட அமைப்பைத் தருகின்றது என்பதையும் காண முடியும்.

இந்தக் கருத்துத் தொகுப்பின் மதிப்பு பற்றி, இதன் விசேஷத் தன்மையின் ஆழ்ந்த நிலைகளுக்குள் செல்ல வேண்டிய தேவை இல்லாமல், ஒரு சுயசரிதம் எவ்வாறு இருக்குமோ அப்படியே, வணக்கத்திற்குரிய ஒரு மனிதரின் வாழ்க்கையின் ஒரு பகுதியை சாதாரணமாகப் படிக்கின்ற வகையில் இதற்கு நான்காவதாக ஒரு பரிமாணமும் இருக்கலாம். மகிழ்ச்சி நிறைந்த இதயத்துடனும் எனது சொந்த அடர்ந்த உணர்வுகளையும் சுருக்கமாகக் குறிப்பிடுவதற்கு முன்பாக, இந்த வெவ்வேறு அம்சங்களை நான் சற்று விளக்கமாக எடுத்துச் சொல்வதைத் தொடர விரும்புகிறேன்.

1. 1974-ம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்ட “ராம் சந்த்தரின் சுயசரிதம்” முதல் பாகத்திலிருந்து ஸ்ரீ பாபுஜி அவர்கள் இந்தியாவில் உத்திரப் பிரதேச மாநிலத்தில் ஷாஜஹான்பூரில் புகழ்பெற்ற செல்வவளம் நிறைந்த காயஸ்தா குடும்பத்தில் பிறந்தவர்; அக்குடும்பத்தின் வரலாறு பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து தொடர்வது கண்டறியப்பட்டுள்ளது என்பது நமக்கு ஏற்கெனவே தெரியும். ஒரு

ஆன்மீக சாதகராக மாறுவதற்கு முன்பாக, அவரது குழந்தைப் பருவத்தில் நடைபெற்ற சில நிகழ்ச்சிகளும், அப்போது அவரது மனப்பாங்குகளும், பிறகு ஒரு குடும்பத்தலைவராக, இல்லறத்தில் ஈடுபட்டவராக மற்ற எந்த ஒருவரையும் போலவே சாதாரணமாக ஒரு அரசாங்க அலுவலகத்தில் சாதாரண ஊழியராக வேலை செய்தபோது நடந்தவற்றையும் பாபுஜி தனது நாட்குறிப்பின் பக்கங்களில் தெரிவித்திருக்கிறார். இந்த நாட்குறிப்பு 1928 ஆம் ஆண்டு ஏப்ரல் நான்காம் தேதியிலிருந்து, ஆதிகுருநாதர் லாலாஜி சாகேப் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் அவர் ஆன்மீகப் பயிற்சி பெறத் துவங்கி ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு ஆரம்பமாகிறது. லாலாஜியை அவர் முதன் முதலில் சந்தித்தது 1922 ஆம் ஆண்டு ஜூன் 3 ஆம் தேதியாகும். இந்த நாட்குறிப்பு அவ்வப்போது (பொதுவாக மாதம் ஒரு முறை) ஆதிகுருநாதர் லாலாஜிக்கு ஒரு சுருக்கமான அல்லது நீண்ட கடிதத்துடன் சமர்பிக்கப்படுவது (அனுப்பப்படுவது) வழக்கமாக இருந்தது. ஆதிகுருநாதர் லாலாஜியிடமிருந்து பாபுஜிக்கு ஆறு கடிதங்கள் மட்டுமே பதிலாக வந்துள்ளன. அதிலும் ஒன்று ஷாஜஹான்பூரைச் சார்ந்த பழைய பிரிசெப்டர் மதன் மோகன் லாலுக்கு எழுதப்பட்டது. இவற்றில் முதல் கடிதம் 27.11.1929 ஆம் தேதியிட்டதாகும். (இது இந்த தொகுதியிலும் 05.09.1944 என்ற தேதியிட்ட நாட்குறிப்பில் முழுமையாகக் கொடுக்கப்பட்டுள்ளது). அவர் (லாலாஜி) 10.03.1931 அன்று எழுதிய கடிதம் வழக்கத்தைவிட எழுதிய நீண்ட கடிதம் ஆகும். அவர் 14 / 15.08.1931 அன்று இவ்வுலகை விட்டு மறைவதற்கு 5 மாதங்களுக்கு முன்பு எழுதிய கடைசி கடிதமாகும். அது ஸ்ரீ பாபுஜியின் தனிச்சிறப்புடைய குணமாகிய மன ஒருமைப்பாடு மற்றும் நேர்மைக்கும், தனக்கு வழிகாட்டுவதற்கு தன் மாஸ்டரிடம் மட்டுமே முழுமையான நம்பிக்கையும், விசுவாசமும் கொண்டவராக ஆன்மீகம் மற்றும் பிரம்ம வித்யாவில், ஒரு மிகப்பணிவான ஆயினும் உறுதியான பற்றுடையவராக

அவர் இருந்ததற்கும் ஒரு சான்றான காட்சியை அளிக்கிறது. அவரது நாட்குறிப்புகளின் முதல் பாகமாகிய அது 1932, நவம்பர் மாதம் 28 ஆம் தேதியுடன் முடிவடைகிறது, அதில் கடைசிக் குறிப்பாக, ஒரு விளக்கம் தெரிவிக்கும் விதமாக, அவரது வளர்ச்சி பற்றி ஒரு வரைபடம் போன்ற சிறு வர்ணனையை அவரது வாழ்க்கையின் இரண்டாவது கட்டம் "என் மாஸ்டர் விரும்பியது போல ஒரு மாஸ்டராக" ஆரம்பிப்பது வரை என்று பாபுஜி விருப்பமின்றியே எழுதியுள்ளார். "என் மாஸ்டர் விரும்பியது போல ஒரு மாஸ்டராக" என்ற இந்த வாக்கியம் ராம் சந்த்தரின் சுயசரிதம் பாகம் 1-ன் கடைசி வரியில் இடம் பெற்றுள்ளது.

அதன் பிறகு உருது மொழியில் எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதியாக சுமார் ஆயிரத்து இருநூறு பக்கங்களில் ஸ்ரீ பாபுஜி எழுதியுள்ள இந்த நாட்குறிப்பு - இதில் முதல் குறிப்பு 10.5.1944 தேதியில் ஆரம்பிக்கிறது. இதில் கடைசிக் குறிப்பு 30.6.1955 தேதியிட்டதாக உள்ளது. இந்த நாட்குறிப்புகளின் முக்கியமான அம்சமாக இருப்பது, ஸ்ரீ பாபுஜிக்கு, பௌதீக ரீதியில் (உடலினால்) பிரிந்து சென்ற ஆதிகுருநாதரிடமிருந்து ஊக்கத்தையும் வழிகாட்டும் ஆலோசனைகளையும் அளிப்பதற்காக அவர் பெற்ற சங்கிலித் தொடர் போன்ற உதவிக் குறிப்புகள், உத்தரவுகள் மற்றும் பாடங்களே ஆகும். இவை மற்ற பல்வேறு மனிதர்களால், அவரவர்களுடைய சொந்த அகங்காரம் மற்றும் தன்னல நோக்கங்களுக்கு ஏற்றவாறு அதிகரித்துக் கொண்டே போகின்ற தவறாக வழி காட்டப்பட்ட அவர்களது முயற்சிகளின் பின்னனியில், அதற்கு எதிராக, ஆதி குருநாதரின் உண்மையான பணியின் மரபைத் தொடர்ந்து அவர் செய்ய ஆரம்பிப்பதற்கு அவரது தயக்கத்தை நீக்குவதற்கும், அந்தப்பணிக்கு அவரைத் தயார்படுத்துவதற்கும் அவை (ஆதிகுருவின் வழிகாட்டுதல்கள்) போதுமானவையாக இருந்தன. இப்படி தகுதியாக்க நிலையின் ஆரம்பகால கட்டமாக ஐந்து மாதங்கள் கடந்த பிறகு, பாபுஜி மிக உயர்ந்த

தகுதிச் சிறப்பு பெற்ற பழங்கால குருமார்கள் பலரிடமிருந்து தகவல் தொடர்பையும், உதவிக் குறிப்புகளையும் பெற ஆரம்பித்தார். எனினும், ஆதிகுருநாதரின் வழிகாட்டுதலின் கீழ் மட்டுமே அவருடைய வேலை ஆரம்பமாகியது. காலங்காலமாக உருவாகி வளர்ச்சியடைந்த பழங்கால யோகமுறை விஞ்ஞான வழியின் அடிப்படையான கொள்கைகளை கைவிடாமல், தற்கால நிலைமைகளின் தேவைகளுக்கு ஏற்ற விதத்தில் இதற்கான அடித்தளங்களை அவர் (லாலாஜி) அமைத்துக்கொடுத்தார். 31.03.1945 (ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தைந்தாம் ஆண்டு மார்ச் மாதம் முப்பத்து ஒன்றாம் தேதியன்று) இந்தத் திருநாளில் ஷாஜஹான்பூர் ஸ்ரீ ராம் சந்த்தர்ஜி அவர்கள் வணக்கத்திற்குரிய மாஸ்டர் ஸ்ரீ லாலாஜியின் (ஃபடேகரின் சமர்த்த சத்குரு மகாத்மா ஸ்ரீ ராம் சந்த்ரா) ஆன்மீகப் பிரதிநிதியாக / அவரது பதவிக்கு வாரிசாக விளங்குகிறார் என்ற ஒரு மிகத்தெளிவான உறுதியான “பொது அறிவிப்பு” செய்யப்பட்டது. அதற்குப் பிறகு சுமார் பத்து ஆண்டுகள் ஸ்ரீ ராம் சந்த்ரா மிஷன், ஷாஜஹான்பூர் என்ற பெயரில் ஒரு ஆன்மீக சங்கத்தைத் தோற்றுவித்து நிலை நிறுத்துவது, சகஜமார்க்கம் என்ற பெயரில் யோகமுறை விஞ்ஞானத்தின் கொள்கை மற்றும் பயிற்சி முறை அடங்கிய ஒரு வழிமுறை வளர்ச்சியடையச் செய்வது, அவ்வப்போது அது பற்றிய சில மேலோட்டமான குறிப்புகள் மட்டுமே கிடைத்திருக்கின்ற இயற்கையின் பணி எனப்படுகிற பெருமளவு தெய்வீக ரகசியமான செயல்பாடுகள் ஆகியவை பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. இவை இந்த சுயசரிதத்தை எழுதியுள்ள ஆசிரியரின் சிறப்பான தன்மையை – அதாவது, அவர் அசாதாரணமான, அசாத்தியமான துணிச்சலும், தன்னம்பிக்கையும் கொண்டவர் என்பதை, தன் கையில் எடுத்துக்கொண்டுள்ள வேலையில் முழுமூச்சுடன் ஈடுபடுகிற தன்மையுடையவர் என்பதை, அகங்காரம் சார்ந்த தற்பெருமை உறுதிப்பாடுகளையும், தன்னலம் நாடுவதையும் அறவே நீக்கியவர்

என்பதை, தன் மாஸ்டருக்கு மட்டுமே முழுமையாகக் கீழ்படிந்து நடப்பவராக, அந்த மாஸ்டர் தேர்ந்தெடுத்த சீடராகிய தனது தலை (அறிவு), இதயம், கைகள் எனப்படும் கருவிகளின் மூலமாக, அந்த குருவை உயிர் வாழச் செய்பவராக இருந்தார் என்பதை, வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இன்றைய நாள் வரையில் மற்றும் இனி எந்நாளும் தொடர்ந்து விளங்கப் போகின்ற, இந்தியாவின் தனிச்சிறப்புடைய குணநலன்களை விளக்குகின்ற வாழ்க்கை முறை, மற்றும் ஞானப் பாரம்பரியத்தைத் தொடர்வதற்கு உறுதி கொண்டவர் என்பதை இது வெளிப்படுத்துகின்றது. இதற்குப் பிறகு வணக்கத்திற்குரிய மாஸ்டர் ஸ்ரீ பாபுஜி இருபத்தெட்டு ஆண்டுகள் உலகில் உயிர் வாழ்ந்திருந்தார். சரியாகச் சொன்னால் 19.4.1983 வரை சரீர வடிவத்தில் இவ்வுலகில் வாழ்ந்தார். பின்பு ஏதாவது ஒரு சமயத்தில் அவரது சுயசரிதத்தின் மூன்றாம் பாகமும் கூட நமக்குக் கிடைக்கலாம். அது ஒருக்கால் அவரது நித்தியமான புருஷத்துவத்தை மேலும் புதிய தன்மையில் வெளிப்படுத்தலாம். அவருடைய பணிகள் அனைத்திற்கும் மேலாக, அவரால் மற்றும் பிறரால் தெரிவிக்கப்பட்டுள்ள அவரது வெளித்தோற்றத்தைக் கடந்ததாக, இன்னும் ஆராய்ந்து அறிவதற்கும், சிந்தித்துப் புரிந்துகொள்வதற்கும், மெய்யாக உணர்வதற்கும் அவரை நேசிப்பவர்களுக்கு நிச்சயமாக இன்னும் எவ்வளவோ இருக்கும்.

2. மிகவும் வெளிப்படையாகத் தெரிகின்ற மட்டத்தில் வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜியின் வேலையானது “ஸ்ரீ ராம் சந்த்ரா மிஷன்” என்னும் பெயர் கொண்ட, ஆன்மீக சகாக்களை உறுப்பினர்களாக உடைய சங்க அமைப்பும் மற்றும் அதன் கட்டமைப்பும், இயக்கமும் சார்ந்த உடைமைகளும் ஆகும். மனித உடலைப் போலவே அதுவும் மிகவும் எளிதில் பாதிப்புகளுக்கு உள்ளாகக் கூடியதாக எல்லாவிதமான நோய்களுக்கும், மருத்துவ சிகிச்சைக்கும் உட்படக் கூடியதாக இருக்கிறது. எனினும், அது ‘சகஜமார்க்கம்’ என்று

அறியப்படுகின்ற மெய்ஞ்ஞானம் மற்றும் பயிற்சியை உடைய ஒரு ஆன்மீக வழிமுறைக்கு ஆலயமாக விளங்குகின்றது. அது மாஸ்டராகிய ஸ்ரீ பாபுஜியின் எத்தனையோ ஆராய்ச்சிகள் மற்றும் கண்டுபிடிப்புகளிலிருந்து உருவாக்கப்பட்டிருக்கிறது. அவருடைய சுயசரிதத்தின் இரண்டாம் பாகமாகிய இந்தத் தொகுதிகளில் அவற்றுள் பல விஷயங்களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, இப்படி சிரமப்பட்டு உருவாக்கப்பட்டு வருங்காலத் தலைமுறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இந்த பயிற்சி முறையையே இந்த அமைப்பின் உயிராகக் கருத முடியும். இதைப் பற்றிய ஆராய்ச்சியாகிய செயல்முறை மற்றும் அதன் உண்மையை கிரகித்துக்கொள்ளுதல் அல்லது அதன் அடிப்படையில் இருப்பது எதுவாயினும் அதையே இந்த அமைப்பில் மாஸ்டருடைய பணி மற்றும் பங்களிப்பாக விளங்கும் மனம் அல்லது அடிப்படையான உணர்வு நிலை (ப்ரக்ஞானம் அல்லது விஞ்ஞானம்) என்று சொல்லலாம். இப்படி இந்த மார்க்கம் என்ற அதன் உடலமைப்பு, உயிர், மனம் என்ற வரிசைப்படி அல்லது வேறு விதமான மனிதர்களால் அவர்களது சொந்த நாட்டங்கள் மற்றும் பற்றுக்களுக்கு ஏற்றவாறு இதைத் தலைகீழாக மாற்றியோ இது மதிப்புடையதாகக் கருதப்படலாம். ஆனால் காலத்தின் நாசக் கரங்களின் மற்றும் எத்தனையோ நிலைகளின் வீச்சுக்கு எட்டாத சூட்சுமமான நிலைகளில், அந்தப் பணியின் ஆன்மா அல்லது உயிர் மற்றும் அனைத்தையும் கடந்த உச்ச நிலையானது இன்னும் முன்னோக்கிச் செல்கிறது. இயற்கையின் திட்டத்தினுடைய அந்தப் பகுதியும், அதைக் கடந்து அப்பாலும் உள்ள நிலைகளும், இந்தப் பணியின் நித்தியமான என்றும் தொடர்கின்ற அம்சத்தை உருவாக்கியுள்ளன. இந்தத் தொகுப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு யாக்ஞவல்கியரிடமிருந்தும், அதற்கும் முந்தைய பெயர் அறியாதவர்களிடமிருந்தும், ஸ்ரீ பாபுஜி அவர்களுக்கும் வருங்காலத் தலைமுறையினருக்கும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், மோசஸ், ஜாரதுஷ்டிரர்,

புத்தர், ஏசுகிருஸ்து, முகம்மது நபி, கபீர், ஸ்ரீ சைதன்யர், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர் மற்றும் லாலாஜி சாகேப் ஆகியவர்களிடமிருந்தும் மற்றும் இந்த மிகப் பரந்த பிரபஞ்சத்தில், சிறிதும் முக்கியத்துவம் இல்லாத இந்தப் பூமிக்கோளத்தில் மனிதனின் பெருமை வாய்ந்த வரலாற்றில் இன்னும் எத்தனையோ அறியப்பட்ட மற்றும் அறியப்படாத மகான்களிடமிருந்தும், தெய்வீக உண்மைகள் கிடைத்துள்ளன.

வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜியின் பணியும், பங்களிப்பும் தொடர்ந்துவாழும் மற்றும் வளர்ச்சியடையும் என்பதில் சந்தேகமே இல்லை; எனினும் அது தனிமனிதர்களுக்காக, அவர்களால் இதிலிருந்து எந்த அளவுக்கு நன்மை பெற முடிகிறது என்பதைச் சார்ந்ததாகவே இருக்கிறது. மாஸ்டர் மற்றும் அவரது பணியின் நேரடியான செயல்பாட்டின் சிறப்பைக் காணும்படியாக அவருடன் பௌதீக உருவில் (Actual Manifestation) நெருங்கியிருக்கும் அதிர்ஷ்டம் நிச்சயமாக நமக்கு இருந்தது. யோக முறையின் புற வடிவமாகிய ஹட யோகம் மற்றும் உட்புற வடிவமாகிய ராஜ யோகம் இவற்றின் முக்கியத்துவங்கள் மற்றும் ஒன்றுபட்ட தொகுப்பு சம்மந்தப்பட்டதாகிய மனிதனின் மெய்யறிவு திறக்கப்படுவது மற்றும் மெய்யுணர்வு எய்துதல் சம்பந்தமான அவருடைய பணியின் மிக மேலான விஞ்ஞான அம்சங்கள் மிக நிச்சயமாக விசேஷமானவை மற்றும் புரட்சிகரமானவையாகும். இதய மன்டலத்தைக் கடந்து இருக்கின்ற (சம்பிரதாயமான யோகம் மற்றும் தாந்திரீக வழிமுறையின்படி மனிதனின் உச்சந்தலையில் விளங்கும் சஹஸ்ராரம் எனப்படும் ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரை என்று கூறப்படுகின்ற சக்கரம் வரையில் பரவியிருக்கின்ற இதய மண்டலம்) மனோ மண்டலம் மற்றும் மைய மண்டலம் பற்றிய அவருடைய கண்டுபிடிப்பு ஆன்மீகத்தில் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கியிருக்கிறது. ஒரு குருவானவர் தனது சீடனுக்கு ஒரு

வேலைக்காரன் போலவும், ஒரு தாயைப் போலவும் அதையும் விட மேலானவராகவும் உதவியும், சேவையும் செய்ய வேண்டும் என்பது பற்றி அவர் வலியுறுத்திக் கூறியது, 'பிராணாஹூதி' என்ற செயல் முறையை புதிரான கற்பனைகளுக்கு அப்பாற்பட்டு, பரவலான பயனுறுதி மிக்க பயன்பாட்டுக்காக செம்மைப்படுத்தியது ஆகியவை யோக முறைப் பயிற்சிக் களத்தில் ஒவ்வொரு காலகட்டத்திலும் மாபெரும் புகழையும், கண்மூடித்தனமாக பின்பற்றுகிற தன்மையையும் அனுபவித்துக் கொண்டிருந்த எத்தனையோ போலி ஞானிகளுக்கு உண்மையாகவே தலைகீழான – அதாவது புகழையும், சீடர்களையும் இழந்த – நிலைமையை உண்டாக்கியது. அவருடைய சுய சரிதத்தின் இரண்டாம் பாகமாகிய இந்தத் தொடர்கள் மேலும் ஒரு விசேஷமான, வியப்பூட்டுகின்ற (அல்லது திகைப்பளிக்கின்றதாகவும் இருக்கின்ற) மேலும் ஒரு விஷயத்தை முன் வைக்கிறது. அது உடலால் உலகை விட்டுச் சென்று விட்ட மாஸ்டருடன் உள்முகத் தொடர்பு கொண்டு உரையாடும் அதிசய குணமேயாகும். அது உண்மையான விதத்தில் ஆன்மீகப் பயிற்சியாகிய தீப்பந்தத்தை – ஒளிச்சுடரை – ஏந்திக் கொண்டு முன்னோக்கிச் செல்வதற்கான ஒரு மனிதரின் உயர் தகுதிக்கும் நற்பெருமைக்கும் ஒரு அறிகுறி மற்றும இன்றியமையாத நிபந்தனையாக விளங்குகிறது. ஒரு உண்மையான உயர்ந்த தகுதிச் சிறப்புடைய மாஸ்டர் தன் உடலை விட்டு நீங்கிச் சென்று நூற்றாண்டுகள் மற்றும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகும் கூட அவருடைய சுமையிலிருந்து விடுதலை பெறுவதற்கு ஒரு நிபந்தனையாக இதை – அதாவது உள்முகத் தொடர்பு கொண்டு உரையாடும் திறன் பெற்றிருப்பதைக் கூறும் அளவுக்கு இருப்பது மேலும் திகைப்பை அளிக்கிறது. இவ்விதமாக, உண்மையான தகுதிச் சிறப்புடைய ஒவ்வொரு குருநாதரும், உண்மையான தகுதி பெற்ற ஒரு சீடருக்காக ஏங்கியிருந்தார்கள். ஆனால் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரும்,

சகஜமார்க்க முறையின் ஆதி குருவாகிய வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் அவர்களும் பெற்ற பாக்கியத்தை அவர்களில் யாரும் பெறவில்லை. பாபுஜியைப் போன்ற ஒரு மாமனிதர், தான் உறுதியாகச் சொல்லிக்கொண்ட ஒவ்வொரு வார்த்தையிலும் முழு நேர்மையும், சவால் விடும் உண்மைத் தன்மையும் இணைந்தவராக நின்று தன்னை சோதித்துப் பார்க்கும் தகுதி உடைய எந்த ஒருவராலும் சோதனைக்கு உள்ளாக்கப்படுவதற்குத் தயாராக இல்லாமற் போயிருந்தால், இதைக் கற்பனையான தேவதைக் கதையாகவே கருதும்படி ஆகியிருக்கும். இவையனைத்தும் தன்னையே ஏமாற்றிக்கொள்கின்ற அளவுக்கு மீறிய (மித மிஞ்சிய) கற்பனையில் உருவானதாக இருக்கலாம் என்று மாஸ்டரின் ஆயுட்காலத்தில் – வேறு யாருமல்ல – அவரே நினைத்திருந்தார்: எனவே, தனக்கென்று எதையும் எதிர்பார்க்காமல் தன் வேலையைத் துவங்குவதற்கு அவர் கிட்டத்தட்ட பதினான்கு ஆண்டுகள் தயங்கிக் கொண்டிருந்தார். ஸ்ரீ பாபுஜியின் பணி மற்றும் பங்களிப்பு பற்றிய இந்த வியப்பூட்டுகின்ற மற்றும் திகைப்பளிக்கும் அம்சமானது ஆன்மீக விஞ்ஞானம் மற்றும் பிரம்ம வித்யாவின் வரலாற்றில் ஒரு சர்ச்சைக்கு இடமான பிரச்னையை நாம் நேருக்கு நேர் சந்திக்கச் செய்கிறது.

3. ஒரு தனி மனிதனின் சுய அடையாளத்தின் முடிவான – உச்சமான சாராம்சத்தைக் கண்டறியும் மானிட முயற்சிகளின் பழைமையான பதிவுகளில் வேதங்களின் தொகுப்புகளில் ருதம் (Rta) அல்லது கடவுள் அல்லது அதற்கு வேறு என்ன பெயர் அளிக்கப்பட்டிருந்தாலும் அதனில் இருந்து தெய்வீக உண்மைகள் கூறப்பட்டன என்ற உண்மையை சந்தேகத்திற்கு இடமின்றி உறுதியாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த நிகம (NIGAMA) சம்பிரதாயம் (காரண ரீதியாக ஊகித்து அறியும் வழிமுறை) - அதாவது, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தனி மனிதருக்கு மேலேயிருந்து உண்மை வந்திறங்குகிறது

என்பதை உறுதிப்படுத்திக் கூறும் கருத்து ஆன்மீகம் மற்றும் மதம் சார்ந்த யூத, கிருத்துவ, இஸ்லாமிய வழிமுறைகளிலும் ஏதோ ஒரு விதத்தில் ஆதரிக்கப்பட்டுள்ளது. எனினும், வேதங்கள் மற்றும் வேதாந்த சம்பிரதாயங்கள் தவிர்த்து மற்றபடி கிட்டத்தட்ட இந்திய மரபு வழிகள் அனைத்தும், அதாவது சைவம், ஜைனம், புத்த மதம் மற்றும் வைணவத்திலும் கூட மற்றும் யோகம், தந்திர மார்க்கங்களாகிய ஸூஃபி (suffi) முறையும், ஒரு சாதாரண தனி மனிதன், ஒரு மனிதன் எய்தக்கூடிய உயர்நிலை மற்றும் மகத்துவத்தின் பாதையில் மேலேறிச்சென்று சத்தியநிலையையும், பரம்பொருளில் விளங்குவது எதுவாயினும் அதையும் சென்றடைவதற்கு ஆகம சம்பிரதாயத்தையே முக்கியமாகக் குறிப்பிடப்பட்டிருப்பது வினோதமாகத் தோன்றுகிறது. இது கன்ஃபூசியஸ் மற்றும் லாவோ ஸே – யின் சீன வழிமுறைக்கு நெருங்கியதாகத் தோன்றுகிறது. மஹாயான புத்த மதம், வைணவம், கத்தோலிக்க கிருத்துவ மதம் மற்றும் இஸ்லாமிய சூஃபியிஸம் ஆகியவற்றின் கீழ் உயர்வானதாகக் கருதிப் போற்றப்பட்டிருக்கின்ற மானிட முயற்சி மற்றும் இறைவனின் அருள் (அப்பியாசம் – [பயிற்சி] மற்றும் கிருபா) ஆகியவை இணைந்த ஒரு நிலையானது இதில் ஒரு சமாதானத்துக்கான முயற்சியாக, காலம் மற்றும் அனுபவத்தில் பிற்காலத்தில் ஒரு சமயத்தில் உருவானதாகத் தோன்றுகிறது. மகாபாரத காவியத்தில் ‘மனிதனை விட மேலானது எதுவுமில்லை’ என்று வேதவியாசர் துணிச்சலுடன் கூறியிருப்பது ஆன்மீகம் மற்றும் பரம்பொருள் பற்றிய விஞ்ஞானம் ஆகிய ஒன்றுக்கொன்று எதிரானதாகத் தோன்றுகின்ற இரண்டு வழிமுறைகளின் இந்தத் துணிவான சமரச பாவனையை எதிரொலிக்கிறது. இந்தப் பல்வேறு வழிமுறைகள் சம்பந்தமான புத்தகங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதும், கல்வி கற்பது போலப் படித்துப் புரிந்து கொண்டு விளக்கிச் சொல்வதும் முடிவற்றவையாகவே இருக்கும். அந்த புத்தகங்களில்

கூறப்பட்டுள்ளவைகளை அதன் அனுபவம் மற்றும் மெய்யறிவின் தன்மையில் அதன் ஆணிவேரையே கண்டறிவது முற்றிலும் வேறான ஒரு விஷயமாகும். அது மிகவும் அரிதானது, ஆனால் உண்மையானது. அதற்கென்று நிச்சயமாக ஒரு வழி இருக்கிறது. அதைத்தான் சித்தார்த்தனும், நரேந்திரநாத தத்தரும் கண்டறிந்த ஒரு குருநாதரின் உதவியுடனோ அல்லது அவரது உதவியில்லாமலோ, ஒரு புத்தராக அல்லது விவேகானந்தராக மாற முடிந்தது. இந்த ஆன்மீகத் துறையில் தகுதிச் சிறப்பு மிகுந்த ஒருவரின் வழி அதுதான். தகுதிச் சிறப்புடைய அந்த மனிதர்களின் பாதை அவரால் எப்படிக் கண்டறியப்பட்டது அல்லது எப்படி அவருக்குக் கொண்டுவரப்பட்டது என்பதை இந்தப் புத்தகத்தில் ஸ்ரீபாபுஜி தெரிவித்திருக்கிறார்.

ஸ்ரீ ராமானுஜாச்சாரியார் அவர்களால் மிகச்சிறப்பான முறையில் விவரிக்கப்பட்டுள்ளதாகிய, மனித முயற்சி, குருவின் அருள் ஆகிய இரண்டும் ஒத்திசைவுடன் இணைந்த வழிமுறை, ஆடம்பரத்தை, சுயகர்வத்தைத் தடுப்பதாக, எளிமையை வசீகரிப்பதாக மிகையில்லாத, இயற்கையான நடைமுறை சார்ந்த விதத்தில் இங்கே அளிக்கப்பட்டுள்ளது. “உங்களின் பேரருளோடு என் பிரபுவே! உங்களின் உண்மையான அனுபவத்திலிருந்து பிறந்ததாகிய அன்பினால் உங்களுக்கு அடிமையாக விளங்கும் தன்மையை எனக்கு அளியுங்கள். இதனைத் தவிர வேறு எந்த விதியும் (ஊழ்வினையும்) நானறியேன்”. இந்த வாக்கியங்களில் உள்ள முழுமையான சரணாகதி நிலை, பக்தனை நோக்கி பரம்பொருளே வேறு வழியின்றி ஓடிவரச் செய்கின்ற அந்தத் தன்மை, எதையும் எதிர்பாராத அர்ப்பணிப்பு உணர்வுடன் இங்கு விவரிக்கப்பட்டுள்ளது. மாபெரும் சக்ரவர்த்திகளும் பொறாமைகொள்கின்ற அந்தப் புனிதமான, பூரண வறுமை (ஒன்றும் இல்லாதத் தன்மை) மகாசமுத்திரத்தையே அந்த நீர்த்துளியில் வந்து கலந்துவிடுவதைத் தவிர்க்க இயலாதபடி கட்டாயமாக்கும் விதமாக ஒரு

நீர்த்துளி கடலில் கலந்துவிடும் தன்மை; பிரபஞ்சத்தின் தலைவனாகிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், அவளுடைய பாதங்களை முத்தமிடும்படிச் செய்த ராதையின் தெய்வீகமான அந்தக் காதல்; கபீர் என்கிற அந்தப் பரிசுத்த ஜீவனைத் தேடி அவரது குரு ராமானந்தர் என்ற மெய்ஞ்ஞானி தன்னை மறந்து ஓடிவரச் செய்த அந்தத் தூய்மையான அமைதி; வெளியே செல்ல இருக்கும் ஒரு தாயை குனிந்து தன்னைக் கைகளில் எடுத்துக்கொள்ளச் செய்கின்ற ஒரு சிறு குழந்தையின் செயலற்ற தன்மை; தன்னை இல்லாமல் (இறந்து விட்டது போல்) ஆக்கிக் கொள்ளுதல் மற்றும் சுயத்தை, சுயமற்ற நிலையை எய்தி தன்னைத்தானே படைத்துக் கொண்டு மற்றும் அனைத்தையும் படைத்தவராகிய பரம்பொருளே, அந்த பக்தனின் விதியை எழுதுவதற்கு முன்பு அவனது விருப்பத்தைக் கேட்கும் அளவுக்கு உயர்வடையச் செய்துகொள்ளுதல் ஆகிய அனைத்தும் இங்கே உண்மையான ஞானக்கண் பெற்றுள்ளவர்கள் காணும்படியாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

“பிருந்தாவனத்தில் வாழ்ந்த இடையர்களும், பசுக்களிடம் பால் கறக்கும் இடையர்குலப் பெண்களும் என்னை இந்த அளவு நேசிப்பதற்கான திறமையை எங்கிருந்து பெற்றார்களோ” என்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பாராட்டுகின்றார்.

அன்பு செலுத்துவதில் – நேசிப்பதில் – இந்த செயல் நுட்பமல்லாத செயல்முறை பாமரர்களும் மற்றும் அனைவரும் ரசிப்பதற்கும், வியப்பதற்கும் அற்புதமான எளிய விளக்கமாக கவிதைகளிலும், இலக்கியங்களிலும் புகழ்ந்து கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்தப் பேரன்பு பின்பற்றுவதற்கும், அதில் முயன்று ஈடுபடுவதற்கும் மிக அரிதானது. ‘அவர் எப்போதும் அங்கே இருக்கிறார். ஆனால் நீ அங்கே இல்லாதிருக்கும்போது மட்டுமே அவர் அங்கு இருக்கிறார்’. மிக உச்சநிலையான நோக்கத்தை எய்துவதற்கும், அதுவாகவே

(பரம்பொருளாகவே) மாறுவதற்கும் உதவும் அணுகுமுறைகளாகிய ஒவ்வொன்றையும் நீக்கிக் கொண்டே செல்லும் நிகமம், ஒவ்வொரு படியாக உயர்வடையும் ஆகமம் ஆகிய இரண்டின் ஒத்திசைந்த வழியாக, மிக சாதாரணமாக இருந்தாலும் மனதில் பற்றிக்கொள்ளக் கூடியதாகவும் எண்ணங்களிலும் வார்த்தைகளிலும் புதிரான தன்மையுடையதாகவும் அமைந்ததாகிய ஒன்று, அதன் எளிமையான தன்மையே அதனுடைய மயக்கும் திரையாகக் கொண்டு இன்னும் ஒருமுறை நமக்குக் கிடைத்துள்ளது. இது கிடைப்பதற்காக நாம் காலங்காலமாகக் காத்திருக்க வேண்டியிருந்தது. இது மிகச் சாதாரணமான ஒரு தனி மனிதன், மிகச்சாதாரணமான ஒரு வழியில் மானிடர் எய்தக் கூடிய அதிகபட்சமான மெய்நிலையை நோக்கி உயர்வடையும் வளர்ச்சியாக உள்ளது. மரணம் மற்றும் காலத்தின் கொடுமையான கைகளுக்கு எட்டாத ஆதிமூலத்தின் ஒரே சத்தியமாக அவருக்கு எந்நாளும் விளங்குவதாக, தனது மாஸ்டருக்கு மட்டுமே அர்ப்பணிக்கப்பட்ட அன்பின் பாதையானது அவரால் கண்டறியப்பட்டு, நாம் சென்றடைய வேண்டிய லட்சியத்தை, அதை ஆன்மீக உச்ச நிலை, பரம்பொருளின் தன்மை மற்றும் வேறு எந்தப் பெயரிலும் குறிப்பிடலாம்; ஆனால் மானிட வாழ்க்கையின் உண்மையான அர்த்தமும் நோக்கமும் அதை எய்துவதேயாகும் – அந்த உயர்ந்த நிலையை நோக்கி பயணம் செய்யக் கூடியவராகிய ஒவ்வொருவருக்காகவும் அன்பு வழியாகிய அது நம் உலகிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

4. 1944 முதல் 1955 வரையிலான பதினோரு ஆண்டுக் காலத்தின் இந்த வரலாறு, ஷாஜகான்பூர் ஸ்ரீ ராம் சந்தரின் சுயசரிதத்தின் இரண்டாம் பாகமாக அமைந்துள்ளது. காலப்போக்கில் சிலரால் இது ஒரு புராணக்கதைப் போல படித்து ரசிக்கப்படலாம். ஆயினும் நல்லறிவும், ஞானமும் உடையவர்களுக்கு இது படித்து உணர வேண்டிய வியக்கத்தக்க ஆழ்ந்த உண்மைகள் அடங்கியதாக இருக்கிறது.

அனைவருடைய வாழ்வுக்கும் அதை அர்த்தமுள்ளதாகச் செய்யும்படியாகக் கதை சொல்லும் திறனுக்கு ஒரு வால்மீகி, வியாசர் அல்லது சமீபகாலத்திய ரோமய்ன் ரோலண்ட் ஆகியோரின் மிக அரிதான திறமை தேவையாகிறது. ஒரு நூலாசிரியர் தன் நூலுக்கான முக்கிய விஷயங்களை விவரித்துச் சொல்லும்போது, தன்னை முன்னிலைப்படுத்தாமல் இருக்க வேண்டியது அவசியமாக இருந்தாலும், எப்படியாவது தன்னைப்பற்றியும் கூறவிரும்பும் ஆசைத் தூண்டுதல் வந்து விடுவது உண்டு. அது ராமன், கிருஷ்ணன் இவர்களைப் பற்றிய புராணக் கதையாக இருந்தாலும் சரி, ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய வாழ்க்கை வரலாறாக இருந்தாலும் சரி, அவர்களைப் பற்றி சித்தரிப்பதில் வெற்றியடைவது, அந்த வரலாற்றை எழுதுகிறவர், அந்த வரலாற்றுக்குரியவரை படிக்கின்றவர்களின் மனத்துக்கு நெருங்கியவராக அவர்கள் உணரும் விதத்தில் மற்றும் அவர்களைப் போல ஆவதற்கு ஏக்கம் கொள்ளும்படியாக, சரியான விதத்தில் விவரிப்பதில்தான் இருக்கிறது. அந்தப் பெரியோர்கள் பற்றிய உண்மைகளும், அவர்களைப்போல ஆகவேண்டும் என்ற கனவும் ஒளிந்து கொள்ளுதல் – கண்டுபிடித்தல் என்ற ஒரு விளையாட்டு போல, நம்மால் எச்சமயத்திலும் எட்டிவிடக் கூடியதுதான் என்று தோன்றினாலும், சாதாரண மனிதனின் கையில் அகப்படாமல் எப்போதும் நழுவி விடுவது போல ஒரு தன்மையில் இருக்க வேண்டும். இந்த வரலாற்றை எழுதுபவரும் இதற்கு உட்பட்டவராகவே இருக்கிறார். வாழ்க்கை என்பது ஒரே சமயத்தில் மிக எளியதாகவும், மிக பெரிய புதிராகவும் இருக்கிறது. அது ஒரு வரலாற்றை எழுதுகிறவருடைய கூருணர்வுத் திறனுடைய, பதிவு செய்து கொள்ளும் உணர்வுநிலையாகிய ஒரு தொடர்ச்சியான நாடாச் சுருளில், மற்றவர்களுக்கான பொழுதுபோக்கு மற்றும் கல்விக்கு உரியதான தொடர் சரிதமாக அளிக்கப்படுவதற்காகப் படம் பிடித்து வைத்துக் கொள்ளப்பட வேண்டும். அந்த வரலாற்றில் அந்த வரலாற்றுக்குரியவரின்

அடையாளம் எல்லா இடங்களிலும் தவறாமல் விளங்க வேண்டும். வரலாற்றை எழுதுகிறவரின் தனிப்பட்ட எந்த அடையாளமும் அதில் எங்கும் இருக்கக் கூடாது. இப்படித் தன்னைப் பற்றி மறந்து விட்டு, நிரந்தரமான, அழிவற்ற சுயத்தை எங்கும் விளங்கச் செய்வதே ஒரு நல்ல வாழ்க்கை வரலாற்றின் தனித்துவமான சிறப்பாகும். ஒருவருடைய வாழ்க்கை வரலாற்றில் அனைத்து சம்பவங்களும் தொடர்ச்சியாகக் கிடைக்கப் பெற்று, அவை பதிவு செய்யப்படுவதில் ஏற்படும் சிரமமும், பிரச்னைகளும் ஒரு முழுமையான வரலாற்றை எழுதித் தொகுப்பதற்குத் தடையாகின்றன. ஏசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் கூட அவர் பிறந்தது, ஞானஸ்தானம் பெற்றது, சிலுவையில் அறையப்பட்டு உயிர் நீத்தது போன்றவைகள் கொண்ட ஒரு சில ஆண்டுகள் பற்றிய தகவல்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன. காலம் போகப்போக உண்மையும், கற்பனையும் இவற்றில் கலந்துவிடுகின்றன. புத்தர் மற்றும் கபீர் இவர்களைப் பற்றி இப்போது நம்மிடம் இருக்கின்ற வரலாறுகளில் இப்படித்தான் அவை விவரிக்கப்பட்டுள்ளன. வருங்காலத் தலைமுறைக்கு, ஒரு கல்விக்கான சாதனம் என்ற விதத்தில் இருக்க வேண்டிய ஒரு வாழ்க்கை வரலாற்றின் மதிப்பினைக் குறைத்து விடுகின்ற ஒரு மனப்பான்மை இதில் இருக்கின்றது. வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜியின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் முழுவதும் அடங்கிய ஒரு மிகச்சரியான வாழ்க்கை வரலாறு, அவை நடந்த அந்தக் காலத்தைக் குறிப்பிட்டு, எழுதிவைக்கப்படுவதற்கு முயற்சி செய்யப்பட வேண்டும்.

ஒரு சுயசரிதம் என்பது இதை எழுதுகிறவரின் வாழ்க்கை பற்றி அவரே தெரிவிப்பதாக அமைகிறது. எனவே, தனிப்பட்ட, சொந்த விஷயமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆயினும், அது சுவாரசியமாகவும், ஆர்வமூட்டுவதாகவும், மதிப்புடையதாகவும் மற்றவர்களுக்கு உபயோகமான பொழுது போக்கு மற்றும் கல்வியளிக்கும் ஒரு கருவியாகவும் இருக்க வேண்டும். அதை எழுதுகிறவரின் நேர்மை

மற்றும் உண்மை அதில் இருக்க வேண்டுமென்பது அவசியமாக எதிர் பார்க்கப்படுகிறது. ஆனால், தன்னைப்பற்றி முதலில் தனக்கே மற்றும் பிறருக்கு என்ன சொல்ல வேண்டும், எவ்வளவு சொல்ல வேண்டும் என்பது அவருக்குத் தெரிய வேண்டும். இங்கேயும் கூட உலகளாவிய தன்மையில் மற்றும் அழிவில்லாத தரமறிந்து உணர்தல் மற்றும் பாராட்டுதலுக்கு உரித்தானதாக (உரியதாக), தன்னைப்பற்றி மறந்துவிட்டு சுயத்தை திரைநீக்குதல் அல்லது வெளிப்படுத்துதல் என்பது உண்மையாகவே ஒரு நல்ல சுய சரிதத்திற்கு தனித்தன்மை மிக்க சிறப்புத் தன்மையாக இருக்க வேண்டும். நானறிந்தவரையில் இதற்குச் சிறந்த உதாரணமாக இருப்பது மகாத்மா காந்தியின் “சத்திய சோதனை” ஆகும். வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜியின் நாட்குறிப்புகள் ஆகிய இந்தப் புத்தகங்களில் கூறப்பட்டுள்ள பரிசோதனைக் கதைகள் (சம்பவங்கள்), வேறு ஒரு மட்டத்தில், வேறு ஒரு தன்மையில் வழிமுறை மற்றும் உள்ளடக்கத்தில் மிகுந்த மதிப்புடையதாகவும், சுவாரசியமாகவும் விளங்குகின்றன. மேலான **சுயத்தைக்** கண்டறிவதற்கும் வெளிப்படுத்துவதற்கும், (திரை நீக்குவதற்கும்) நமது உடல் சார்ந்த சுயத்தை மறந்துவிடுதல் அல்லது சரியாகச் சொன்னால் இல்லாமல் செய்து கொள்ளுதல் என்பது, **மனிதனுக்குக்** கிடைக்ககூடிய, மானிட மகத்துவத்தின் இமயத்தை (உச்சியை) நோக்கிப் பயணம் செய்யும் ஒவ்வொரு யாத்திரிகரும் (பிரயாணியும்) எய்துவதற்காக முக்கியமானதென்று வரையறுக்கப்பட்டுள்ள மற்றும் அதிசய சாதனையாகக் கருதப்படுகிற ஒன்றாக மற்றும் அடைய இயலுமா? என்ற நிராசை (ஏமாற்றம்) அளிப்பதாகவும் இருக்கிறது. அந்த லட்சியத்தை எய்திய அவர் பணிவுடையவராகவும் அதை உறுதியாகச் சொல்லத் தயங்குகிறவராகவும் இருக்கிறார். ஆனால், **ஒரே ஒருவரின்** கட்டளைகளுக்கு தன்னை அர்ப்பணித்தவராக இருக்கிறார். **அந்த ஒருவர்** என்பவர் இந்தப் பிரபஞ்சம் முழுவதிலும் பரவியிருக்கின்ற

**ஜீவிதத்தன்மையில் (Being)** விளங்குகிறார் மற்றும் தான் **இல்லாமல் இருக்கும் (Non - Being)** முழுமையான விசேஷமற்ற தன்மையிலும் இருக்கிறார் அல்லது இல்லாமல் இருக்கும் தன்னை இழந்த முக்கியத்துவமற்ற தன்மையுடன் இருந்தாலும் பிரபஞ்சம் முழுவதிலும் நிரம்பியுள்ள சுத்த ஜீவநிலையிலும் இருக்கிறார். அவரே **மாஸ்டர்** என்கிற சுய அடையாளத்துடன் திகழ்கிறார். அவர் முதலையும் மற்றும் முடிவையும் கடந்த மெய்யுணர்வு நிலை எய்தியிருக்கிறார். ஒரு மனிதரின் வாழ்வில் அவருக்குப் பதிலாக படிப்படியாக தானே அம்மனிதராக (அதாவது மாஸ்டரே சீடரின் உருவில் இடம் மாறி) மேலும் மேலும் தொடர்ந்து வாழ்கிறார். இப்படி ஆசைத் தூண்டுதல்களையும், பயத்தையும் கடந்து, தனது மிக மேலான மாஸ்டரையே தனது சத்தியமான லட்சியமாகக் கொண்டு, அவர்மீது மட்டுமே பற்று வைத்துள்ள ஒரே சிந்தனையில் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் தனக்குக் கட்டளையும், மெய்யறிவும் தருபவராக ஏற்று ஒன்றுபட்டுள்ள இந்தத் தன்மையானது, ஆன்மீக மெய்ஞ்ஞானத்தில் சிலருக்கு மட்டுமே தெரிவிக்கப்படுகின்ற மறைமுகமான தெய்வீகப் புதிர்களைப் புரிந்துகொள்ளச் செய்கின்றது; ஆன்மீக நாட்டமுடையவர்களுக்குக் காரணம் புரியக்கூடிய எளிய வார்த்தைகளில், லட்சியத்தை அடைவதற்கான பாதையை வகுத்துக் கொடுக்கிறது. மனித நாகரீகத்தின் தற்போதைய முன்னேற்றமடைந்த இந்த சூழ்நிலையில், தேவையாக இருக்கின்ற ஆன்மீகம் மற்றும் பரம்பொருள் பற்றிய விஞ்ஞானத் துறையில், முறைப்படியாக சீரமைக்கும் திசையில், அதுவே மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு படியாக இருக்க வேண்டும். சுயநலம் தேடும் அகங்காரத்திலிருந்து விலகி நின்று, தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட கடமையில் முனைந்து, ஞானத்தின் மற்றும் கட்டளைகளின் வெளிப்பாடுகளின் மூலக்கருத்தை நேர்மையாகத் தேடுதல் மற்றும் நம்பத் தகுந்த விதத்தில் உணர்ந்து கொள்ளுதல் என்பது முடிவாகத் தன்னால்

நேசிக்கப்படுகிற மேலான ஒருவருக்கு மட்டுமே கீழ்படிந்து நடப்பதுதான் அதை நம்பிக்கையோடு உறுதிப்படுத்திக்கொள்வதற்கு ஒரே வழியாகும் என்று குறிப்படப்படுவது, இனம், மொழி, இடம், காலம் ஆகிய அனைத்து எல்லைகளையும் கடந்து மனித குலம் முழுவதும் எப்போதும் நன்றியுடன் விளங்குவதற்குத் தகுதியுடையதாகும். மனிதனின் நிலைமை மற்றும் கலாசாரத்தில் அல்லது எங்கெங்கும் காணப்படுகிற தனி மனிதப் பண்பின் சிக்கலான நிலையிலும் கூட எப்போதும் இயற்கையாக நீடித்திருக்கின்ற, அபாயமான மற்றும் ஏமாற்றமளிக்கின்ற ஆற்றல்களுக்கு எதிராக இந்த ஒரு முனைப்பட்ட அர்ப்பணிப்பு உடைய பெரும் முயற்சியானது துணிச்சலின் காவியம் என்று சிறப்புடன் வர்ணிக்கப்படலாம். வணக்கத்திற்குரிய மாஸ்டர் ஶ்ரீ பாபுஜியின் சுயசரிதத்தின் இந்த அற்புதமான விசேஷத்தன்மை உடைய அம்சங்கள், **மனிதனின்** சாதாரணத்தன்மையின் - எளிமையின் - மகத்துவத்தை ஆதரிக்கின்ற மனித கலாச்சாரத்தின் தகுதி மிக்க முன்னோடிகளால் நன்கு புரிந்துகொள்ளப்பட்டு, சிறந்த விதத்தில் உணர்ந்துகொள்ளப்படுவது தொடரும் என்று நம்பிக்கையுடன் அதற்காகப் பிரார்த்தனை செய்வோமாக. **மனிதனின்** சாதாரணத் தன்மையை — எளிமையை — சரியான அதற்குரிய பீடத்தில் இடம் பெறச் செய்வதுதான் எக்காலத்திலும் மனித குலத்தின் வரலாற்றில், வணக்கத்திற்குரிய மாஸ்டர் ஶ்ரீ பாபுஜி அவர்களின் அற்புதமான பங்களிப்பாகவும் மிகவும் ஒளிவீசும் செய்தியாகவும் விளங்குகிறது. மனித இனத்தின் வரலாறு இனி எந்நாளும் அவருக்குச் சமமான எளிமையோடு தான் இருப்பதாக நிரூபிக்கட்டும்!

ஶ்ரீ பாபுஜியின் சுயசரிதத்தின் இந்த இரண்டாம் பாகத்தை அச்சிட்டு வெளியிடுதல் சம்பந்தமான சூழ்நிலைகள் தனிப்பட்ட விதத்தில் என் மனதில் சிறிது கனமான உணர்வை உண்டாக்கின. இந்த நாட்குறிப்புகளில் இடம் பெற்றுள்ள பல விஷயங்களை அனைவரும்

அறியும் விதத்தில் வெளிப்படுத்த அவர் விரும்பாமலிருந்தார். சிலரிடம் (என்னிடமல்ல) அவரது உலக வாழ்க்கை முடிந்த பிறகே இவற்றை பதிப்பித்து வெளியிடலாம் என்று அவர் சொல்லியிருந்தார்.

மும்பையைச் சேர்ந்த டாக்டர் A.B.ஜஜோடியா அவர்களும், குல்பர்காவைச் சேர்ந்த ஸ்ரீ S.A. ஸார்நாத் அவர்களும் ஸ்ரீ பாபுஜியிடம் சென்று உருது மொழி கையெழுத்துப் பிரதியாக இருந்த இந்த நாட்குறிப்புகளை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்வதற்காக தங்களிடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். 1982 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஸ்ரீ ராம் சந்த்ரா மிஷனின், புத்தகப் பதிப்பு குழுவின் கூட்டத்திற்காக நான் ஷாஜஹான்பூர் சென்றிருந்தபோது, அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஸ்ரீ S.A. ஸார்நாத் மொழியாக்கம் செய்திருந்த மூலப் பிரதியை அவர் மேலோட்டமாகப் பார்த்ததாகவும், நான் அதை முழுவதும் படித்துப் பார்த்து, ஒப்புக்கொண்டாலன்றி அதை அச்சிட்டு வெளியிடக்கூடாது என்று அவர் முடிவு செய்திருப்பதாகவும் என்னிடம் கூறினார். அந்தக் கூட்டத்திலேயே சகோதரர்கள் ஸ்ரீ S.A. ஸாரநாத் மற்றும் ஸ்ரீ ராய் ஸாதா ஆகிய இருவரும் மாஸ்டரின் இந்தக் கருத்தை எனக்குத் தெரிவித்து, இயன்ற அளவு விரைவில் நான் இதற்கு ஆவண செய்ய வேண்டும் என்று விரும்பினார்கள். அதை முழுமையாகப் படித்துப் பார்ப்பதற்கு எனக்கு கால அவகாசம் தேவை என்று அவர்களிடம் நான் சொன்னேன். அதற்குப்பிறகு வணக்கத்திற்குரிய மாஸ்டர் ஸ்ரீ பாபுஜி, பாரீஸூக்குச் சென்று திரும்பி வந்தார். சுமார் எட்டு மாதங்கள் நோய்வாய்ப்பட்டிருந்து பௌதீக உடலை நீத்துச் சென்றார்.

அதன் பிறகு, அச்சமயத்தில் தலைவருக்கு செயலாளராக, ஸ்ரீ ராம் சந்த்ரா மிஷன் நூற்பதிப்பு (புத்தக வெளியீடு) இலாக்காவின் மேலதிகாரியாக ஷாஜஹான்பூரில் இருந்த சகோதரர் J.R.K. ராய்ஸாதாவிடமிருந்து அந்த மொழி பெயர்க்கப்பட்ட பிரதியைப் பெற்றுக்

கொண்டு, ஐரோப்பாவுக்கு என் முதல் பயணத்தின் போது (1983 செப்டம்பர் முதல் அக்டோபர் வரை) அதைப் படித்து முடித்தேன். இந்தியாவிற்குத் திரும்பி வந்த பிறகு வணக்கத்திற்குரிய மாஸ்டரின் குடும்பத்தாரிடம் இதன் உருதுமொழி மூலக் கையெழுத்துப் பிரதியை எனக்குத் தருமாறு கேட்டுக்கொண்டேன். அந்த வேண்டுகோளுக்கு இணங்கி அவர்கள் என்னிடம் அதைக் கொடுத்தார்கள். ஸ்ரீ பாபுஜியின் அந்த நாட்குறிப்புகளை நான் படித்துப் பார்த்தபோது அந்த மொழி பெயர்ப்பு போதுமான அளவு முழுமை அற்றதாக, சரியாகச் சொல்லப்போனால் மனநிறைவளிக்காத விதத்தில் இருப்பதாக எனக்குத் தோன்றியது. ஒருக்கால் இதை எழுதிய ஸ்ரீ பாபுஜியின் ஆயுட்காலத்தில் பதிப்பித்து வெளியிடுவதற்காகத் தயாரிக்கப்பட்டு, ஏதோ ஒரு காரணத்துக்காக, அனைத்தையும் தெரிவிப்பது சரியாக இருக்காது என்று கருதப்பட்டு, அம்மாதிரி மறைக்கப்பட வேண்டிய விஷயங்களைத் தவிர்த்து அது தொகுக்கப்பட்டிருக்கலாம். ஆயினும், தனிப்பட்ட முறையில் எனக்கு அது நியாயமற்றதாக, அவர் உடலை விட்டு மறைந்த பிறகும் கூட அந்த நாட்குறிப்புகளில் இருப்பவற்றில் சுமார் எண்பது சதவிகித அளவுக்கு வெளியிடாமல் இருப்பது காரணமற்றதாகத் தோன்றியது. மிகவும் மறைமுகமான ஆன்மீகச் செயல்முறைகளின் சில அம்சங்களை, அல்லது ஏதாவது தேவையற்ற சர்ச்சைகளை உருவாக்கக் கூடிய விஷயங்களை வெளிப்படுத்தாமல் நிறுத்தி வைப்பது சரியானதாக இருக்கலாம். ஆயினும், எனக்கு அது பற்றித் தெரிவிக்காமல் மேலே கூறப்பட்ட ஆங்கில மொழி பெயர்ப்பு வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜி அதை மேலோட்டமாகப் பார்த்த பிறகு எனக்கு அளித்த விரைவான உத்தரவுக்கு முரணான விதத்தில், சென்னையிலிருந்து புத்தகமாக வெளியிடப்பட்டபோது பாபுஜியின் மூல கையெழுத்துப் பிரதியை புதியதாக நான் மொழிபெயர்த்ததில் சில பகுதிகளை நீக்கி விடுவதில் எனக்கு வேறு வாய்ப்பு அல்லது நான் தீர்மானிப்பதற்கு எதுவும்

இருக்கவில்லை. இப்படி உருவாகிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் எனக்கு எதிலும் விருப்பமின்றி, மனதில் வெறுப்பும் கூட ஏற்பட்டிருந்தது. ஆயினும், வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜியிடம் நான் ஏற்றுக்கொண்ட பொறுப்பை நிறைவேற்றுவதில் அல்லது அவர் மீதான ஆழ்ந்த பற்றில் எனக்கு இரண்டு கருத்துக்கள் அல்லது இருவேறான மனப்பான்மைகள் இருக்க முடியாது. இதற்கிடையில், அவருடைய இந்தப் புத்தகங்களை அச்சிட்டு வெளியிட வேண்டும் என்ற நிர்ப்பந்தம், இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் அவர் மீது ஒருமுனைப்பட்ட பக்தியுடைய சகோதர, சகோதரிகளிடமிருந்து அதிகரித்துக் கொண்டிருந்தது. இதனால், எனக்கு எப்போதும் கிடைக்கின்ற அவருடைய வழிகாட்டுதலையே நான் நம்பி வேண்டினேன். இதுவே அவரிடம் அக்கறையுள்ள விஷயமாக எனக்குத் தோன்றியது. எனவே, அதைத் தொடர்ந்து அவருடைய அசல் கையெழுத்துப் பிரதிகளாகிய நாட்குறிப்புகளில் காணப்படுகின்ற விஷயங்கள் உள்ளது உள்ளபடி, அவரே தடை செய்துள்ள சிலவற்றைத் தவிர, எந்தத் தணிக்கையும் செய்யப்படாமல் மொழிபெயர்க்கப்பட்டு, இப்போது வெளியிடப்படுகின்றன. அதில் சொல்லப்பட்டுள்ள கருத்தின் பொருளைத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை ஏற்படும் இடங்களில், சில குறிப்புகளும், விளக்கங்களும் இதில் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தப் புத்தகங்களை முழுமையாக அச்சிட்டு வெளியிடுவதற்கு சிறிது காலம் ஆகும். அதுவும் அவருடைய கைகளில் தான் இருக்கிறது.

வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜி அவர்களிடம் எந்நாளும் நிலைத்திருக்கும் மரியாதையினால் என் இதயம் மகிழ்ச்சியடைகிறது. அவருடைய நாட்குறிப்புகளின் அசல் கையெழுத்துப் பிரதிகளை என்னிடம் ஒப்படைத்து, எனக்குத் தேவையான மற்ற உதவிகளும் செய்து, எப்போதும் தயாராகவும், ஆர்வத்துடனும் இதற்கு ஒத்துழைப்பு கொடுத்த அவருடைய குடும்பத்தாருக்கு என் நன்றியுணர்வு வளர்ந்து

கொண்டே இருக்கும். இந்தியாவிலிருந்தும், ஐரோப்பாவின் பல பகுதிகளிலிருந்தும், இதற்கு ஊக்கமளித்து தொடர்ந்து ஆதரவும், நிதியுதவியும் கிடைத்து வந்தது. எவ்வித நோக்கம் இல்லாமலே சில பெயர்களை விட்டு விடக்கூடும் என்ற பயத்தின் காரணமாக தனிப்பட்ட மனிதர்களின் பெயர்களை குறிப்பிடாமல் தவிர்த்திருக்கிறோம். எனினும், சகோதரிகள் ஹெடியான்னே போஷ் மற்றும் மேடாவான் டென் ப்ரோக் - இருவரும் ஹாலந்து நாட்டின் ஆம்ஸ்டர்டாம் நகரைச் சார்ந்தவர்கள் – ஆகிய இருவருக்கும், அவர்களுடைய விலை மதிப்பற்ற எல்லா விதமான உதவிகளுக்காகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஸ்ரீ பாபுஜியின் மீதும் மனித குலத்திற்கு அவர் செய்த ஆன்மீக நன்மைகளின் மீதும் இயல்பான பற்றுடையவர்களாக, பணிவும் தூய்மையும் கொண்ட அவர்களுக்கு இது கூச்சமளிப்பதாகவே இருக்கும். இந்தப் புத்தகத்தைப் பதிப்பித்து வெளியிடுவதில், அதை சாத்தியமாக்குவதற்கு எல்லாவிதங்களிலும் ஏராளமான உதவி செய்திருக்கும் அவர்களுக்கு வணக்கத்திற்குரிய மாஸ்டரின் எந்நாளும் குறையாத நல்லாசிகள் கிடைப்பதாக என்று பிரார்த்தனை செய்வதைத் தவிர நான் செய்யக்கூடியது ஏதுமில்லை. நான் நீண்டகாலம் வெளியூர்களில் இருந்த போது பொறுமையாகவும், ஆதரவாகவும் இருந்த என் மனைவிக்கும், சகோதரரர்கள் S.L யாதவா மற்றும் J.M. சிங் காட்டிய அக்கறைக்கும் என் நன்றியறிதலைக் குறிப்பிட வேண்டும். வணக்கத்திற்குரிய மாஸ்டரின் நித்தியமான அருள் அனைவருக்கும் எந்நாளும் கிடைப்பதாக! அவருடைய புகழ் எந்நாளும் நிலைப்பதாக! மானிட குலத்திற்கு நன்மையளிப்பதற்கு அவரது பங்களிப்பு எந்நாளும் நீடித்து விளங்குவதாக!

**குரு பூர்ணிமா (ஜூலை 11, 1987)** **S.P. ஸ்ரீ வஸ்தவா.**

# தொகுப்பாசிரியர் குறிப்பு:

வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜி அவர்களின் சுயசரிதத்தின் இரண்டாம் பாகம் ஸ்ரீ பாபுஜியின் ஆன்மீக வழிகாட்டியும் குருநாதரும் ஆகிய புனிதம் நிறைந்த மகாத்மா ஃபடேகரைச் சார்ந்த ஸ்ரீ ராம் சந்த்தர் அவர்கள், வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் என்று அழைக்கப்படுகிறவர் – உடலை நீத்துச் சென்று பனிரெண்டு ஆண்டுகளும் சில மாதங்களும் போன பிறகு தொடங்குகிறது. சுமார் பதிமூன்று ஆண்டுகள் கொண்ட இந்தக் கால கட்டத்தில், அதையடுத்து வரப்போகின்ற பணிக்காக உள்முகமாக பயிற்சியும், வெளிப்படாத ஆழ்ந்த நிலையில் ஒருவிதமான வேலையும் நடந்து கொண்டிருந்தன. சில குறிப்பிட்ட நடைமுறை சார்ந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு. வெளிப்படையாக அதை அறிவிப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தாலும் கூட, பௌதீகக் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டதாக அவருடைய மாஸ்டருடன் ஸ்ரீ பாபுஜி கொண்டிருந்த உள்முகமான கருத்துப் பரிமாற்றம் தொடர்ச்சியாக நடந்து வந்தது என்பதை முதலில் குறிப்பிட்டாக வேண்டும். வணக்கத்திற்குரிய ஸ்ரீ லாலாஜி அவர்களுக்கு இருந்த நேரடி உறவினால் மற்றும் சமுதாய உறவு அமைப்பினால் நெருக்கமாக இருந்த சிலர் தங்களையே அவருடைய ஆன்மீகப் பிரதிநிதியாக மற்றும் அவருடைய பதவிக்கு அடுத்து வர இருப்பவராக உரிமைக் கோரினார்கள். ஆதிகுருநாதரின் உண்மையான பிரதிநிதியை சாத்தியமான அனைத்து வழிகளிலும், சில குறிப்பிட்ட ஆன்மீக செயல்நுட்பங்களை அவர்மீது பிரயோகிப்பது உட்பட பல விதங்களிலும் திட்டமிட்டு அவரைத் துன்புறுத்துவதற்கும், அவரைக் கொன்றுவிடுவதற்கும் கூட அவர்கள் முயற்சி செய்தார்கள். ஆதிகுருநாதர் லாலாஜியின் சீடர்களில் பெரிதும் முன்னேற்றமடைந்திருந்த சிலர், மேற்சொன்ன லாலாஜியின் நெருங்கிய வட்டத்தினரின் முறையற்ற, பொய்யான உரிமைக் கோரும் செயல்களை, அவர்களிடம் உண்மையான ஆன்மீக பயனுறுதி இல்லையென்பதைக்

கண்டு வெறுத்து லாலாஜியின் மீது பெரும்பாலும் விசுவாசம் கொண்ட தனி சங்கங்களை உருவாக்கத் தொடங்கினார்கள். ஆனால், அந்த சங்கங்கள் இப்படி முன்னேற்றமடைந்தவர்களாகச் சொல்லப்பட்ட அந்த சீடர்களையே, ஆதி குருநாதர் லாலாஜியினால் அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டதாகிய அந்தப் பழைமையான ஆன்மீகப் பாதையில் இணைந்துள்ள கூட்டத்தாருக்கு வழிகாட்டுவதற்கான கண்ணெதிரே விளங்கும் மகாபுருஷர்களாக மையப்படுத்தியிருந்தன. **வணக்கத்திற்குரிய ஆதிகுருநாதர் லாலாஜி 1931 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் தேதி நள்ளிரவில் பௌதீக உடலை நீத்துச் சென்றார்.** 1944 ஆம் ஆண்டு வெயில் காலத்தில் வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜியின் வெளிப்படையான பணி திட உருவம் பெறத் துவங்கியது. வணக்கத்திற்குரிய ஸ்ரீ பாபுஜியின் சுயசரிதத்தின் இரண்டாம் பாகத்தில் முதல் குறிப்பு 10.5.1944 என்ற தேதியில் துவங்குகிறது. இதற்கு முன்னதாக உருது மொழியில் அச்சிடப்பட்ட அறிக்கை ஒன்று, **“ஷாஜகான்பூரைச் சேர்ந்த வணக்கத்திற்குரிய லாலாஜியின் சேவகன்”** என்ற பெயரில் இடம் பெற்றுள்ளது. அது **ஸ்ரீ மதன் மோகன்லால்** என்பவரால் வெளியிடப்பட்டது. அவர் ஆதிகுரு லாலாஜி, மற்றும் அவருடைய உண்மையான (உடன் பிறந்த) சகோதரர் ஆகிய கான்பூரைச் சேர்ந்த ஸ்ரீ ரகுபர் தயாள்ஜீ — இவரை சாச்சாஜி அல்லது மதிப்பிற்குறிய சித்தப்பா என்று அழைப்பார்கள் - ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் யோகமுறைப் பயிற்சி செய்துவந்த புகழ் பெற்ற ஒரு - பிரிசெப்டர் ஆவார். பாபுஜியின் நாட்குறிப்புகளுக்கு முன்னதாக அதில் காணப்படும் இந்த அறிக்கை, ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்ட இந்த குறிப்புரை அடுத்து இடம் பெற்றுள்ளது.

சாத்தியமான அளவுக்கு, தனிப்பட்ட மனிதர்களின் பெயர்களைத் தவிர்ப்பதற்காக, இந்த நாட்குறிப்புகளில் சுட்டிக்காட்டப்படும் மனிதர்களின் பெயர்கள் ஒரே ஒரு எழுத்து மற்றும் ஒரு எண்ணுடன்

குறிப்பிடப்பட்டுள்ளன. இடங்களைக் குறிப்பிடும் போது ஒரே ஒரு எழுத்தும் இரண்டு புள்ளிகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

சில இடங்களில் இதன் பொருளைத் தெளிவுபடுத்துவதற்காக, சில தகவல்களைச் சேர்க்க வேண்டியது அவசியமென்று கருதப்பட்டது. இவை அடைப்புக் குறிகளுக்குள் கொடுக்கப்பட்டுள்ளன.

# முதல் தொகுதி

## தகுதியாக்கம்

1944 மே முதல் செப்டம்பர் வரை

## அறிக்கை (உருது மொழியில் அச்சடிக்கப்பட்டது)

**“உங்கள் தந்தையிடமிருந்து வாரிசுரிமைப்படி எதையாவது பெறுவதற்கு நீங்கள் ஆசைப்பட்டால், அவருடைய ஒழுக்கத்தை / அவருடைய கல்வி மற்றும் மெய்யறிவின் வழி முறையை நீங்கள் கட்டாயம் கற்றுக்கொள்ள வேண்டும்.”**

அன்பு கொண்டுள்ள சகோதர சகோதரிகளே,

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பக்தர்கள், அவரை நேசிப்பவர்கள் மற்றும் பின்பற்றி நடப்பவர்கள் அனைவரும், இதனால் தாங்கள் நன்மையடைவதற்காகவும், தங்கள் செயல்களின் மூலமாக மற்றவர்களின் நன்மைக்கும் காரணமாக மாறுவதற்காகவும், அதில் விஷேச கவனம் மற்றும் அக்கறையோடு நடந்துகொள்வார்கள் என்று எதிர்பார்த்து, ஃபடேகரில் வசித்து வந்த வணக்கத்திற்குரிய மாஸ்டர் ஸ்ரீமான் மகாத்மா ராம் சந்த்தராஜீ சாகேப் அவர்களின் வாழ்க்கை முறை பற்றிய ஒரு எளிய வரைபடம் போன்ற குறிப்பு உங்கள் அனைவருடைய கவனத்துக்கும் கொண்டு வரப்படுகிறது.

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் மிக முக்கியமான கோட்பாடு, அவர் எதைப் பற்றிச் சொன்னாரோ மற்றும் அதற்காக என்ன செய்தாரோ, அதாவது தனது மெய்யான சுத்த ஜீவனின் (ஆன்மாவின்) உள்புற, வெளிப்புற அம்சங்கள் ஒரே மாதிரி தன்மையை அடைவதாகிய, அதனுடன் முழுமையான ஒன்றுபட்ட தன்மையை எய்துவதாகவே இருந்தது. நேர்மை, உண்மை மற்றும் நன்னடத்தை ஆகிய இவை மகானின் தன்மை அடைவதற்கான இன்றியமையாத அம்சங்களின் பகுதியாக உள்ளன. வணக்கத்திற்குரிய மாஸ்டரின் வாழ்க்கைச் சரித்திரத்தை ஊடுருவிப் பார்த்தால் இங்கே குறிப்பிட்ட அவரது கோட்பாட்டினை அவர் மிக முழுமையாகப் பின்பற்றியிருப்பபதை நீங்கள் காண்பீர்கள். மிகவும் சாதாரணமான சுத்தமான ஆடையை, மற்றும் உணர்ச்சிகளைத் தூண்டும் பண்டங்கள் இல்லாத எளிய உணவையே

அவர் பயன்படுத்தினார் என்று உங்கள் ஞாபகத்தைத் தூண்டுவதற்காக சுருக்கமாகச் சொல்லலாம்.

### *அவர் தன்மானம் நிறைந்தவர்:*

எந்த ஒரு நண்பரிடமிருந்தும், நெருங்கிய சகாவிடமிருந்தும், பக்தரிடமிருந்தும் ஒருபோதும் அவர் எதையும் விரும்பியதில்லை, கேட்டதும் இல்லை. யாருடைய உதவியையும் எதிர்பார்த்துக் கொண்டு எதனையும் கேட்காமல், தன்னையே சிரமத்திற்கு ஆளாக்கிக் கொள்வார். “பட்டினியின் காரணமாக உயிரே போய்விடும் என்றாலும், ஒருவரின் சாப்பாட்டில் மொய்க்கும் ஈயைப் போல, ஒரு போதும் பிறரிடம் கையேந்தாதே” என்று **ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்,** (Hasrath Boo Ali Shah Kalander) (லாலாஜியின் குரு) தெரிவித்த கருத்துக்கு உண்மையாக நடந்து கொண்டார். “பாரசீக மன்னன் கைகௌஸின் சிம்மாசனத்தைக் காலால் எட்டி உதைத்து விடு, அதனால் தலை போகட்டும். ஆனால் உன் கையை விட்டு நன்னடத்தையும், நற்பெயரும் போக விட்டு விடாதே”, என்று கவிதை சொல்வது போல எதைப் பற்றியும் கவலைப்படாத அவரது நிலை இருந்தது. அவருடைய திட சங்கல்பத்தின் வார்த்தைகளைப் பாருங்கள்: “என்னிடம் ஒரு பைசாகூட இல்லை. ஆனால் மாமன்னர்களுக்குக் கூட கிடைக்கப் பெறாத அம்மாதிரி செல்வத்தை என் சொத்தாக விட்டுச் செல்கிறேன்,” என்று சொன்னார். எப்படிப்பட்ட பெருமை வாய்ந்த மனத்திருப்தி மற்றும் கவலையற்ற தன்மை இது! சகோதர சகோதரிகளே, எனவே இதில் கவனம் செலுத்தி, சாத்தியமான அதிகபட்ச அளவுக்கு ஏற்றவாறு செயல்படுங்கள்.

“தந்தையின் சொத்துக்கு ஆசைப்பட்டால், அதை அடைய விரும்பினால், தந்தையின் குணங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும்”.

*அவரது புனிதமான வார்த்தைகள்*:

**"பௌதீக உருவில் இருக்கும், (கண்ணுக்குப் புலனாகும்) அன்பே கடவுள்".**

*அதை அவர் பயிற்சி செய்த விதம்:*

ஒவ்வொரு சகோதர சகோதரியும் வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் தன்னை மிகவும் நேசிக்கிறார் என்று சொல்லிக்கொள்ளும்படியாக, ஒரு தாரளமான வகையில் மாஸ்டரின் அன்பு இருந்தது. தெளிவாகப் புலப்படும் முழுமையான அன்புக்கு அதுவே மிகவும் நம்பகத் தன்மையுடைய வாதமாகும்.

*அவரது புனிதமான வார்த்தைகள்:*

**"கடவுள் பாரபட்சம் இல்லாதவர் அனைவருக்கும் சமமான விதத்தில் நன்மை செய்பவர்".**

*அதை அவர் பயிற்சி செய்த விதம்:*

தன் பக்தர்களில் மிகப் பெரும் பணக்காரர்களையும், மிக மிக ஏழைகளையும் ஒரே விதமாக மதிக்கும் பண்பும் பிரியமும் உடையவராக அவர் விளங்கினார்".

*அவரது புனிதமான வார்த்தைகள்:*

**''கடவுள் மறைந்து இருப்பதற்கே விரும்புகிறார்.''**

*அதை அவர் பயிற்சி செய்த விதம்:*

பல தெய்வீக, ஆன்மீக ரகசியங்களை வெளிப்படுத்துகிறவராக அவர் இருந்த போதிலும், வணக்கத்திற்குறிய மாஸ்டர் எந்த ஒருவருடைய குறைபாடுகளையும் ஒருபோதும் வெளிப்படுத்தியதில்லை. அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு மட்டுமே முயற்சி செய்து வந்தார்.

*அவரது  புனிதமான வார்த்தைகள்:*

**“அற்புதச் செயல்களும், சக்திகளும் தாழ்வு நிலைக்குக் காரணமாக இருக்கின்றன”.**

*அதை அவர் பயிற்சி செய்த விதம்:*

வணக்கத்திற்குரிய மாஸ்டர்  அற்புதச் செயல்களை நிகழ்த்துவதில் தலைசிறந்த நிபுணராக இருந்த போதிலும், அவற்றை ஒருபோதும் வெளிக்காட்டிக் கொண்டதில்லை; ஆன்மீக உயர்நிலை எய்தியிருப்பதற்கு ஒரு அறிகுறியாக அற்புதச் செயல்களை நிகழ்த்தும் திறனைக் கருதியதும் இல்லை. ஆனால் தேவைப்பட்ட நேரத்தில் பக்தர்களின் நோய்களை தன் அற்புத சக்தியால் நீக்கியதுண்டு, எனினும் (ஒரு அற்புதம் நடந்திருக்கிறது என்று) அவர் அறிவது இருக்கட்டும், அப்படி ஒரு சந்தேகம் கூட ஏற்படாத விதத்தில் சாதாரண வழிகளில் அதைச் செய்வார்.

*அவரது புனிதமான பொன்மொழி:*

**“உயிர்களுக்கு *சேவை செய்வதை விட வேறு வழிபாடு இல்லை.”***

*அதை அவர் பயிற்சி செய்த விதம்:*

நண்பர், பக்தர், நெருக்கமானவர், எப்போதாவது வருகிறவர் மற்றும் ஒவ்வொருவருக்கும் சேவை செய்வதற்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர் எப்போதும் தயாராக இருந்தார். மற்றவர்கள் தங்கள் தேவைகளை சமாளிப்பதற்கு உதவி செய்வதற்காக அவர் கடன் வாங்கியது எனக்குத் தெரியும்.

*அவரது புனிதமான பொன்மொழி:*

**“தவ வாழ்க்கை  (துறவு நிலை) என்பது கந்தலாடை அணிவதில் இல்லை.”**

*அதை அவர் பயிற்சி செய்த விதம்:*

தன்னிடம் என்ன ஆடை இருந்ததோ அதை வணக்கத்திற்குரிய மாஸ்டர் அணிந்தார். கிடைத்த இடத்தில் உட்கார்ந்தார். அதாவது தனக்காக இந்த இடம்தான், இந்த ஆசனம்தான் வேண்டும், இந்த விதமான ஆடைதான் வேண்டும் என்று விரும்பித் தேர்ந்தெடுத்துக் கொண்டதில்லை.

*அவரது புனிதமான பொன்மொழி:*

**"யாரொருவர் சேவை செய்கிறாரோ அவரே சேவையைப் பெறுவதற்குத் தகுதியுடையவராகிறார்,"**

*அதை அவர் பயிற்சி செய்த விதம்:*

வணக்கத்திற்குரிய தனது ஆதிகுருவின் (கடவுளின் பெருமை அவரிடம் விளங்குவதாக) அறிவுரைகளின்படி கடவுளின் (RAM) புனிதமான பெயரைப் பரவச் செய்தார். கடவுளின் புகழைப் போற்றுதல் என்ற அந்தப் பூந்தோட்டத்தை தன் வாழ்நாள் முழுவதிலும் தன் ரத்தத்தையே நீராகப் பாய்ச்சி வளர்த்தார். தன் கடைசி மூச்சுடன் இருந்த வரையில் அதற்கு நீர்பாய்ச்சிக் கொண்டே இருந்தார். அதற்கு மேலும் பிரகாசத்தையளிப்பதற்கு, நமது தகுதியின்மையினால் நமக்கு முடியவில்லையென்றாலும், நமது மாஸ்டருக்கு மகிழ்சியளிக்கின்ற, சேவை செய்கின்ற அந்தப் பயிற்சியை குறைந்தபட்சம் அது இப்போது இருக்கும் இதே நிலையிலாவது காப்பாற்றி வைப்பது நமது கடமை அல்லவா?

*அவருடைய புனிதமான பொன்மொழி:*

**"கடவுள் (நமது) குறைபாடுகளை மறைத்து விடுகிறார்",**

*அதை அவர் பயிற்சி செய்த விதம்:*

எந்த ஒரு சீடரையும் அவருடைய தவறுகளுக்காக, வணக்கத்திற்குரிய மாஸ்டர் ஒரு போதும் கோபித்துக் கொண்டதில்லை,

கண்டித்துத் திட்டியதில்லை; இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் என்று கட்டாயம் செய்ததில்லை. ஆனால், இது (சீடர் இப்படிச் செய்தது) தன்னுடைய சொந்தத் தவறுதான் என்று மேலான தெய்வீகத் தன்மையிடம் பிரார்த்தனை செய்து, அந்த மாபெரும் தவறுகளையும் மன்னிக்கச் செய்வார். எந்த ஒருவரிடமும் தனிமையில் கூட அவரைக் குறை சொல்வதாக ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல், அப்படி ஒரு விதத்தில் குறைகளை மறைத்து (மறந்து) விடுவது, பெரும் புகழ்ச்சிக்குரியதாகும், அவர் ஒவ்வொருவருடைய நல்ல குணங்களை மட்டுமே புகழ்ந்து சொல்வார்.

*அவருடைய புனிதமான பொன்மொழி:*

**“முழுமையாக மதிப்பதே, முழுமையான அதிர்ஷ்டமாகும்,”**

*அதை அவர் பயிற்சி செய்த விதம்:*

வணக்கத்திற்குரிய மாஸ்டர் எந்த ஒரு மதம் அல்லது மார்க்கத்தின் எந்த ஒரு பெரிய மகானையும் ஒருபோதும் மரியாதைக் குறைவாகப் பேசியதில்லை. எப்போதும் அவர்களை மதிப்புடனும், தகுந்த மரியாதையுடனும் குறிப்பிட்டுச் சொல்வார். மரியாதைக்குரிய ஒருவர் அவரைக் காண வந்தால், அவர் எழுந்து தனது இடத்தில் வந்தவரை உட்காரச் செய்வார் அல்லது இன்னும் உயர்வான இடத்தில் உட்காரச் செய்து, அவரின் முன்னே அவருக்கு சேவை செய்வதற்காக மரியாதையுடன் உட்கார்ந்திருப்பார்.

*அவரது புனிதமான பொன்மொழி:*

**“உன் விருப்பம் போல (உனக்குப் பிடித்ததை, ஆசைப்படுவதை) எது வேண்டுமானாலும் செய்: ஆனால் மற்றவர்களின் உள்ளத்தில் துன்பத்துக்குக் காரணமாக இருக்காதே”**.

### *அதை அவர் பயிற்சி செய்த விதம்:*

வணக்கத்திற்குரிய மாஸ்டர் இன்னொருவரின் உள்ளத்திற்கு வருத்தத்தை ஏற்படுத்தும் விதத்தில், எந்த ஒரு கடுமையான வார்த்தையையும் ஒரு போதும் கூறியதில்லை. அவருக்கு அறிவுரை தர வேண்டிய தேவை ஏற்பட்டால், அதை அன்புடனும், பாசத்துடனும் எடுத்துச் சொல்வார்.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் உடலை நீத்துச் சென்ற பிறகு, தற்காலிகமாக, சகோதர சகோதரிகளிடையே, ஒருவருக்கொருவர் பகைமை உணர்வும், அச்சமும், சந்தேகமும் ஏற்பட்டிருப்பது வெளிப்படையாகத் தெரிவதனால், வணக்கத்திற்குரிய மாஸ்டர் லாலாஜி சாகேப் அவர்களின் சுருக்கமான வாழ்க்கை வரலாற்றை நோக்கி உங்கள் கவனத்தை ஈர்ப்பதற்கு விரும்புகிறேன். நீங்கள் அனைவரும் இதையெல்லாம் நன்கு சிந்தித்து, சாத்தியமான அதிகபட்ச அளவுக்கு மிகச் சிறந்த சாதகர்களாக இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். மகத்தான மற்றும் உண்மையான தெய்வீகத் தன்மையின் அருளினால், வணக்கத்திற்குரிய மாஸ்டரால் நிர்மாணிக்கப்பட்ட இந்தத் தோட்டம் அவருடைய ஆயுட்காலத்தில் இருந்தது போலவே முழுமையாக, புத்தம் புதியதாகப் பூத்துக்குலுங்கி, ஏராளமான பழங்களை விளைச்சலாகத் தரும் என்று நம்பிக்கை கொள்வோமாக.

“நமது செயல்களை நிறைவேற்றுகிறவரே நமது செயல்களையும் அக்கறையுடன் கவனித்துக்கொள்கிறார்”.

அப்படியே ஆகட்டும்! மீண்டும், அது அப்படியே ஆகட்டும் !!

**- ஷாஜஹான்பூரில் இருந்து அவருடைய சேவகர்களில் ஒருவன்.**

(அச்சிடப்பட்டது: மதன் அச்சகம், மோதி சௌக், ஷாஜஹான்பூர்)

# ஸ்ரீ பாபுஜி அவர்களின் நாட்குறிப்புக்கள்.

(உருது மொழி அசல் கையெழுத்துப் பிரதியில் உள்ளவாறு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள புத்தகத்தின் தமிழாக்கம்)

***இந்த தொகுப்புக்கு "மாஸ்டரின் உதவிக்குறிப்புக்கள் / உத்தரவுகள்'' என்றே பெயர் கொடுக்கலாம். (தனது அருட்கொடையாக, தான் போற்றிப் பாதுகாத்து வந்த ஞாபகங்கள், சத்திய வெளிப்பாடுகள், நிகழ்ச்சிகள், பின்பற்றுவதற்கான உதவிக் குறிப்புக்கள் மற்றும் உத்தரவுகளாக வணக்கத்திற்குரிய மாஸ்டர் ஃபடேகரைச் சேர்ந்த மகாத்மா ஸ்ரீ ராம் சந்த்தராஜீ சாகேப் அவர்களிடமிருந்து, ஷாஜஹான்பூரைச் சேர்ந்த சகோதரர் ஸ்ரீமான் ராம் சந்த்தருக்கு கிடைக்கப் பெற்றவை).***

## 10.5.1944

மதிப்பிற்குரிய R1 - அவர்களைக் கனவில் கண்டேன். அவர் எனக்கு மூன்று குலுக்குதல்களை (jerks) கொடுத்தார் (அல்லது மூன்று முறை உலுக்கினார்) அவை முற்றிலும் உள்முகமாகவே இருந்தன. அதன் பிறகு தனது வலதுகை கட்டை விரலை என்னுடைய வலது பாதத்தின் கட்டை விரல் மீது வைத்து (என் ஆன்மீக உள்நிலையையும், திறமை மற்றும் தகுதியையும்) பறித்துக் கொள்ள நினைத்தார். ஆனால், அதில் வெற்றி பெற முடியவில்லை. அச்சமயத்தில் எதையும் அனுபவிக்காதிருக்கும் நிலையில் இருந்தேன். அதன் பிறகு இன்னும் இரு வாரங்களில் என்னைச் சரிப்படுத்தி விடுவதாகச் சொன்னார். சிஷ்யா வாட்கள் (நீண்ட கத்திகள் / chishtiya swords) எனப்படும் ஒரு செயல் நுட்பத்தை என் மீது பிரயோகிப்பதற்கு அவர் நினைத்திருக்கிறார் என்ற எண்ணம் என் மனதில் வந்தது. ***(வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் அவர்களின் பிரதிநிதி பதவிக்குப் போட்டியிட்ட முக்கியமான சிலர், ஸ்ரீபாபுஜியே***

*லாலாஜியின் உண்மையான பிரதிநிதி என்பது பற்றிய சில அறிகுறிகளைப் பெற்று, (தகவல்களைத் தெரிந்து கெண்டு) பல வழிகளில் பாபுஜியைத் துன்புறுத்த முயற்சி செய்தார்கள் என்பது பற்றி இங்கே ஒரு குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.)*

11.5.1944

காலையில் குளித்துக் கொண்டிருந்தபோது, வணக்கத்திற்குரிய மாஸ்டர் லாலாஜி சாகேப் அவர்களின் குணங்களில் எதையாவது நான் அதே விதமாகப் பின்பற்ற வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் வந்தது. அப்போது வணக்கத்திற்குரிய லாலாஜியின் அறிவுரை என்னுள் வந்திறங்கியது. "உன்னையறியாமலே உனது ஆழ்மனதில் எனது உள்ளார்ந்த ஆன்மீக நிலையை நீ அப்படியே பெற்றிருக்கிறாய். இந்தத் திறமை வேறு யாருக்கும் கிடையாது" என்று அது கூறியது. ஃபடேகரில் உள்ள லாலாஜியின் சமாதியில் பாடுவது தடை செய்யப்பட்டுள்ளது. இந்த உத்தரவைப் பின்பற்ற வேண்டுமா? என்ற எண்ணம் தோன்றியது. அவரிடமிருந்து கீழ்கண்ட அறிவுரை வந்திறங்கியது: "ஒருவர் ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு எப்போது சென்றாலும், சம்பந்தப்பட்ட அந்த ஸ்தாபனத்தின் உரிமையாளர் அல்லது நிர்வாகியினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிமுறைகளையும், கட்டுப்பாடுகளையும் - அது சரியோ, தவறோ, எப்படி இருந்தாலும் அதற்கு உடன்பட்டு நடக்கத்தான் வேண்டும். உன் இடத்தில் (வீட்டில்) நடைபெறும் சத்சங்கத்தில் (ஆன்மீகப் பயிற்சிக்காக சாதகர்கள் வந்து கூடும் இடம்), இது தடை செய்யப்படவில்லை. உன்னுடைய உயர்ந்த திறமை, தகுதிகள், மற்றும் உயர்நிலைகள் அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டு அல்லது தெரிவிக்கப்பட்டு, அதன் காரணமாக மக்கள் உன்னை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். உன்னுடைய ஆன்மீக உள்நிலை அவர்கள் தானாகவே உன்னைத் தெரிந்துகொள்ளச் செய்யும். அவர்களின் உள்ளத்தில் நீ எந்த எண்ணத்தை வைத்தாலும் சரி, அவர்கள் அதற்கேற்றப்படி

நடந்துகொள்வார்கள்." K....என்ற இடத்துக்கு நான் போகக் கூடாது என்று வணக்கத்திற்குரிய லாலாஜி எனக்குத் தடை விதித்திருந்தார். இதற்கு முன்பு அவர் அப்படிச் சொன்னதில்லை. "தற்செயலாக நீ அங்கே (K...) போக நேர்ந்தாலும் .......... என்பவருடைய வீட்டுக்கு நீ போகக்கூடாது. உனக்கு அது சரியென்று தோன்றினால், (அல்லது அதுதான் சரியானது என்று நீ கருதினால்) எந்த ஒருவரிடமிருந்தும் – அவர் யாராக இருந்தாலும், அவருடைய சக்தியை நீ பறித்து விடலாம். நீ ஆசையற்றவனாக மாறியிருப்பதால், நீ சொல்லும் வார்த்தைகளில் கவனமாக இருக்க வேண்டும், மற்றவர்களைப் பற்றி நல்லதாகவோ, கெடுதலாகவோ எதுவும் சொல்ல வேண்டாம். அனைத்து பந்தங்களும் அதாவது பௌதீக கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டிருப்பதால் மற்றவர்களுக்கு பிராணாஹூதி அளிக்கும் போது நீ மிகவும் முன்னெச்சரிக்கையோடு இருக்க வேண்டும். ஒரு போதும் எந்த இடத்திலும் முழு ஆற்றலுடன் பிராணாஹீதி அளிக்க வேண்டாம். இந்தத் தவறை ஏற்கெனவே ஒரு முறை நீ செய்திருக்கிறாய். எந்த ஒரு நல்ல விஷயத்தின் காரணமாக மிகவும் மகிழ்ச்சியடையாமலும், எந்த ஒரு மோசமான விஷயத்தினாலும் அதிருப்தி அடையாமலும் இருக்கும் தன்மையை வளர்த்துக்கொள்".

## 18.5.1944 (காலை 10 மணி முதல் 12 மணி வரை): வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

"உன்னுடைய நற்பெயர், நன்மதிப்பு, புகழ் ஆகியவை M1 - க்கும் கூட நன்மதிப்பையும் புகழையும் கொண்டு வந்து சேர்க்கும். என்னால் யாராவது ஒருவரைத் கூட தயார் செய்ய முடியாமல் போனதே என்று அவர் வேதனைப்பட வேண்டியிருக்காது. வெளிப்படை அம்சங்களில் அவருக்குக் கீழ்ப்படிந்திருப்பதை ஒரு போதும் கைவிட வேண்டாம். உள்முக அம்சங்களைப் பற்றிய விஷயத்தில் உன் விருப்பம் போல்

செய்யலாம். இந்த சங்கத்தை (மிஷனை, மார்க்கத்தை) நீ வளர்ச்சியடையச் செய்யவேண்டும். உன்னுடைய எண்ணங்களும், நோக்கங்களும் என்னுடையதாகவே இருக்கும்; இவை சரியானவையாக இருக்கும். பணிவுடன், தன்னடக்கத்தைக் கொண்ட என் பழக்கத்தை நீ பின்பற்ற வேண்டும். இறைவனுடைய வாயிற்படியில் ஒரு பிச்சைக்காரனாக நிற்கும் அதே சமயத்தில் ஒரு அரசனைப் போல நடந்துகொள்ளும் பண்பையும் ஒரு போதும் கைவிடக்கூடாது."

"M1 - இடம் காணப்படும் துணிவின்மைக்கு நீயே காரணம். நீ கண்டிப்புடன் நடந்துகொள்ள வேண்டும். மென்மையாக நடந்துகொள்ளும் குணத்தை விட்டு விடு. நீ எந்த விஷயத்தை எப்படிச் செய்ய வேண்டும் என்று நான் விரும்புவேனோ அப்படியே சரியாக நீ செய்ய வேண்டும். M1 - ஐ என் மகனாக நான் கருதுவதால், இந்த எண்ணத்தை (என் மகன் என்பதை) மனதில் கொண்டு அவர் வேலை செய்ய வேண்டுமென்றால், அவருக்குப் போதுமான அளவு தைரியம் இருக்க வேண்டும். ஒரு சிங்கத்தின் குட்டியும் ஒரு சிங்கம்தான். நான் ஒரு சிங்கமாக இருக்கும் போது, யாரை நான் என் மகனாகக் கருதுகிறேனோ அவரும் ஒரு சிங்கம் போலவே இருக்க வேண்டும். அவரை நான் என் மூத்த மகனாகக் கருதுகிறேன் மற்றவர்கள் அனைவரும் வெறுமே என் குழந்தைகளாக இருக்கிறார்கள். K....என்ற இடத்தின் தீய விளைவுகளிலிருந்து M1 - இப்போது முற்றிலும் விடுபட்டிருக்கிறார். கெட்ட காலம் போய்விட்டது. இப்போது நல்ல காலம் வந்திருக்கிறது. அவருடைய பாதுகாப்புக்கு நான் பொறுப்பேற்றிருக்கிறேன். இப்போது அவர் தனது உடல் நலத்தைத் திரும்பப் பெறுவார். தன் உள்நிலை பற்றி அவர் அறியாமலிருக்கிறார். இப்போது அவரை யாரும் எதிர்கொள்ள முடியாது".

## M1 – கேட்ட கேள்வி:

"R1 - உடைய தீய எண்ணங்கள் என் மீது அவர்கள் பாதிப்பை உண்டாக்கும் அளவுக்கு நான் செய்துவிட்ட தவறு என்ன?"

## வணக்கத்திற்குரிய லாலாஜியின் அறிவுரை வந்திறங்கியது:

"உன்னுடைய இதயத்தை நீ யாருக்காவது கொடுத்திருக்கும் போது, அந்த மனிதருடைய நல்ல விதமான அல்லது சபிக்கப்பட்ட குணங்களை பெற்றுக்கொள்ள வேண்டியதாகிறது. அதை இப்போது நீயே தெரிந்து கொண்டாய். எனினும் இதற்காக நீ கவலைப்பட வேண்டாம். இப்போது உன்னிடம் அதனுடைய எந்த விளைவும் சிறிதும் தங்கியிருக்கவில்லை. அவர்களின் தொல்லை நிச்சயமாக அதிகரித்துள்ளது என்றாலும் கூட, அதனால் உனக்குக் கெடுதல் ஒன்றும் ஏற்படவில்லை".

## M1 - இன் கேள்வி:

''தனது மாஸ்டரின் மீது முடிவற்ற அன்பினை ஒரு சீடன் எப்படி வளர்த்துக் கொள்வது?''

## வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

"மாஸ்டரின் மீது நிலையான நினைவுடன் இருப்பது."

## 18.5.1944 மாலை நேரம்

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

"உன்னைப்பற்றி, ஏதோ ஒரு சமயத்தில் நீ அவருடன் மோதும் சாத்தியம் இருக்கிறது என்று R1 - க்கு ஒரு குறிப்பான தகவல் கிடைத்தது. நீ என்னிடம் வருவதை அவர் விரும்பவில்லை. மற்ற அனைத்து வழிமுறைகளும் வெற்றியடையவில்லை என்ற போது, உன்னை ஆன்மீக முன்னேற்றம் அடையாதபடி தடுத்துவிடவேண்டும் என்று உனது வணக்கத்திற்குரிய ஆதிகுருநாதரிடம் (வெற்றி அவரை அடையட்டும்) பிரார்த்தனை செய்யப்பட்டது. இது அவருக்கு

(ஆதிகுருவுக்கு – ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) மிகவும் பிடிக்காமல் போயிற்று. அவருடைய அதிருப்திக்கு இதுவே காரணமாயிற்று. உனக்கு அளிக்கப்பபட்ட தீட்சையையே ரத்து செய்வதற்காக ஒரு முயற்சி செய்யப்பட்டது. தானே தனக்கு வீழ்ச்சியை ஏற்படுத்திக்கொள்ளச் செய்வதைத் தூண்டுகின்ற கதைகள் உன்னிடம் விவரிக்கப்பட்டன. எனவே, ஆதிகுருவின் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) அனுமதியுடன், அதற்கேற்றபடி R1 - மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். உனக்கு வசதிப்படும்போது, நிச்சயமாக அவருடைய சமாதிக்குச் சென்று வா. M1 - ஐப் பற்றி அவர் தன்னுடைய அம்புக்கு இரையாகிவிட்டதாக (அதாவது தன் பக்கம் வந்துவிட்டதாக) தன்னை மீறி M1 எதையும் செய்வதற்குச் சக்தியற்றவராக நினைத்து R1 திருப்தியடைந்திருந்தார். அவர் (R1) எப்போதும் உன்னைக் கீழே இழுத்துத் தள்ளிவிட வேண்டும் என்ற தீவிரத் தவிப்பிலும், அது முடியவில்லையே என்ற கவலையிலும் இருந்தார். நான் உன்னை எப்பொழுதும் முழுவதுமாக பாதுகாத்துக் கொண்டிருந்தேன். நீ பாலுறவில் ஈடுபடச் செய்வதற்கு உன் எண்ணத்திற்குத் தூண்டுதல் கொடுக்கப்பட்டது. இதனால் எந்த விதத்திலும் வெற்றி கிடைக்காதபோது, ஆடையற்ற நங்கைகளின் உருவங்கள் உன் இதயத்திற்குள் திணிக்கப்பட்டன. நீ அனைத்தையும் என்னிடம் ஒப்படைத்திருந்ததால், அந்த உருவங்களின் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாக்கப்பட்டாய். உன் ஆதிகுருநாதரின் அன்புக்குப் பாத்திரமானவனாக நீ வளர்ந்து விட்டதால், உனக்கு எதிரான எந்த செயல் நுட்பமும் வெற்றி பெற இயலாது. ஆயினும் அதன் பிறகு நீயும் ஒரு பெண்ணும் உடலுறவு கொள்வதாக ஒரு எண்ணம், உன்னை செய்ய வைப்பதற்காக உன் மீது பிரயோகிக்கப்பட்டது. உன்னை வீழ்ச்சி அடைய வைப்பதற்கு அவர் (R1) செய்த கடைசி முயற்சி இது.''

''B.......என்ற ஊரிலிருந்து வந்த ஒரு பெண்ணுக்கு, அவள் தன் மீது பற்று வைக்கும்படி தூண்டுவதற்காக, தன் உருவத்தை தியானம்

செய்யும்படி அவர் (R1) கூறினார். எனவே, R1 உடைய வீடு, இனிமேலும் பெண்களும் மருமகள்களும் வசிப்பதற்குத் தகுந்தது அல்ல. B1 - உடைய முன்னேற்றத்துக்காகவும் உனது வீழ்ச்சிக்காகவும் பல முயற்சிகளும், பிரார்த்தனைகளும் செய்யப்பட்டன. அவர் உன்னைக் கீழே தள்ளி விடுவதற்கு எத்தனையோ முயற்சிகளைச் செய்தார். முடிவில் கடவுளின் விருப்பம் மட்டுமே வெல்லும் என்பது மட்டும் அவருடைய மனதுக்கு ஒரு போதும் தோன்றவேயில்லை. நீ அவரிடம் இரக்கம் காட்டும்படி மனம் நெகிழ்ந்துவிடக்கூடாது என்பதற்காகவே இந்த விஷயங்களெல்லாம் உனக்குத் தெரிவிக்கப்படுகின்றன. உனது இந்த நல்லதிர்ஷ்டம் பற்றிய செய்திகளை மூன்று முறை அவருக்குத் தெரிவித்தேன்".

**19.5.1944**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

"அந்த இடம் பற்றிய விவகாரம் முழுவதையும் தயவு செய்து இன்றே முடித்துவிடு. தற்செயலான தாமதத்திற்காக நான் மூன்று நாட்கள் அவகாசம் கொடுத்தேன். இதை முடித்தபிறகு மற்ற வேலையை எடுத்துக்கொள். கையில் உள்ள இப்போதைய வேலையை முடித்த பிறகு S1 - பற்றிய வேலையில் விசேஷ கவனம் கொடு. பெண்கள் மீதான அவருடைய பிரியம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அவரை (S1) நான் மிகவும் பாசத்துடன் வளர்த்தேன். என்னால் தீட்சையளிக்கப்பட்ட அனைவருக்கும் நானே பொறுப்பாளி. இந்தப் பொறுப்பை நீ ஏற்றுக்கொள்ளும்போது நான் நிம்மதியடைவேன். K2 - க்கு நீ கொடுத்தது அவரால் ஜீரணிக்கப்படுமாறு செய்வதற்கு முயற்சி செய். வருங்காலத்தில், இனி இந்தத் தவறைச் செய்யாதே. நீ அவர் மீது இன்னும் சற்று அதிக கவனம் செலுத்தியிருந்தால் (சற்று அதிக அளவு பிராணாஹூதி அளித்திருந்தால்) அவருடைய மனம் சீர்குலைந்து போயிருக்கும். நேற்று அவருக்கு இந்தக் குறிப்பிட்ட வழி முறையைச்

சொல்லிவிட்டதில் கொஞ்சம் அவசரப்பட்டுவிட்டாய். இதற்கு முன்பு அளித்ததை அவர் ஜீரணித்துக் கொள்ளும்படி செய்த பிறகே இந்த வழிமுறையை அவருக்குச் சொல்லியிருக்க வேண்டும்”.

“உன்னுடைய நாட்குறிப்புகளைப் புத்தகமாக அச்சிடுவதற்காக முன் வைக்கப்பட்டபோது, உன்னுடைய பெயர் அதில் நீக்கப்பட்டிருந்தது. இது R1 - பின்னாலிருந்து இயக்கியதால், P1 - செய்த விஷமத்தனமான செயல். மக்கள் உன்னை நாடி வந்துவிடக்கூடாது, தங்கள் பிழைப்புக்கு வழியில்லாமல் போய்விடக்கூடாது என்று வருங்காலத்தை எண்ணிப் பயந்திருந்தார்கள். ‘எதிர்ப்பவர்களுக்கு நூறாயிரம் தீய நோக்கங்கள் இருந்தாலும் என்ன, கடவுளின் சித்தத்துக்கு இசைந்தது எதுவோ, அது ஒன்று மட்டுமே நிகழ்கிறது’ என்பதை கண்ணிழந்த (அதாவது அறிவுத்தெளிவில்லாத) மூடனாகிய அவரால் (R1) புரிந்துகொள்ள முடியவில்லை.’’

“நீ எனது உருவம் அங்கிருப்பதைக் காண்பதற்கு உன் நெஞ்சைக் கிழித்துக் கொண்டாய், (அந்த உன் உள்நிலை இன்னும் நீடித்து இருக்கிறது). அதன் பின்னர் கணக்கிட முடியாத சக்தி இருக்கிறது.”

“நானும் உன்னை என் நெஞ்சில் மறைத்து வைத்துக் கொண்டேன். அது பற்றி யாரும் சந்தேகம் கொள்வதற்கு (அறிவதற்கு) அனுமதிக்கவில்லை. R1 – க்கு மட்டுமே அந்த எண்ணம் ஏற்பட்டது. ஏனெனில், அவர் என்னுடைய ஆன்மீக நிலையுடன் இணைந்திருந்தார். எனவே, இதுபற்றி அவரால் சந்தேகம் கொள்ள முடிந்தது. அவருடைய வறுமை நிலைப்பற்றி நான் நினைத்து அவர் மீது அக்கறை கொண்டேன். அதனால் அவருக்கென ஒரு உயர் பதவியை உருவாக்கினேன். எனவே, உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர் போல அவர் வாழத் துவங்கினார். பேராசை அதிகரித்துவிட்டது, கடவுள் முழுமையாக மறக்கப்பட்டார். நீ செல்வ வளத்துடன் இருந்த போதிலும் ஒரு போதும்

என்னை மறக்காமலிருந்தது உனக்கு மட்டுமே இருந்த சிறப்புத் தகுதியாகும். இப்படிச் சிறப்புத் தகுதியுடையவர்கள் மிகச்சிலர்தான் இருக்கிறார்கள். R1- ன் வீட்டில் இன்பத்திற்காகவும் சுகபோகத்திற்காகவும் பணம் வீணாக்கப்படுகிறது. தகுதியுடையவர்கள் பலன் பெற முடியாமலே வைக்கப்பட்டிருந்தார்கள். ஏழைகள் மீது சிறிதும் அக்கரை செலுத்தப்படவில்லை. பணக்காரர்களுக்கு மிகவும் கவனம் கொடுக்கப்பட்டது. பல சமயங்களில், தகுதியுடையவர்களாக இருந்த ஏழை மக்கள் பணமில்லாத காரணத்தால் நன்மையடையாமல் போக வேண்டியதாயிற்று. இம்மாதிரி விஷயங்களில் நீ கட்டாயம் அக்கறை கொள்ளவேண்டும்."

"நீ உன் வேலையிலிருந்து விடுமுறை எடுத்துக்கொண்டு என் வீட்டில் தங்கியிருந்தபோது, அந்தப் பதினைந்து நாட்களில் உனக்கு பூரணத்துவம் அளித்தேன். ***(அநேகமாக 1931 ஜீலை மாதம் நான் அப்படி அங்கு சென்று தங்கியிருந்ததாக நினைக்கிறேன். – ராம் சந்த்தர்)*** நான் அந்தக் காரணத்துக்காகவே உன்னை அழைத்தேன். ஒரு கடிதம் எழுதி உன்னை நான் அப்போது அழைத்திருந்தால் அது எல்லோருக்கும் தெரிந்து போயிருக்கும். உன் நாட்குறிப்புக்களை R1 - க்கு அனுப்பி தவறு செய்துவிட்டாய். உன்னைப் போல ஒரு மனிதரை இனி நீ சந்திக்கும்போது, அவரை நேரடியாக உன்னுடன் இணைக்கப்பட்டவராக வைத்துக்கொள்."

"இன்று S1 - க்காக நல்ல வேலை செய்திருக்கிறாய். எனக்கு அந்தக் கவலை நீங்கிவிட்டது. முழு அகங்காரத்தினால் B1 கெடுக்கப்பட்டுவிட்டார். M3 - எதற்கும் பயனற்றவர் என்பதை நிரூபித்துவிட்டார். ஆனால் அது அவரது வழிகாட்டியின் பொறுப்பாகவே இருக்கிறது. B1 - பெருமளவுக்கு என் நினைவிலேயே இருக்கிறார். எதையெல்லாம் கற்றுக்கொள்ள வேண்டுமோ அதையெல்லாம் என்னிடம்

கற்றுக்கொள். அதன் பிறகு இந்த வேலையிலிருந்து நான் விடுதலை பெற்றிருப்பேன். என் முதுமையைக் கவனத்தில் வைத்துக்கொள். நிச்சயமாக நான் உனக்கு உதவி செய்து கொண்டிருப்பேன்.”

## ஒரு கேள்விக்கு பதில்:

“சுய முயற்சியின் மூலமாக சம்பாதித்த ஆன்மீக சக்தி தெய்வீக அருளினால் பெறப்பட்ட சக்தியைப் போல அவ்வளவு ஆற்றல் நிறைந்தது அல்ல. முழுமையான சக்தி என்பது ஒரு பரிசாக (வரமாக) மட்டுமே அளிக்கப்படுகிறது.”

“R1 உடைய தீய செயல்களுடன் ராவணனுடைய கொடுஞ்செயல்களைக் கூட ஒப்பிட முடியாது. ராவணன் தன் எதிரிகளை சவால் விட்டு, எச்சரிக்கை செய்த பிறகுதான் தாக்கினான். ஆனால், R1 - ஒரு நண்பனாகத் தன்னைக் காட்டிக் கொண்டே உங்கள் அனைவருக்கும் துன்பமளித்தார். வெளிப்படையாக சவாலுக்கு பிறகு ஒரு தாக்குதல் நடைபெற்றால், அதனால் உண்டாகும் தீமை பெரிதும் குறைவாக இருக்கும். எனினும், அவரால் உண்டாக்கப்பட்ட தீமைகள் அனைத்தையும் நான் நீக்கிவிடுவேன்.”

“உயிரற்ற பொருளின் மீது உனக்கு கட்டுப்பாட்டு சக்தியை நான் அளிக்கிறேன். இன்றைய தினத்துக்குத் தகுதியாக்கப் பணி இதுவே. இந்த வேலையை செய்து முடித்துவிடு. உனக்குக் கொடுப்பதற்கு என்ன மீதம் இருக்கிறது என்று கண்டறிய நான் முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். ‘பற்றுறுதியை’ (நம்பிக்கை, விசுவாசத்தை)ப் பற்றி கற்றுக்கொள்ள விரும்புகிறவர் யாராயினும், உன்னிடமிருந்து அதைக் கற்றுக்கொள்ளட்டும். ‘உன்னுடைய அருகாமையில் - உன் தொடர்பில் – வாழ்கின்ற சாதகர் பற்றுறுதியில் திடமான தன்மையை (உறுதியான நம்பிக்கையை) வளர்த்துக் கொள்வாராக’ என்கிற இதுவே என் பிரார்த்தனை.’’

## அவரது அறிவுறுத்தல்கள்

*1) ''ஒரு நீர்ப்பறவையை (வாத்து, அன்னம், கொக்கு போன்றவை) உதாரணமாகக் கொண்டு உன் வாழ்க்கையை வகுத்துக்கொள்ள வேண்டும். அந்தப் பறவை நீரில் அமிழ்ந்து வெளிவரும்போது, அதன் இறகுகள் நீர்படிந்து இராமல் உலர்ந்து இருக்கின்றன.''*

*2) ''உயர்ந்த சத்சங்கத்தைச் சார்ந்த உன்னுடைய சகோதர சகோதரிகளிடம் அன்பு செலுத்து. நாள் தோறும் உரையாடலின் போது பேச்சில் இனிமையைப் பயன்படுத்து.''*

*3) ''நண்பரையும் எதிரியையும் சமமாகக்கருதி, இருவருக்குமே நலம் விரும்புகிறவனாக நடந்துகொள்.''*

“வாழ்க்கையில் உனக்கு ஒரு சிறந்த துணைவி (மனைவி) கிடைத்திருக்கிறாள். ஒரு மகானுக்கு இம்மாதிரி கூரிய குணமுடைய மனைவி இருக்க வேண்டும். அவளால் தான் உனக்கு துருவ நட்சத்திரப் பதவி (குதுப் / Qutub) கிடைத்தது.”

### கேள்வி:

“முகஸ்துதி (ஒருவரை நேருக்கு நேராக மிகையாகப் புகழ்ந்து சொல்லுதல்) செய்வதைப் பின்பற்ற வேண்டுமா?”

### பதில்:

“அது நாகரீகப் பண்புக்கு எதிரானது. இந்தப் பாடத்தை என்னையே உதாரணமாகக் கொண்டு கற்றுக்கொள். (நான் பௌதீக உடலில் இருந்த போது, நான் எப்படி வழக்கமாக நடந்துகொண்டேனோ, அதே போல நடந்துகொள்).”

**கேள்வி:**

‘‘உங்களைப் பின்பற்றி நடக்கும் சக்தியை எனக்கு நீங்கள் அளிக்காதிருக்கும் வரை, உங்களைப் பின்பற்றுவது எப்படி சாத்தியமாகும்?’’

**பதில்:**

“ஏற்கெனவே இந்த சக்திகள் அனைத்தையும் நான் உனக்கு அளித்துவிட்டேன். அவை தங்களுக்கு உரிய நேரத்தில் வெளியே தெரியவரும்.”

**20.05.1944**

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் அறிவுறுத்தல்:**

“செப்டம்பர் மாதத்தற்குப் பிறகு உனது இப்போதைய விடுமுறையை நீடிக்க வேண்டிய தேவையில்லை. விடுமுறையை நீடித்தால் நீ (சம்பளத்தை) இழக்க வேண்டிவரலாம். மருத்துவர் அறிவுரை சொன்னால் அல்லது உடல்நிலை இன்னும் சரியாகவில்லை என்றால் மேலும் நான்கு மாதங்கள் விடுமுறையை நீடிக்கலாம். அப்படிச்செய்தால் உனது (சம்பள) இழப்புக்கு நானே பொறுப்பாளியாவேன். நீ எங்களால் நேசிக்கப்படுகிறவன். உன்னுடைய பொதுவான நடத்தையில் ஒவ்வொரு அம்சமும் எங்களுக்குப் பிடித்திருக்கிறது. நீ எதை சொன்னாலும், தீர்மானிக்கும் எதையும் என்னால் ஒருபோதும் மீற முடியாது, நீ படும் சிரமத்தை வெறுமே பார்த்துக் கொண்டிருப்பவனாகவும் இருக்க முடியாது. நீ (வலியினால், உடல் நலக்குறைவால்) சிரமப்படுவதை நான் காணும்போது, நானும் துன்பமடைகிறேன்” (இதற்குப் பிறகு, நேசிக்கப்படுகின்ற ஒருதன்மையாகிய உள்நிலை என்னிடம் முழுவதும் ஏற்பட்டது. அதாவது அந்த நிலையைப்பற்றிய ஒரு ஞானோதயம் உண்டாயிற்று – ராம் சந்த்தர்).

**அறிவுரைத் தொடர்கிறது:**

“நீ எப்போதும் என் வாழ்க்கை முறையை முன்மாதிரியாகக் கொண்டு நீ வாழும் முறையில் நடந்துகொள்ள வேண்டும். யார் மீதாவது கோபம்கொள்ளும் சமயத்தில், அதில் உன் இதயம் ஈடுபடுவதற்கு ஒருபோதும் அனுமதிக்காதே. இல்லாவிட்டால் (உன் இதயம் அதில் ஈடுபட்டுவிட்டால்) அந்த மனிதருக்கு நான் அழிவைக் கொண்டுவர வேண்டிய கட்டாயம் ஏற்படும்.”

**இந்த அறிவுரையின்படி நான் நடந்துகொள்வதும், அவரை மட்டுமே சார்ந்திருக்கிறது என்று நான் கேட்டுக்கொண்டதற்கு வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் கூறியது:**

“மன அமைதியிழக்காதிரு. யாராவது உன்மீது ஆயிரக்கணக்கான வசைமொழிகளை, தூற்றுதல்களைப் பொழியலாம், ஆனால் அதை நீ சகித்துக்கொள்ளவேண்டும். அதாவது, இதற்குப் பொருள் என்னவென்றால், யாராவது உன்னைத் தூற்றிப் பேசினால், நீயும் பதிலுக்கு அவரைத் தூற்றலாம், அவரைத் திருப்பித்தாக்கி அடிக்கவும் செய்யலாம், ஆனால், உன் இதயத்திலிருந்து, அவருக்கு கெடுதல் உண்டாக்கும் எண்ணம் எதையும் ஒருபோதும் நினைக்காதே. நில உரிமை சம்பந்தமான விஷயங்களில், உன் சொந்த விருப்பத்தின்படி செய்யலாம். அங்கே இந்தக் கோட்பாட்டைப் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. ஆனால், ஓரளவுக்குக் கட்டுப்பாட்டுடனே இரு. நீதிமன்றங்களில் வழக்குத் தொடரலாம்; தீர்ப்பைப் பெறலாம், அந்தச் சந்தர்ப்பத்துக்குத் தேவைப்பட்டால், ஆயுதம் ஏந்தி சண்டையிடுவது கூடத்தவறல்ல. எல்லாச் சூழ்நிலைகளிலும் நான் உன்னுடன் இருப்பேன். கொடுஞ்செயலுக்குப் பலியாகிவிடாமல், ஒருதவறும் செய்யாதவரைப் பாதுகாப்பது கடமை. தேவைப்படும் நேரத்தில் நீ வாள் ஏந்த வேண்டியிருந்தால், அப்போதும் கூட அதில் ஒருதவறும் இல்லை”.

“உன்னைக் கீழே இழுப்பதற்கும் B1 – ஐ முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கும் பிரார்த்தனை செய்யப்பட்டிருக்கிறது. B1– ஐவிட நீ முந்திச் சென்றுவிடக்கூடாது என்பதுதான் இதன் கருத்தாக இருந்தது. ஆனால், அந்தப் பிரார்த்தனையின் வாக்கியங்கள் இப்படி இருந்தன: அதாவது ஆன்மீகச் செல்வம் எப்போதும் என் வீட்டில் (R1 வீட்டில்) இருக்கட்டும்; B1 – ஆன்மீகத்தில் பூரணமான விதத்தில் முழுமையடையட்டும் என்று இருந்தன.’’

## 22.05.1944

## வணக்கத்திற்குரிய மாஸ்டரின் அறிவுறுத்தல்கள் (ஆன்மீக வழிமுறைகளின் மூலமாக எனக்குத் தீமை உண்டாக்குவதற்கு முயற்சிகள் செய்யப்பட்ட சமயத்தில் கூறியது):

‘‘இடையூறுகளால் பாதிப்படையமால் நீ உன்னை காத்துக்கொள்வது மிகவும் சிரமமாகி இருக்கின்ற ஒரு மோசமான நிலைக்கு உலகம் வந்துகொண்டிருக்கிறது. வணக்கத்திற்குரிய A1– ஐயும் கூட இவ்விஷயத்தில் கணக்கில் எடுத்துக்கொள்ள (கவனத்தில்கொள்ள) வேண்டியிருக்கிறது. உன் உடம்பில் நீ உணர்கின்ற சூட்டையும், உடலின் வெப்பத்தையும் நீ தொடர்ந்து வெளியேற்றிக்கொண்டிருக்க வேண்டும். உன்னுடைய சங்கல்ப சக்தியை இப்போதே பயன்படுத்த வேண்டிய தேவை இல்லை. சிறிது துன்பத்தை ஏற்றுக்கொள், பரவாயில்லை. உன்னுடைய சங்கல்பசக்தியைப் பயன்படுத்தாமல், தற்காப்புடன் மட்டும் இருந்து கொண்டிரு. உன்னை கவனித்துக்கொள்ள வேண்டிய தேவை மிகவும் வலிமையாக எழுந்தது. அதை நேரில் சந்திப்பதுதான் மிகவும் கடினமாக மாறியிருந்தது. வணக்கத்திற்குரிய என் மாஸ்டருடன் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) தொடர்புகொண்டு இணைந்திரு. இந்தக்காலக்கட்டத்தில் யாருக்கும் எதுவும் கற்றுத்தருவது மற்றும் பயிற்சியளிப்பதை நிறுத்திவிடு. வணக்கத்திற்குரிய என்

மாஸ்டரிடமிருந்து உதவி வேண்டிப் பிரார்த்தனைசெய். பகல் நேரத்தில் தூங்குவதை நிறுத்திவிடு”

**அப்போது வணக்கத்திற்குரிய ஆதிகுருநாதர் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) வந்து (அதாவது உள்முகமான தகவல் தொடர்புகொண்டு) கூறியது:**

“நீ மன அமைதி இழக்கத் தேவையில்லை. நீ விரும்பினால், அந்தப் பகுதி முழுவதையும், அங்குள்ள அமைப்பையும் அழித்து விடமுடியும்”.

**என் பதில்:**

“என் பிரபுவே, அது அனைத்தும் உங்கள் விருப்பப்படியே நிகழும்.”

**ஆதிகுருநாதர் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) கூறியது:**

“அதுபற்றி கவனிக்கப்படும்.”

அதன்பிறகு எனக்குக் கொஞ்சம் உள்முக வலிமை கொடுத்தார்.

**அதையடுத்து வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் தொடந்து கூறியது:**

“அவர்கள் உன் மனத்தை சீர்குலைக்க முயற்சி செய்துக் கொண்டிருக்கிறார்கள். நிலைகுலையுமாறு செய்யக்கூடிய மனதை நீ ஏற்கெனவே கடந்து சென்றிருக்கிறாய். விழிப்புடன் இருக்குமாறும், இனிமேலும் எச்சரிக்கையின்றி இருக்க வேண்டாம் என்றும் நேற்று நான் உன்னிடம் சொன்னேன். இன்று நடந்து கொண்டிருக்கும் எல்லா விஷயங்களைப்பற்றியும் நான் உனக்கு எச்சரிக்கை கொடுப்பதற்கே நான் அப்படிச் சொன்னேன். இப்போது செய்து முடிக்கப்பட்டுள்ள வேலையை இந்த உலகில் எந்த ஒருவரும் சீர்குலைக்க முடியாது. ஒரு விநாடி நேரம் கூட நான் உன்னைவிட்டு விலகியிருக்க மாட்டேன். ஜாக்கிரதையாக இரு. நான் உனக்காகச் சொல்லும் விஷயங்களை கவனமாகக்கேள். இரவில் சற்றுக்குறைவாக சாப்பிடு; ஆனால் பசியோடு

இருக்கக்கூடாது. இந்த நேரத்தில் M3 - சரியாக அங்கு இருக்கிறார். இதெல்லாம் உனது நன்மைக்காகவும், வளர்ச்சிக்காகவும் தான். உயர் நிலையை எட்டுவதற்கான இந்தப் போட்டியின் மூலமாக நீ அடைந்திருக்கும் இந்த நன்மையை வேறு விதத்தில் அடைவது சிரமமானது. இதனால் என்னுடைய எதிர்பார்ப்புகள் நிறைவேறிவிட்டன. நீ மிகவும் அதிர்ஷ்டம் செய்தவன். இப்போது உன் அருகில் உட்கார்ந்து கொண்டு நானே எல்லா வேலைகளும் செய்துகொண்டிருப்பேன். ஏனெனில், வேறு யாரும் செய்யமுடியாத சேவையை எனக்குச் செய்திருக்கிறாய். எந்த வேலையாயினும் மற்றும் அனைத்து வேலைகளையும் செய்வதற்கு எப்போதும் நீ தயாராக இருந்தாய். எனக்காக திருடினாலும், கொள்ளையடித்தாலும் கூட அது சரியென்று நீ கருதியிருந்தாய். M1 - உம் கூட என் மீது மிகவும் பற்று வைத்திருக்கிறார். நானும் அவர் மீது அன்பு கொண்டிருக்கிறேன். அவர் சில விஷயங்களை விட்டுவிட வேண்டியிருக்கும். சரியான சமயத்தில் அதுபற்றி அவருக்குச் சுட்டிக்காட்டப்படும். அவருடைய உயர்நிலை, அகங்காரம் சார்ந்த கர்வத்தைத் தாண்டிச் சென்றுவிட்டது. அவரிடம் பணிவு மற்றும் தன்னடக்கத்தின் புள்ளி திறக்கப்பட்டுள்ளது (தூண்டப்பட்டுள்ளது). அதற்கு அப்பால் உள்ளவற்றை நீ திறக்கச் செய்வாய்."

**அவரிடம் நான் கேட்டது:**

"நம்பிக்கையைத் தூண்டுவதற்கு, அந்தக் குறிப்பிட்ட மனிதரின் எண்ணத்தில், அந்தக் குறிப்பிட்ட புள்ளியை மேலே கொண்டுவருவது செய்யப்பட வேண்டுமா? அவரிடம் நம்பிக்கை வளர்ந்த பிறகு அந்தப்புள்ளி பற்றிய எண்ணம் திரும்ப எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமா?"

**அவர் கூறிய பதில்:**

"அம்மாதிரி செய்ய வேண்டாம்."

**அவர் மேலும் கூறியது:**

“நிகழ்ச்சிகளின் போக்கு அதன் திசையை மாற்றிவிட்டது. சிறிய வாய்ப்பே இருந்தாலும் M3 - உன்னிடம் வருவது சாத்தியமாகலாம். அவரை மன்னிக்க வேண்டாம். அப்படி ஒரு சந்தர்ப்பம் ஏற்படும்போது, எதையும் செய்யாமல் தவிர்த்துவிடு. R1 - ஐ இப்போது சீர்திருத்த முடியாது. இந்த விஷயங்கள் பற்றி முன்பே சிந்திக்கப்பட்டிருக்கிறது.”

“எனக்கும் உனக்கும் இடையே உரையாடல்கள் நடைபெறும் சமயத்தில் நீ சுவாமிஜி (B3 - இன்)யின் பக்கத்தில் இருப்பது நல்லது. இரவில் சாய்ந்து படுத்துக்கொள்வதில் தவறு ஏதுமில்லை. தன்னடக்கம் மற்றும் பணிவின் புள்ளி (சூஃபி பரிபாஷையில் இப்த் Ibd என்பது) மிகவும் உயர்ந்த ஒரு நிலையாகும். இந்தக் குறிப்பிட்ட தியானத்தினை B3 - க்கு M1 அறிமுகப்படுத்தி வைத்தது எவ்வளவு சிறந்த செயல்! அவர் அதைப் பயிற்சி செய்தால் அவர் பெருமளவு முன்னேற்றத்தை நிச்சயம் அடைவார். அவர் தன்னை முன்னேறச் செய்துகொள்ள முடிந்தால், அவர் சிறந்த உயர்நிலைக்கு வருவார். அப்போது அவர் உனக்கு உபயோகமாக இருப்பார். அவருடைய ஆன்மீக வழிகாட்டி உன்மீது மிகவும் அன்புடையவராக இருக்கிறார். உன்னுடைய வளர்ச்சியில் உதவி செய்ய அவருடைய அருள் வந்துகொண்டிருக்கிறது. அவர் ஏற்கெனவே உனக்குப் பெருமளவு கொடுத்திருக்கிறார். வருங்காலத்தில் இன்னும் அதிகமாகக் கொடுக்கவும் எண்ணியிருக்கிறார். அவர் உனக்கு என்ன கொடுத்தாலும், அதற்குப் பதிலாக அவருக்கும் ஏதாவது கொடுக்க வேண்டும். எனவே, நீ அவரை சந்திக்க வேண்டும். அதற்காக சரியான சந்தர்ப்பம் ஆகஸ்ட் மாதம் வரும். இப்போதைக்கு நீ செய்ய வேண்டிய காரியம் நிறைய பாக்கி இருக்கிறது. அச்சமயத்தில் (ஆகஸ்ட் மாதத்தில்) உன் உள் நிலையும் கூட மிகவும் வேறான தன்மையில் இருக்கும்.”

“R2 - நிச்சயமாக எனக்கு துன்பத்தை ஏற்படுத்தியிருக்கிறார். அவருக்கு நீ மன்னிப்பு அளித்தால் மட்டுமே அவர் மன்னிப்பைப் பெறுவது முடியும். B2 - இடமிருந்து ஒரு பயனும் எதிர்பார்க்க முடியாது. அவரிடம் செய்யப்படும் வேலை வீணாகிப்போய்விடலாம். அவரை J1 - இடம் விட்டுவிடலாம். உனக்கு ஒருபோதும் பணப் பற்றாக்குறை ஏற்படாது. J1 - க்கு 25 ரூபாய் அனுப்பு. சாப்பாட்டுக்கான செலவுக் கணக்கு மிக அதிகமாக இருக்கிறது. உன் தோப்புக்களிலிருந்து வரும் வருமானம் நீ ஆச்சரியப்படும் அளவுக்கு மிக அதிகமாக இருக்கும். மரங்கள் கூட விற்பனையாகிவிடும். தோப்பு சம்பந்தமான வேலையை என் பெயரில் துவங்கு. உன்னுடைய கடைசி ஓய்விடம் அங்கேதான் இருக்கும். நானும் கூட அங்கே உன்னுடன் இருப்பேன். உன் முடிவும் கூட, என் முடிவைப்போலவே இருக்கும். அங்கே M1 - க்கும் நீ இடமளிக்க வேண்டியிருக்கும். இரண்டு பைத்தியங்கள் சேர்ந்து உட்கார்ந்திருப்பது அற்புதமாக இருக்கும் (பிரபலமான ஒரு உருது மொழிச் செய்யுளின் கருத்தின்படி கூறப்பட்டது). ஷாஜஹான்பூர் (நமது மார்க்கத்தின்) மையமாக இருக்கும். இங்கிருந்து அனைவருக்கும் ஒளி சென்றடையும். ஒரு கிணற்றுக்கான அடிக்கல்லை உன் கைகளால் நாட்டு. நாளை நீ சென்று அதற்கான இடத்தைத் தேர்ந்தெடு. உன்னுடைய தோப்பை நான் பாதுகாத்துக் கொண்டிருப்பேன். தோப்பில் ஒரே ஒரு கிணறு இருந்தால் போதும், தேவை என்று நீ நினைத்தால், இன்னொரு பக்கத்தில் உள்ள கிணற்றைப் புதுப்பித்துக்கொள்ளலாம். அது நல்ல நிலையில் இருக்கிறது. அது தோப்புக்கான தேவைக்கு ஈடுசெய்வதாக இருக்கும். நான் உன்னிடம் சொல்வதை ஒரு கல்லில் செதுக்கிவைப்பதற்கு ஏற்பாடு செய். சில மாம்பழங்களை ஏழைகளுக்கும், முக்கியமாக குழந்தைகளுக்கும் விநியோகம் செய். தினேஷ் இதனால் மிகவும் மகிழ்ச்சியடைவான். அவன் மீது எனக்கு விசேஷமான அன்பு இருக்கிறது. J2 - ஐ முற்றிலும் வேரறுத்துவிட (சாய்த்துவிட)

நினைத்திருக்கிறேன். உனக்கு இரண்டு விதமான (ஆக்கல் மற்றும் அழித்தல்) சக்திகளும் உள்ளன. அவற்றையும் கூட நான் கையாள வேண்டியிருக்கிறது. M4 - ஐ வரச்சொல்லி அழைக்க வேண்டாம். அவராக வந்தால், அது வேறு விஷயம். பிரகாஷும் கூட நல்ல விதமாக வருவான். அந்தப் பிரச்சனை இப்போது சரிசெய்யப்பட்டுவிட்டது. இப்போது என் கவலையும் தீர்ந்துவிட்டது. இன்னும் சிலர் துன்பத்தை அனுபவிக்க வேண்டிய சாத்தியம் இருக்கிறது. ஏனென்றால், அவர்கள் உனக்குத் தொல்லை ஏற்படுத்த எண்ணியிருந்தார்கள். உன்னுடைய சிரமங்களை அக்கறையில்லாமல் பார்த்துக்கொண்டு என்னால் இருக்க முடியாது. இவ்விஷயங்களில் நீ பெருமளவுக்கு சகிப்புத்தன்மையும் கட்டுப்பாடும் உடையவனாக இருந்திருக்கிறாய்."

"வியப்பான விஷயங்கள் நிறைவேற்றப்படுவதை மக்கள் காண்பார்கள். நீ இன்னும் இளவயதினனாகவே இருக்கிறாய். மிக மேலான எத்தனையோ பெரியோர்கள், மகான்கள் அடைய இயலாமல் போன உயர்நிலைகளை இந்த இளம் வயதிலேயே நீ அடையப் பெற்றிருக்கிறாய். நீ என்னைவிட அதிகமான புகழை, ஒளி அடையும்படி நான் செய்வேன்."

"M1 - இன் துணையை மதிப்புடையதாகக் கருது. அவரை R1 - மிகவும் அதிக அளவு ஏமாற்றியிருக்கிறார். தனது செயல்களின் பலன்களை அவர் (R1) அறுவடை செய்திருக்கிறார்."

"B3 - இன் வழிகாட்டி அவரை மேலும் முன்னோக்கிக் கொண்டுசெல்வதற்கு ஊக்கம் கொண்டிருக்கிறார். உன் உள்நிலைபற்றி அவருக்கு எதுவும் தெரியாது. தவறான எந்த வழியிலும் உன்னைத் தூண்டிவிடுவது மிகப் பெரிய ஒரு தவறாக இருக்கும். உன் கவனத்தை அவர் மீது திருப்புவதற்கு நீ விரும்பியதற்கு அதுவே காரணமாக இருந்தது. அந்த விருப்பத்தைத் தடுக்க இயலாமல் நீ கட்டுப்பாட்டுக்கு

அப்பாற்பட்டு இருந்தாய். எனவே, நானே அதைத் தடுத்து நிறுத்தினேன். தற்காலிகமாகக் கூட்டுத்தியானம் (சத்சங்கம்) நடத்துவதை நிறுத்திவை."

"இன்று என் மாஸ்டர் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) உன்னை கற்பனைக்கு அப்பாற்பட்ட ஒன்றாக ஆக்கினார். (அந்த உள்நிலையின் தன்மை எனக்குள் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது அல்லது உருவாகிக் கொண்டிருக்கிறது). இதையும் கூட நான் பாதுகாக்க வேண்டியிருக்கும் எதிரிகளின் சக்திகள் பலவீனமாகியுள்ளன. இப்போது அவர்கள் உனக்கு ஒரு தீங்கும் செய்யமுடியாது."

"இந்த உள்நிலை அதிக காலம் தொடர்ந்து இருக்காது. இதைத் தொடர்ந்து அது உறுதிப்படுத்தப்படும். எல்லாவற்றுக்கும் முதலாவதாக உனக்கு என் மாஸ்டரால் (உன் ஆதிகுருவினால் – ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தரால்) அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மாலை நேரத்தில் நீண்டதூரம் நடந்து சென்றுவா. இங்கே நிறைய கோள் பேச்சுக்கள் (வம்புப் பேச்சுகள் / Gossip) நடந்துகொண்டிருக்கின்றன."

## 1934 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் தேதி M1 - உடைய கனவு சம்பந்தமான உண்மை வெளிப்பாடு:

"இந்த விஷயம் முற்றிலும் தெளிவாக இருக்கிறது. உலகம் ஆகிய இந்த வீடு ஒரு பிரதிபலிப்பு போலத் தோன்றியது. (இதற்குப் பிறகு) வருங்காலம் என்பது அந்த வீடு, அதன் உண்மையான உருவத்தில் வந்தது".

"அன்பு கூர்ந்து அதற்குத் தேவையானதைச் செய்யுங்கள்" என்று M1- கேட்டுக்கொண்டார்.

## லாலாஜியின் பதில்:

"அது நிச்சயம் செய்யப்படும். இந்தக் கஷ்டங்களெல்லாம் ஒரு முடிவுக்கு வரும். இப்போது காலம் மாறியிருக்கிறது. அவ்வளவுதான் என்று நான் சொல்லியிருக்கிறேன்."

## லாலாஜி கூறுவது தொடர்கிறது:

"நீயும் கூட (ராம் சந்த்தர்) துருவ நட்சத்திரத்தின் பதவி வரை உயர்வடைந்திருக்கிறாய். ஒன்றிரண்டு நாட்களுக்கு உன்னுடன் நண்பகல் சமயத்தில் M1 - இங்கே தங்கியிருக்கலாம். மாஸ்டரின் மீதான மதிப்பு மற்றும் மரியாதை சம்பந்தமான அட்டவணையை உனக்கு நான் எடுத்துக்காட்டுடன் விளக்கியிருக்கிறேன். அதை நீ மேலும் செம்மையாக்க வேண்டிய தேவை இருக்கிறது. உன் தந்தையின் முடிவான ஆன்மீகநிலை நல்லதாகவே வந்திருக்கிறது. அந்தக் குறிப்பிட்ட நாளில் நீ அளித்த பிராணாஹுதி இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறது. என் பார்வையில் வருகின்றது எதுவாயினும், அதை நான் உனக்குச் சொல்கிறேன்."

"வணக்கத்திற்குரிய என் மாஸ்டர் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) துணிவுக்கு மிகச் சிறந்த உதாரணமாக இருந்தார். இப்போது நான் ஒரு பக்கம் ஒதுங்குகிறேன். அவரே வந்து உனக்கு அறிவுரை தருவார். இந்த வாக்குறுதியை அவரிடம் நான் பெற்றிருக்கிறேன். இப்போது அவரையே அனைத்துமாகக் கருதி நடந்துகொள். அவர் மட்டுமே உனக்கு உதவி செய்வார். நான் உன்னுடன் ஒன்றாகியிருக்கிறேன். அதனால் ஒவ்வொரு விஷயத்திலும் அவரையே நம்பிச் சார்ந்திருக்கிறேன். அவர் உன்னை நேசிக்கிறார். உனக்குப் பயிற்சியளிக்க வேண்டும் என்ற பரிந்துரை முதலில் அவரிடமிருந்துதான் வந்தது. இது என் ஆயுட்காலத்திலேயே வந்தது. என் ஆதிகுருநாதரால், இதற்கு மேலாக, உன்னுடைய இயக்கங்கள் (செயல்பாடுகள்) கட்டுப்படுத்தப்படுகின்றன. அவரும் வந்து கொண்டிருக்கிறார். இன்னும் விழிப்பாகவும் (அதிக கவனத்துடனும்),

மரியாதையுடனும் உட்கார். இன்று உன்னிடம் எதுவும் குறைவாக (குறையாக) இருக்கும்படி விடப்படாது. உனக்கான அனுமதி, மிக மிக அப்பாற்பட்ட தன்மையிலிருந்து உறுதிசெய்யப்பட்டிருக்கிறது. இப்போது உன்னிடம் எதுவும் குறைவாக இல்லை. இங்கு சொல்லப்படுகின்ற அனைத்து விஷயங்களையும், மிகவும் கவனமாகவும் தொடர்ந்து இடைவிடாமலும் எழுதிக் கொண்டே இருக்கும்படி M1 - இடம் சொல்லவும்."

## ஆதிகுருநாதரின் குரு வந்தார்:

"நான் A1 - இடம் பேசிவிட்டேன். உன்னை நான் முற்றிலும் பூரணமாகச் செய்துவிட்டேன். உன் மூலமாக உன் மாஸ்டரின் பெயர் பிரகாசிக்கும். மக்கள் உன்னை நினைத்து வியப்படைவார்கள்" என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

## வணக்கத்திற்குரிய மாஸ்டரின் அறிவுரை:

"இனிமேலும் K.... என்ற இடத்துக்கு போகவேண்டியதில்லை என்று D1 - க்குக் கடிதம் எழுது. M3 – அவரிடத்தில் இந்தச் சீர்குலைவை ஏற்படுத்தியிருக்கிறார். அவர் பலவீனமான இதயம் (மனதில் உறுதியில்லாமை) உடையவராக இருப்பதால் M3 - அவருடைய இதயத்தை அசைத்துவிட்டார். துறவிகளுக்கு நீ எப்போதும் மரியாதை அளிக்க வேண்டும். நானும் அப்படித்தான் இருந்தேன். M3 – க்கு, A1 - அளித்த சக்தி உனக்கு வந்திருக்கிறது."

மாலை நேரங்களில் நடந்து செல்லும்போது (Evening Walking) தேவையில்லாத வம்பு பேச்சுக்களைத் தவிர்க்க அந்த தினசரி வழக்கம் ரத்து செய்யப்படுகிறது.

**M4 - இன் வேண்டுகோள்:**

“M4 - பெரும் கொடுமைகளால் சிரமப்பட்டிருக்கிறார். தயவு செய்து அவர் மீது இரக்கம் கொள்ளுங்கள்.”

**பதில்:**

“அவருக்கு மன்னிப்பு அளிக்கப்பட்டது.”

“இந்த உலகிற்கு ஆரம்பமும் முடிவும் இல்லை. இந்த உலகமே அப்படியிருக்கும்போது, இனியும் இந்த உலகத்திற்கு எல்லையே கிடையாது”

**கேள்வி:**

“புதிதாக வந்து சேரும் ஒருவருக்கு எப்படி பிராணாஹுதி கொடுப்பது?”

**பதில்:**

“உன்னுடைய ஆற்றலை மெலிந்ததாக (சன்னமாக) ஆக்கிக்கொள். சமுத்திரத்தின் வெள்ளம் முழுவதும் விரைந்து உள்ளே புகுந்து விடாதபடி அவருடைய இதயத்தின் மீது புள்ளியை (மானசீகமாக) குறித்துக்கொள். பிறகு பிராணாஹுதி கொடுக்கத் துவங்கு. அங்கே அவரது தேவைக்கு ஏற்ற விகிதத்தில், உன் தெய்வீக ஆற்றலை அதிகமாக்கிக்கொள்.”

**M1 - இன் கேள்வி:**

“கூருணர்வுத்திறன் (பிராணாஹுதியின் அனுபவ அறிவு) முதிர்ச்சி அடையாதவரை, எப்படி ஒருவர் அதை மிகச்சரியாகச் செய்ய முடியும்?”

**பதில்:**

“அனுபவமே அனைத்தையும் கற்றுத்தருகிறது. உனக்கு என் அனுபவத்தை முழுமையாகக் கொடுத்திருக்கிறேன். அதன் மெய்யான

வெளிப்பாடு மட்டுமே தேவைப்படுகிறது. உனக்காக பிரார்த்தனைக்கு மேலாக என்னிடம் ஏதுமில்லை. அந்தப் பிரார்த்தனை எப்போதும் உன்னோடு இருக்கிறது. உன்னிடமிருந்து எதையும் நான் ஒதுக்கிவைக்கவில்லை. இப்போது என் மாஸ்டர், தன் அனுபவத்தைத் தெரிவிப்பார்."

### ஆதிகுருநாதர் கூறியது:

"அவர் (M1) என்னுடன் இணைப்பில் இருக்கிறார். அவர் தன் சொந்த இயல்பினால் ஏமாற்றப்பட்டுக்கொண்டிருக்கிறார். (அந்த இணைப்பின் அளவைக் காண்பிப்பதற்கு, அந்த உள்நிலை விளக்கமாக்கப்பட்டது.) A1 - கூறியது தவறு. ஆழ்ந்திருக்கின்ற இணைப்பு என்னுடையதே ஆகும்."

### அதன் பிறகு வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து சொன்னது:

"N1 - இன் இணைப்பு எந்த ஒரு மனிதரிடத்திலும் வந்திறங்கியிருக்கவில்லை. உன்னுடைய (ராம் சந்த்தருடைய) உள்நிலையினால், B1 - ஏமாற்றம் அடைந்திருக்கிறார். ஒரு சிறிய மண் சட்டியில் மகாசமுத்திரம் வந்து நிரம்பியிருக்கிறது என்பது அவருக்குத் தெரியவில்லை. உன்னை வெறும் மூடன் என்று M3 - கருதியிருந்தார். ஆனால், உன்னைப் பற்றி இந்த மூடன் என்ற வார்த்தையை ஒருபோதும் பயன்படுத்தக் கூடாது. நாவில் (பேசும் வார்த்தைகளில்) பயன்தரும் திறன் இருக்கும்போது அந்த அம்பு உன்னையும் கூடத் துளைத்துச் செல்ல முடியும். தன்னை பணிவானவனாகக் கருதியிருப்பதில் தவறில்லை. N1 - க்கு உன்னைப் பற்றி ஒரு சந்தேகம் இருக்கிறது. அது அவருக்கு ஒரு முள்ளாக உறுத்துகிறது. நான் முன்பே உனக்குச்

சொன்னதுபோல, எப்போதும் என் மாஸ்டர் மீதான (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர் மீது) கவனத்துடன் இரு."

"S1 – இப்போது ஏதோ ஒன்றாக மாற வேண்டியிருக்கிறது. C1– இன் நிலை இப்போது நம்பிக்கையளிப்பதாக இருக்கிறது. அவருக்குள் நீ உயிரைக் கொடுத்திருக்கிறாய். S2 - இன் மீது செய்யப்படும் வேலை வீணாகும். அவர் N1- இன் அடிமையாக இருக்கிறார். எது சரியானது என்று அவரைப் புரிந்துகொள்ளச் செய்வது கஷ்டமான செயலாகத் தோன்றுகிறது. எனினும், நீ முயற்சியைத் தொடரலாம். அதில் தவறு ஒன்றுமில்லை. B1 – ஐப்பற்றி உனது மைத்துனியின் சிபாரிசுகளால் பாதிக்கப்படவேண்டாம். உங்கள் இருவருக்கும் இடையே நிறைய பாசம் இருக்கிறது என்பது எனக்குப் புரிகிறது. அவருக்கு நன்மை செய்வதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால், சக்திகளை அளிப்பதில் என்னைப்போல தவறுகளைச் செய்து விட வேண்டாம். ஒரே ஒருவரிடத்தில் மட்டும்தான் சக்தி நிலைத்திருக்கும். அதன் நன்மை அனைவருக்கும் செல்லும்."

"K....என்ற இடத்தில் உனக்கு உலர்ந்த (காய்ந்துபோன) ரொட்டியை உணவாகப் பரிமாறினார்கள்; M3 - சுவையான சாப்பாட்டை ரசித்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். இதனால் எனக்கு மிகவும் வருத்தம் உண்டாயிற்று. உன்னுடைய சகிப்புத்தன்மை எனக்கு மிகவும் வேதனையை ஏற்படுத்தியது."

"இப்போது நீ L....என்ற இடத்தைச் சார்ந்த M5 - க்கு (ஆன்மீகப் பணி செய்வதற்கு) அனுமதியளிக்கலாம்."

## M1 - இன் வேண்டுகோள்:

"ஆதிகுருவின் குருவுக்கு என் வணக்கங்களை அன்புகூர்ந்து தெரிவியுங்கள்."

**பதில்:**

“என்னுடைய நல்லாசிகளைத் தெரிவிக்கவும். நான் வேறு எங்கும் போய்விடவில்லை.”

“இப்போது M5 – க்கு அனுமதியளித்தால், நீ யாரென்பது வெளிப்பட்டுவிடும். லாலாஜியின் பிரதிநிதி என்பது தெரிந்துவிடும். எனவே தகுந்த சமயத்துக்காகக் காத்திரு.”

**நான் (ராம் சந்த்தர்) கேட்ட ஒரு கேள்விக்கு விடையாக அவர் சொல்லத் தொடங்கினார்:**

“N1 – செய்தது வெறும் ஏமாற்று வேலை, ஆன்மீகப் பணி செய்ய அனுமதியளிப்பது என்பது ஒரே ஒன்று மட்டும்தான். அதுவே முழுமையானது, குறையற்றது என்று அறியப்படுகிறது. நிபந்தனையுடன் கூடிய அனுமதி என்பது கொஞ்சம் வித்தியாசமான ஒரு முறை, இது (இவர் செய்திருப்பது) N1 – இன் மனதில் உருவாக்கப்பட்டது. M1 – க்கு அனுமதியளிக்கும் சமயத்தில் நான் பூரணமான அனுமதியளித்தேன்.”

“தீட்சை என்ற இந்த மலிவான தந்திர வித்தை B1 - சொல்லிக்கொள்கிற முன்னேற்றத்தை உண்மையென்று காட்டிக் கொள்வதற்காகவே நடத்தப்படுகிறது. நானாகவே அவரை (M1 – ஐ) C1 – மூலமாக தீட்சை பெறச் செய்தது உனக்குத் தெரியாதா? நான் அனுமதித்தால் மட்டுமே அவர் தீட்சை பெறச் செல்வார் என M1 என்னிடம் கூறியபோது, அந்தக் குழப்பம் தானாகவே தீர்ந்துவிடும் என்று விரும்பி நான் பதில் சொல்லவில்லை. இன்று எல்லா விஷயங்களையும் தெளிவாக்கி விடு (அனைத்தையும் நீக்கிச் சுத்தமாக்கிவிடு). ஒரு விநாடி நேரம் கூட நான் உன்னைவிட்டு விலகிப் போக மாட்டேன். அப்படி உன்னிடமிருந்து ஒரு கண நேரம் கூட விலகியிருப்பதை என் இதயம் விரும்பாத அளவுக்கு நான் இன்று மிகவும் மகிழ்ச்சியுடன் இருக்கிறேன்.

பழங்காலப் பெரியோர்கள் அனைவரின் கண்களும் உன்னை நோக்கித் திரும்பியுள்ளன. அந்தப் பக்கத்திலிருந்து செய்யப்பட்ட அனைத்து இணைப்புக்களும் துண்டிக்கப்பட்டுவிட்டன. M3 – இன் மூத்த மகன் மீது பாசம் (பிரியம்) கொண்டு இரு. உன்னுடைய அத்தை உனக்கு ரத்த உறவு முறை உடையவர்."

"M1- முற்றிலும் வேறானவராக மாறியிருக்கிறார். தனது முந்தைய உள்நிலையுடன் இதை அவர் ஒப்பிட்டுப் பார்க்கலாம். N1, L1– ஐ மிகவும் கொடுமைப்படுத்தியிருக்கிறார். இப்போது L1– இன் உள்நிலை அதே மாதிரி நீடிக்காது. மெதுவாக அவர் சரியாகி விடுவார். நீ கொஞ்சம் அவசரப்பட்டு விட்டாய். M3 - முழு அயோக்கியர்."

"R2 – இன் நெற்றியில் ரத்தத்தைப் பூசியது அவரது கழுத்தை அறுக்கும் நோக்கத்தில் செய்யப்பட்டது. அந்தச் சடங்கின் பதிவுகள் இன்னும் அங்கே இருக்கின்றன. நான் அவர் மீது அக்கறை எடுத்துக்கொள்ளாதிருந்தால், என்ன நடந்திருக்கும் என்று யாருக்குத் தெரியும்? இந்தத் தீய ஆவி உனக்குக் கெடுதல் செய்வதற்கும், M1– க்கு தோல்வியை உண்டாக்கவும் ஏவப்பட்டது. R2 – இன் மனத்திற்குள் செலுத்தப்பட்ட தீவிரமான உணர்வு, உன்னுடைய ரத்தத்தை அவர் (R2) தன் கைகளில் பூசிக்கொள்ளும்படி செய்வதற்காக, வடிவமைக்கப்பட்டிருந்தது. உன் உடம்பிலிருந்து ரத்தத்தை எடுத்து, அவரது நெற்றியில் பூசிக்கொள்ளச் செய்த இந்தக் காரியம், அப்படிப் பூசிக்கொண்ட அம்மனிதர் (R2) யாருடைய ரத்தம் பூசிக் கொள்ளப்பட்டதோ, அந்த மனிதரை (ராம் சந்த்தரை) அவரே கொன்றுவிடச் செய்வதற்காக நிகழ்த்தப்பட்டது. இந்தக் காரியத்துக்கு R2 - தான் மிகத் தகுதியானவர் என்று அவர்களுக்குத் தோன்றியது."

“நீ K…என்ற இடத்தில் தங்கியிருந்தபோது M3 - உனக்கு விஷம் கொடுக்கும் எண்ணத்துடன் இருந்தார். ஆனால், அவர் மனதில் இந்த எண்ணம் நிலைப்பதற்கு நான் அனுமதிக்காமல் இருந்தேன். நீ ஒருபோதும் என்னை மறக்கவில்லை. எனவே நானும் ஒருபோதும் உன்னை மறக்கவில்லை. உனது நல்ல நோக்கமுடைய குண இயல்பு மற்றும் எளிமைப்பண்பு ஆகியவற்றின் காரணமாக நான் உன் மீது அதிகமான அக்கறைக்கொள்ள வேண்டியிருந்தது. உன் அத்தை இந்தச் சதியில் ஒரு கூட்டாளியாக இல்லை; எனவே அவளை நான் விட்டுவிட்டேன்.”

“ஒரு நாள் உன் சாப்பாட்டில் ஏதோ ஒன்று கலந்து கொடுக்கப்பட்டது. உன் மனத்தை சீர்குலைத்துவிடுவது (பைத்தியம் போலாக்கிவிடுவது) அதன் நோக்கமாக இருந்தது. ஆனால், அதை நான் முழுவதும் ஜீரணம் செய்துவிட்டேன். எனக்கு அதனால் தலை சுற்றலும், வாந்திவருவது போல குமட்டுவதும் மட்டுமே ஏற்பட்டது. அந்த மருந்து உருளைக் கிழங்குகளில் கலக்கப்பட்டிருந்தது. இந்தச் செயலில் ஈடுபட்டவர் யாராயினும் அவர் அதற்கு உரிய தண்டனை பெற்றுவிட்டார். (விஷம் கலந்தவரின் பெயர், குறிப்பிடாமல் விடப்பட்டது.) இந்த ரகசியம் N1 - க்குத் தெரியும். இந்த மருந்தை உனக்குக் கொடுத்ததன் ஒரு முக்கிய காரணம், நீ ஒருபோதும் என்னைப் பற்றிய நினைவை விடாமலிருந்ததே என்று குறிப்பிடப்பட்டது. எனவே, N1 - உன்னுடைய ஆன்மீக உள்நிலையையும், உயர்ந்த தகுதி மற்றும் திறமையையும், தனக்காகப் பறித்துக்கொள்வதற்கு ஏதுவாக, என்னைப் பற்றிய நினைவில் ஆழ்ந்திருக்கின்ற தன்மையை விட்டுவிடும்படி உன் மனதைக் கட்டாயப்படுத்துவதற்காக இந்த மருந்து பயன்படுத்தப்பட்டது. ஏன் உன்னுடைய ஆன்மீக உயர்நிலையைப் பறித்துக்கொள்ளவில்லை என்று M3, N1 – ஐ கேட்டதற்கு, நீ உன் மாஸ்டர் லாலாஜியை உன் சிந்தனையில் உறுதியாக இடம்பெறச் செய்திருக்கிறாய்; ஒருபோதும் அந்த

எண்ணத்தைக் கைவிடமாலிருக்கிறாய்; அதன்காரணமாகவே உனது உயர் நிலையைப் பறித்துக்கொள்வது சாத்தியமாகவில்லை என்று அவர் (N1) சொன்னார். இந்த விதமாகத்தான் அந்தப் பெரிய மனிதர் M3 - இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினார். அந்த மருந்து தாதுரா (DHATURA) என்ற மருந்துவப் பொருளின் ஏதோ ஒருவகையைச் சேர்ந்ததாக இருக்கலாம்."

**25.05.1944**

1943, ஜனவரி 15 ஆம் தேதி இரவு 8 மணிக்கு, தியான நிலையில் R2 - இருக்கும்போது இரண்டு விரல்களை மனக்காட்சியில் கண்டார். ஒரு விரவில் "சூரஜ்" (சூரியன் / SURAJ) என்றும் இன்னொன்றில் "அஃதாப்" (AFTAB) என்றும் எழுதப்பட்டிருந்தது. அந்த மனக்காட்சி சம்பந்தமான ஞானோதயம் R2 - க்கு வெளிப்படுத்தப்பட்டது. "பாபு ராம் சந்த்தர் மற்றும் மதன் மோகன்லால் என்ற இரண்டு மகா புருஷர்கள் இருக்கப்போகிறார்கள் என்பதை அவருக்கு வெளிப்படுத்துவதற்காகவே இக்காட்சி தோன்றியது."

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

"மிகமிகப் பெரியோர்களாகிய மகா புருஷர்களுக்கும் கூட ஒருபோதும் கிடைக்காத அந்த ஒரு உள்நிலையில் உன்னை இன்று மூழ்கச் செய்திருக்கிறேன். வேட்டையாடுவது இதயத்துக்கு வலிமையளிக்கிறது; அதனால் அதில் ஈடுபடுவதற்கு உனக்கு அனுமதியளித்திருக்கிறேன். உன்னுடைய பலவீனங்கள் எதுவும் தொடர்வதற்கு நான் அனுமதிக்கமாட்டேன். காலச்சக்கரத்தை (அழிவு வேலைக்கான கருவி) இன்றே வரவழைத்துக்கொள். அது ஒரு கரிய வளையத்தின் வடிவத்தில் இருக்கும். உனது வேலை முழுவதையும் இன்றே முடித்துவிடு. அழகாகத் தோன்றும் சுதர்ஸன சக்கரம் தனது

வேலையை முன்பே செய்து முடித்துவிட்டது. இன்று பகல் நேரத்தில் போதுமான அளவு தூங்கு.”

அவர் கூறிய வேலையைச் செய்து கொண்டிருந்தபோது எரிமலை வெடிப்பது போன்ற உள்நிலை உருவாக்கப்பட்டிருப்பதாக ஒரு எண்ணம் என் மனதில் வந்தது. உடனடியாக மாஸ்டர் கூறிய அறிவுரை வந்திறங்கியது. “அப்படிச் செய்ய வேண்டாம். அப்படிச் செய்தால் அந்தப் பகுதி முழுவதுமே அழிக்கப்பட்டுவிடும். இப்போது எனது உள்ளார்ந்த தன்மையைப் பின்பற்றி நடப்பதை ஒருபக்கம் ஒதுக்கிவைத்துவிடு. நீயே அனைத்துமாக இருப்பதாகக் கருது.”

**அன்று மாலை அவர் கூறியது:**

“நீ B...என்ற இடத்தை அழிக்க வேண்டியிருக்கும். அந்த வேலையை அங்கே செய்வதற்காக இயற்கை யாரையும் நியமிக்கவில்லை. H1- க்குப் பாதுகாப்பு கொடு. அவருக்கான காலம் இன்னும் எங்கோ தொலை தூரத்தில் இருக்கிறது. அவர்களுடைய சக்திகள் அனைத்தையும் பறித்துக்கொள்ள வேண்டியிருக்கும். H1 - இன் பாதுகாப்புக்காக நீ இடமளிக்க வேண்டியிருக்கும். இங்கே நடைபெறும் வேலையையும் நீ மேற்பார்வை செய்ய வேண்டும். நன்மக்களை பாதுகாப்பது உன் கடமையாக இருக்கும்.”

“அவர் நல்ல உடல்நலம் மற்றும் தெம்புடன் திரும்பிவருவார். நீ அப்படிச் செய்ய விரும்பினால், திரும்பி வருவதற்கான எண்ணத்தையும், தாகத்தையும் அவருடைய மனதில் உருவாக்கலாம். ஆனால் அவரைத் திருப்பி அழைப்பது அவ்வளவு நன்மையளிப்பதாக இருக்காது. உன்மீது அவர் தன் உள்ளத்தில் பெருமளவு அன்புடன் இருக்கிறார்.”

“மாஸ்டருடன் மட்டுமே இணைப்பு நீடிக்கிறது. வழிகாட்டும் மாஸ்டரையும் கூட இதில் சேர்த்துக்கொள்ளலாம்.”

**கேள்வி:**

“மாஸ்டருக்கு முந்தைய பெரியயோர்களின் உறவு முறைகளையும் கூட இதில் எடுத்துக்கொள்ளலாமா?”

**பதில்:**

“எல்லா உறவு முறைகளும் மாஸ்டரிடத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.”

**26.05.1944**

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் அறிவுரை:**

“கையில் உள்ள வேலையைச் செய்து முடித்த பிறகு, இந்த உள்நிலையிலிருந்து நீ வெளிவந்துவிட வேண்டும். உனது முந்தைய நிலையாகிய உண்மையான அசலாகிய நிலைக்குத் திரும்ப வேண்டும். இரண்டு நிலைகளின் மீதும் கட்டுப்பாட்டைக் கொண்டிரு. இன்று உனக்கு அளிக்கப்பட்ட சக்தி, ஆதிகுருநாதரின் கட்டளைக்கு இணங்க உன்னிடம் வந்துள்ளது. உன் மீது விசேஷ அக்கறை அவருக்கு ஏற்பட்டுள்ளது. உனது எளிமைப் பண்பினால் அனைவரையும் நீ ஜெயித்து விடுகிறாய்.”

**27.05.1944**

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் அறிவுரை:**

“உன் கையில் உள்ள வேலையை நிறுத்திவைக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால், கூரிய தன்மையை (குறிப்பிட்ட வேலையின் மீதுள்ள கவனம்) நீ அதிகரித்துக் கொண்டிருக்கிறாய். அந்த அளவுக்கு கூரிய தன்மையை நான் விரும்பவில்லை. செயலில் குறிப்பிட்ட வேலையின் மீதுள்ள கவனத்தை (கூரிய தன்மையை) அதிகரிப்பதால் உழைப்பை மீதப்படுத்துவது உன் மனத்தின் குணமாக இருந்தது. இப்போது அந்த வேலையில் ஈடுபட வேண்டாம். உன்னிடம் பயிற்சி பெறும் சாதகர்களிடம் கவனம் செலுத்து.”

இதயத்தில் கொஞ்சம் கடுமைத் தன்மை இருந்ததன் காரணமாக, அந்தத் திசையிலேயே எண்ணம் நாட்டம் கொண்டிருந்ததால், எண்ணம் அந்தத் திசையில் போகாதபடி கட்டுப்படுத்திக் கொள்ளும்படி கட்டளை வந்தது. இப்படிச் செய்த பிறகும், இன்னமும் இதயத்தில் கடுமைத் தன்மை இருந்ததால் வேறு ஏதாவது வேலையில் என்னை ஈடுபடுத்திக்கொள்ளும்படியும், அதன்பிறகு தூங்கச் செல்லுமாறும் கூறப்பட்டது. அதன்படியே நானும் செய்தேன்.

நேற்று இரவு 1 மணிக்கு யாரோ உள்ளே வந்து என் தலையணை அருகில் என் வலது தோளின் பக்கம் உட்காருவதுபோல நான் உணர்ந்தேன். வந்தவர் அவசரமாகத் தடுமாறி எழுந்து அப்போதே ஓடிப்போய்விட்டதாகத் தோன்றியது. பயங்கரமான கனவு கண்டதுபோல பயம் உண்டாயிற்று. எனவே, எனக்கு அறிவுறுத்தப்பட்டதுபோல ஒரு மந்திரத்தை ஜபித்தேன்.

### வணக்கத்திற்குரிய லாலாஜியின் அறிவுரை வந்திறங்கியது:

"அது ஒரு தீய ஆவி, அதை அனுப்பிய மனிதரின் ஆன்மீக சக்திகள் அனைத்தையும் பறித்து விடு. அங்கே வந்த அந்தத் தீய ஆவியைப் பிடித்து, அடித்துக் கீழே தள்ளு. இந்த விஷயத்தில் தாமதமில்லாமல் கடுமையான முறையில் தாக்குவதற்குத் துவங்கு." அவர் சொன்னதெல்லாம் செய்யப்பட்டது. மறுநாள் காலை "இது உன் அத்தை தன்னையறியாமல் செய்த காரியம்" என்ற தகவல் அளிக்கப்பட்டது.

### S1 - சம்பந்தமான அறிவுரைகள்:

"அவர் சிறிது காலத்துக்கு மற்றவர்களுக்குப் பயிற்சியளிக்கும் வேலையை நிறுத்திவைக்க வேண்டும். பயிற்சியளிக்க வேண்டும் என்ற தீவிர விருப்பம் கைவிடப்படவேண்டும். அந்த ஆற்றல் வணக்கத்திற்குரிய மாஸ்டரிடம் இணைக்கப்பட வேண்டும். (அதாவது பயிற்சியளிக்க விரும்பும் ஆவலை மாஸ்டர் மீது பற்றாக மாற்றிக்கொள்ள வேண்டும்.)

பார்வையை (உயர்ந்த விஷயங்களை நோக்கி) வைத்திருப்பதன் நன்மை அது. அவர்களிடமிருந்து உரையாடும் விதத்தல் உனக்கு (ராம் சந்த்தருக்கு) வரும் விஷயம் எதிலும் கவனம் செலுத்தாதே. இது உன் இதயத்தை பதிவுகள் இல்லாமல் வைத்திருக்கும். எதிலும் மிகையான பழக்கத்தை விட்டுவிடு. நடுநிலைத் தன்மைக்கு வா." இந்த அறிவுரையை சொல்லிக் கொண்டிருந்தபோது M1- குறுக்கிட்டு, அவருக்கு விசேஷ சக்திகள் அளிக்கப்பட்டிருந்தால், அவரால் இன்னும் விரைவில் வேலைசெய்ய முடிந்திருக்கும் என்று சொன்னார், அதற்கு லாலாஜி கீழ்க்கண்டவாறு பதில் சொன்னார்: "இந்தக் காரணத்தினால் மட்டுமே சக்திகள் அளிக்கப்படுவதில்லை. இந்த நோக்கத்திற்கு சாந்தமான மற்றும் அமைதியான உள்ளம் கொண்ட ஒரு மனிதர்தான் தேவைப்படுகிறார்."

### 29.05.1944

### **R2 - ஐப்பற்றிய உண்மை வெளிப்படுத்தப்பட்டது:**

"உனக்கு அவர்மீது கடமைப்பட்ட உணர்வு இருக்கிறது; எனவே உன்னால் அந்த வேலையைச் செய்யமுடியவில்லை. அதை M1 - சரியாகச் செய்துவிட்டார். தேவைப்படும்போது உதவி பெற்றுக்கொள். ஒரு குறிப்பிட்ட மந்திரத்தை நீ உச்சரித்துக்கொண்டிருந்த போது, எண்ண வடிவில் உன் தலை வெட்டப்பட்டது."

### 30.05.1944

### **வணக்கத்திற்குரிய மாஸ்டரின் உத்தரவுகள் வந்திறங்கின:**

"புதிய சங்கத்தை (மார்க்கத்தைத்) தொடங்கு. உன்னை நோக்கி மக்களைக் கவர்ந்து இழுப்பதை ஆரம்பி. சிந்தனைக்கான ஒரு விஷயம் உருவாக்கப்பட வேண்டும். குணநலன்களை (குணாதிசயங்களை) சரிப்படுத்த முயற்சி செய். புதிய சங்கத்திற்கான ஏற்பாடுகளை நான் ஏற்கெனவே சிறப்பாகச் செய்து விட்டேன்."

“ஆகாய மண்டலத்தின் (ETHER) ஆற்றலை அந்தப் பக்கம் திசைதிருப்ப வேண்டாம். அது மிகவும் அழிவுகரமான ஒரு சக்தி. எந்த ஒருவரின் அனுபவத்துக்கும் அந்த ஆற்றலைக் கொண்டுவருவது தேவையில்லை. (யாருக்கும் அந்த ஆற்றலின் அனுபவத்தைத் தரவேண்டிய தேவையில்லை). மகாபாரத யுத்தத்தின்போது அர்ஜுனனின் கட்டுப்பாட்டில் இருந்த ஆற்றல் அதுதான். அதற்குச் சமமானது எதுவும் இல்லை. எதிரிகளின் மீது பிரம்மாஸ்திரம் (தோல்வியடையாத மிகப்பெரும் சக்திவாய்ந்த ஆயுதம்) பயன்படுத்தப்பட்டது என்பது அதில் (மகாபாரதத்தில்) குறிப்பிடப்பட்டுள்ளது. காலச்சக்கரம் என்பது சிவபெருமானின் விசேஷ ஆயுதம். அர்ஜுனனுடைய காண்டீவம் என்ற பெயருடைய வில்லுக்குள் எண்ண ஆற்றலின் (Thought Power) வடிவில், அவசியமான சக்திக்கூறுகள் திணிக்கப்பட்டிருந்தன. இவையனைத்திற்கும் எதிரான தற்காப்பு இம்மாதிரி இருக்கிறது. (காட்சி வடிவிலான திட்டத்தின் மூலமாக அது வெளிப்படுத்தப்பட்டது). வசிஷ்ட முனிவரின் பிரம்மதண்டமும் எண்ண ஆற்றலின் (Thought Power) மூலமாகவே வசீகரிக்கும் சக்தி பெற்றிருந்தது. (விஸ்வாமித்திர முனிவர் கௌசிகன் என்ற மன்னனாக இருந்த சமயத்தில் வசிஷ்டருடன் போர் செய்த போது, அவன் எய்த அம்புகள், ஆயுதங்கள் ஆகிய அனைத்தும் வசிஷ்டரின் பிரம்ம தண்டத்தின் முன் செயலற்றுக் கீழே விழுந்தன.) அதே செயல் முறையின்படி கௌசிகன் எய்திய அம்புகளும் அந்த தண்டத்தினால் வசீகரிக்கப்பட்டன. போரில் தோற்ற கௌசிகன் துறவியாகி தவம் செய்து விஸ்வாமித்திரன் என்ற பெயர் பெற்றார்.”

“N1- க்கு நான் சக்தி கொடுத்தேன், ஆனால் முழு அளவு கொடுக்க வில்லை. அதைக் கொண்டு அவர் நிறைய வியாபாரம் செய்தார் (சுயலாபம் தேடிக்கொண்டார்). அந்த சக்திகளோடு அவர் தன்னை ஐக்கியப் படுத்திக்கொள்ள ஆரம்பித்தார். எனவே, சக்தி மட்டுமே எஞ்சியிருந்தது; சத்தியம் போய்விட்டது. இவையெல்லாம்

ஒருவரிடமிருந்து, ஒரே ஒருவரிடம் மட்டுமே ஒப்படைக்கப்படுகிற மிகவும் ரகசியமான, மிக விசேஷமான விஷயங்களாகும். யாராவது அதை விரும்பினால் அது அவருக்குக் கிடைக்கும். ஆனால் அவர், ‘சத்தியமாகவே விளங்குகின்ற’ ஒன்றின் (ஜாத் என்பதன் ZAAT) கட்டளையினால் அந்த (ரகசியத்தைக் காக்கும்) ஆயுதங்களை உடைக்கக் கூடியவராக இருக்க வேண்டும். அப்போது ஒருவருடைய நிலை அதை பூஜ்யமாகக் குறைத்துவிடும் அளவுக்கு அதில் ஐக்கியம் அடைந்திருக்க வேண்டும். ‘சத்தியமாகவே விளங்குதல்’ என்ற அந்த எண்ணமே இல்லாமற் போயிருக்கும்போது அந்த நிலை அங்கு இருக்கிறது. அங்கே அது பற்றிய ஒரு உத்தேசமான கருத்து அல்லது அடிப்படை மட்டுமே தங்கியிருக்கிறது. அதற்குப் பிறகு அதுவும் கூட இருப்பதில்லை. அந்த நிலைக்குள் தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்ட ஒரு மனிதரை எதுவுமே பாதிக்க முடியாது. அந்த மாதிரி ஒருநிலையைச் சென்றடைந்துள்ள மனிதர்கள் மிகவும் அரிது. இவையெல்லாம் மிகவும் சூட்சுமமான மற்றும் ரகசியமான விஷயங்களாகும். இந்த விஷயங்கள் சம்பந்தமாக பயிற்சியளிப்பதற்கு என்னைத்தவிர யாருமில்லை. உன்னுடைய முடிச்சுகள் (ஆன்மீகச் சந்தி நிலைகள்) தளர்ந்து அவிழ்க்கப்படுவது தொடர்ந்து நடக்கும். (அந்த உள்நிலை என் அனுபவத்துக்கு வந்தது - சத்தியமாகவே விளங்குதல்; அதற்குப் பிறகு அதுவும் கூட இல்லாமற்போவது என்பது பற்றிய ஒரு உத்தேசக்கருத்து அது.)

“உன்னுடைய மனக்காட்சியில் வந்த நிலை - அதாவது அதில் ஐக்கியம் அடைதலாகிய தன்மை – ‘சத்குரு’ – மாஸ்டர் என்ற நிலையின் ஆரம்பப் புள்ளியாகும். இதற்குப் பிறகு பாகா (BAGA) – அதில் நிரந்தரம் பெறுதல் என்ற நிலை இருக்கிறது. அதுவும் கூட உனக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதற்கும் பிறகு சொல்வதற்கு ஏராளமான விஷயங்கள் உள்ளன. ‘பாகா’ என்ற நிலையைக் கடந்து உனது (மேல்

நோக்கிய) படிகள் போய்க்கொண்டு இருக்கின்றன – இதற்கடுத்த மெய்நிலைகள் பிறகு தொடர்ந்து வரும்.”

### 30.05.1944

### M1 - சம்பந்தமாக வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

“நேற்று இரவு நீ அனுபவித்த பய உணர்வு ‘கடவுளுக்குப் பயப்படுதல்’ என்ற நிலை சம்பந்தமானது. அது ஏற்கெனவே உன்னிடமிருந்தது, இப்போது அது வெளிப்படுகிறது. இதுவரையில் வெளிப்படாத மறைவான விதத்தில் நீ கடந்து வந்த எல்லா உள்நிலைகளும் இனி விளக்கமான வகையில் வெளிப்படும். நீ குறையாகச் சொல்லும் எண்ணங்கள், உனக்குள் மறைந்து கிடக்கும் உள்நிலைகள் வெளிப்படுவதற்கு, பரவுவதற்கு, அளவு கண்டறிவதற்காக, மேலே வரவும் வெளியே போகவும் இப்போது அனுமதிக்கப்படலாம்.”

### 31.05.1944

### அறிவுரைகள்:

“ஒவ்வொருவருக்கும் சுத்திகரிப்பு தேவைப்படுகிறது. என்னிடமிருந்து பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தவர்கள் அனைவரும் தங்களிடத்தில் கடினத்தன்மையை நிரப்பிக்கொண்டதால் கெட்டுப்போயிருக்கிறார்கள். இப்போது R3 - முன்னோக்கிச் செல்லத் துவங்கியிருக்கிறார். M5 - க்கு இன்னும் சற்று அதிக கவனம் அளிப்பது தேவைப்படுகிறது. B1 - ஐ சுத்திகரிப்பு செய். நீ முழுமையான சுத்திகரிப்பைச் செய்யவில்லை. இன்னும் நிறைய சுத்திகரிப்பு தேவைப்படுகிறது. உடனே அனைத்தையும் சுத்திகரிப்பதில் தவறில்லை. சுத்திகரிப்பு செய்வதில் அந்தக் குறிப்பிட்ட ஆயுதத்தைப் (விசேஷ செயல்முறையை) பயன்படுத்தலாம். ஆனால் பிராணாஹுதி அளிப்பதில்

அப்படிச் செய்யக்கூடாது. அங்கே அதில் மிகவும் முன்னெச்சரிக்கை தேவையாகிறது.”

## 01.06.1944

## வணக்கத்திற்குரிய மாஸ்டரின் வெளிப்பாடுகள்:

“K... என்ற இடத்தில் உன் மீது புகுத்தப்பட்ட தீயவிளைவுகளை பெரும்பாலும் உன் கனவுகளில் நான் சுத்திகரிப்பு செய்து விட்டேன். ஆனால் இவை தொடர்ந்து தீவிரமாகப் பெருக ஆரம்பித்தபோது நான் எப்போதும் உன்னுடனேயே இருக்கத் துவங்கினேன். R2 - ஐக் கொண்டு உன்னைக் கொல்வதற்காக அவரை உருவாக்குவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.”

## 03.06.1944

## புதிய சங்கத்தை உருவாக்குவது சம்பந்தமான அறிவுரைகள்:

“R3 - க்கு நிபந்தனையுடன் கூடிய அனுமதியளிக்கலாம். J...என்ற இடத்தில் பயிற்சியளிப்பதை அவருடைய பொறுப்பில் விடலாம். இன்னும் கொஞ்சம் சீர்படுத்தப்பட்டபிறகு, M5 - க்கு அனுமதியளிக்க வேண்டும். ஒவ்வொரு இடத்திலும் யாராவது ஒருவரை அதற்காக உருவாக்கி, அதன் பிறகு அந்த இடத்தில் பயிற்சியளிக்கும் வேலையை அவர் பொறுப்பில் விடவேண்டிய தேவை இருக்கிறது. ஒட்டுமொத்தமான மேற்பார்வை உன்னுடையதாக இருக்க வேண்டும். K2 இப்போது சரியாகிவிட்டார். ஆனால் அவருக்கு நீ கொடுத்திருப்பது, உன் உதவியின் மூலமாக அவரால் ஜீரணித்துக்கொள்ளப்பட வேண்டும். B2 - க்கு உபயோகமில்லாத ஒரு மனிதர்.”

04.06.1944

**வேறு ஒரு மார்க்கத்தின் துறவியாகிய B3 - ஐப்பற்றி உத்தரவுகள் வந்தன:**

“அவரிடமிருந்து உறவுகளைத் துண்டித்துக்கொள்வது நல்லது. அவர் உன்னுடைய இடத்துக்கு (வீட்டுக்கு) வந்தால், அவர் சிலருடன் பேசலாம், உரையாடல்களில் பங்கேற்கலாம், பிறகு போய்விடலாம். ஆன்மீகவழியில் அவரால் உனக்கு எதுவும் செய்ய முடியாது. அவர் தந்திரமான மனிதர். நீயோ எளிமையான, நேர்வழியில் நடக்கின்ற ஒருவன். அவருக்கு எதையும் சொல்லவோ, அவர் சொல்வது எதையும் கேட்கவோ தேவையில்லை. அவர் தனது தந்திரமான குணத்தை உன்னிடம் பயன்படுத்துவதற்கு வந்தால், அந்த விதத்திலும் கூட நான் உனக்கு உதவிசெய்ய வேண்டியிருக்கும். எனவே, அம்மாதிரி ஒரு சந்தர்ப்பத்தை எதற்கு உருவாக்க வேண்டும்? அவருடைய இடத்திற்குப் போகவேண்டாம் என்று பிரகாஷிடம் கண்டிப்பாகச் சொல்லிவிடு. ஏதோ ஒரு சமயத்தில் தற்செயலாக அங்கே போவது தேவைப்பட்டால், அப்போது போவதில் தவறில்லை. பிரகாஷ் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியினால் என் மனப்பான்மை மாறிவிட்டது. அது B3 - இனுடைய நன்றிகெட்ட தன்மை மற்றும் மிகவும் பாழாக்கும் காரியம்.”

**என் (பாபுஜியின்) பணிவான கருத்து:**

“எப்படி இருந்தாலும் சாபத்தை உள்ளடக்கிய அவரது எண்ணமும் மனப்பான்மையும், பிரகாஷ் தனது பரீட்சையில் கவனம் கொள்ளாமல் கெடுப்பதில் வெற்றியடைந்துவிட்டன.”

**லாலாஜியின் பதில்:**

“நிச்சயமாக கொஞ்சம் தீமை ஏற்படுத்தப்பட்டு விட்டது என்றாலும், அந்த நிலைமையைச் சரிப்படுத்த என்னால் முடிந்தது.”

**J1 - பற்றிய எண்ணமும், அக்கறையும் கொள்வது சம்பந்தமான கேள்விக்கு, அவரது அறிவுரை இப்படி வந்திறங்கியது:**

"அவரை உன் சகோதரராகக் கருதி நடத்து."

**நான் குறிப்பிட்ட கருத்து:**

"மேன்மைதாங்கிய பிரபுவாகிய நீங்கள், உயிலில் உள்ள சில நிபந்தனைகளுக்கு ஏற்றவாறு அவரை B1- இன் கீழ் பயிற்சிபெற நியமித்திருக்கிறீர்கள்."

**அவருடைய பதில்:**

"அந்த உயில் முழுமைபெறாமல் வைக்கப்பட்டது. ஏனென்றால் அதை எழுதும்போது, அந்த உயிலை முழுவதுமாக எழுதிவிட்டால் உன்னுடைய பெயர் அதில் இடம்பெற்றுவிடும்; அது அந்தச் சமயத்தில் இருந்த சூழ்நிலையில் சரியானதாகவும், சிறந்ததாகவும் இருக்காது என்ற ஒரு எண்ணம் வந்தது, B1 - தன்மை மாற்றம் அடைவதற்கு அதிக காலம் ஆகும். அந்தச் சமயத்தில் அவருடைய நிலை நன்றாக இருந்தது. அச்சமயத்தில் இருந்த நிலைமை முழுவதும் J1- ஐ பயிற்சி பெறுவதற்காக அவரின் கீழ் விடவேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்தது. J1 ஐ உன்னிடம் பயிற்சிக்கு விடவேண்டும் என்று என் இதயம் துடித்துக்கொண்டு இருந்தபோதிலும், அப்போது என்னால் ஒன்றும்செய்ய முடியவில்லை."

**கேள்வி:**

"M1 ஏன் மனச் சோர்வாக, இதனால் என் மனம் நோகும்படியாக இருக்கிறார்?"

**பதில்:**

"வறட்சி அதிகமாகியிருக்கிறது. பால் அருந்துவது அவருக்கு நல்லது."

**கேள்வி:**

"இப்போதைய சூழ்நிலையில், அவரால் நெய் மற்றும் பால் குடிக்க முடியாது."

**பதில்:**

"உன் எண்ணத்தினாலும் கூட நீ அந்தச் சோர்வை நீக்க முடியும்."

## அன்று மாலை 6 மணிக்குப் பிறகு வணக்கத்திற்குரிய மாஸ்டர் வெளிப்படுத்திச் சொன்னது:

"நான் இறந்து கொண்டிருந்தேன். அச்சமயத்தில் B1 தனது சொந்த பேராசைகளில் தீவிர முனைப்புடன் இருந்தார். தனது பிரதிநிதித்துவம் பற்றிய எண்ணங்களிலேயே அவர் மிகவும் ஈடுபட்டிருந்தார். என்னுடைய ஆயுள் முடிவடையப் போகும் அந்த நேரத்திலும் கூட, அந்த மக்களால் தங்கள் சுயநலமான ஆசைகளை விட்டுவிட முடியவில்லை. நான் நிறைய பணத்தை விட்டுச்சென்றிருந்தால் இன்னும் என்ன நடந்திருக்குமோ, யாருக்குத் தெரியும்?

**என் பணிவான கருத்து:**

"J1- கூறிய எதையும் அவர்கள் கவனிக்கவில்லை."

**அவருடைய பதில்:**

"போதைப் பழக்கம் உடையவனுக்கு நண்பன் யாருமில்லை. அவன் புகையை ஊதிவிட்டு நழுவிப் போய்விடுவான்" என்ற பழமொழிக்கு ஏற்றபடி அது நிகழ்ந்தது. அவர்களில் யாருக்கும் என் மீது சுயநலமற்ற அன்பு இல்லை. நான் எனது உண்மையான வீட்டிற்குப் புறப்படுவதற்குச் சற்று முன்பே N1 தனது சொந்த மேலதிகாரம் (உயர் பதவி) நிலை நாட்டப்படுவதற்காக பல கருத்துக்களையும், திட்டங்களையும் உருவாக்கிக் கொண்டிருந்தார். நான் இனி உயிர் பிழைக்க மாட்டேன் என்பது அவருக்குத் தெரியும்."

### M1 பணிவோடு கூறியது:

"தான் விரைவில் உலகைவிட்டுச் சென்றுவிடுவார் என்று N1 கூறினார்."

### வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

"இது உன்னை ஏமாற்றுவதற்காகச் சொல்லப்பட்டது. B1- தன்னையே எனது பதவியின் வாரிசாக நினைத்திருந்தார்."

### M1- இன் கேள்வி:

"அவர் உங்களுக்கு பிராணாஹுதி கொடுத்தாரா?"

### வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

"நிச்சயமாக பிராணாஹுதி கொடுக்கப்பட்டது. ஆனால் என் ஆன்மா அவரது ஆன்மாவுடன் இணைந்திருந்தது. அதன் பிறகு என் உடலிலிருந்து ஆன்மா பறக்கும் சமயத்தில் என்னுடைய சக்திகள் அவருடைய ஆன்மாவுக்கும் ஈர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற எண்ணம் சக்தியூட்டி வளர்க்கப்பட்டது. நான் உயிர் நீங்கும் நேரத்தில் கூட மிகப் பெரும் துன்பத்துக்கு உள்ளாக்கப்பட்டேன். B1- இடமிருந்த கடினத்தன்மையின் காரணம் இதுதான். (அந்த நிலைமைபற்றிய விபரம் என் மனக்காட்சியில் வந்தது: வணக்கத்திற்குரிய மாஸ்டரின் ஆன்மா உயரிய மண்டலத்தை நோக்கிப் பறந்து சென்று கொண்டிருக்கிறது. B1- னுடைய பிராணாஹுதி அவரது உண்மையான சாராம்சத்துடன் சேர்த்து, (பறந்து போய்க் கொண்டிருக்கும்) வணக்கத்திற்குரிய மாஸ்டரோடு இழுத்துச் செல்லப்படுகிறது. என் மனக்காட்சியில் வந்த கண்கூடான அவரது திட்டம் (B1- இன் திட்டம்), ஒரு சிறிய விளக்கு அல்லது மெழுகுவர்த்தியின் ஒளியை சூரியன் மீது குவியச் செய்தவதன் மூலமாக சூரியனையே தன்னை நோக்கி இழுப்பதற்கு யாரோ விரும்புவதுபோலவும், ஆனால் அந்த சூரியன் அந்த விளக்கின் ஒளியை

தனக்குள் ஈர்த்துக்கொண்டு, அந்த ஒளியையும் தன்னோடு எடுத்துச்சென்றுவிட்டதாகவும் ஒரு நிகழ்வைக் காட்டியது.)

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

“இந்தத் தொல்லைகள் அனைத்தும் உன் காரணமாகவே நிகழ்த்தப்பட்டன. என்னுடைய சக்தியோடு சேர்த்து நான் உடலை விட்டு வெளியேறினேன். அப்படி நான் வெளியேறிய உடனேயே உனக்கு அந்த சக்தியை என்னிடமிருந்து மாற்றிக் கொடுத்துவிட்டேன். அதன் பிறகு நான் மேலே போய்விட்டேன். B1- இன் ஆன்மீக சாராம்சம் அந்த சக்தியோடு சேர்ந்து இழுத்துச் செல்லப்பட்டது. அது இன்னும் அவருக்குத் திரும்பக் கிடைக்கவில்லை. இப்படிச் செய்தது நானல்ல; அது தானாகவே அப்படி நிகழ்ந்துவிட்டது.”

“உங்கள் எல்லோருக்கும் ஒரு தண்டனையாக N1- க்கு என் சொந்த வாழ்வையே கொடுத்திருக்கிறேன். எனக்கு (அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற) ஆசை இருந்தது. ஆனால் என்னை நாடி மக்கள் வரவில்லை. எனவே, நீங்கள் யாரை மிகவும் தீவிரமாக நேசித்தீர்களோ, யாரை அதிகமாக விரும்பினீர்களோ, அவரையே இன்னும் நீடிக்கச் செய்வதே சரியானது என்று கருதினேன். (அந்த நிலைமை காட்சியில் தெரிந்தது) மக்கள் என்னிடம் வந்தார்கள், ஆனால் N1 - இன் மீது நாட்டம் கொண்டிருந்தார்கள். எனவே, நீங்கள் யாரை அதிகமாக விரும்பினீர்களோ அவரையே நான் அதிக காலம் நிலை நிறுத்தி வைக்க வேண்டும் என்பது செயல்வடிவில் தெரிவிக்கப்பட்டது. அது நீங்கள் யாவரும் உங்கள் விருப்பத்தை அடைய வேண்டும் என்பதற்காகவே நிகழ்ந்தது.”

“J1- இன் உள் நிலையானது சுத்தமாகவும், இந்த விவகாரங்கள் அனைத்திலிருந்தும் விடுபட்டதாகவும் இருந்தது.”

05.06.1944

**பணிவான வேண்டுகோள்:**

"இந்த வலி மிகவும் வேதனையளிப்பதாக இருக்கிறது. இதுதான் கடவுளின் சித்தம் என்றால், அதில் நான் சொல்ல ஏதுமில்லை; மேலும் அதுபற்றி நான் மகிழ்ச்சியே அடைவேன். ஆனால், அது ஒரு நோயாக இருந்தால் அது மிகவும் வேதனையாகும்."

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:**

"அது வியாதியல்ல, நீ அனுபவிக்க வேண்டியதாக விடப்பட்டுள்ள பதிவுதான். நானும் கூட இப்படி வலியினால் வேதனை அடைந்தேன். அதை நான் கடைசியில் அனுபவித்தேன். நீ ஆரம்பத்திலேயே அதற்கு உள்ளாகியிருக்கிறாய், அதற்காக மருந்துகள் உட்கொள்வதை நிறுத்தாமல் தொடரவும்."

"M1 ஓய்வு எடுத்துக்கொள்வதற்கான நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது."

"உன்னுடைய வலியின் கடுமை ஒருவிதத்தில் N1-இன் கனிவான குணம் காரணமாகவும் இருக்கலாம்."

**லாலாஜி சாகேப் எங்களை விட்டு ஒதுங்கிப் போய்விட்டார் என்ற ஒரு எண்ணம் மனதில் தோன்றியது. உடனே வணக்கத்திற்குரிய லாலாஜி சொல்வது தொடர்ந்தது:**

"நான் ஒருபோதும் உன்னைவிட்டு ஒதுங்கிப் போகவில்லை. உன் உடம்பையே என்னுடைய வீடாக நான் ஆக்கிக்கொண்டுவிட்டேன். என் எண்ணம் மட்டுமே வெளியே போகிறது. என்னுடைய நித்தியமான பிரசன்னம் உன்னிடம்தான் இருக்கிறது என்பதை நீ அறிய வேண்டும். உன்னிடத்தில் என்னை நான் ஐக்கியப்படுத்திக் கொண்டிருக்கிறேன். இப்போது அதைக் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படுத்திக்

கொண்டிருக்கிறேன். ஒரு விநாடி நேரம் கூட ஒருபோதும் உன் மீது கவனமில்லாமல் நான் இருப்பதில்லை. இரவு நேரத்தில் உனக்கு ஓய்வு கொடுத்துவிட்டு உன்னை நான் கவனமாகப் பார்த்துக்கொள்கிறேன்."

## M1 - இன் கேள்வி:

"K... பக்கத்திலிருந்து பயமளிக்கும்படியாக ஏதாவது இடையுறு வந்து, அதனால் நீங்கள் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டியதாகியிருக்கிறதா?"

## வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

"K...இடமிருந்து பயமுறுத்தும் படியாக எதுவும் வரவில்லை. அவர்களால் உங்களுக்கு ஒரு தீமையும் செய்ய முடியாது. நான் உன்னைப் பாதுகாத்துக்கொண்டிருக்கிறேன். நீ மற்ற சகோதரர்களைப் பாதுகாக்கிறாய்."

"N1- இன் சக்தி நீக்கப்பட்டுவிட்டது. உன் உடம்பு என்னுடையதாக இருக்கிறது. எப்பொழுதும் அதற்குள் உட்கார்ந்து கொண்டு உன் உடம்பின் மூலமாக நான் வேலை செய்துகொண்டிருக்கிறேன். உடலைக் கொண்டுதான் இன்னொரு உடலின் சவாலை சிறப்பாக சந்திக்க முடியும். அதற்கு உடம்புடன் கூடிய ஒரு மனிதர் தேவை. மிகப் பெரிய மகாபுருஷர்கள் இப்படித்தான் தங்களை அவதரிக்கச் செய்துகொள்கிறார்கள். அந்த அவதாரங்களும் ஒரு உடம்பில்தான் தோன்றுகிறார்கள். நான் எனது முழுமையான சக்திகளுடன் உனக்குள் ஐக்கியமாகி, இப்போது அவற்றை சிறிதுசிறிதாக உன்னிடம் வெளிப்படச்செய்து கொண்டிருக்கிறேன். உன்னுடைய உயர்நிலைபற்றி இன்னமும் யாருக்கும் எதுவும் தெரியாது. இன்று நீ வலியினால் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறாய்; எனவே, நான் வேலை செய்வதை நிறுத்திவிட்டேன்."

**M1 - இன் ஆலோசனை:**

"இப்போது வணக்கத்திற்குரிய மாஸ்டர் சற்று ஓய்வு எடுத்துக்கொள்ளலாமே."

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:**

"நீ எனக்கு ஓய்வு அளிக்கும் போது நான் ஓய்வைப் பெறுவேன், நீ வேதனையால் மிகவும் துன்பப்படும்போது, என்னைப்போலப் பாட ஆரம்பியுங்கள். அதனால் பாட்டில் ஈடுபாடு வரும்; வலியின் மீதான கவனம் குறையும். உன்னுடைய பாட்டு, சிறந்த பயனளிக்கும் திறனைப் பெற்றுள்ளது. மிக நுட்பமானதாகிய ஒன்றை நான் உனக்குக் கொடுத்திருக்கிறேன். ஆனால், அது இப்போது வெளிப்படுத்தப்படாது."

**06.06.1944**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது வந்திறங்கியது:**

"ஒருவருடைய பிராணாஹுதி ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லாத பட்சத்தில், அந்த மனிதருக்கும் தனக்கும் இடையே ஒரு சுவர் இருப்பதாகக் கற்பனை செய்துகொள்ளலாம் என்ற R1- இன் கருத்து தவறானது. ஏனென்றால் ஒரு சுவர் குறுக்கே இருக்கும் போது பிராணாஹுதி கொடுக்க முடியும் என்றால், (அந்தப் பிராணாஹுதி ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என்ற) எண்ணம் சுவரைக் கடந்து போகும் சக்தியில்லாமல் இருக்க முடியுமா? ஒரு இரும்புக் கூண்டில் ஒருவர் அடைக்கப்பட்டுள்ளார்; அவரை நோக்கி பிராணாஹுதி அளிக்கப்படுகிறது என்றால், அது அவரைச் சென்றடையத் தவறிவிடுமா? நிச்சயமாக இல்லை. அப்படியானால் கற்பனையான ஒரு சுவருக்கு என்ன சக்தி இருக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது? யாருடைய பிராணாஹுதி ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லையோ அந்த மனிதரைச் சந்திக்காமல் இருப்பதே மேலானது. ஆயினும், ஒருவர் பிராணாஹுதி அளித்துக்கொண்டிருக்கிறார்; அப்போது யாரோ ஒருவரை அதைப் பெற

இயலாதபடி தவிர்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்றால், அப்போது கற்பனையாக ஒரு சுவரை தனக்கும் அந்த மனிதருக்கும் இடையே உண்டாக்கி, அந்த மனிதர் இதைப் பெறாமல் தவிர்க்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்திக்கொண்டால் அப்படிச் செய்ய முடியும்."

"மற்றவர்களைப் பற்றிச் சொல்வதென்ன, J1- உம் கூட (எனது உண்மையான பிரதிநிதியாக மற்றும் வாரிசு பதவிக்கு உரியவனாக) உன்னை சுலபத்தில் ஏற்றுக்கொள்ளமாட்டார். சத்சங்கத்திற்காக நீ யாரிடமும் போகவேண்டியத் தேவையில்லை. மற்றவர்களிடமிருந்து பிராணாஹுதியின் சக்திக்கூறுகள் உன்னை பாதிப்பதை நான் விரும்பவில்லை. அப்படி ஒரு சந்தர்ப்பம் நேர்ந்தால் நீயேதான் பிராணாஹுதி அளிக்க வேண்டும். ஒரு சிங்கம் போல நீ இரு. யாராவது உன்னை ஏற்றுக்கொள்ளவில்லையென்றால் அல்லது வேறு விதத்தில் தேவை ஏற்பட்டால், அந்த மனிதருக்கு நீ வெளிப்படையாக சவால் விடலாம். பிரகாஷுக்கு நீயே தீட்சை கொடு. முடிந்தவரையில் ஃபடேகரில் இந்த முறை நடைபெறும் வருடாந்திர விழாவில் C1 வந்து சேர்ந்து கொள்ளவேண்டும். உன் தரப்பிலிருந்து அதாவது என் தரப்பிலிருந்து C1- க்கு மீண்டும் அனுமதிகொடு. இந்த விஷயத்தில் அவரது சங்கல்ப சக்தி பலவீனமாக இருக்கிறது. நான் உன்னிடம் கூறும் இந்த ஆலோசனை (அதாவது அவருக்கு நீ அனுமதி தருவது) அவரிடம் தேவையான ஆற்றலை உருவாக்கும்."

**என் பாபுஜியின் பணிவான கேள்வி:**

"C1 - க்கு நான் அனுமதியளித்தால் எப்படி அது உங்களிடம் இணைக்கப்படும் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை."

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:**

"உன்னிடமிருந்து எதுவும் வருவதாக நினைக்காதே. நீ சொல்வது எதுவாயினும் அதற்கு என் அனுமதி நிச்சயம் இருக்கும்."

**அவர் தொடர்ந்து கூறியது:**

"S1 – க்கும் கூட அனுமதியளிக்க வேண்டியிருக்கும், ஆனால், அதற்கு இன்னும் அதிக காலம் இருக்கிறது. S2 சிறிதும் தகுதியற்றவராக இருக்கிறார். அவர் தன் எண்ணத்தில் N1 – க்கு ஆதரவாக உறுதியாக நிலை கொண்டிருக்கிறார். M1 - சிறப்பான நிலையில் இருக்கிறார். K4 - இன்னமும் உணர்ச்சிவசமாகும் தன்மை உடையவராக இருக்கிறார். ஆனால், அது மறுபக்கத்தை நோக்கித் திரும்பியிருக்கிறது. அவர் அப்படியேதான் இருப்பார்."

**M1 கூறிய பணிவான கருத்து:**

"நாத்திகராக இருப்பவர்தான் உண்மையான நம்பிக்கை உடையவர் என்று N1 சொல்கிறார்."

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:**

"அம்மாதிரி ஒருவர் சத்சங்கத்திற்குத் தகுதியானவர் அல்ல, அவருடைய தொடர்பைத் தவிர்த்து விடுங்கள். J1 மிகச் சாதாரணமான மனநிலைமை உடைய ஒருவர். அவருடைய இதயத்திற்கு எந்த வருத்தத்தையும் அல்லது கஷ்டத்தையும் உண்டாக்கிவிடக்கூடாது. M5, உன் மீது நம்பிக்கைக் கொண்டால் மிகச்சிறப்பாக வருவார். அவருக்கு உன் கவனம் தேவைப்படுகிறது. N1- இன் ஒவ்வொரு சீடருக்கும் தீட்சையைப் புதுப்பிக்க வேண்டிய தேவை இருக்கிறது. அதைப் பற்றி நீ வற்புறுத்தவோ, முக்கியம் என்று எடுத்துச் சொல்லவோ தேவையில்லை. அவர்கள் விரும்பினால் அதை அவர்களே கேட்டு செய்துகொள்ளட்டும்.

அதற்கான பொறுப்பு என்னுடையதாக இருக்கும்போது அவர்களுக்கு தீட்சை அளிப்பதற்கு நீ ஏன் பதறுகிறாய்?"

**கேள்வி:**

"பயிற்சியளிப்பதற்கான (மற்றும் ஆன்மீகப் பணிகளுக்கான) அனுமதியளிக்கும் சமயத்தில், 'அனுமதியளிக்கப்பட்டது' என்று சொல்வது போதுமா? அல்லது அதனோடு பிராணாஹுதியும் அளிக்க வேண்டுமா?"

**பதில்:**

"பிராணாஹுதியும் அளிக்கப்படவேண்டும். இந்த விஷயம் ஏற்கெனவே உனக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கான (பணி செய்வதற்கான) உள்நிலை முழு அளவுக்கு உண்டாக்கப்பட வேண்டும். உன் விஷயத்தில் பின்பற்றப்பட்ட வழிமுறையின்படி இதில் செய்யக்கூடாது. அது ஒரே ஒருவருக்கு மட்டுமே செய்யப்பட்டது. பந்தங்களை – அதாவது அந்த மனிதரின் பந்தங்களை – ஒரு போதும் அறுத்து விடவேண்டாம்."

**பணிவான வேண்டுகோள்:**

"நீங்கள் இப்போது குறிப்பிட்டுச் சொன்னதுபோல அந்த அளவுக்கு மட்டும் என் மூலமாக ஏற்பட வேண்டும்."

**பதில்:**

"நான் அதைப் பார்த்துக்கொள்கிறேன்."

## M1- இன் பணிவான கருத்து:

"நீங்கள் ஒருவருக்கு அதிகபட்ச முழு அளவுக்கு சக்தியை அளித்திருக்கிறீர்கள்."

**பதில்:**

"அவரவருடைய ஏற்கும் திறனுக்குத் தகுந்தவாறு கொடுப்பதில் எந்த ஒருவரின் விஷயத்திலும் நான் கருமியாக இருந்ததில்லை. அவருடைய ஏற்கும் திறன் எவ்வளவு இருந்ததோ, அந்த அளவு என்னால் அளிக்கப்பட்டது. பந்தங்கள் அறுக்கப்படுவதனால் ஒருபோதும் விசேஷ நன்மை எதுவும் கிடையாது. அவருடைய பொறுப்பு சிறப்பான விதத்தில் அதிகரிக்கப்படுகிறது. அவருக்கு இருபத்து நான்கு மணி நேரமும் ஓய்வே இல்லை. எனது சொந்த வசிப்பிடத்துக்காக ஏதாவது ஒரு இடத்தை நான் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமா, இல்லையா?"

**என்னை நோக்கித் திரும்பி, தொடர்ந்து லாலாஜி கூறியது:**

"நீ பௌதீக உடலினை நீத்துச் சென்றபிறகே நான் விடுதலை பெறுவேன். அதன்பிறகு என்னுடைய பொறுப்பு முழுவதும் உனக்கு அளிக்கப்படும். இந்த சங்கிலித் தொடர், தொடர்ந்து போய்க் கொண்டே இருக்கும். ஒரே ஒருவரை மட்டுமே இயற்கை தன் கருவியாக உருவாக்கி, அவரைப் பயன்படுத்திக்கொள்கிறது. C1 - அவரே தன் மகன்களுக்கு தீட்சை அளிக்கலாம்."

**நேற்று இரவு நான் அவரிடம் விசாரித்தது:**

"மாஸ்டருடைய ஒவ்வொரு சக்திக்கூறும் முடிவான சத்தியத்தில் ஐக்கியமடைந்து அதுவாகவே மாறியிருக்கும்போது. அவருடைய அந்த உத்தேசம் (Supposition) நிலை கடைசிவரையில் அப்படியே தொடர்ந்து இருக்க வேண்டுமா?

**பதில்:**

"நான் அப்படித்தான் செய்தேன், (அவருக்கு ஒரு உருவத்தை உண்டாக்காமல், கடவுளை ஒரு உத்தேசமாக நினைப்பது சாத்தியமில்லை)."

07.06.1944

**M1 - ஐப்பற்றி இவ்வாறு வெளிப்படுத்தப்பட்டது:**

“மூன்றாவது புள்ளியில் (அக்னி மையத்தில்) உனது நிலை ஆற்றல் மிக்கதாக இருக்கிறது. இந்த அதிசயமான நிலை முதல் புள்ளியில் (இதயத்தில்) இன்னும் அதிகமாக இருக்கிறது.”

08.06.1944

**வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் அவர்களின் அறிவுரை தொடர்ந்தது:**

“ஒருவருக்குப் பிராணாஹுதி அளிக்கும் போது, யாருக்குப் பிராணாஹுதி அளிக்கப்படுகிறதோ அம்மனிதரின் மீது, பிராணாஹுதி அளிப்பவரின் சொந்த உள்நிலை படியக்கூடாது. உன்னுடைய உள்நிலையின் லேசான நிழலை (சாயலை) மட்டும் பிராணாஹுதி அளிக்கலாம். ஆனால், அனைவருக்கும் இப்படிச் செய்யக்கூடாது. இந்த முன்னெச்சரிக்கை உனக்கு மட்டும்தான்.”

“உன்னுடைய பிரதிநிதித்துவம் பற்றிய செய்தி B1- க்கு மிகப்பெரிய அதிர்ச்சியளிப்பதாக இருக்கும். அவரது இதயமும் மனமும் சமாதானமடைவதற்கு நீண்ட நாட்கள் ஆகும். அவருடைய அம்மாவுக்கும் இதனால் அதிருப்தி ஏற்படும். அவள் தன் சகோதரரைத் தூண்டுவதற்கு முயற்சிப்பாள், அவர் உன் மீது விரோதத்தை வளர்த்துக்கொள்வார். முன்பே கூட அவரால் உனக்கு எந்தத் தீங்கும் செய்ய முடியவில்லை. இப்போதும் அவரால் ஒன்றும் செய்ய முடியாது. K...யில் உள்ள அனைவரின் உள்நிலையும் மிக மோசமாக ஆகியிருக்கிறது. தனக்கு ஆதரவாக வலுவான ஒரு செல்வாக்கை உருவாக்கிக்கொண்டிருக்கின்ற B1- இன் பக்கம் சிலர் திசை திரும்பி, அவருடனே நீடித்திருப்பார்கள். உனக்கு தற்காப்புக்காக எதுவும் தேவையில்லை. அனைத்து சக்திகளும் உனக்கு எதிராகத் திருப்பிவிடப்பட்டாலும், சத்சங்கத்தில் இருக்கும்

அனைத்து சகாக்களும் உனக்கு எதிரானவர்களாக உருவாக்கப்பட்டாலும் எந்த ஒருவரின் சக்தியும் உன்னிடம் தீமையான விளைவை உண்டாக்க முடியாது. B1 உன்னையே தன் எதிரியாகக்கருதுவார்."

**கேள்வி:**

"M1 - க்கும் அவர்கள் எதிராக இருப்பார்களா?"

**பதில்:**

"மக்கள் அவரிடம் பயப்படுகிறார்கள். நீ B1 - இடம் கூட போவதை நிறுத்திக்கொள்ள வேண்டும். உன்னை ஏற்றுக்கொள்வதில் R1 - க்கு மிகவும் சிரமமாக இருக்கும். அவரிடம் நீ எச்சரிக்கையாக இருக்க வேண்டும்."

**இரவு 08.30 மணி:**

"H1 ஃபிரான்சுக்கு வந்து சேர்ந்துவிட்டார். அவர் மிகவும் நலமாக இருக்கிறார்."

**பணிவான வேண்டுகோள்:**

"என் பிரபுவாகிய உங்கள் பொறுப்பில் அவரது பாதுகாப்பை அர்ப்பணிக்கிறேன். அவர் மீது எனக்கு மிகவும் அன்பு இருக்கிறது."

**பதில்:**

"நம்பிக்கையோடிரு, இந்தக் கடமையை நானே ஏற்றுக்கொண்டிருக்கிறேன். அவர் பத்திரமாகத் திரும்பி வருவார். நீ இந்தப் போருடன் தொடர்பில் இருக்க வேண்டும் (இரண்டாவது உலக மகாயுத்தம்). இதுபற்றி செய்திகள் உனக்கு வந்துகொண்டிருக்கும். ....................... அழிக்கப்பட வேண்டும். ................ நடைபெறும் யுத்தத்தின் முடிவு ........... எதிராகப் போகும். இந்த வேலை உனக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. (வேலை ஆரம்பிக்கப்பட்டது). இந்த வேலைக்கு

உனக்குப் பதிலாக வேறு யாரையும் நியமிக்காதே. சில 'குதுப்'கள் (QUTUBS – DHRUVAS – fixed Regional Personalities) (துருவா என்ற பதவி பெற்றவர்கள். ஒரு குறிப்பிட்ட மண்டலத்தின் அதிகாரியாக நிலையாக இருக்கும் விசேஷ மனிதர்கள்) உனக்குக் கீழே வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். இது ஒரு பெரிய வேலை. இந்த வேலைக்கு நீ ஒருவனே தகுதியானவன்.''

**கேள்வி:**

"எந்தெந்த 'குதுப்'கள் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள்?"

**பதில்:**

"அது தானாக உனக்குத் தெரியவரும். நான் அங்கேதான் போகிறேன். இந்த வேலை உனக்கும் எனக்கும் சேர்த்து அளிக்கப்பட்டுள்ளது. நீ அங்கே (ஃபிரான்சில்) என்னோடு இருக்க வேண்டும். பயிற்சியளிக்கும் வேலை உன்னிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கும். அது வேறுயாருக்கும் மாற்றிக்கொடுக்கக்கூடியதல்ல (அந்த அனுபவம் எனக்கு ஏற்பட்டது). மிகப் பெரிய மனிதர்கள் உன்னிடமிருந்து நன்மை பெறுவார்கள். ஐரோப்பிய நாடுகளின் தலைவனாக (பிரபுவாக) நீ இருக்கிறாய். இப்போது K..... யிலிருந்து உனது சூட்சும சரீரத்தை விலக்கிக்கொள். இப்போது உனக்கும் எனக்கும் நூலிழையளவு கூட வேறுபாடு இல்லை."

**09.06.1944**

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் அறிவுரை:**

"இப்போது (ஃபிரான்சில்) கடுமையான போர் ஆரம்பித்துவிட்டது. நீ அழிவுக்கான பெண் தெய்வத்தின் (காளியின்) சக்தியை அதிகரித்துக்கொண்டே இரு. அந்தப் பெண் தெய்வத்திடம் அழிவுக்கான

மிக மேலான சக்தி விளங்குகிறது. இன்று அவர்கள் அந்த முனையில் சரணடைய வேண்டும்.”

## 10.06.1944

“அனுபவத்தின் சக்தியை நீ மந்தமாக்கிக் கொண்டிருக்கிறாய். எல்லா விஷயங்களையும் நீ என்னிடம் கேட்க விரும்புகிறாய். ஓரளவுக்கு இன்னும் இரண்டாக இருக்கும் தன்மை (Duality) இருக்கிறது என்று இதற்குப் பொருள். ஒரு மோசமான உதாரணம் சொன்னால், ஒரு அசுத்தமான கழிப்பறையில் கிடந்த ஒருவனை ஒரு நல்ல சுத்தமான இடத்திற்குக் கொண்டுவந்தாலும், அந்த சுத்தமான இடத்திலும் கூட சிறிது காலம் அவன் பழைய அசுத்தமான இடத்தின் அனுபவத்தின் விளைவினை உணர்வான். உண்மையில் அவன் இப்போது அந்தக் கழிப்பறையில் கிடக்கவில்லை. ஆனால் கடந்த கால அனுபவத்தின் நினைவு அவன் மனதில் இன்னும் நீடிக்கிறது. இது பயிற்சியின் மூலமாக நீக்கப்படும்.”

“நீ யாருக்காவது தீட்சை அளிக்கும்போது, அவருடைய சரீர அமைப்பு (ஸ்தூல சரீரம், சூட்சும சரீரம் ஆகியவை) உன் இதயத்துடன் இணைக்கப்பட வேண்டும். நான் அப்படித்தான் செய்கிறேன். புகை – வழிமுறையை அனுசரிக்கத் தேவையில்லை.”

“ஒரு குறிப்பிட்ட அறிவுரையை (அல்லது உத்தரவை, அல்லது உதவிக்குறிப்பை) மீண்டும் சொல்லும்படி கேட்க வேண்டிய தேவை இல்லை. நேரத்தை மீதப்படுத்து.”

## 11.06.1944

### என் பணிவான கருத்து:

“நான் ஒரு கணநேரப் பார்வை செலுத்தும் போது எல்லாப் புள்ளிகளும் வெளிப்படையான திறந்த நிலையில் இருப்பதாகத்

தோன்றுகிறது. அதன்பிறகு, உள்நிலையின் மாற்றங்களின் காரணம், புரிந்துகொள்ள முடியாதபடி உள்ளன.”

**பதில்:**

“அதுவும் கூட ஒரு விதமான வியப்படையும் தன்மைதான்.”

## 12.06.1944

“புத்தகங்களைப் பதிப்பிப்பது நிறுத்தப்பட வேண்டும். அது உனக்கு எதிராக பிரசாரம் செய்வதற்குக் காரணமாகிறது.”

## 16.06.1944

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் அறிவுறுத்தல் தொடர்கிறது:**

“ஒருவருடைய குறைபாடு நீக்கப்படவேண்டியிருக்கும்போது அல்லது அவரிடம் ஏதாவது ஒரு உள்நிலை உருவாக்கப்படும்போது அதைச் செய்தவற்கு முன்பாக, அதைப்பற்றி அவர் அறிந்து கொள்ளும்படி விடக்கூடாது. அப்படி முன்கூட்டியே சொல்லி விட்டால் அந்த மனிதரின் மனம் உன் முயற்சியைத் தடுக்கும் மற்றும் எதிர்க்கும். ஏனெனில், அந்தக் குறைபாட்டில் அவர் பழக்கப்பட்டுவிட்டார்.”

## 17.06.1944

“கடவுளின் மீது நேரடியாக அன்பு செலுத்துவதில் என் மாஸ்டர் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) உதாரணமாக இருந்தார். அது ஆன்மீகத்தில் பெருமளவு முன்னேற்றம் அடைந்த பிறகு நிகழ்ந்தது. மாஸ்டர் என்ற இடைமனிதரின் (Medium) மீது அன்பு செலுத்துவதில் நான் உதாரணமாக இருக்கிறேன். அத்வைத (இரண்டற்ற) வழியில் நாட்டம் கொண்டவர்கள் நேரடியாகக் கடவுளை நேசிப்பது தங்கள் மன நிலைமைக்கு ஏற்றதாக இருக்கிறது என்பார்கள். ஒருவருக்கொருவர் என்ற அடிப்படையில், ஒருவரையொருவர் சார்ந்துள்ளவர்கள் அதில் ஒரு உறுதியான அடித்தளத்தை ஏற்றுக்கொள்ளும் இயல்பை

வளர்த்துக்கொள்கிறார்கள். அது அவர்களுடைய ஜீவனின் ஒவ்வொரு நரம்பிலும் ஒவ்வொரு இழையிலும் ஆழமாக வேரோடியிருக்கிறது. இந்த இரண்டாவது வகையினர் இடைமனிதரின் (மாஸ்டரின்) மூலமாக மட்டுமே பயனடைகிறார்கள். அந்த மனிதரின் நாட்டம் எதில் இருக்கிறது என்று நீ காண்கிறாயோ, அந்த வழிமுறையை அவருக்குக்கொடு."

## 22.06.1944

## இரவு நேரத்தில் வணக்கத்திற்குரிய மாஸ்டரின் அறிவுறுத்தல்கள் கிடைத்தன.

"உன்னுடைய பதவியின் நிலை குதுப் - உல் - அக்தப் (QUTUB - UL – AQTAB) துருவாதிபதி – நிலையான மண்டல அதிகாரப் பதவியில் உள்ளவர்களைக் கட்டுப்படுத்தும் மேலதிகாரி) என்பதாகும். இந்தப் பதவி சாதாரணமான ஒரு பதவியல்ல பல துருவர்கள் (QUTUBS) உனக்குக் கீழ் படிந்து பணிசெய்கின்றனர். உன் மூலமாக மட்டுமே அவர்களுக்கான உத்தரவுகள் அவர்களுக்குப் போகும். அவர்களால் செய்ய முடியாத பெரிய வேலைகளை நீ செய்ய வேண்டும். குதுப் - உல் - அக்தப் (QUTUB - UL - AQTAB) (துருவாதிபதி) என்ற பதவியைப் பெற்றிருப்பது பற்றி நீ உறுதியான கருத்துடன் இருக்கிறாய்."

## 23.06.1944

## அவர் தொடர்ந்து கூறியது:

"உன்னால் அனுசரிக்கப்படுகிற தன்னடக்கம் மற்றும் பணிவு குதுப் - உல் - அக்தப் என்பதற்கு அடுத்து இருக்கும் உயர்ந்த நிலையாகும். இந்தத் தன்னடக்கம் மற்றும் பணிவு என்ற உள்நிலையை உண்டாக்குவதில் உனது தைரியத்தில் (மற்றும் தன்னம்பிக்கையில்) கொஞ்சம் பாதிப்பு ஏற்படும். அந்த நிலைக்கு ஒருவர் வந்தாக வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. நமது சகாக்களிடையே உன்னுடன் ஒப்பிடும்

போது தெய்வீக வெளிப்பாடு என்ற இந்த உள்நிலையை நெருங்கும் திறன் வேறுயாருக்கும் அளிக்கப்படவில்லை."

## துணிவு (தைரியம்) பற்றி வணக்கத்திற்குரிய மாஸ்டர் குறிப்பிட்டுச் சொன்னார்:

"M1 – விட அதிகமான துணிவு கொண்டவர் யாருமில்லை. அன்பு என்றால் அதை உன்னைவிட அதிகமாக உடையவர் வேறு யாருமில்லை. குதுப் – உல் – அக்தப் (துருவாதிபதி QUTUB - UL - AQTAB) என்ற உள்நிலை அகங்காரம் சார்ந்த பெருமை (கர்வம்) விடைபெற்றுச் சென்ற பிறகே வருகின்றது."

"R2 உன்னை நோக்கித் திரும்புவார். ஆனால் அதற்குச் சிறிது காலம் ஆகும். எந்த வேலையை எனக்கு நீ அர்ப்பணித்தாலும், நான் அதற்குப் பொறுப்பாளியாக இருப்பேன்."

## என் பணிவான கருத்து:

"நான் உங்களிடம் சரணடைந்திருக்கும் போது, எனது அனைத்து வேலைகளும் கூட உங்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன."

## வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

"அது அப்படி இருப்பதால், முற்றிலும் நிம்மதியாக இரு. எனினும் நீ ஒருவனே என் கருவியாக இருப்பதால், வேலைப்பற்றிய செயல்முனைப்புடைய சிந்தனை உன் மனதில் இருக்க வேண்டும்."

## M1 - இன் கேள்வி:

"எல்லோருக்குமே இது இப்படித்தானா?"

## பதில்:

"முழுமையான பற்றுறுதி (நம்பிக்கை அல்லது விசுவாசம்) உடைய எந்த ஒருவருக்கும் இது பொருந்தும். அனைவருமே

நம்பிக்கையில்லாதவர்களாகவே இருக்கிறார்கள். அதாவது நம்பிக்கை முழுமையாக இருக்கும்போது அதற்கு மேல் செய்யவேண்டியது எதுவும் மீதம் இருப்பதில்லை என்று பொருள். வேறு வார்த்தைகளில் சொன்னால், பூரணத்துவ நிலையை அடையாமல் இருக்கும் வரையில், ஒவ்வொரு மனிதரிடத்திலும் ஏதாவது ஒன்று இல்லாமல் குறைபட்டு இருக்கிறது. பூரணமான நம்பிக்கையைச் சென்றடைவதற்கு அங்கே நம்பிக்கை வெளிப்படுத்தப்படுவது அடையப்பெறுகிறது."

"S1 – இடம் அன்புக்குக் குறைவில்லை, ஆனால் அவருடைய வழிமுறைகள் சரியல்ல?"

**25.06.1944**

"B...... என்பது, M1 வேலை செய்வதற்கான மண்டலமாக இருக்கும்."

**27.06.1944:**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

"M1 - ஐ என் ஒரே மகனாகக் கருதுகிறேன் அதாவது, ஒரே மகனை மட்டும் பெற்றுள்ள ஒருவர், அந்த ஒரே மகன் மீது பாசம் வைப்பதுபோல அவர் மீது அன்புடையவனாக இருக்கிறேன் என்று பொருள். அவர் (M1) தன்னுடைய கருத்துக்களுக்கு மேலாக உயர்வடையவில்லை. அவரை (சக்தியினால்) நிரப்பவேண்டிய தேவை இல்லை. இந்த விஷயமாக அவ்வப்போது அவருக்கு பிராணாஹுதி கொடு."

**28.06.1944**

**M1 - க்கான உதவிக்குறிப்புகள் (ஆலோசனைகள்) வணக்கத்திற்குரிய மாஸ்டரிடமிருந்து வந்தன:**

"தான் பயிற்சி செய்யாத (நடைமுறையில் பின்பற்றாமலே) சுயகட்டுப்பாட்டினை மற்றவர்களுக்கு அவர் (M1) போதிக்கிறார்."

(1) "இன்னொரு மனிதரின் இதயத்திற்குத் துன்பம் (மனவருத்தம்) உண்டாக்கும் எதிலும் அவர் ஈடுபடக்கூடாது, அந்த விதமாகவே நான் அவரை உருவாக்க வேண்டும். வேறு யாராவது ஒருவரிடம் இவ்வளவு உழைப்பைக் கொடுத்திருந்தால் (இவ்வளவு கடும் முயற்சி செய்திருந்தால்) அவர் எப்படி மாறியிருப்பார் என்று யாருக்குத் தெரியும்? உள்ளார்ந்த ஆன்மீக நிலையைப் பொறுத்த வரையில் இதுவரை அவரிடம் எதுவும் குறையில்லை. அவர் விருப்பம்போல நடப்பதற்கு அவருக்கு அதிக நேரம் இல்லை. சந்தேகமும், முடிவெடுக்காத நிலையும் உடைய இந்த நிலைமையில் அவர் எவ்வளவு காலம் இருக்கப்போகிறாரோ?"

(2) "முஸ்லீம் தத்துவ ஞானத்தின் ஒரு ஆசிரியர் போன்ற பாணியை அவர் விட்டு விடவேண்டும். தனது வயது பற்றிய கருத்தில் அவர் அதிக மதிப்பு வைக்கக் கூடாது. எந்த ஒருவரையும் தன்னைவிடக் கீழானவராக நினைக்கக்கூடாது."

"27.06.1944 தேதியிட்ட உன் கடிதத்தில், பயிற்சியளிப்பது பற்றி S1- க்கு நீ எழுதியிருப்பது அனைவருக்கும் தெரிவிக்கப்பட வேண்டும். அதன் ஒரு நகலை M1- க்குக் கொடுக்கவும். ஒரு நகலை C1- க்கு அனுப்பவும். இது ஒருவருக்குக் கிடைத்த தெய்வீக ஞானோதயம் (வெளிப்பாடு) என்று நேரடியாக அவரிடம் சொல்; அவர் அம்மாதிரி இருக்க வேண்டும் என்று கூறு. பரஸ்பரம் (ஒருவரோடொருவர்) ஒத்துழைப்பதும், ஒன்று பட்டிருப்பதும் தேவை என்பது பற்றி S1- க்கு நீ எழுதியதையும், C1- க்கு அனுப்பும் கடித நகலில் எழுது. இவையனைத்தும் S1- க்கும் எழுதப்பட்டுள்ளது என்பதை அதில் எழுது. இந்த வழிமுறையை நீ மிக நன்றாக விவரித்திருக்கிறாய்; அதற்குக் கொடுக்கப்பட்டுள்ள உதாரணமும், மிக நன்றாக இருக்கிறது. அவர் அதை நடைமுறையில் பயிற்சி செய்தால், உன் வேலையில் பெருமளவு முடிந்துவிடும்."

"N1 – இன் உயிர் விட்டு வைக்கப்படமாட்டாது. எனக்கு அவர் அவமதிப்பை ஏற்படுத்தும் சாத்தியம் இருந்ததால் B5 – ன் மரணம் சம்பவித்தது. B5 – ன் ஆன்மாவுக்கு அமைதி உண்டாகட்டும் என்று கடிதம் எழுதியதில் நீ தவறு செய்துவிட்டாய். அவர் என்னுடைய கோபத்திற்கு இலக்கானவர்."

**பிறகு வணக்கத்திற்குரிய மாஸ்டர் புன்னகையோடு தொடர்ந்து கூறியது:**

"பரவாயில்லை, மனிதன் மீது மனிதனுக்கு அக்கறை இருப்பது சரிதான். நான் தவறை மன்னிக்கிறேன். இப்போது அவருடைய இடத்தில் வேறுயாரையாவது உருவாக்கு."

**இந்த உத்தரவு எனக்குத் தெளிவாக விளங்காததால், அதற்கு விளக்கம் தருமாறு அவரிடம் கேட்டுக்கொண்டேன். அதன் பிறகு வணக்கத்திற்குரிய மாஸ்டர் இப்படி விளக்கம் கூறினார்:**

"என்னுடைய சமாதிக்குச் சென்று பிரார்த்திக்கும் வழக்கத்தை உடையவராக இருந்த யாராவது ஒருவருக்கு உன் பிரார்த்தனையை மாற்றிக்கொள்".

## M1 - இன் கேள்வி:

"ஆற்றில் மூழ்கி இறந்துபோன R4 - க்கு பிரார்த்தனையை மாற்றலாமா?"

## வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

"அவருடைய ஆன்மா அமைதி பெறவில்லை. அவர் நல்லவர்தான்; ஆனால் இதற்கு அவர் தகுந்தவரல்ல. அவருக்குகாக எதைச் செய்தாலும் அது போதாததாகவே இருக்கும். அவர் பெருமளவு சுய கட்டுப்பாட்டை வளர்த்துக்கொண்டிருந்தார். B5 என்பவர் ஒரு......இருண்ட குகையாக இருந்தார்."

(அம்மனிதர் ஒரு இருண்ட குகையில் படுத்துக்கிடப்பது போன்ற காட்சி மனதில் தோன்றியது.)

**29.06.1944**

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் அறிவுரைகள் தொடர்ந்தன:**

"பண்டாராவில் - வருடாந்திர விழாவில் – ஒரு பொது அறிவிப்பை வேறுயாரும் செய்யாமல் இருந்தால் M1 - அதைச் செய்யலாம்."

**அதுபற்றிக் கேட்டதற்கு மாஸ்டரின் வழிகாட்டுதல் வந்திறங்கியது:**

"முதலில் உன் மதிப்புக்குரிய அத்தைக்கு தகவல் தெரிவிப்பது மரியாதைப் பண்பும், நல்ல குணமும் ஆகும்."

"A1- தனது உச்ச சக்திகளை செயல்வடிவில் வெளிக்காட்டுவார். M1- தனது சொந்த உள்நிலையை அறியாமலிருக்கிறார். அது அவருக்கு வெளிப்படுத்தப்பட்டது. ஆனால் அதை அவர் உணர்ந்து அனுபவப்படவில்லை."

வணக்கத்திற்குரிய மாஸ்டர் இப்படிச் சொல்லிக்கொண்டிருந்தபோது ஒரு சமயம் M3 கூறிய விஷயம் பற்றிய எண்ணம் தோன்றியது. அதாவது சிறிது காலத்திற்கு முன்பு, ஒரு மண்டலத்தின் மீதான ஆளுமை அடையும் புள்ளியை ஒரே பிராணாஹுதியினால் B5 கடந்து செல்லும்படியாக B1 செய்தார் என்பதுதான் அவர் (M3) கூறிய விஷயம். நான் அதுபற்றி எதுவும் கேளாமல் தானாகவே மாஸ்டரின் கருத்து தொடர்ந்தது: "அது வெறும் ஏமாற்றும் வேலை, இன்று வரையில் உன்னைத்தவிர வேறு யாராலும் அப்படிச் செய்யமுடியாது. M1 - தைரியமாக இருந்தால் அவராலும் இதைச் செய்ய முடியும்."

“M1- இன் முழு உள்நிலையும் - இன்னமும் வெளிப்படுத்தக்கூடாத சில ரகசியங்கள் தவிர – வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.”

“தொடர்ந்து சத்சங்கம் (கூட்டு தியானம்) நடத்தும்படி K1 - க்கு ஆதரவு கொடு. பிராணாஹுதி பெறுவதற்கு அவரிடம் போகுமாறு மக்களுக்கு வழிகாட்டு. அவருடைய அதிர்ச்சியை நீக்கு. இதை நீ இப்போதே செய்யலாம். அவரை உனக்கு மூத்தவராகக் கருது. உன் இதயம் எதில் நாட்டம்கொள்கிறதோ அதை மட்டுமே செய். இந்த விஷயத்தில் எந்த ஒருவரையும் உனக்கு மூத்தவராகவோ இளையவராகவோ கருத வேண்டாம். எனினும், மரியாதைப் பண்பை அனுசரிக்க வேண்டும்.”

## மேலே அதிர்ச்சி என்று குறிப்பிடப்பட்டவிஷயம் பற்றி M1 - இன் குறிப்பு:

“வணக்கத்திற்குரிய மாஸ்டர் லாலாஜி சாகேப் உடலை நீத்துச் சென்ற பிறகு B1 மற்றும் M3 ஆகிய இருவரும் J..... இடத்திற்குச் சென்றார்கள். அங்கு சுமார் 70 அல்லது 80 சாதகர்கள் இருந்த ஒரு கூட்டத்திற்கு K1 ஒரு சிட்டிங் கொடுத்தார். சிட்டிங் முடிந்த பிறகு B மற்றும் M3 ஆகிய இரு சகோதரர்களும், K1 சரியான முறையில் பிராணாஹுதி கொடுக்கவில்லை; அதில் குறிப்பிடத்தக்க சில குறைகளும், தடைகளும் இருந்தன என்று சுட்டிக்காட்டினார்கள். இதனால் K1 மிகவும் மனம் கூசிப்போய், அமைதியாக எதுவும் பேசாமல் இருந்துவிட்டார். அதற்குப் பிறகு அந்த சங்க அமைப்பு சிதறிப்போய்விட்டது. இதனால் மனம் நொந்துபோன K1 எதிலும் ஆர்வம் இழந்துவிட்டார். பாபுஜியின் அத்தை தனது இரண்டு மகன்களையும் (B1 மற்றும் M3) மிகவும் கண்டித்தார். அடுத்த ஆண்டு நடந்த விழாவில் K1 எனக்கு (M1) இந்த சம்பவம் பற்றி விவரித்தார்.’’

**அன்று மாலை R2 புறப்பட்டுச் சென்ற பிறகு, மாஸ்டர் கூறியது:**

“அவருக்குத் தகவல் தெரிவித்ததில் நீ நல்ல காரியம் செய்திருக்கிறாய். இதனால் வருங்காலத்தில் அவர் உன்பக்கம் திரும்பி வரும்போது, தனக்கு இது முன்பே சொல்லப்படவில்லை என்று அவர் கூறுவதற்கு வாய்ப்பு இல்லாதபடி ஆகியிருக்கிறது. சிறிது காலத்திற்குப் பிறகு அவர் நிச்சயம் திரும்பி வருவார். அவர் தன்னுடைய மனக்காட்சியில் என்னைக் காணவில்லை. தன்னுடைய எண்ணத்தின் சக்தி மற்றும் கற்பனையின் மூலமாக என் உருவத்தை அவர் மனதில் நிலைப்படுத்திக்கொண்டிருக்கிறார். நான் அதில் மகிழ்ச்சி அடைந்திருக்கிறேன் என்று எண்ணம் அவருக்கு இருப்பதால், அந்த விதமாக ஒரு பிம்பத்தை அவர் உருவாக்கிக் கொள்கிறார். என்னை அழைப்பது அத்தனை சுலபமல்ல. ஆயினும், நானாக விரும்பி சில சமயங்களில் என்னை நேசிப்பவர்களிடம் நான் செல்கிறேன். மக்கள் அனைவரும் தங்கள் சொந்த மனத்திடமே பேசிக் கொண்டிருக்கிறார்கள். நம்மிடம் உள்ள உச்சநிலை சுயம் பூரணத்துவம் (குறையற்ற முழுமை நிலை) எய்தியிருக்கும்போது உண்மையான உள்முகத் தொடர்புக்கான நம்பகமான எதிர்பார்ப்பு வரமுடியும். சுயத்தன்மையின் (நான் என்ற தன்னைப் பற்றிய சிந்தனையின்) விளைவிலிருந்து வரும் ஒரு வேதனை, யாரிடம் இன்னமும் சுயத்தன்மையின் விளைவு நீடித்திருக்கிறதோ அந்த மனிதரைத்தான் கவர்ந்து இழுக்கமுடியும். R2 - இடம் (குருவுடன் உறவினர்கள் என்ற தன்மையுடன் இருப்பதாகிய) ‘குடும்பத்தில் ஒருவன்’, என்ற நிலையே இன்னமும் வளர்ச்சி பெறவில்லை. என்னுடன் ‘குடும்பத்தில் ஒருவன்’ என்ற நிலையைப் பெற்றவர்களாக மிகச்சில சீடர்கள்தான் இருக்கிறார்கள். எனது ‘குடும்பத்தில் ஒருவன்’ என்ற நிலை R3 – இடத்தில் இப்போது தான் ஆரம்பமாகியிருக்கிறது – அவர் அதைத் தக்க வைத்துக்கொள்ள முடிந்தால் நல்லது.’’

## 30.06.1944

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

"R4 (என்னைப்பற்றிய) எண்ணங்களும், நினைவும் இல்லாதவராகப் போய் விடவில்லை."

"K....யில் உள்ளவர்களுடன் மக்கள் தங்கள் நேரத்தை மிக அதிகமாக வீணாக்கிவிட்டார்கள். பயிற்சியளிப்பதற்கு அந்த சீடர்கள் எனக்கு சந்தர்ப்பம் கொடுக்கவில்லை. அவர்களின் எண்ணங்கள் குவிந்திருக்கும் மையம் பெரும்பாலும் அங்கே இருக்கிறது. எனவே, அம்மக்களை அங்கே அவரிடம் (N1) நான் அனுப்பினேன். என்னுடைய தவறுகளிலிருந்து நீ பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்." (குறிப்பு: இதைக் கேட்டதும், அந்த மோசமான நிலைமை என் காட்சிக்கு வந்தது. நான் மிகவும் வேதனைப்பட்டேன்.)

**மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

"நீ பெரும் அளவுக்கு நிலைமைகளைச் சரிப்படுத்தியிருக்கிறாய், மக்கள் உன்னிடம் வரும்போது நீ அதைப்பார்த்துத் தெரிந்து கொள்வாய்."

"அனைத்து சுய அடையாளங்களும், இல்லாமற்போய்விட்டதாகத் தோன்றி, ஒன்றுபட்ட தன்மை மட்டுமே எங்கும் நிலவுவதாகத் தோன்றும் சயமத்தில்தான் பிரபஞ்சமளாவிய அன்பு உண்டாகிறது. இந்தநிலை வளர்ச்சியடைந்திருக்கும்போது, அம்மனிதர் அதை மேலும் சிறப்பிக்க விரும்பும்போது, அந்த பிரபஞ்சமளாவிய அன்பில் அவர் / அவள் தன்னையும் சேர்த்துக்கொண்டு, அதைத் தானே பின்பற்ற வேண்டும். உதாரணமாக இதற்கு முன்பாக இந்த உள்நிலையை மேம்படுத்த யாராவது விரும்பி அவர் / அவள் பத்து பேரின் மீது அன்பை உருவாக்கிக்கொள்வதாக வைத்துக்கொண்டால், இன்னும் இருபது பேர் நேசிக்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். முந்தைய நிலையை

கூர்மையாக்க (மேலும் சிறக்கச் செய்வதற்கு) ஒருவர் விரும்பினால் தன்னை எதில் சேர்த்துக்கொண்டிருக்கிறாரோ அந்த நிலையை அன்பாக வெறும் அன்பாக மட்டுமே அவர் கருத்தில் கொள்ள வேண்டும்." (அந்த செயல்முறை என் காட்சியில் வந்தது. அதை வார்த்தைகளில் விவரிப்பது மிகவும் சிரமமானது.)

"உன்னுடைய நாட்குறிப்புக்களை யாராவது கவனமாகக் கூர்ந்து படித்தால் அவர் இந்த நிலைகள் அனைத்தையும்பற்றிச் சொல்ல முடியும். நமது மார்க்கத்தில் ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் பூரணத்துவம் பெறுவதில் வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணிப்பதில்லை (அதாவது ஒரே ஒரு விஷயத்தை மட்டும் முழுமையாக அடைவதற்கு வாழ்க்கை முழுவதையும் ஈடுபடுத்துவதில்லை). பிரபஞ்சமளாவிய அன்பு மற்றும் இதுபோன்ற ஒரு விஷயம் மட்டும் உங்களை லட்சியத்துக்கு அல்லது பூரணமான ஈடேற்றத்துக்குக் கொண்டு செல்வதில்லை. (மேலும் பல விஷயங்களிலும் முழுமை பெற வேண்டும்)."

"இங்கு லட்சியமாக எடுத்துக்கொள்ளப்படுகிற ஒருவர் மாஸ்டர் ஆவார். மாஸ்டருடைய தலைமையான சகாவாக இருப்பவர் அந்த லட்சியத்தை நோக்கி முதிர்ச்சி பெறச் செய்கிறவராக இருக்கிறார். உலக வாழ்க்கை சார்ந்த துன்பங்களிலிருந்து உங்கள் இதயத்தை விடுபட்டதாக வைத்திருங்கள். இது அவருடன் சேர்ந்து இருப்பதன் மூலமாகவே அடையப்படுகிறது. குதுப் (QUTUB / துருவா என்ற பதவியில், நிலையான துருவ நட்சத்திரம் போல இருப்பவர் அல்லது ஒரு குறிப்பிட்ட மண்டலத்துக்கு அதிகாரியாக இருப்பவர்) என்ற நிலை வரையில் உயர்வடைந்திருக்கும் ஒருவருடைய தொடர்பு நன்மையளிப்பதாக இருக்கும். நமது முந்தைய பிரதிநிதிகள் "குதுப்" உடன் இணைக்கப்பட்டிருந்தார்கள்."

01.07.1944

**அறிவுரை:**

“உன் மனதில் எதிரொலித்துக் கொண்டிருக்கின்ற தத்துவஞானத்தை இப்போது எழுதிவைக்கத் துவங்கு. பிறகு அவை ஒழுங்குபடுத்தப்படும்.”

**என் பணிவான கருத்து:**

“கருத்துக்களை விரிவுபடுத்திக் கூறுவது என்னால் இயலாமலிருப்பதைக் காண்கிறேன்.”

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:**

“சொல்ல விரும்பும் விஷயத்தை மிக நன்றாக எடுத்துச் சொல்ல உன்னால் முடியும். பயிற்சி அனைத்தையும் சரியாகக் கொண்டுவந்துவிடும். நீ நாட்குறிப்புகள் எழுத ஆரம்பித்தபோது, பக்கம் பக்கமாக எழுதிநிரப்பிக்கொண்டிருந்தாய். எனவே, இதைச் செய்ய ஆரம்பித்துவிடு.”

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

“மனதில் எண்ணங்கள் தோன்றிக் கொண்டிருந்தாலும், தன்னை இழந்த நிலை தொடர்ந்து நீடித்திருக்கின்ற நிலையில், ஐக்கியமடைதல் என்ற உள்நிலையானது இதயப்புள்ளியில் அடங்கியிருக்கிறது. (அதாவது இதயத்தில் விளங்கும் ஐக்கிய நிலை, அப்போது மனதில் எண்ணங்கள் வந்து கொண்டிருந்தாலும், தொடர்ந்து தன்னை இழந்த நிலையிலேயே இருக்கிறது.) அப்போது உள்ளே வரும் எண்ணங்களின் மீது ஒரு விருப்பமின்மை உண்டாகிறது. ஐக்கியமடைதல் அல்லது தன்னை இழத்தல் என்பது பல்வேறு வடிவங்களில் இருக்கின்றது. ஒவ்வொரு நிலையிலும் அது இருக்கின்றது. ஆனால், ஒன்றுக்கொன்று வேறுபட்ட விதமாக இருக்கிறது. தன்னைமறந்து விடுதலாகிய (தன்னை

இழத்தல்) முதல்வடிவம் 'இதயத்தின் தீர்மானம்' – சுயத்தின் தூண்டுதல் அளிக்கும் பகுதியில், ஆசைகளின் முரண்பாடுகள் தீர்க்கப்படுகின்றன. கனமான தன்மை (சாதாரண வாழ்க்கையில் கீழான தூண்டுதல்களின் முரண்பாடுகளினால் உண்டாக்கப்படுகிற தன்மையிலிருந்து விடுபட்ட ஒரு நிலைமை இது."

"கீழான சுயத்தின் தூய்மை (TAZKIA – E – NAFSA) என்பதை அடையப் பெறும் போது ஆராய்ந்தறியும் அறிவுத் திறனைப் பயன்படுத்தும் திறமை மேம்பாடு அடைகிறது. பொதுவாக "இதயம்" அல்லது "கீழான சுயம்" தேவையில்லாமல், காரணமில்லாமல் தாழ்வாக, மோசமானதாகக் கருதப்படுகிறது. எண்ணங்கள் தோன்றும் மூலமாக இருப்பது (புருவங்களுக்கு இடையில் உள்ள நெற்றியைச் சுட்டிக்காட்டி) இதுதான். அது யோக முறையில் 'த்ரிகுடி' அல்லது இரண்டு இதழ்களை உடைய தாமரை அல்லது 'ஆக்ஞா சக்கரம்' அல்லது 'உறுதியான தீர்மானத்துக்குரிய புள்ளி' என்று சொல்லப்படுகிறது."

"இரவு நேரத்தில் ஒரு செடியை துணியால் மூடக்கூடாது." (நான் ஒரு பூச்செடியின் மீது என் சட்டையை உலர்வதற்காகப் போட்டபோது இந்த அறிவுரை கூறப்பட்டது.)

"S2 - க்கு ஒரு கடிதம் எழுது. S1- க்கும், C1- க்கும் தொடர்ந்து கடிதங்கள் எழுதிக் கொண்டிரு. பதிலுக்காகக் காத்திருக்க வேண்டாம். பூசாரிகள் வகுப்பினருக்கு எதிராக தெய்வீகத்தின் கடும் கோபம் இருக்கிறது. (பூசாரிகள் வகுப்பினர் மீது தெய்வீகம் கடும் கோபம் கொண்டிருக்கிறது) எனவே, அவர்களின் மீது அதிக சக்தியை வீணாக்குவது பயனற்றதாக இருக்கும்."

## 02.07.1944

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

“மக்கள் உன்மீது மேலும் அதிகமான நாட்டம் கொள்வார்கள். உன்னுடைய குணம் என்னுடையதைப் போலவே இருக்கிறது. இதனால், என்னுடைய தனித்துவமான அடையாளம் உன்னுள் புகுந்திருக்கிறது என்கிற உண்மையை அவர்கள் நம்புவார்கள். கடிதப் போக்குவரத்து அதிகமாகும். கடிதங்களுக்கான பதில்களும் சரியாக இருக்கும். உன்னுடைய சிறந்த நற்பண்புகள் உனக்கே இன்றும் தெளிவாகத் தெரியவில்லை. நேற்று உனக்கு விளக்கிச் சொல்லப்பட்டதுபோல, உன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வேலை சம்பளமும் இல்லாத, லாபமும் இல்லாத பயனற்ற உழைப்பு என்று கருதவேண்டாம். (**குறிப்பு:** இது **01.07.1944** அன்று – அதாவது நேற்று – ‘கீழான சுயத்தை தூய்மையாக்குதல்’ என்ற விஷயத்தைக் குறிப்பிடுகிறது.) புலன்கள் (உலகியல்) சார்ந்த ஆசைகள், அதைத் தூண்டும் செயல்பாடுகளின் மூலமாக நிறைவேற்றப்படுவதனால் இன்பமடைவது தொடரும் வரையில் ‘கீழான சுயத்தைத் தூய்மையாக்குவது’ முழுமையடையாது. ‘கீழான சுயத்தைத் தூய்மையாக்குவதை’ அடைந்த பிறகு ஒருவர் தனது உறவு, நட்பு ஆகியவற்றிலிருந்து இன்பம் பெறுவதில்லை. ஆனால், அந்தச் செயல் சம்பளமில்லாத, லாபமும் இல்லாத (Begaar) ஒரு பயனற்ற உழைப்பாகக் கருதிச் செய்யப்படுகிறது. அதன் சொந்த அளவின்படி இந்தக் கோட்பாடு சரியானதாக இருக்கிறது. ஆனால், நீ உனது சொந்தக் கோட்பாட்டின்படி தொடர்ந்து முன்னேற வேண்டும். உனக்கும் எனக்கும் இடையே உள்ள உறவு முறையானது நேரடியானதாக இருக்கிறது. இதனால் இந்தக் கோட்பாடுகளை நீ பின்பற்றுவது, உன்விஷயத்தில் பயனற்றதாகவே இருக்கும். அவருடைய (M1 – உடைய) உள்ளுணர்வுத்திறன் அவ்வளவு ஆழ்ந்ததாக இல்லை. உனக்கு வருகின்ற உள்ளுணர்வு, மனக்காட்சி ஆகியவை சத்தியத்திலிருந்தே

வருகின்றன. அதில் வேறு கலவை ஏதும் இல்லை. நான் உன்னைக் குழப்பத்தில் விட்டிருக்கிறேன். அதற்கான பரிசையும் நீ பெறுவாய். உன் கதை மிகவும் நீண்டகாலத்திற்கு மக்கள் புகழ்ந்து பேசும் ஒரு விஷயமாக நிலைத்திருக்கும். உனக்கு இந்தத் தடை பொருந்தாது. ஏனென்றால், மக்கள் என்னால் தீட்சை பெறப்போகிறார்கள். எனது சீடர்கள் அனைவருக்கும், எனது பிரதிநிதி யாராவது இருந்தால் அவருக்கும் நீ பயிற்சியளிக்கலாம்."

## 03.07.1944

### வணக்கத்திற்குரிய மாஸ்டரின் அறிவுரை:

"சத்சங்கம் நடைபெறும் இடத்தில் நான் உட்காரும் இடத்தில் என் புகைப்படத்தை வைக்க வேண்டாம். என்னைப் புகைப்படம் எடுப்பதற்கு மக்கள் மிகவும் விரும்பினார்கள். இப்போது புகைப்படத்தை வணங்குவது ஆரம்பமாகிவிட்டது. K2 இன்னும் நான்கு அல்லது ஐந்து நாட்களில் இங்கு வருவார். அவரை இன்னும் சற்று அதிகமாகத் தயார்படுத்து." வணக்கத்திற்குரிய மாஸ்டரின் கட்டளைகளின்படி M1 - இன்று M2 - க்கு தீட்சையளித்தார்.

## 04.07.1944

### அறிவுரைகள்:

"தீட்சையளிக்கப்பட்ட உறுப்பினர்களின் ஒரு பட்டியலைத் தயார் செய். ஆனால், அதில் R2 - இன் பெயரைச் சேர்க்க வேண்டாம். அவருக்கு மீண்டும் புதிதாகத் தீட்சையளிக்க வேண்டியிருக்கும். உன் சகோதரர்களை சீர்திருத்துவதில் நீ மிகவும் வேகமாக இருக்கிறாய். ஆனால், அதே அளவுக்கு அதை உள்ளிழுத்துக்கொள்ளும் திறன் அவர்களுக்கு இல்லை. எனவே, அதனோடு கூடவே, அவர்களது ஏற்கும் திறனையும் அதிகரித்துக்கொண்டே இரு. சகோதரர்களுக்குப் பயிற்சியளிப்பதில் தீவிர

ஆவல் இருப்பது நல்லது. அது எனக்கு விரைவில் வலிமையளிக்கும். நீயும் பயிற்சியளிப்பதற்கான களத்தைக் கண்டறிவாய்.”

## 05.07.1944

**அறிவுரைகள்:**

“M1- இன் வீட்டில் குழு தியானம் நடைபெறவேண்டும். உன்னிடம் மக்கள் ஒவ்வொருவராக வந்து சேருவார்கள். இதனால் ஒரு கூட்டத்திற்கு பிராணாஹுதி அளிக்கும் உரிமை உனக்கு இல்லை என்று பொருளாகாது. உனக்கு அனைத்து உரிமைகளும் உண்டு. V1 - க்கு மீண்டும் புதிதாக தீட்சையளிக்க வேண்டியிருக்கும். தீட்சையை நீ மாற்றிக்கொடுக்கவும் முடியும். அது இப்போதும் கூட சாத்தியம்தான். N1 - உடன் மட்டும் அவருடைய (V1 – உடைய) இணைப்பு இன்னமும் நீடித்திருக்கிறது. தீட்சை என்ற பேய் அவரை இன்னமும் பிடித்துக்கொண்டிருக்கிறது. இதனால் எல்லா முயற்சிகளும் வீணாகிப் போகும். வருங்காலத்துக்காக இந்தத் தகவல்கள் உனக்கு அளிக்கப்படுகின்றன. பட்டியலில் இருந்து B6 – இன் பெயரை நீக்கிவிடு. G…யில் உள்ள இன்னும் ஒருமனிதர் என்னுடன் உள்ள இணைப்பைத் தொடராமல் விட்டிருக்கிறார்”.

## 07.07.1944:

“நான் எங்கேயும் போவதில்லை. எப்போதும் உன்னுடன் நெருங்கி இருக்கிறேன். அது எப்படி? நீ உன் உடலை விட்டு நீங்கிச் செல்லும்போது இந்த ரகசியம் உனக்கு வெளிப்படுத்தப்படும். உன்னுடைய உழைப்பு (சிரமமான வேலை) பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். விஷயங்கள் சுற்றி வளைத்தும், சிக்கலாகவும் போய்க் கொண்டிருக்கின்றன. எனவே, இப்போது உன்னை வெளிப்படுத்த (நீயே என் பிரதிநிதி என்று தெரிவிக்க) நான் விரும்பவில்லை.

தற்போதைக்கு கடிதப் போக்குவரத்தை நிறுத்திவை. உனது தைரியத்தை (துணிவை) இழக்க வேண்டாம். வெற்றி நிச்சயமாக வரும். உன் கடிதங்களின் மீது S1- கவனம் கொடுப்பதில்லை. இந்த மரியாதைக்குறைவு என் மனதைப் புண்படுத்துகிறது. அவரது முன்னேற்றம் நிறுத்தப்பட்டு விட்டது. கவலைப்பட வேண்டாம். S1- க்கு பிராணாஹுதி அளிப்பதை நிறுத்திக்கொள். C1- தன் உடல்நலத்தைக் கவனித்துக்கொள்ள வேண்டும். அவருடைய உடலின் ஆற்றலை அதிகமாக்கு. இந்த ரகசியத்தை அவருக்குத் தெரிவிப்பதில் தவறு இல்லை. ஆனால், இதை மற்றவர்களுக்குத் தெரிவிக்கக்கூடாது என்று அவருக்கு எச்சரிக்கை கொடுக்க வேண்டும். இந்த மனிதர் உனக்கு உபயோகமாக இருக்க முடியும். நீ எழுதிவைத்துள்ள விளக்கக்குறிப்பு முழுவதையும் அவருக்குச் சொல்லலாம். ஆனால், இவ்விஷயங்கள் அவரிடம் ரகசியமாக இருக்க வேண்டும். நீ எழுதிவைத்திருப்பதன் பிரதி எதுவும் அவரிடம் இருக்கக் கூடாது. இந்த விஷயங்கள் வருங்காலத் தலைமுறைகள் அனுபவம் பெறுவதற்காக பாதுகாத்து வைக்கப்பட வேண்டியவை ஆகும். பொதுவாக மக்களுக்கு இந்த விஷயங்களைச் சொல்ல வேண்டியதில்லை. என் அனுபவத்தை உனக்கு நான் கைமாற்றிக் கொடுத்ததுபோல, நீயும் கூட உன் அனுபவத்தைச் செய்வாய். C1 – இடமிருந்து நீ வேலை வாங்கிக் கொள்ளலாம். அவருடைய நரம்புமண்டலம் பலவீனமாக இருக்கிறது. அதற்காக காலம் வராத வரையில் என்ன ஆனாலும் இந்த ரகசியத்தை வெளிப்படுத்தக் கூடாது என்று மறுபடியும் சொல். அவரை வரச்சொல்லி அழைப்பதில் தவறு ஏதுமில்லை. நிறமூட்டப்பட்ட கண்ணாடி புட்டிகளிலிருந்து தண்ணீர் அருந்தும் மருத்துவம் M1- க்கு நன்மையளிக்கும்.”

## 08.07.1944

### அறிவுரை:

"E...என்ற இடத்திற்கு M1- செல்லும்போது, C1- உடன் போதுமான அளவுக்கு ஆன்மீக ஒன்றுபட்டதன்மையுடன் அவர் இருக்க வேண்டும். நாம் இன்று காண்பதுபோல சமுதாயம் சீர்கெட்டுப்போன நிலை, இந்த அளவுக்குக் கீழே போகும் என்று ஒருபோதும் எதிர்பார்க்கப்படவில்லை. இப்போது இந்த நிலைதான் நம் முன்னே இருக்கிறது. (இப்படி நடந்த செயல்திட்டமும் நிலைமையும் மனக்காட்சியில் கொண்டுவரப்பட்டன.) ஒவ்வொருவராக, தனித்தனியாக பிராணாஹுதி அளிக்க வேண்டிய தேவை இருக்கிறது. அதன் பிறகு அவர்கள் எதிரில் இருப்பது தேவையில்லாமலே கூட வேலை நடந்துகொண்டிருக்கும்."

"மக்கள் நான் இறந்துவிட்டதாக எடுத்துக்கொண்டுவிட்டார்கள். அப்படி நான் இறந்துவிட்டதாக அவர்கள் எண்ணியிருக்கும்போது, அந்த பிராணாஹுதியின் பாய்ந்துவரும் ஆற்றலிலும் தடை உண்டாக்கப்படுகிறது. எனவே பெரும்பாலும் மக்கள் என்னுடன் இணைப்பை முன்னைப்போல தொடர்வதில்லை."

### என்பணிவான கருத்து:

"இம்மாதிரி விஷயங்களைக் கேட்கும்போது எனக்கு அது புதிராக (விளங்காமல்) இருப்பதைக் காண்கிறேன்."

### வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

"நானும் ஏமாற்றமடைகிறேன். ஆனால் அனைவரைப் பற்றியும் அப்படி இல்லை."

## 09.07.1944

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் உத்திரவின்படி இன்று K2 - க்கு பிரிசெட்ராக வேலை செய்வதற்கு தற்காலிக அனுமதி அளிக்கப்பட்டது.

## 10.07.1944

### அறிவுரைகள்:

"K2 - ஐ பிரம்மாண்ட மண்டல நிலைக்கு மேல் நோக்கி இழுத்துவிடு. (கீழ்நிலை சுயத்தை அழித்துவிடும் அளவுக்கு அவர் கட்டுப்பாட்டுடன் இருப்பது வணக்கத்திற்குரிய மாஸ்டருக்குப் பிடித்துவிட்டது.) உன் நேரம் வீணாகும்படி விடவேண்டாம். ஏதாவது ஒரு வேலையில் ஈடுபட்டுக்கொண்டிரு. உனக்கு ஓய்வு நேரம் கிடைக்கும்போது, பிராணாஹுதி கொடு, நடந்து செல் அல்லது நல்ல புத்தகங்கள் படி, வீட்டு வேலைகளில் அக்கறை எடுத்துக்கொள். உன் மீது மிகப்பெரிய சுமை இருக்கிறது."

### கேள்வி:

"ஓய்வு நேரத்தில் நான் செய்தித்தாள் படிக்கலாமா?"

### வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

"படிக்கலாம். ஆனால், M1 மாதிரி இல்லை. உன்னைச் சுற்றிலும் செய்தி இருக்கிறது. உன் தேவைக்குத் தக்கபடி அதை நீ கண்டறிய முடியும். செய்தித்தாள் படிப்பதற்கேற்ற நல்ல விஷயம் அல்ல. ஆங்கில மொழி அறிவை அதிகரித்துக்கொள்வது உன் நோக்கமென்றால், அதில் தலையங்கத்தைப் படிக்கலாம். நான் உனக்குக் கொடுக்கப் போவதைவிட மேலாக செய்தித்தாள்களில் எதையும் நீ காணமுடியாது. தற்காலிகமான பொழுதுபோக்குக்காக அதை நீ படிப்பதற்கு எந்தத் தடையும் இல்லை. அதன் பதிவு உன்மனதில் தங்கிவிடக்கூடாது. விமர்சகராக இருப்பதற்கு யாராவது விரும்பினால் அவர் செய்தித்தாள்களைப் படிக்க வேண்டும். அது உன் வேலையல்ல, அதற்காக நீ வரவும் இல்லை. எதுவாயினும், எந்த ஒன்றிலும் பற்று வைப்பது ஆன்மீகத்துக்குத் தீங்கானது."

## பரிந்துரை செய்த கருத்து:

"உடல் சார்ந்த மனம், பிரம்மாண்ட மனத்தில் சேர்ந்திருந்தால் மனத்தின் வலிமை அதிகமாகும். நீ அப்படிச் செய்யவேண்டிய தேவை இல்லை என்றாலும், உன் எண்ணத்தின் பின்னே அந்த சக்தி இருக்கிறது."

## M1- இன் பணிவான கருத்து:

"1922 ஆம் ஆண்டு கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தி நான் ஒரு கடிதம் எழுதினேன். அதை என் பிரபுவாகிய நீங்கள் S1- இடம் கொடுத்தீர்கள், அவர் என்னிடம் அதைத் திருப்பிக்கொடுத்தார். அந்தக் கடுமையான வார்த்தைகளுக்காக நான் மன்னிப்பு வேண்டுகிறேன்."

## வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

"M1- இன் ஒவ்வொரு தவறையும் - தவறுகள் அனைத்தையும் - நான் மன்னித்து விட்டேன். ஏனென்றால், அவர் அன்பு உடையவராக இருக்கிறார். எனினும், தனது இப்போதைய உள்நிலையை அபிவிருத்தி செய்வதற்கு (முன்னேறச் செய்வதற்கு) அவர் அக்கறை எடுத்துக்கொள்ளாமல் இருக்கிறார். இது எனக்கு வருத்தமளிக்கிறது. அவரிடத்தில் எதையும் சமாளிக்கும் திறன் இருக்கிறது. ஆகையால் அவரை நான் பொறுப்பாளியாக வைத்திருக்கிறேன்." (அந்த உள்நிலையின் செயல்திட்டம் என் மனக்காட்சியில் வந்தது.)

"அந்தத்திட்டத்தை நீ சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறாய். இப்போது அந்த உள்நிலையைப் பறித்துக் கொள்வதற்கு நீ முயற்சி செய்யலாம். ஆனால், அதில் பிரச்சனை என்னவெனில் அவர் மீண்டும் அதைத்தன்னிடம் உருவாக்கிக்கொள்வார். N1- உடன் அவருக்கு நீண்டகாலத் தொடர்பு இருந்தது. அந்தப் பழக்கத்தின் விளைவில்

சிறிதளவு இன்னும் அவரிடம் இருக்கிறது. M1- இடம் இருந்த அனைத்தையும் அவர் நசித்துக்கொண்டே இருந்தார். எனவே, எதையும் சமாளிக்கும் அவரது திறனும் ஞாபகத்திலிருந்து நீக்கப்பட்டது. N1- இன் சங்கல்பசக்தி, M1- தனது தைரியத்தை இழக்கச் செய்தது. அவருடைய (M1- னுடைய) உள்நிலைக்கு ஏற்றவாறு அவருக்குப் பயிற்சி அளிக்கப்படவில்லை. வேறு வார்த்தைகளில் சொன்னால் அவருடைய உள்நிலை அதன் இயற்கையான பிரகாசத்தை அடைவதற்கு ஏதுவாக இருக்கும்படி, அவருக்குத் (M1- க்கு) தெரிவிக்கப்படவில்லை. ஆயினும், என் பக்கத்திலிருந்து M1- ஐ சக்தியால் நிரப்புவதில் கருமித்தனம் ஏதும் இருக்கவில்லை."

"அதே ஆசாமி (N1), P1- இடமிருந்து அனைத்தையும் பறித்துக்கொண்டுவிட்டார். அந்தப் பரிதாபமான மனிதருக்கும் (P1) அது புரியவும் இல்லை. P1- இன் உருவ அடையாளங்கள் என்னைப் போலவே பெரும்பாலும் இருப்பதாக அவரைப் பார்க்கிறவர் அடிக்கடி சொல்வது உண்டு. N1- இன் நல்லறிவு ஏற்கெனவே பொறாமைக்கு இடம் கொடுத்துவிட்டதால், இந்தமனிதர் (P1) நான் உடலை நீத்துச் சென்றபிறகு என்னுடைய பதவிக்கு வந்துவிடலாம் என்ற பய உணர்வு அவருக்கு (N1- க்கு) வந்துவிட்டது. எனவே, ஒரு முன்னெச்சரிக்கையான காரியமாக N1 இம்மாதிரி செய்துவிட்டார். என் எண்ணம் அவர்கள் எதிர்பார்த்ததை விட வேறாக இருந்ததால், P1- க்கு பாதுகாப்பு அளிக்கும் விஷயத்தில் நான் அவ்வளவு பரபரப்புடன் இருக்கவில்லை. P1- உம் ஏற்கெனவே தனது முழுநம்பிக்கையையும் N1- இன் மீது வைத்திருந்தது இதில் கூடுதலான ஒரு அம்சமாக இருந்தது. பாதுகாப்பளிப்பதில் நான் எடுத்துக்கொண்ட அக்கறை எதுவாயினும், எனது ஆன்மீக வம்சாவளி அழிக்கப்பட்டு விடக்கூடாது என்பதால், அது உனக்காக மட்டுமே இருந்தது. பொதுவாக மக்கள் என்னிடம் வந்து ஏதாவது கேள்விகள்

கேட்பதை N1 தடுத்துவிடுவார். இது அவருடைய தவறல்ல. அவர் அந்தவிதமான பயிற்சியைப் பெற்றிருக்கிறார். என்னிடம் வந்து பழகுவதற்கும், பிராணாஹுதி பெறுவதற்கும் மக்களை அனுப்புவதற்குப் பதிலாக தன்னிடம் அவர்கள் வரவேண்டுமென விரும்பினார். இது எனக்கு மிகவும் அதிருப்தியளிப்பதாக இருந்தது. P1 நல்லவராக இருக்கவில்லை."

**11.07.1944**

**அறிவுரை:**

"குறிப்பிட்ட தகுதிக்குக் கீழான எந்த ஒருவரையும் நமது சங்கத்தில் உறுப்பினர்களாக நிரப்புவதற்காக நான் விரும்பவில்லை."

**பணிவான கருத்து:**

"மக்களை இம்மார்க்கத்தில் சேர்ப்பதற்கு அனுமதி பெற்றுள்ள பிரிசெப்டர்கள் இதை அறியாமல் செய்கிறார்கள். இம்மாதிரி தவறுகளைச் செய்யாமல் தடுப்பதற்கு அவர்கள் அதை அறியும் விதமாக சற்று விளக்கம் கொடுக்கப்பட வேண்டும்."

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:**

"இப்படி அனுமதியைப் பெற்றுள்ள பிரிசெப்டர்கள் தங்களுடைய உற்சாகத்தினால், தங்கள் அறிவுத்திறனைப் பயன்படுத்தாமல் தவறுகள் செய்துவிடுகிறார்கள். இதனால், ஒரு புதிய மனிதரை சத்சங்கத்தில் சேர – பயிற்சி செய்ய – அனுமதிப்பதற்கு முன் உன்னிடம் கலந்து ஆலோசிப்பது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்த விஷயத்தில் M1- ஒருவருக்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கலாம். (மீதியுள்ளவர்களின் உள்நிலை சம்பந்தமான ஒரு அட்டவணை மனக்காட்சியில் தோன்றியது). அவர்களில் ஒருவர் (S1) சுய முக்கியத்துவத்தின் கர்வத்தினால் சத்சங்கத்தை மேலும் சிறப்பிக்க முயற்சி செய்கிறார். வேறு ஒருவர் (S2)

மூடத்தனத்துக்கு ஒரு மாதிரியாக சத்சங்க விஷயத்தில் வேலை செய்கிறார்கள். அவரால் அறிமுகப்படுத்தப்படுகிறவர்கள் மந்தமானவர்களாக இருப்பார்கள். C1 சற்று மேலான ஒரு வழிமுறையை அனுசரித்தார். அவரிடம் சற்று மேலான மனிதர்களும் இருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு அவரால் அதிக நன்மை செய்ய முடியவில்லை. இந்த வேலையை ஓரளவுக்கு அவர் மேம்படுத்தினார். ஆனால் அதைச்சரியாகப் பயன்படுத்தமுடியாதவராக இருந்தார். தன்னுடைய வேலையைச் சமாளிப்பதில் (சரியாகச் செய்துமுடிப்பதில்) அவருக்கு உதவியாக இருக்கக்கூடியவராக ஒரு மனிதரைக்கூட அவரால் தயார் செய்ய முடியவில்லை. எனவே, குறிப்பிட்ட தகுதிக்குக் கீழான மனிதர்களை அதில் அனுமதிக்கக்கூடாது என்று அறிவுறுத்தும் கடிதங்கள் அனைவருக்கும் கொடுக்கப்படவேண்டும். உனக்குக் கீழ்ப்படியாமல் இருப்பது, எனக்கு அதிருப்தியை உண்டாக்கும். ஏனென்றால், உனக்குள் இருந்து கொண்டு நான்தான் இந்த உத்தரவுகளை இடுகிறேன். K2 – க்கு கூட, இந்தப் பயிற்சியில் ஒருவரைச் சேர அனுமதிக்கும் முன், அவரது உள்நிலையைப்பற்றி உனக்கு எழுதி உன் ஒப்புதலைப் பெற வேண்டும் என்று அறிவுறுத்து. எனினும், யாரைப்பற்றி அவரது இதயம் முற்றிலும் திருப்தியடைகிறதோ அம்மாதரி ஒருவர் அவரிடம் வரும்போது உன்னிடம் அதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய தேவை இல்லை. இதே விதிமுறை அனைவருக்கும் பொருந்தும். இப்போதைக்கு (தற்சமயம்) உன்னிடமிருந்து S1– க்கு நடைபெறும் எந்தக் கடிதத் தொடர்பும் பயனளிக்காததாகவே இருக்கும். அவர் ஒரு அதிர்ச்சியைப் பெறும்போது அவர் இதில் கவனம் செலுத்துவார். என்னை நேசிக்கின்ற விஷயத்தில் தன்னை விட மிக மேலானவர் ஒருவர் இருக்கிறார் என்பதை அவர் திட்டவட்டமாகக் கண்டறியும் போது அவர் தன் நிலையை அறிந்துகொள்வார். மாஸ்டரின் மீது தான் கொண்டிருக்கும் அன்பு அல்லது தன்மீது மாஸ்டர் கொண்டிருக்கும் அன்பு பற்றி அறியாமை

நிலை இருக்கும்போது, அதுதான் உண்மையான அன்பாகும். இந்த நிலை ஒரே ஒருவரிடம் மட்டும்தான் வளர்ச்சியடைகிறது. யாரிடம் இந்த மாதிரி அன்பு வளர்ச்சி பெற்றுள்ளதோ அவருக்கு மக்களை அவர் நேசிக்கிறார் என்பதோ அல்லது மக்கள் அவரை நேசிக்கிறார்கள் என்பதோ சிறிதும் தெரியாது. இந்தநிலை யாரிடம் வளர்ச்சி பெற்றுள்ளதோ அவர் உச்சநிலை தனித்துவத்தில் – பரம்பொருளில் ஒரே முயற்சியில் இணைப்பை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார். இம்மாதிரி ஒரு உதாரணம் இவ்வுலகில் மிக அரியது. அனைவரிடம் இதை எதிர்ப்பார்க்க முடியாது.'' (இதனுடன் ஒப்பிடுவதற்கு அன்பின் செயல்திட்டம் மனக்காட்சியில் வந்தது.) அதில் விவரிக்கப்பட்ட அன்பின் செயல் திட்டத்தின் விவரம்; "மாஸ்டர் சீடனை நேசித்தால், அப்போது மாஸ்டர் நேசிப்பவராகவும் சீடர் நேசிக்கப்படுபவராகவும் இருக்கிறார்கள். சீடன் மாஸ்டரை நேசித்தால் அப்போது நேசிப்பவர் சீடனாகவும், நேசிக்கப்படுகிறவர் மாஸ்டராகவும் இருக்கிறார்கள். இந்த இரண்டு வழிகளிலும் ஒரு அன்பின் உறவு உருவாக்கி நிலைநிறுத்தப்படுகிறது. மேலே விவரிக்கப்பட்ட உள்நிலை – அதாவது தான் அவரை நேசிக்கிறோம் என்பதோ, அவர் தன்னை நேசிக்கிறார் என்பதோ சற்றும் தெரியாத நிலை – அங்கே வளர்ச்சியடைந்திருப்பதன் அறிகுறி என்னவெனில் நேசிப்பவருக்கும், நேசிக்கப்படுகிறவருக்கும் (மாஸ்டருக்கும் சீடருக்கும்) இடையே இருக்கும் வேறுபாட்டைக் கூறுமாறு கேட்கும்போது, புரிந்துகொள்ளும் தன்மையின் மூலமாக, எந்த ஒரு பதிலும் வராது."

**அது பற்றிக் கேட்டபோது வணக்கத்திற்குரிய மாஸ்டரின் அறிவுரை வந்தது:**

"உயிரை இடம் மாற்றும் வழிமுறையை நான் கடைசியில் வெளிப்படுத்துவேன். அதை நான் இப்போதே வெளிப்படையாகத்

தெரியச் செய்துவிட்டால், குடும்ப வாழ்க்கையின் பிரச்சனைகளின் காரணமாக கவலையுடன் இருக்கும்போது நீ அந்த வழியைப் பயன்படுத்திவிடக்கூடும்."

**12.07.1944**

**கேள்வி:**

"நமது சங்கத்துக்கான அடிக்கல் நாட்டும்போது (அடித்தளம் அமைக்கும் போது) B1- உடன் நெருக்கமாக இருக்கின்ற சகோதரர்களும், மற்றவர்களும் அவர்களிடம் போவதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமா?"

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:**

"அவர் அவர்களைக் கெடுத்துவிடுவார். தன் பக்கம் அவர்களை இழுப்பதற்கும், பிடித்து வைத்துக்கொள்ளவும் அவர் முயற்சி செய்வார்."

இதுவரையில் நிலைநிறுத்தப்பட்ட சம்பிரதாயத்திற்கு ஏற்றவிதத்தில், அவர்களிடமிருந்து உதவி பெறுவதற்குப் பதிலாக, சகோதரர்களுக்கு நான் உதவி செய்வதே என் எண்ணமாக இருந்திருக்கிறது; வருங்காலத்தில் இது என்ன ஆகும் என்பது கடவுளுக்கு மட்டுமே தெரியும் என்ற எண்ணம் என் மனதில் எழுந்தது.

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் அறிவுறுத்தல்:**

"அப்படி ஒரு சம்பிரதாயத்தை நிலை நிறுத்த வேண்டிய தேவையே இல்லை."

**M1- இன் கேள்வி:**

"அந்த அட்டவணையும், உள்நிலை பற்றிய செயல்திட்டம் ஆகியவையும் சகோதரர் ராம் சந்த்தரின் காட்சியில் வந்தன. அது ஏன் என் மனக்காட்சியில் வரவில்லை?"

## வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

"மாஸ்டரை தன்னை நோக்கி இழுப்பது ஒரு சீடனின் சாமர்த்தியம் தான். அதற்கு முன்பு பலநிலைகளைக் கடந்திருக்கின்ற அந்தச் சீடனிடத்தில் இந்த சாமர்த்தியம் வளர்ச்சியடைகிறது. அம்மாதிரி ஒரு சீடனின் இடத்தில் வேறுயாரையாவது இடம் பெறச் செய்ய அவர்கள் விரும்பினால், அவர்களால் அதைச் செய்யமுடியாதபடி அப்போது மாஸ்டர்கள் செயலற்றவர்களாகிவிடுகிறார்கள். இந்த சாமர்த்தியம் கடவுளால் கொடுக்கப்படுவதாகும். இந்த விஷயத்தில் ஒரு தனிமனிதரின் (மாஸ்டரின்) கட்டுப்பாடு கிடையாது. எனக்கெதிரான இந்த ஆட்சேபணையில் நியாயம் இல்லை. எனக்கு யார் மீதும் பொறாமையோ, வெறுப்போ, ஆதரிக்கும் குணமோ கிடையாது. என்னிடம் நீ முன் வைக்கின்ற உன் கருத்துக்களுக்கு இதுவே பதில்."

## M1 பற்றி வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:

"எந்த ஒருவராயினும், நேர்மையுடன் உழைத்தால் அது வீணாகிப்போகாது. ஒரு மனிதன் எப்போதுமே ஆக்கபூர்வமான மனப்பான்மையுடன் இருக்க வேண்டும். அவர் (M1) தன் மனதில் நினைத்திருக்கின்ற அந்தக் குறிப்பிட்ட உழைப்பைக் கொடுக்கத் தேவையில்லை. எண்ணங்களை சீர்திருத்துவதுதான் தேவைப்படுகிறது. தேவையற்ற அகங்காரம் சார்ந்த உறுதிப்படுத்தும் தன்மையை அவர் கைவிட வேண்டும். அதற்குப் பிறகு அடுத்ததாக (மேலும்) ஒரு விஷயத்தைச் சொல்வேன். ஆன்மீக விஷயத்தில் அவர் குறைந்து போய்விடவில்லை. இந்த விஷயம் போய்விட்டது என்ற ஒரு உறுதியான சங்கல்பத்துடன் அவர் இருக்க வேண்டும்; மற்றும் அதன் பிறகு அதில் ஈர்ப்பு இருக்கக்கூடாது. அவருக்கு இது தெரியவில்லை என்றாலும் அவருடைய சங்கல்பசக்தி உறுதியாகவே இருக்கிறது. அவரால் எதையும் செய்ய முடியும். மற்றவர்கள் அனைவரையும் விட அவர் மிகமேலானவர்

என்று நான் கருதுகிறேன். ஒரு சரியான நோக்கத்துக்காக, தைரியத்தையும், சங்கல்பத்தையும் (இது நடக்கவேண்டும் என்ற உறுதியான எண்ணமே சங்கல்பம்) பயன்படுத்தினால், அதை அகங்காரம் என்று சொல்லக் கூடாது. இதை C1- க்கும் சொல்லவும். அவரும் இவ்விஷயத்தில் குறைந்தவராக இருக்கிறார்."

"பொதுவாக மற்றவர்களுக்கு இந்த விஷயங்கள், நிலைகள் ஆகிய அனைத்தையும் வெளிப்படுத்துவது உனக்குத் தீமையை உண்டாக்கும். விரோதங்களும் அதிகமாகும். எனக்குப் பிரச்சனை ஏற்படுத்த நீ விரும்பினால், இந்த விஷயங்களை நீ வெளிப்படுத்தலாம்."

## என் பணிவான கருத்து:

"நான் மிகவும் அதிர்ஷ்டம் செய்தவன் (பாக்யசாலி)."

## வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

"இல்லை, நான்தான் மிகவும் அதிர்ஷ்டம் செய்தவன். யாருக்காவது ஒரு நல்ல மகன் பிறந்தால், அவனுடைய பெற்றோர் தங்களை பாக்கியசாலிகளாகக் கருதுவார்கள். இந்த விஷயங்கள் மிகவும் உற்சாகமளிப்பதாகவும் சரியானதாகவும் இருக்கின்றன. உன்னுடைய துணிவை ஒருபோதும் சோதனை செய்யாதே. C1- ஐ இப்போது அழைக்க வேண்டாம். அவரை எப்போது அழைக்கலாம் என்று நானே உனக்குச் சொல்வேன். நீ அதில் அவசரப்பட்டுவிடலாமென்று நான் பயப்படுகிறேன். அது அவருடைய நரம்பு மண்டலத்தை செயலற்றுப்போகச் செய்துவிடக்கூடும். அவரை முன்னோக்கிக் கொண்டு செல்வதில் மிகவும் முன்னெச்சரிக்கை தேவை. இதை நீ M1- க்கும் கூடச் சொல்ல வேண்டும். பேரண்ட மண்டலத்திற்குள் (ULIA / உலியா அல்லது பரப்பிரம்மாண்டம்) நுழைவது அவருக்கு (C1) இன்னும் வெகுதூரத்தில் இருக்கிறது. ஆயினும், இதனால் அவர் அதிர்ச்சியடையக்

கூடாது. இதில் சிறிது நல்ல நோக்கம் அடங்கியுள்ளது. தனது இப்போதைய உள்நிலையில் அவர் விசித்திரமான ஒன்றைக் காண்பார். அதன்பிறகு முன்னோக்கிச் செல்வதற்கான ஒளியைப் பெறுவார். இப்பொழுது C1 வாழ்ந்து கொண்டிருக்கின்ற மற்றும் நகர்ந்து சென்று கொண்டிருக்கின்ற இந்தக் களம் சாதாரணமான ஒன்று அல்ல. இந்த மண்டலத்தின் அனைத்து உள்நிலைகளும் திறக்கப்பட்டால் மற்றும் இம்மண்டலத்தில் அனுபவம் பெற சுற்றித்திரிவது முடிவடைந்தால் அப்போது அதனையடுத்து வரப்போகின்ற பல விஷயங்களும் பிரச்சனைகளும் சுலபமாக ஆக்கப்படும். நான் உன்னை அதிக அளவுக்கு (ஒவ்வொரு மண்டலத்திலும்) நிறுத்திவைத்திருந்தேன். அதனால்தான் அந்த ஒவ்வொன்றிலும் நீ ஆளுமையைப் பெற்றாய். ஆயினும், அவற்றில் நீ ஆளுமையை அடையப் பெற்ற வேகம், வேறு எந்த ஒருவரும் அடையமுடியாத அவ்வளவு சிரமமானது என்பதில் சந்தேகமில்லை. C1 – ஐயும் அதே மாதிரி நான் மேலே கொண்டு வருவதற்கு விரும்புகிறேன். ஆனால், அவர் அதற்கு அதிக காலம் எடுத்துக்கொள்வார். நிச்சயமாக அவர் மிகவும் அதிக காலத்தை வீணாக்கிவிட்டார். இந்த மண்டலத்தில் சாத்தியமான அதிகபட்ச அளவுக்கு மக்கள் (சாதகர்கள்) சுற்றிவந்து அனுபவம் பெறும்படி நீ செய்ய வேண்டும். இந்த மண்டலம் சாதகர்கள் வேகமாகக் கடந்து செல்லும்படி செய்ய வேண்டிய களம் அல்ல. இம்மண்டலத்தில் எவ்வளவு அவசரம் அனுமதிக்கப்படுகிறதோ அதற்கேற்ற விகிதத்தில் அவ்வளவு முதிர்ச்சியின்மை அங்கே நிலைத்திருக்கும். இந்த மண்டலத்துக்கு அப்பால் புனிதத்தன்மை மேம்படுத்தப்படுகிறது; ஆனால், அந்தப் புனிதமான மண்டலங்களில் பறந்து செல்வதற்கான திறமை அதற்கு முன்பாகக் கடக்கப்பட்ட மண்டலத்திலிருந்தே கொண்டுவரப்படுகிறது. அதற்கு அப்பாலும் பல மண்டலங்கள் உள்ளன. ஆனால், பொதுவாக அவை சாதாரண மனிதர்களுக்கானவை அல்ல.

(அந்த உள்நிலையின் செயல்திட்டம் மனக்காட்சியில் வந்தது). அவர் (M1) அந்த மண்டலத்திலிருந்து கொஞ்சம் விரைவிலேயே வெளியே கொண்டுவரப்பட்டுவிட்டார். அம்மண்டலத்தில் விளங்குகின்ற தெய்வீக மின்னல் வீச்சைத் தாங்கக் கூடியதாக அவருடைய மனம் இல்லை. அவர் அங்கே சற்று அதிக கர்வம் உடையவராக மாறி இருந்திருக்கக்கூடும். எனினும் அதனால் தீமை எதையும் அடையவில்லை."

**M6 - ஐப்பற்றி விசாரித்தபோது வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

"நற்பண்புகளுள்ள தரமதிப்பில் இருந்து கீழே வீழ்ந்தவராக இருந்த S4 – உடன் M6 இணைந்திருந்தார். குறைந்தபட்சம் ஒரு அவசியமான நாகரீகப் பண்புக்காகவாவது அவர் என்னைப் பற்றி விசாரித்திருக்க வேண்டும். பிராணாஹுதி அளிப்பதற்கு அவருக்கு உரிமை இருந்தது. அவர் தன்னைத்தானே மிகவும் திறமைசாலி என்று கருதியிருந்தார். நீ விரும்பினால், M6 அவ்வாறு நம்பும்பட்சத்தில் அவருடைய இணைப்பை நீ அறுத்துவிடலாம். வருங்காலத்தில் இந்த எல்லை வட்டத்திற்குள் வரும் மனிதர்களுக்கு இந்த விஷயங்கள் ஒரு விளக்காக உதவி செய்யும்."

**மேலும் விசாரித்த போது வணக்கத்திற்குரிய மாஸ்டர் இது பற்றிக் கூறியது:**

"B1, பிரம்மாண்ட மண்டலத்தில் (குப்ரா / KUBRA) ஓரளவுக்கு ஆளும் சக்தி உள்ளவராக இருக்கிறார் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் உன்னுடன் அவரை ஒப்பிடமுடியாது. நீ அங்கு கடந்து வந்துள்ள பள்ளத்தாக்குகள் (அனுபவங்கள்) அவருடைய பங்கிற்கு (அதிர்ஷ்டத்திற்கு) ஒருபோதும் கிடைக்கவில்லை."

13.07.1944

**அறிவுரைகள்:**

“புதிரான தன்மையே உடம்பாகக் கொண்டவர்களாக மக்கள் மாறியிருக்கிறார்கள் (அதாவது மக்கள் புதிரானவர்களாகவே மாறியிருக்கிறார்கள்) முதலாவதாக, அவர்களை ஒரே எண்ணம் உடையவர்களாக – அதாவது, மாஸ்டரைப்பற்றிய எண்ணம் உடையவர்களாக வளர்க்கவேண்டும். வேறு எந்த ஒருவரைப் பற்றிய எண்ணத்தையும் மனதில் ஈடுபடுத்தாமல் இருக்கும்படி அவர்களை எச்சரிக்க வேண்டும். இது சம்பந்தமாக நீயும்கூட அவர்களுக்கு உதவி செய்யவேண்டும். எண்ணத்தைப் பழுக்கச் செய்வது (எண்ணம் மாஸ்டரைப் பற்றிய நினைவில் நன்கு கனியச் செய்வது) உன்பொறுப்பு. யாராவது இதற்கு எதிராக இருந்தால், அவரே வேறு இடம் பார்த்துக்கொள்ளும்படி சொல்லிவிடலாம். இந்த சங்கத்தின் (மார்க்கத்தின்) அடிப்படை இதுதான்.”

“இந்த மனிதர்கள் அனைவரும் உன்னோடு நேரடி இணைப்பில் இருப்பார்கள். உன்னால் அனுமதிக்கப்பட்டாலன்றி (நீயே அனுமதியளித்தாலன்றி) உன் வேலையில் யாரும் குறுக்கிடமாட்டார்கள். தேவையான அளவுக்கு வேலை சிறப்பாகச் செய்யப்பட்டிருக்கும்போது அல்லது அதுசிறப்பாகச் செய்யப்பட்டிருக்கிறது என்ற நம்பிக்கை உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் போது அதற்கு மேலான முன்னேற்றம் அளிக்கும் வேலை எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். பயனற்ற உரையாடல்களைக் கைவிட வேண்டும். அபத்தமான வாக்கியங்களைப் பேசுவது தவிர்க்கப்பட வேண்டும். கற்பனைக் கதைகளைப் படிப்பது நிறுத்தப்பட வேண்டும். அவரைத் (கடவுளை அல்லது மாஸ்டரைத்) தவிர வேறு மனிதர்களை நேசிப்பதால் இதயம் அழுக்காகக்கூடாது. நட்பு சார்ந்த தீவிர ஆவலைக் கைவிட வேண்டும். கடவுளை மட்டுமே நண்பராகக் கருதவேண்டும். தெய்வீக அன்பில் நனைந்துள்ள அல்லது

ஊறியதாக இருக்கும் மதநூல்களைப் படிக்கலாம். கடினமான மற்றும் ஆழ்ந்த தத்துவ ஞான நூல்களைப் படிப்பது தேவையில்லை. ஒருவருக்கொருவர் பழகும்விதம் சகோதரத்துவ முறையில் இருக்க வேண்டும். (ஒருவர் மீது மற்றவர் இரக்கம், அனுதாபம் கொள்வது, கஷ்டம் வரும் நேரத்தில் உதவி செய்வது மற்றும் இது போன்றவை இருக்க வேண்டும்). நன்னடத்தை தான் இந்தப் பயிற்சி முறையின் சாராம்சமாகும். இந்தக் கோட்பாடுகளை ஒவ்வொருவரும் கட்டாயம் பின்பற்ற வேண்டும். அதிகாலையில் தூக்கத்திலிருந்து எழுதல், தியானம் செய்தல், பிரார்த்தனை செய்தல், குடும்பக் கடமைகளை சரியான விதத்தில் செய்தல் மற்றும் இது போன்ற வெளிப்படையான நன்னடத்தைக் கோட்பாடுகளைப் பின்பற்றுவது ஒவ்வொருவருடைய முக்கியமான கடமையாகும்."

**14.07.1944**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

"எல்லா நிகழ்ச்சிகளும் என் பார்வைக்குள் உள்ளன (அனைத்தையும் நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன்). அழிவுக்காகக் காத்துக்கொண்டு, அவர்களுக்கு போதுமான நேரம் கொடுத்திருக்கிறேன். நான் கடிதப் போக்குவரத்தை நிறுத்திவைக்கச் செய்திருக்கிறேன்; ஏனெனில், மக்கள் ஒழுங்கு முறைக்குக் கட்டுப்படாதவர்களாக மாறிக்கொண்டிருக்கிறார்கள். மேலும், மனிதர்களுக்குரிய நாகரீகப் பண்பும் மறைந்து விட்டது. D1- இன்னமும் சூரியனைப் பார்க்கவில்லை; பார்த்தால் அவர் கண்கள் கூசி மூடிக்கொள்ளும் என்று D1- க்கு கடிதம் எழுது. நாகரீகப்பண்பின் எல்லைக்கு மீறிய பேச்சுக்கள் எனக்கு சிறிதும் பிடிக்காது. இந்த அவமரியாதை என்னை நோக்கி எறியப்பட்டது."

“உன் ஜீவனின் ஒவ்வொரு இழையும், நரம்பும் என்னோடு முழுமையாக ஒன்றி அதேமாதிரி மாறிவிட்ட தன்மையை எய்தும் அளவுக்கு உன்னை அவமதிப்பதை நான் ஒருபோதும் சகித்துக்கொள்ள மாட்டேன்.”

“நமது இல்லத்தை (நம் மார்க்கத்தை) அழித்துவிடுவதற்கான எந்த முயற்சியையும் எதிரிகள் விட்டுவைக்கவில்லை. இப்போது, மக்கள் எப்படி உன்னை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பார்கள் என்று நான் பார்க்க வேண்டும். ஒரு சுலபமான வழியில் மக்கள் உன் மீது நம்பிக்கையில் உறுதி பெறுவதற்காக, கடிதப் போக்குவரத்தாகிய சங்கிலித் தொடரை மீண்டும் ஆரம்பமாகச் செய்திருக்கிறேன். இப்போது நீயும் கூட உன் சொந்தத் தகுதியில் நிற்கலாம். உன் கண்களுக்கு வேறு ஒரு திசையைக் கொடுக்கவேண்டியிருக்கும் (உன் பார்வையை வேறுபக்கம் திருப்ப வேண்டியிருக்கும்). அத்துடன் மக்கள் துன்பப்படுவார்கள்.”

“D1 ஒரு முரட்டுத்தனமான பதில் கொடுத்தார். N1 தனது மறு உலகம் முற்றிலும் இல்லாமல் போகும் அளவுக்கு அதை அழித்துவிட்டார். ‘துரதிருஷ்டவசமான அயோக்கியன்’ என்று பெயரிடக்கூடிய விதத்தில் அவர் இருக்கிறார்.”

### பிற்பகல் 4 மணி முதல் 5 மணிக்குள் வந்த கனவு:

ஒரு மனிதன் உள்ளே வந்து படுக்கையில் என் தலைப்பக்கம் உட்கார்ந்தான். அவன் ஒரு கத்தியை எடுத்து தலையின் இருபக்கத்திலும், தலை முடியின் ஊடே குத்திக் காயங்கள் ஏற்படுத்த முயற்சி செய்தான். ஆனால், அந்தக் கத்தி கபாலத்தைத் (தலை எலும்பைத்) துளைக்க முடியாமல் போனதால், என் கழுத்தை அறுக்கும் நோக்கத்துடன் அவன் கத்தியைக் கழுத்தில் வைத்தான். நான் அவனை உருட்டித் தள்ளி அதே கத்தியை அவன் கழுத்தில் வைத்தேன். அப்போது, ‘அவன் தன்னை மன்னிக்கும்படி அவன் கேட்டுக்கொண்டு, ‘‘நானாக அதை

செய்யவில்லை, என்னுடைய தோழர் என்று சொல்லப்படுகிற ஒருவர்தான் எனக்கு தீமை செய்ய முயற்சிக்கிறார்'' என்றான். அவருடைய பெயர் என்ன என்று நான் கேட்டேன். தனது உயிர் மீதான பயத்தினால் அந்தப் பெயரை அவன் சொல்லப்போகும் சமயத்தில் கனவிலிருந்து விழித்துக்கொண்டேன். அது R2 – ஆகத்தான் இருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. ஏனென்றால், இந்தக் கனவு வருவதற்கு முன்பு ஒரு கனவில் R2 உள்ளே வந்து, தீய எண்ணத்துடன் இங்கும் அங்கும் ஏதோ தேடிக்கொண்டிருப்பதாகக் கண்டேன். அந்தக் கனவை என்னால் தெளிவாக ஞாபகப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

**அன்று இரவு வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

"R2 – ஐ நோக்கி உன் எண்ணம் செல்வதை நான் தடுத்துவிட்டேன். ஏனெனில் உனக்குத் தீமை செய்யும் நோக்கத்துடன் N1– அவருக்குக் கொடுத்துள்ள சக்தியானது, அவரைப் பற்றி நீ நினைப்பதால் வலிமை பெற்றுவிடக்கூடாது என்பதற்காகவே அதைத் தடுத்தேன். R2 அந்தப் பக்கத்துடன் தனது இணைப்பை அறுத்துக்கொள்ளாமல் இருப்பதால், இப்போது N1 – அவருக்குக் கொடுத்திருக்கும் சக்தியை நீ பறித்துவிடு". இது அவ்விதமே செய்யப்பட்டது.

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

"நீ அவர் மீது அதிருப்தி அடைந்திருந்தால், அழிவுத்திட்டத்தில் D1– ஐ நீ சேர்த்துக்கொள்ளலாம்."

**என்பணிவான கருத்து:**

"இதை நான் விரும்பவில்லை. அது ஒரு உத்தரவாக இருந்தால், அது வேறுவிஷயம் (என் விருப்பம், என் அதிருப்தி என்பது இதில் இல்லை)".

**எனக்கு ஒதுக்கப்பட்ட வேலையை செய்துமுடித்தபிறகு, வணக்கத்திற்குரிய மாஸ்டர் கீழ்க்கண்ட விஷயத்தை வெளிப்படுத்தினார்:**

"அமைதியான, சாந்த குணமுடைய ஒரு மனிதருக்கு மட்டுமே இந்த சக்திகள் அளிக்கப்படுகின்றன. என்னையே முன்மாதிரியாகக் கொண்டு உன் குணத்தை நீ வளர்த்துக்கொண்டிருக்கிறாய். இந்த சக்திகளை M1 – க்கு அளித்திருந்தால், அவர் மிகவும் வலிமையை அடைந்திருப்பார். அதனால் அதில் கட்டுப்பாட்டைப் பயன்படுத்த வேண்டியிருக்கும்."

**என்பணிவான கருத்து:**

"என் குணம் உங்களைப் போல இருக்கிறது என்பதில் சந்தேகமில்லைதான். ஆனால் சில சமயங்களில் திடீரென்று பிடிவாதமான கடுமை எழுந்து விடுகிறது."

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:**

"அது தந்தையின் குணத்தின் விளைவு."

**15.07.1944**

**அறிவுரைகள்:**

"இந்த மார்க்கத்தை, நான் செய்தது போல தகுதியற்ற மனிதர்களால் நிரப்பிவிடக் கூடாது. உன் உடல் நலத்தை கவனித்துக்கொள். அடுத்து நீ செய்ய வேண்டிய வேலை உனக்கு அதிகமாக இருக்கிறது. மருந்துகள் மட்டுமே உதவி செய்யாது. கைகால்கள் மற்றும் உடலுறுப்புக்களின் இயக்கமும் – அதாவது உடற்பயிற்சியும் – இருக்க வேண்டும். காலை நேரத்தில் உன்னால் நடைப்பயிற்சி செய்ய முடியவில்லையென்றால் மாலை நேரத்தில் நடக்க வேண்டும். நீ நிறைய நேரத்தை வீணாக்குகிறாய். கல்வித் தகுதியை அதிகரித்துக்கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது."

**என்பணிவான கருத்து:**

“ஓரளவுக்கு உடல் நிலையும் ஓரளவுக்கு சோம்பல் தன்மையும் வேலையில் நான் ஈடுபடுவதைத் தடுக்கின்றன. இந்த விஷயத்தில் தவறு என்னுடையதுதான்.”

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:**

“அது என் தவறு, உன் தவறுகள் அனைத்தும் என் தவறுகளாகவும் இருக்கும்.”

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் அறிவுரை தொடர்ந்தது:**

“உன் உடல் நிலையை கவனித்து அறிந்து (வலி உணர்வு தோன்றியது) நான் வேதனையடைந்தேன். சரியான நேரத்தில் சாப்பிடு. அதற்கு நேரம் இருக்கும்போது ஓய்வு எடுத்துக்கொள். உனக்கு பால் நல்லது நெய் அவ்வளவு நன்மையளிக்காது.”

“இரண்டு விஷயங்களை நீ மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். 1) உன் உடல் நலம் 2) சுய மரியாதை (தன்மானம்).”

**என் பணிவான கருத்து:**

“நான் புரிந்து கொண்ட விதத்தில் சுயமரியாதை என்பது மற்றவர்கள் தனக்கு எதைச் செய்தால் ஒருவன் விரும்பமாட்டானோ, அதை அவன் மற்றவர்களுக்குச் செய்யக்கூடாது என்று பொருள் உடையதாகும்.”

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:**

“இதெல்லாம் மிகப் பழைய காலத்துக்கு (சத்ய யுகத்துக்கு) உரியவை. இப்போது இதன் பொருள்; ‘அனைவரிடமிருந்தும் சற்று ஒதுங்கியே இருப்பது; எந்த ஒருவருக்கும் அளவுக்கு மீறிப் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்காமல் இருப்பது; அதாவது, விவாதத்துக்கு அதிக இடம்

கொடுக்காமலிருப்பது; தனது குடும்ப ரகசியங்களை அனைவருக்கும் வெளிப்படுத்தாமலிருப்பது; தன்னை பலவீனமானவனாகக் கருதாமல் இருப்பது; உன்னிடம் மரியாதைப் பண்பு அற்றவர்களாய் மாறும்படி மற்றவர்களைத் தூண்டக்கூடிய எதையாவது சொல்லாதிருப்பது' – இவையனைத்தும் சுயமரியாதை பற்றிய விளக்கத்தில் அடங்கியுள்ளன."

## 16.07.1944

**அறிவுரைகள்:**

"ஒரு சீடனின் காரண சரீரம், மாஸ்டரின் காரண சரீரத்துடன் ஐக்கியம் அடையச் செய்யப்படுகிறது. மாஸ்டர் இதைச் செய்து விடும்போது சீடனிடம் பதிவுகள் (சம்ஸ்காரங்கள்) உருவாகுவது நிறுத்தப்படுகிறது. (அந்த உள்நிலையின் செயல்திட்டம் மனக்காட்சியில் வந்தது). ஜீவனின் உடல் சார்ந்த அம்சத்தின் (பிண்டம்) காரணமாக இருப்பது வெளி அண்டத்தின் (பிரம்மாண்டத்தின்) அம்சமேயாகும். அந்தப் பேரண்டத்தின் காரணமாக இருப்பது பரப்பிரம்மாண்டம் ஆகும். பரப்பிரம்மாண்ட மண்டலத்தில் என்னநிகழ்கிறதோ அது பிரம்மாண்ட மண்டலத்துக்கு வந்திறங்கி, அங்கிருந்து சரீர (உடல் சார்ந்த) நிலைக்கு இறங்குகிறது. அதன் பிறகு அது துன்பம் அனுபவித்தல் அல்லது சந்தோஷம் என்ற வடிவத்தைப் பெறுகிறது. எனவே, துன்பமாக அல்லது மகிழ்ச்சியாக ஜீவனின் உடல் சார்ந்த நிலையில் என்ன தோன்றுகிறதோ அது பரப்பிரம்மாண்ட மண்டலத்தில் முதலில் தொடங்குகிறது என்று சொல்லலாம்."

"மேலே சொல்லப்பட்ட விஷயம் மிகவும் சூட்சுமமானது. இப்போது உன் மனம் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டு இருக்கிறது. நீ ஓய்வான மனநிலையில் இருக்கும்போது இது பற்றி மேலும் விளக்கிச் சொல்வேன்."

“இன்னும் சில மனிதர்களின் தீட்சைகளை நீ துண்டித்துவிட வேண்டியிருக்கும். இந்த விஷயம் பற்றி ஒரு அறிவிப்பும் செய்ய வேண்டும். G1 - தன்தவறுக்காக வருந்தி, தன் நடவடிக்கைகளை இனி மறுபடியும் செய்ய மாட்டேன் என்று வாக்குறுதி கொடுத்து, மீண்டும் தனக்கு தீட்சை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டால் அவருக்காக ஏதாவது செய்யலாம். நீ அதைச் செய்ய வேண்டிய தேவை இல்லை என்றாலும், எந்த ஒருவருடைய தீட்சையையும், அவர் பெற்றுள்ள தீட்சை எந்த ஒரு பயிற்சி முறைக்கு அல்லது சமய ஒழுக்கத்துக்கு உரியதாக இருந்தாலும், அதைத் துண்டித்துவிடுவதற்கு உனக்கு சக்தி இருக்கிறது. G1 - பற்றி ஒரு அறிவிப்பு செய். அவர் தன்னுடைய தீட்சையை தானே துண்டித்துக்கொண்டார். யாரேனும் ஒருவர் தன் மனநிலையை கெடுத்துக் கொண்டார் என்று நீ சொன்னால் அதன் விளைவு அவரிடம் உண்டாகும். தற்செயலாக ஒருவேளை அந்தமாதிரி ஏதாவது நடந்துவிட்டால், அந்தத் தன்மையை அவரிடமிருந்து வெளியே இழுத்து, அதன் விளைவை செயலிழக்கச் செய்ய வேண்டும். உனது கவனக்குறைவான எந்த ஒரு செயலுக்கும் இந்த வழிமுறையைப் பயன்படுத்த முடியும். யாராவது மற்றொருவரின் சாபத்தின் விளைவுக்கு உள்ளாகியிருந்தால், அந்த விளைவை அழிப்பதற்கு நீ விரும்பினால், நீ கடமை உணர்ச்சி (Sphere of Piety / QUDSA) என்ற மண்டலத்திற்குச் சென்று அந்த விளைவை வெளியே இழுத்துவிடு. அதற்கு எதிராக செயல்படுவதற்கு எந்த சாத்தியமும் இருக்காது. இந்தக் கடமை உணர்ச்சி (அல்லது கடவுள் பற்று Piety / QUDSA) என்ற மண்டலத்தைச் சென்றடைந்திருப்பவர்கள் மிகச் சிலர்தான். உன் காலடிகள் அதற்கும் முன்னால் சென்று கொண்டிருக்கின்றன. உனக்கு யாரும் இணையாக முடியாது. மற்ற மண்டலங்களைக் கடந்து விரைவாக முன் செல்வதற்கு நீ முயற்சி செய்ததைப் போலவே, அங்கேயும் (கடமை உணர்ச்சி அல்லது கடவுள்

பற்று மண்டலத்திலும்) நீ முயற்சி செய்கிறாய். இம்மாதிரியான ஒரு வேகமான தன்மையை மற்றவர்களின் விஷயத்தில் பயன்படுத்தக்கூடாது.”

“உன்னுடன் சேர்ந்து பிறந்த புனித நிலை (பிறவியில் வந்த கடவுள் பற்று மற்றும் கடமை உணர்ச்சிக்கு) நீ கவனம் செலுத்தி, வேறுயாரிடமாவது அந்த குணங்கள் இருப்பதைக் கண்டாயானால், அதுவே அவர்கள் முன்னோக்கிப்போவதன் அறிகுறியாக இருக்கும். இந்த ஆன்மீக மண்டலம் தேவதைகள் கூட அடைய இயலாத அதிர்ஷ்டம் ஆகும். இந்தப் புள்ளியில் சுற்றிவந்து அனுபவம் பெறுவதற்கு அவர்கள் ஆசைப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள். உன்னை நீ பலவீனனாகக் கருதிவிடக்கூடாது என்பதற்காக இதையெல்லாம் உனக்குச் சொல்கிறேன். உனது முன்பிறவியில் ஆன்மீகத்தில் உனக்கு மிகவும் விருப்பமும் பெருமளவு பற்றும், அதே மாதிரி அதிகபட்ச ஏக்கமும் இருந்தன. அந்த ஏக்கத்திலேயே நீ உயிர்நீத்தாய். அப்போது உனக்கு ஒரு வழிகாட்டி கிடைக்கவில்லை. எனவே, அந்த ஏக்கத்திலும், வேதனையிலும் நீ மிகவும் துன்பத்தை அனுபவித்தாய். உனக்குப் பல குழந்தைகள் இருந்தார்கள். நீ எப்படியோ வறுமை நிலையில் சிரமமான வாழ்க்கையை நடத்தி வந்தாய். உன் மனைவி மிகவும் பக்தியுடைய எளிமையான பெண்மணி (அந்த நிலைமை என் மனக்காட்சியில் வந்தது). அப்படி உன் முன்பிறவியிலிருந்து நீ கொண்டு வந்த ஏக்கத்தின் பதிவு இன்னமும் இருக்கிறது. நீ இப்போது இருக்கும்நிலை, ஒரு பூசாரிக் குடும்பத்தில் பிறந்ததனால் அடையப்படவில்லை. இது அனுபவம் சார்ந்த ஒரு விஷயம்; முழுமையான ஒரு முழுமையான விதிமுறை அல்ல. உன் முன்பிறவியில் வியாபாரம் செய்யும் சமுதாயத்தைச் சேர்ந்தவனாக இருந்தாய்.”

“முன்பிறவியில் M1 ஏதோ ஒரு அரசவைப் பதவியில் இருந்தார். அவருக்குக் குடும்பம் இருக்கவில்லை. நிதி நிலைமை நன்றாக இருந்தது. இன்பம் தேடும் ஒரு வாழ்க்கையில் அவர் விருப்பத்துடன் இருந்தார்.

முடிவில் அனைத்திலும் மிதமாய் இருப்பவராக மாறினார். முன்பிறவியில் C1 தாழ்ந்த குலத்தில் பிறந்திருந்தார். அவருக்குப் பணிவு மிக அதிகமாக இருந்தது. சகிப்புத்தன்மையும் அதிகம். மிகச் சிரமமான வாழ்க்கை நடத்தினார். ஆனால், அந்த வறுமையை கடவுள் தந்ததாகக் கருதி அதனால் மனம் வருந்தாமலிருந்தார். எனவே, அதனுடைய துன்பம் அவருக்குக் குறைவாகவே இருந்தது (அது என் மனக்காட்சியில் வந்தது). முன்பிறவியிலும் S1 ஒரு மருத்துவராகவே இருந்தார். அவர் கண்டிப்பான குணமுடையவர், ஒரு விலைமகளுடன் அவர் தொடர்பு வைத்திருந்தார். அவள் இறந்துபோனதால் மிகவும் அதிர்ச்சியடைந்தார். அதுவே கடவுளை நினைக்கும்படி அவரை திசைதிருப்பியது. கடைசிவரை அவர் கடவுள் பக்தராகவே இருந்தார். அவருடைய பொருளாதார நிலையும் நன்றாகவே இருந்தது. இப்போது அவரைப்பற்றி நான் கூற நீ அறிந்து கொண்டதால், அவருடைய சுபாவத்தில் இருக்கும் உடல் சார்ந்த காதல் அம்சத்தை அழித்துவிடு. ஆனால், உடனே செய்யவேண்டாம். C1 தனது இதய பலவீனத்தை முன் பிறவியிலிருந்தே கொண்டு வந்திருக்கிறார். M1 இன்பம் தேடுதல் மற்றும் செல்வவளம் தேடுதல் என்ற அழுக்கை முன்பிறவியிலிருந்து கொண்டுவந்திருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அதன் விளைவு மாறியிருக்கிறது. இப்போது அதனால் தீமையில்லை."

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

"இந்த கடவுள் பற்று அல்லது கடமை உணர்ச்சிக்கான (QUDSA) புள்ளியைத் திறப்பதற்கான பிராணாஹுதியை உன்னைத்தவிர வேறு யாருக்கும் நான் கொடுக்கவில்லை. அதுவும்கூட உனது கனவு நிலையில் உனக்குக் கொடுக்கப்பட்டது. என்னைக் கருமித்தனம் கொண்டவனாகக் குற்றம் சாட்டுவது அடிப்படையற்றது. அகலத்திறந்த இதயத்துடன் என்னிடம் யாரும் வரவில்லை. உன் விஷயத்தில் எனக்கு வந்த

கட்டளைகளின்படி அதை நான் செய்ய வேண்டியிருந்தது. நீயும் அதே போல என்னைக் கட்டாயப்படுத்தினாய்."

"எனக்குத் தெரிந்ததையெல்லாம் என் நெஞ்சுக்குள் நான் சுமக்க வேண்டியிருந்தது. அதையெல்லாம் என்னிடமிருந்து எடுத்துக்கொள்ளத் தகுந்தவராக யாரும் பிறக்கவில்லை. எனவே, அதைக் கொடுத்துவிடவேண்டும் என்ற ஆசை, என்னிடமே தங்கிவிட்டது."

## என்பணிவான கருத்து:

"பிரபுவே, குறைந்தபட்சம் என்னிடமாவது சொல்லுங்கள்."

## வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

"அவை அனைத்தையும் உனக்கு நான் அளித்து விட்டேன். அதைப் பெற்றுக்கொள்ளும் தகுதி உடைய யாராவது உருவாக்கப்படவேண்டும் (பிறக்க வேண்டும்) என்ற எண்ணம் உன்னிடத்தில் நிலைத்திருக்கிறது. இது என் மனோபாவத்தின் விளைவு. என்னுடைய பாதிப்பு இப்படி உனக்குள் பொங்குகிறது. நீயும் கூட இம்மாதிரியான உன் ஆவல் நிறைவேறாமலே திரும்ப வேண்டியிருக்குமோ, என்னவோ, அது யாருக்குத் தெரியும். அதைப் பெறும் தகுதி உடையவர்கள் மிக அரிதாகவே இருப்பார்கள். இந்தச் சிறப்புத்தகுதியை, நீண்ட ஒருகால கட்டத்தில் யாரிடம் உருவாக்க முடியுமோ அப்படி ஒருவர் இருந்தார். (B1- ஐப்பற்றிக் குறிப்பிடுகிறார்.) ஆனால் அவரது ரத்தநாளங்களில் N1- இன் ரத்தத்தை இன்னமும் சுமந்திருக்கிறார். அவர் உன் மீது நாட்டம் கொள்வது மிகமிக அரிது. S1 அந்தப்புள்ளியைச் சென்றடைய முடியாது. நீ உலகை விட்டுத் திரும்பிச் செல்லும் அந்தக் காலத்திற்குள், அந்த நிலையை எய்துவதற்குப் போதுமான அளவு ஆயுள் C1- க்கு மீதி இல்லை. M1- க்கு இதற்கான வல்லமை இருக்கிறது. ஆனால், அவர் தனது ராஜ அந்தஸ்தைக் கை விடவில்லை. அகத்தூண்டுதல்கள்

அனைத்தும் அழிக்கப்பட்டிருக்கும் போதுதான் அங்கே செல்வது சாத்தியமாகும். உன் விஷயத்தில் அகத்தூண்டுதல்கள் அனைத்தும் உள்ளார்ந்த நிலையில் அழிந்து விட்ட ஒரு தன்மையில் இருந்தன. புலன் சார்ந்த ஆசைகள் சுத்தமாக இருந்தன. ஆனால் உன் அப்பாவின் பாதிப்பு அங்கு இருந்தது. உனது மிக அடிப்படையான ஊட்டத்தில் ஏக்கம் ஒரு பகுதியாக இருந்தது (அதாவது ஏக்கமே உனது ஊட்டத்தில் பெரும்பங்கு வகித்தது) உனது மனப்பாங்கில் ஏராளமாக இளகியத் தன்மை இருக்கிறது. அதிலிருந்து விடுபடுவதற்கு முயற்சி செய். அதாவது அதற்கு ஒட்டுமொத்தமாக விடைகொடுத்து அனுப்பிவிட வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அது கடவுள் கொடுத்த வரம். அது எல்லோருக்கும் கிடைத்துவிடக்கூடிய வரமல்ல. அதைக் கட்டுப்பாட்டில் வைத்திரு என்று தான் சொல்கிறேன். சுத்திகரிப்பு செய்வது சிரமத்தை உண்டாக்குகிறது. நீயே இதை அனுபவத்தில் அறிந்திருக்கிறாய். அசுத்தமான மனிதர்களை நீ கையாள வேண்டியிக்கும். அப்போது அதுபற்றி ஆழ்ந்து யோசிக்காமல், அதைப் பேசாமல் போக விட்டுவிடு. உன் மனோபாவத்தின் காரணத்தால் நீ அவசரமாக எதையும் செய்ய முனைகிறாய். மக்களால் அதைத் தாங்கிக்கொள்ள இயலாது. ஒவ்வொருவரும் அவரவருடைய தகுதிக்கேற்ற விதத்தில்தான் அதைப் பெறமுடியும். அதற்கு மேல் கொடுக்க அவசரப்படுவதனால், சம்பந்தப்பட்ட அந்த மனிதரின் நரம்புகள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்படலாம். மனத்தின் மூலமாக பிராணாஹுதி அளிக்கும் பட்சத்தில் விசேஷமான கவனம் தேவைப்படுகிறது. ஏதாவது ஒரு புள்ளியை உடனடியாகத் திறக்க வேண்டியிருக்கும்போதுதான் ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும்.”

## M1– சம்பந்தமாக வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

“அவர் மிக நன்றாகப் புரிந்து கொள்கிறார். ஒரு உரையாடலில் யாராவது அவர் பேசும்போது கொஞ்சம் குறுக்கிட்டுவிட்டால், உடனடியாக அவருக்கு ஆத்திரம் வந்துவிடும். இந்தக் குறைபாட்டை அவர்

நீக்கிவிட்டால், மற்ற குறைபாடுகள் அனைத்தும் பின் தொடர்ந்து வரும். சாப்பிடும் போது தொல்லையாக இருக்கின்ற அரசியல் பேச்சுக்கள் செய்தித்தாள்களில் ஈடுபாடு கொண்டிருப்பதன் குறைபாடு. 'மதத்தின் நீதிபதி (காஜி / QAZI) ஏன் இளைத்துப் போயிருக்கிறார்? – இந்த நகரம் பற்றிய அச்சம் அல்லது பயங்களின் காரணமாகவா?' என்று ஒரு பழமொழி இருக்கிறது. அவர் (M1) செய்தித்தாள்களைப் படிக்கிறார், அதுபற்றி (செய்திகள் பற்றி) மிகவும் யோசிக்கிறார், பிறகு அவர் சொல்வதைக் கேட்பதற்கு யாராவது இருந்தாலும் இல்லாவிட்டாலும், அறையில் தனிமையில் உட்கார்ந்து கொண்டு கூட, உரத்த குரலில் குறை சொல்லித் தூற்ற ஆரம்பித்து விடுகிறார். அவரிடம் மேலும் ஒரு குறைபாடும் இருக்கிறது. அதாவது, அவர் யாரைப் பற்றியாவது நல்ல அபிப்பிராயத்தை உருவாக்கிக் கொண்டிருந்தால், அவரிடம் இருக்கும் நல்ல குணங்களை மேலும் மேலும் கவனித்துக்கொண்டே இருப்பார்; இதற்கு எதிரான விதத்தில் யாரையாவது அவருக்குப் பிடிக்காமல் போய்விட்டால் அவரிடம் ஒரு நல்ல குணத்தைக் கூட கவனிக்கமாட்டார். முகஸ்துதியை (ஒருவரைப் பற்றி அவரிடமே புகழ்ந்து பேசுவது) அவருக்குப் பிடிக்கும். முற்றிலும் குறைபாடுகளே இல்லாமல் ஒருவரும் இருக்க முடியாது. மற்றவர்களிடம் உள்ள குறைபாடுகளைக் கவனிக்கும் பழக்கம் என்பது அந்தக் குறிப்பிட்ட குறைபாடு அதைக் கவனிப்பவரிடத்திலேயே விதை வடிவில் இருக்கிறது; அதுதான் அந்த மற்றவர் மீது பிரதிபலிக்கப்பட்டு வெளிக்காட்டப்படுகிறது என்பதைத் தெரிவிக்கிறது. அந்த இன்னொரு மனிதரிடம் கவனிக்கப்பட்ட அந்தக் குறிப்பிட்ட குறைபாட்டைப் புரிந்து கொள்வதில் இதயம் சிரமத்தை உணர்ந்தால் அந்தக் குறைபாடு அதைக் கவனிப்பவரிடத்தில் விதை வடிவில் இருக்கிறது என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. அது சுத்திகரிக்கப்பட வேண்டும். இன்னொரு மனிதரின் குறைபாட்டை அறிந்து கொள்வதால் தனக்குள் ஒருசிரமமும் உணரப்படவில்லை

என்றால் அதுவே கூருணர்வுத் திறனின் தரமாக இருக்கும். எங்கே ஒருவரது உள்ளார்ந்த நற்குணங்கள் இன்னொரு மனிதரிடத்தில் பிரதிபலிக்கப்படவில்லையோ, அங்கே அவரது குறைபாடும் கூட வெளிப்படுத்தப்படாது.”

‘‘M1- இன் நற்குணங்களின் மீது ஒரு திரையிட்டு மறைக்கக் கூடியதாக, அவரைப் போன்ற நிலையிலுள்ள ஒரு மனிதரிடத்தில் இம்மாதிரி குறைபாடுகளைக் காண்பது வியப்புக்குரியதாக இருக்கிறது. அவர் (M1) தனது மனப்பான்மைகள் எதையும் எல்லைதாண்டிப் போகாதபடி அவர் ஒருபோதும் கட்டுப்படுத்தியதில்லை. குறை சொல்வதையே அவர் தனது கடமை என்று கருதியிருந்தார். அதற்கு மேல் அதைப்பற்றி அவருக்கு எந்த அக்கறையும் இல்லை. நான் ஒருபோதும் என் கடமையைச் செய்வதைத் தவிர்த்ததில்லை. அவர் என்ன கடமையைச் செய்தார் என்று அவரையே கேள். அவர் எங்கே சென்று உட்கார்ந்தாலும் என்னை அவமதிப்பதைத்தான் செய்தார். அவருடைய மனம் ஓரளவுக்கு கட்டுப்பாட்டை மீறிப் போய்விட்டது என்று நினைக்கிறேன். ஆனால் இதற்கான பொறுப்பு அவருடையது மட்டுமேயாகும். இந்த விஷயங்களை அவர் ஒருபோதும் தன் குறைபாடுகளாகக் கருதியதில்லை. நானும் மரியாதைப் பண்பின் காரணமாக அவரை ஒன்றும் சொல்லவில்லை. மாஸ்டர் எப்போதும் உள்ளார்ந்த தன்மையின் மீதுதான் கண் வைத்திருக்கிறார்.”

“இதனால் M1 மனம் சோர்ந்துவிடக் கூடாது. ராம் சந்த்தர் கேட்டதன் பேரில் இந்த ரகசியங்களையெல்லாம் நான் வெளிப்படுத்தினேன். அவருடைய நோக்கமும் நல்லதேயாகும். குறைபாடுகளிலிருந்து விடுபடுவதற்கு நான் அடிக்கடி வழிகளையும், செயல்முறைகளையும் கூறுவதுண்டு. ஒருக்கால் இந்தக் குறைபாடு நீக்கப்படவில்லையென்றால் அப்போதும் M1 தனக்கான பங்குக்கு நன்மையைப் பெறுவார். ஆனால்,

என் நோக்கம் நிறைவேறாமலிருக்கும். அவர் இந்தக் குறைபாட்டிலிருந்து விடுபட வேண்டும் என்று நான் விரும்புவது என் சொந்த நோக்கமாகும். உனது மாமா (அத்தையின் கணவர்) N1 எப்போதும், எல்லா விஷயங்களுக்கும் ‘சபாஷ்’ என்று சொல்லித் தட்டிக் கொடுப்பார். நீ விரும்பினால் அவரிடம் இருக்கும் இம்மாதிரி குறைபாடுகள் அனைத்தையும் மொத்தமாக ஒழித்துவிடலாம். ஆனால், அதற்கு அவர் உன்னுடன் ஐக்கியம் அடையவேண்டியிருக்கும். அதற்குப் பிறகு இந்த வேலையைத் தாண்டி வேறு எதையும் உன்னால் கவனிக்க முடியாமல் போய்விடும். அவர் தனது உள்ளார்ந்த தன்மையில் இவற்றுக்காக மனம் வருந்தி, அந்தக் குறைபாட்டை வெறுத்தால் அப்போது அவை இருக்கும் இடத்திலிருந்து நீ தோண்டி வெளியே எடுக்கமுடியும். ஆனால், இதில் பிரச்சனை என்னவென்றால், இந்த (வெளியே எடுக்கப்பட்ட) விஷயங்களுக்கு அவர் மீண்டும் ஒரு இடத்தை உருவாக்கிக்கொள்வது தான். அவரை உன்னுடன் நீ ஐக்கியப்படுத்திக்கொண்டால், அதன் பிறகு அவரை இருபத்து நான்கு மணி நேரமும் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டி வரும் (அந்த நிலைமை மனக்காட்சியில் வந்தது). அவரை தானாகவே முயற்சி செய்து அதில் அவருடைய சங்கல்பத்தைப் பயன்படுத்தும்படி சொல். அதுவும் கூட இதேமாதிரி பலனைத்தர முடியும். அவருடைய குணாதிசயத்தில் சீர்கேடு உண்டானதற்கு மேலும் ஒரு காரணம் நான் இவ்வுலகை விட்டுப்போனதால் நேர்ந்தது. அதனால் நான் இருக்கிறேன் என்ற பயம் அவருக்கு விட்டுப் போய்விட்டது. ஒவ்வொரு பிரதிநிதியும் தனது சொந்த விருப்பம் மற்றும் கருத்துக்கு அடிமையாக மாறியிருக்கிறார்கள். ஒவ்வொருவரிடம் இருந்தும் (அனைவரிடமிருந்தும்) இந்தப் புகார் (குற்றச்சாட்டு) எனக்கு வருகிறது. ஒரு சங்க அமைப்பில் தலைவர் அல்லது தலைமை அதிகாரி இல்லையென்றால் இந்தக் கோளாறு உள்ளே நுழைந்துவிடுகிறது. என் அன்பான சகோதரர் (N1) ஒருபோதும் இதில் சம்பந்தப்படவில்லை.

அவர் எப்போதும் தலைமை அதிகாரியாக இருந்ததில்லை; எந்தச் சமயத்திலும் அதற்கான பொறுப்பை அவர் புரிந்து கொண்டதில்லை. உண்மையில், என் உத்தரவு இல்லாமல் அவரைத் தலைமை அதிகாரியாக நீங்கள் ஏற்றுக்கொண்டது நீங்கள் எல்லோரும் செய்தத் தவறு. இப்போது கட்டுப்படுத்தும் முகமை நேரில் வந்துள்ளது. என்னுடைய சொந்த சக்தி அதில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. யாருக்கு பொறுப்பு மிகப் பெரியதாக இருக்கிறதோ, அவருக்குப் மிகப்பெரிய அதிகாரமும் கட்டாயம் மிக முக்கியமாக இருக்க வேண்டும். உன்னுடைய விருப்பமும் வேண்டுகோளும் எனக்கு தெய்வீகமே எனக்குச் சொன்னது போன்ற மதிப்பை உடையதாக இருக்கும். உன்னை நாடி உன்னைச் சார்ந்து இருக்காத ஒருவருக்கு, அவரது ஆன்மீக ஊற்று மூடப்பட்டுவிடும். அது அம்மனிதர் செய்த மாபெரும் தவறாக இருக்கும். ஒரு ஆறு அதன் ஊற்றுக் கண்ணுடன் தொடர்பு அற்றுப் போகும்போது, அது வறண்டு போவதற்கான அனைத்து சாத்தியங்களும் உண்டு என்பது மிகத் தெளிவாக விளங்குகிற ஒரு விஷயம். D1 பற்றிய விஷயத்தில் நீ விரும்பினால் அவரது இணைப்பைத் துண்டித்துவிட்டு, N1 என்ற அந்தப் பெரிய மனிதருடன் (யோக்யதையற்றவர் என்ற பொருளில் சொல்கிறார்) அவரை இணைத்து அம்மாதிரி ஒரு இணைப்பின் விசித்திரமான சுவையை அனுபவிக்கச் செய்யலாம்."

## 18.07.1944

### அறிவுரைகள்:

"உடல் சார்ந்த ஆசைகளின் ஒட்டுமொத்தமான தன்மை தொப்புளில் இடம்பெற்றுள்ளது. தேவைப்படும் போது அதைக் கீழ்நோக்கி இழுத்து இறங்கிவரச் செய்ய வேண்டும். பிறகு விருப்பாற்றலை (சங்கல்பத்தைக்) கொண்டு அதை மேலே இழுத்துக்கொள்ளலாம். தன்னிச்சையாக, கட்டுப்பாடின்றி அலையும் காரணத்தால், மிகையாக ஏதாவது நேர்த்தால்

அப்போது அதை தொப்புளின் மூலமாக ஆவியாக்கிவிட வேண்டும். ஆனால், பொதுவாக இதை சாதாரண மனிதர்களுக்கு சொல்லக்கூடாது; இது பொதுவாகப் பயிற்சி செய்யக் கூடிய விஷயமும் அல்ல. இன்பங்களை நாடும் போதையில் எல்லை மீறி இந்த சக்தியை அவர்கள் இழுத்துக்கொண்டு விட்டால், அதை சமாளிப்பதும், கட்டுப்படுத்துவதும் மிகவும் சிரமமாகிவிடும் என்பதால் இதை சாதாரண மக்களுக்குத் தெரிவிக்கக்கூடாது. கட்டுப்பாடும், மிகவும் தகுதியும் உடைய ஒரு மேலான மனிதர்தான் இதைச் செய்ய முடியும் உனக்கு இதை நான் ஏன் சொன்னேன் என்றால் நீ பெரும்பாலும் அதை (உடல் சார்ந்த ஆசைகளை) நீக்கிவிட்டாய். இந்த சக்தி சம்பந்தமாக, தேவைக்கு அதிகமான அளவு அது கீழே இழுக்கப்படக்கூடாது என்பதற்காக சரியான மதிப்பீடு செய்வது மிக முக்கியமானது. அதனால்தான் மிகவிசேஷமான மனிதர்கள்தான் இதைப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்கிறேன். இந்தசக்தியை தேவையின்றித் தூண்டி எழுப்புகின்ற எந்த ஒரு சாத்தியத்தையும் இல்லாமல் தவிர்ப்பதற்காக, நமது சகோதர வட்டத்தில் இந்தப் புள்ளியின் மீது விசேஷ முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இந்த சக்தியைப் பயன்படுத்துவதில் முழுமையான நிபுணத்தன்மையை வளர்த்துக்கொண்டிருப்பவர் யாரோ மற்றும் யாரிடத்தில் இந்தப் புள்ளி போதுமான அளவுக்கு சுத்திகரிக்கப்பட்டுள்ளதோ அவர் ஒருவரால் மட்டுமே சரியான விதத்தில் இதைக் கையாள முடியும். துருவ நட்சத்திரப் பதவியை (துருவா அல்லது குதுப் / QUTUB) அடைந்துள்ள ஒரு மனிதர் இந்த நோக்கத்திற்குத் தகுதியுடையவர் ஆவார். ஏனென்றால், இந்தப் புள்ளியில் அவர் நிபுணத்துவம் அடையப்பெறுகிறார். ஆயினும், இதனால் அவர் முன்னெச்சரிக்கைகளை அனுசரிக்க வேண்டியதில்லை என்று அர்த்தமாகாது. S1– க்கு இந்தப் புள்ளியில் பெருமளவு சுத்திகரிப்பு செய்ய வேண்டியிருக்கிறது. தனது முன்பிறவியில் இருந்து இந்த விளைவை அவர் கொண்டு வந்திருக்கிறார். அந்த விளைவு அவரிடத்தில்


தூண்டப்படுவதற்கு அதிக சந்தர்ப்பம் ஏற்படாதபடி தடுப்பதற்காக என்னோடு அவர் நெருக்கமான பழக்கத்தில் இருக்கச் செய்கின்ற பயிற்சியை அவருக்குக் கொடுத்தேன். என் மீது மிகவும் அன்பை அவர் வளர்த்துக்கொள்ள இயலுமாறு செய்தது என் பயிற்சியின் தரமேயாகும். அம்மாதிரி பயிற்சியளித்ததன் காரணத்தை நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். அவருடைய அன்பின் காரணமாக அவர் கொண்டுள்ள சுய முக்கியத்துவ உணர்வு, காரணமற்றது; நியாயமற்றது. அதற்கான விசேஷமான தகுதிச் சிறப்பு அவரிடம் இல்லை. அன்பின் மலர்ச்சி நிச்சயமாக அவரிடம் இருக்கிறது. ஆனால் அதை வளரச் செய்து அதற்கு ஒருசரியான வடிவம் கொடுத்தது என் வேலை. C1 சற்று அதிக சுத்தமானவராகவே வந்தார். அதனால், அவர் அதிலிருந்து (சுய முக்கியத்துவ உணர்விலிருந்து) முற்றிலும் விடுபட்டவராக இருந்தார் என்று அர்த்தமில்லை. இதைப்பற்றி யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று M1- க்கு அறிவுறுத்து. இன்னொரு மனிதருடைய குறைபாட்டைக் கவனிப்பதனால், சிறிதுகாலத்துக்கு அந்தக் குறைபாட்டில் சிறிதளவை ஒருவர் தன்னிடம் உணர்ந்தால், அப்படி கவனித்தவரிடமே அந்தக் குறைபாடு விதை வடிவில் இருக்கிறது எனலாம். சிறிது காலத்திற்குப் பிறகே அந்தச் சிறிதளவு குறைபாடு அவரைவிட்டுப் போகிறது என்றால், அது பற்றின் காரணமாகத்தான்."

## M1 பற்றி வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

"ஏதாவது தவறு செய்துவிட்டால், அதாவது குறிப்பாக வேறு ஒருவருடன் உரையாடலின்போது (சாதாரணமாகப் பேசிக்கொள்ளும் போது) தவறாக ஏதாவது சொல்லிவிட்டால் உடனே M1 அதற்காக அவரிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்ள வேண்டும். அப்படி மன்னிப்பைக் கோருவது எந்த அளவுக்கு இதயத்திற்குள்ளிருந்தும் கண்ணீர் பெருகும் நிலையிலும் செய்யப்படுகிறதோ அதற்கேற்ற விகித்தில் அந்தத் தவறின்

ஆற்றல் பலவீனமடையும். ஆனால், இதில் பிரச்சனை என்னவெனில், நியாயமில்லாத மற்றும் பொருந்தாத அல்லது தன் தகுதிக்கு ஏற்றதாக இல்லாத எதையும் அவர் (M1) சொல்லியிருக்கக் கூடாது என்பதை ஒருபோதும் அவர் உணர்ந்துகொள்வதில்லை. அவர் சொல்கிற அனைத்தும் சரிதான் என்று அவர் கருதுகிறார். மேலும், அவர் சொன்னதுதான் சரி என்றும் கூட அவர் நினைக்கிறார். ஒருவருக்கு ஏதோ ஒன்று பிடிக்கவில்லை அல்லது விரும்பக்கூடியதாக இல்லை என்பதன் அறிகுறி அல்லது அம்மனிதர் மனம் புண்பட்டிருக்கிறார் என்பது அவருடைய முகமாற்றம் சுட்டிக்காட்டி விடுகிறது. M1 பழைய விஷயங்களை நினைத்துப் பார்க்கலாம். அப்படி ஞாபகத்தில் வருகின்ற விஷயங்களுக்காக மனம் வருந்த வேண்டும் மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளை நடைமுறையில் அனுசரிக்க வேண்டும். கடவுளைத்தவிர வேறு யாரும் முற்றிலும் சரியானவர்கள் அல்ல (குறையில்லாதவர்கள் அல்ல). இந்த விஷயத்தில் கர்வப்படுவது பயனற்றது. முற்றிலும் குறையற்றதாக இருக்கும் இந்த உள்நிலை கடவுளின் அருளினால் மட்டுமே ஒருவரிடம் உண்டாக்கப்படுகிறது. அதாவது, செயல்களின் தவறில்லாத முற்றும் சரியான தன்மையின் மூலமாக இருப்பவர் கடவுள்தான் என்பதற்கே இது சொல்லப்படுகிறது. அப்படியானால் வேறு யாராயினும் கர்வப்படுவதற்கு சந்தர்ப்பம் ஏது? ஒரு மனிதன் உலகில் வாழும் போது, அதை இனிமையற்றதாகச் செய்தால், அம்மனிதனைவிட அதிக துரதிருஷ்டம் செய்தவன் யாருமில்லை என்றே நான் நினைக்கிறேன். மனிதன் எந்நேரமும் கடவுளையே நாடிச் சார்ந்திருக்க முடியாது என்பதால் சரி – தவறு, நன்மை – தீமை என்ற இந்த விஷயங்களெல்லாம் அவனது பொழுது போக்குக்காகப் படைக்கப்பட்டன என்பது சத்தியமான உண்மை. முழு நேர்மையுடன் சிந்தித்தால் இந்த விஷயங்களில் அடிப்படையாகவே உண்மை இல்லை. எதிர்மறையான இந்த இணைகள், தங்களிடத்தில்

மனத்தின் இன்பத்தையேக் கொண்டுள்ளன. நல்ல தன்மையும் தீமையான தன்மையும் ஒன்றுக்கொன்று எதிரானவை. ஆனால், நல்ல தன்மை என்பது அதற்கு எதிராக ஒரு தீமையான தன்மை இருக்கும் போது மட்டுமே இது நல்லதன்மை என்று அறிந்துகொள்ளப்படுகிறது. அதுபோலவே தீமையான தன்மை என்பதும் அதனுடன் ஒப்பிடுவதற்கு ஒரு நல்ல தன்மை இருக்கும்போது மட்டுமே அறியப்படவும், மதிப்பீடு செய்யப்படவும் முடியும். இப்போது இவற்றின் அடிப்படையாக அல்லது அடித்தளமாக இருப்பது என்ன என்பதை சிந்தித்துப் பாருங்கள். இவையனைத்தும் மனிதனின் பொழுது போக்குக்காக இயற்கையினால் படைக்கப்பட்ட விஷயங்களாகும். இந்தவிதத்தில் அதைப் புரிந்து கொண்டவர் யாராயினும் அவர் தனது மனித ஜீவிதத்திலிருந்து வீடுபேறு அடைகின்றார்." (இந்த செயல் திட்டம் என் மனக்காட்சியில் வந்தது;) அதாவது நல்ல தன்மை, தீமையான தன்மை என்ற இரண்டு ஆற்றல்கள், ஒரு தனிப்பொருளிலிருந்து கசிந்து வடிகின்றன. அந்த ஆற்றல்கள் தலைகீழாக மாற்றப்பட்டு இரண்டுமே தங்கள் சொந்த விளைவுகளை இழக்கின்றன. அதே மூலப்பொருளிலிருந்து கடவுள் மீதான நினைவு என்ற ஒரு ஆற்றலும், உடல் சார்ந்த பற்று என்ற இன்னொரு ஆற்றலும் வெளிப்படுகின்றன. அவற்றைத் தலைகீழாகத் திருப்பினால் அவற்றின் மூலமும் அதுவாகவே இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.)



**வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

"மனிதன் கடவுளின் மீது நினைவில் ஈடுபட்டிருக்கும் போது ஒரு சக்தி ஆதியான சத்தியத்தைச் சென்றடைவதற்காக உள்நோக்கி திசை திருப்பப்படுகின்றது. நீ புரிந்து கொள்வதற்காக ஆற்றல் அல்லது விசை என்று நான் பெயரிட்டுள்ளேன். அதன்பிறகு அதே விளைவு உடல்சார்ந்த பற்று என்று நான் விவரித்த இன்னொரு விசையின் வழியாக கீழிறங்கத் துவங்குகிறது. இவ்விதமாக உடல் சார்ந்த பற்று தூய்மை செய்யப்பட்டு அதன் வழக்கமான கவரும் தன்மையையும், கூரிய தன்மையையும் இழக்கிறது. ஆகையால், நமது பயிற்சிமுறையில், அனைத்திற்கும் முடிவில் உடல்சார்ந்த பற்று குறையற்றதாக்கப்படுகிறது. எங்கு சென்றாலும் இதுவே அதன் கோட்பாடாக இருக்கிறது. நம்மைச் சேர்ந்துள்ளவர்களின் அதாவது நாமறிந்த வட்டத்தில், குறிப்பாக B1 - மக்களிடம் ஒரு நன்மதிப்பை உண்டாக்குவதற்காக பல செயல்நுட்பங்களைப் பற்றிப் பேசியிருக்கிறார். இவையனைத்தும் அவருடைய மனத்திலிருந்தே உருவாக்கப்பட்டவை. இவற்றைப் பயிற்சி செய்யக்கூடாது. நான் உனக்குக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற மற்றும் வருங்காலத்திலும் கூட கொடுத்துக் கொண்டே இருக்கப்போகிற அதுவே சரியான பயிற்சியாகும் அல்லது தனது பூரணத்துவம் பெற்ற மாஸ்டருடன், பூரணமான ஒத்திசைவு (நல்லிணக்கம்) எய்தியிருப்பவராக, அதன் காரணமாக மேலே இருக்கும் மூலத்திலிருந்து ஒளியைப் பெறத் துவங்கியிருப்பவராக விளங்குகிறவர் யாராயினும் அவர் சரியான பரிந்துரைக் குறிப்புக்களைத் தரமுடியும். மனத்தினால் உருவாக்கப்பட்ட வழிமுறைகளின்படி செயல்படுவது மனத்தினால் ஏற்படும் விளைவை அழிக்க முடியாது. பொதுவாக இதனால் நடந்துகொண்டிருப்பது என்னவெனில், யாராவது எதையாவது சொன்னால் அல்லது தன் உள்நிலையைத் தெரிவித்தால் அவருடைய வசதிக்காக ஏதாவது ஒரு செயல்நுட்பம் அவருக்குச் சொல்லப்படுகிறது.

தியானம் சார்ந்த அல்லது மற்ற ஆன்மீகப் பயிற்சிகள் சார்ந்த பயிற்சிகளைத்தான் செயல்நுட்பங்கள் என்ற பெயரில் நான் சொல்கிறேன். சத்தியமாகிய மூலத்திலிருந்து இந்தச் செயல்நுட்பங்கள் சரியானவையாக இருக்கமுடியாது. சில சமயங்களில் தற்செயலாக, இம்மாதிரி மனத்தினால் உருவாக்கப்பட்ட ஏதோ ஒன்று சரியானதாக அமைந்து விடலாம். ஆனால், செயல்நுட்பங்கள் என்று சொல்லப்படுகிற இந்த வழிமுறைகளை தங்கள் சுயமுக்கியத்துவத்தை உறுதிப்படுத்திக்கொள்ளவும், மற்றவர் மனதில் தங்களைப் பற்றிய ஒரு பதிவை (நன்மதிப்பை) உண்டாக்கவும் அம்மனிதர்கள் கொடுக்கிறார்கள். எனவே, ஒவ்வொரு படியிலும் கவனமாக இருப்பது தேவையாகிறது. ஆன்மீகம் என்பது ஒரு சிறுபிள்ளை விளையாட்டு அல்ல, சற்று நினைத்துப்பார். குண இயல்புகளை இழந்துவிட்ட ஒரு மனிதனாகவா நான் இப்போது இருக்கிறேன்?"

"உனது ஞாபகசக்தி க்ளோரோஃபார்ம் (என்ற பெயருடைய மயக்கத்தில் ஆழ்த்தும் மருந்து அறுவை சிகிச்சையின் போது பயன்படுத்தப்படுவது) மருந்தின் விளைவினால் கெட்டுப்போயிருக்கிறது. அதற்கு எலுமிச்சைதான் மாற்று மருந்து. வருடாந்திர விழாவின்போது, பிரச்சனைக்குரியதாக ஏதாவது நிகழந்தால், அந்த மனிதர்களிடமிருந்து ஒரு பக்கம் தனிமையில் ஒதுங்கிச் சென்று, என்ன செய்ய வேண்டுமென்று என்னைக் கேட்கலாம். B1- க்கு தனது செயல்நுட்பங்கள் பற்றி அதிகமான கர்வம் இருக்கிறது. C1- க்கு உன் அன்பு மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிறது. அவருடைய செயல்பாடும் கூட ஓரளவுக்கு மேல் நோக்கிப் போயிருக்கிறது. நீ மட்டுமே தியாகம் செய்திருக்கிறாய். உனக்கு எதன் மீதும் ஆசை இல்லை. இதுதான் உண்மையான தியாகம். (அது என் மனக்காட்சியில் வந்தது.) உயிருள்ள சில பொருட்கள் அவற்றின் இடங்களில் நிலையாகப் பொருத்தப்பட்டுள்ளன; அவற்றுக்கு பாதி தலைதான் இருக்கிறது;

நகர்வதற்கான திறனை அவை இழந்திருக்கின்றன என்பதாக எனக்குத் தோன்றியது.

“உண்மையான தியாகத்திற்கு விளக்கம் இதுதான். இம்மாதிரி உணர்வு (ஊக்கம்) அனைவருக்கும் ஏற்பட்டுவிடாது. ஆயினும் இதனால் மக்கள் அதற்கான முயற்சிகளை விட்டுவிடவேண்டும் என்று அர்த்தமில்லை. பிறந்த குழந்தைப் பருவத்திலிருந்தே (Infancy) இந்தக் குணம் உன்னிடம் உள்ளது. ‘மனத்தின் சுபாவங்கள் (மனப்பான்மைகள்) செயல்படாமல் நிறுத்திவைக்கப்படுதல்’ என்று இந்த உள்நிலை சொல்லப்படுகிறது. அவர் என் மீது அன்பு வைத்திருக்கிறார் என்று சொல்லப்படுவதற்காக நன்றி காட்டும் சுமையிலிருந்து உன்னை விடுவிக்கும் எண்ணத்துடன்தான் S1- இன் அன்பின் தன்மையைப்பற்றி உனக்கு நான் விவரித்தேன்.”

**19.07.1944**

## D1 பற்றி வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

“M1 – க்கு குழந்தைகளின் நல்வாழ்வு பற்றிய அக்கறை இல்லை. எனினும் அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்ய அவரால் முடியும் மற்றும் அந்தப் பையனின் உடல் நலத்துக்காக பிரார்த்தனை செய்து கொண்டிருப்பதாக D1 – க்கு கடிதமும் எழுதலாம்.”

“பிராமணன் என்ற நிலையை அடையும்வரை நல்வாழ்வு நிலை இல்லை. பேரண்ட வெளியில் / பிரம்மாண்ட மண்டலத்தில் (Cosmic region) சுற்றி வந்துகொண்டு, அதற்குமேல் உயர்நிலை அடையப் பெறாமலிருக்கும் ஒருவர் பிராமணன் என்று சொல்லப்படுகிறார். இந்த மனிதர்கள் அடைந்திருப்பதைவிட மேலான பதவி மகா பிராமணர்களுக்கு உரியதாகும். அவர்கள் முன்னேறிப் போகக்கூடிய எல்லை பரப்பிரம்மாண்ட மண்டலம் ஆகும். இதையும் கடந்து போகிறவர் நான்கு

வர்ணங்கள் (நால் வகை ஜாதிகள்) என்று சொல்லப்படுகின்ற கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட்டவராகிறார். ஆனால், நல்வாழ்வு என்ற நிலை இந்த நிலையில்கூடத் தோன்றுவதில்லை. மகாபிராமணர்கள் எண்ணத்தின் சக்தியில் நல்ல நிபுணத்துவத்துடன் இருக்கிறார்கள். மேலும், அவர்கள் இனியும் சடங்குகளுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருப்பதில்லை. (அந்த நிலை மனக்காட்சியில் வந்தது). உண்மையில் பிராமணர், மகாபிராமணர் ஆகிய இருவருமே பந்தம் உடையவர்களாக இருக்கிறார்கள். தங்கள் நிலைகளின் எல்லைகளுக்கு அப்பால் யாரையும் அவர்களால் மேலே இழுக்க முடியாது. பரப்பிரம்மாண்ட மண்டலத்தைக் கடந்து அப்பாற்பட்ட நிலையில், அவரது நிலை துவங்குகின்ற ஒரு மகானுக்கு (SAINT – க்கு மட்டுமே) இது (இந்த மேலே இழுக்கும் சக்தி) இருக்கிறது. அந்த மகான் பரமாத்மாவின் (உண்மையான அல்லது சத்திய ஜீவத்தன்மையின்) காற்றுடன் (அருள் வீச்சுடன்), போதுமான அளவுக்குத் தொடர்பைப் பெறுகிறார். (அது மனக்காட்சியில் வந்தது). கடவுள் பற்று அல்லது கடமையுணர்ச்சியின் (குத்ஸா / QUDSA) மண்டலமும் கூட, அதிகம் தங்கியிருப்பதற்கான இடமல்ல, அதைப் போதுமானதாகக் கருதவும் கூடாது. (அது மனக்காட்சியில் வந்தது. நுட்பமாகக் கவனித்துப் பார்த்தபோது, அது ஒரு ஆரம்பநிலையாக எனக்குத் தோன்றியது. அதனையடுத்து முன்னோக்கிப் பார்த்தபோது அங்கே முடிவே இல்லை.) இந்த ஆண்டு விழாவிற்கு முன்பு உனக்கு ஏதோ ஒன்றை அளிப்பேன்.”

## என் பணிவான கருத்து:

“என் பிரபுவே, அது உங்களுக்குத் திருப்தியளிக்கலாம் என்பதால், சரி, ஒப்புக்கொள்கிறேன். என்னுடையவையான அனைத்தையும் நான் உங்களுக்குச் சரணடையச் செய்துவிட்டேன்.”

**பதில்:**

“நான் கூட வாசித்திருக்கிறேன். என்னுடையது என்று உள்ள அனைத்தையும் உங்களுக்கு அர்ப்பனித்துள்ளேன்.”

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் மேலும் கூறியது:**

“என்னுடன் நீ எந்த அளவுக்கு ஒத்திசைவை (ஒத்த தீர்வை) ஏற்படுத்திக் கொண்டிருக்கிறாய் என்பது பற்றி வருங்காலத் தலைமுறைகளுக்கு ஒரு பாடமாக இதை நீ எழுதி வைத்துக்கொள்.”

**21.07.1944**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

“என்ன ஒரு புதுமையான கருத்தை நீ உருவாக்கியிருக்கிறாய்! இதயத்தில் (இதய மண்டலத்தில்) சுற்றி வந்து அனுபவம் பெறுவதை நீ ஏற்கெனவே பூர்த்தி செய்து விட்டாய். இதயமாகிய புள்ளியில் இருக்கும் மகிழ்ச்சியான தன்மையின் முதல் கட்டத்தில் ஒரு முனைப்பட்ட (ஒன்றை மட்டுமே சிந்திக்கிற) மன நாட்டத்தின் வளர்ச்சியில் அடங்கியுள்ளது. அதன் இரண்டாவது கட்டம் (அந்த மனநாட்டத்தின் நோக்கம் அல்லது லட்சியமாகிய கடவுள் அல்லது கடவுளைப் பற்றிய மெய்மையை உணர்தல் என்ற இலக்கை உடையவரின் முன்னால்) நிரந்தரமாக இருக்கும் பிரசன்னம் ஆகும். இது ஒரு சாதாரண மகிழ்ச்சியல்ல. அதன் மூன்றாவது கட்டம் அதுவும் மறந்துவிட்ட நிலையாகும். அதன் பிறகு அந்நிலையில் சுற்றிவந்து அனுபவம் பெறுதல் துவங்குகிறது. அப்போது பல்வேறு விஷயங்கள் வெளிப்படுத்தப்படுவதும் ஆரம்பமாகிறது. அதற்கு மேல் வரும் அடுத்த கட்டம் அனுபவத்துடன் சரியாகச் சொன்னால் உள்முகமான அனுபவத்துடன் சம்பந்தப்பட்டதாகும். அப்போது வாயினால் எடுத்துச் சொல்வது சாத்தியமாகுவதில்லை.”

“ஆன்மாவாகிய இரண்டாவது புள்ளியில் சுற்றிவரும் பாதையில் மேலே கூறப்பட்டவை அனைத்தும் எண்ணத்தின் வடிவிலேயே இருக்கும்

உத்தேச எண்ணம் போன்ற சூட்சுமமான தன்மையில் அது இருக்கும். உணர்ச்சி பூர்வமான உற்சாகம் உதிர்ந்து போகும். ஒரு விதமான லேசான (பளுவற்ற) உள்நிலை சுற்றிலும் இருப்பது உணரப்படுகிறது. அனைத்திலும் நிதானத்தை நடுநிலைப் பண்பை விரும்புகின்ற மனப்பான்மை வளர்ச்சியடைகிறது. வசீகரிக்கும் விஷயங்களில் ஈடுபாடு மறைந்து போகிறது. எளிமையே பெருமளவில் நிலவத்துவங்குகிறது. இவையனைத்தும் உள்முக அனுபவம் சார்ந்தவையாதலால், அதுபற்றி எவ்வளவுதான் விவரிப்பது?”

“வெவ்வேறு புள்ளிகளில் எல்லாவிதமான மகிழ்ச்சிகளிலும், நீ சுற்றிவந்து அனுபவம் பெறுவது நிறைவுபெற்றுவிட்டது. அதில் நீ ஆளுமையும் (கட்டுப்படுத்தும் தலைமை நிலையையும்) அடைந்திருக்கின்றாய். எதுவுமே குறையாக இல்லை. இவையனைத்தையும் என் ஆயுட்காலத்திலேயே உன்னிடம் முழுமைப் பெறச் செய்துவிட்டேன். அதற்குத் தடைகள் மட்டும் விதிக்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக உள்ளுக்குள் அது அதிகம் கனன்று கொண்டிருப்பதை அடைந்தாய். அதனுள் (உனக்குள்) சக்தி திணிக்கப்பட்டிருந்தது. அதன் வெளியேறும் வழி மூடப்பட்டிருந்ததால், அதனுடைய ஆற்றலின் விசை உற்பத்தியானது. அவையனைத்தும் சத்தியத்தில் சேர்க்கப்பட்டுள்ளன என்ற இந்த அளவுக்கு மட்டும்தான் இப்போது செய்யப்பட்டுள்ளது. புதிதாக எதுவும் செய்யப்படவில்லை. உன்னுடைய ஆன்மீக நிலைபற்றி ஏதாவது கருத்துக்களைத் தெரிவிப்பவர்கள், அதைப்பற்றி சரியான மதிப்பீடு எதையும் செய்யமுடியாது. ஏனெனில் அவர்கள் அந்த நிலையின் அளவுக்கு உயர்வடையவில்லை.”

“உன்னுடைய பலவீனத்துக்குக் காரணம் இல்லாமல் இல்லை. நீ வேண்டுமென்றே பலவீனமாக்கப்பட்டிருக்கிறாய். ஏனெனில், நல்ல உடல் நலத்துடன் இருந்தால் அந்த நிலையின் வெப்பம் உன்னுடைய

உள்நிலையில் சேர்த்துக்கொள்ளப்படாமல் போய்விடலாம். உன் அளவுக்கு வளர்ச்சி நிலையில் இருக்கும் ஒரு மனிதர், நல்ல ஆரோக்கியத்துடன் இருந்தால் சாதாரணமாகப் புரிந்துகொள்வதற்கு அப்பாற்பட்ட வினோதமான காரியங்களைச் செய்யக்கூடும். இயற்கையே உன்னை பலவீனமாகப் படைத்திருக்கிறது. நீ நல்ல உடல்நலமுடன் இருந்திருந்தால், உன்னுடைய எண்ணத்தின் (சிந்தனையின்) தன்மை இந்த மாதிரி இருக்காது. ஒரு ஹட யோகிக்கு நல்ல உடல் நலம் தேவைப்படுகிறது. (அது என் மனக்காட்சியில் வந்தது. என் ஜீவிதத்தின் அனைத்து சக்திக்கூறுகளும் பரமாத்மாவுடன் (சத்தியமான பரம்பொருள் தன்மையுடன்) ஐக்கியம் அடைந்து மிக உச்சமான தூய்மையான தன்மையை (சத்கதி) எய்தியிருப்பதாகத் தோன்றியது.) முதலில் இந்த உள்நிலை கிளர்ந்து எழும்படியாக நான் செய்வேன். அதன்பிறகு (அல்லது அப்போது) உடல் நலமாகிய கனவைப் பெறுவாய். இந்த பலவீனமான நிலையிலும் நீ என்ன செய்துகொண்டிருக்கிறாயோ, அதை நல்ல உடல் நலமுடைய எந்த ஒருவராவது செய்ய முடியுமா என்று சற்றே சிந்தித்துப் பார். எதன் மூலமாக அற்புதச் செயல்கள் நிகழ்கின்றனவோ அந்த ரகசியங்களை உனக்கு நான் இன்னும் தெரிவிக்கவில்லை. உனது எண்ணத்தின் ஆற்றலினால் உன்னால் அனைத்தையும் செய்ய முடியும்.''

''இப்போது, உன்னிடமிருந்து தேவையான வேலையை நான் பெற்றுக்கொள்வேன். நான்புரிந்து கொண்டவரையில். சடங்கு முறையிலான காரியங்கள் மற்றும் நடைமுறைகளின் மூலமாக எய்தப்படும் சித்திகள் (அற்புதங்களை நிகழ்த்தும் சக்திகள்) நம்பத்தகுந்தவையல்ல. இந்த விஷயங்களையெல்லாம் உன்னிடம் சொல்வதற்கான அடித்தளத்தை உன் பலவீனம்தான் அமைத்துத் தந்திருக்கிறது. இதுபற்றிய செயல்திட்டத்தை உன் பார்வைக்கு நான் கொண்டு வந்திருக்கிறேன். இவையனைத்தும் என்னிடத்தில்

இடம்பெற்றுள்ளன. நீ உனது புத்திக்கூர்மையை தக்கவைத்துக்கொள்வதற்காக (இந்த மண்டலங்களில்) நடந்தும் சுற்றியும் வரவேண்டும் என்று உன்னை வற்புறுத்துகிறேன். இவற்றை எழுதிவைப்பதில் இதுபோல இன்னும் எத்தனை நோட்டுப் புத்தகங்கள் தீர்ந்து போகுமோ யாருக்குத் தெரியும்? நான் செய்ய வேண்டியது இதுதான்."

"இந்தப் பயிற்சி முறை பற்றி இதுவரையில் இதன் சம்பந்தப்பட்ட விஷயங்களையும், ரகசியங்களையும் யாரும் வெளிப்படுத்தியதில்லை. B1- இடத்தில் ஒத்திசைவு இல்லாத ஒன்றுக்கொன்று முரண்பட்ட மூல அம்சங்கள் உள்ளன. அவை அப்படி இருந்தும் எதிலும் குறையற்ற முழுமை ஏற்படவில்லை. 'B1- க்கு உறவினராக இருந்ததன் மூலமாக ராம் சந்த்தர் ஒரு ஆன்மீக உள்நிலையை அடையப் பெற்றார்' என்று உன்னைப்பற்றி அவரிடம் சொல்வது எப்போதாவது என்னால் முடியுமா? நான் ஏற்கெனவே உன்னை முழுமைபெறச் செய்து விட்டேன். உனக்கு பிரிசெப்டராக வேலை செய்வதற்கு அனுமதியளிப்பது பற்றிய எண்ணம் தோன்றுவதற்கு விடவில்லை. அதற்காக நன்றியுணர்வினால் உனக்கு சுமை ஏற்படக்கூடாது என்பதால் அப்படிச் செய்தேன். S1- அந்த அனுமதி பற்றி போகிற போக்கில் பேசினார். அதை நாம் அனுமதியாகக் கருத முடியாது. உன் சம்பந்தப்பட்ட அனைத்து விஷயங்களுக்கும் நான் பொறுப்பேற்றுக்கொண்டிருந்தேன். S3- க்கு S1 அனுமதி அளித்திருந்தார். ஆனால், அது சரியான முறையில் கொடுக்கப்படவில்லை. எனவே, S3 - இடம் எந்த ஒரு உள்நிலையும் வளர்ச்சியடையவில்லை. தானே கொடுத்த அனுமதியாக அதை S1 - நினைத்திருக்கலாம். K2 - வுக்கு நீ அனுமதியளித்தாய்; அது என்னிடமிருந்து வந்தது; அது சரியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக இரண்டுமே என் மனக்காட்சியில் கொண்டுவரப்பட்டன). S1 - கொடுத்தது போன்ற

அனுமதிகளால் பயன் ஒன்றுமில்லை. அனுமதி எப்படிக் கொடுக்கப்படுகிறது என்பதே யாருக்கும் தெரியாது. அதற்கான ஒரு சாதாரண அறிகுறியை நான் உனக்குச் சொல்கிறேன். உன்னுடைய உணர்வுறுநிலை தானாகவே அதுபற்றி உன்னைக் கட்டாயப்படுத்தத் துவங்கும்போது மற்றும் அது பற்றிய எண்ணம் உன் மனதில் மீண்டும் மீண்டும் வரும்போது, அதை மேலேயிருந்து வருகின்ற தெய்வீகத் தூண்டுதல் என்பதாக நீ கருத வேண்டும். இரண்டாவது ஒரு அறிகுறியும் இருக்கிறது. அதாவது, மேலேயிருந்து உனக்கு ஒப்படைக்கப்பட்ட அந்த வேலையை நீ செய்து முடிக்கும் வரையில் அமைதியற்ற தவிப்பை நீ உணர்கிறாய், என் பதவியின் வாரிசுகளாக தங்களைச் சொல்கிறவர்களிடம் (சொல்லிக் கொள்கிறவர்களிடம்), இதனால் அனுமதி அளிப்பதை ஆரம்பித்திருக்கிறவர்களிடம் இந்த உள் நிலை வளர்ச்சியடையவில்லை என்பதை நான் பார்க்கிறேன். இந்த விஷயம் சம்பந்தமாக, மற்றவர்களுக்கு எது நன்மையளிப்பதாக இருக்குமோ, அதை அவர்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. இப்படி என்பதவியின் வாரிசுகளாகச் சொல்லப்படுகிறவர்களுக்கு, சரியான முறையில் அனுமதியளிப்பது எப்படி என்பதைச் சுட்டிக்காட்டும்படி M1- இடம் சொல்லவும், அவரிடம் (M1- இடம்) அப்பட்டமாகப் பேசிவிடும் பழக்கத்தை விட்டுவிட வேண்டும் என்பதையும் சொல்லவும். ஏனென்றால், அப்பட்டமாக உண்மையைச் சொல்லிவிடுவதும் கூட, மற்றவர்களுக்கு அதிருப்தியையும், கடுமையாக எதிர்க்கும் குணத்தையும் உண்டாக்கும். உரையாடுவது எப்போதுமே பிரியத்தினால் (அன்பினால்) நிரம்பி வழிவதாக இருக்க வேண்டும். கடவுள் ஒருவர் மட்டுமே குறைபாடுகள் இல்லாதவர். குற்றம் கண்டுபிடித்தல் என்பது அதுவே ஒரு குற்றமாகும். அது, குற்றம் கண்டுபிடிப்பவருக்கே பிரச்சனையை உண்டாக்குகிறது. M1- என்னுடன் சிறிது காலம் வாழ்ந்திருந்தால் என்னிடமும் குற்றம் கண்டுபிடிக்க ஆரம்பித்திருப்பார். அவர் இந்தப்

பழக்கத்தை விட்டுவிட வேண்டும். இந்தப்பழக்கம் வளர்ந்திருக்கும்போது, சுற்றியுள்ள அனைவரின் மீதும் தவறுகளை தானே உருவாக்குவதற்கு மனம் ஆரம்பித்துவிடுகிறது. தன் தலையின் மீது தந்தையின் நிழல் இல்லாமல் போய்விடும்போது, (அதாவது தன்னைப் பாதுகாக்கும் தந்தை உயிருடன் இல்லாத போது) தான் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியிலும் ஒருவர் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இறந்துவிட்ட தந்தைக்கு தன் செயல்களினால் கெட்ட பெயர் உண்டாக்கிவிடக்கூடாது."

## 22.07.1944

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

"இந்த முரண்பாடுகள் அனைத்திலிருந்தும் உன்னை விலக்கி வைத்திருப்பதற்கு நான் விரும்புகிறேன். M1 - பற்றிய உனது பரிந்துரையை (சிபாரிசை) நான் ஏற்றுக்கொண்டிருக்கிறேன். இந்த எதிர்ப்புகள், முரண்பாடுகள் அனைத்தையும் கையாள்வதற்கு அவரிடம் ஒப்படைத்துவிடு. ஆனால், உன் சக்திகளை அவருக்கு மாற்றிக்கொடுத்துவிட வேண்டாம். நான் சுட்டிக்காட்டியபடி அவரது மனத்தின் உள்நிலை திறக்கப்படும்போதே நிலையான துருவ நட்சத்திரம் (QUTUB / குதுப் அல்லது துருவா) என்ற பதவியின் உள்ளார்ந்த தன்மை அவரிடத்தில் துவங்கும். இப்போதாவது தன்னை சீர்த்திருத்திக்கொள்ளும்படி அவரிடம் சொல். உனக்காக அவர் செய்து கொண்டிருக்கும் உழைப்புக்கு இது பரிசாகும். அவருக்கு (M1- க்கு) பரந்த மனப்பான்மை இல்லை. குறுகிய கண்ணோட்டத்தின் சாயல் இருக்கிறது. இந்தக் குணங்களைக் கட்டுப்படுத்திக்கொள்ளுதல் மற்றும் சீர்திருத்திக்கொள்வதே, அந்த உயர்ந்த துருவா (குதுப்) நிலையை அடைவதற்கு முன்னோடியாக இருக்கிறது. M1- திருந்த வேண்டும் என்ற எண்ணம் உன் மனதில் எந்த அளவு இருக்கிறதோ, அதை விட இரண்டு மடங்கு எண்ணம் என் மனதிலும்கூட வளர்ந்திருக்கிறது. உன் மனதில்

எந்த எண்ணம் பிரதிபலித்தாலும், அது என்னிடத்தில் பலமடங்கு விசையுடன் மற்றும் தீவிரத்துடன் எதிரொலிக்கிறது. இது விளக்கிச் சொல்ல வேண்டிய தேவை இல்லாத ஒரு தத்துவம்."

## M1 - க்காக வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

"இதுவரையில் ராம் சந்த்தர் உனக்குக் கடமைப் பட்டவராக இருந்தார். இப்போது, நீ அவருக்குக் கடமைப்பட்டவனாக இருக்க வேண்டும். உன்னைப்பற்றி இப்போது என்னிடம் உருவாகிக்கொண்டிருக்கின்ற எண்ணம் மற்றும் அக்கறையுடைய சிந்தனை எதுவாயினும், அது அனைத்திற்கும் அவரே (ராம் சந்த்தர்) காரணம். பல்வேறு மையங்களுக்கு விஜயம் செய்வது சம்பந்தமான வேலை, இந்த விஷயத்தில் திட்டம் இடுவதற்கு ராம் சந்த்தருக்கு எந்தத்தடையும் இல்லையென்றாலும், உன்னிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. இளைஞருக்கு உரிய விளையாட்டுகளில், விளையாட்டுப் போட்டிகளில் நீ நீண்டகாலம் ஈடுபட்டு இருந்துவிட்டாய். இப்போது அந்தக் காலகட்டம் முடிவுக்கு வந்திருக்கிறது. இப்போது உன் (ஆன்மீக நிலையின்) திசையை மாற்றியிருக்கிறேன். மிக விரைவிலேயே நீ என்னுடன் நேரடியாக உரையாடலாம். ஆனால், ஒரு உருது மொழி ஈரடிச் செய்யுளில் கூறியிருப்பதுபோல 'உயர்ந்த பதவி நிலைகளை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் மிகப்பெரிய பிரச்சினைகளை, சிரமங்களை சந்திக்க வேண்டியிருக்கும்'. இதை நீ மனதில் மறவாமல் வைத்திருக்க வேண்டும். என்னை உன் தந்தைபோல பாவித்து நீ என்னை நேசித்திருக்கிறாய். இதனால் ஒரு தந்தை தன் மகனிடம் இருப்பதுபோல நான் உன்னிடம் கண்டிப்பாக நடந்துகொள்வேன். ராம் சந்த்தர் என்னைத் தன் காதலனாக (நேசிக்கப்படுகிறவராக) நினைத்து, தன்னை முழுமையாக எனக்கு சமர்ப்பணம் செய்திருக்கிறார். தனக்குச் சொந்தமான எதையும் தனக்கென்று வைத்துக்கொள்ளாமல், அனைத்தையும் எனக்குக் கொடுத்துவிட்டார். அவர் வறுமை நிலையையே

விரும்புகிறவராக, எத்தனையோ சிரமங்களை அனுபவித்தார். ஆனால், ஒருபோதும் என் நினைவை கைவிட்டுவிடவில்லை. எனவே, அவரிடம் கண்டிப்பாக, கடுமையாக நடந்துகொள்ளும் மனம் எங்கிருந்து எனக்கு வரும்? அவருடைய அன்பு நிறைந்த செயல்கள், வழிகள் அனைத்தையும் நான் தாங்கிக்கொள்ள வேண்டியிருக்கும். நீயும் கூட அவர்மீது முழு அக்கறையுடன் இருக்க வேண்டும். நேசிக்கப்படுகிறவராக, காதலனாகக் கருதி அன்பு செலுத்துகிற வேறு எந்த ஒருவரையும் இதுவரையில் நான் காணமுடியவில்லை. அந்த மாதிரி ஒருவருக்கு நானும் என் இதயத்தைக் கொடுப்பேன். எனக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய எதையும் அவரிடமிருந்து ஒதுக்கி – அதாவது ராம் சந்த்தருக்குத் தராமல் எனக்காகவென்று வைத்துக்கொண்டதில்லை. மேலும், இனியும் எனக்கு வரக்கூடிய அல்லது எனக்கு சொந்தமானதாக ஆகக்கூடிய எதுவாயினும் அதை மேலும் மேலும் அவருக்குக் கொடுப்பதற்கே நான் ஆவலுடன் எதிர்ப்பார்த்திருக்கிறேன். ராம் சந்த்தரின் நரம்புகளையும் ரத்த நாளங்களையும் ஒருவர் அறுத்துப் பார்த்தால், அந்த அறுவை சிகிச்சையை செய்பவருக்கு தெய்வீகக் காட்சித்திறன் அருளப்பட்டிருந்தால் என் சக்தி முழுவதும், அவருக்குள் நிறைந்து இருப்பதைக் காண்பார். இப்போது என் நிலைமை என்னவென்றால் நான் முற்றிலும் விடுதலை (முக்திநிலை) அடைந்திருந்தாலும், அவரைப்பற்றிய நினைவில் நான் நிரம்பியிருக்கிறேன். இந்த உயர்நிலையில் இருக்கின்ற ஒருவரைப் பெறுவது மிகவும் அரிதானது என்பதை உனக்கு உறுதியாகச் சொல்கிறேன். நான் உடல் நீத்துச் சென்றபிறகு, எப்படியோ என் உயர்நிலைபற்றி அறிந்து கொண்டு, இப்போது நான் இல்லையே என்று மக்கள் வருந்துவது போலவே, ராம் சந்த்தருக்கும் அதே மாதிரி நிலைமை ஏற்படும். நான் மீண்டும் சொல்கிறேன். அவருடைய தகுதிச்சிறப்பைக் காணும் திறமை பெற்ற ஞானக்கண்கள் யாருக்கும் இல்லை. வெளியே தெரிவிக்கும்படியாக

எந்த சாயலையும் விட்டுவைக்காத அளவுக்கு, அவர் தன்னையே இல்லாமல் செய்து கொண்டிருக்கிறார். இதை ஒரு பழக்கமாகவே அவர் வளர்த்துக்கொண்டிருக்கிறார். இதில் என் தவறும் இருக்கிறது. அவருடைய சக்திகளையும் திறமைகளையும் பன்னிரண்டு ஆண்டுகளாக நான் மூடியும் வெளிபடுத்திவைக்காமலும் இருந்திருந்தால், அவர் இந்தப் பழக்கத்தை வளர்த்துக்கொண்டிருக்க மாட்டார். உடனடியாக அதை வெளிப்படுத்தியிருப்பார். இப்போது ராம் சந்த்தரின் மனத்தின் தன்மை, இந்த உலகம் முழுவதிலும் இருக்கும் செல்வவளத்தையெல்லாம் அவர் தனது உடைமையாகப் பெற்றிருந்தும் அந்த அனைத்தும் தன்னுடையது என்ற உணர்வு சிறிதும் இல்லாமல் அதுபற்றி லேசாக ஒரு எண்ணம் மட்டுமே அதில் உடையதாக இருக்கிறது. உன்னிடமும் கூட (M1 - இடம்) இம்மாதிரி எதிர்பார்ப்புகளை நான் வளர்த்துக்கொண்டிருந்தேன்."

## M1 சம்பந்தமாக வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:

"M1 - இடம் இன்னமும் நீடித்திருக்கின்ற ஒரு பெரிய குறைபாடு, மற்றவர்களிடம் இருப்பதாக அவர் கண்டுபிடித்துச் சொல்லும் சுயமுக்கியத்துவம் என்ற தவறு, அவரிடமே அதிகமாக இருப்பதுதான். அவர் அதை அறியாமலிருக்கலாம். அதனால்தான் அதைப்பற்றி அவருக்குச் சொல்கிறேன். எந்த ஒரு விஷயமாயினும், அதைப் பற்றி அவர் சொல்வது எதுவாயினும் அதுவே சரியானது என்று அவர் நினைக்கிறார். இந்த உயர்ந்த ஆன்மீக நிலையில் இருக்கும் ஒரு மனிதருக்கு அது உயிரை நீக்கும் விஷமாகும்."

## M1 - க்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

"நான் மீண்டும் சொல்கிறேன். ராம் சந்த்தரிடம் இருந்து மக்கள் நன்மையைப் பெறவில்லையென்றால் அது அவர்களின் மிகப்பெரிய துரதிருஷ்டமாக இருக்கும். லாலாஜி சாகேப்பின் பிரதிநிதி ஒரு

விசேஷமான மகாபுருஷராகத்தான் இருப்பார் என்று மக்கள் பெரும்பாலும் நினைத்தார்கள். இப்போது அவர் இங்கு இருக்கிறார். அதை அவர்களே பார்க்கலாம். ராம் சந்த்தரிடம் இருக்கின்ற அவரது தந்தையின் குணத்தின் விளைவை நான் நீக்க விரும்பவில்லை. அதை நான் மங்கச் செய்திருக்கிறேன். அந்த விளைவு முற்றிலும் விலக்கப்பட்டுவிட்டால் ராம் சந்த்தரின் மேல் நோக்கிப் பறக்கும் தன்மை மேல் உலகின் பக்கம் திசைதிருப்பப்படும்; ஆனால், தன் பௌதீக உடலை விட்டுச் சென்றுவிடுவார். சிலசமயங்களில் அவரிடம் உண்டாகும் இந்தப் பிரதிபலிப்பு, அவருடைய தந்தையின் குணத்தின் விளைவு என்பதை நானும் கவனித்திருக்கிறேன். சில சமயங்களில் அவர் பிடிவாதமாகவும் இருக்கிறார். இதனால் அவரிடம் பயிற்சி பெறுகிறவர், சீக்கிரமாகவே முன்னேறும்படியாக, அந்தப் பயிற்சியை மேம்படுத்துகிறது. இந்த விளைவை நான் போதுமான அளவு குறைத்திருக்கிறேன். இதை விரும்பத்தகுந்த – நேசிக்கப்படுகிற நடத்தை என்று நான் கருதுகிறேன். அந்தச் சமயத்தில் ராம் சந்த்தரின் கால் தூசு அளவுக்குக் கூடத் தகுதியில்லாதபடி N1- இன் தன்மை இருந்தபோது, அவரை (N1- ஐ) மிகவும் தவறான விதத்தில் என்னுடைய பிரதிநிதியாக நினைத்து நடந்துகொண்டார்கள் என்பதை நான் மீண்டும் சொல்கிறேன். ராம் சந்த்தரின் நிலையைப்பற்றி மக்கள் ஒரு மதிப்பீடு செய்ய வேண்டும் என்பதற்காக இதைச் சொல்கிறேன். ராம் சந்த்தருடன் ஒப்பிடும்போது, S1 - போன்றவர்கள் அரிச்சுவடி படிக்கும் பள்ளிக்குழந்தைகள் போன்றவர்களாக இருக்கிறார்கள். அவருடைய (ராம் சந்த்தரின்) உயர்நிலை பற்றிய ஒரு கருத்தை மக்கள் அறியச் செய்வதற்காக இதைச் சொல்கிறேன். நாடித் துடிப்பைக் கவனித்து நோயைக் கண்டறியும் திறமை இல்லாதவர்கள் அறிகுறிகளின் மூலமாக நோயாளியின் நிலையை அறியலாம். எனது வாரிசுகளாக,

பிரதிநிதிகளாக இருப்பவர்கள் அனைவரும் ராம் சந்த்தருக்குக் கீழ்ப்பட்டவர்களாகவே தங்களைக் கருத வேண்டும்.”

## M1 – பற்றிய உத்தரவு:

“ஆன்மீக யாத்திரையில் அவருடைய இப்போதைய உள்நிலையை முழு அளவுக்கு செம்மையாக்குவதற்கு முன், குதுப் (துருவா / QUTUB) என்ற அந்த உயர்நிலையைத் தூண்டிவிடுவதற்கு முயற்சிக்க வேண்டாம்.”

## M1 – க்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:

“ராம் சந்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பயிற்சி அவருக்காக நானும் அதே பயிற்சியை ஏற்றுக்கொள்ளும்படியான ஒரு விளைவை என்னிடம் ஏற்படுத்தியது. இருபத்து நான்கு மணி நேரங்களில் எந்தச் சமயத்திலும் என்னைப் பற்றிய நினைவை அவர் இழக்கவில்லை; எனவே, நானும் கூட அதேபோல இருபத்து நான்கு மணி நேரத்தில் எந்தச் சமயத்திலும் ஒருபோதும் அவரைப்பற்றிய நினைவை இழக்கவில்லை. இது இப்படியே பல வருடங்களுக்குத் தொடர்ந்தது. அனைவரும் இதே மாதிரி நன்மையைப் பெறுவதற்காக இதே பயிற்சியை எல்லோருக்கும் நான் வெளிப்படுத்த வேண்டும் என்று அவர் (ராம் சந்த்தர்) மிகவும் ஆசைப்பட்டார். இந்தப் பயிற்சியை எல்லோருக்கும் சொல்வதில் தவறில்லை; ஆனால், அந்த அனைவராலும் இதே மாதிரி பயனை அடைய முடியாது என்று அவருக்குச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கூட்டத்தாரிடையே எந்த ஒருவரும் அந்த மாதிரி ஒரு தரத்துக்கு வருவார் என்று எனக்குத் தோன்றவில்லை.”

## தொடர்ந்து என்னிடம் வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

“முதலில் எல்லோரையும் ஒரே திசையில் மனநாட்டம் கொள்ளச் செய்ய வேண்டும். M1– உன்னை மிக அதிகமாக நேசிக்கிறார். அதற்காக நானும் கூட நன்றியுடன் இருக்கிறேன். அதன் பலன்களை அவர்

அடைந்து கொண்டிருக்கிறார். மற்றவர்களும் அப்படி நன்மைகளைப் பெறுவதற்காக, அவர்களும் உன்மீது அன்பை வளர்த்துக்கொள்ள வேண்டுமென விரும்புகிறேன். யாரொருவர் உன்னை எந்த ஒரு அளவுக்கு நேசிக்கிறாரோ, அவர் அதே அளவுக்கு நான் அவரை நேசிப்பதைக் காண்பார். இதுவும் கூட ஒரு ஆன்மீக தத்துவம்."

"என்னாலும் கூட கவனிக்க முடியாமல் போன மேலும் ஒரு தந்திரத்தையும் N1 உன்மீது பிரயோகித்தார். நீ எந்தப் புள்ளியின்மீது மனத்தை ஒருமுகப்படுத்திக்கொண்டு இருந்தாயோ, அந்தப்புள்ளியை விரிவடையச் செய்வதுதான் அந்தத் தந்திரம். நீ அமைதியாகவும், பொறுமையாகவும் இருப்பதற்கு பதிலாக உன்னை அதிகம் பேசுகிறவனாக இது மாற்றியது, அவரிடமிருந்து அன்பை என்மீது மாற்றிக்கொண்டதில் நீ சிறப்பாகச் செயல்பட்டாய். இது இயற்கையினால் அவருக்கு விதிக்கப்பட்ட சரியான தண்டனையாக இருந்தது, அதுவே முதல் தாக்குதல். அதாவது, உன்னை மூச்சுத்திணறச் செய்வதற்கு (திக்குமுக்காடச் செய்வதற்கு) முதலிலேயே முயற்சி செய்யப்பட்டது. அதனுடைய பாதிப்பு இன்னும் உன்னிடம் இருக்கிறது. அந்த நாளிலிருந்தே எண்ணங்கள் தறிகெட்டு அலையும் தன்மை அதிகரிக்கப்பட்டது. உன் மனம் ஒருமுகப்பட்ட நிலை என்னை வரவழைக்கக் கட்டாயப்படுத்த முடியுமானால், நீ எவ்வளவு பேரழிவை உண்டாக்க முடியும் என்பது பற்றி ஒரு மதிப்பீடு செய்ய அவரால் முடிந்தது. உண்மையில் அது அவர் மகிழ்ச்சியடைவதற்கான ஒரு சந்தர்ப்பமாக இருந்தது. இன்று நீ (ராம் சந்த்தர்) அதைப்பற்றி என்னிடம் குறிப்பிட்டுச் சொன்ன இச்சமயத்தில்தான், இந்தக் குறைபாட்டை என்னால் கவனிக்க முடிந்தது. இதற்கு முன்பு இதைப்பற்றி எனக்குத் தெரியாமல் போயிற்று. உன்னளவுக்கு உயர்ந்த நிலையும், தகுதிச் சிறப்புக்களும் உடைய ஒருவரின் (அதாவது உனது) எண்ணங்கள் எவ்வாறு குழப்பமடைந்து (ஒழுங்கு இன்றி அலைவதாக) இருக்க முடியும்

என்று நான் வியப்படைந்து கொண்டிருந்தேன். இப்போது இதே தந்திரத்தை அவருக்கு (N1- க்கு) நீ திருப்பிச் செய். இவ்விஷயத்தில் உன் ஞாபக சக்தியை நான் பாராட்டியாக வேண்டும்."

"M1- ஐ ஏதாவது ஒரு இடத்தில் நியமித்துவிடு. இதனால் அவர் வேலை செய்வதற்கான களத்தை அங்கே அவர் காணமுடியும். உணவில் மிளகாய்கள் உட்கொள்வதை அவர் குறைத்துக்கொள்ள வேண்டும். காய்கறிகளில் மூளைக்கு நன்மையளிக்கக் கூடிய பல உட்பொருள்கள் உள்ளன. அவர் இறைச்சி உண்பதையும் விட்டுவிட வேண்டும். அதற்கு உனக்கு மட்டுமே அனுமதியளிக்க முடியும். இறைச்சி உண்பது அவருடைய மூளையில் வெப்பத்தை (உஷ்ணத்தை) உண்டாக்குகிறது. அது அவருக்குக் கெடுதல். உனக்கு வெப்பம் குறைவாக உள்ளது. எனவே, அது உனக்குப் பயன் தரும். அவருக்கு சுற்றித்திரிதலும், நிறைய நடப்பதும் தேவையில்லை. அதாவது, இரையைத் தேடிப் போவதைச் (வேட்டையாடுவதைச்) சொல்கிறேன். அவருடைய (எந்த ஒரு) ஆன்மீகப்புள்ளியையும் திடீரென்று (ஒரே முயற்சியில்) திறக்கச் செய்வது (செயல்படுவதற்காகத் தூண்டுவது) கூடாது. S1 உன் மீது நம்பிக்கையை வளர்த்துக்கொண்டிருந்தால், அவரும் கூட ஏதோ ஒரு உயர்நிலை பெற்றிருப்பார். C1 பற்றி நீ பொறுத்திருந்து பார். நீ கிராமத்தில் தங்கியிருந்து சிறிது காலம் வேட்டையாடுவதில் ஈடுபட்டால் உன் உடல் நலம் முன்னேற்றம் அடையும். இதில் மேலும் ஒரு விஷயம் இருக்கிறது. அதாவது இரையாகக் கூடிய ஒரு பிராணியின் மீது நீ மனத்தை ஒருமுகப்படுத்தும்போது அந்தப் பிராணி ஆன்மீக நன்மையைப் பெறும். அதன் விளைவு (அது உயர் நீங்கிப் போகும்போது) அதனுடன் கூடவே போகும். ராவணனுக்கு ராமன் இதைத்தான் செய்தார். எனவே, வேட்டையாடுவதில் குறைபாடு (தவறு) இல்லை."

"R2 - ஐப் பற்றி நீ மிகவும் திருப்தி அடைந்திருந்தாய்; எனவே, உன் சிபாரிசை நான் ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. N1 உனக்கு மிகப் பெரிய தீமையைச் செய்தார். R2 – ஐயும் அவர் (N1) முழுமையாகக் கெடுத்துவிட்டார். அவர் கூடாஒழுக்கத்தையும் (சோரம் போவதையும்) ஆரம்பித்துவிடலாம் என்று அஞ்சுகிறேன். அவர் (R2) பல சந்தர்ப்பங்களைத் தவற விட்டுவிட்டார். அவருடைய இப்போதைய நிலைமை இன்னும் சிறிது காலம் தொடருமானால், அவரை நம்மைவிட்டுப் போய்விட்டார் என்றே தள்ளிவிடலாம். உனக்குப் பல நண்பர்கள் கிடைப்பார்கள். பொறுமையாக இரு. இப்போது R2 – வின் வீட்டுக்கு மக்கள் போவதைத் தடுத்துவிடு. உன்னிடத்தில் வெப்பத்தை (கூர்ந்த தன்மையை) உண்டாக்க நான் விரும்பவில்லை, ஏனெனில் திடீரென்று நீ பேரழிவை உண்டாக்கிவிடக்கூடும்."

**24.07.1944**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

"கடவுளுடைய எந்த ஒரு காரியமும் ஒரு நோக்கம் அற்றதாக இல்லை. அதைப்பற்றி இதயத்தில் வெறுப்படைவதில் பயனில்லை. எனக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள வேலை சம்பந்தமாக கவலை என்ன? தன்னையே எனக்கு சரணாகதியாக அளித்துவிட்ட ஒரு மனிதருக்கு எதைப் பற்றியும் பரபரப்பு எதற்கு? பௌதீக உடம்பின் ஜீவிதம் இருக்கும்வரை உலகியல் தன்மையின் (லௌகீகத்தின்) எழுச்சி நீடிக்கிறது."

## சிறிது காலமாக C1 – இடமிருந்து எந்தக் கடிதமும் வரவில்லை என்பது பற்றிய கேள்விக்கு மாஸ்டரின் பதில்:

"இதன் காரணமாக மனம் தளர வேண்டாம். இது ஒரு சோதனைக் காலம். எனக்கு நண்பர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று நான்

பார்க்க வேண்டும். D1 காணாமற்போய்விட்டார் (அல்லது அவரை நாம் இழந்து விட்டோம்) என்று கருது. அவர் எப்போதாவது விழித்து எழுந்தால், அப்போது பார்க்கலாம்."

## M1 – இன் பணிவான கருத்து:

"ராம் சந்த்தரின் சக்திகள் வெளிப்புறம் தோன்றுவதேயில்லை."

## வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

"இந்த விஷயத்தில் அவர் என்னை உதாரணமாகக் கொண்டு எளிமையைக் கடைபிடிக்கிறார். அவருடைய எண்ணம் லௌகீகத்தில் (உலகியல் விஷயங்களில்) நாட்டம்கொள்ளவில்லை. அதற்கும் முன்பாக அவரிடமிருந்து கோபத்தையும் நான் ஏற்கெனவே நீக்கிவிட்டேன். அதிகாரத்தை (பதவியை) யாருக்குக் கொடுத்தாலும் சரி, முதலில் அவருடைய கோபம் நீக்கப்பட வேண்டும். ஒரு துர்வாச மகரிஷியை உருவாக்குவது என் நோக்கமல்ல. (பழங்காலத்தில் வாழ்ந்த மிகவும் எளிதில் பெரும் கோபம் கொண்டுவிடும் குணமுடைய ஒரு முனிவர் அவர்.)

## M1– இன் கேள்வி:

"ஏன், என் கோபம் நீக்கப்படவில்லை?"

## வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

"அது அவருடைய கற்பனை (அல்லது) விருப்பம்."

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:

"K5 – இன் ரகசியங்களை எந்த இடத்திலும் வெளிப்படுத்த வேண்டாம் என்று M1– இடம் சொல்லவும். உலகியல் விஷயங்களில் நான் துணிவுடன் இருந்து, கடவுளையே ஆதாரமாகக் கருதி, எல்லாவற்றையும் அவரிடம் விட்டு விட்டேன். தாமதமின்றி வேலையினை

செய்து முடிக்க இந்த வழிமுறை மூலமாக இயன்றது. இன்னொரு வழிமுறை மூடர்கள் அறியாதது ஆகும். (வேலை பற்றிய விவேகம் ஆகிய) இந்தத் தரமான தன்மை அனைவரிடமும் உருவாக்கப்படுவதில்லை.”

“துணிவை (தைரியம்) பற்றி மக்கள் முற்றிலும் தவறான கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள். மனம் தூண்டிவிடப்படுவதை (உசுப்பி விடப்படுவதை) தைரியம் என்று மக்கள் கருதுகிறார்கள்; சொல்கிறார்கள். தன்னிடத்தில் மனச் சோர்வை ஒருவன் உணரத்துவங்கும் அளவுக்கு அவனது மனம் புறக்கணிக்கப்பட்டால், அப்போது இந்தப் பிரார்த்தனை அல்லது தைரியம் ஒரு கட்டளை அல்லது உத்தரவின் செயல்பாட்டைப் பெறுகிறது. யாரோ ஒருவரின் கைகளில் அகப்பட்டு ஒருவர் மிகப்பெரும் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும்போது அதற்குப் பழிதீர்ப்பதற்கு தைரியமோ, மனோபலமோ இல்லாமல், பரிதாபமாகவும், ஒன்றும் செய்ய முடியாமலும் அவர் அமைதியாக உட்கார்ந்திருப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். அம்மாதிரி மனம் தளர்ந்துபோன நிலைமையில், எதுவும் செய்ய இயலாதிருக்கும் அந்த மனிதரின் மனதில் எந்த எண்ணம் உறுதியாக எழுந்தாலும் அது திடமான சத்தியமாக (உறுதியான உண்மையாக) வடிவம் எடுத்தாக வேண்டும். (சாதாரணக் கருத்தின்படி) தைரியம் என்பதில் பதவி மற்றும் செல்வ வசதி நிலையின் சமநிலையின் சாயல் இருக்கிறது. இது அவருக்கு (குருவுக்கு அல்லது கடவுளுக்கு) சேவை செய்வது மற்றும் அவருக்கே சொந்தமானவனாக இருப்பதாகிய பணிவு மற்றும் தன்னடக்கத்துக்கு எதிரானது. ஒரு விஷயம்பற்றி மனத்தில் கிளர்ச்சி ஏற்பட்டவுடன், அதில் சுயமுக்கியத்துவம் தன்மையும் ஈடுபடுத்திக்கொள்கிறது. ஆனால், எந்த ஒருவருக்கும் தீங்கு அல்லது துன்பம் உண்டாக்குவதில் ஒருபோதும் நாட்டம்கொள்ளக்கூடாது. பொது மக்களுக்கு நான் மேலும் ஒரு செயல்முறையைக் கொடுக்கிறேன். எந்த ஒன்றிலும் மனதை

ஈடுபடுத்துவதை அவர்கள் தவிர்க்க வேண்டும். அவர்களுக்கு இதுவே துணிவாகும். அதாவது (ஆம் என்று) உறுதிப்படுத்துதல் அல்லது மறுத்தல் என்ற கருத்தை அவர்கள் கைவிட வேண்டும் என்று சொல்கிறேன். இந்த விஷயம் எல்லோரும் புரிந்துகொள்வதற்காக அல்ல. யாரும் அதை விரும்பவும் மாட்டார்கள்; இது பொதுவாகச் சொல்ல வேண்டியதாகும். வெவ்வேறு நோக்கங்களுக்காக வெவ்வேறு வழிமுறைகள் உள்ளன. உடல் சார்ந்த ஆசைகளைக் கணக்கிட்டுக் கட்டுப்படுத்தும் வழிமுறை (Muhasiba – i – Nafsa) என் பயிற்சியிலிருந்து வருகிறது. எங்கிருந்து எண்ணங்கள் மேலே எழுகிறதோ, அது தனக்குள் ஐக்கியமடைய வேண்டும். தனக்குள் என்றால் தன் ஆன்மாவுக்குள் என்று பொருள். எப்பொழுதெல்லாம் எண்ணங்கள் மேலே எழுகின்றனவோ அப்போதெல்லாம் அவற்றின் அடிப்படை தன் ஆன்மாவுக்குள் ஐக்கியமடைய வேண்டும். இதன் பலன் மக்கள் பிரமித்துப்போகச் செய்யும் அளவுக்கு நுட்பமானதாக இருக்கும். பொதுவாக, இந்த வழிமுறை ஒருவர் தன்னையே மாஸ்டராகக் கருதி அதில் (அந்த சுயத்தில்) ஐக்கியமடைந்துவிடுவதாகும். மாஸ்டரின் மீது முழு நம்பிக்கை (பற்றுறுதி) இல்லாத ஒருவர் இந்த வழிமுறையிலிருந்து நன்மை பெற முடியாது.”

### என் பணிவான கருத்து:

“புலன் சார்ந்த ஆசைகளைக் கணக்கிட்டுக் கட்டுப்படுத்தும் வழிமுறையில், இதயத்தின் இடது பக்கத்தில் ஒரு எரியும் உலை (உலை எரிந்து கொண்டிருப்பதாக) இருப்பதாக பாவனை செய்துகொள்ளுதல் அல்லது கற்பனை செய்துகொள்ளுதல் அடங்கியுள்ளது என்றும், எந்த எண்ணங்கள் தோன்றினாலும் சரி அவ்வப்போது அவற்றை அந்த உலையில் எரிந்து கொண்டே இருக்கவேண்டும் என்றும் N1 ஒருவருக்குச் சொன்னார்.”

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது

"N1 அதைப்பற்றி தானே உருவாக்கிய கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். இங்கே சொல்லப்படும் கோட்பாடு குளியல் தொட்டியில் குளிப்பதுடன் ஒப்பிடக்கூடியதாகும். அதிலும் உடலின் வெப்பம் வெளியேறுகிறது. இங்கேயும் கூட வெப்பம் குறைக்கப்படுகிறது. சுத்திகரிப்பு செய்வதும், குளிப்பதும் எல்லாம் அந்தப் பலனை அடைவதற்காகவே அமைந்தவை. நான் உன்னை இதுவரையில் அந்த நிலைக்குக் கொண்டு செல்லவில்லை. ஏனென்றால், உன்னிடமிருந்து நான் வேலை பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. உன்னுடைய இயல்பு இயற்கையான தன்மை – தூங்கும் நிலையை அடைந்திருக்கின்றது. ஆகையால் செயலற்ற நிலை அல்லது மந்த நிலை என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறேன். கடவுள் உனக்கு என்ன அளித்திருக்கிறாரோ அதையெல்லாம் நீ தொடர்ந்து அமைதியாக்கிக் கொண்டே (செயல்படாதபடி மறைத்துக் கொண்டே) போகிறாய். இப்போது அடையப் பட்டுள்ள அந்த நிலையை விட அதிகமான எதையும் அனுமதிக்க நான் விரும்பவில்லை. இதன் காரணமாகவே நான் அவசரப்பட வேண்டியிருக்கிறது. இல்லையென்றால் இன்னும் அதிக நேரம் எடுத்துக்கொண்டிருப்பேன். அதைப்பற்றி உணராமலே இந்தப் பயிற்சியை பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்ந்து செய்திருக்கிறாய். அனைத்து சக்திக் கூறுகளும் ஒளி பெறுவது நிச்சயமாக இதன் பலனாகியிருக்கிறது. ஆனால், இந்த உள்நிலை (ஆன்மீகத் தன்மை) இனிமேலும் சிறிது வளர்ச்சி பெறுவதும் கூட, எனது மொத்த நோக்கத்திற்கும் அழிவை ஏற்படுத்திவிடும்."

### கேள்வி:

"எந்த நோக்கத்திற்கு அழிவு ஏற்படும்?"

## வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

“கடவுள் எந்த வேலையும் செய்வதில்லை. உன்னுடைய சக்திக் கூறுகளை நீ இன்னும் அதிகமாக அமைதிப்படுத்திவிட்டால், கடவுளின் அதே செயலற்ற நிலை உன்னிடத்தில் விளங்கும். உன்னுடைய மரணம் என்பது ஏற்கெனவே நிகழ்ந்து விட்டது என்றாலும். பௌதீக உலகில், உனது பௌதீகத் தோற்றம் கொண்ட உடம்புதான் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்றாலும் நீ உடலை நீத்த பிறகே இந்த நிலை உனக்கு வரவேண்டும் (அதாவது செயலற்ற கடவுளின் நிலை) என்று நான் விரும்புகிறேன். இதற்கு இணையான உதாரணம் ஏதும் இல்லை. இந்த நிலையை எந்த ஒருவரிடத்திலும் நீ தூண்டிவிடக்கூடாது என்பதை நினைவில் வைத்துக்கொள். இது ஒரு மனிதனுக்குரிய உள்நிலையல்ல. இம்மாதிரி ஒருநிலை பதவிக்கு வரும் அடுத்த வாரிசுகளுக்கும், பிரதிநிதிகளுக்கும்கூட அறிமுகப்படுத்தப்படுவதில்லை. இந்த நிலை தானே அதற்கு உதாரணமாக இருக்கிறது. ஆனால், அது எனக்கு பயன்படாது. இந்த நிலையை தன்னிடத்தில் தானே வளர்த்துக்கொண்டதாக யாராவது சொல்லிக்கொள்ள முடியுமா? நீ ஒருவனே அதற்கு உதாரணமாக இருக்கிறாய். அது தங்க நீரால் (தங்க எழுத்துக்களால்) எழுதப்படத் தகுந்தது. உனக்குப் பிறகு அதைப் புரிந்துகொள்கிறவர்கள், பிரமித்துப் போவார்கள். **“ஆயுதங்களைக் கொண்டு கட்டாயப்படுத்துவதால் இந்தப் பரிசுத்தமான குணாதிசயத்தை அடைய இயலாது”** (பாரசீகச் செய்யுள் ஒன்றின் பாதி) என்பதை நான் மீண்டும் சொல்கிறேன். இந்த உள்நிலை வளர்ச்சி பெற்றால் (அது என் மனக்காட்சியில் வந்தது) அதனைப் பின் தொடர்ந்து இந்த நிலை வரும் என்பதை மீண்டும் எழுதிவைத்துக்கொள். போலியாக இதைப் பின்பற்றுவதும் கூட இந்தப் பழுத்த தன்மையை உண்டாக்கியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அந்தப் போலித் தன்மையைக் கடந்து முன்னே சென்று அதை மிக உண்மையானதாக நீ உருவாக்கிக்

கொண்டாய். நானும் அந்த நிலையில் தங்கியிருந்தேன் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், உன்னிடத்தில் வளர்ச்சியடைந்திருந்த ஒரு விஷயம், என்னிடத்தில் இருக்கவில்லை. தேவைப்பட்ட அளவுக்கு நான் அந்த நிலையில் இருப்பது உண்டு; நீ அதைக்கடந்து சென்றிருக்கிறாய். அதைப் புரிந்து கொள்வதற்கு அதற்கு ஏற்ற புத்திக் கூர்மைதான் தேவைப்படுகிறது. கடவுள் மட்டுமே இந்நிலையை அறியமுடியும் என்று நான் நினைக்கிறேன். இதற்கு மேல் எதுவும் சொல்ல நான் விரும்பவில்லை. நான் உனக்கு அளித்திருக்கின்ற இந்த நிலைக்கான சூழ்நிலையை நீயாகவே ஏற்கெனவே உருவாக்கி நிலை நிறுத்திக் கொண்டிருக்கிறாய். பல வருடங்களில்கூட அடைவது மிகச் சிரமமாக இருக்கின்ற இந்த மூன்றே மாதங்களில் நீ அடைந்துள்ள இந்த முன்னேற்றத்துக்கு அதுவே காரணமாகும். உன்னுடைய முன்னேற்றத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது நீதான் என்பதை இப்போது உனக்கு மட்டும் நான் சொல்ல வேண்டியிருக்கிறது. அங்கேயும் கூட நீ ஓய்வாக இருக்க வில்லை. ஒவ்வொரு விநாடியும் உனது காலடிகள் மேலும் மேலும் முன்னோக்கிப் போய்க்கொண்டு இருக்கின்றன. ஆனால், அந்தோ அதைப் புரிந்துகொள்ளக் கூடியவர் யாருமில்லை. யார் அதைப் புரிந்து கொள்வார்களோ அவர்களுக்கு ஒரு பொன் மொழிக்கான கருத்தாக உன்னைப்பற்றிய உதாரணம் இருக்கும். இப்போது என்னுடைய நல்லாசிகள்; மற்றும் (தற்காலிகமாக) இப்போது விடைபெற்றுச் செல்கிறேன்."

## 25.07.1944

### வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

"நேற்று உனது உள்நிலை பற்றி நான் உன்னிடம் சொன்னேன். ஒரு குறிப்பிட்ட பயிற்சியைச் செய்வதிலிருந்து உன்னைத் தடை செய்திருந்தேன். இவ்வுலகில் உனது பௌதீக வாழ்க்கையின் கடைசி வருடத்தில் அதை நீ செய்யலாம். உன் முடிவுக்கு சற்று முன்பு

தந்தையிடமிருந்து உனக்கு வந்த பாதிப்புகள் உன்னிடமிருந்து நீக்கப்பட வேண்டும். இந்த நிலை எந்த ஒருவருடைய எண்ணத்திற்கும் புரிந்து கொள்ளும் திறனுக்கும் அப்பாற்பட்டதாகும்.'' (அது பற்றிய ஒரு மதிப்பீடு எனக்குக் கிடைக்குமாறு செய்யப்பட்டது).

"மாஸ்டரின் உருவத்தை தியானம் செய்வது பற்றி நேற்று M1 - என்ன சொன்னாரோ அது அனைவருக்கும் பயன்தருவதாக இருக்கும். அந்தப் பயிற்சி சம்பந்தமாக உன்னுடைய வழிமுறைதான் நிலையானது."

"ஒரு குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்த மனிதர்களின் அழிவுக்கான அறிகுறிகள் உருவாகியுள்ளன. அவர்களைக் கீழ் நோக்கிக் கொண்டு செல்கின்ற அந்த மாதிரி மனப்பான்மைகளை அவர்கள் உருவாக்கிக் கொண்டு விட்டார்கள். இன்னொரு குறிப்பிட்ட குழு இவர்களை விட எவ்வளவோ பரவாயில்லை. உன்னுடைய மூன்றாவது அல்லது நான்காவது தலைமுறைக்கு இந்த வேலை அளிக்கப்படும்; ஆனால், அவர் தனது ஆயுட்காலத்தில் அதைச் செய்து முடிக்க இயலாது. அதற்குப் பிறகு ஒரு விசேஷ மகாபுருஷர் தோன்றி இதைச் செய்து முடிப்பார். லௌகீகச் சார்பு (உலகியல் நாட்டம்) அதிகமாகும்."

"உனது பரம்பரையில் ஒருபோதும் ஒரு மகான் தோன்றியதில்லை. நீ அதற்கான வழியைத் திறந்திருக்கிறாய். பாறைகளிலிருந்து மாணிக்கக்கல்லைப் பிரித்து எடுக்கின்ற இயற்கையின் விளையாட்டு இது.'' (வருங்காலத்தில் வரப்போகின்ற விசேஷ மகாபுருஷர் மனக்காட்சியில் வந்தார். நீலம் போன்ற நிறமுடையவராக, தாடியும் மீசையும் இல்லாதவராக, ஆரோக்கியமானவராக, லேசான தொந்தி உடையவராக, உயரம் குறைந்தவராக, வறண்ட (மனதில் ஈரமற்ற) சுபாவம் உடையவராக, மரியாதைப் பண்புகள் இல்லாதவராக, முரட்டுத்தனத்தை விரும்புகிறவராக, ரத்தம் சிந்தச் செய்வது தவிர வேறு எதையும் செய்யாதவராக அவர் காணப்பட்டார்.)

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

“இயற்கை இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தபோது, ஆரம்பத்திலிருந்து முடிவுவரையில் எல்லா முன்னேற்பாடுகளையும் அது செய்தது. அதனையடுத்து அல்லது இடையில் இடையூறு ஏற்படுத்தும்படியாக அது எதையும் விடவில்லை. நானும் கிட்டத்தட்ட இப்போது அதே மாதிரி செய்திருக்கிறேன். இந்தப் பயிற்சியின் தலைமுறைச் சங்கிலித் தொடரில் வருங்காலத்தில் ஒரு மனிதரைப்பற்றிய விஷயமாக நிச்சயமாக எனக்குக் கொஞ்சம் நிச்சயமற்ற தன்மையின் பதற்றம் இருக்கிறது. இதன் 15 ஆவது அல்லது 16 ஆவது தலைமுறையில் வரப் போகிற ஒருவரின் விஷயத்தில் இப்படிப் பதற்றம் ஏற்படலாம் என்று நீ மதிப்பிடுகிறாய். அந்தச் சமயத்தில் இந்தப் பயிற்சிமுறையை முன்னேறச் செய்வதற்கு மிக விசேஷமான முயற்சிகள் தேவைப்படும். எனது கடைசி பிரதிநிதித்துவம் (அல்லது கடைசி மாஸ்டராக இருப்பவர்) உலகம் அழியும் போது (பிரளயம் ஏற்படும் போது) முடிவடையும். (அது என் மனக்காட்சியில் வந்தது.) எனக்கு ஒரு உடம்பு இல்லையென்பதால், நீ கொடுப்பதுபோல அவ்வளவு நன்மையை நான் கொடுக்க இயலாது, ஆயினும், முன்னற்றத்தின் உயர்ந்த நிலையை அடைந்த பிறகு, நேரடியாக என்னிடமிருந்தே நன்மையைப் பெறமுடியும் என்பதில் சந்தேகமில்லை.”

**26.07.1944**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

“முன்னேற்றத்தின் உயர்ந்த நிலை என்று, உன்னால் ஏற்படுத்தப்பட்டுள்ள முன்னேற்றத்தையே உதாரணமாகச் சொல்கிறேன். தனது முன்னேற்றத்தின் மூலமாக என்னிடம் ஐக்கியமடைகின்ற நிலைக்கு ஒருவர் வராமலிருக்கும் வரையில், (என்னிடமிருந்து) நன்மையைப் பெறலாம் என்று எதிர்ப்பார்க்க முடியாது. ஓரளவுக்கு நான் நன்மையளிப்பது என் இரக்கத்தினால்தான்; அந்த சாதகரின்

தகுதிச் சிறப்பினால் அல்ல. அங்கேதான் எதுவும் செய்ய இயலாத நிலை தோன்றுகிறதேயன்றி இங்கே அல்ல. இது எல்லோருக்கும் சொல்லவேண்டிய விஷயம் இல்லை. இது ஏமாற்றத்தை அடைந்து கொண்டிருக்கின்ற, பெரியமனிதர்கள் என்று சொல்லப்படுகிற மனிதர்களுக்குத் தெரியவேண்டியது. கவனத்துடன் இருப்பதால், என்னிடமிருந்து நேரடியான வழிகாட்டுதல் எங்கிருந்து கிடைக்கத்துவங்குகிறதோ அதை ஒருவர் சென்றடைவார். நான் அனைத்து இடங்களுக்கும் பயணம் செய்து கொண்டிருக்கிறேன். தங்கள் தகுதிக்கு ஏற்றபடி ஒவ்வொருவரும் பயனை அடைகிறார்கள். தகுதியுடைய ஒருவர் என்றால் அவர் எளிமையானவராகவும், நல்ல நடத்தை உள்ளவராகவும் இருக்க வேண்டும். ஆனால், இதுவே மிகமேன்மையான தரமுடையதாகிய நமது ஆன்மீகப் பயிற்சியைப் (பிரம்ம வித்யா) பெறுவதற்கு அவரைத் தகுதியுடையவராகச் செய்வதில்லை. உண்மையாகவே தகுதியுடைய ஒரு மனிதர் வாஸா - அத் (WASA - AT / விரிவாக்கம்) என்று நீ சரியாகத் தெரிவித்திருக்கின்ற ஒரு உள்ளார்ந்த தன்மையைப் பெற்றவராக இருக்கிறார். ஒவ்வொருவரும் வாஸா - அத் (விரிவடைந்த தன்மை) என்பதில் பல்வறே தரங்களில் தனது சொந்தத் திறனை – தகுதியை உடையவராக இருக்கிறார். உயர்தரமான வாஸா - அத் பற்றி உனக்கு நான் விவரித்திருக்கிறேன். அந்த குணம் (மனம் விரிவடைந்த – அல்லது விசாலமான மனம் உடைய குணம்) எந்த அளவுக்கு குறைவாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு ஆன்மீகப் பயிற்சியினால் பெறும் நன்மையும் குறைவாக இருக்கும். வாஸா - அத் என்ற இந்த (விசாலமான மனம் உடைய) குணம், முற்றிலும் இல்லாமலே போய்விடாமல் சிறிதளவாவது இருந்தால் அது எவ்வளவுதான் குறைவு என்றாலும் கொஞ்சமாவது நன்மை அங்கு இருந்தாக வேண்டும். இது என் அனுபவமாகும். நான் முக்கியமான விஷயங்களை உனக்குச் சொல்லியிருக்கிறேன். நிலைமைகள் மற்றும்

சந்தர்ப்பங்களின் தேவைக்கு ஏற்ப மற்றும் தேவை ஏற்படும்போது மேலும் பலவிஷயங்களையும் சொல்லிக் கொண்டிருப்பேன். நீயும் உன் சிந்தனையில் ஏதாவது தோன்றும்போது மற்றும் அது பற்றி என்னிடம் விளக்கம் கேட்க வேண்டிய தேவையை உணரும் போது என்னிடம் கேட்கலாம். அதற்குப் பொருத்தமான (சரியான) முயற்சி செய்தால் பதிவு அல்லது நிலைத்துவிட்ட மனப்பான்மையை (சம்ஸ்காரத்தை) மாற்றியமைக்க முடியும். ஒரு பழமொழி கூறுவதுபோல 'சந்தனமரக் கட்டையில் கூட நெருப்பை உண்டாக்க முடியும்.' "

**M1– இன் கேள்வி:**

"பதிவுகளை (சம்ஸ்காரங்களை) மாற்றியமைப்பதற்கு வழி என்ன?"

## வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

"மிக உயர்ந்த தரமான செயல்முறை அந்தப் பதிவுகள் என்னுடையவை என்று கருதுவதாகும்: ஆனால், உறுதியான பதிவுகள் அல்லது நிலைத்து விட்ட மனப்பான்மைகள் (சம்ஸ்காரங்கள்) உடைய ஒருவருக்கு அம்மாதிரி எண்ணம் தோன்றுவது அரிது."

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:

"ஒரு கண்சிமிட்டும் நேரத்தில் எந்த ஒரு ஆன்மீக நிலையையும் மலரச் செய்வது மற்றும் வெளிப்படுத்துவது (தெரியப்படுத்துவது) உன் பங்கில் தான் இருக்கிறது (அதாவது அது உன் வேலைதான்). இது வேறு யாரிடத்திலும் வளர்ச்சியடைய முடியாது. இந்த விஷயத்தில் முன்னெச்சரிக்கையை கவனத்தில் கொண்டிருக்க வேண்டிய தேவை இருக்கிறது. ஏதோ ஒரு ஆன்மீக நிலைபற்றிய செயல்முறை விளக்கம் தேவைப்பட்டால், அது ஒரு பரிசோதனை செய்யும் சந்தர்ப்பமாக இருந்தாலும் கூட, அந்த நிலையின் உண்மையான தன்மையில் அதை உனக்குள் மீண்டும் ஒரு முறை இறக்கிக்கொண்டுவர வேண்டும். அதை

உனக்குள் அப்போது நிலைநிறுத்திக்கொள்ள வேண்டியத் தேவை இல்லை."

## ஒரு கேள்விக்கு பதிலாக வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறிய விளக்கம்:

"மற்றவர்கள் அதற்குத் தகுதி உடையவர்களாக இருக்கவில்லை. நீ இயற்கையாகவே அதற்காக தகுதியைப் பெற்றிருந்தாய். அதை நான் வளர்ச்சிபெறச் செய்தேன். கல்வியறிவில்லாத மூடர்களுக்கு இந்த உயர்ந்த நிலைகள் பற்றித்தெரிவிப்பது சரியல்ல."

"கல்வியறிவில்லாத மூடர்கள் என்ற வகையினரில் வேதஞானத்திற்கு அடிமையாக இருப்பவர்களும் (கபீரின் வார்த்தைகளின்படி வேத பசு Veda - Pashus எனப்படுகிறவர்களும்) அடங்குவார்கள். தனது குரு திறமையற்றவராக இருந்தாலும், அதாவது பிரம்மவித்யா எனப்படும் ஆன்மீகக் கல்வியை சரியான முறையில் அளிக்க இயலாதவராக இருந்தாலும், அந்தச் சீடரால் கடவுள் என்றே அவர் கருதப்படும் அளவுக்கு, குருவின் மீது பக்தி கொண்டிருப்பவர் குரு – பசு (Guru - Pashu) என்று சொல்லப்படுகிறார். மனத்திற்கு (மனத்தின் உணர்ச்சிகளுக்கு) அடிமையாக இருப்பவர் த்ரிய – பசு (Triya - Pashu) என்று கூறப்படுகிறார். மேற்கோளாக அல்லது குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய தேவை இல்லாமலே, அம்மாதிரி மனிதர்களுக்கு வெளிப்படையான உதாரணங்கள் சொல்லமுடியும். மனிதனின் சாதாரண நிலைக்கு அடிமையாக இருக்கும் தன்மையில் நரபசு (Nara - Pashu) என்று சொல்லப்படுகிறவர்கள் தங்களிடத்தில் ஸ்தூலமான (கடினத்தன்மை உடைய) விதத்தில் இன்னமும் அகங்காரத்துடன் இருக்கிறார்கள். தங்களுக்கு ஆனந்த மயமாக அமைந்து விடுகின்ற தங்கள் ஆன்மீக உள்நிலையை விட்டுவிட்டு மேலே செல்ல விரும்பாத இன்னொரு விதமான அடிமைப் பிறவிகளும் இருக்கிறார்கள். இம்மாதிரி

அடிமைத்தனம் உடையவர்களின் எண்ணிக்கையும், இது போன்றத் தன்மையைவிடக் கீழான நிலையில் உள்ளவர்கள் எண்ணிக்கையில் பலர் உள்ளனர்.’’

**கேள்வி:**

“இம்மாதிரி அடிமைத்தனத்துக்கு (விலங்கு போன்ற தன்மைக்கு) ஒரு முடிவு உண்டா?”

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:**

“உன்னுடைய இப்போதைய நிலையை அடைந்துவிட்டால் (விலங்கு போன்றத் தன்மை) அடிமைத்தனம் முடிந்துவிடுகிறது. இப்படிச் சொல்வதால் அது உனது பிரதிநிதித்துவமான (அதாவது லாலாஜிக்கு அடுத்து அப்பதவிக்கு உரியவராக; அவரது பிரதிநிதியாக விளங்கும்) தன்மையைக் குறிப்பிடுவதாக அர்த்த மில்லை. அது (இந்தநிலை) நீ எனது பிரதிநிதியாக இருப்பதன் காரணமாக வந்ததும் இல்லை. இவை பிரதிநிதிகளிடத்தில் காணப்படுகிற அறிகுறிகள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அனைவரிடத்திலும் இப்படி இருப்பதில்லை. உன்னுடைய எண்ணங்களில் எந்தவொரு அசுத்தம் மற்றும் குப்பை இருந்தாலும் அதை நீ நீக்கிவிட்டாய். இப்போது தூய்மைநிலை மட்டும் எஞ்சியிருக்கிறது. அசுத்தம் மற்றும் குப்பை என்று எண்ணத்தில் கனமான தன்மையை உண்டாக்குவது எதுவாயினும் அதைத்தான் சொல்கிறேன். இப்போது அவை வேரறுக்கப்பட்டு விலங்கு போன்ற தன்மை அகற்றப்பட்டு, கலப்பில்லாத தூய்மை நிலையை விட்டுச்சென்றுள்ளன. இதைக் கொண்டு மற்றவர்களை எடைப்போட உன்னால் முடிவதற்காக இந்த உதாரணத்தைச் சொல்லியிருக்கிறேன். பிரதிநிதிகளாக பதவிக்கு அடுத்து வருகிறவர்களாக இல்லாத மற்றவர்களிடமும் கூட இந்த உள்நிலை வளர்ச்சியடைகின்றது. M1–அதற்கு ஒரு உதாரணமாக இருக்கிறார். அவரது உள்ளார்ந்தத் தன்மை

அந்தமாதிரி இருக்கிறது; ஆனால், வெளிப்புறத்தில் (இருக்க வேண்டிய தன்மை பற்றி) அக்கறை செலுத்தப்படவில்லை."

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

"ஆண்டு விழா (பண்டாரா) என்பது ஒன்று மட்டுமே விழாவாக நீடிக்கிறது. உன்னுடைய நோக்கம் அங்கே நிறைவேறிவிட்டால் இங்கே ஆண்டு விழா நடத்த வேண்டிய அவசியம் ஏற்படாது. அப்படி நேர்ந்தால் நீ உலகைவிட்டுச் சென்ற பிறகு இங்கே பண்டாரா தொடங்கும். K...யில் இருக்கின்றவர்கள் ஃபடேகரிலிருந்து பண்டாரா நடப்பதை மாற்றிவிட வேண்டும் என்று மிகவும் முயற்சி செய்தார்கள். ஆனால், அது என் விருப்பத்துக்கு எதிரானதாக இருந்ததால் அவர்கள் வெற்றியடைய முடியவில்லை. N1 உயிர்நீத்த பிறகு அவரது நினைவாக பண்டாராவை நடத்துவதற்கு மக்கள் ஆரம்பித்தால் அங்கே இருண்ட தன்மைதான் பொழியும். அவருடைய மிகச் சிறந்த அறிவாற்றலை நீ ஏற்கெனவே நீக்கிவிட்டாய். அவருடன் (N1- உடன்) தொடர்பு உடையவர் யாரும் முன்னேற்றம் அடையமாட்டார்கள். அவர்களுடைய சொந்த எண்ணத்தின் வெப்பம், அவர்களின் விருப்பத்துக்கு ஏற்றவாறு, அது என்னவாயினும் சரி, அவர்களுக்கு முழு நம்பிக்கைகளைக் (உறுதிமிக்க நம்பிக்கைகளைக்) கொண்டுவரலாம்."

"G2 - ன் போதை மயக்கம் தீர்ந்திருக்கிறது. இப்போது அவருடைய நோக்கம் வீணாகிப் போவதால் அவர் M1- ஐ நாடியிருப்பதற்கு விருப்புகிறார். இம்மாதிரி மனிதர்களை வௌவால்களுக்கு உதாரணமாகச் சொல்லலாம். (அல்லது இம்மாதிரி மனிதர்களுக்கு வௌவால்களை உதாரணமாகச் சொல்லலாம்). அவருக்கு யாரையாவது பிடித்துக்கொண்டு தொங்குவதைத்தவிர எதுவும் தெரியாது என்பதால் இது சரியான உதாரணம்தான். இருள் ஆரம்பமாகும் போதுதான் அவர் தன் உணர்வு நிலைக்கு வருகிறார். அவரைக் கவனிக்க வேண்டாம்

என்று M1- இடம் சொல்லவும். அவர் நல்லவர் அல்ல. யாரிடமும் அவருக்கு நம்பிக்கை கிடையாது. சுயநலமான காரணங்களுக்காக அவர் N1- ஐயும் சந்திக்கிறார். ஆனால், தன்னைச் சுற்றி ஒரு காட்டுத்தனமான கூட்டத்தைச் சேர்த்துக்கொள்கின்ற அவருடைய ஆவலின் காரணமாக N1- க்கு ஆராய்ந்து அறியும் தன்மை இல்லாமற் போயிருக்கிறது. இம்மாதிரி மனிதர்களுக்கு, அவர்கள் தங்கள் செயலுக்கு வருந்தி, இனி அப்படிச் செய்வதில்லை என்று உறுதியளித்து, N1 - இன் இதயத்திலிருந்து தங்கள் இணைப்பை அறுத்துக்கொண்டாலன்றி, உன் வட்டத்தில் அவர்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதை நினைவில் வைத்துக்கொள். (உன்னைத் தவிர) வேறுயாருக்கும் மேலேயிருந்து இணைப்பு இல்லை. ‘மாஸ்டரே தரம் குறைந்தவராக இருக்கும் போது, யாருக்கு அவர் நன்மையளிக்க முடியும்.’ அவர்கள் இருண்ட தன்மையால் நிரப்பப்படத் துவங்கியிருக்கிறார்கள். E....என்ற இடத்திற்குப் போகும் எண்ணத்தை M1 விட்டுவிட வேண்டும். B...என்ற இடத்துக்குப் போவதால் தவறு இல்லை.”

“இதுவரையில் C1 பற்றி நான் கூறியவை அனைத்தையும் திரும்பி எடுத்துக்கொள்கிறேன். இப்போது அவருக்கு எதுவும் எழுதவேண்டிய அவசியம் இல்லை. இப்போது உன் தனியான சங்கத்தை உருவாக்க வேண்டிய தேவை இருக்கிறது. மற்றவர்கள் அனைவரும் என் கவலைகளை அதிகரிப்பதில்தான் உதவியாக இருக்கிறார்கள். உன்னைத்தவிர வேறு யாருக்கும் என் சுமையைப் பங்கிட்டுக்கொள்ளும் (அல்லது என் சுமையைக் குறைக்க பங்கெடுத்துக்கொள்ளும்) துணிவு இல்லை. C1 இம்மாதிரி ஒரு தன்மையில் நீடித்து இருந்தால், அவரை முழுமையாகக் காலிசெய்ய வேண்டியிருக்கும். எல்லாப் பறவைகளும் பறந்து சென்றுவிடும். அவற்றின் உயிர்வாழ்க்கையே அபாயத்துக்குள்ளாகும். அது எதுவாயினும், இப்போது நான் எடுக்கும்

முயற்சி மிகக்கடுமையானதாக இருக்கும். விஷயங்கள் நாளுக்கு நாள் மாற்றத்துக்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றன. அவை என்னையும் கூட பிரச்சனைக்கு ஆளாக்கியிருக்கின்றன. எனக்குள் எரிச்சல் வளர்ந்து கொண்டிருக்கிறது. நான் இப்போது எனது அழிவுண்டாக்கும் வடிவத்தை (கால ரூபத்தை / Kala Rupa) ஏற்றுக்கொள்ள வேண்டியதாகியிருக்கிறது. சகிப்புத்தன்மை அதன் கட்டு மீறும் தன்மையை அடைந்திருக்கிறது. இப்போது என்னுடைய இரக்கம் நிறைந்த வடிவம் (தயாளரூபம் / Dayala Rupa) உனக்காகவும், உன்னோடு இணைக்கப்பட்டவர்களுக்காகவும் மட்டுமே இனி இருக்கும்."

"C1 – இன் புரிந்துகொள்ளும் திறன் பரிதாபத்துக்குரியதாக இருக்கிறது. நீ நினைத்திருந்ததுபோல, அவரை சக்தியினால் நிரப்பாமலிருந்தது நல்லதாயிற்று, பூச்சி (அல்லது 'பறக்கும் பூச்சி') என்ற வார்த்தை எனக்கு ஒரு அவமதிப்பாகும். M1 எழுதியது என்னுடைய உத்தரவே ஆகும். M1 தன்னுடைய புரிந்துகொள்ளும் ஞானப்பார்வையை அதை நோக்கித் திருப்பினால், என்னால் சொல்லப்படப்போகின்ற விஷயம் முழுவதையும் அவர் கண்டறியலாம். இந்தக் கடிதத்துக்கு பதில் எதுவும் அனுப்ப வேண்டியத் தேவை இல்லை; C1–அவருடைய விருப்பம் போல என்ன வேண்டுமானாலும் புரிந்துகொள்ளட்டும். M1 – ஐ மட்டும்தான் என் விருப்பமான மனிதராகப் பார்க்கிறேன். மற்றவர்கள் அனைவரும் பெண்களைப்போல மாறிக்கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. என் சமுதாயத்தில் நேர்ந்துள்ள இந்தத் தாழ்ந்துபோன நிலைமை வேறு எந்த இடத்திலும் நடத்திருக்காது. நான் உள்ளுக்குள் கடுமையாக மனம் நொந்திருக்கிறேன். விஷயங்கள் இப்படியே தொடருமானால் முழுவதையும் அழித்துவிடுதற்கு உனக்கு நான் உத்தரவுகள் கொடுத்துவிடுவேன். இந்த விநாடியே தாட்சண்யத்தையும் (பிறருக்கு ஏற்படக்கூடிய சிரமங்களுக்காக வருந்தி தயங்குவதையும்) மென்மைப்

பண்பையும் விட்டுவிட்டேன். நான் என்னுடைய மாஸ்டரை நாடிச் சார்ந்திருக்கப்போகிறேன். இப்போது முதல் அவருடைய கட்டளைகள்தான் நிறைவேற்றப்படும். E... என்ற இடத்தில் உன்னை முட்டாள் என்று அழைத்தார்கள்! பயிற்சியளிப்பதற்கான அனுமதியை அவர்களுக்கு அளிப்பதற்கு முன்பே உன்னை என்னுடைய பிரதிநிதியாக நான் உருவாக்கி அறிவித்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாதது தவறு என்பதை இப்போது நான் உணர்கிறேன். நான் அளித்த அனுமதிகள் அனைத்தையும் நான் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன். M1 – ஒருவர் மட்டுமே இதற்கு விதிவிலக்காக இருக்கிறார். நீ அந்த அனுமதிகளை அவர்களுக்கு மீண்டும் கொடுக்கும்வரை, யாருமே பயிற்சியளிக்க முடியாது. யாராவது பயிற்சியளிப்பதைத் தொடர்ந்து செய்வாராயின், அவர் மற்றவர்களை ஏமாற்றுகிறார் என்று பொருளாகும். அப்படியும் அவர் பிடிவாதமாக அதைச் செய்து கொண்டிருந்தால், அதன் விளைவாக முடிவில் அவர் தண்டனை பெறுவார். என்னால் செய்யப்பட்டுள்ள இந்த ஏற்பாடுகள் அனைத்தும், நீ அதனால் பாடங்களைக் கற்றுக்கொள்வாய், அதே தவறுகளை நீயும் செய்யமாட்டாய் என்பதற்காகத்தான்; இதை நினைவில் வைத்துக்கொள். முதலில் உனது பிரதிநிதியை நிர்ணயித்துக்கொள். அதன் பிறகு பயிற்சியளிப்பதற்கு அனுமதி கொடு. அனுமதி என்பது அவசியம் கொடுத்தாக வேண்டிய ஒருவிஷயமல்ல. என் மாஸ்டருடைய கட்டளைகளை நான் செயல்படுத்த வேண்டி இருந்ததனால், இவ்விஷயத்தில் நான் கொஞ்சம் அவசரப்பட்டேன். என் கட்டளைகளை செயல்படுத்துவது உனக்கான கடமையாகும். இவர்களுக்கு அனுமதியளிக்கலாம் என்று உனக்கு நான் அனுமதி தந்துள்ள அம்மனிதர்களின் விஷயத்தில் அவர்களுக்கு அனுமதியளிப்பதற்கு முன் (மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக) நீ என்னிடம் கேட்க வேண்டும். தகுதியில்லாத சீடர்களைப் பெற்றிருப்பதைவிட சீடர்களே இல்லாதிருப்பது மேலானது. நான்கு

அல்லது ஐந்து பேருக்கு அதிகமாக தீட்சை அளிக்க வேண்டியதில்லை என்று நீ நினைப்பது சரிதான் என்று நான் உணர்கிறேன். உண்மையில் அந்த எண்ணிக்கையை இன்னும் குறைத்தாலும் தவறில்லை. M1- இனால் தீட்சை அளிக்கப்பட்டவர்களில், ஒருவர் தாழ்வு நிலை அடைந்துவிட்டார் என்று தெரிகிறது. எனவே, எண்ணிக்கையை அதிகரிக்கத் தேவையில்லை. உண்மையான தகுதி உடைய ஒருவரைக் கண்டறிந்தால், அவருக்கு தீட்சையை மறுப்பதும் தேவையில்லை. M1- இனால் தீட்சை அளிக்கப்பட்ட R5 - க்கு சீர்திருத்துவதற்கான ஒரே வழி, அவருக்காக M1 - கடவுளிடம் பிரார்த்தனை செய்வதுதான். இப்போது அவரை தானே ஒருபக்கம் ஒதுக்கிவிட்டுவிட M1 - ஆல் முடியாது. ஏனென்றால், அவர் என் கையால் தீட்சை அளிக்கப்பட்டிருக்கிறார். என் உழைப்புக்குப் பலனாக இன்று நான் பார்க்க வேண்டியதாக இருக்கின்ற நிலைதான் எப்படி இருக்கிறது? எத்தனையோ பிரச்சனைகளாகிய சகதிக்குள் உன்னைத் தள்ளிவிட்டு, நான் நலமாகச் சென்றுவிட்டேன்!"

### என் பணிவான வேண்டுகோள்:

"என் பிரபு தனது அனைத்துக் கவலைகளையும் எனக்குக் கொடுத்துவிடுவாராக. என் உயிரையே இழந்தாலும் பரவாயில்லை, நான் அந்த அனைத்தையும் தாங்கிக் கொள்வேன்."

### வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

"என்னுடைய கவலைகளை உன்னுடையதாக நீ எடுத்துக்கொண்டிருப்பதால், நீ என்ன செய்தாலும் சரி, அதை நான் ஏற்றுக்கொள்வேன் என்ற உரிமையை உனக்குத் தருகிறேன். நீ யாருடைய அடித்தளங்களையாவது (அல்லது ஸ்தாபனங்களையாவது) முழுமையாக அழித்துவிட்டாலும்கூட, நான் அதற்கு விளக்கம் எதுவும்

கேட்கமாட்டேன். இப்போது நான் அனைத்தையும் உன்னிடம் விட்டுவிட்டேன்.”

## 27.07.1944

### வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

“இப்போது, அவர்களுக்கு எப்போது நீ அனுமதி அளிப்பாயோ, அப்போதுதான் அவர்களின் வேலை தொடர்ந்து நடக்கும். அவர்களுக்கு அளிக்கப்பட்ட (பயிற்சி தருவதற்கான) அனுமதியை நான் திரும்பப் பெற்றுக்கொண்டுவிட்டேன். அவர்களுடைய இணைப்புக்களை அறுக்க வேண்டாம். M5 ஆன்மீகத்துடன் தொடர்பை இழந்து லௌகீக (உலகியல்) நாட்டம் கொண்டவராக மாறிவிட்டார். S5 அவரைவிட மேலானவர்; ஆனால் மிகவும் கடினத்தன்மை உடையவர். F1 மாஸ்டருடன் இணைந்த எண்ணங்களைக் கொண்டிருக்கிறார்; ஆனால், அவருடைய குணத்தில் சீர்குலைவு இருக்கிறது. H2 கடினத்தன்மை மிகுந்தவர், பயனற்றவர். B7 பண்பில்லாத, எதிலும் சரியான கவனமில்லாத குணமுடையவர். அவரை இனியும் தூண்டவேண்டியத்தேவை இல்லை. அவர் முன்னேற்றமடையாமல் இயக்கமற்ற நிலையில் இருக்கிறார். S3 தன் உத்தியோகத்தின் (பதவியின்) போதையில் மூழ்கியிருக்கின்றார். என் மீது உண்மையான பிரியம் இன்றி வெறுமே தன் கடமையைச் செய்கிறார். அவரும் உயர்தரமான பயிற்சி பெறுவதற்குத் தகுதியானவர் அல்ல. M5 சற்று மேலானவர். அவருக்கு முன்னேற்றமடையும் திறமை உண்டு, அவர் மீது எனக்கு அன்பு இருக்கிறது. ஆயினும், அவர் C1 – இன் வலையில் அகப்பட்டிருக்கிறார். இதன் காரணம் தன் மீது கொண்டுள்ள மதிப்புதான். அவருக்கு தலைமைப் பதவியில் விருப்பம் இருக்கிறது. அவர் உன்மீது நம்பிக்கை வளர்த்துக்கொண்டால் நல்ல முன்னேற்றம் அடையக்கூடிய திறமை உடையவர்களில் ஒருவராக இருப்பார். அவர்

பிரம்மாண்ட (குப்ரா / KUBRA) மண்டலத்தில் அடியெடுத்துவைத்திருக்கிறார். ஆனால், அவருக்கு அதற்கு நல்லபடியாக உதவி கிடைக்கவில்லை. அவருக்கு சுத்திகரிப்புத் தேவைப்படுகிறது. (அது என் மனக்காட்சியில் வந்தது). S6 ஒரு ஏழையைப் போல, பணிவான குணம் உடைய நல்ல மனிதராக இருக்கிறார். எனினும், அவரிடம் ஒருவிதமான கர்வத்தின் அழுத்தம் சிறிது இருக்கிறது. N1- இன் அடிமையாக இருப்பதால் அவரும்கூட உயர்தர முன்னேற்றத்துக்குத் தகுதியுடையவர்களுடன் சேர்க்கப்படவில்லை. S7 கொஞ்சம் பரவாயில்லை. அவரால் இன்னும் முன்னேறிப்போக முடியும். ஒரு மகாபுருஷர் பூமியில் வாழ்வதற்கு வந்திருக்கிறார் என்பதை அவர் நம்பினால், அந்த மகாபுருஷரை நோக்கி அவர் இழுக்கப்படுவார். ஆனால், இதை S6 - இடம் எதிர்பார்க்க முடியாது. அழகின் சாயலைத் தன்னிடம் B8 பெற்றுள்ளார்.

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் மேலும் வெளிப்படுத்திக் கூறியவை:

“என் மாஸ்டரும்கூட (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) இதேபோல எனக்குப் பல விஷயங்களைக் கூறினார். ஆனால், அதில் கொஞ்சம் நான் எழுதிக் கொள்வேன்; மீதியை மறந்துவிடுவேன். ஏனென்றால் அவர் சொல்லிக்கொண்டிருக்கும் விஷயங்களை, நான் சொல்லச் சொல்ல எழுதிவைத்துக்கொள்ள எனக்கு யாரும் இருக்கவில்லை. நீ அப்படி ஒருவரைக் கண்டறிந்திருக்கிறாய். என் மாஸ்டர் ஆன்மீகப் பயிற்சியளிப்பது சம்பந்தமான சில விசேஷமான விஷயங்களைப் பற்றிய குறிப்புக்களை எனக்குக் கொடுத்திருக்கிறார். அவை அனைத்தையும் அவர் எனக்குக் கொடுத்திருப்பதால், அவர் பரம்பொருளுடன் ஐக்கியம் அடைந்த பிறகு, அவருடைய அனுபவமும்கூட உனக்கு அனுப்பப்படுகிறது. இப்போது உன் தகுதித்தரங்களில் நிறைய நிர்ப்பந்தங்கள் இருப்பதால் நீ பக்கம் பக்கமாக எழுதித்தள்ள

வேண்டியிருக்கிறது. அதற்கும் மேலாக, நீ என்னையும் பெருமளவு கவர்ந்திருக்கிறாய்; எனவே, எல்லா விஷயங்களிலும் கவனம் – அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. உலகியல் ரீதியாக நீ அனுபவிக்க வேண்டியிருக்கின்ற இழப்புக்கள் எதுவாக இருந்தாலும், அவையனைத்தும் என்னால்தான் ஏற்படுகின்றன என்று எனக்குத் தோன்றுகிறது. என் மீது கவனம் செலுத்துவதிலிருந்து விடுபட்டு மற்ற விஷயங்களில் ஈடுபட உனக்கு நேரம் இல்லை; இப்போதும் கூட உன் நிலை அப்படியேதான் நீடிக்கிறது. இப்போது நான் உன்னை கவனித்துக்கொண்டு, உனது குடும்ப விஷயங்களையும் பார்த்துக்கொள்வேன். அன்புக்காக அனைத்தையும் செய்யவேண்டும்! வணக்கத்திற்குரிய என் மாஸ்டரும் கூட இது சம்பந்தமாக சில அறிவுரைகளைக் கொடுத்திருக்கிறார். அவருடைய கட்டளையின்படி நான் நடக்க வேண்டும். இந்த உலகில் ஒருபோதும் உனக்குப் பிரச்சனைகள் இருக்காது. பொருள்வளம் உன்னை ஒருபோதும் கைவிடாது. (அதாவது குறையாத பொருள்வளம் உனக்கு இருக்கும்). இது என்னுடைய நல்லாசி. நீ எனக்கு என்ன செய்திருக்கிறாயோ அதற்குப் பதிலாக உனக்கு நான் எதையும் கொடுத்து ஈடு செய்ய முடியாது என்று எனக்கு மனதில் தோன்றியது. அதற்கு ஈடாக நீ என்னிடம் எதையாவது கேட்டிருந்தால், அந்த சுமை எனக்குக் குறைந்திருக்கும். உனக்கு ஆன்மீகப் பயிற்சியளிப்பது மட்டுமே என் பொறுப்பாக இருந்திருக்கும். ஒருவரின் வாழ்நாள் முழுதும் அவரைப் பற்றி நீ கவலைப்படாமல் இருப்பதற்காக உன்னைப்போல எவரையும் உருவாக்க வேண்டாம். மக்கள் அனைவரிடமும் விரும்பித் தேடுகின்ற அந்த அன்பு வேண்டும் என்றுகூட நீ என்னிடம் கேட்டதில்லை. உன்னுடைய வாழ்க்கையில் மற்றும் பயிற்சிக்காலத்தில் உன்னிடம் விளங்கும் இந்த அம்சம், வேறு எங்கும் உதாரணம் காணமுடியாதது. அன்பை விரும்புகிறவர்களில் பெரும்பாலோர் நான் அவர்களை நேசிக்க

வேண்டும் என்றே மறைமுகமாக விரும்புகிறார்கள். நீ ஒரு போதும் இந்த மாதிரி ஆசையை மனதில் வளர்த்துக்கொண்டதில்லை. மாஸ்டரிடம் அவர் தன்னை நேசிக்க வேண்டும் என்று கேட்பது மரியாதைக்குறைவின் உச்சம் என்று எனக்குத் தோன்றுகிறது.”

“இவையனைத்தினுடைய பலனாக நான் என் அனைத்து சக்திகளுடனும் உன்னிடத்தில் ஐக்கியம் அடைந்துவிட்டேன். மிக மிக உயர்ந்த முன்னேற்ற நிலையாகிய ஒரே ஒரு நிலையை மட்டும் நிறுத்தி வைத்திருந்தேன்; இப்போது அதையும் மலர்ச்சிக்குக் கொண்டு வந்திருக்கிறேன். மக்கள் அவர்களால் என்ன முடியுமோ அதைப் புரிந்துகொள்ளட்டும். நான் எழுதியிருக்கும் இந்த விஷயத்தின் மதிப்பு, பின்னர் நன்றாக அளவிடப்பட்டு மதிக்கப்படும்.”

இதையெல்லாம் படிக்கும் மனிதர்கள் நான் (ராம் சந்த்தர்) என்னைப் பற்றிய தற்புகழ்ச்சியில் ஈடபட்டதாக நினைப்பார்களே என்ற எனது பணிவான கருத்துக்கு பதில் கூறும்விதமாக மேலே கடைசியாகச் சொன்ன இரண்டு வாக்கியங்களை மாஸ்டர் கூறினார்.

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:

“இப்போதும்கூட நீ உன்னை நோக்கி என்னை இழுத்துக் கொண்டுதான் இருக்கிறாய். நான் விடுதலை (முக்திநிலை) அடையாமல் இருந்திருந்தால், உன் மீது எனக்கு எவ்வளவு ஏக்கம் ஏற்பட்டிருக்கும் என்பது யாருக்குத் தெரியும்? இந்த ஆழ்ந்து லயித்த நிலையை (தியானப் பயிற்சியில் மூழ்கிய நிலையை) உன்னிடமிருந்து நீக்கிவிட நான் விரும்பவில்லை. ஏனெனில் அப்படிச் செய்வது எனக்கு ஒரு அதிர்ச்சியை அளிக்கும். சில சமயங்களில் நான் பேசுவதன் மூலமாக உன்னை அதை மறக்கச் செய்கிறேன் என்பதில் சந்தேகமில்லை. இப்படி ஒரு உதாரண மனிதனை வருங்காலத்தில் காண்பது சாத்தியமாகுமா? அப்படி முடியும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

எனது இந்த அற்புதமான படைப்புக்காக வணக்கத்திற்குரிய என் மாஸ்டர் என்னை மிகவும் புகழ்ந்திருக்கிறார். உன்னைப்போல இம்மாதிரி ஒரு மகாபுருஷரைக் காண மக்கள் ஏங்கியிருப்பார்கள். உன்னுடைய தகுதியின் அளவுக்கு உன்னை உணர்ந்து பாராட்டுவது சாத்தியமாகாது. உண்மையான விதத்தில் உனது நிலையை நான் ஒருவன் மட்டுமே அறிந்திருக்கிறேன். சில சமயங்களில் உனக்கும் அதுபற்றிய ஒரு குறிப்பைக் கொடுக்கிறேன். உன்னுடைய உயர்நிலைப் பற்றிய ஒரு மதிப்பீட்டை அறிய நீ விரும்பினால், இது இந்த வழியில் இருக்கலாம். அதாவது, மிகப்பெரும் மகான்களும், மகரிஷிகளும், மெய்ஞ்ஞானிகளும், தங்கள் அனுபவத்தின் அடிப்படையில் உன் நிலையைப்பற்றிக் கூறுவது எதுவாயினும், அது உனது உண்மையான நிலையின் மிகக் கீழ்மட்டத்தில் உள்ள நிலையைத்தான் குறிப்பிட முடியும். (அதாவது அதற்கு மேலான நிலைகளை யாராலும் மதிப்பிட்டுக்கூற இயலாது). நீ இந்தப் பிரபஞ்சம் முழுவதற்குமான மிகமேலான தலைமை மாஸ்டராக நீ ஆக்கப்பட்டதற்கு அதுவே காரணம். நடக்க வேண்டியக் காரியம் எதுவாயினும் அது உன் மூலமாக மட்டுமே நடைபெறும். எல்லாவகையிலும் ஒளியானது (தெய்வீக சக்தி அல்லது அருள்) முதன் முதலாக உனக்கு வரும், ஆனால், இதுவே முடிவான நிலையல்ல. உன்னுடைய அன்பினால் உண்டான உடன் விளைவின் ஆரம்பம் இது என்று நான் கருதுகிறேன். இதன் கடைசி நிலை இன்னும் எங்கோ தொலைவில் இருக்கிறது. உன்னுடைய ஆட்சி அதிகாரம் இன்னும் பிற மண்டலங்களுக்கும் விரிவடையும். இந்த அளவுக்கு மட்டுமே நான் சுட்டிக்காட்டுவேன்."

"உலகியல் வேலைகளை நீ சரியான விதத்தில் செய்ய இயலாதவனாக இருக்கிறாய். எனவே, உன்னை விமர்சிக்கும் தூற்றுதல்களைக் கூறும் ஒரு வாய்ப்பு மக்களுக்கு கிடைத்திருக்கிறது. இதன் காரணம் என்னவெனில் லௌகீக காரியங்களைச் செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற அந்தத் திசுக்களை (உயிரணுக் கூறுகளை) நீ

இறக்க செய்துவிட்டதுதான். நான் அவசரமாக வந்து தடுக்காமல் விட்டிருந்தால், அந்தத் திசுக்களைப் போலவே அடிப்படையான சத்தியத்தையும் நீ இழந்திருப்பாய். இப்போது நான் அதற்கு ஒரு தடை ஏற்படுத்தி இருக்கிறேன். இதற்கு மேல் இந்தப் பயிற்சியை நீ செய்வதை நான் விரும்பவில்லை. நீ கேட்டுக்கொண்டதற்கு இணங்கி, நீ உலகைவிட்டு பௌதீக ரீதியில் நீங்கிச் செல்வதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு இப்பயிற்சியைச் செய்ய நான் அனுமதியளித்திருந்தேன். இது உன்னுடைய இதயத்தின் ஏக்கத்திற்கு ஒரு ஓய்வு கொடுப்பதற்காகவே. உண்மையில் அதற்குத் தேவையே இல்லை. என்னுடைய ஆயுட்காலத்திலேயே உன் ஆன்மீக நோக்கம் நிறைவேறிவிட்டது. இந்த உலகிற்கு இனி நீ திரும்பி வரவேண்டியிருக்காது. இன்னும் சொல்வதற்கு என்ன இருக்கிறது! உன்னைப் பாராட்டுகிறவிதத்தில் எனக்குத் தெரிந்தவை அனைத்தையும் வெளியே கொட்டிவிடுவதற்கு என் இதயம் ஏங்குகின்றது. என் இதயம் கொள்ளும் அளவுக்கு அந்த நிலையை நான் உருவாக்கிவைத்திருக்கும்போது, இந்த விஷயம் பற்றிப் பிறகு உனக்குச் சொல்வேன். அதற்கான அடித்தளம் சில நாட்களுக்கு முன்புதான் அமைக்கப்பட்டது."

"சிறிது காலத்தற்கு முன்பு உன் மனதில் ஏற்பட்டிருந்த வெறுப்பு உணர்வு காரணமின்றி வந்தது அல்ல. இப்பொழுது N1– இன் நிலைமை சுருண்டுபடுத்திருக்கும் ஒரு பாம்பைப் போலிருக்கிறது. இப்போது அவர் உனக்கு ஒரு தீமையும் செய்ய முடியாது; முன்பும் அவரால் ஒன்றும் செய்ய முடிந்தது இல்லை. எந்த ஒருவருக்கும் கெடுதல் செய்யும் சக்தியை அவர் இழந்துவிட்டார். இது M1– இன் எண்ணங்களுக்கு விடையாகக் கூறப்படுகிறது. அறிவுறுத்தும் குறிப்புகள் M1– க்கு வந்து கொண்டிருந்தன. ஆனால், இதுவரையில் அவர் அதைப் புரிந்துகொள்ளவில்லை. எண்ணங்கள் அடங்கி மனம் நிலையாக நிற்கும் நிலையை அடையும்போது, (தெய்வீகக்குறிப்புகளை,

அறிவுரைகளை) புரிந்துகொள்ளும் திறன் ஆரம்பமாகும். இந்த மருந்து (அதற்கான மருத்துவக்குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது). அவருக்கு (M1 – க்கு) நிச்சயமாக நன்மை செய்யும். நானே எல்லோருக்கும் விஷயங்களைச் சொல்லிக்கொண்டே இருக்கிறேன் என்றால் உன்னுடைய நிலைமையும், வயதில் மூத்ததன்மையும் மற்றவர்களின் மீது எவ்வளவு நிலைபெற்றிருக்கும்! மாஸ்டர் என்கிற ஒரு கருவி ஒன்றாக மட்டுமே இருக்க வேண்டும். மிகக் கீழான நிலைக்கு இறங்கிச் செல்கின்ற உன் பழக்கத்தை நீ வளர்த்துக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் பொதுவாக உன்னைப்போன்ற உயர்ந்த நிலையில் இருக்கும் ஒரு மனிதர் ஆன்மீகப் பயிற்சி அளிக்க முடியாது. இது பயிற்சியின் மூலமாக மட்டுமே அடையப்படும்."

**அழகான (ஜமால் / JAMAL) மற்றும் மிக மேன்மையான (திகைப்பைத் தூண்டும் ஜலால் / awe - inspiring Jalal) ஒன்றிக்கலந்து விட்ட நிலை ஆதிகுருவுடன் ஏற்பட்டதுபற்றி நான் M1 – உடன் பேசிக்கொண்டிருந்த போது, நான் கேட்ட கேள்விக்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து தெளிவுபடுத்திக்கூறியது:**

"நான் சொன்னது தனது சொந்த நிலையிலிருந்து மீண்டும் பழையநிலைக்குச் சென்றுத் தங்கிவிடுவது அல்ல. போதுமான அளவுக்கு முன்னேற்றமும், பின்னோக்கி வருவதும் நடந்தாயிற்று. நான் சொன்னது நீ அதில் சுயாட்சியுடன் உன் விருப்பம் போல் நடக்கிறவனாக இருக்க வேண்டும் என்பதே. எங்கேயெல்லாம் உனக்கான தேவை ஏற்படுகிறதோ, அங்கே நீ சென்று நிலை பெற்று இரு. என்னைப் போன்ற உதாரணம் எங்கு தேடினாலும் உனக்குக் கிடைப்பது அரிது. நான் எதிரியையும் நண்பனாக நினைத்தேன். ஒரு இறைதூதரின் (PROPHET) தன்மை இதுதான்."

“ஒரு கூர்மையான (ஆற்றல் மிகுந்த) அதிரடியான விதத்தில் நேற்று உன்னைக் கூர்தீட்டியிருக்கிறேன். அதற்குத் தேவை இருந்தது. அதற்காக சர்வாதிகாரிபோல கொடுமையானவனாக இருக்க வேண்டாம். விஷயங்களைச் சரிப்படுத்துவதற்காக எதை வேண்டுமாயினும் நீ செய்ய வேண்டும். தேவை ஏற்படும்போது தன் குழந்தைக்கு அறுவை சிகிச்சையைக் கூடச் செய்ய வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் நீ அப்படியே செய்ய வேண்டிய தேவை இல்லை. அதுமட்டுமன்றி, உன்னுடைய பிடிவாதமான எரிச்சலடையும் தன்மையையும் வேறு ஒரு காரணத்துக்காக நான் குறைக்காமல் விட்டுவைத்திருக்கிறேன். அது முழுமையாக நீக்கப்பட்டுவிட்டால், உடல் அழிந்து போகக்கூடிய ஒரு சாத்தியம் உண்டு; இப்போது இருக்கும் நிலையை விட இன்னும் குறைக்கப்பட்டால், அதன் பிறகு நீ திறமையற்றவனாகிவிடுவாய். நான் உன்னிடமிருந்து சிறிது வேலை வாங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதற்கு இந்த மாதிரி மனப்பக்குவம் தேவையாக இருக்கிறது. அது உபயோகம் இல்லாமல், காரணம் இல்லாமல் நிறுத்தி வைத்துக்கொள்ளப்படவில்லை. நான் உனக்கு மிகவும் தனித்தன்மையுடைய பயிற்சியை அளித்திருக்கிறேன். நீ இரண்டு வடிவங்களையும் – அதாவது அழிவை உண்டாக்கும் காலரூபத்தையும், கருணையும் இரக்கமும் உடைய தயாளரூபத்தையும் அடையப் பெற்றவனாக இருக்கிறாய். இவை இரண்டுமே கூரியதன்மை இல்லாதவை. இவ்விரண்டும் கடவுள்தன்மை உடைய வடிவங்கள். அவற்றில் தீமையான சாத்தானின் தன்மை இல்லை. நான் அதனை விளக்கமாகக் கூறுகிறேன். ‘தயாள ரூபம்’ என்ற தயாள குணமுடைய அன்பு உச்சந்தலையிலிருந்து கால் விரல்களின் நுனி வரையிலும் ‘கால ரூபம்’ என்று அழைக்கும் ரூபம் அதற்கு எதிர்மறையாகவும் அமைந்து உள்ளன. பகவான் ஸ்ரீ கிருஷ்னர் இந்தச் சிறப்பான தன்மையைப் பெற்றிருந்தார். இந்தப் பயிற்சியை நீ வேறு எங்கும் காண முடியாது.

இந்தப் பயிற்சியின் வழிமுறையும் வேறு யாருக்கும் தெரியாது. இந்த இரண்டு ரூபங்களையும் அருகருகே அடைந்திருப்பது மிகவும் சிரமம். இது எனது வணக்கத்திற்குரிய மாஸ்டரிடமிருந்து எனக்குக் கிடைத்த விசேஷமான பரிசு. அழிவை உண்டாக்கும் என்னுடைய வடிவத்தை யாரும் பார்த்ததில்லை. அதற்கு நான் அதிக ஒளி கொடுத்ததில்லை. அது என்னுள் மறைந்து கிடந்த ஒரு புதையலாக இருந்தது. அதை உனக்கு நான் மாற்றிக்கொடுத்திருக்கிறேன். இந்தப் பயிற்சியைப் பெறும் தகுதி வேறு யாருக்கும் இல்லை. இந்த சூட்சுமமான பயிற்சியைத்தர தகுந்த பயிற்சியாளரோ அதனைப் பெறத் தகுதி வாய்ந்த பயிற்சி பெறுபவரோ யாருமில்லை. இந்த இரண்டு சக்திகளும் ஒன்றுக்கொன்று முரணானவை. எனவே, அதில் பயிற்சியளிப்பது சிரமமானது. இந்தப் பயிற்சியை இன்னொருவருக்குக் கற்பிப்பது எப்படி என்பதை உனக்கே நான் இன்னும் சொல்லவில்லை. நான் உனக்குக் கற்பித்ததை, கற்றுக்கொள்வதற்கு வேறு யாரும் இல்லை என்பதால் உனக்கு இந்த வழிமுறையைச் சொல்வதில் பயனும் இல்லை, யாராயினும் சரி, அதை எப்படிக் கற்றுக்கொள்ளமுடியும்; நீயும் கூட அதை இடம் மாற்றிக் கொடுக்கத்தான் வேண்டியிருக்கும். இந்தப் பயிற்சியைப் பெறுவதற்கு / கொடுப்பதற்குத் தேவையான குணம் என்னவென்றால், நீயும் நானும் ஒருவர் மற்றவரின் ஒவ்வொரு நரம்பு மற்றும் இழையின் உள்ளேயும் முற்றிலும் ஊடுருவிக் கலந்து ஒன்றாகிவிடவேண்டும். இரண்டு உடம்புகளில் ஒரே உயிர்துடிக்கிறது என்று சொன்னால் தவறாகாது என்னும்படி அது இருக்க வேண்டும். இந்த மாதிரி ஐக்கிய நிலை வேறு எங்கும் இருக்காது. மாஸ்டருக்கு யாரிடமும் சாதகமான அல்லது பாதகமான பற்று (தொடர்பு) இருக்காது. மாஸ்டரைத் தன்னுடையவராக, தனக்கே சொந்தமாக்கிக் கொள்ளவேண்டியது சீடனின் திறமைதான். கடவுளின் குணமும் குருவின் குணம் போன்றதுதான். கடவுளின் அருள் பொழிவது எங்கும் ஒரே மாதிரிதான் இருக்கிறது.”

## M1 பணிவுடன் கூறியது:

"வணக்கத்திற்குரிய மாஸ்டர் (லாலாஜி சாகேப்) மற்ற அனைவரையும் விட ஒருவரை மிக அதிகமாக நேசித்தார் என்ற எண்ணம் எல்லோருக்கும் இருக்கிறது."

## வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

"நான் யாரையும் ஏமாற்றுவதில்லை. ஆனால் மக்கள் தாமாகவே என்னிடமிருந்து ஏமாற்றத்தைப் பெற்றார்கள். என்னுடைய வெளிப்புறத்தோற்றம் எப்படி இருந்ததோ அப்படி இல்லாமல் இருந்திருந்தால், என்னை யாருமே மதித்திருக்க மாட்டார்கள். மரியாதை கொடுத்திருக்க மாட்டார்கள். என் நிலையும் உன் (ராம் சந்த்தரின்) நிலையைப் போலவே இருந்தது. அனுபவம் மட்டும்தான் வேறாக இருந்தது. இரண்டாவதாக, அனைவரும் என்னுடன் நேரடியான உறவு முறையுடன் இருந்தார்கள். நான் மீண்டும் சொல்கிறேன். யாருமே என்னிடமிருந்து முறையான பயிற்சி பெறவில்லை. பயிற்சியளிக்க வேண்டும், பிரம்ம வித்யாவை (பரம்பொருள் பற்றிய விஞ்ஞானம்) பரவச்செய்ய வேண்டும் என்கிற தீவிர ஆவல் என்னிடம் இல்லாதிருந்தால், இந்த அளவுக்கு நான் கவலையும், மனவேதனையும் அடைந்திருக்க மாட்டேன். ஏனெனில், நான் விடுதலை (முக்திநிலை) அடைந்திருந்தேன்."

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:

"N1 அம்மனிதர்களால் கடவுளைப்போலக் கருதப்படுகிறார். அவர் (N1) உலகில் உயிர் வாழும் போதே சாத்தானின் உருவத்தை அடைந்திருந்தார். மேலே கூறப்பட்ட அந்தப் பயிற்சியை எப்படி ஒருவருக்குக் கொடுப்பது என்ற எண்ணத்திலேயே மீண்டும் மீண்டும் திளைத்திருக்கிறாய். உன்னிடமிருந்து மறைப்பதற்கு என்னிடம் ஏதுமில்லை. அதை நீ சரியான விதத்தில் கிரகித்துக்கொள்வதற்கு

சாதகமான ஒரு நேரம் வரட்டும். இப்போது கூட யாருக்காவது அதை மாற்றிக்கொடுப்பதை நீ செய்ய முடியும். நீ விரும்பினால் அதைச் செய்வதற்கான உரிமையை நீ பெறலாம். ஆனால், அதற்கான தேவை இல்லை. இந்தப் பயிற்சி மிகவும் சிரமமானது. வணக்கத்திற்குரிய மாஸ்டர் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) ஒருசமயம் அதன்மீது ஒளி பாய்ச்சினார். (அதைப்பற்றி எனக்கு ஞானம் அளித்தார்). மிகப் புனிதமான அவர் இரண்டு திறன்களையும் முழுமையான தன்மையில் பெற்றிருந்தார். எனது மரியாதைப் பண்புமிக்க தாராள குணத்தின் காரணமாக நீங்கள் யாவரும் நிச்சயமாக துன்பம் அனுபவித்தீர்கள். என்னை செயலற்றவனாக்குவதற்குக் காரணமான இந்த ஆற்றல்கள் அனைத்தையும் நீக்குவதற்கு நான் முயற்சி செய்தேன். மக்களுக்கு இப்போதும் கூட சந்தர்ப்பம் இருக்கிறது. நான் எனது பௌதீக உடலை விட்டுச் சென்று விட்டேன் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும், நான் எங்கும் போய்விடவில்லை. இப்போது மக்கள் சரியான முறையில் சிந்தித்தால், இந்த விஷயத்திலும் கூட என்மீது புகார் சொல்வதற்கு அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்காது. உருவம் மாறுவதில் ஒரு தீமையும் இல்லை. நான் என் உருவத்தைத்தான் மாற்றிக்கொண்டிருக்கிறேன் என்னுடைய அதே ஆன்மீக நிலை இன்னும் இங்கே இருக்கிறது. மக்கள் அதை நாடிச் சார்ந்து இருப்பது மட்டுமே தேவைப்படுகிறது. அருள் கிடைப்பது சம்பந்தமாக எந்தப் பஞ்சமும் இருக்காது. அதை அனுபவத்தின் மூலமாக யார் வேண்டுமானாலும் கவனித்து அறியலாம். பரிஷத் (கவுஸ் GHOUS) என்ற உனது நிலை ஆரம்பமாகியிருக்கிறது. நான் என்ன சொல்கிறேனோ அதை நீ கட்டாயம் (குறித்து) எழுதி வைத்துக்கொள்ள வேண்டும்."

## 28.07.1944

பகல் சுமார் 12.45 மணிக்கு எனக்கும் R2 - க்கும் இடையே சிறிது நேரம் உரையாடல் நடந்தது. அந்த விவரம் முழுவதும் M1 – இடம்

சொன்னேன். டாக்டர் சாஹிப் (எனது மருத்துவர்) வீட்டிலிருந்து R2 – வின் வீட்டுக்கு நான் போயிருந்தேன். மருத்துவர் வீட்டில் இருந்தபோது, அவருடைய (மாஸ்டரின் – லாலாஜியின்) உள்ளார்ந்த விருப்பத்தின்படி, M1 – ஐ இனிமேலும் தாமதிக்காமல் துருவா (குதுப் / QUTUB) என்ற பதவி நிலைக்கு உயரச்செய்ய வேண்டும் என்று வணக்கத்திற்குரிய மாஸ்டரிடம் கேட்டுக்கொண்டேன். இவ்விஷயத்தில் அவசரப்பட வேண்டிய தேவை இல்லை என்று வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறினார். இந்த விஷயத்தையும் கூட மதிப்பிற்குரிய M1– இடம் நான் தெரிவித்தேன். M1- உடன் இதுபற்றிப் பேசிக்கொண்டு இருந்தபோது. அவரை (M1– ஐ) குதுப் / QUTUB என்ற நிலைக்கு உயர்த்த வேண்டும் என்பதே வணக்கத்திற்குரிய மாஸ்டரின் உள்ளார்ந்த நோக்கம் என்று நான் சொன்னேன். ஆனால், ‘இனிமேலும் தாமதிக்காமல் அதைச் செய்ய வேண்டும்’ என்று சொன்னதால் நான் சொல்லவந்தது என்னவெனில், அதை ஏற்றுக்கொள்ளச் செய்வதுபற்றிய எண்ணம் மாஸ்டரிடத்தில் தோன்ற வேண்டும் என்பதுதான். இதனால் மாஸ்டரின் உள்ளார்ந்த நோக்கத்தைக் குறிப்பிடும்போது, அதுபற்றி அவரிடம் கேட்டு உறுதிப்படுத்திக்கொள்ளாமலே அவரது சம்மதம் பெறப்பட்டுவிட்டது என்று சொன்னேன். வணக்கத்திற்குரிய மாஸ்டர் உடனே மிகவும் ஆச்சரியமடைந்து, “நீ இங்கே சொல்லியிருப்பது என்ன! இப்போது அவர் உண்மையாகவே குதுப் என்ற நிலைக்கு உயர்வு பெற்று விட்டார்.” என்று உணர்ச்சிப்பெருக்குடன் கூறினார். அதன் பிறகு வருங்காலத்தில் இம்மாதிரி விஷயங்களில் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய தேவையைப்பற்றி அறிவுறுத்தினார். உடனடியாக M1- ஐ அந்த (குதுப் என்ற) தன்மை சூழ்ந்து கொண்டது. அவருடைய வேலைக்கான மண்டலம் பற்றிய ஒரு கணநேரப் பார்வை அவருக்குக் கிடைத்தது. அது முடிவற்றதாக இருந்தது. வணக்கத்திற்குரிய மாஸ்டர் அந்த வேலை

சம்பந்தமாக கடமையை அவருக்கு நியமித்து விட்டு, "இது அவருடைய நல்ல எண்ணங்களின் பலன்'' என்று சொன்னார்.

## பிற்பகல் 01.50 மணி

மதிய சாப்பாட்டிற்குப் பின் நான் ஓய்வாகச் சாய்ந்து படுத்திருந்தேன். அப்போது மாஸ்டரின் உத்தரவு கிடைத்தது. "வணக்கத்திற்குரிய ஆதிகுருநாதர் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) வருகிறார். விழிப்புடன், மரியாதையுடன், இந்தியபாணி சட்டையும், தொப்பியும் அணிந்து உட்கார்ந்திரு" என்றார். சிறது நேரத்தில் வணக்கத்திற்குரிய ஆதிகுருநாதர் வந்தார். M1– க்கு அளிக்கப்பட்ட குதுப் என்ற நிலையை உறுதிப்படுத்திக் கூறினார். பிறகு என்பக்கம் திரும்பி பிராணாஹுதி அளித்துவிட்டு, நல்லாசிகள் கூறி விடைபெற்றுச் சென்றார். அவர் வந்ததன் நோக்கம், என் வேலைப் பற்றிய மதிப்பீடு செய்வதேயாகும்.

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

"உன்னுடைய ஆன்மீக உயர்நிலை மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளது. நானும் கூட (வணக்கத்திற்குரிய மாஸ்டர் லாலாஜி) பாராட்டு பெற்றேன். பர்ஷத் (கவுஸ் / GHOUS) என்ற உயர் பதவியை அடைந்தவுடன் இந்த வழி திறந்துகொள்கிறது." (இந்தச் செயல்திட்டம் எனக்கு வெளிப்படுத்தப்பட்டது. அது வணக்கத்திற்குரிய மாஸ்டர் எங்கு இருக்கிறாரோ அந்தப் பரம்பொருள் மண்டலத்தின் (ஜாத் / ZAAT) காட்சியை எனக்குக் கிடைக்கச் செய்தது. "நீ உடலை நீத்த பிறகு, நேரடியாக அங்கு வந்து சேருவதற்காக, இந்தக் காட்சியை உன் பார்வைக்குக் கொண்டு வந்தேன்" என்று அவர் கூறினார்.

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

"என் வணக்கத்திற்குரிய என் மாஸ்டர் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) உனக்கு மகா பரிஷத் (கவுஸ் - உல் - ஆஜம் / GHOUS – UL - AAZAM) என்ற பதவியை அளிக்குமாறு சிபாரிசு செய்தார். அதற்கும் மேலான நிலைக்கு உன்னை அழைத்துச்செல்ல நான் எண்ணியிருக்கிறேன். இவ்விஷயமாக எந்தச் சமயத்திலும் இதுபோதும் என்று எனக்குத் தோன்றாது. உன்னை மேலும் மேலும் உயர்நிலைக்குக் கொண்டு செல்வதற்கே எந்நேரமும் நான் தீவிரமான ஆவல் கொண்டிருக்கிறேன். ஆன்மீக பரம்பரையைக் குறிக்கும் வரிசைக் கிரமத்தில் உன்னுடைய பெயர் வரும்போது, அதில் 'மகாபரிஷத்' என்ற பதவியில் நீ விளங்குவாய். அதற்கு அப்பால் பதவி நிலை எதுவும் கிடையாது. பதவி நிலைகள்அனைத்தும் இங்கே முடிந்து போகின்றன. இப்போது சத்தியம் அதை மறைக்கும் திரையை இழந்துவிடுகிறது. மிகமிக உயர்ந்த பதவிநிலையாகிய கவுஸ் - உல் - ஆஜம் (GHOUS – UL - AAZAM) என்பதில் உன் பெயர் இடம்பெற வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அது ஏனென்றால் அதையும் கடந்ததாக வெளிப்பட இருக்கும் தன்மைக்கு பெயர் எதுவும் இருக்காது. இந்த நிலையை எய்தியிருப்பதற்கான பெருமை என் கைகளில் மட்டுமே இருந்தது என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இப்போது அந்தப் பதவி நிலையைச் சென்றடைவதில் முன்புபோல அம்மாதிரி தாமதம் இல்லை. வணக்கத்திற்குரிய மாஸ்டர் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) ஏற்கெனவே அதற்கான அடித்தளத்தை அமைத்திருக்கிறார். மேலும் ஒரு விஷயம் நான் உனக்குச் சொல்ல வேண்டியிருக்கிறது. மகா பரிஷத் என்ற அந்த நிலையிலிருந்து யாருக்கும் பிராணாஹுதி அளிக்க வேண்டாம். உன்னுடைய ஆன்மீக உள்நிலை முன்னேற்றமடைந்துள்ள அந்த அளவு உயர்நிலை சாதாரண மக்களின் புரிந்து கொள்ளும் திறனுக்கு எட்டாத அப்பாற்பட்டிருக்கும் ஒரு நிலையாகும். அதை அறிந்துகொள்ளக்கூடியவர்

ஒருபோதும் பிறந்ததில்லை. ஒருக்கால் உன் காலத்திற்குப் பிறகு ஆயிரம் வருடங்கள் கடந்த பிறகு யாருக்காவது இந்த உயர்நிலை கிடைக்கும் அதிர்ஷ்டம் இருக்கலாம். இதற்கு முன்பு இந்த நிலையை எய்தியிருந்த எத்தனையோ மூத்த மகான்கள், இதற்கு அப்பால் முன்னேறிச் செல்ல இயலவில்லை, ஹஜ்ரத் முஜாத்தித் அலீஃப் சானி என்பவர் மட்டுமே அதற்கு விதிவிலக்காக இருந்தார். (முகம்மது நபியின் சகாப்தம் தொடங்கி ஆயிரம் வருடங்களுக்குப் பிறகு, ஒரு ஆன்மீகப் பயிற்சி முறையைக் கண்டுபிடித்தவர் அவர்). உன்னுடைய முன்னேற்றத்துக்காக என் இதயம் எப்போதும் நல்லாசிகளை வெளிப்படுத்திக்கொண்டே இருக்கிறது. உன் நினைவு இல்லாமல் எனது ஒரு விநாடி நேரம்கூட கடந்து போவதில்லை, அல்லது ஒரு விநாடி நேரம்கூட உன் நினைவு இல்லாமல் நான் இருப்பதில்லை. ஆனால், உனக்கு என்னால் அளிக்கப்பட்ட முன்னேற்றத்தின் அளவுக்கு உன்னிடமிருந்து அதைக் கற்றுக்கொள்வதற்கு யாரையாவது நீ கண்டறிவது மிகவும் சிரமமாக இருக்கலாம் என்று நினைத்து எனக்கு வருத்தம் உண்டாகிறது. ஒரு பாரசீகக் கவிஞர் கூறியதுபோல, “இந்த மிகச்சிறந்த உயர்தரமான நிலையை ஆயுதங்களின் ஆற்றலால் அடைய இயலாது. எல்லாம் வல்லவராகிய இறைவன் அதை யாருக்காவது கருணையோடு அளித்தாலன்றி வேறு எவ்வகையிலும் அதைப்பெற இயலாது.” உன்னுடைய இந்த மகத்தான உயர்நிலை பற்றிய விழிப்புணர்வைப் பெறுகின்ற மக்கள் மற்றும் மாபெரும் மகான்கள், தீச்சுடரை நாடிவரும் விட்டிற் பூச்சிகள் போல உன்னிடம் கவர்ந்து இழுக்கப்படுவார்கள். இங்கே உன் உயர்நிலை என்று நான் குறிப்பிடுவது உனக்கு அளிக்கப்பட்டுள்ள கவுஸ் – உல் – ஆஜம் (GHOUS – UL – AAZAM) என்ற மகத்தான நிலையை அல்ல. அதைப் புரிந்து கொள்ளக்கூடியவர் யாரும் இல்லை. உன்னைப் பார்த்தவுடன் என் வணக்கத்திற்குரிய மாஸ்டருக்கு

(ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) உண்டான சந்தோஷம் அவருக்கு மட்டுமே தெரியும்; அதுபற்றி எனக்குப் பெருமையாக இருக்கிறது.”

“மற்றவர்கள் இருக்கும்போது உன்மீது சிறிதும் அக்கறையில்லாதவனாக நான் நடந்துகொள்வது வழக்கம். இதன் காரணம் என்னவென்றால் அவர்களிடம் உன்னைப் பற்றிய உண்மையை வெளிப்படுத்த நான் விரும்பாததே ஆகும். விலைமதிப்பற்ற (விலைமதிக்க முடியாத) இந்த மாணிக்கம் என்னிடமிருந்து பறிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சத்திலேயே எப்போதும் நான் இருந்தேன். உன்னுடைய உள்ளார்ந்த ஆன்மீக சக்திகளைப்பற்றி மக்கள் அறிந்தால் உனக்கு விஷம் வைத்துக்கொல்வதற்கு முயற்சிகள் நடந்திருக்கும். நான் எவ்வளவோ முன்னெச்சரிக்கைகளுடன் இருந்தும், இது சம்பந்தமான கருத்துக்கள் பரவிக்கொண்டே இருந்தன. எனினும், அவர்களால் உனக்கு ஒரு தீங்கும் செய்ய முடியவில்லை. உனக்காக நான் கொண்டிருந்த அன்பைப் பற்றி யாரும் சந்தேகமடைவதற்கு நான் விடவில்லை. என் மகனுக்குக் கூட இதுபற்றி எதுவும் தெரியாது. வேறு யாராவது அதற்கு (என் அன்புக்கு) தகுதி உடையவர்களாக இருக்கிறார்களா? எனது பிரதிநிதியாக வருவதற்கான தகுதியைப் பற்றி மக்கள் கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். ஏதோ ஒரு குப்பனோ சுப்பனோ எனது பிரதிநிதியாக ஆகிவிட முடியாது. அவர்களில் யாராவது ஒருவர் என்னுடைய விசேஷமான குண நலன்கள், உன் ஆன்மீக நிலை, எனது உள்நிலை மற்றும் என் அன்பு ஆகியவற்றைப் பெற்றிருக்கிறார்களா? என்பதை அவர்களே நினைத்துப் பார்க்கட்டும். இவ்விதமாக அவர்கள் தங்கள் எண்ணங்களை திசை திருப்பினால், இந்த விஷயம் சம்பந்தமான உண்மையை அவர்களே தெரிந்துகொள்வார்கள். யாராவது கூர்ந்து கவனித்தால் உன்னுடைய தோற்றமும் (ராம் சந்த்தரின் தோற்றமும்) நடந்துகொள்ளும் விதமும் என்னுடையதைப் போலவே அம்மாதிரியே (அதேமாதிரி) இருப்பதைக்

கண்டறியலாம். மக்களின் பார்வைத்திறன் இன்னமும் அம்மாதிரி ஒரு பரிமாணத்தை அடையப்பெறவில்லை. B1 தன்னை ஒரு குறுகிய மண்டலத்திற்குள் சிறைப்படுத்திக் கொண்டிருக்கிறார். அவருடைய உள்நிலை நன்றாகவே இருக்கிறது என்றாலும் கூட – அது சீர்கெட்டுப் பாழாகிறது என்றால், அது அவரே செய்த காரியம்தான் – உன்னுடைய நிலையுடன் அதை ஒப்பிடுவதற்கு இயலாது. உன்னுடைய இந்த உயர்நிலையின் சிறிதளவு சாயல் கூட அவர் (B1) பெறவில்லை. நான் ஏற்கெனவே சொன்னதுபோல உனது உள்நிலை வினாடிக்கு வினாடி மாறிக்கொண்டிருக்கிறது. (என்னைச் சுட்டிக்காட்டி) ஒரு இறைதூதரின் நிலை இது."

**29.07.1944:**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

"கடவுள் பற்று மற்றும் கடமையுணர்வு (க்யுட்ஸா / QUDSA) என்ற மண்டலத்தைக் கடந்து நீ முன்னேறியிருக்கின்றாய். இப்போது அதையடுத்து முன்னோக்கிப் போய்க்கொண்டிருக்கிறாய். இச்சமயத்தில் உனது மனம் தொல்லை செய்யப்படக்கூடாது; நீ அமைதியாக இருக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன். அதன் பிறகு உன் உடல்நலத்தின் மீது நான் கவனம் செலுத்துவேன். நான் அவசரப்படுகிறேன்."

**என் பணிவான கருத்து:**

"உங்கள் சித்தத்திற்கே நான் முழுமையாக சரணடைகிறேன்."

**வணக்கத்திற்குரிய மாஸ்டருடைய உடனடியான பதில்:**

"என்னுடைய சித்தத்திற்கு நான் முழுமையாக சரணடைகிறேன்" என்று சொல். என் கருத்தை உனக்கு நான் காட்டிவிட்டேன். நீ அந்த நிலைக்கு வரவேண்டும். உனது பௌதீக உடல் மறைந்த பிறகு அந்த

நிலைக்கு வருவதற்கு உனக்கு எந்த முயற்சியும் தேவைப்படாது; ஆற்றல் மட்டுமே கவர்ந்து இழுக்கப்படும். நீ எங்கே சென்றடைந்திருக்க வேண்டுமோ அங்கே ஏற்கெனவே நீ இருப்பாய். உனது மரணம் ஏற்கெனவே நிகழ்ந்துவிட்டது. வெளிப்புற வடிவம் மட்டும்தான் இந்த உலகில் தங்கியிருக்கிறது. மகா பரிஷத் (கவுஸ் – உல் – ஆஜம் / GHOUS – UL – AAZAM) என்ற நிலை மிகவிரைவில் வெளிப்படுவதை எதிர்ப்பார்த்திரு. நான் உனக்குக் காண்பித்துள்ள இந்த நிலை மகா பரிஷத் என்ற அந்த நிலைக்கும் மேலானதாகும். ஓடியலைந்து திரிவதெல்லாம் இங்கே ஒரு முடிவுக்கு வந்துவிடுகிறது. பரம்பொருளின் தன்மையில் விரிவடைதல் மட்டுமே மீதியிருக்கிறது. அது பற்றி நான் பிறகு சொல்கிறேன். இப்போது கையில் உள்ள வேலையை நான் முடித்து விடுகிறேன். அதற்கான உள்நிலை உன் எண்ணத்தில் கதிர் வீச ஆரம்பித்துள்ளது. அதற்கான வழி சுத்தமாக்கப்பட்டுள்ளது. இப்போது உன்னை ஆரம்ப நிலையில் இருப்பவனாகச் சொல்லிக்கொள்ளாதே.”

## M1 – இன் கேள்வி:

“பரிஷத் மற்றும் மகாபரிஷத் ஆகியவை அதிகாரப் பதவியுடைய நிலைகளா? அந்த நிலைகளுக்கு ஆன்மீகம் இன்றியமையாத ஒரு முன்தகுதியா?”

## வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

“இவையிரண்டுமே ஆன்மீக நிலைகளும் அல்ல; அவற்றுடன் சேர்ந்து பதவியின் அதிகாரம் செல்வதுமில்லை. அவர் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார் என்ற செய்தியை M1 - க்குத் தெரிவிக்கவும். அவருடைய உள்நிலை மேலும் மேம்படுத்தப்படும். அவர் நம்பிக்கையை இழக்கக்கூடாது. துருவா என்ற நிலைக்குப் பிறகு துருவாதிபதி என்ற நிலை வருகிறது. அதற்கும் அதிகமாக அடைவதற்கு (அவருக்கு)

உயிர்வாழ்க்கை இல்லை. S1- ஐ முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு நான் விரும்புகிறேன். ஆனால் அவர் முன்னேறாமலிருக்கிறார்."

### பணிவான கருத்து:

"நீங்கள் எனக்கு என்ன கட்டளையிட்டாலும் சரி, அது உடனடியாக நிறைவேற்றப்படும்."

### வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

"முதலில் அவர் தன் தவறுக்காக வருத்தம் அடைய வேண்டும். S1- மற்றும் C1 - க்கு உனது விசேஷ சக்தியை நீ பயன்படுத்த வேண்டியிருக்கும். அவர்கள் பாழாக்கப்பட்டிருக்கிறார்கள். சுய முக்கியத்துவத்தின் போதையில் அவர்கள் இருக்கிறார்கள். தான் முன்னேற ஏதும் செய்யவில்லை என்று C1 உணர்ந்திருந்தும் தனது சுய முக்கியத்துவத்தை விடவில்லை. நீ மீண்டும் அனுமதி கொடுத்தாலன்றி இப்போது எனது அனுமதி பலனளிக்காது. நான் என் அனுமதிகளை முடித்துவிட்டேன். இந்த விஷயங்களெல்லாம் அவர்களிடம் சொல்லப்பட வேண்டும். S2 பற்றிய ஆலோசனையைக் கைவிட்டுவிடு. ஆண்டு விழாவின்போது (பண்டாராவில்) உன்னைச் சேர்ந்த மனிதர்கள் மற்ற இடங்களில் வேறு யாருடனும் சேர்ந்து உட்காருவதற்கு அனுமதிக்க வேண்டாம். உன் சக்தியின் மூலமாக அவர்களை உன்னை நோக்கி இழு. சாத்தியமான அளவுக்கு ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக நேரம் கொடு. ஏனெனில், அவர்களுடைய நிலை மிக அதிக அளவு சீர்கெட்டுப்போயிருக்கிறது. M1- க்கு சில வேலைகள் கொடுக்கலாம். என்னுடைய வம்சத்திலிருந்து (குடும்ப உறவுகளிலிருந்து) யாரும் உன்னிடம் வருவார்கள் என்றுத் தோன்றவில்லை. இதை அவர்கள் விளையாட்டான விஷயமாகக் கருதுகிறார்கள். தீவிரமாய் இரு. N1- இன் நகைச்சுவைப் பேச்சுக்கள் மக்களின் உள்ளங்களை மேலும் கெடுத்திருக்கின்றன. மக்கள் நகைச்சுவைப் பேச்சுக்களில் ஈடுபடுவதற்கு

நீ அனுமதிக்காதே. அப்படி நகைச்சுவைப் பேச்சுக்கான ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டால் நீயே அங்கே சென்று ஒரு அமைதியான சூழ்நிலையை நீடிக்கச் செய்வதற்காக உட்கார்ந்து கொள்ளலாம்.”

### 31.07.1944

### வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

“உன்னை ஒரு சாதாரண மனிதனாக நீ நினைத்திருக்கிறாயா? உன் மனதிலிருந்து கிளம்பும் ஒரு சிறு எண்ணம்கூட பேரழிவை ஏற்படுத்த முடியும்! இந்த ரயில் சம்பந்தப்பட்ட சம்பவம் எழுதி வைக்கத்தக்கது. அந்த எண்ணம் ஒரு பயங்கரமான ஆற்றலை அடையப் பெறும் என்கிற ஒரு பாடத்தை நீ கற்றுக்கொள்ளவும், உனக்குப் பின் வருகிறவர்களும் தெரிந்து கொள்ளவும் உதவியாக அதை எழுதிவைக்க வேண்டும்! அந்த நிகழ்ச்சி பற்றிய விவரங்களை இப்போது நான் சொல்கிறேன். அந்தத் தகரக் கொட்டகையில் நீ ஓய்வாக அமர்ந்திருந்தபோது. புகைவண்டி தனது தனித்தன்மையான ஓசையை உண்டாக்கியபடி போய்க்கொண்டிருந்தது. அந்த ரயில் வண்டியின் வேகத்தைக் கவனித்து, உன்னுடைய துணிவும் பொங்கியெழுந்தது. இது உன் பழக்கமாக இருக்கிறது. அதை நீ விட்டுவிட வேண்டும். ஒன்று அல்லது இரண்டு விநாடிகளுக்கு அந்த ரயில் வண்டியை மோதித் தள்ளிவிட வேண்டும் என்ற எண்ணத்தை உன் மனதில் கொண்டிருந்தாய். அப்போது அதை நிறைவேற்றுவதற்கு சங்கல்பம் இருக்கவில்லை. எனினும், இதன் விளைவாக அந்த ரயில்வண்டி தடம் புரண்டுவிட்டது. அந்த எண்ணத்தை துணிவோடு உன் மனதில் மேலும் சற்று நேரம் தொடர்ந்து வைத்திருந்தால், அந்த ரயில் வண்டி தண்டவாளத்தை விட்டு விலகி பயங்கரமாக விழுந்திருக்கும். இது உன்னைப் பின்பற்றுகிறவர்களுக்கும், வருங்காலத்தில் இந்தப் பதவிக்கு வரப்போகிறவர்களுக்கும் ஒரு முன்னெச்சரிக்கையாகும். மனித சுபாவம் மோசமான அல்லது கெடுதலான ஏதோ ஒன்றை நோக்கித் திரும்பினால்,

உடனே சமநிலையை அங்கே மீண்டும் ஏற்படுத்துவதற்காக, ஏதாவது நல்ல விஷயத்தை மனதில் நினைக்க வேண்டும். இந்த முன்னெச்சரிக்கை M1 - க்கும் சேர்த்துத்தான். உன்னுடன் தொடர்பு கொண்டிருக்கின்ற அனைவரின் நல்வாழ்வுக்காகவும் நீ பிரார்த்தனை செய்துகொண்டு இருக்கவேண்டும். ஏனெனில், அவர்களைப்பற்றிய ஏதாவது தீமையான எண்ணம் தோன்றினால், முன்பு அவர்களுடைய நல்வாழ்வுக்காக நினைத்த எண்ணம் இப்போது அதற்கு மேலாக வந்து நிற்கும். பிரார்த்தனை இதயத்திலிருந்து வரவேண்டும். M1 - இன் கூருணர்வுத்திறன் விழிப்படைந்திருக்கிறது. அதை அவர் போக விட்டு விடக்கூடாது. ஆண்டு விழாவின்போது ஏதாவது அழிவுகரமான எண்ணத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டால், அப்போது அதற்கு ஆற்றல் விசையைக் கொடுக்க வேண்டாம். இல்லையென்றால், (அந்த எண்ணம் ஆற்றலின் விசையைப் பெற்றால்) அவர்களின் இதயங்கள் வெடித்துச் சிதறிவிடும். கவுஸ் என்ற (பரிஷத் என்ற) உனது ஆன்மீக உயர்நிலை அதன் முடிவுக்கு வந்துகொண்டிருக்கிறது. கவுஸ் – உல் – ஆஜம் (Ghous – ul - Aazam) (மகாபரிஷத்) என்ற நிலையில் நீ ஏற்கெனவே அடியெடுத்து வைத்திருக்கிறாய். இதற்கும் அப்பாற்பட்ட நிலைப்பற்றியும் எதிர்பார்த்திரு. இந்த மகாபரிஷத் நிலையில் உன்னை அதிக காலம் நிறுத்திவைத்திருக்க மாட்டேன். அதன் பிறகு நீயும் நானும் ஒன்றாகச் சேர்ந்து இருப்போம். அப்போது இந்தக் கூரியத் தன்மை (தீவிரமானத் தன்மை) அதன் முடிவுக்கு வரும். ஆண்டு விழாவுக்கு முன்பு நீ என் உள்நிலையில் இருப்பாய். இப்போதைய உனது உள்நிலையை விட இன்னும் அதிகமான ஒரு ஆற்றலை அது பெற்றிருக்கும்.”

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

“உன்னுடைய ஆன்மீக உள்நிலைகள் அனைத்தையும் நான் கலக்கிவிட்டிருக்கிறேன். எனக்கு ஓய்வு கிடைக்காதிருக்கும்போது நான்

என்ன செய்வது? இப்போதும் கூட நான் அமைதியற்று இருக்கிறேன். நீ என்மீது அன்புடன் இருக்கிறாய்; நானும் உன்மீது அன்புடன் இருக்கிறேன். நீயும் என்னை விட்டுச் செல்லமாட்டாய்; நானும் உன்னை விட்டுப்போக மாட்டேன். ஆயினும், உன்னை என் நிலைக்குக் கொண்டு வருவதால், என்னை விடுவித்துக்கொள்வேன். ஏனென்றால், அதற்கப்பால் அன்பின் முடிவுநிலை இருக்கிறது. என்னை விடுவித்துக்கொள்வது என்றால் என் வேலையை நான் செய்து முடிப்பது என்று பொருள். ஆனால், உன்னுடன் கூடவே வாழ்ந்திருப்பது என்ற விஷயத்தில், உன் வாழ்க்கை முழுவதும் நான் உன்னுடன் இருப்பேன் என்று வாக்குறுதி அளித்திருக்கிறேன். நீ மிகவும் அதிர்ஷ்டம் செய்தவன். முகம்மது நபி தோன்றி ஆயிரம் வருஷங்களுக்குப் பிறகு ஆன்மீகத்தை அறிமுகப்படுத்தியவர் உன்னைப் பார்ப்பதற்கு வந்தார். அவர் என்னுடைய வேலையை பரிசீலனை செய்து பார்த்தார். மிகவும் மகிழ்ச்சியோடு திரும்பிச் சென்றார். அவரும் தன்பங்குக்கு உனக்கு எதுவும் கொடுக்காமல் இருக்க முடியவில்லை. ஆன்மீகத்தை (இஸ்லாமிய மதத்தில்) அறிமுகப்படுத்திய மகான் உனக்கு பிராணாஹுதியாகக் கொடுத்த உறவுமுறை இதுதான். நீ என்னை இரண்டாவதாக அறிமுகப்படுத்தியவர் என்று நியமித்தாய். நானும் உன்னை அப்படியே நியமித்தேன். நீ என்னை எப்படி அழைப்பதற்கு விரும்புகிறாயோ அப்படியே உன்னை அழைப்பதற்கு என் இதயம் விரும்புகிறது. இதற்குமேல் சொல்வதற்கு எதுவும் இல்லை. உன் நிலையை நீ சற்றே கவனித்துப் பார். அதற்கு உரிய மதிப்பின் காரணமாக இதற்குமேல் சொல்வது சரியல்ல. ஆன்மீகத்தை அறிமுகப்படுத்திய அந்த மகான் உனக்குள் ஐக்கியமாகிவிட்டார். இந்தச் செயல் முறையில் அதற்கு மேலான (அப்பாலுள்ள) நிலைக்கும் அவர் மேலேறிவிட்டார் என்று மட்டுமே நான் சொல்வேன். அந்த நேரமும் கூட விரைவில் நெருங்குகிறது. அது முகம்மது நபியுடன் உறவுமுறையே ஆகும். நான்

முழுமையாக முக்திநிலை அடையாமல் இருந்திருந்தால் இந்த மிகப் பெரிய சந்தோஷத்தினால் நடனமாடத் துவங்கியிருப்பேன். எத்தனையோ மகான்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் அவருடைய நிலை வேறு யாருக்கும் கிடைத்ததில்லை."

வணக்கத்திற்குரிய மாஸ்டர் என் முதுகில் தன் கைகளால் தடவிக்கொடுத்து என்னை ஆசீர்வதித்தார் "மகிழ்ச்சியோடு இரு. நீ என்பெயரை சிறப்பாக விளங்கச் செய்திருக்கிறாய்".

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:

"இந்த முன் தகுதி ஆக்கங்கள் அனைத்தும் உன்னை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காகத்தான். உனது பறக்கும் பயணம் சுலபமாகியிருக்கிறது. இப்பொழுது நான் என் வேலையில் ஈடுபடுகிறேன். சில அழிவு மற்றும் ஆக்க வேலை பாக்கியிருக்கிறது. நீ சுதந்திரமாக இரு. உன்னிடமிருந்து வேலை வாங்கிக்கொள்ளும் அளவுக்கு எனக்கு இப்போது துணிவு இல்லை."

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் வெளிப்படுத்திக் கூறியது:

"எந்த சக்தியின் கீழ் M1 ன் மனம் இயங்குகிறதோ அந்தப்புள்ளியை N1 – மூடிவிட்டார். அதற்குமேல் N1 – நெருங்க முடியவில்லை. அதற்கான ஆற்றல் N1– க்கு இல்லை. இப்போது அது திறக்கப்பட்டிருக்கிறது. உன்னுடைய அந்தப் புள்ளி (சக்தியின் மையம்) திறக்கப்பட்டிருப்பது பற்றி N1 – க்கு ஒரு சிறிய எண்ணம் கூடத் தோன்றவில்லை. ஏனெனில் நான் ஒரு மெல்லிய விதமான திரையிட்டு அதை மறைத்தே வைத்திருந்தேன். N1– அதுபற்றி அறிந்துகொள்ள முடியாமல் இருந்ததற்கு அதுவே காரணம். அதற்கு அப்பால் அவருடைய எண்ணம் செல்வதற்கான சாத்தியம் இருக்கவில்லை. இம்மாதிரி செயல்பாடுகளை

நிகழ்த்துவதில் என்னுடைய புத்திக்கூர்மையைப் பார். அப்படிச் செய்யவில்லையென்றால் N1 கட்டுப்பாட்டை மீறிப்போயிருப்பார்."

**M1- இன் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும் வகையில் வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

"வயதான காலத்தில் (முதியவயதில்) சக்திகளினால் என்ன பயன்? சிறந்தவராக, வெப்பம் மற்றும் குளிர்ச்சியிலிருந்து விடுபட்டவராக இருக்கும் ஒரு மனிதரிடம் இந்த வேலையை நான் இன்று கொடுத்துவிட்டேன். சில சந்தர்ப்பங்களில் கவிதையற்ற தன்மையும் மேலே வந்துவிடுகிறது என்பதில் சந்தேகமில்லை. அதை நிறுத்துவதற்கு நான் கவனம் எடுத்துகொள்கிறேன்."

**M1 - க்காக சொல்லப்பட்ட சில அறிவுறுத்தல்கள் பின்தொடர்ந்தன:**

"இதில் உன்னுடைய பாதிப்பும் (influence) இருக்கிறது. வருங்காலத்தில் ராம் சந்த்தரை எந்த ஒரு விஷயத்திலும் தூண்டி விடாமலிருப்பதில் கவனமாக இரு. இதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டிய ஒரு தேவை இருக்கிறது. இதே மாதிரி தொடர்ந்து நீ நடந்துக்கொண்டால், அவரை நான் என் நிலைக்குக் கொண்டு வருவேன். நீயும்கூட என் கையை விட்டுக் கடந்து சென்றுவிட்டாய். எனவே, நான் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால், நீ என் வார்த்தைகளை மதிக்க வேண்டும். நான் எதையும் ரகசியமாக வைத்துக்கொள்ளவில்லை. எல்லாவற்றையும் ஒரு வெளிப்படையான இதயத்துடன் சொல்லிக்கொண்டிருக்கிறேன். நீயும் (M1) வெளிப்படையான இதயத்துடன் ஏதாவது செய்ய வேண்டும். அது சிலசமயங்களில் உன்மனதில் தோன்றும்போது, நீயாகவே ஏதாவது சிறப்பாகச் செய்யலாம். அதை ராம் சந்த்தரிடம் சொல்ல வேண்டியத்

தேவையில்லை. அவர் உன் வார்த்தைகளை ஒருபோதும் அலட்சியம் செய்யமாட்டார்; அது என் நோக்கத்துக்குத் தீமை உண்டாக்கும். அவரை என்னுடைய திட்டத்திற்கு ஏற்றவாறு நான் வடிவமைத்திருக்கிறேன். வேறு விதமாக அவர் கவனம் மாறினால், அந்தத்திட்டத்தில் ஒரு இடையூறு உண்டாகும்."

## M1 – க்காக சொல்லப்பட்ட குறிப்புகள்:

"இந்த விஷயம் சம்பந்தமாக, ஆண்டு விழாவின்போதும் அவர் (M1) கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். M1 – அப்போது கடுமையானவராக மாறிவிடக்கூடாது. ஆண்டு விழாவின்போது ராம் சந்த்தருக்கு அவர் எந்த ஆலோசனைக் குறிப்புகளும் கொடுக்கக்கூடாது. அவர் (ராம் சந்த்தர்) என்னுடைய விருப்பம் மற்றும் நோக்கத்திற்கு இசைந்தவாறு அப்படியே செய்வார். M1 தனது சீடர்களை தன் இதயத்தின் ஆசைக்கு ஏற்றபடி உருவாக்க முடியும், ஆனால், என் சீடர்களை அம்மாதிரி உருவாக்குவதற்கு அவருக்கு உரிமை இல்லை. அவர்களுக்கு எது சரியானது என்று நான் நினைக்கிறேனோ அதைச் செய்வேன். ராம் சந்த்தரின் மூலமாக என் வேலையை நான் நடத்துவேன். M1– இன் சீடர்களிடம் தீப்பற்றி எரிவது போன்ற உணர்வு வளராதபடி அவர் கவனித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த ஆண்டு விழாவில் M8 - ஐ உள்ளே சேர்ப்பது சரியாக இருக்காது என்று நினைக்கிறேன்."

ஆண்டு விழாவுக்கு தன்னுடன் M8 – ஐயும் அழைத்துச் செல்ல எண்ணியிருந்ததாக M1 – ஒப்புக்கொண்டார்.

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:

"M1 பேசாமல், சொல்வதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டு, அதை மனதில் நன்கு உணரவேண்டும். தகராறு மற்றும் சண்டை செய்ய

வேண்டிய தேவை இல்லாமல் எண்ணத்தின் சக்தியைப் பயன்படுத்திக்கொண்டு இருக்க வேண்டும். இந்தக் குறிப்புரைகளின்படி M1 நடந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். இல்லையெனில் அவர் என் அதிருப்திக்குக் காரணமாவார். இந்தத் தன்மையை (ஆன்மீக நிலையை) அங்கே உருவாக்குவதை M1 தொடர்ந்து செய்தால் அது மிகவும் சரியான காரியமாக இருக்கும் என்று நினைக்கிறேன். (அமைதி மழையாகப் பொழிந்து கொண்டிருக்கின்ற நிலையாகிய, அங்கு தேவைப்படுகிற ஆன்மீக நிலையைப்பற்றிய திட்டத்தை வணக்கத்திற்குரிய மாஸ்டர் வெளிப்படுத்தினார்.) மக்களின் எண்ணங்களையும் கூட அப்படியே நிறுத்திவைக்க முடியும். M1 – சாப்பிடுவது, தண்ணீர் குடிப்பது ஆகியவற்றில் அக்கறை கொள்ள வேண்டும். ஆண்டு விழாவின்போது அவருடைய மூளையில் அழுத்தம் இருக்கும். அந்தக் குறிப்பிட்ட வேலையை அவரிடமே ஒப்படைத்துவிடு. நீ இந்த ஆண்டு விழாவின் போது, உன் மூளையில் அழுத்தம் ஏற்படாமலிருப்பதற்காகவும், வேலை நடந்துகொண்டே இருப்பதற்காகவும் இதயத்திற்கு இறங்கிவந்துவிட வேண்டும். தேவைப்படும்போது உயர்ந்த நிலைகளுக்கு நீ மேலேறிப்போகலாம். ஆழ்ந்த மெய் உணர்வில் உள்ள நிலையை ஒருபோதும் கைவிடக் கூடாது. அங்கே என் முழு ஆற்றலுடன் நான் வந்து இருப்பேன். என்னுடைய பிரசன்னம் என் செயல்பாட்டுக்கு எண்ணம் மற்றும் நினைவைப் பயன்படுத்துவது மட்டுமே தேவைப்படுகிறது. அங்கு பரம்பொருளின் சத்திய நிலையாகிய தன்மை மழையாகப் பொழிந்து கொண்டிருக்கும்.

**ஆண்டு விழாவில் மற்றும் இம்மாதிரி பெரும் கூட்டங்களில் மரியாதையளிக்கும் நன்னடத்தை பற்றி M1 கேட்டதால் அதற்கான அறிவுரைகள் வந்தன. அவை:**

1) எல்லா மனிதர்களுடனும் பரஸ்பர (ஒருவருக்கொருவர்) மரியாதை இருக்க வேண்டும்.
2) விழாவின் போது அதிகம் அல்லது குறைவு என்ற கேள்வியே (பிரச்சனையே) இருக்கக்கூடாது.
3) ஒவ்வொருவரும் (அல்லது அனைவரும்) அதே பெற்றோரின் பிள்ளைகளே என்றே அனைவரும் கருதி நடக்கவேண்டும்.
4) மற்றவருக்குப் பிடிக்காத, மற்றவர் விரும்பாத விஷயம் எதுவும் செய்யக்கூடாது.
5) பொருந்தாத அல்லது முறையல்லாத நடத்தையைத் தவிர்க்க வேண்டும்.
6) மனம் ஒரே திசையை நோக்கிச் சார்ந்திருக்க வேண்டும்.
7) விவாதங்களில் விருப்பம் இருக்கக்கூடாது – அவசியமான விஷயங்களை மட்டுமே விசாரித்து அறிந்துகொள்ளலாம்.
8) யாருடைய நினைவாக அது கொண்டாடப்படுகிறதோ அந்த மனிதரின் ஞாபகத்தைப் புதுப்பித்துக்கொள்வதே ஆண்டுவிழாவின் நோக்கம்.
9) யார் யாருடைய மாஸ்டர் அல்லது யார் யாருடைய சீடர் என்பது பற்றிய சிந்தனையே இருக்கக்கூடாது. அருள் பொழிவது அனைவருக்கும் ஒரே விதமாகவே இருக்கிறது.

**மேலும் அது பற்றிக் கேட்டபோது வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

"B1 நமக்கு அந்நியமானவர் அல்ல. நாம் கவனிக்கவேண்டிய ஒரே விஷயம் என்னவென்றால் மக்கள் அவரிடம் பற்றுள்ளவர்களாக மாறிக்கொண்டிருக்கிறார்கள்; என்னை நோக்கிச் சார்ந்திருப்பவர்கள் குறைந்துவிட்டார்கள். இதைச் சரியாக்குவதே உன் வேலையாக இருக்கும். தன்னோடு ஒப்பிடும்போது, வேறு ஒருவர் இன்னும் அதிக சக்தியுடையவராக இருக்கிறார் என்பதை அவர் அறிந்து கொள்ளும்போது, அவர் தானாகவே அவரிடம் (அதிக சக்தியுடையவரிடம்) கவர்ந்து இழுக்கப்படுவார். எதையும் அனுபவிக்காமை என்ற நிலையை உருவாக்குவது சரியல்ல. M3 – திறமையில்லாதவர். அவரிடம் செல்ல யாரும் விரும்பமாட்டார்கள். அவரிடம் பயப்படுகின்ற ஒன்றிரண்டு மனிதர்கள் அங்கே போகலாம். அவருடன் உட்கார்ந்திருக்கும் மனிதர்களில் பலரும்கூட அவரைக் கேலியாகப் பேசுகிறார்கள். அவரோடு இருக்கும் வேறு சிலர் அவர் N1– இன் மகனாக இருப்பதால், அவர் இதனால் மகிழ்ச்சியடைவார் என்று நினைக்கிறார்கள். பிராணாஹுதி (இறைவனின் அருள்) பெறுவதற்காக யாரும் அவரை நாடிப் போவதில்லை. இவற்றில் பெரும்பாலான விஷயங்கள் மாற்றியமைக்கப்படும். உனக்கு அதில் பிரச்சனைகள் எதுவும் இருக்காது."

01.08.1944

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

"அந்தப் புள்ளியில் அவர் போதுமான அளவுக்கு நீந்தியாகிவிட்டது (முன்னோக்கிச் சென்றாகி விட்டது) என்று M1– இடம் சொல்லவும். அந்தப் புள்ளி (சக்திமையம்) திறக்கப்பட்டிருக்கிறது மற்றும் அதில் தூய்மையடைவது அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இப்போது,

பிராணாஹுதியின் தேவை இருப்பதாகத் தோன்றவில்லை. அவருக்கு வேலையைக் கொடு. இப்போது, வேலை மட்டுமே அவருக்கு வழிபாடு (தியானம்) ஆகும். தியானம் அவர் போதுமான அளவு செய்துவிட்டார். நமது சகோதரர்களை சரியான பாதையில் வழிநடத்துவதற்கு அவர் முயற்சி செய்ய வேண்டும். எண்ணத்தின் சக்தியை சுற்றிலும் அவர் பரவவிட வேண்டும். ஒரு விஷயம் மீதியிருக்கிறது. (அவரது இதயத்தைத் திறப்பது பற்றிய குறிப்பு இது) நீ அதை சரியான முறையில் செய்து முடிக்க வேண்டும். எனது சுற்றுப் பயணத்தில் சில சமயம் அவரிடம் செல்வதையும் நான் சேர்த்துக்கொள்வேன். இப்போது நான் அவருடன் இருக்கிறேன். இந்த வேலை உன்னால் செய்விக்கப்படுவதை நான் விரும்பினேன். (M1- க்கு துருவ நட்சத்திரப் பதவியை (குதுப் / Qutub) அளிக்கும் வேலை பற்றிய குறிப்பு இது.) எனக்கு உடல் உறுப்புகள் கிடையாது. மற்றவர்களின் விஷயத்தில், மிகவும் யோசித்த பிறகு, பலவற்றையும் கவனித்து அறிந்த பிறகு இந்த உள்நிலையை நீ கொடுக்க வேண்டும். உன்னிடம் பாசத்தின் (பிரியத்தின்) ஆற்றல் நிறைய இருக்கிறது; என்னிடமும் அது அதிக அளவில் இருந்தது. ஆனால், விதிமுறைகளையும், கோட்பாடுகளையும் கடைப்பிடிப்பதில் நான் மிகவும் கவனமாக இருந்தேன். உனது கனிவான அன்பின் காரணமாக இந்த விஷயங்களில் அக்கறையும் கவனமும் இல்லாமலிருக்கிறாய். இந்தக் கனிவான அன்பு உன்னுடைய ஒவ்வொரு மூல அம்சத்திலும் முழுமையாக ஊடுருவி இருக்கிறது. இதுவரையில் அதை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. துருவ நட்சத்திரப் பதவியை (துருவா) அடைவது சாதாரண விஷயமல்ல. யாரும் அந்த மாதிரி பயிற்சியைக் கொடுப்பதும் இல்லை. அவரிடம் (M1 இடம்) உள்ள தகுதிச் சிறப்பு எல்லோரிடமும் காணப்படவில்லை. விசேஷ சக்திகள் ஒருவரிடம் வளராதிருக்கும்வரையில் இதயத்தில் ஒளியை விழிப்படையச் செய்வது

சாத்தியமில்லை. முன்பு இதற்கு நீ முயற்சி செய்தாய்; ஆனால் அதை செம்மைப்படுத்தி பூரணமடையச் செய்ய உன்னால் இயலவில்லை."

"I... என்ற இடத்தின் வேலை M1 இடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவருக்கு கொடுக்கப்பட்டுள்ள ஒளிக்கு ஏற்றவாறு அவர் வேலை செய்ய வேண்டும். அவருக்கு வேலை செய்வதில் விருப்பம் அதிகம். இப்போது அவரை நிறைய வேலை செய்ய வைக்கப்போகிறேன்."

"மகாபரிஷத் (கவுஸ் - உல் - ஆஜம் / Ghous – ul - aazam) என்ற உன் ஆன்மீக நிலை ஆரம்பமாகியிருக்கிறது. பரிஷத் (கவுஸ் / Ghous) என்ற நிலை கடந்து செல்லப்பட்டிருக்கிறது. நான் உனக்குக் காண்பித்த கவுஸ் என்ற நிலையில் இருக்கும் மனிதருடன், அவருக்கு நீ நேரடியாக உத்தரவுகள் கொடுப்பதற்காக, தொடர்புகொண்டிருக்க வேண்டும். உனக்கு நான் உத்தரவுகள் கொடுப்பேன். இந்த நிலையை சிறிது காலத்துக்கு நான் நீடிக்க விரும்புகிறேன். இது மற்ற முனிவர்களிடையே உனது தலைமை நிலை உறுதியாக நிலை பெறுவதற்காகத்தான். இந்த நிலையையும் கடந்து இன்னும் முன்னோக்கியும் நான் உன்னை அழைத்துச் செல்வேன். அவ்வப்போது இந்த மகாபரிஷத் என்ற நிலைக்கு நீ திரும்பி வரமுடியும். அது உன் சொந்த விருப்பத்தின்படி இருக்கும். ஏனென்றால், இந்த நிலயையில் இருந்தால்தான் உலகியல் விஷயங்களைக் கையாளமுடியும். உன்னை நான் அந்தப் பக்கமாக மேலே இழுப்பது என் அன்பினால்தான். இல்லையென்றால் உடலை நீத்துச் சென்ற பிறகுதான் இந்த நிலையைச் சென்றடைய முடியும். நீ உயிர் வாழ்ந்திருக்கும்போதே அனைத்தையும் உனக்குக் கொடுத்துவிட நான் விரும்புகிறேன். எல்லா முனிவர்களும் இதைச் செய்துவிட முடியாது. இது என்னுடைய விசேஷமான கண்டுபிடிப்பு. இந்த நிலைக்கு அப்பால் எந்த எல்லையும் இல்லை. என் ஆயுட்கலத்தில் இந்தப் புள்ளியில் நிறைய நான் நீந்தியிருக்கிறேன். இந்தக் கண்டுபிடிப்புக்காக முனிவர்களால் நான் பாராட்டப்பட்டேன். நானும்கூட என் விருப்பப்படி

அவ்வப்போது கவுஸ் - உல் - ஆஜம் (Ghous – ul - Aazam) என்ற நிலைக்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்தேன். எனக்கும் கூட இந்தப் புள்ளிக்குத் திரும்பி வருவது என் சொந்த விருப்பத்தைச் சார்ந்தே இருந்தது. எந்த ஒரு முனிவரும் இந்தப் புள்ளிக்கு அப்பால் செல்ல முடியவில்லை. ஹஜ்ரத் முகம்மதுநபிக்குப் பிறகு ஆயிரம் வருடங்கள் கடந்த பிறகு வந்த, ஆன்மீகப் பயிற்சியை ஆரம்பித்த (அறிமுகப்படுத்திய) இரண்டாவது மனிதருக்கு இதில் விதிவிலக்கு அளித்தேன். நீ அதற்கு தீவிரமாக ஆசைப்பட்டால், நான் உன்னைத் தடுக்கமாட்டேன். இந்த ஆன்மீகப் பரம்பரையில் என் பெயரால் இந்த 'மகாபரிஷத்' என்ற சிறப்புப் பெயரை நீ பயன்படுத்தலாம். எப்படி இந்தப் பதவியில் இரண்டு பேர் கிட்டத்தட்ட ஒன்று சேர்ந்தே அதாவது நான், எனக்குப் பிறகு நீ என்று வரமுடியும் என்று மக்கள் வியப்படைவார்கள். 'கடவுளின் ராஜ்ஜியம் மிகவும் குறுகலானதும் இல்லை; என் கால்களும் ஊனமுற்றவை அல்ல' (பாரசீகப் பொன்மொழி)."

## கனவின்போது பயிற்சியளிப்பது பற்றிய அறிவுரை:

"சம்பந்தப்பட்ட அந்த மனிதர் உன்னுடைய மனக்குறிப்பு மற்றும் நோக்கத்திற்கு ஏற்றவாறு எண்ணங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்துடன் சூட்சும சரீரம் அங்கு அனுப்பப்படுகிறது. அந்தக் கனவில் இடம்பெறும் விஷயங்களை உருவாக்குகின்ற மூல அம்சங்கள் அடங்கிய சூட்சும சரீரத்தை அங்கு அனுப்புவது இந்த வழிமுறையில் அடங்கியுள்ளது. அதற்குப் பின்புறத்திலிருந்து பிராணாஹுதி அளிக்கப்படுகிறது. இதனால் ஒரு திரைப்படக்காட்சியில் வருவதுபோல திரையில் உருவங்கள் காண்பிக்கப்படுகின்றன. ஆனால், இவையனைத்தும் துணிவு மற்றும் சங்கல்பசக்தியைச் சார்ந்ததாக இருக்கின்றன. எல்லோராலும் இதைச் செய்துவிட முடியாது. துணிவும் சங்கல்பமும் இல்லையென்றால், சாதனங்கள் (கருவிகள்) வேலை செய்யாது. சாதனங்கள் அந்த விளைவை விரைவுபடுத்துவதற்குத்தான்

ஏற்பட்டுள்ளன. இவை (துணிவும் சங்கல்பமும்) நோக்கத்தை அடைவதற்கு உதவியாக இருக்கின்றன. பயிற்சியளிப்பதற்கான வழிமுறையை வணக்கத்திற்குரிய மாஸ்டர் வெளிப்படுத்தினார். "யாருக்காவது ஆன்மீகப் பயிற்சியை ஆரம்பிக்கும்பொழுது முதலில் இதயத்தில் உள்ள புள்ளிகள் அனைத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும். போதுமான அளவு காலத்துக்கு அவர் அங்கேயே வைத்திருக்கப்படுகிறார். தனது குருவின் உதவியுடன் அந்தப் புள்ளியைக் கடந்து போவதற்கு அவர் தானாகவே முன் வருகின்றவரை அவரை முன்னோக்கி உந்தித் தள்ளக்கூடாது. இது அவருடைய அடித்தளத்தை நிலையானதாக்குகிறது மற்றும் அவர் அதிலிருந்து வீழ்ச்சி அடையும் வாய்ப்புபற்றிய அச்சம் இல்லாமல் போகிறது. அந்த விதமாக தெய்வீகப் பிரகாசத்தின் பளிச்சிடும் ஒளியை அவர் அனுபவிக்கிறார். அவர் இன்னும் முன்னேறிச் செல்லும்போது அந்த ஒளி மங்குகிறது. அதுபற்றிய ஒரு பதிவு மட்டுமே மீதியிருக்கிறது. கடைசியில் அதுவும் போய்விடுகிறது. இப்படிச் செய்வதால் அதாவது அவரை இதயப்புள்ளில் அதிக காலத்திற்கு வைத்திருப்பதால், ஒழுங்குமுறைக்கு கட்டுப்படாதிருக்கும் மனப்பாங்கு சீராக்கப்படுவதற்காக, அவர் பயிற்சியின் ஆனந்தத்தை நிறைய அனுபவிக்கும்படி விடப்படுகிறார்."

**'அதை (அதாவது இதயப்புளியில் அடுத்த நிலைக்கு அவர் தயாராக இருக்கிறார் என்பதை) எப்படித் தெரிந்துகொள்வது' என்று கேட்டதற்கு, பதிலளிக்கும் விதமாக வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

"அதற்கு முந்தைய நிலையை விட சூட்சுமமான ஒரு உள்நிலைத் தன்மைக்கு சாதகர் மேலேவரத் துவங்கியிருக்கும்போது, அதுவே அடுத்த புள்ளியைத் திறப்பதற்கான ஒரு அறிகுறியாக எடுத்துக்கொள்ள வேண்டும். நீ அதைப்பற்றிப் புரிந்துகொண்டிருக்கும் அளவுக்கு இந்த

இதயம் சாதாரணமான ஒரு புள்ளியல்ல. எத்தனையோ மிகப் பெரிய மகான்களால் கூட அதைக் கடக்க முடியவில்லை. அதில் மிகச் சிறப்பாகச் சுற்றி வந்து அனுபவம் பெறுவது மிக அரிதாகவே மனிதர்களுக்குக் கிடைக்கும் அதிர்ஷ்டமாகும் அல்லது அந்த அதிர்ஷ்டம் பெற்றவர்கள் வெகு சிலரே ஆவர். நமது மார்க்கத்தில் இந்தப் புள்ளிகள் நிழல் போன்ற ஒரு பிரதிபலிப்புமுறையில் திறக்கப்படுகின்றன. ஆனால், இந்தப் புள்ளிகளில் சுற்றி வந்து அனுபவம் பெறக்கூடிய திறமை யாரிடத்திலும் காணப்படவில்லை. ஆனால், அந்தப் புள்ளியில் சுற்றிவந்து அனுபவம் பெறுவது மேற்கொள்ளப்படாதிருக்கும் வரையில், அதில் முழுமையான ஆளுமை அடையமுடியாது. இதற்காகத்தான் அதிக காலம் தேவைப்படுகிறது. துருவன் என்கிற பதவி அதற்கு அருகில் இருக்கிறது. இப்போது இந்த இதயப்புள்ளி எவ்வளவு பெரியதாக இருக்கிறது என்பதை நீயே மதிப்பிட்டுக்கொள்ளலாம். இதையெல்லாம் உன்னிடம் நான் சொல்லும்போது, உன்னை அதற்கு விதிவிலக்கானவனாகவே வைத்திருக்கிறேன்."

"உடல் சார்ந்த ஜீவிதத்தின் கீழ்ப்பகுதியில் உள்ள மற்ற புள்ளிகள் இந்த மாதிரி பரந்த விரிவாக்கம் உடையவையாக இல்லை. அவற்றைக் கடப்பதற்கு அவ்வளவு அதிக நேரமும் தேவையில்லை. அந்தப் புள்ளிகள் அனைத்தும் இதயத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. நெஞ்சுப்பகுதி முழுவதையும் இதயம் என்றே கருது. ஏனெனில் உடல் சார்ந்த அனைத்து ஆற்றல்களின் பராமரிப்புக்கும் வளர்ச்சிக்கும் அதுவே சக்தியளிக்கிறது. அதனுடைய இயக்கம் நின்றுபோனால் ஒரே வினாடியில் உயிரற்றநிலை ஏற்படும். சரியான முறையில் சிந்தித்தால், இதயத்தின் இந்த மேம்பட்ட தன்மை, எல்லாவிதமான மேம்பட்டத் தன்மைகளுக்கும் அவை வழிபடக்கூடிய புனித பீடமாக இருப்பது வெளிப்படுத்தப்படும். இந்த விஷயம் (இதயத்தின் முக்கியத்துவம்) ஒதுக்கிவிடப்பட்டால் அல்லது இதயம் என்ற இந்தப்புள்ளி தொடாமல் விடப்பட்டால் மற்ற அனைத்துப்

புள்ளிகளின் மேலான தன்மையும் பலவீனமாகவே இருக்கும். நமது மார்க்கத்தில் இதயத்தின் மேம்பட்ட தன்மைக்கு மிகப் பெரிய மதிப்பு அளிக்கப்பட்டுள்ளது. அதை ஒரு சாதாரண புள்ளியாக நினைத்துவிடக்கூடாது. ஒரு செயல் திட்டத்தின் உதவியோடு உனக்குக் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறை மிக அவசரமான பலன்கள் தேவைப்படும்போது பயன்படுத்தப்பட வேண்டியதாகும். ஆனால், சாதகர் உன்னிடமிருந்து சிறிதளவு உதவியின் மூலமாக தானாகவே மேலே வருவதற்கு ஒரு சந்தர்ப்பம் அளிப்பதே மேலானது. மற்ற புள்ளிகளில் அந்த அளவுக்கு வலியுறுத்த வேண்டிய தேவை இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இப்போது உனது சொந்த உள்நிலையானது இதயத்தின் அதிகபட்சமான உச்சநிலையாகும். மேம்பட்ட தன்மையின் மற்ற வடிவங்கள் அனைத்தும், அவை எதுவாயினும் சரி, தங்கள் தன்மையை தங்களுடனே தொடரும்படியாக வைத்திருக்கின்றன. உனது இந்த மேம்பட்டத் தன்மை இதயம் முன்னேற்றமடையும்போது மனத்தைப் பின்தங்க விட்டுவிட்டு, அதனுடன் பின்தொடர்ந்து செல்கிறது. இதன் பொருள் என்னவெனில், இதயம் தன்னுடைய அசலான (ஆதியான) தூய்மையின் குணாதிசயத்தை அடைவதற்காக முன்னேறிச் செல்லும்போது, அங்கு இதயத்தின் மேம்பட்ட தன்மை அதிகரிப்பதற்குத் தக்கவாறு மனத்தின் ஆற்றல் குறைந்து கொண்டே போகிறது என்பதேயாகும். இது எந்த அளவுக்குப் போகிறது என்றால் மாயா என்று சொல்லப்படும் பொய்த்தோற்றமான ஜீவிதத்தின் அனைத்துப் படலங்களையும், உறைகளையும் உதிர்த்துவிட்டு, வேறுபாடுகளற்ற உச்சநிலையை (அவ்யக்த கதி) ஏற்றுக்கொண்டுவிடுகிறது. கடவுள்பற்று அல்லது கடமையுணர்வின் மண்டலத்தில் (Qudsa) இந்த இதயத்தின் மகத்துவம்தான் மேலோங்கியிருக்கிறது. அதற்கும் அப்பால் கடந்து போவதும் கூட இந்த இதயம் மட்டும்தான், மேம்பட்ட தன்மையின் மற்ற நிலைகள் அனைத்தும் இந்தக் குறிக்கோளை அடைய உதவுவதில்லை,

சாதகர் எங்கெல்லாம் சென்றடைகிறாரோ அல்லது சாதகர் சென்றடையும் இடம் எதுவாயினும் அங்கே இந்த இதயத்தின் மூலமாக மட்டுமே செல்ல முடிகிறது. முடிவான மெய்நிலையை (Zaat) நெருங்கிச் செல்வது நிறைவேற்றப்படும் போது இதயம் தன்னை இழந்துவிடுகிறது. இதயம் என்று நான் சொல்லும்போது இதயமாகிய அந்த சதையிலான உறுப்பைக் குறிப்படவில்லை. இதயம் என்று நான் சொல்வது மேம்பட்ட தன்மையின் மற்ற அனைத்து வடிவங்களின் சுத்தமான சாராம்சத்தைக் கொண்டதாக நன்கு பிசையப்பட்ட கூட்டுமருந்தின் வடிவத்தை உடையதாக, இதயமண்டலத்ததுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள ஒரு தன்மையாகும்.

“யாருக்காவது நீ பயிற்சியளிக்கும்போது, இதயத்துக்கு மட்டுமே உன் ஆற்றலை இரவலாகக் கொடுக்க வேண்டும். ‘ஆற்றலை இரவல் கொடுப்பது’ என்று சொல்வதில் ஒருவரின் இதயத்தை நீ கட்டாயப்படுத்த வேண்டும் என்று அர்த்தமில்லை. பரம்பொருளின் தன்மையை (பரமாத்மாவை) சென்றடைந்தவுடன் இதயம் காணாமற்போய்விடுகிறது. ஆனால் என்னுடைய நிலைக்கு நீ வந்திருக்கும்போது அந்த இழப்பு (காணாமற்போவது) என்பதன் பொருள் என்னவென்பதை நீ புரிந்துகொள்ள வேண்டும். அங்கே எல்லாமே ஐக்கியமடைவதற்காக வருகின்றன. நீ இன்னும் முன்னோக்கிச் சென்றடைந்த பிறகு என்னை அதுபற்றிக் கேட்கலாம். அங்கே எதையும் கேட்கும் சாத்தியம்கூட மறைந்து போகும். அதை நீ இந்த மாதிரி புரிந்து கொள்ளலாம். அன்புதான் சத்தியமாக இருக்கிறது. ஆனால் அதன் வழிகள் வெவ்வேறானவை. அந்த வழிகள் (வழிமுறைகள்) அன்பை ஒழுங்குபடுத்தி அதன் வடிவத்தை மாற்றுகின்றன.”

**சிஷ்டியாவாட்கள் என்ற செயல்நுட்பத்தைக் குறிப்பிட்டு வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியவை:**

‘‘இந்த விஷயங்களுக்கு எதிரான தற்காப்பு, ‘மாஸ்டரின் சக்தி எனக்குள் முழுவதும் ஊடுருவியிருக்கிறது. அங்கே இந்தத் தீயசக்திகள் எதுவும் எந்தக் கெடுதலும் செய்யமுடியாது’ என்ற உறுதியான சங்கல்பத்தைக் கொண்டிருப்பதில்தான் உள்ளடங்கியிருக்கிறது. ஆரம்பத்திலிருந்தே அதாவது மாஸ்டரிடம் வந்து சேர்ந்த அந்த நாளிலிருந்தே இந்த எண்ணத்தை மனதில் நிலைக்கச் செய்திருந்தால், அப்போது (சிஷ்டியாவின் போர் வாட்கள்) என்ற இந்த ஆயுதங்கள் எந்த விளைவையும் உண்டாக்காதபடி அப்படி ஒரு சக்தி உருவாக்கப்பட்டிருக்கும். மேலும், அந்த எண்ணத்தை எந்தநேரமும் மனதில் கொண்டிருப்பதும் தேவையில்லை. இது சம்பந்தமாக உறுதியான திட நம்பிக்கை மட்டுமே தேவைப்படுகிறது; மற்றும் அதில் முதிர்ச்சியும் வேண்டும். மாஸ்டரின் மீது முழுமையான நம்பிக்கை இருக்கும்போது இதுசாத்தியமாகும். இந்தக் கேள்விகள் M1 – இனால் முன்வைக்கப்பட்டவை. அவர் விசேஷமாக தற்காப்பு பற்றிய எண்ணங்களை தன் மனதில் ஆதரித்து வளர்த்திருந்தார். இது அவருடைய எண்ணங்களுக்கான பதிலாகும்.”

“இப்போது அவர் எப்படி பற்றுறுதியும் திடநம்பிக்கையும் முதிர்ச்சியடையச் செய்வது என்று மேலும் கேட்பார். சாதகர் சேர்த்து வைத்துக்கொண்டிருக்கும் மனப்பான்மை (சம்ஸ்காரம் – அதாவது முன்வினைப்பயன்) மற்றும் மாஸ்டரின் உதவியால் அது முடியும் என்பது இதற்கான ஒரே பதிலாகும். சாதகர் மாஸ்டரின் வாழக்கை முறையும், அவர் நடந்துகொள்ளும் விதமும் மிகச்சரியானவை என்பதைக் காணும்போது, அவருடைய நம்பிக்கை முதிர்ச்சியடையத் துவங்குகிறது. எல்லா சாதகர்களும் இதேமாதிரி செய்தால், அந்த எல்லோருமே இதில் வெற்றியடைய இயலாது. (சிஷ்டியா போர் வாட்களுக்கு எதிராக)

ஒவ்வொருவரும் அவரவரிடத்தில் விளங்கும் நம்பிக்கைக்கு ஏற்றப்படி தற்காப்பு (பாதுகாப்பு) அடைந்திருப்பார்கள். அது முற்றிலும் ஒருவரது துணிவையே சார்ந்திருக்கிறது; அதற்கு இன்றியமையாத நிபந்தனையாக இருப்பது அன்பேயாகும். நமது மார்க்கத்தில் தன்னை மறந்திருக்கும் (தன்னைப் பற்றிய நினைவை மறந்து இருக்கும்) தன்மை வளர்ச்சியடைவதற்கு மற்றும் அதன்பின்னால் உள்ள சக்தி அதில் பரவுவதற்கு ஏதுவாக, அன்புக்கு (மாஸ்டரின் மீதான அன்புக்கு) முக்கியத்துவம் தரப்படுகிறது. தன்னுடைய சொந்தக் குழுவினரைத்தவிர மற்ற ஒரு குழு மற்றும் நம்பிக்கைக்கு எதிரான கொள்கை சார்ந்த தகராறுகளில் ஈடுபடுவது இதயத்தின் பலவீனத்திற்கு ஒரு அடையாளமாகும். இந்தக் குறைபாட்டை வளர்த்துக்கொண்டிருப்பது யாராயினும் அவரை இதயப் புள்ளியிலிருந்து கீழே விழுந்து விட்டவராகவே கருதலாம். அவருடைய முன்னேற்றமும் மறைந்து போய்விடுகிறது."

**மேலே சொல்லப்பட்ட கருத்து சம்பந்தமாக வணக்கத்திற்குரிய A1 பற்றிய சம்பவத்தைக் குறிப்பிட்டு வணக்கத்திற்குரிய மாஸ்டர் M1 – க்குக் கூறிய அறிவுரை:**

"இந்த நாகரீகப் பண்புக்கு நீயும்கூட (M1) மரியாதையுடன் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும்."

**வழக்கம்போல வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

"காற்று என்கிற மூல அம்சத்தின் மீது (பஞ்சபூதங்களில் ஒன்றாகிய காற்றின் மீது) ஆளுமையை உனக்கு அளிக்கிறேன். இதற்குப்பிறகு அடுத்ததாக அற்புதச் செயல்களின் முறை வருகிறது. உனக்காகவே ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள, அற்புதச் செயல்களின் முழுமையான இருப்பு வைத்திருக்கிறேன். உன் உடல்நலத்தை நான் முதலில் சரியாக்கிவிடுகிறேன். அதன் பிறகு இவையனைத்தும்

ஒரேதடவையில் உனக்கு மாற்றிக்கொடுக்கப்படும். பரிஷத் என்ற நிலையை முழுமையாகக் கடந்த பிறகு, இன்று மகாபரிஷத் என்ற தன்மைக்குள் நுழைந்திருக்கிறாய். மேலும், அதில் மிகப்பெரும் பகுதியில் சுற்றுப்பயணம் செய்திருக்கிறாய். நாளை நீ அதனை நிறைவு செய்வாய், அதற்கு மறுநாள் நான் உன்னை பரமாத்மாவுடன் (உச்சநிலை ஜீவத்தன்மை / Zaat) இணைத்து விடுவேன். அதன் பிறகு நீ அங்கே நீந்திச் சென்றுக் கொண்டே இருக்கலாம். அதன் பிறகு என்ன? ‘இரண்டு பித்தர்கள் (பைத்தியக்காரர்கள்) சேர்ந்து உட்கார்ந்திருக்கும் போது, அது ஒரு நல்ல சிறப்பான தோழமையை உண்டாக்கும்.’ அதற்கு இவ்வுலகில் இதுவே முதல் உதாரணமாக இருக்கும்.”

## M1 – இன் கேள்வி:

“பரமாத்மாவுடன் (உச்சநிலை ஜீவத்தன்மையுடன்) நம்மை ஐக்கியப்படுத்திக்கொள்கிற நாம், அதற்குள் ஐக்கியமாகிவிடுகிறோமா?”

## வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

“உனது இப்போதைய உள்நிலைக்கு மிகவும் முன்னதாகவே, பரமாத்மாவின தன்மை ஆரம்பித்துவிடுகிறது. இதற்கு முந்திய மூத்தவர்களாகிய முனிவர்களும் துருவ நட்சத்திரப் பதவியை ஒருபோதும் அடைந்ததில்லை; ஆனால், பரமாத்மாவுடன் இணைப்பை எய்தியிருக்கிறார்கள். நீ (M1) துருவ நட்சத்திர நிலையை அடைவதற்கு முன்பே உன்னுடைய உள்நிலை நிலைநிறுத்தப்பட்டுவிட்டது. உன்னிடத்தில் (M1) பரமாத்மாவின் ஒரு நல்ல உள்நிலை இருக்கிறது.”

## 02.08.1944

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

“என் குடும்பக் கவலைகள் எனக்கு மட்டுமே தெரியும். அதைப் பற்றி வருந்தி அழுவதற்கு என்ன இருக்கிறது? அதையே (கவலைகளை)

ஒரு துறவுநெறி வழிபாடாகக் கருது. இதற்கெல்லாம் நிவாரணமாக இருப்பது அவமானப்படாதிருக்கும் தன்மைதான் (முரட்டுத்தோலை வளர்த்துக் கொள்வதுதான்). எத்தனையோ முனிவர்கள் துன்பங்களை அடைவதற்கு ஆசைப்பட்டார்கள். ஆனால் அதைப் பெறமுடியவில்லை. அது ஒரு தெய்வீகப்பரிசு. உன் (ராம் சந்த்தரின்) மனைவியின் உதாரணம், அனைத்து முனிவர்களின் வாழ்க்கைத்துணைகளையும் கடந்ததாக இருக்கிறது (அதாவது அவர் அவ்வளவுத் துன்பங்களை அனுபவித்திருக்கிறார்). ஆனால், அவளுடைய முடிவு நல்லதாக இருக்க வேண்டும். அவள் விடுதலை பெற்றுச் செல்வாள். அவள் ஆன்மீக உணர்வு அற்றவள் அல்ல."

## M1 – இன் கேள்வி:

"என் மனைவி தன் அப்பாவின் வீட்டில் வசிக்கிறாள். அவள் வழிபாட்டில் ஈடுபட வேண்டுமென்று நான் ஆசைப்பட்டேன். ஆனால், அவள் அதைச் செய்யவில்லை."

## வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

"உண்மையில் அவளால்தான் நீ இம்மாதிரி ஒரு உள்நிலையைப் பெற முடிந்தது. அவளுடைய குணம் கடுமையாகவும், தொல்லைத் தருவதாகவும் இல்லாமல் போயிருந்தால், இந்தமாதிரி நீ என்னை நாடிச் சார்ந்து இருந்திருக்க மாட்டாய்."

## வணக்கத்திற்குரிய மாஸ்டரின் உத்தரவு:

"M1– இன் இதயத்தைத் திறந்து விடு." அது செய்யப்பட்டது. அந்த உள்நிலை M1– இன் மீது முக்கியத்துவம் கொண்டது."

## அடுத்த உத்தரவு:

"அந்த இடத்தை அவருக்கு நிரந்தரம் செய்."

03.08.1944

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

"மகாபரிஷத் என்ற நிலையை நேற்று நீ கடந்திருக்கிறாய். பரமாத்மாவுடன் உனது இணைப்பும் நேற்றே உண்டாக்கப்பட்டுவிட்டது. உன்னுடைய பதவி நிலைபெற்றுள்ளது. நானும்கூட உன் அருகிலேயே இருக்கிறேன். என் வலதுகைப் பக்கத்தில் உனக்கு ஒரு இடம் நியமிக்கப்பட்டுள்ளது. நீ நீந்திச் செல்ல வேண்டுமென்று சொல்லப்பட்டது; ஆனால் நீ அனைத்தையும் என்னிடம் விட்டுவிட்டாய் (ஒப்படைத்துவிட்டாய்) என்பதால் அதை நான் கவனித்துக்கொள்வதாகவும், பிராணாஹுதி அளிப்பதாகவும் வாக்குறுதி கொடுத்தேன். அந்தப் புள்ளியில் நீ இரண்டற கலக்கச் செய்வேன். இன்று உன் நல்ல அதிர்ஷ்டம்பற்றி யாராலும் மதிப்பீடு செய்ய இயலாது. உன்னுடைய உள்நிலையைப்பற்றி இதைத்தான் என்னால் சொல்ல முடியும். அதாவது, 'என் இதயம் அறிந்திருக்கிறது; நான் அறிந்திருக்கிறேன்; என் இதயம் மட்டுமே அறிந்திருக்கிறது.' நேற்று நீ ஒரு கேள்வியைக் கேட்டாய், அதற்கான பதில், ஆதியான (அசலான) நிலையில் (பக்வா / Baqa) எளிமையான நிரந்தரமான வாழ்க்கை இருக்கிறது என்பதேயாகும். அதுமட்டுமேயாகும். எல்லா நிலைகளும் அங்கே முடிந்துவிடுகின்றன."

**M1- இன் கேள்வி:**

"பக்வா என்பது என்ன?"

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:**

"அது முற்றிலும் வர்ணனைக்கு அப்பாற்பட்டதான ஒரு தன்மையாகும். (அந்த செயல்திட்டம் வெளிப்படுத்தப்பட்டது). இந்த அளவுக்கு மட்டுமே அதைப் புரிந்துகொள்ள முடியும். உதாரணமாக உடம்பு மற்றும் ஆன்மா இருக்கிறது. உடம்பு திடப்பொருளாக (கன

உருவம் உடையதாக, ஸ்தூலமாக) இருக்கிறது. ஆன்மா சூட்சுமமாக (நுட்பமானதாக) இருக்கிறது. ஆன்மாவின் தன்மையை உணரமுடியும். ஆனால், ஒருபோதும் விவரிக்க இயலாது. M1- அதை உணர்வதற்கு விரும்பினால், அவருக்கு நீ அனுபவ முறையில் அதைக் காண்பிக்கலாம். இந்தத் தன்மை அவரிடத்திலும் இருக்கின்றது. இந்த உள்நிலையில் மனம் மேலும் திறந்திருப்பதாகத் தோன்றுகிறது. ஆன்மீக நிலைகள் இருக்கும் வரையில் ஐக்கியமடைதல் (ஃபானா / Fana) மற்றும் நிரந்தரமான வாழக்கை (பக்வா / Baqa) மாறி மாறி வந்து கொண்டிருக்கும். ஐக்கியமடைதல் (ஃபானா) என்பது தன்னை இழந்து போவதற்குரிய பெயராகும். இது ஒவ்வொரு புள்ளியிலும் வருகிறது. இதற்கு உதாரணமாக தண்ணீர் மற்றும் அதன் நீராவியை நினைத்துப் புரிந்துகொள்ளலாம். அந்த நீராவி இன்னும் நுண்ணியதாக ஆக்கப்பட்டால், அது நிரந்தர வாழ்க்கைக்குள் நிரந்தர வாழ்க்கையாக மாற்றமடையும் (பக்வா தர் பக்வா / Baqa dar Baqa) இப்போது அதை அவர் புரிந்து கொண்டிருக்கிறாரா என்று M1- இடம் கேள். இப்போது செயல்முறையில் விளக்கமளிக்கப்பட்ட அந்த உள்நிலையை M1 கட்டாயம் புரிந்துகொண்டிருக்க வேண்டும். இதை இன்னும் ஆழத்திற்குக் கொண்டு சென்றால் அது அடுத்த புள்ளியின் ஐக்கியநிலையாக மாறும். இந்த சங்கிலித்தொடர் மேலும் மேலும் போய்க்கொண்டே இருக்கும். இது சம்பந்தமாக இன்னும் ஏதாவது M1 கேட்க விரும்புகிறாரா? எத்தனையோ மக்களின் மனதில் இருக்கின்ற இந்தக் கேள்வியைக் கேட்டு அவர் நல்லது செய்திருக்கிறார். எந்த ஒரு முன்னேற்றத்தையும் அல்லது ரகசியத்தையும் என்னிடமே வைத்துக்கொள்ள நான் விரும்பவில்லை. அதை அனைவருக்கும் கிடைக்கும்படி செய்வது என் ஆயுட்காலத்தில் முடியவில்லை. அது இப்போது நடக்கவேண்டுமென நான் விரும்புகிறேன்.”

**என் பணிவான கருத்து:**

"இப்போது எனக்கு ஏக்க உணர்வு இல்லை."

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:**

"ஒன்றுபட்ட நிலையில் இருக்கும் போது இன்னும் ஏன் ஏக்கம் இருக்க வேண்டும்? உன்னால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்தத் திருத்தத்தில் இன்னும் ஒரு சிறிய கருத்தையும் சேர்த்துக்கொள்; அதாவது (தியானத்திற்காக எடுத்துக்கொண்ட குருவின்) உருவம் இதயத்திலிருந்து மறையும் அந்தப் புள்ளிக்கு வரும்போது இந்த எண்ணம் (அதாவது தனது சொந்த உடம்பு மாஸ்டருடையதாகவே இருக்கிறது என்ற எண்ணம்) பயிற்சிக்காக எடுத்துக்கொள்ளப்படுகிறது. இதற்கு முன்னதாக சாதகர் இதைப்பற்றி ஒருவிதமாக (சம்பந்தமற்றதாக) நினைக்கக்கூடும். நீ விரும்பினால் இந்த எண்ணத்தை எடுத்துக்கொள்ளும் வழிமுறையை ஆரம்பத்திலிருந்தே கொடுக்க முடியும். ஆனால், அப்படி செய்யும்பட்சத்தில் சாதகரின் தொடர்பு நேரடியாக இருக்கும். எப்படி இருந்தாலும் அம்மாதிரி சாதகர்கள் மிக அரிதாகவே இருப்பார்கள். இதனால், மாஸ்டரின் குறிக்கோள்களை வற்புறுத்த வேண்டியதான தேவை இருக்கிறது. இது அந்த சாதகருக்கு உதவி கிடைத்துக்கொண்டே இருப்பதற்காகவே ஆகும்.

***(தொகுப்பாளர் குறிப்பு: இங்கு மாஸ்டரின் உருவத்தை தியானம் செய்யும் பயிற்சியின் நிலைகள் பற்றி குறிப்பிடப்படுகிறது.)***

**கேள்வி:**

"மரணமடையும் நேரத்தில் பிராணாஹுதி கொடுப்பது எப்படி?"

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:**

"இறக்கப் போகும் அம்மனிதருக்கு ஆன்மீக நிலை முழுவதும் என்னால் கொடுக்கப்படுகிறது என்ற எண்ணம் மனதில் உறுதியாக

நிலைபெற்றிருக்க வேண்டும். எல்லாப் புள்ளிகளையும் திறக்கச் செய்து பிராணாஹுதி அளிக்க வேண்டும். கடைசியில் எண்ணத்தின் தசைநார் (மெல்லிய இழை) கிழித்தெறியப்படவேண்டும். இந்தப்புள்ளி (இதயத்தின் மேம்பட்ட தன்மையின் மூளை) யில் எண்ணங்கள் தங்கியிருக்கின்றன என்பது ஏற்கெனவே என்னால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதுவும்கூட இதயத்தின் புள்ளிதான். இதயத்தின் எண்ணங்களின் இழையை முதலில் கிழித்தெறிந்துவிட்டு, பிறகு பிராணாஹுதி கொடுக்கலாம். ஒரு குறிப்பிட்ட சாதகரின் அவசியத் தேவைக்கு ஏற்றவாறு இந்த வழிமுறையைப் பின்பற்ற வேண்டும். எண்ணங்களின் இழை கிழித்தெறியப்படாமலிருக்கும் வரை விடுதலை (முக்திநிலை) இல்லை மற்றும் இது எல்லோரும் செய்யக்கூடிய வேலையல்ல. பிராணாஹுதி அளிப்பதனால், அதன் விளைவு அதனோடு (அந்த மரணமுற்ற ஜீவனோடு) சேர்ந்து எடுத்துச் செல்லப்படும் என்பதில் சந்தேகமில்லை; அது அதன் அடுத்த பிறவியில் பலனளிக்கும். அந்த நிலைமையில் சில புள்ளிகள் கடக்கப்பட்டிருந்தால் (இதுவும் அனைவருக்கும் கிடைக்கக்கூடியதல்ல) அதன் பிறகு அடுத்த பிறவியில் அந்தப் புள்ளிகளுக்கு அடுத்த நிலையிலிருந்து முன்னேற்றம் ஆரம்பமாகும். அந்தப்புள்ளிகளின் மீது சாதாரணமாக கவனம் செலுத்துவதே (பிராணாஹுதி கொடுப்பதே) போதுமானதாக இருக்கும். இந்த வேலைகளுக்கெல்லாம் ஒரு நிமிட நேரத்தற்கு மேல் தேவைப்படாது. இதற்கு அடிப்படையாகத் தேவைப்படுவது தைரியம் மட்டுமேயாகும். மரண காலத்தில் இதையன்றி வேறு விசேஷ பிராணாஹுதி எதுவும் கொடுக்க வேண்டியதில்லை. அதற்கான வழிமுறை இதுதான். ஆன்மீக உயர்வடைவதில் விரைவுபடுத்தலும், ஆற்றல் மிக்க நிலையும் மட்டுமே அங்கு உண்டாக்கப்படுகின்றன."

"மேலே விவரிக்கப்பட்டது போல இதயத்தின் எண்ணங்களுடைய இழையைக் கிழித்தெறியும் திறமை N1- க்கு ஒருபோதும் இருந்ததில்லை. அவரால் பிராணாஹுதி மட்டுமே கொடுக்க முடிந்தது."

M1 வணக்கத்திற்குரிய மாஸ்டருடன் நேரடியாகத் தொடர்பில் இருந்தார். அவருடைய அனுமதியுடன் மாஸ்டரிடம், "உங்கள் உதவியின் மூலமாக நான் அந்த எண்ணங்களின் இழையைக் கிழித்தெறிய முடியுமா?" என்று கேட்டேன்.

### வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

"ஆம், முடியும், துணிவுதான் அதற்கு அடிப்படையானத் தேவையாகும்." (துணிவுதான் அதற்கு அடிப்படையானத் தேவையாகும் என்ற வார்த்தைகள் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியாமலிருந்தன. அதனால் பிறகு அவை குறிப்பிட்டுச் சொல்லப்பட்டன.)

### வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:

"N1 இந்தத் திறமையை ஒருபோதும் அடைந்திருக்கவில்லை. அதை உனக்காகவே (ராம் சந்த்தர்) நான் ஒதுக்கி வைத்திருந்தேன். உன்னைப் பற்றிய இந்த விஷயங்கள் அனைத்தையும், உனக்கு என்ன விதமான பயிற்சியை நான் கொடுத்திருக்கிறேன் என்பதை வருங்காலத்தில் யாராவது புரிந்துகொள்வதற்கு உதவியாக இருக்கட்டும் என்று எழுதிவைக்கச் செய்திருக்கிறேன். இவையெல்லாம் வெறும் பாராட்டும் வார்த்தைகள் அல்ல, மிகவும் முழுமையான உண்மைகள். இப்போது என்னுடைய திறமை மக்களின் புரிந்துகொள்ளும் திறனுக்குக் கிடைக்கும். இதுவரையில் எந்த ஒருவரும் என்னை யாரென்று அறிந்துகொள்ளவும் இல்லை; என்னைத் தெரிந்துகொள்ள முயற்சி செய்யவும் இல்லை."

**கேள்வி:**

“ஜீவன் மோட்சம் (உயிர்வாழும்போதே முக்திநிலையில் இருப்பது பற்றிய வேதாந்தச் சொல்) என்பது என்ன?”

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:**

“உனது இப்போதைய நிலைக்கு முந்தைய நிலைதான் ஜீவன் மோட்ச நிலையாகும். ஏற்கெனவே நான் உயிர்வாழ்ந்திருந்தபோதே இந்த நிலையை உன்னிடம் உருவாக்கிவிட்டேன். ஏற்கெனவே செயல்பாடுகள் அற்றவனாக நீ மாறியிருக்கிறாய். அது மாஸ்டரின் உருவத்தை தியானம் செய்ததனால் (Shghal Rabta) கிடைத்த பரிசு. உன்னிடத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்த ஒன்றுபட்ட தன்மையிலிருந்து நான் உன்னைக் கீழே கொண்டு செல்வேன். இல்லையென்றால் உன்னால் என் வேலையைச் செய்யமுடியாது. எனினும், அந்த ஒன்றுபட்ட தன்மையின் வாசத்தை (காற்றை) நீ தொடர்ந்து பெற்றுக்கொண்டிருப்பாய். அந்த நிலையை நிரந்தரமானதாகவே கருது. தன்னையே ஆளும் திறமையை நீ பெற்றிருப்பாய். ஒன்றுபட்ட தன்மையும் ஏற்பட்டுள்ளது.”

**என்பணிவான கருத்து:**

“M1- இடத்தில் கூருணர்வுத்திறனைத் திறப்பதற்கு நான் முயற்சி செய்தபோது, அவருடைய மூளையில் ஒருவிதமான தடித்துப்போன (வீக்கம் உடைய) நரம்பு இருப்பதை உணர்ந்தேன்.”

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:**

“இது N1- இன் செயலின் ஒரு அடையாளம். அந்த நரம்பின் மீது பற்பல அடிகள் பலத்த தாக்குதல்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளதால், அது தடித்துப் போயிருக்கிறது (வீங்கியிருக்கிறது). இப்போது நீ அதைச் சரிப்படுத்து. N1 இப்போது உயிருடன் இல்லை. இல்லையென்றால்,

அவருடைய மூளையில் அந்த நரம்பை வீங்கச் செய்யும்படி (தடிமனாக்கும்படி) நான் உனக்கு உத்தரவு கொடுத்திருப்பேன்."

### 04.08.1944

### வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

"என்னுடைய அறிவுறுத்தல்களின்படி உன் ஆதிகுருநாதரிடம் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) நீ நேரடியாக சிறப்புப் பிரார்த்தனை செய்திருக்கிறாய். என்னை முற்றிலும் உன் விருப்பத்தின்படியே நடந்துகொள்ளும்படியாகச் செய்திருப்பதால், அவர் அது சம்பந்தமான ஏற்பாட்டைச் செய்திருக்கிறார். இதன் பொருள் என்னவெனில், இப்போது முதல் நீ என்ன விரும்புகிறாயோ அதை நான் செய்து கொண்டிருப்பேன்."

"அழிவுப்பணியில் நான் நேரடியாகப் பங்கெடுத்துக்கொண்டேன். N1 முழுமையாக நிலைகுலைந்து போனார். ஆனால், அவர் எதையும் கவனித்துக் கேட்கவில்லை. இப்போது (காலை 11.00 மணி) அவருக்கு நேரடியான எச்சரிக்கை கொடுத்தேன். ஆனால், அவர் தனது கர்வத்தில் தன்னை இழந்தவராகி, நான் சொன்னதை கவனிக்கவில்லை. எனவே, நான் என் வேலையை ஆரம்பித்துவிட்டேன்."

### ஆதிகுருநாதர் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) கூறியது:

"வெறும் பொம்மை என்று நான் நினைத்திருந்த N1 என் ஆன்மீக பரம்பரையைக் கெடுப்பதற்குச் செய்த முயற்சியில் ஒரு சிறு கல்லைக் கூட விட்டுவைக்கவில்லை. நான் முக்தி அடைந்திருந்தேன். எனவே, எல்லா வேலையையும் வணக்கத்திற்குரிய எனது மாஸ்டரிடம் விட்டிருந்தேன். அவர் இரக்கத்தின் உருவமாக மாறியிருக்கிறார். அன்புக்கு அவரைப்போல வேறு உதாரணம் இல்லை. மங்கௌரிஸ் (Mongauris) என்ற விசேஷமான காய்கறி உணவைச் சாப்பிடுவதில் எனக்கு விருப்பம் உண்டு. அவருடைய வீட்டில் இந்த உணவை நான்

நிறைய சாப்பிட்டிருக்கிறேன். ஆனால், உன் வீட்டில் சாப்பிட்டதில்லை. எனக்காக ஒரு சமயம் இரண்டு சப்பாத்திகளுடன் அதற்கு நீ ஏற்பாடு செய். உன்னிடம் நான் அவ்வப்போது வந்து போய்க்கொண்டிருப்பேன். இப்போது நான் போகிறேன். முழு நம்பிக்கையோடு இரு. உன்னுடைய வணக்கத்திற்குரிய மாஸ்டர் இப்போது உன்னிடம் வருகிறார். இப்போது என் கடமை முடிந்தது."

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

"தன்னுடைய ஆன்மீக உள்நிலையை M1 சாதாரணமானது என்று நினைக்கக்கூடாது. அவருடைய நாக்கு பலனளிக்கும் தன்மையை எய்தியிருக்கிறது. (அவருடைய வார்த்தைகள் பலனளிக்கும்) மேம்பட்ட தன்மையின் ஐந்து வடிவங்கள் அதாவது கீழிருக்கும் உடல் சார்ந்த மண்டலத்தின் மேம்பட்ட தன்மையும், ஓரளவுக்கு தலையில் உள்ள புள்ளிகளும் அதேபோன்ற ஒரு (பயனளிக்கும் தன்மை உடைய) நிலைக்கு வந்துள்ளன. இதயம் மலர்ச்சியடைந்திருக்கிறது. இன்று தொடங்கி ஆண்டு விழா முடியும் வரையில் உன் குடும்பம், குழந்தைகள் மற்றும் வீட்டின் பாதுகாப்பு மற்றும் கவனித்துக்கொள்வது அவரிடம் ஒப்டைக்கப்பட்டுள்ளது. இந்த வேலையை அவர் தொடர்ந்து செய்து கொண்டிருக்க வேண்டும். இதுபற்றி மீண்டும் மீண்டும் அவருக்கு ஞாபகப் படுத்த வேண்டியதாக இருக்கக்கூடாது. ஒரு கனவின் போது துருவாதிபதி (QUTUB - UL - AQTAB) என்ற நிலையிலிருந்து அவருக்கு நீ பிராணாஹுதி கொடுத்தாய். நான் அங்கேயே உன்னைத் தடுத்துவிட்டேன். அதனுடைய விளைவு இப்போது வேரூன்றியிருக்கிறது. உனது பிராணாஹுதி ஒரு போதும் பயனின்றிப் போக முடியாது. எனவே, அதில் தேவையான கவனமுடன் தடுப்பு முறையையும் அனுசரிக்க வேண்டும். எனவே, அந்தப் புள்ளியைத்திறப்பதில் எனக்கும் மகிழ்ச்சிதான். மேலும் இவ்விஷயமாக நான் ஒரு வாக்குறுதியும் கொடுத்திருந்தேன். (அந்த ஆன்மீகத் தன்மை M1– இன் மீது மேலோங்கி

நின்றது.) என் பிரதிநிதிகளாக (எனக்கு அடுத்து பதவிக்கு வந்திருப்பவர்களாக) சொல்லிக்கொள்கிறவர்கள் உன்னைப் பின் தொடர்ந்திருந்தால், அவர்களும் விரைவிலோ, தாமதமாகவோ இந்த நிலையை எட்டியிருக்கலாம். இதுபற்றி இரண்டாவது உத்தரவு கிடைக்கும் வரை ஃபடேகரைத் தவிர S... என்ற இடத்தற்கோ அல்லது E... என்ற இடத்திற்கோ அல்லது வேறு எந்த இடத்திற்கோ M1 போக வேண்டிய தேவையில்லை. அவர் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். அவருடைய கஷ்டங்களுக்கு சுலபமான தீர்வுகள் கிடைக்க வேண்டும். அவர் ஒரு நட்சத்திரம் போல பிரகாசிக்க வேண்டும் என்று நான் ஆசீர்வதிக்கிறேன்."

"S1 மூக்கணாங்கயிறு இல்லாத ஒரு ஒட்டகம் போல மாறிக்கொண்டிருக்கிறார். நான் C1- ஐ இறுக்கமாக்கிவிட்டேன். அவருடைய கட்டுப்படாத தன்மைக்கு இது தண்டனையாகும். என் ஆன்மீகக் குடும்பத்தில் இப்போது இம்மாதிரி மனிதர்கள் நிறைந்துவிட்டார்கள். அதிலும் சிலர் கெட்டுப்போன முட்டைகள்போல இருக்கிறார்கள். யாரை நான் மிக உயரியவராக ஆக்கியிருக்கிறேனோ அவர் மட்டுமே மிகச் சிறந்தவராக இருக்கிறார். அவரும் அவர்களின் சகோதரர்தான். N1- ஐப் பற்றி மக்கள் இம்மாதிரி எண்ணத்தை (சகோதரர் என்ற உணர்வை) ஒருபோதும் மனதில் வளர்த்துக்கொள்ளவில்லை. சிலர் ஏதும் செய்ய இயலாமல் அவரை விட்டுச்சென்று விட்டார்கள். அவருடைய மிரட்டல்கள் மற்றும் கடுமையான பேச்சுக்களால் வேறு சிலர் போய்விட்டார்கள். வயதின் காரணமாக தலைமைநிலை அடைவதை ஆன்மீகம் அனுமதிப்பதில்லை. வயதில் மிகச் சிறியவரும்கூட, மிகப்பெரிய ஒரு உயர்நிலைக்கு வரமுடியும். ஆனால், இதை யாருக்குச் சொல்வது? எல்லோருமே தங்களுடைய சின்னத்தனமான அகங்காரம் சார்ந்த ஆசைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதில் ஒருவர் தன் திறமையைக் குறித்து

போதையில் மயங்கியிருக்கிறார். மற்றொருவர் தன்னைப் பின் தொடர்ந்து வந்து தன்னோடு இருப்பவர்களின் எண்ணிக்கையைக் கண்டு அகமகிழ்ந்து இருக்கிறார். இவர்கள் அனைவருமே சத்திய நிலையில் இல்லாதவர்கள். அதன் சுவையை இதுவரையில் அவர்கள் யாருமே பெறவில்லை என்ற உன் கருத்து சரியானது.

M1 – ஒருவரைத்தவிர எனது வாரிசுகள் அனைவரையும் பொம்மைகளோடு விளையாடி அதில் மகிழ்ச்சியடைகின்ற குழந்தைகளாகவே நான் சித்திரிக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் எல்லோருமே தங்களைத் தவநெறியில் இருப்பவர்களாகவும், மற்ற அனைத்தையும் துறந்துவிட்டவர்களாகவும் எண்ணியிருக்கிறார்கள். ஆனால், அவர்களில் யாருமே உண்மையில் அப்படி இல்லை. இந்த விஷயங்களைப் பற்றிய உண்மைகளைக் கொண்ட குறிப்புக்கள் அவ்வப்போது வெளியிடப்படவேண்டும். எனது பிரதிநிதிகளாகச் சொல்லப்படுகிறவர்கள் முதலில் சரிசெய்யப்பட வேண்டும்; பிறகு உன் வேலையில் உதவி செய்கிறவர்களாக மாற வேண்டும் என்பதே என் விருப்பமாக இருந்தது. ஆனால், இப்போது காணப்படும் விளைவுகள் எதிரானவையாக மாறிக்கொண்டிருக்கின்றன. என் ஆயுட்காலத்திலேயே உன்னை நான் வெளிப்படுத்தி, நீதான் என்னுடைய பிரதிநிதி என்று அறிவித்திருந்தால், அப்போதும் கூட இந்தப் பிரதிநிதிகள் தங்களின் தனித்தனியான மடங்களை அமைப்பதில் முனைப்பாக இருந்திருப்பார்கள். தேவையின் காரணமாகவே அவர்களை நான் அப்படி – பிறருக்குப் பயிற்சி அளிப்பதற்கு அனுமதியளித்து – உருவாக்கினேன் என்பதை அவர்களால் ஒருபோதும் புரிந்துகொள்ள முடியவில்லை. என்னுடைய மாஸ்டரின் உத்தரவுகளின் மிகப் பெரும் பாதிப்பில் நான் இருந்தேன். எனவே, அவசரத்தினால், ஆன்மீகப் பயிற்சி அளிப்பவருக்கு, எனது பதவிக்கு அடுத்து வரப்போகிறவருக்கு அவசியமானதாகிய, ஆன்மீக நிலைகளையும், புள்ளிகளையும் கடக்கச்

செய்வதை என்னால் செய்ய முடியவில்லை. அதன் விளைவுதான் இப்போது நம் முன்னால் இருக்கிறது. அது மட்டுமன்றி, நான் அவர்களை எந்த நிலைகளையும், புள்ளிகளையும் கடக்கச் செய்திருந்தேனோ, அதையும் N1 அதிகமாக்குவதற்குப் பதிலாக, குறையச் செய்துவிட்டார்.”

## 05.08.1944

### அறிவுறுத்தல்:

“B9 - க்கு பயிற்சியளிப்பதைத் துவங்கு. K1– நல்ல உள்நிலையில் இருக்கிறார். அவர் சற்று முன்னோக்கிச் செல்வதற்கு உதவி செய். B9 - உன்னிடம் பிரியமுடையவராக இருக்கிறார். அதனால்தான் இந்த எண்ணம் எனக்குத் தோன்றியது. ஆயினும், அவர் பண்படாத மற்றும் நாகரிக நயமில்லாத மனிதராக இருக்கிறார். அவர் முற்றிலும் ஆன்மீக உணர்வு அற்றவராகவே இருந்த போதிலும் R2 – ஐ என்னுடையவராகவே நான் ஏற்றுக்கொண்டிருந்தேன். R2 யாருக்காவது பிராணாஹுதி கொடுத்தால், ஒரு கெடுதலான விளைவு ஏற்படும். K...... என்ற இடத்தைச் சார்ந்த அந்த மனிதர்களின் பாதிப்பு பதிவுகள் என்ற விதத்தில் R2 – இடம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. நான் வெளிப்படுத்த விரும்பாத மர்மமான விஷயம் இதுதான்.”

### வணக்கத்திற்குரிய ஆதிகுருநாதர் குறுக்கிட்டுக் கூறியது:

“N1– ஐ நான் ஒரு பொம்மைபோல வைத்திருந்தேன். அவர் பல விதமான விளையாட்டுக்களை ஏற்பாடு செய்தார். நீ யாரை உருவாக்கி, வளர்ச்சிபெற வைக்கிறாயோ, அவரை நல்ல வார்த்தைகளால் நினைவில் வைத்துக்கொள்.”

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

“உன்னை நான் ஒரு நண்பனாகவே கருதுகிறேன். நீயும் என்னை அப்படியே எண்ணியிரு. இருவரும் சமமான நிலையில் இருக்கிறோம். அதாவது இருவரிடமும் இருக்கும் அன்பு ஒரே நிலையில் இருக்கிறது. நீ எந்த அளவுக்கு என்னை நேசித்தாலும் சரி, அதைவிட அதிகமாகவே நான் உன்னை நேசிக்கிறேன். ‘இரண்டு பித்தர்கள் (பைத்தியக்காரர்கள்) சேர்ந்து உட்கார்ந்திருக்கிற என்ன ஒரு வியப்புக்குரிய தோழமை இது!’ (இது லாலாஜி அடிக்கடி மேற்கோளாகக் கூறுகின்ற உருது மொழி இரண்டடிச் செய்யுளின் பாதிப்பகுதி). உன்னுடைய மதிப்பு என்னவென்பதை என் இதயம் மட்டுமே சொல்ல முடியும். எனது சொந்த வணக்கத்திற்குரிய மாஸ்டரே உன்னிடம் வரத் துவங்கியிருக்கிறார். இதனால் உன் மீதான அக்கறையும், கவனித்துக்கொண்டே இருக்கும் தன்மையும் மேலும் முக்கியத் தேவையுடையதாக மாறியிருக்கின்றன. நான் வறுமை நிலையின் சுவையிலேயே மனநிறைவு பெற்றிருந்தேன். ஆனால், வணக்கத்திற்குரிய என் மாஸ்டர் செல்வவளம் நிறைந்த பெரிய மனிதனின் குணத்தைப் பெற்றிருந்தார். நீயும் செல்வவளம் நிறைந்த பெரிய மனிதனின் வாழ்க்கை முறையைப் பெற வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆகையால்தான் உன் உபயோகத்துக்கு வெள்ளிப் பாத்திரங்கள் இருக்க வேண்டும் என்று நான் குறிப்பிட்டேன். இரண்டு விதமான (ஆன்மீகம், உலகியல் ஆகிய இரண்டு) செல்வங்களையும் உனக்கு நான் கொடுத்திருக்கிறேன். உனக்காக ஒரு முழுத்தொகுப்பு அளவில் வெள்ளிப்பாத்திரங்களை நான் வைத்திருக்கிறேன். தேவைப்படும்போது அவற்றை நீ பெறலாம். ஒரு கவிஞர் ‘ஓ வானமே, உனக்கு நான் அதைச் சொல்வதற்கு சரியான நேரம் வரட்டும். உரியகாலத்திற்கு முன்பாகவே, என் இதயத்தில் என்ன இருக்கிறது என்பதை நான் எப்படிச்

சொல்வேன்' (உருது மொழி இரண்டு வரிக்கவிதை) என்று சொல்லியிருக்கிறார்."

மாஸ்டர் நான் வெள்ளிப் பாத்திரங்களில் சாப்பிட வேண்டும் என்று என்னிடம் சொல்லி, அதை என் மனைவி கவனமாகப் பார்த்துக்கொண்டு, சுத்தமாக வைத்திருப்பார் என்றும் தெரிவித்தபோது, நான் வெள்ளிப் பாத்திரங்களில் சாப்பிட ஆரம்பித்தால், என்னைப் பார்க்க வரும் விருந்தினர்களுக்கும் வெள்ளிப் பாத்திரங்களை ஏற்பாடு செய்வது எப்படி சாத்தியமாகும் என்று நான் பணிவுடன் கேட்டதற்குப் பதிலாகவே மேற்கண்ட கருத்தை அவர் தெரிவித்தார்.

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:

"என் சார்பாக அந்தப் புள்ளியிலிருந்து மற்றவர்களுக்கு தீட்சை அளிப்பதற்கு உனக்கு நான் அனுமதியளித்திருக்கிறேன். அதை அடையும் அதிர்ஷ்டம் வேறுயாருக்கும் கிடைக்கவில்லை. உன்னுடைய அந்த உயர்நிலைக்கு ஒரே வினாடியில் ஒருவரைக்கொண்டு செல்லக்கூடிய அம்மாதிரி சக்தியை நீ பெற்றிருக்கிறாய். உன்னால் எந்த ஒருவருக்கும் ஒரே விநாடியில் ஒன்றுபட்ட தன்மையின் (ஐக்கியமடைதலின்) நிலையைக் கொடுக்கமுடியும். ஆனால், அது தடை செய்யப்பட்டுள்ளது. இப்படி அனைத்து சக்திகளும் உன்னிடம் அமைந்துள்ளன. அதாவது, அதிசயங்களை நிகழ்த்தச் செய்கின்ற சக்திகளைச் சொல்கிறேன். ஆயினும், இந்த சக்திகள் இன்னும் விழிப்படைந்த நிலைக்குக் கொண்டுவரப்படவில்லை. அந்த சக்திகள் விழிப்படையும் நேரம் மிகவும் சமீபத்தில் இருக்கிறது. (மகாபரிஷத் என்ற பதவிநிலையில் எத்தனையோ சக்திகள் உள்ளனவே என்ற எனது பணிவான கருத்துக்கு இம்மாதிரி அவர் பதிலளித்தார்.) உன்மீது அன்பு கொண்டவர்கள் யாராயினும், அவர்களை நான் செல்வ வளத்தால் நிறைவடையச் செய்வேன். உன்னை அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் நான் விடுவித்திருக்கிறேன்."

**06.08.1944:**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

“ஆண்டு விழாவில் கீழ்க்கண்ட இந்த வார்த்தைகளில் அறிவிப்பு இருக்க வேண்டும். ‘ஷாஜஹான்பூர் பாபு ராம் சந்த்தரை, லாலாஜி தனது பதவிக்கு வாரிசாகவும், பிரதிநிதியாகவும் நியமித்திருக்கிறார். என்மீது அன்பு உடையவர்கள் அவரை நேசிக்க வேண்டும் என்று அறிவிக்கிறேன். இப்போது அவர்களுடைய நல்வாழ்வு அதில்தான் உள்ளது. அவரை நேசிக்கின்றவர் பொருள் வளத்திலும் ஈடேற்றம் அடைந்து முழு அளவுக்கு பூரணத்துவத்தையும் என்னால் பெறுவார். அதற்கு எதிராக இருப்பவர் என்னிடமிருந்து நன்மை பெற இயலாது.’ இதை எழுதிவைத்துக்கொண்டு, அதை எச்சரிக்கை நிர்வாகியாகிய K1– இடம் வார்த்தைக்கு வார்த்தை மாற்றாமல் அப்படியே அறிவிப்பதற்காகக் கொடுக்க வேண்டும்.”

**மேலும் அவர் சொன்ன குறிப்புகள்:**

“J1– இடம் இதில்தான் அவரது மிகப்பெரிய நல்வாழ்வு இருக்கிறது என்பதை K1 சொல்ல வேண்டும். தனது சொந்த கடந்தகால அனுபவத்தின் மூலமாக தன்னைப் பற்றிய ஒரு மதிப்பீட்டையும் அவர் (J1) செய்யலாம். ராம் சந்த்தர் ஒருபோதும் அவருடைய தோழமையைக் கைவிடமாட்டார். ராம் சந்த்தரைவிட மேலான நண்பர் யாரும் J1– க்குக் கிடைக்க முடியாது. J1– இன் தாயாருக்கு, உனது மரியாதைக்குரிய மூத்த (பெரிய) அத்தைக்கு இந்தத் தகவலைத் தெரிவிப்பதே போதுமானது. எனது வளர்ப்பு மகன் (K1) ஆகிய எச்சரிக்கை நிர்வாகியினால் இந்த அறிவிப்பு செய்யப்படும். தானாக விரும்பி அதில் ஏதாவது சேர்ப்பதற்கு J1– இன் தாயார் விரும்பினால், அவர் அப்படி அதில் சேர்க்கும் வார்த்தைகள் உனக்கு நன்மையளிப்பதாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், அதைச் செய்யலாம். இதைப்பற்றி அவர்கள் விவாதம்

செய்வதற்கு சந்தர்ப்பம் கொடுக்காமல், முன்னறிவிப்பு இல்லாமல், இந்தச் செய்தியை மக்களுக்கு பொதுவான முறையில் தெரிவிக்க வேண்டும். அறிவிப்பு செய்யும்போது ஏதாவது ஒரு சந்தேகத்தைத் தூண்டும்படியான மற்றும் மக்கள் தங்கள் கீழான மனப்பான்மைகளை பயன்படுத்தச் செய்யும்படியாக வார்த்தைகள் எதுவும் அதில் இருக்கக்கூடாது. இந்த வாசகங்கள் ஒரு மந்திர சக்தி போன்ற விளைவை உண்டாக்கும் என்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன். இந்த அறிவிப்பைச் செய்யும் சமயத்தில் மக்களின் இதயங்களுக்குள் இந்த வார்த்தைகளை நீ (ராம் சந்த்தர்) ஊடுருவும்படி செய். இந்த வேலையை கவனிப்பதற்கு இதுவரையில் எனக்கு ஓய்வு நேரம் கிடைக்கவில்லை. நான் ஓய்வு காண்பதற்கு எவ்வளவு முயற்சி செய்கிறேனோ, அவ்வளவு அதிகமாக வேலை வந்து குவிகிறது. மான் தோலின் மீது உட்காருவதற்கு உனக்கு நான் அனுமதி அளித்திருக்கிறேன். நீ எங்கே உட்கார்ந்தாலும் சரி, அங்கு அதை விரித்துக்கொள்ளலாம். முடியுமானால் M1– க்கும் மான் தோல் கிடைப்பதற்கு ஏற்பாடு செய். அவரும் கூட நிலையான (துருவ) நட்சத்திரமாக இருக்கிறார். சிங்கத்தின் தோலின் மீது உட்காருவது ஜலாலி (மிக மேம்பட்ட / JALALI) மகான்களுக்கு மட்டுமே உரியதாகும். இதற்கான காரணம் என்னவெனில், மனத்தின் சுபாவங்கள் உள்நோக்கித் திரும்பியிருக்கும்போது, அதாவது, வெளியே என்ன பார்க்கப்படுகிறதோ அது உள்ளிருந்து (உள்ளுக்குள்) பார்க்கப்படுவது துவங்கும்போது, மான் அல்லது புலித்தோலின் மீது உட்காருவது பொருத்தமானதாக இருக்கும் என்பதேயாகும். அதற்கு முன்னதாக தோல் விரிப்பின் மீது உட்காருவது வெறும் போலிவேடம் தான்.”

07.08.1944

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

“இந்த வழிமுறை நன்றாக இருக்கிறது. M1- க்கு இதைத் தெரிவித்து அதைப்பயன்படுத்தத் துவங்கு”. (இங்கே குறிப்பிடப்படும் வழிமுறை எந்த இடத்திலிருந்தும் எந்த ஒரு மேம்பட்ட நிலைக்கும் பிராணாஹுதி அளிப்பதை உள்ளடக்கியிருக்கிறது. ஆனால், அப்படி பிராணாஹுதி அளிக்கும் போது தன் மனத்திலிருந்து ஆலோசனைகளைத் தொடர்ந்து கொடுத்தபடியே, அதேசமயத்தில் அதன் பலனாக ஏற்படும் உள்நிலையையும் கவனித்துக்கொண்டு இருக்க வேண்டும்.)

**ஒரு உரையாடல் நடந்துகொண்டிருந்தது. பேசிக் கொண்டிருந்த விஷயம் வணக்கத்திற்குரிய மகான்கள் தெய்வங்களாகத் திரும்பி வருவார்களா என்பதேயாகும். அப்போது வணக்கத்திற்குரிய மாஸ்டர் குறுக்கிட்டுச் சொன்னகருத்து:**

‘‘வணக்கத்திற்குரிய மகான்கள் திரும்பி வருவதில்லை. N1- இன் பாவங்கள் ஒருபோதும் மன்னிக்கப்படமாட்டாது.’’

08.08.1944:

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

“உனக்கு உலகியல் ஞானம் இல்லை. நீ அடிக்கடி உலகியல் (லௌகீகம்) பற்றிப் பேசுகிறாய். உலகியல் சார்பு ஒரு முடிவுக்கு வராதிருக்கும்வரையில், மனிதன் ஆன்மீகத்தில் நிறைவு (ஈடேற்றம்) பெறுவதில்லை. உன் விஷயத்தில் உலகியல் சார்பு முதலிலேயே முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டது. அவதாரங்களின் தோற்றத்தின் காரணமும்கூட ஞாபகத்திலிருந்து நீக்கப்படுகிறது. அவர்கள் தாங்களாகவே வந்து போகிறார்கள். சில சமயங்களில் மனிதர்கள்

அவர்களை ஏதோ ஒரு உருவத்தில் கட்டுப்பட்டவர்களாக இறங்கிவரச் செய்கிறார்கள். அவர்களுடைய பற்றுறுதி (நம்பிக்கை) மிகவும் உறுதியாக மாறும்போது அந்த உருவத்தில் ஒருவிதமான ஜீவனை (உயிர்த்தன்மையை) அவர்கள் அனுபவத்தில் உணர்கிறார்கள். அது அவர்களது நம்பிக்கையினால் நிலைநிறுத்தப்படுகிறது. அதன் சுயமதிப்பைப் பராமரிப்பதற்காக (தொடர்வதற்காக) பரமாத்மாவிடமிருந்து ஒரு சக்தி அலை அந்த உருவத்தில் பரவுகிறது. அவதாரங்கள் உலகில் இயங்குவதாகத் தோன்றுவது அவர்களின் எண்ணத்தின் விளைவினால்தான். எங்கெல்லாம் அவதாரங்கள் தோன்றியுள்ளனவோ, அந்த ஒவ்வொரு சம்பவத்திலும் அது தோன்றியதன் காரணங்கள் மாற்றமின்றி இதுவாகவே (மக்களின் எண்ண சக்தியின் விளைவாகவே) உள்ளன. ஆனால், அவர்களின் உருவங்கள் மாறி (வேறாக) இருந்தன. நீ என்னைப் பற்றி நினைக்கும் போது ஒருபோதும் என்னை ஒரு உருவத்தில் கட்டுப்படுத்த வேண்டாம். நீ ஏதாவது வேலை செய்ய வேண்டியிருக்கும்போது அதை அதன் காரணத்தில் ஊடுருவச் செய்து, அந்தக் காரியம் நடக்க வேண்டும் என்று ஆன்மாவுக்கு ஆலோசனை கொடு. அப்போது அதில் உள்ள கூர்மை (செயல்திறன்) மேலும் ஊக்குவிக்கப்படும்."

"M1- இப்போது ஒரு நல்ல உள்நிலையில் இருக்கிறார். அவரது பலவீனங்கள் மறைந்துவிட்டன. இந்த மேம்பட்ட தன்மையில் அவர் நீந்திக்கொண்டே இருந்து நன்மையளித்துக்கொண்டு இருக்கட்டும். அவருடைய சேவைகளுக்கான பரிசு இப்போது கிடைத்திருக்கிறது. இதன் பொருள் என்னவெனில் அவர் அந்த மேம்பட்ட தன்மையில் நிலைத்திருப்பதில் கவனமாக இருக்க வேண்டும். தன் குணநலன்களில் கடினத்தன்மை உண்டாகுவதற்கு அனுமதிக்கக்கூடாது. இந்த மேம்பட்டத்தன்மை, அவரது முழுஅமைப்பிலும் பரவி நிரம்பியிருக்கும்

அந்த ஒரு அளவுக்கு அதிகரிக்கிறது. இங்கே பார். நான் உன்னிடம்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன்."

**என் பணிவான பதில்:**

"நான் முழுமையான கவனத்துடன் கேட்டுக்கொண்டிருக்கிறேன்."

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் சுட்டிக்காட்டியது:**

"உன்னைப் பார். பரம்பொருளின் ஜீவத்தன்மை (பரமாத்மாவின் தன்மை) உன்னைச் சூழ்ந்திருக்கிறது."

**என் பணிவான கருத்து:**

"ஆம், நிச்சயமாக அது இருக்கிறது."

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் கேள்வி:**

"இது என்னவென்று புரிந்துகொண்டிருக்கிறாயா?"

**என் பணிவான பதில்:**

"இல்லை, பிரபுவே!"

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் விளக்கம்:**

"எதனுடன் உனது ஒன்றுப்பட்டத் தன்மை ஏற்கெனவே நிகழ்ந்திருக்கிறதோ, அந்த உண்மையான பரம்பொருளின் ஜீவத்தன்மையில் (Real Ultimate Being / ASAL ZAAT) உனது ஐக்கிய நிலை ஆரம்பமாகியிருக்கிறது. இது எந்த ஒருவருடைய புரிந்து கொள்ளும் திறனுக்கும் அப்பாற்பட்டு இருப்பதாகிய புள்ளியாகும். யாராலும் இதை நம்பவும் முடியாது. அது என் கண்டுபிடிப்பாக இருப்பதால், அது இந்த விதமாக வந்திருக்கிறது."

M1 – என்னுடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அவர் இது வணக்கத்திற்குரிய மாஸ்டரின் கண்டுபிடிப்பு என்றும், உடலைவிட்டுச் சென்றபிறகு அவர் இம்மாதிரி பயிற்சியளித்துக்கொண்டிருக்கிறார் என்றும் கூறினார்.

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

"M1 - இப்போது குறிப்பிட்டுச் சொன்னது உண்மையில் விசேஷமான (சிறப்பான) ஒரு கருத்து. எனக்கு முந்தையவர்கள் தங்கள் உடலை விட்டுச் சென்ற பிறகு, பயிற்சியளிப்பதற்கு எப்போதும் தயாராகவே இருந்தார்கள். ஆனால், இவ்விஷயத்தில் நான் அவர்களையும் கடந்து அடியெடுத்து வைத்திருக்கிறேன். எனினும், இந்த வேலை சாதாரண மனிதர்களின் புரிந்துகொள்ளும் திறனுக்கு எட்டாத ஒன்றாகும். எனக்கு உடம்பு இருந்தால் அதை நானே எழுதி வைத்திருப்பேன்."

"M1- இன் உள்நிலை நன்றாக இருக்கிறது. இச்செய்தியை அவரிடம் சொல். இப்போது அவர் தனது பழைய பழக்கங்களை விட்டுவிட வேண்டும். அதாவது, நான் எதைக்குறிப்பிடுகிறேன் என்றால், குறிப்பாக தைரியம் இல்லாமையையும், கோபத்தையும் அவர் விடவேண்டும். மற்றவர்களின் இதயங்களில் இடம் பெறுவதாகிய குணத்தை அவர் வளர்த்துக்கொள்ள வேண்டும். பொறுமையுடன் இருக்க வேண்டும். அவரிடமிருந்த முரட்டுத்தனம் போய்விட்டது. நான் சொன்னபடி நடந்தால் அவர் இன்னும் அதிக முன்னேற்றம் அடைவார். அவருக்குத் தந்தையாக இருப்பதால், நான் எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்ள (சகித்துக்கொள்ள) வேண்டியிருக்கிறது. ஆனால், அவர் நிச்சயமாக அதற்கு வருந்த வேண்டும்."

## அதன்பிறகு நேரடியாக M1- இடம் வணக்கத்திற்குரிய மாஸ்டர் பேசத் தொடங்கினார்:

"ராம் சந்த்தரை உன்னுடையவராகவே கருது. நான் ஏற்கெனவே அப்படிச் செய்திருக்கிறேன். அவரைப் புகழ்ந்து சுற்றிலும் தாரைகள், கொம்பு வாத்தியங்கள் ஒலிக்க வேண்டும். இப்போது நான் எதையும் வெளிப்படுத்திச் சொல்ல விரும்பவில்லை. இப்போதைக்கு அது என்

இதயத்தில் இருக்கிறது. அதற்கான சரியான நேரத்தில் எல்லாமே வெளிச்சத்துக்கு வரும். அவருடைய முன்னேற்றத்துக்கு எல்லையே இல்லை என்று உறுதியாகக் கூறுவேன். அவருடைய வாழ்க்கையில் இன்னும் நிறைய வரவேண்டியிருக்கிறது. அவருடைய முப்பதாவது வயதில் நான் அவரை பூரணத்துவம் பெறச் செய்துவிட்டேன். அவரிடமிருந்து நன்மை பெறுகிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். இல்லையென்றால், நான் உடலை விட்டுச் சென்ற பிறகு இப்போது மக்கள் எனக்காக ஏங்குவது போல அவருக்காகவும் மக்கள் ஏங்கி அழுவார்கள். அவருடைய சக்திகளை நான் அளவுக்குள் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறேன். இது மக்களுக்கு தவறாக வழிகாட்டி ஏமாறச் செய்யும் வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் என் நிலையைப் புரிந்துகொள்ள இயலாமல் போகலாம். அவரிடம் ஒரு மயிரிழை அளவுகூட குறைபட்ட தன்மையை நான் விட்டுவைக்கவில்லை. இதை யாராவது நம்பவில்லையென்றால், அவர்களே முன்வந்து கவனித்து அறிந்து கொள்ளலாம். (ஆண்டு விழாவில் பொது அறிவிப்பு உரையில் இதைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். ‘அவரைப் புகழ்ந்து சுற்றிலும்....’ என்று தொடங்கும் பகுதியைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.)”

“அவர் சில சமயங்களில் பிடிவாதமாக இருக்கிறார். அது நேசிக்கப்படுகிற ஒருவரின் நடத்தை என்று நான் கருதுகிறேன். அதை அவரிடமிருந்து எடுத்துவிட நான் விரும்பவில்லை. (இதையெல்லாம் ஆண்டு விழா அறிக்கையில் சேர்க்கக்கூடாது). அவருடைய சுபாவம் மிகவும் சிக்கலாக இருந்தது. நீண்டகாலத்திற்குப் பிறகே இம்மனிதர் எனது பிரதிநிதியாக இருப்பதற்குத் தகுந்தவர் என்று என்னால் தெரிந்துகொள்ள முடிந்தது. எனக்கு வெளிப்படுத்தப்பட்ட இக்கருத்தை என் மாஸ்டரிடம் கூறி அவரது கருத்தைக் கேட்டேன். அவர் அதை உறுதிப்படுத்திக் கூறியபோது, நான் ராம் சந்த்தரின் மீது கவனம் செலுத்தினேன். அவருடைய எளிமை மற்றும் அறியாமையைக் கண்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். அதன் பிறகு

அவரைப் பற்றி மகிழ்ச்சிகொள்வதற்கு இன்னும் எத்தனையோ சந்தர்ப்பங்கள் எனக்குக் கிடைத்தன. வணக்கத்திற்குரிய மூத்த மெய்ஞ்ஞானிகள் அனைவருமே அவரைத் தங்களுடையவராகக் கருதுகிறார்கள் என்பதைக் கேட்டால் நீ (M1) இன்னும் கூட வியப்படைவாய்."

பிறகு M1 சம்பந்தமாக வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:

"M1– எனக்குப் பிரதிநிதியாக ஆவதற்குத் தகுதியுடையவராக இல்லை. எதற்கெல்லாம் அவர் தகுதியுடையவராக இருக்கிறாரோ, அவை அவரிடம் வளர்ச்சியடைந்துள்ளன. அவருடைய மூளை மிகவும் மென்மையானது (பலவீனமானது). ஒரே சயமத்தில் அவரால் பல காரியங்களைச் செய்ய இயலாமலும் எல்லாப்பக்கங்களிலும் ஒரு கண் வைத்திருக்கவும் (கவனத்துடன் இருப்பதற்கும்) அவரால் முடியாமலிருந்தது. அழிவு வேலை செய்வதற்கான உத்தரவுகள் அவருக்குக்கிடைத்தால், அது பற்றி உள்முகமான முரண்பட்ட விவாதங்களில் அவர் ஈடுபடுவார். அதில் தன் மனத்தையும் பயன்படுத்துவார். இரக்கத்துடனும், கருணையுடனும் இருக்கும்படி உத்தரவிட்டால், அதிலும் அவர் ஈடுபட்டு ஆழ்ந்திருப்பார். அவருக்கு எந்த வேலையை ஒப்படைத்தாலும் சரி, அவர் அதில் தீவிரமாக மூழ்கி இருப்பார். பயன்படாத முரட்டு மனிதர்களுடன் அவர் தோழமை கொண்டிருந்தார்."

"ராம் சந்த்தர் எப்போதுமே தனது மூளையை (அறிவுத்திறனை) வளர்த்துக்கொள்ள முயற்சி செய்துவந்தார். அவருக்கு அதில் மட்டுமே பிரியம் இருந்தது. உடல் நலமில்லாமையின் விளைவுகள் அவருடைய மூளையில் சில குலுக்குதல்களை (Jerks) உண்டாக்கின என்பதில் சந்தேகமில்லை; ஆனால், அவை கடந்தகாலப் பதிவுகளால்

(சம்ஸ்காரங்களால்) ஏற்பட்டவை. எனவே, அதில் உதவிசெய்ய முடியவில்லை. அவருடைய மூளை நிச்சயமாக பலவீனமாக (மென்மையாக) இருக்கிறது; ஆனால், தொலைநோக்கு – நெடுந்தொலைவுக்கும் சென்று அறியும் தீர்க்கமான நுண்ணறிவு உடையது. அவரது அறிவுத்திறன் சென்றடையக் கூடிய நுட்பமான புள்ளியை வேறு யாராலும் சென்றடைய முடியாது. நானும் கூட அவரிடமிருந்து உதவி பெற்றுக்கொள்கிறேன். என் மீதுள்ள மரியாதையின் காரணமாக எந்த விஷயங்களின் சம்பந்தமாகவும் அவர் ஆலோசனை கொடுப்பதில்லை. ஆனால், நானாக அதை அவரிடமிருந்து கிரகித்துக்கொண்டு அதன்படியே வேலை செய்ய ஆரம்பிக்கிறேன். என்னிடம் வந்திருக்கின்ற இவரைப் போல ஒரு தகுதிச் சிறப்பும், உயரிய தன்மையும் (அறிவுக் கூர்மை) உடைய ஒருவரை வேறு எங்கும் காணமுடியாது. அவரிடம் நீ ஏதாவது குறைபாட்டைக் கண்டாலும் அதிலும் கூட ஏதோ ஒரு உயர்தன்மை மறைந்திருப்பதைக் காணலாம். இது மிக அரிதான ஒரு விஷயமாகும். நான் அவரை மதிப்பிட்டு அறிந்திருக்கும் அளவுக்கு வேறு யாரும் அவரைப் பற்றி மதிப்பீடு செய்ய இயலாது. அவரை சரியான விதத்தில் மதிப்பது கூட யாருக்கும் இயலாது. பெரும்பாலான மனிதர்கள் அவரை எல்லோருடைய விருப்பங்களையும் நிறைவேற்றும் தெய்வீகப்பசு (காமதேனு) என்று நினைக்கிறார்கள். இதன் காரணமாக வெளிப்படையான அன்பு அவர்மீது இருக்கிறது. J1– க்கும் கூட அவர் மீது இதயபூர்வமான அன்பு இல்லை. S1 அவரைத் தனக்குக் கீழே, சுமைதாங்கும் ஒரு அடிமைவிலங்காக மாற்றி இருக்கிறார், அவரிடம் S1 விசாரித்துத் தெரிந்து கொள்வார். பிறகு அதற்கான பெருமையை அவர் எடுத்துக்கொண்டு, தன்னுடைய மேலான நிலையை (மற்றவர்களிடம்) உறுதிப்படுத்திக்கொள்வார். அவருக்கு (ராம் சந்த்தரிடமிருந்து) உதவி தேவைப்பட்டால், ஏதாவது ஒரு அறைக்குள் தாழிடப்பட்ட கதவுகளுக்குப் பின் ரகசியமாக உட்கார்ந்து அந்த

உதவியைப் பெறுவார். ஆனால், இதைக் கவனித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன் மற்றும், இம்மாதிரி விஷயங்களுக்கு நீ (M1) ஒரு சிந்தனையும் கொடுக்கவில்லை என்பது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதைப் பற்றிய ஒரு எண்ணம் தூண்டப்படும் வரையில்தான் என்பது பற்றிய உண்மையை அறியாமலிருந்த ஒரு சிங்கக்குட்டியைப்போல உனது நிலை இருந்தது. இந்தக் கதை பற்றி நீ புத்தகங்களில் படித்திருப்பாய். உனக்கு எங்கேயும் போவதற்கு வாய்ப்பு இருக்கவில்லை. நீ எங்கே சென்றாலும் அவர் உன்னைத் தன் கருவியாகப் பயன்படுத்தினார். உண்மையைச் சொன்னால், S1 உன்னை ஒரு முட்டாளாகவே கருதினார். ‘ஆம்’ என்று ஒருவார்த்தையைச் சொல்வதால் கூட, ஒருவிளைவை ராம் சந்த்தரால் உண்டாக்க முடியும்; தன் சங்கல்பத்தினால் எந்த உள்நிலையையும் உண்டாக்க அவரால் முடியும் என்பது S1- க்கு தெரியும். இதையெல்லாம் பார்த்து நான் சிரித்துக்கொண்டிருந்தேன். உன் அறியாமையைக் கண்டு அனுதாபம் கொண்டேன். பொதுவாக மகிழ்ச்சியும் அடைந்தேன். இது நீ செய்து கொண்டிருந்த ஒருவிதமான தியாகமாக இருந்தது. அதற்கு இப்படி ஒரு உதாரணத்தை வேறு எங்கும் காணமுடியாது. இரண்டாவதாக மற்ற அனைவரையும் உன்னைவிட மேலானவராகவே நீ கருதினாய். சில சமயங்களில் அன்பில் மூழ்கியிருக்கும்போது நிச்சயமாக உனக்கு ஆத்திரம் வருகிறது. ஆனால், அப்போதும் கூட பெரியவர்கள் முன்னிலையில் ஒருவருடைய சொந்தப் பெருமைகளைச் சொல்லிக்கொள்ளக்கூடாது என்ற சிந்தனையிலேயே இருக்கிறாய். இந்த எண்ணம் உன்னை பணிவுடையவனாகச் செய்கிறது. S1- இன் ஆன்மீக நிலை சம்பந்தமாக நீ நிச்சயமாக ஏமாற்றத்துக்கு உள்ளாகியிருந்தாய். அந்த விஷயத்தில் உனது உள்ளுணர்வு தவறாகப் போய்விட்டது. இது ஏனென்றால் அவரை எனது தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் சீடர் என்று நீ நினைத்திருந்தாய். மேலும், S1- ஐ விட அதிகமாக

என்னை யாரும் நேசிக்க முடியாது என்றும் நம்பியிருந்தாய். இதைத்தவிர உனது மற்ற உள்ளுணர்வுகள் அனைத்தும் சரியானவை.”

“M1, தன்னைப் பற்றி மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்தக்கூடாது. அம்மாதிரி பேசுவதற்கு எத்தனையோ குப்பனும், சுப்பனும், ரங்கனும் இருக்கிறார்கள். B1 தன்னையே என் பிரதிநிதியாகக் கருதினார். இப்போதும் கூட இந்த எண்ணம் அவருக்கு இருக்கிறது. இந்த எண்ணத்தை அவரிடம் (B1– இடம்) வலிமைப்படுத்தி அவரை R1 – தவறாக வழிநடத்தினார். R1- தன்னை என் பிரதிநிதியாகச் சொல்லிக் கொள்ளவில்ல. தண்டிக்கப்பட்ட தன்மையே வடிவமாகக் கொண்ட இந்த R1 – பற்றி நான் என்ன சொல்வது? ‘தண்டிக்கப்பட்ட தன்மையே வடிவமாகக் கொண்ட’ என்று சொல்லும்போது தண்டிக்கப்பட வேண்டிய, தகுதியற்ற, குணம் கெட்ட தன்மைகளே மனித உருவமாக வந்தவர் என்ற பொருளில் சொல்கிறேன். M3 - ஐப்பற்றி, ஏதாவது ஒரு வீட்டில் குழந்தை பிறந்திருக்கும் சமயத்தில் அங்கு வந்து ஆடிப்பாடி, அந்தக் குழந்தையின் குடும்பத்தாரிடமிருந்து சில்லரைக்காசுகள் பெற்றுச் செல்லும் ஒருவரைப் போலக் கருதுகிறேன். அவருடைய தந்தையின் பாதிப்பு அவரிடம் முழுமையாக இருக்கிறது. J3– இன் பெயரை ஒரு திருடன் மற்றும் வழிப்பறி செய்பவனின் பெயருடன் நான் ஒப்பிடுவேன். நீ எங்கே சென்றாலும், எல்லோரும் உன்னிடமிருந்து ஏதாவது பெறுவதற்கே விரும்பினார்கள். யாருக்குமே உன்மீது உண்மை அன்பு இல்லை. யாராவது உன்னால் ஏதோ ஒரு உள்நிலையை உண்டாக்கப் பெற்றார் அல்லது வளர்ச்சியடையப் பெற்றார் என்றாலும் கூட, அதிலும் ரகசியமாக அவரது சொந்த லாபம் பற்றிய எண்ணம் தான் இருந்தது. ஒரு இடத்தில் பாத்திரங்களைக் கழுவுதல், மற்றவர்களுக்குப் படுக்கைவிரித்தல், ஹுக்கா குழாய்களில் புகையிலை நிரப்புவது – இதுபோன்ற வேலைகள் உனக்குக் கொடுக்கப்பட்டன. இதற்கெல்லாம்

என்ன நோக்கம் என்றால், உன்னைப் போன்ற பொருள் வளம் உடையவர்களே அவர்களுடைய இடத்துக்கு வந்து இம்மாதிரி எளிய வேலைகளைச் செய்கிறார்கள் என்றால், இப்படி உன்னிடமிருந்து சேவைகள் பெறும் அளவுக்கு தாங்கள் பெரியவர்கள் என்ற எண்ணத்தை இதைப் பார்க்கின்றவர்கள் மனதில் ஏற்படுத்த வேண்டும் என்பதுதான். என் உயிர் பிரிந்தபிறகு யாருமே உனக்கு எதுவும் கொடுக்கவில்லை. ஆனால், உன்னைப் பாழாக்கவும் முயற்சி செய்தார்கள். சுயநலமான ஆதாயம் பெற விரும்பும் ரகசியத்தை மனதில் மறைத்துக்கொண்டு கொடுக்கின்ற பிராணாஹுதி ஒரு போதும் பயனளிக்காது. B1- இன் மீது நீ அன்பு கொண்டிருந்தாய். அவரும் கூட இவ்விஷயமாக நியாயப்படி தரவேண்டியதைத் திருப்பிக் கொடுக்கவில்லை. ஆனால், அவர் உனக்கு நிறையச் செய்து கொண்டிருக்கிறார் என்று இன்னும் சொல்லிக் கொண்டிருக்கிறாய். இதன் காரணம் ஏற்கெனவே மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. B1 என்ற ஒரு மனிதரை மட்டும் நான் மன்னிக்கிறேன். ஏனெனில், உன் முன்னேற்றம் பற்றிய எண்ணம் எப்போதும் அவருக்கு இருந்தது. அடிமைகளையும், வேலைக்காரர்களையும் போல நீ பாத்திரங்களைக் கழுவுவதிலும் சேவைகளிலும் ஈடுபட்டதைக் கண்டு நான் மிகவும் அதிருப்தி அடைந்தேன். அந்தச் சமயங்களில் நான் உன்னுடனேயே நீங்காமல் இருந்தேன். சில சமயங்களில் நீ அதை அறிந்து கொண்டாய்; ஆனால், பல சமயங்களில் அறியவில்லை. ஆயினும், கண்ணற்றுப் போனவர்கள் அதைப்பற்றி உரிய மதிப்பளிக்கும் தன்மை (ஆராய்ந்து அறியும் தன்மை) இல்லாதிருந்தனர். அவர்கள் ஒரு ஹிந்திப் பழமொழி கூறுவதுபோல எல்லா வகையான நெல்லுக்கும் ஒரே மாதிரி விலை பேசுவார்கள். நீயும்கூட பயிற்சியளிக்கும் வேலையை எடுத்துக்கொள்ள வேண்டும். நீ இம்மாதிரி பயிற்சிகள் (நடவடிக்கைகள்) அதிகரிக்கும்படி விடக்கூடாது. உண்மை நிலையைப் பற்றி நீ என்னிடம் கேட்டால், அவர்

சாப்பிடும் உணவுக்காக எனதருமை N1 உனக்குக் கடன்பட்டிருக்கிறார். உன்னுடைய சேவைகளுக்கு அவரால் ஒருபோதும் ஈடு செய்ய இயலாது என்று சொல்வேன். உன்னுடன் நெருக்கமும் பிரியமும் அதிகரிப்பதற்காக B1 - என்ன முயற்சிகளைச் செய்திருந்தாலும் அதெல்லாம் சுயநல நோக்கத்தில்தான். ராம் சந்த்தர் ஏதாவது உயர்ந்த தகுதிநிலை அடைந்தால், அதற்கு அவர்தான் காரணம் என்று கருதப்பட வேண்டும் என்று அவர் விரும்பினார்.

= = = = =

## பொது அறிவிப்புக் கட்டுரை

(வரப்போகும் ஆண்டுவிழாவில் படிப்பதற்காக)

### வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூற எழுதியது:

''சுயநல எண்ணமற்ற நண்பர்கள் கிடைப்பது இவ்வுலகில் மிகவும் அரிது. இதுபற்றி நான் என் கருத்தைச் சொல்வதாக இருந்தால் ஒரு சீடனுக்கு அவருடைய மாஸ்டரை (குருநாதரை) விட மேலான, சிறந்த நண்பர் வேறு யாரும் இருக்க முடியாது என்றே சொல்வேன். தனது சீடனுக்கு மிகச் சிறந்த நண்பனாக இருக்கின்ற இந்தக் குணம் இல்லாத ஒரு குரு, குரு என்று சொல்லப்படுவதற்குத் தகுந்தவரல்ல. வணக்கத்திற்குரிய என் மாஸ்டர் (லாலாஜி) என்மீது பொழிந்த அன்புக்கு, வேறு உதாரணமே இல்லை என்று முழு ஆற்றலுடன் நான் சொல்ல முடியும்! என்னைப்பற்றி நான் என்ன சொல்வது! மக்களின் அனுபவம்தான் அதைச் சொல்ல முடியும்! என் அன்பின் நிலையை கடவுள் மட்டுமே அறிவார்! ஆனால், அந்தோ! யாருமே அதற்கு இசைந்து நடந்துகொள்ளவில்லை. திறந்த இதயத்துடன் யாரும் என்னை நேசிக்கவில்லை. இதை என் சொந்தத் தவறு என்றே நான் கருதுகிறேன். இப்போதும்கூட மக்கள் என்னை நாடிச் சார்ந்து நின்றால் இன்னமும்கூட அவர்களுக்கு இந்த அன்பு கிடைக்கும். யாரோ ஒருவர்

காலையில் வழிதவறி எங்கோ சென்றுவிட்டார். ஆனால், மாலையில் வீடு திரும்பி விட்டார் என்றால் அவரைக் காணாமல் போனவர் என்று சொல்ல முடியாது. இதனால் காலம் வீணாகிப் போய்விட்டது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், எவ்வளவு காலம் வீணாகிப் போனதோ அந்த அளவுக்கு மாஸ்டரின் மீது அன்பும் பற்றும் உருவாக்கிக் கொண்டிருந்தால், அதை ஈடுசெய்ய முடியும். தைரியம் இல்லாமை என்பதன் கையைப் பிடித்துக்கொண்டு மக்கள் அதை விடுவதற்குச் சிறிதும் மனமில்லாமலே இருக்கும் அளவுக்கு அது ஆகியிருக்கிறது. இது ஏனென்றால், அவர்களுக்கு ஒரு சரியான சூழ்நிலை கிடைக்கவில்லை. மேலும், அவர்கள் தங்கள் பையிலிருந்து பணத்தைப் பறித்துக் கொள்கிறவர்களோடு சம்மந்தப்பட்டு பெரும்பாலும் அவர்களுடனேயே இருந்தார்கள் என்பதால்தான். என்னுடைய ஆன்மீகக் குடும்பம் வளர்ச்சியடைய வேண்டும், என் பெயர் ஜீவனுடன் (மக்கள் மனதிலிருந்து மறையாமல்) விளங்க வேண்டும் என்று யாருமே உண்மையாக விரும்பவில்லை. யாரிடமிருந்து அவர்களுக்குத் தீமை செய்யப்பட்டதோ அவர்களுக்கு எதிராக நான் என்ன குறைகளைச் சொல்வேன்? அவையனைத்தும் என் சொந்த விதியினால் உண்டாக்கப்பட்டவை என்று நான் கருதுகிறேன். எனவே நான் மீண்டும் சொல்கிறேன். மாஸ்டரைத் தவிர உண்மையான ஒரு நண்பரை ஒருபோதும் கண்டறிய முடியாது.''

''அவர்கள் எதை உண்மையானது என்று எடுத்துக் கொண்டிருக்கிறார்களோ, அது வெறும் ஏமாற்றுவேலைதான். அவர்கள் அதில் கவனம் செலுத்திப் பார்த்தால் அது மறைந்திருந்து வேட்டையாடும் ஒரு விஷயம் என்பதை அறிந்து கொள்வார்கள். அவர்களை திசை திருப்புவதற்கும், என்னிடமிருந்து வேறு பக்கம் அழைத்துச் செல்வதற்கும் சூட்சுமமான எந்த முறைகளையும் அவர்கள் பயன்படுத்தாமல் விட்டு வைக்கவில்லை. அனைத்துவிதமான

சூழ்ச்சிகளையும் பயன்படுத்தி விட்டார்கள். கோட்பாடுகள் இன்றி நமது மார்க்கத்தில் குறைபாடுகள் எப்படி அறிமுகப்படுத்தப்பட்டன என்பதற்கு ஒரு உதாரணம் காண்பது ஒரு பக்கம் கடினமாக இருக்கப்போகிறது. அதேபோல இன்னொரு பக்கத்தில், நான் இந்த உலகை விட்டுச்சென்ற பிறகும் இந்தத் தீமைகளைக் களைவதற்கு எப்படியெல்லாம் முயற்சி செய்தேன் என்பதற்கும் வேறு உதாரணம் காண்பது கடினமாகவே இருக்கும். எல்லாப் பொறுப்புக்களையும் நான் ஏற்றுச் சுமந்து கொண்டு அவற்றை நிறைவேற்ற முயற்சி செய்து, அதற்கான ஏற்பாடுகளையும் செய்தேன். யாருடைய பொறுப்புக்களை நான் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டுமோ, அம்மாதிரி மனிதர்கள் அவர்களிடையே மிகச் சிலர்தான் இருந்தார்கள் என்றாலும்கூட, உலகியல் காலங்களின் மாறுகின்ற உண்மையினால், மற்றும் எனது சொந்த அன்பு மற்றும் கனிவான தன்மையினால், என்னுடைய அறிவும் திரையால் மறைக்கப்பட்டது. அதன் விளைவுகளை நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். இந்த மக்கள் கூட்டத்தில் உதவி செய்யக் கூடியவர்களாக ஒன்று அல்லது இரண்டு மனிதர்களுக்கு மேல் இருப்பதாகத் தெரியவில்லை. என்னை முற்றிலும் மறக்கப்பட்ட நிலைக்குத் தள்ளிவிட்டு வேறு ஒருவருடைய பள்ளத்தாக்கிற்கு (தாழ்ந்த இடத்திற்கு) விலகிச் சென்றுவிடுவதுதான் உங்கள் கடமை உணர்வா? அப்படிச் சென்றவர்கள் ஒரு பள்ளத்தாக்கில் (தாழ்ந்த நிலைக்கு) இறங்கியிருக்கிறார்கள். முட்புதர்களும் குப்பைகளும் தவிர வேறு எதுவுமில்லாத இடத்திற்குத் தான் அவர்களுடைய அதிர்ஷ்டம் அழைத்துச் சென்றிருக்கிறது. இன்னும் பலர் அபாயகரமான பள்ளத்தாக்குகளில், அங்கு வீசும் வறண்ட காற்று அவர்களுடைய சொந்த வீடுபற்றிய இனிய ஞாபகங்களை அவர்களிடமிருந்து பறித்துச் சென்றதால் அலைந்து திரிகிறார்கள். அவர்கள் பெரும்பாலும் வழிதவறிப் போய்விட்டார்கள். நல்ல மண்வளமும், நீர்ப்பாசன வசதியும் உடைய நிலம் என்று அவர்கள் எதை நினைத்தார்களோ அது வெறும்

சேறும் சகதியுமாக இருக்கிறது. இறைவனின் மெய்ஞ்ஞானப் பள்ளத்தாக்கில் (கடவுளின் தெய்வீக ஒளியை மோசஸ் தரிசனம் பெற்ற ஏமன் சமவெளியில்) நடந்து போகும் அனுபவத்தை அவர்கள் இன்னும் பெறவில்லை; அங்கே இருக்கும் இனிமையான பாதைகளை அறிந்து பாராட்டவும் இல்லை. அந்தப் பள்ளத்தாக்கின் இனிய காற்றின் புத்துணர்ச்சியும் அவர்களின் (enlightment) அனுபவத்திற்கு வரவில்லை. அதன் தூய்மையான பளிங்கு போன்ற ஊற்றுக்களின் தண்ணீரை அருந்தவும் இல்லை. அவர்கள் நிச்சயமாக ஏமாற்றப்பட்டுவிட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆனால், தெய்வீகத்துடன் ஒன்றிணைவதற்கு எதிரானதா? இல்லையா? என்று அவர்கள் நினைக்கலாம். என்னை மறப்பதும், தங்கள் இதயங்களை மற்றவர்களிடம் இணங்கச் செய்வதும் தான் அவர்களின் கடமையா? இப்போது காலம் வந்திருக்கிறது. இந்த சந்தப்பத்தை அவர்கள் கைநழுவ விடக்கூடாது. இந்த உண்மைகள் அனைத்தையும் அவர்களின் காதில் கேட்கச் செய்திருக்கிறேன் என்று நினைக்கிறேன். இவையனைத்தும் அவர்களின் சொந்த நன்மைக்காகவே. இப்போது அதற்கான நேரம் வந்திருக்கிறது. இதயபூர்வமான ஒரு அன்பும், முகத்தை இப்பக்கமாகத் திருப்புவதும்தான் தேவைப்படுகிறது. அவர்களிடம் ஒரு புதிய வாழ்வை உருவாக்குவதற்கு வேண்டியதான எதையும் நான் சொல்லாமல் விடவில்லை.''

''ராம் சந்த்தரின் வார்த்தைகள் (வேண்டுகோள்கள்) குப்பைக்கூடையில் போடப்படும் என்பதை நான் புரிந்து கொண்டிருக்கிறேன். அவர் சொற்படி நடக்க ஒருசிலர் மட்டுமே இருப்பார்கள். ஆனால், இரக்கம் மற்றும் கருணையின் சக்தியை அளித்திருந்தாலும், கடுமையாக, கண்டிப்போடு நடந்துகொள்வதற்கும் ராம் சந்த்தருக்கு அனுமதித்திருக்கிறேன் என்பதை அவர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அவர் எதைச் செய்தாலும் சரி, அதற்கு என் ஒப்புதல் உண்டு. எதையும் சொல்லாமல் விட்டுவிடக்கூடாது

என்பதற்காக இந்தக் கட்டுரையை போதுமான அளவுக்கு விரிவுபடுத்தியிருக்கிறேன். மேலும், குறிப்பிடத்தக்க விசேஷம் உடைய அனைத்து விஷயங்களும் அதில் அதன் சொந்தத் தன்மையில் மீண்டும் மீண்டும் இடம் பெறும். இதில் மனம் தடுமாறவும், சந்தேகப்படவும் எந்த ஒரு சந்தர்ப்பமும், யாருக்கும் இருக்காது. இல்லையென்றால் நான் யோசித்து வைத்துள்ள மற்றும் எதற்காக வந்தேனோ அந்தக் கடைசியான குணப்படுத்தும் முயற்சியை நான் பயன்படுத்துவேன்.''

''இதை ஒருவிதமான பிரசாரம் என்று சிலர் நினைக்கக்கூடிய சாத்தியம் உண்டு. அம்மாதிரி எண்ணங்களை அவர்கள் தவிர்க்க வேண்டும். ராம் சந்த்தர் அவர்களுடைய அடிமை அல்ல. மேலும், அவருக்குப் பணத்தின் மீது ஆசையும் இல்லை. கடவுள் அவருக்கு ஏற்கெனவே போதுமான அளவுக்கு சமுதாயத்தில் மரியாதையையும் வசதியையும் அளித்திருக்கிறார். இந்தக் கூட்டத்தில் இருக்கின்றவர்களில் பலர் ராம் சந்த்தருடன் அந்த விதத்திலும் கூட போட்டிபோட இயலாது என்பது எனக்குத் தெரியும். இதுவரையில் பண உதவிக்காகவும், ஆதரவுக்காகவும் எந்த ஒருவரையும் தேடிச் செல்ல வேண்டியதாக இருந்ததில்லை, வருங்காலத்திலும் அப்படி இருக்காது. நான் குறிப்பிட்டுள்ள இந்த விஷயங்கள் பற்றி தங்கள் உள்ளங்களில் தோன்றுகின்ற கேள்விகள் மற்றும் சந்தேகங்கள் ஆகிய அனைத்தையும் மக்கள் எடைபோட்டுப் பார்த்து, மதிப்பிட்டு சரியான பாதைக்கு வரலாம். இதைவிட அதிகமாக நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை. உருது மொழியில் உள்ள ஈரடிச் செய்யுளில் பாதியை மட்டும் இங்கே சொல்கிறேன். 'நீ காட்டிலுள்ள முள் மாதிரி எல்லை மீறி வளர்ந்து விட்டால், அது அறுவை சிகிச்சை மருத்துவரின் கத்தியைப்போல வேலை செய்யும்' – இந்தக் கொள்கைக்கு நான் வரவேண்டியிருக்காது எனலாம். இந்தக் கட்டுரையை இங்கே நான் முடித்துக் கொண்டிருக்கிறேன்.''

‘‘என் உடல் மறைந்த பிறகு இம்மாதிரி ஒரு கட்டுரையை நான் எப்படிச் சொல்கிறேன் என்று மக்கள் வியப்படைவார்கள்! அதற்கு ஒரு சான்றாக – ஆதாரமாக ராம் சந்த்தரை நான் முன்னிறுத்துகிறேன். மக்கள் இதில் தங்கள் சொந்த அனுபவத்தைப் பெறலாம். பிரியமுள்ள ராம் சந்த்தரை என் ஆயுட்காலத்திலேயே நான் பூரணத்துவ நிலைக்கு உருவாக்கிவிட்டேன் என்பதையும் உங்களுக்குக் காதில் கேட்கச் செய்ய விரும்புகிறேன். குறிப்பிட்ட சில காரணங்களுக்காக நான் அவரை மறைத்து வைக்க வேண்டியிருந்தது. தாங்கள் அறிந்துள்ள எல்லாவிதமான சோதிக்கும் முறைகளினாலும் மக்கள் அவரை சோதனை செய்து பார்க்கலாம். அவர்களின் விருப்பம் போல எந்த ஒருவிதத்திலுலும அவர் மூலமாக அந்த சோதனைகளில் திருப்தியடையலாம் அல்லது யாருக்காவது கர்வத்தின் போதை இருக்குமானால், அவர் ராம் சந்த்தராவுக்கு சவால் விட்டு, அதன் விளைவைப் பார்க்கலாம்! அவ்வளவு தான்.’’

‘‘மேற்கண்ட கட்டுரைக்கு ‘ஆண்டுவிழா சம்பந்தமான பொது அறிவிப்புக் கட்டுரை’ என்று தலைப்பு கொடுக்க வேண்டும்.’’ (வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் அவர்கள் தானே சொல்லி எழுதச் செய்து, அங்கே விழாவில் படிக்கவேண்டும் என்று உத்தரவிட்டார்).

**இந்தக் கட்டுரைக்கான வாசகங்களை சொல்லி முடித்தபிறகு மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

‘‘B1 தன்னை நேசிப்பதாக J1 நினைத்திருக்கிறார். ஆனால், B1- க்கு தன் மனைவி மற்றும் குழந்தைகள் தவிர வேறு யார்மீதும் அன்பு கிடையாது. இதற்கும் மேலாக J1- க்கு ஏதாவது நோக்கம் மனதில் இருந்தால், அது B1- மூலமாக நிறைவேற முடியாது. அவருடைய வழிகாட்டி (குரு) இன்னும் மனித உருவில் இருக்கிறார். J1 விரும்புவது எதுவாயினும் அதை அந்த குருவிடமிருந்தே பெற முடியும். நித்திய ஜீவிதமாகிய

உலகிற்கு அவர் பயணம் செய்தால் அதன் கடைசி நிலை (தூரம்) வரையில் J1- ஐ அழைத்துச் செல்வதற்கு வேண்டிய சக்தி B1- இடம் இல்லை. அப்போது – அந்தச் சமயத்தில் உன்னை வெளிப்படுத்துவதற்கு நான் விரும்பாமல் இருந்தேன். அதனால், J1– இன் கவனத்தை B1- ஐ நோக்கித் திருப்பினேன். N1 பற்றிய எல்லா நம்பிக்கைகளையும் நான் ஏற்கெனவே இழந்திருந்தேன். அதனால், J1- ஐ ஒப்படைப்பதற்கு, B1- ஒருவர் மட்டுமே ஒரு மூத்த சகோதரர் என்ற முறையில் இருந்தார். இப்போது J1 உண்மையாகவே பயிற்சியைப் பெற விரும்பினால், உன்னைவிட மேலான யாரையும் அவரால் காணமுடியாது. J1- க்கு மனிதர்களை சீர்தூக்கிப் பார்த்துத் தீர்மானிக்கும் திறமை கிடையாது. எனவே உன்னைப் பற்றிய மதிப்பீட்டில் அவர் தவறு செய்திருக்கிறார்.''

**9–8–1944**

**வணக்கத்திற்குரிய மாஸ்டரிடம் (லாலாஜியிடம்) கேள்வி:**

''உங்கள் மீது மிகவும் பக்தி உடைய சிலர் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் உங்களால் மட்டுமே தீட்சை அளிக்கப்பட விரும்புகிறார்கள் என்றால் அது சாத்தியமாகுமா?''

**மாஸ்டரின் (லாலாஜியின்) பதில்:**

''ஆம். முடியும். ஆனால், அது மிக அரிது. ஏதோ ஒருவருக்கு மட்டுமே அது அமையும் அல்லது அரைகுறையாக இருக்கும்.''

**மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

''பயிற்சியளிப்பதற்கான அனுமதி தருவதில் அவருடைய உள்நிலை நிலையாக ஆக்கப்படுகிறது. M1- இடம் எதுவுமே குறையிருப்பதாகத் தெரியவில்லை. ஏதோ ஒரு பழக்கத்தைக் கைவிடுவது மட்டுமே மீதியிருக்கலாம். எனினும், நீந்திச் செல்லவேண்டிய மகாசமுத்திரம், எல்லையற்றது. ஆன்மீகத்தின் இன்றியமையாத குணம்

நன்னடத்தையையே சார்ந்திருக்கிறது. இவ்விரண்டும் (ஆன்மீகமும், நன்னடத்தையும்) ஒன்றையொன்று சார்ந்தே இருக்கின்றன. (இதன் விளக்கம் காட்சிக்கு வந்தது). நன்னடத்தையின் சாராம்சத்தை எடுத்துவிட்டால் இரண்டு தன்மைகளும் ஒன்றேயாக மாறும். M1- இன் தந்தை நல்ல நிலையில் இருக்கிறார் மற்றும் நல்லாசிகள் அளித்துக் கொண்டிருக்கிறார்.''

''பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள வணக்கத்திற்குரிய என் மாஸ்டரின் ஆடைகளையும், என்னுடைய ஆடைகளையும் நீ எடுத்துக் கொள்ளலாம். குறைந்தபட்சம் தொப்பியையாவது எடுத்துக்கொள். அவர்கள் ஏதாவது ஆட்சேபம் தெரிவித்தால், அதற்கு நான் ஈடுசெய்வேன். யாருக்கும் உன்மீது சிறிதும் அன்பில்லை. J1- க்கு உன் மீது அபிமானம் கிடையாது; உண்மையில் இந்தக் குணத்தை இழந்த நிலையில் இருக்கிறார். K......யில் இருக்கும் மற்ற அனைவரும் சுயநலக்காரர்கள். நீ அவர்களுக்கு இந்த உலகம் முழுவதிலும் உள்ள செல்வங்கள் அனைத்தையும் கொடுத்தாலும், இன்னும் அதிகமாக வேண்டும் என்று அழும் அளவுக்கு அவ்வளவு மிகப்பெரிய பேராசை அவர்களுக்கு இருக்கிறது. N1 - ஐ நரகம் அழைத்துக் கொண்டிருக்கிறது. அவருக்கென்று சாக்கடைக்குழி தயாரிக்கப்பட்டுள்ளது. நரகம் என்பது கும்மிருட்டு விளங்குகின்ற ஒரு இடமாகும். அங்கே சிறிதளவும் ஒளி இல்லை. அதில் தள்ளப்படுகின்ற ஆன்மாக்கள் தங்கள் சொந்த எண்ணங்கள், பதிவுகள் ஆகிய வலையில் அகப்பட்டு, அந்தச் சிக்கலில் வதைபடுகிறார்கள். அங்கே ஏதோ ஒரு பொருள் இருக்கிறது. அதன் காரணமாகவே ஒவ்வொரு எண்ணமும் வளர்ச்சியடைகிறது. அங்கே நீர்ச்சுழல் போன்ற ஒரு சக்தி சுழன்று கொண்டு இருக்கிறது. ஆன்மாக்கள் அதைச் சுற்றிச்சுற்றி வருகின்றன. இதன் பலனாக மனத்தின் சுழற்சி ஆரம்பமாகிறது. இந்தத் துன்ப வேதனையை சம்பந்தப்பட்ட அந்த ஆன்மாவினால் மட்டுமே உணரமுடியும். கடவுள்

அதிலிருந்து அனைவரையும் காப்பாராக. அதன் திட்டத்தைக்கூட உனக்குக் காட்ட நான் விரும்பவில்லை. இந்த (நரகத்தில் தள்ளும்) சக்தியை நான் உனக்கு அளிக்கிறேன். என் ஆயுட்காலத்தில் நான் யார்மீதும் இதைப் பயன்படுத்தியதில்லை. நீயும் அதைச் செய்யக்கூடாது. எனக்கு மக்கள் எத்தனை எத்தனையோ தொல்லைகளைச் செய்தாலும் நான் அவர்களுக்குத் தீமை செய்யவில்லை. என்னுடைய ஆயுட்காலத்தில் நான் அனைத்து சக்திகளையும் முழுமையாகப் பெற்றிருந்தேன்.''

C1 தனது பழைய நடைமுறைகளுக்குத் திரும்பிச் சென்றுவிட்டார். எண்ணிக்கையை அதிகரிப்பதில்தான் அவருக்கு அக்கறை இருக்கிறது. அங்கே ஆன்மீகம் இருக்கிறதா? என்பது பற்றிய கவலை அவருக்கு இல்லை. மக்கள் தன்னை வணங்கிக்கொண்டே இருக்கவேண்டும் என்பதற்காக அவர் தன்னையே ஆன்மீகத்தின் கடவுளாகச் செய்து கொண்டுவிட்டார். இதற்கிடையில் அவர் பயங்கரமான நஷ்டத்தை அடைந்திருக்கிறார். K.......யில் இருக்கும் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்தாலும் செய்ய முடியாத, ஒரு தன்மையை உனது ஒரு பார்வை அவருக்கு உண்டாக்கியிருக்கிறது. அந்தத் தன்மையை சரியான விதத்தில் வார்த்தைகளால் சொல்வது கடினம்; அதாவது, அவருக்கு நன்மையளிக்கும் தன்மையின் போக்கு (அவருக்குக் கிடைக்கும் நன்மை) தடை செய்யப்பட்டிருக்கிறது. நானும் மௌனமாகியிருக்கிறேன். உனது பொதுவான பிராணாஹுதியும் இப்போது அவரிடம் எந்த விளைவும் ஏற்படுத்தவில்லை. நீ அவருக்கு என்ன செய்திருக்கிறாயோ அதன் காரணமாகத்தான் இப்படி நேர்ந்திருக்கிறது. அது நீக்கப்பட்டால் அதன் பிறகு உன் பிராணாஹுதியின் விளைவு உருவாகத் துவங்கலாம். ஆனால், அதற்கு நான் அனுமதியளிக்கவில்லை. M1 - இன் பிராணாஹுதியும்கூட அவரிடம் (C1 - இடம்) எந்த விளைவையும் உண்டாக்காது. S1 தனது பழைய பாதைக்கே திரும்பிவிட்டார். அவர் ஒரு அங்குலம் கூட இசைந்து கொடுக்கவில்லை. மக்கள் அவரை

நாடிச்செல்வது குறைந்துவிட்டது. அவர்களை முகஸ்துதி செய்வதன் மூலமாக (நயமாகப் புகழ்ந்து பேசுவதன் மூலமாக) தன் வலைக்குள் இழுக்க அவர் விரும்புகிறார். என் பெயரை அவர் சொல்கிறார். ஆனால், தனது குருத்துவத்தை (குரு என்ற பதவியை) நிலைநிறுத்திக் கொள்வதற்கே விரும்புகிறார். சீடர்களைத் தன் பட்டியலில் சேர்த்துக் கொள்வதில் மற்றும் எண்ணிக்கையை அதிகரிப்பதில்தான் அவருக்கு அக்கறை இருக்கிறது. அவர் தன் உழைப்பை ஈடுபடுத்துகிறார், ஓரளவுக்கு அது நன்மையளிக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அவர் தனது சுய முக்கியத்துவத்தை கைவிடவில்லை. பயிற்சி அளிப்பதற்குக் கொடுத்துள்ள அனுமதி இந்த இரண்டு பேரிடமிருந்தும் விலக்கிக் கொள்ளப்பட்டிருக்கிறது. நீ அவர்களுக்கு மீண்டும் புதிதாக அனுமதியளிப்பதாக இருந்தால், அவர்களை அதற்கான குறிப்பிட்ட வடிவத்துக்குக் கொண்டு வந்த பிறகே செய்யவேண்டும். அவரைத் தடை செய்துவிட்டால் அவருடைய குரு பதவிக்கு அதிர்ச்சி உண்டாகும். எனவே, அவர் ஏன் இந்தத் தடையைக் கவனிக்கப்போகிறார்? சூழ்நிலை முழுவதும் கெட்டுப்போயிருக்கிறது. யாருக்காக, எத்தனைபேருக்காகத்தான் அழ வேண்டியிருக்கிறது!''

## 1944 ஆகஸ்ட் 8ஆம் தேதி காரண சரீரம் பற்றிக் கூறிய குறிப்புக்கள் பற்றி M1 கேட்ட கேள்வி:

''மீண்டும் மீண்டும் பிறக்கும் போதும் ஒவ்வொருவருடைய காரண சரீரமும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டதாக இருக்கும்போது, ஒவ்வொரு காரண சரீரத்திலும் இருக்கும் ஆன்மாவும் வேறுபட்டது தான் இல்லையா?''

அதற்கு பதிலாக அது பற்றிய காட்சி பார்வைக்குக் கொண்டுவரப்பட்டது. மாஸ்டர் தொடர்ந்து கூறியது:

''உடலை விட்டுச்சென்ற பிறகு இயற்கையின் பல ரகசியங்கள் தெரியவருகின்றன. அனுபவத்திற்குக் கொண்டுவருவது சிரமமாக இருக்கும் ரகசியங்களும் கூட உள்ளன. N1 உன்னை (ராம் சந்த்தரை) கீழே இழுப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தார். அது அவருடைய திறமைக்குள் இருக்கவில்லை. கூட்டு தியானம் நடத்தப்பட்டுக் கொண்டிருந்தது என்ற எண்ணம் உனக்கு இருந்தது. மற்றவர்களின் முன்னிலையில் உன்னைப் பாராட்டிப் பேசப்படவில்லை. M1 – ஐ சந்தோஷப்படுத்துவதற்காக ஏதோ ஒரு சமயத்தில் ஏதாவது சொல்லியிருக்கலாம். 'ராம் சந்த்தர்தான் இந்தக் குடும்பத்தின் விளக்காக இருப்பார்' என்று M1 - இடம் நான் ஒருமுறை சொன்னேன். தனது நல்ல குணத்தினால், M1- இதை அந்த (பெரிய மனிதரிடம்) N1- இடமும் கூட உளறிவிட்டார். அது உனக்கு மேலும் தீமை செய்வதாக ஆகிவிட்டது. ஆனால், அவை தெய்வீக வாக்கியமாக இருந்ததால் அவை மிகச் சரியாக அப்படியே வெளிப்பட்டன. N1- ன் சக்திக்கும், திறமைக்கும் உட்பட்டதாக இருந்த, எல்லாப் பேரழிவுகளையும் உனக்கு உண்டாக்குவதற்கு முயற்சி செய்யப்பட்டது. உன்னை அழைப்பதற்காக அனுப்பப்பட்ட செய்திகளில், உன் உள்நிலையைக் கவனித்து அறியும் ரகசியம் அடங்கியிருந்தது. உன் உண்மையின் ஆன்மீக உள்நிலை, அவர்களுக்கு எட்டாத உயர்நிலையில் இருந்ததால், அதைப் புரிந்து கொள்வது அவர்களின் திறமைக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. எனவே, உன்னைப் பாராட்டிப் புகழ வேண்டும் என்ற உந்துதல் எனக்கு உண்டாகிறது. நான் உன்மீது பொழிந்துள்ள பாராட்டு மழையைப்பற்றி அவர்கள் கேலியாகப் பேச நினைத்தால் சத்தியநிலையுடன் அவர்களின் தொடர்பு வெட்டிவிடப்படும் என்று உறுதியாகச் சொல்கிறேன். கவலைப்பட வேண்டாம் என்று M1 – இடம் தெரிவிக்கவும். உன்னுடைய கண்பார்வை ஒருபக்கம்

திரும்பினால், நானும் என் பார்வையை அதே பக்கம் திருப்ப வேண்டியிருக்கும். அதனுடைய விளைவு தானாகவே (அவர்களுக்குத்) தெரியவரும். சத்தியம் மறைந்தே இருப்பதில்லை. இதைப் பார் (சிரிப்புடன்) உன்னை சிறிதும் பாதிக்கப்படாமல் எப்படிக் கொண்டு வந்திருக்கிறேன் என்று பார்! உன்னிடமும் ஒரு தவறு இருந்தது. நீ என்னையே எல்லாமும் ஆகக் கருதியிருக்கும்போது, வேறு ஒருவரை ஏன் நம்பிச் சென்றாய்? நீ செய்த இந்தத் தவறு சுத்திகரிப்பில் நீக்கப்பட்டது. அதற்கு உன் எளிமையே காரணம். மேலும் யாரிடமும் நீ தீமையைக் காணவில்லை. நண்பனுக்கும் எதிரிக்கும் இடையே நீ வேறுபாடு காண்பதில்லை. அது உன் இயல்பாக இருக்கிறது. இரண்டற கலத்தல் என்றால் ஒன்றுபட்டு இருத்தல் என்று பொருள். தனது ஆன்மாவை இன்னொருவருடைய ஆன்மாவுடன் ஒன்றுபட்ட தன்மை அடையச் செய்வதால் பிராணாஹுதி அளிப்பது ‘இணைந்த பிராணாஹுதி’ (Ittehadi Tawajjeha) என்று சொல்லப்படுகிறது. (அந்த வழிமுறை சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டது). இந்தப் பிராணாஹுதி தடை செய்யப்பட்டுள்ளது.’’

**கேள்வி:**

‘‘அது எப்பொழுது கொடுக்கப்படுகிறது?’’

**மாஸ்டரின் பதில்:**

‘‘உள்ளிருக்கும் குணம் தன்னைப்பற்றித் தெரிவிக்கும் போது ‘இரண்டறக் கலந்த பிராணாஹுதி’ தேவைப்படுகிறது. சில மனிதர்கள் தங்கள் திறமையைப்பற்றி மிகவும் கர்வத்தின் போதை கொண்டு ஒரு புதிய அர்த்தத்துடன் (புதிய விதத்தில் பொருள்படுத்தும் விதத்தில்) வார்த்தைகளை அலங்கரிப்பதில் பெருமை கொள்கிறார்கள். ஏனென்றால், அந்தக் கூட்டத்திலுள்ள மனிதர்கள், – அதைக் கேட்டுக் கொண்டிருப்பவர்கள் — அந்த அளவுக்கு அறிவுத்திறன் உடையவர்களல்ல

என்பதை அவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். B1 சொல்வதைக் கேட்டுக் கொண்டிருப்பவர்கள் அவருடைய சிறப்பான தன்மையின் மீது கொண்ட நம்பிக்கையால் கட்டுப்பட்டிருப்பதால், அவருடைய வார்த்தைகள் வேதம் மற்றும் சாஸ்திரங்களின் ஆதாரத்தில் அமைந்தவை என்று கருதப்படுகின்றன. ஏனெனில், அந்த எளியமக்களுக்கு தாங்களாகவே அதைப் புரிந்துகொள்ளும் திறன் இல்லை. இந்தக் காட்சியை உன் பார்வைக்கு நான் கொண்டு வந்திருக்கிறேன். உன் உருவம் அங்கே நிலை நிறுத்தப்பட்டுள்ளது. அது அழிக்கப்பட்டுவிட்டால் – நினைவிலிருந்து நீக்கப்பட்டால் – நீ இப்போதே உயிர் வாழ்க்கையை விட்டுச் சென்றுவிடுவாய். என்னுடைய ஐக்கிய நிலையை உன் பார்வைக்கு நான் கொண்டு வந்தேன். என்னோடு சேர்ந்து நீயும் கூட ஐக்கியம் அடைந்து விட்டதாக நீ உணர்ந்து இருந்தாய். அந்தக் காட்சியை உன் பார்வைக்குக் கொண்டு வந்ததில் எனக்கு ஒரு விசேஷ நோக்கம் இருந்தது. உன்னுடைய ஐக்கிய நிலையுடன் விரிவாக்கம் ஆரம்பமாகியிருந்தது. இந்த உள்நிலையை (அதைக் குறிப்பிடுவதற்கு ‘உள்நிலை’ என்ற வார்த்தை பொருத்தமானது அல்ல என்றாலும்) பார்த்தவுடன், அந்த நிலைக்குக் கொண்டு செல்லப்படும் அதிர்ஷ்டத்தைப் பெற்றவர் யாராக இருந்தாலும் அனைவரும் உடலைவிட்டு வெளியேறி விடவே விரும்புவார்கள். என்னைப்போல ஒருவழிகாட்டி உனக்கு இல்லாமல் போயிருந்தால், பௌதீக மூலகங்களால் ஆகிய இந்தக் கூட்டைவிட்டு நீ பறந்து சென்றிருப்பாய். இந்த நிலைக்கு நானும் உள்ளாகி இருந்திருக்கிறேன்.’’

சிறிது நேரத்திற்குப் பிறகு அந்த உள்நிலை அடங்கி, பௌதீக உடலை விட்டு நீங்கிச் செல்லும் எண்ணம் வணக்கத்திற்குரிய மாஸ்டரினால் நீக்கப்பட்டது. அந்தச் சுவையின் உள் அனுபவம் மட்டுமே மீதியிருந்தது.

10-8-1944

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் சந்தோஷமாகக் கூறியது:**

''என்னிடமிருந்து நீ எதைப் பெறுவதற்கு விரும்பினாலும் அதைக் கேள்.''

**என் பணிவான கருத்து:**

''என்னுடைய மாஸ்டரிடம், தன் கடவுளிடம் பிச்சை கேட்பதில் தவறு எதுவுமில்லை என்றாலும், என்னுடைய புனிதமான பிரபு எல்லாமே எனக்கு அருள் செய்திருக்கிறார்; தன்னையே என் ஜீவனுக்குள் கரையச் செய்திருக்கிறார். இப்போது இன்னும் நான் கேட்பதற்கு என்ன மீதி இருக்கிறது?''

**வணக்கத்திற்குரிய மாஸ்டரின் நல்லாசிகள்:**

''கடவுள் உனக்கு மிகப்பெரிய அதிர்ஷ்டத்தை அளிக்கட்டும். உன்னைக் கண்டறிந்ததில் நான் அனைத்தையும் அடையப் பெற்றேன். இவ்வுலகில் என்னை என்றும் புதிதாக நினைவில் நிலைக்கச் செய்வாய். அந்தச் சமயத்தில் உன்மீதான என் பாசம் பொங்கிக் கொண்டிருந்தது. அதன் பலனாகவே நீ விரும்புவது எதுவாயினும் அதை நான் நிறைவேற்றுவேன் என்று உனக்கு வாய்ப்பளித்தேன். நான் உனக்கு அனைத்தையும் கொடுத்துவிட்டேன்; நீயும் அனைத்தையும் என்னிடம் சரணாகதியாகக் கொடுத்து விட்டாய். நீ என்னிடம் எதை சரணாகதியாகக் கொடுத்தாயோ, அதை நான் என்னிடம் வைத்திருக்கிறேன். நான் உனக்கு என்ன அருள் செய்தேனோ அதை நீ உன்னிடம் வைத்திருக்கிறாய். ஒரு மனிதன் தன் அன்பின் காரணமாக, தனது அன்பிற்குரியவருக்கு அனைத்தையும் சரணாகதியாக அளித்துவிட்டால், யாரிடம் அவர் சரணடைந்திருக்கிறாரோ அவருக்குச் சொந்தமான அனைத்தும் அவருக்குள் (சரணடைந்திருப்பவருக்குள்) நிரப்பப்படுகின்றன என்கிற இது ஒரு தத்துவமாகும். சாதகர்

சரணாகதியடைவதில் எவ்வளவு குறையுடையவராக இருக்கிறாரோ அதே விகிதத்தின்படி மாஸ்டரிடமிருந்து வருகின்ற பரிசும் குறையும். இவ்வுலகம் பிரதிபலன் தரும் பண்பின் இருப்பிடமேயாகும். இந்தக் கையிலிருந்து நீங்கள் கொடுப்பது போல, இன்னொரு கையில் நீங்கள் பெறுகிறீர்கள். யாராவது எனக்கு எந்த அளவுக்குக் கொடுக்கிறார்களோ, அந்த அளவு அதற்குப் பதிலாக அவர்களுக்கு நான் தருகிறேன். அவர்களில் எந்த ஒருவருக்கும் கடன்பட்டவனாக நான் என்னை வைத்துக்கொள்ளவில்லை. உன் கூட்டத்தாரில் கொடுக்கும் எண்ணம் உடையவர்களாக மிகச்சிலர்தான் இருக்கிறார்கள். மற்றவர்கள் பெரும்பாலும் எடுத்துக்கொள்வதிலும் பிடுங்கிக்கொள்வதிலும் ஆசையுடையவர்களாக இருக்கிறார்கள். நான் எல்லோரையும் என்னுடையவர்களாகக் கருதினேன். ஆனால், யாரும் என்னைத் தன்னுடையவராகக் கருதவில்லை. இதில் சிலர் விதிவிலக்காக உள்ளனர் என்பதில் சந்தேகமில்லை. அவர்களை நான் விட்டுவிடுகிறேன். எனது சகாக்களில் போதை மருந்துப் பழக்கம் உடையவர்கள் நிறைய இருந்தார்கள். (அதாவது ஆன்மீகபோதையில் விருப்பம் உடையவர்கள் நிறைய இருந்தார்கள்.) சத்திய நிலையை நாடியிருப்பவர்கள் மிக அரிதாகவே இருந்தார்கள். அவர்களுடைய மனப்பான்மைக்கு ஒத்துப்போகிற மாதிரி எங்கேயாவது ஏதாவது கிடைக்கும்போது அந்தப் பக்கத்துக்குத் தாவிச் செல்வதில் சிறிதும் தயக்கமோ சங்கடமோ அவர்களுக்கு இல்லை. அங்கு உண்டாகும் போதைமயக்கத்தில்தான் அவர்களுக்கு ஆர்வம் இருந்தது. அவர்களின் ஆசைகளுக்கு வேறு எந்தக்குறிக்கோளும் இருக்கவில்லை. நமது சமுதாயத்தில் (நமது சங்கத்தில்) நீ அவதிப்பட வேண்டியிருக்கின்ற சூழ்நிலைகள் இவை. தற்சமயம் இந்த நிலைமை மிக மோசமாக இருக்கிறது. ப்ரம்ம வித்யையை (பரம்பொருளாகிய சத்திய நிலை பற்றிய விஞ்ஞானம்) பணத்தால் விலைக்கு வாங்கிவிடலாம் என்றே பெரும்பாலும் மக்கள்

விரும்புகிறார்கள். அவர்களுக்கு அப்படித்தான் கற்பிக்கப்பட்டுள்ளது. மிக விசேஷமான பக்தர்களை நான் இதில் சேர்க்கவில்லை. உண்மையான விதத்தில் அவர்கள் சீடர்களாகக் கூட ஆகவில்லை என்றபோதும், மாஸ்டர்களாக ஆவதற்கு மக்கள் ஆசைகளை வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள். K.......என்ற இடத்தில்தான் இம்மாதிரி ஆசைகள் உருவாகின. கிறிஸ்தவ மதத்தில் தரப்படும் சான்றிதழ்கள்போல, பயிற்சியளிப்பதற்கான அனுமதி வாங்கப்படுவதும், விற்கப்படுவதும் ஆரம்பமாயிற்று. கையூட்டு பெறுவது அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த ‘நல்ல வேலை’க்காக தரகர்களும் நியமிக்கப்பட்டார்கள். பிரார்த்தனை மற்றும் ஆசியளித்தல் ஆகியவற்றுக்கு கேட்கப்படுவது துவங்கியது. ஓரளவுக்கு இந்தப் பொய்களுக்கான பொறுப்பு A1-னுடையதேயாகும். கடைசியில் அவருடைய பெயரை நான் வெளிப்படையாக சொல்ல வேண்டியதாயிற்று. ‘கடவுளைத் தவிர வேறு யாரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதில்லை’ என்கிற இந்தக் கருத்து மனதில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இனிப்புக்கள் மற்றும் பலவகையான ஜீரண சக்திக்கு அதிகமான மற்றும் விலைமதிப்பு மிக்க உணவுகளின் மீது ஆசை பெருகிவிட்டது. தானியங்கள் சேர்ந்த கஞ்சி, காய்கறிச்சாறு போன்ற விலைகுறைந்த ஆனால், சத்துக்கள் நிறைந்த உணவை யாரும் விரும்புவதில்லை. நமது மார்க்கத்தில் அறிமுகப்படுத்தப்படுவதும், பிரபலமாக்கப்படுவதும் சத்திய நிலையாகவா இருந்தது? இம்மாதிரி விஷயங்களுக்கு அடித்தளம் உண்டாக்கியவர்களைத்தான் நான் குறை சொல்கிறேன். தேவை உடைய மனிதன் கவனமற்றவனாக ஆகிறான். தனது தேவை நிறைவேறுவதற்கான தூண்டுதலின் கீழ் அவன் எதையும் செய்கிறான். நிலைமை இப்படி இருப்பதால் சாதகர்கள் மன்னிக்கப்படலாம். ஆனால், ஆன்மீகமாகிய ஸ்தாபனத்தின் தலைவர்களாக தங்களைக் காட்டிக் கொள்கிறவர்கள் மன்னிக்கப்படுவதற்குத் தகுதியற்றவர்கள். இது நான்

உனக்குச் சொல்கின்ற ஒரு புதிய கருத்து. இன்னும் சொல்ல வேண்டியது ஏதாவது இருந்தால் அதை உடனே நான் சொல்வேன்.''

''மக்களின் இதயத்திற்குள் நேரடியாகச் சென்ற அலை இது. உன் ஆலோசனைக்குப் பாராட்டுக்கள். இப்படியே முன்னேறிச் செல். வெற்றி வந்தே தீரும்.'' (அதிலுள்ள நிறமூட்டும் தன்மை மாற்றப்படுவதற்காக அந்த அலையை தெய்வீக ஒளியினால் நிரப்புவதற்கான ஆலோசனை அது.)

**இரவு 9 மணிக்கு M1 தியானத்தில் உட்கார்ந்திருந்தார். அப்போது ஒரு விசித்திரமான ஆன்மீக உள்நிலை அவரிடம் பரிணமித்தது. அப்போது அங்கு இருந்த மாஸ்டர் அவருடைய தியானத்திற்குப் பிறகு குறிப்பிட்டுக் கூறியது:**

''M1 இடத்தில் ஏதோ ஒன்று திறக்கப்பட்டுள்ளது. அது பற்றி விவரிக்கும்படி முதலில் அவரிடம் கேள். அதன்பிறகு அது என்னவென்று நான் சொல்வேன்.''

**M1 தனது உள்நிலை பற்றி விவரிக்க முயற்சி செய்த பிறகு, வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''அனைத்து சக்திகளும் எங்கிருந்து வருகின்றனவோ, அந்த சேமிப்புக் கிடங்கினுள் அவர் புகுந்திருக்கின்றார். அவருக்கு என் பாராட்டுக்கள். மக்கள் இந்த மிகச்சிறந்த வாய்ப்பைத் தவற விட்டு விட்டார்கள். இல்லையென்றால் அவர்கள் எவ்வளவு மேலானவர்களாக மாறியிருப்பார்கள் என்பதைக் கடவுள் மட்டுமே அறிவார். தற்சமயம் இந்த அனைத்து சக்திகளும் உன்னிடம் எழுச்சி பெற்றுள்ளன. உன்னிடமிருந்தும்கூட இந்த உள்நிலை கடந்துபோகும். வழிபடும் லட்சியத்தின் நிலையில் அவர் ஐக்கியமடைவது ஆரம்பமாகியிருக்கிறது. B1- ன் உள்நிலை பரப்பிரம்மாண்டம் என்ற நிலையிலிருந்து

பிரம்மாண்ட மண்டலத்துக்கு இறங்கி வந்திருக்கிறது. அவருடைய செயல்களே இந்தத் தாழ்வுநிலைக்குக் காரணமாகியுள்ளன. என்னுடைய ஆயுட்காலத்திலேயே என்னுடைய மூல அம்சங்கள் ஒவ்வொன்றும் (பஞ்சபூதங்கள் என்று கூறப்படும் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பவை) பரமாத்மாவில் (பரம்பொருளின் ஜீவத்தன்மையில்) ஐக்கியம் அடைந்திருந்தன."

## 11-8-1944

### வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

''அந்தப் புள்ளியில் ஐக்கியநிலை அடையப்பெற்ற பிறகு M1, இன்னும் மேலே போய்க்கொண்டிருக்கிறார். சீடர்களில் யாரும் இதுவரையில் இந்தநிலையை அடையவில்லை. இந்த மாதிரி குறிப்பிட்டுச் சொல்லும்போது, நீ அதில் விதிவிலக்காக இருக்கிறாய் என்பதை நீ (ராம் சந்த்தர்) அறிந்திருக்க வேண்டும். உன் விஷயத்தில் நீ அடைய வேண்டிய உயர்நிலை எதுவும் பாக்கியில்லை. சந்தேகப்படும் (அதாவது நீ அந்த நிலையை அடைந்திருக்கிறாயா? இல்லையா? என்று யோசிக்கும்) பழக்கத்தை விட்டுவிடு. அது தீமைமிக்கது. அந்த உள்நிலை மிக விரைவில் வர இருக்கிறது. அப்போது, உன் குற்றச்சாட்டு முடிந்து போகும். அதாவது, நீ பரமாத்மாவில் (பரம்பொருளின் ஜீவத்தன்மையில்) ஐக்கியம் அடைந்து கொண்டிருக்கிறாய். நேற்று இரவு நான் உன்னிடம் குறிப்பிட்டுச் சொன்ன தன்மையில், அதாவது, ஒவ்வொரு சக்திக் கூறும் பரம்பொருளின் ஜீவத்தன்மையில் முற்றிலும் ஐக்கியமடைந்த நிலைக்குள் நீ வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறாய். உன்னிடம் உருவாக்கப்பட்டுள்ள கூரிய தன்மையானது அதில் (பரமாத்மாவில்) இணைந்துவிட்டதன் – ஒன்றுபட்ட தன்மையின் – பலனேயாகும். நான் இதற்கு தடைகள் பயன்படுத்த விரும்பினேன். ஆனால், அது எனக்கு அப்பாற்பட்ட ஒரு விஷயமாகத் தோன்றுகிறது. நான் இதில்

செயலற்றவனாக உணர்கிறேன். ‘அப்பாற்பட்ட விஷயம்’ என்றால் உன்மீது என் கட்டுப்பாட்டை இழந்து கொண்டிருக்கிறேன் என்று பொருள். உன்னுடைய நினைவு எனக்கு எந்த சிரமமும் ஏற்படுத்துவதில்லை என்றாலும், என்னை அமைதியற்றவனாக வைத்திருக்கிறது. ஆனால், இந்த விஷயத்தில் (என்னை நினைக்க வேண்டாம் என்று) உன்னை நான் தடுக்கவில்லை. அது உன் இதயத்துக்கு ஒரு பேரதிர்ச்சியை உண்டாக்கும். அது உனது ஆயுட்காலப் பயிற்சி; எந்த விதத்திலும் அதிலிருந்து நீ வெளியேற முடியாது. உனது ஆன்மீக லட்சியத்தை நிறைவேறச் செய்தது அதுவேயாகும். வணக்கத்திற்குரிய என் மாஸ்டருக்கும் எனக்கும் இடையே வேறுபாடே இல்லை. என்னை நினைப்பது என்றால் அவரை நினைப்பதுவேயாகும். அவர் இல்லாதிருந்தால், உன்னுடைய ஜீவிதம் நிகழ்ந்திருக்காது. நீ பின்பற்றிய ஒரு புதிய பயிற்சி பற்றி இப்போது நான் உனக்குச் சொல்கிறேன். உன் இதயத்தில் தானாகவே மாஸ்டர் பற்றிய நினைவு ஆரம்பித்தபோது (சப்தம் என்ற நிலை துவங்கியபோது) அந்த நினைவின் திசையை என்னை நோக்கித் திருப்பினாய். (அந்த நினைவை என்னை நோக்கி திசை திருப்பினாய்.) அதாவது, உன் ஜீவனின் ஒவ்வொரு சக்திக் கூற்றையும் என் நினைவிலேயே ஈடுபடுத்தினாய் என்பதே இதன்பொருள். சம்பிரதாயமான வழியில் என்ன செய்யப்படுமோ அதுபோல, ஒலிகளைக் கவனித்துக் கேட்பதற்கு நீ ஒருபோதும் முயற்சி செய்யவில்லை. என்னை மட்டுமே உன் வாழ்க்கையின் முழு அடிப்படையாக நீ எண்ணியிருந்தாய் மற்ற அனைத்தையும் வெறும் பதர்களாகக் கருதி ஒதுக்கிவிட்டு என்னையே அனைத்தும் ஆக ஏற்றுக்கொண்டிருந்தாய். மேலும் ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். நீ எங்கே சென்றாலும் சரி. எனது மகத்துவத்தை மட்டுமே காணமுயன்றாய். இதன்பலனாக அந்த மகத்துவமான தன்மையின் முழுப் பலனையும் நீ உள்வாங்கிக் கொண்டுவிட்டாய். இதன்

காரணமாகவே நீ எந்த ஒரு புள்ளி அல்லது ஆன்மீக நிலையைக் கடந்து சென்றாலும் அங்கு உனது சுற்றிவரும் அனுபவம் பூரணமாக இருந்தது. இந்தத் திறமையை வேறு யாரிடத்திலும் நான் காணவில்லை. இப்பொழுதும் கூட என்னுடைய ஜீவனின் ஒவ்வொரு ரத்தக்குழாயையும், நரம்பையும் ஊடுருவ நீ முயற்சி செய்து கொண்டிருக்கிறாய். ஏற்கெனவே போதுமான அளவுக்கு ஊடுருவிப் புகுந்திருக்கிறாய். என்னைத் தவிர வேறுயாரைப் பற்றியும் ஒரு கருத்து கூட உனக்கு இல்லை. உன்னுடைய எண்ணத்தின் ஒத்ததிர்வு என் இதயத்தில் எந்நேரமும் இருக்கிறது. நானும் உன்னையே நினைத்துக் கொண்டிருக்கிறேன். இந்த விஷயங்கள் எந்த ஒருவருடைய சிந்தனைக்கும், புரிந்துகொள்ளும் திறனுக்கும் அப்பாற்பட்டவை. யாராவது இதை அவரே பயிற்சி செய்தால், அது அவருக்குத் தெரியவரும். நான் இதையெல்லாம் சொல்வதன் நோக்கம் என்னவென்றால் மக்கள் தாங்களும் இதைப் பின்பற்ற விரும்பலாம், உன்னைப்போல சரியான தீவிரத்துடன் அப்படிச் செய்ய முயற்சிக்கலாம் என்பதே. எனக்கு அவர்கள் செய்யவேண்டிய கடமைப் பொறுப்பு அதுவாகவே இருக்கும். உனது உள்நிலை முழுமலர்ச்சியில் இருக்கிறது. உனது சக்திக்கூறு ஒவ்வொன்றும், அருளின் பிராணாஹுதி எங்கிருந்து வந்தாலும், அதன் விருப்பப்படியே உறிஞ்சிக் குடிப்பதற்காகத் திறந்த வாயுடன் இருக்கின்றன எனலாம்.''

''ராம் சந்த்தரிடம் உள்ள ஒரு குறைபாடு என்னவெனில், மற்றவர்களுக்கு அதைப்பற்றி எதுவுமே தெரியாதபடி ஒருவிதத்தில் அவர் ஒவ்வொரு உள்நிலையையும் தன்னுள் ஈர்த்துக்கொண்டார். அது அவருடைய தனித்திறமையாக இருந்தது. ஆனால், மற்றவர்களுக்கு அது நன்மையளிப்பதாக இல்லாத வரையில் அது ஒரு குறைபாடுதான் என்றே நான் கருதினேன். அந்தக் குறைபாட்டையும் நான் நீக்கிவிட்டேன். இப்போது அவர் எங்கே தியானத்தில் உட்கார்ந்தாலும் சரி. அருளின்

பிராணாஹுதி அங்கே பாய்ந்து கொண்டிருக்கும். என்னுடன் சேர்ந்து இருப்பதை மக்கள் நினைவுகொள்வார்கள். ஆனால், அந்தோ! இதைப் புரிந்துகொள்ள யாருமே இல்லாதபடி சமுதாயம் அவ்வளவு தாழ்ந்த நிலையை அடைந்துவிட்டது. தூய்மை, நேர்மை போய்விட்டது. சுயநலமான உலகியல் நாட்டம் வந்திருக்கிறது. மேலும், அதற்கு இந்த மக்களையும் குறை சொல்லக்கூடாது. அவர்களுக்கு எது பரிமாறப்பட்டதோ, கொடுக்கப்பட்டதோ, அந்த இன்பத்தின் சுவையைத் தேடும் பழக்கத்தை அவர்கள் வளர்த்துக் கொண்டார்கள். (M1 - ஐ சுட்டிக்காட்டி) எங்கே நேர்மை இருந்ததோ அதை நோக்கி மக்களின் கவனம் ஈர்க்கப்படவில்லை. உண்மையைச் சொன்னால், K……யில் இருக்கும் மனிதர்கள் என்னுடைய நோக்கத்திற்காக சேவை செய்வதற்குப் பதிலாக தங்கள் சொந்த நோக்கங்களுக்காக வேலை செய்து என் நோக்கத்தைக் கெடுத்து விட்டார்கள். நன்மை மற்றும் தீமைச் செயல்களின் கணக்கைச் சரிபார்க்கும் இறுதித் தீர்ப்பு நாளன்று அவர்கள் இதற்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கும். நான் உயிரோடு அதாவது பௌதீக உடம்பில் உயிர் வாழ்ந்திருந்தால், இப்போதைய நிலைமை என்னைக் கண்ணீர் விடச் செய்திருக்கும். என் உழைப்பு அனைத்தையும், இன்பத்தைத் தேடுகின்ற இவர்கள் பாழாக்கி விட்டார்கள்.''

''நான் சொல்லி எழுதச்செய்த இக்கட்டுரை முழுவதையும் திகைப்பும் விழிப்பு உணர்வும் ஏற்படுத்துவதற்காக என் வளர்ப்பு மகனிடம் (K1) காண்பிக்கவும். எனது முதிய வயதில் அவன் என்னை ஏமாற்றமாட்டான் என்று நம்புகிறேன். நீ வருத்தப்படாதே. உன்னைப் புகழ்ந்து போற்றி உன்னைச் சுற்றிலும் கொம்பு வாத்தியங்கள் முழங்கும். இல்லையென்றால் மொத்தக் கட்டமைப்பையும் நான் தலைகீழாகத் திருப்பிப் புரட்டிவிடுவேன். உன் இதயம் மிகவும் வருத்தம் அடைந்தால் நான் இப்போதே அந்த அழிவை ஆரம்பித்து விடுவேன். உன் கண்ணீரை

என்னால் காணமுடியாது. உன் இதயத்திலிருந்த இந்த வருத்தத்தை நீக்கிவிடு. இல்லையென்றால் எல்லாம்வல்ல இயற்கை இப்போதே பொங்கியெழ ஆரம்பித்துவிடும். உன்னுடைய உயர்நிலைத்தன்மை பற்றி இன்னமும் உனக்குத் தெரியவில்லை. உன்னுடைய ஜீவனின் ஒவ்வொரு அணுக்கூற்றிலும் என் பூர்ணமான வடிவில் நான் விளங்குகிறேன் என்பதை நினைவில் வைத்துக்கொள். இது உனக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. எனது பௌதீக உடலை விட்டுச் சென்றபிறகு முதலில் இந்த உண்மையைத்தான் உனக்கு வெளிப்படுத்தினேன். உன்மீதான என் அன்பின் அளவை மதிப்பீடு செய்ய உன்னால் இயலாமலிருந்தது. இந்த அன்பை நான் எப்போதும் மறைத்தே வைத்திருந்தேன். இப்போது M1- இடம் அது பற்றி ஏற்கெனவே சொல்ல ஆரம்பித்துவிட்டேன். அவரும் என் மீது நம்பிக்கை கொண்டு எனக்குக் கட்டுப்பட்டு நடக்கிறார் என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். கடவுள் அதில் நிலைத்துநிற்கும் குணத்தை அவருக்கு அளிக்கட்டும். மற்ற எல்லாப் பக்கங்களிலிருந்தும், தற்காலிகமாக எனது கவனத்தை நான் விலக்கிக் கொண்டிருக்கிறேன்.''

''முனிவர்களைப் பற்றிய வாழ்க்கைச் சம்பவங்களை எழுதுவதில், மக்கள் தங்களின் (புதிதாகக் கண்டுபிடிக்கும், கற்பனைத் திறனுடைய) தெளிவற்ற அறிவுடைய மனங்களைப் பயன்படுத்தினார்கள். நிகழ்ச்சிகள் திசை திருப்புவதற்கு எப்போதுமே ஒரு குறிப்பிட்ட அளவு காலம் ஆகும். கடவுள் கூட எதையாவது செய்ய வேண்டியதாக இருக்கும்போது அது சம்பந்தமான காரணங்கள் ஒன்றுதிரளத் துவங்குகின்றன. அதன் பிறகே அந்தக் குறிப்பிட்ட சம்பவம் நிகழ்கிறது. ஏதோ ஒரு முனிவர் தனது நல்லாசிகள் அல்லது சாபத்தினால் அவர் நினைத்த விளைவை உடனடியாக ஏற்படுத்தினார் என்றால், அப்போது அந்த நிகழ்ச்சி நடப்பதற்கான நிலைமை ஏற்கெனவே உருவாகியிருக்கிறது என்பது

அதன் பொருள்.'' (இங்கே சங்கல்பத்தின் மூலமாக ஏதோ ஒரு விசேஷ விதமான வேலை செய்யப்பட்டது பற்றி குறிப்பிடப்படுகிறது.)

**நான், (ராம் சந்த்தர் – பாபுஜி) சத்தியநிலையின் சக்தி என் ஜீவனில் கசிந்து உள்ளிறங்கிவரச் செய்வதற்கு முயற்சி செய்தேன். ஆனால், அப்போது 'அப்படிச் செய்யவேண்டாம்' என்ற ஒலி கேட்டது. எனவே, நான் அந்த தியானத்தை நிறுத்திக்கொண்டேன். இது பற்றிக் குறிப்பிட்டு, அவருடைய கருத்தைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டதற்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர் தெரிவித்தது:**

''அதை நான்தான் சொன்னேன். ஏனென்றால், நான் உன்னிடம் பூரணமாக ஐக்கியமடைந்திருக்கிறேன். அதனால், நீ அந்த வேலையை எடுத்துக் கொள்ளவேண்டிய தேவையில்லை. உண்மையைச் சொன்னால், உனக்கு எந்த தியானமும், பயிற்சியும் தேவையில்லை. மிகவும் முன்பே – பல ஆண்டுகளுக்கு முன்பே உனக்கு அதில் நாட்டமில்லாமல் போயிற்று; நானும் எதையும் உனக்கு வற்புறுத்தவில்லை. நீ அடைந்த ஐக்கிய நிலையும் ஒரு புதுமையான விதத்தில் இருந்தது. அது மக்களை வியப்பினால் திகைக்கச் செய்யும். உன்னை என்னுடைய பிரதிநிதியாக – என் பதவிக்கு அடுத்து வருகிறவனாகப் பெற இருக்கிறேன் என்பது எனக்கு உறுதியாகத் தெரிந்தபோது, கொஞ்சம் கொஞ்சமாக என்னை உன் ஜீவனுக்குள் ஐக்கியம் செய்ய முயற்சி செய்தேன். நான் உனக்காக முயற்சி செய்யவில்லை என்று நீ நினைக்கவில்லை. (நான் உனக்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறேன் என்று நீயும் நினைத்தாய்). நானும் என் கடமையைச் செய்தேன். உன்னுடைய பயிற்சிக்குத் தக்கபடி அவ்வாறு செய்வது என் கடனாக இருந்தது. உண்மையைச் சொன்னால் அப்படி உனக்கு சேவை செய்தது என் சொந்த நோக்கத்திற்காகவே. எனக்கு

இம்மாதிரி ஒரு பிரதிநிதியும், என் பதவிக்கு அடுத்த வாரிசும் கிடைக்கச் செய்தது கடவுளின் அருள் மற்றும் நலம் தரும் கருணைதான். இல்லையென்றால் சத்தியநிலை பற்றிய ஞானம் காணாமற்போய், உலகியல் பற்று மட்டுமே மீதியிருந்திருக்கும். நமது ஆன்மீக பரம்பரையாகிய சங்கிலித் தொடரில் கடவுளின் விசேஷ அனுக்கிரகமாக இது தொடர்ந்து வந்துள்ளது. அது அவ்வாறே இனியும் இருப்பதாக! அதற்குரிய காலத்தில் ஏதோ ஒரு சிறப்புமிக்க மனிதர் இதற்காக வருகிறார். உனக்கு ஒரு பிரதிநிதியும், அடுத்த வாரிசும் கிடைக்காமல் இருந்துவிடமாட்டாய். அதுவே என் கருணை நிறைந்த நல்லாசி. பொதுவாக இந்தவிதமான பயிற்சி எல்லோருக்கும் அளிக்கப்படுவது இல்லை; எல்லோரும் அதை அடைந்து விடுவதும் இயலாது. பயிற்சியின் ஈடேற்றத்தை அடைய முடியும்; அது பலரால் அடையப்பட்டுள்ளது. ஆனால், இந்தச் சிறப்புத்தன்மை (ஐக்கியமடையும் தன்மை) எல்லோரிடமும் வளர்ச்சியடைவதில்லை. சற்றுமுன்பு வணக்கத்திற்குரிய மாஸ்டர் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) வந்திருந்தார்; உன்னை ஆசீர்வதித்த பிறகு புறப்பட்டுச் சென்றார். அவர் மேலும் ஒரு விஷயமும் சொன்னார். அது சிறிது காலத்திற்குப்பிறகு உனக்குத் தெரிவிக்கப்படும்.''

''என் வளர்ப்பு மகனுக்கும் கூட (K1) நான் கொஞ்சம் ஒளி கொடுக்க வேண்டியிருக்கும். மக்களும் அவரைப் பின் தொடர்வார்கள். மற்றும் அவர் மீதும் மறைமுகமான எதிர்ப்பை வளர்த்துக் கொள்வார்கள். அதன் காரணமாகவே அவரை முன்னோக்கித் தள்ளுமாறு உன்னிடம் சொன்னேன். தாமதமின்றி இன்றே இதைச் செய்யவும். உன் நேரத்தை பேச்சுக்களில் வீணாக்கவிடாதே. அதற்கு சிறிது காலம் ஆகும். ஏனெனில், ஒரே தடவையில் இப்படிச் செய்ய உனக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. போர்க்களம் உன் கைகளில் இருக்கும். மக்களின் முகங்கள் வாடித் தொங்கிப்போகும். பண்டாராவில் (ஆண்டுவிழாவில்) நான் முழு ஆற்றலுடன் இருப்பேன். அதை செயல்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு

ஒரு சிறிய எண்ணம் மட்டுமே தேவையாக இருக்கும். மக்களிடமிருந்து வரும் எதிர்ப்புபற்றி கவலைப்படாதே. எந்த ஒரு பக்கத்திலிருந்தும், மிரட்டல்களுக்குப் பணிய வேண்டிய தேவை உனக்கு இல்லை. உனக்குப் பின்னால் ஈடு இணை சொல்ல முடியாத ஒரு சக்தி வந்து திரண்டிருக்கும். அது ஒரு அதிசயமாக – அற்புத நிகழ்ச்சியாக இருக்கும் என்று சொல்லும் M1- ன் கருத்து சரியானதே. அவ்வப்போது என் சிந்தனைக்கு வரும் விஷயங்களை நான் உனக்குச் சொல்லிக்கொண்டு இருப்பேன். எந்த ஒரு சக்தியும் உனக்கு இணையாக முடியாது. இந்த வார்த்தைகளை நான் மீண்டும் மீண்டும் சொல்வது ஏனென்றால், இதனால் நீ தைரியமடைந்து அதை உறுதியாகப் பிடித்து வைத்துக் கொள்வதற்காகத்தான். உனக்கு தைரியம் ஏற்படச்செய்யும் பொறுப்பை வணக்கத்திற்குரிய மாஸ்டரே (ஹஸ்ரத் பூ அலிஷா கலந்தர்) ஏற்றுக்கொண்டிருக்கிறார். இந்த விஷயத்தில் நீ குறையுடையவனாக இருந்தாய். (தைரியம் இல்லாமல் இருந்தாய்). எனவே, என் மாஸ்டரிடம் நான் ஒரு வேண்டுகோள் செய்தேன். ஆண்டு விழாவின் என் பிரசன்னம் மிகவும் வலிமை பெற்றதாக இருக்கும். ஒவ்வொரு நிமிடமும் அதன் விளைவு அங்கு இருக்கும். அச்சமயத்தில் என்னுடைய வேலைகள் அனைத்தையும் ஒதுக்கி வைத்துவிடுவேன். அச்சமயத்தில் என் கையில் உள்ள வேலையைக் கவனிப்பது ஒன்றுமட்டுமே என் நோக்கமாக இருக்கும். B1 – அபத்தமான பேச்சுக்களிலும் தந்திரங்களிலும் அதிகமாக ஈடுபட்டால் அவரை கொஞ்சம் உரசிவிட்டு, அசையாமல் உட்கார்ந்து விடு (அது என் மனக்காட்சியில் வந்தது). அங்கேயே மக்கள் உனக்கு உதவி செய்கிறவர்களாக திசை மாறி விடுவார்கள்.’’

12-8-1944

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''எந்த ஒருவரைப் பற்றியும் சிந்திக்கத் தேவையில்லை. பதிலுக்குப் பதில் செய்ய வேண்டியதுதான். உன்னுடைய இதயத்திற்கு நான் ஒரு மருந்தை சிபாரிசு செய்ய வேண்டியிருக்கிறது. இந்த பதிலுக்குப் பதில் செய்வதை உனக்குமட்டும் நான் அனுமதிக்கிறேன். அது ஏனென்றால், சிலர் உன்மீது உனக்குத் தீமை செய்வதற்கு தங்கள் மனத்தை (எண்ணம் மற்றும் சங்கல்பத்தை) பயன்படுத்த முயற்சி செய்யலாம். அது பற்றி நிமிடத்துக்கு நிமிடம் உனக்குத் தகவல் கிடைத்துக் கொண்டிருக்கும். இதுவும்கூட பயிற்சியில் ஒரு வழிமுறை தான். அதாவது, மனத்தின்மீது அழுத்தம் இருந்தால், அது ஒரு நின்றுபோன (இடைநிறுத்த) நிலைக்கு வந்துவிடும். அதன் உடன் விளைவாக நகைச்சுவையான ஏதோ ஒன்று செய்யப்பட வேண்டும். ஆயினும், அது N1 - செய்து வந்ததுபோல, பழைய நிலைக்கே திரும்புவதாக இருக்கக்கூடாது. அது ஒருவனின் பெருமையை (மதிப்பை) இழக்கச் செய்யும்.''

''என் வளர்ப்பு மகனிடத்தில் (K1) நேற்றிரவு நீ செய்த ஆன்மீகப் பணி மிக நன்றாக இருந்தது. நீ அவரை மேலே இழுத்துச் சென்ற, அந்தப் புள்ளியில் மட்டுமே பிராணாஹூதி அளிக்க வேண்டியிருந்தது. அதற்கு மேல் அவரைக் கொண்டு செல்லும் தேவை இன்னும் வரவில்லை. அவர் பலவீனமாக, முதிய வயதுடையவராக இருக்கிறார். B1 - இனுடைய அழிவுநிலை ஆரம்பமாகி விட்டது. ஒரு உயிரற்ற பிணத்தின் துர்வாடையை அவர் வெளியிடத் துவங்கியிருக்கிறார். நீயும் அவருக்கு பிராணாஹூதி அளிப்பதை நிறுத்திவிட்டாய். அவருடைய முயற்சிகள் எதுவாயினும் அவை, கீழ்நோக்கியவையாகவே உள்ளன. நீ உன்வேலையைச் செய்து கொண்டு இரு. அதன் விளைவு பற்றி நீ கவலைப்பட வேண்டியதில்லை.''

**மதிப்புக்குரிய A1 பற்றிய சம்பவம் குறித்து வணக்கத்திற்குரிய ஆதி குருநாதர் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) கூறிய அறிவுறுத்தல்:**

''ராம் சந்த்தர், நான் உனக்குக் கட்டளையிடுகிறேன். அவரை கவனித்துக்கொள். அவர் பற்றிய இந்தப் பொறுப்பு உனது மட்டுமேயாக இருக்கும். நான் அவரைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பில் இருந்தேன். இப்போது அந்தப் பொறுப்பை உன்னிடம் விடுகிறேன். 'மூத்தவராக விளங்கும் தன்மை அறிவுத்திறனைப் பொறுத்தது; வயதின் காரணமாக வருவது அல்ல' என்று பாரசீக மொழியில் சொல் வழக்கு உண்டு. அவருடைய தன்மை (உள்நிலை) மிகவும் குறைந்து போயிருக்கிறது. B1- இடம் உன் பிராணாஹூதி வேலை செய்யாததற்கும் இதுவும் காரணம். வேர்களை நன்கு கவனித்துப் பார்த்துக் கொள்; கிளைகள் தாமாகவே புதிய பச்சை இலைகளையும், புத்துணர்வையும் பெற்றுவிடும். மதிப்புக்குரிய A1- இடத்தில் கண்டிப்பாக இருப்பது தேவைப்படுகிறது. அவசியமாகும் போது நீ அப்படிச் செய்யலாம். உன் மாஸ்டர் உனக்கு அனைத்தையும் அளித்திருக்கிறார். நானும் கூட உன்னிடம் எதுவும் இல்லாமல் போகும்படி விடமாட்டேன். உன்னுடைய பிரசன்னத்தினால் உலகம் முழுவதும் ஒளிபெறும். எத்தனையோ மகான்களும், முனிவர்களும் உன் ஒளியின் முன்னால் காலைநேரத்தில் ஒளி வீசும் மெழுகுவர்த்திகளைப் போலத் தோன்றுவார்கள். உன் மாஸ்டர் கூறியது போலவே, உனது முன்னேற்றத்தின் எல்லை எதுவரையில் இருக்கிறது என்று மதிப்பிடவே முடியாது என்று நானும் சொல்கிறேன். துணிவோடு (தைரியமாக இரு) அதற்கான பொறுப்பையும் நான் ஏற்றுக்கொண்டிருக்கிறேன்.'' பிறகு வணக்கத்திற்குரிய ஆதிகுருநாதர் (லாலாஜியின் குரு ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) புறப்பட்டுச் சென்றார்.

**அதனையடுத்து வணக்கத்திற்குரிய மாஸ்டர் மீண்டும் தொடர்ந்து கூறியது:**

''என் வணக்கத்திற்குரிய மாஸ்டர் உன்னிடம் ஒப்படைத்த வேலையை முழுமனதோடு செய். இதுவும் கூட உனக்கு அளவற்ற நன்மைகளைக் கொடுக்கும். என் பெயரை விளங்கச் செய்கின்ற ஒருவரைப் பெறவேண்டும் என்று என் ஆயுட்காலத்தில் ஒரு ஏக்கத்தை தீவிரமாக வளர்த்திருந்தேன். அந்த ஏக்கம் பலனைத் தந்துவிட்டது. எனது காட்சிக்கு இன்று கடவுள் கொடுத்துவிட்டார். வணக்கத்திற்குரிய என் மாஸ்டரும் கூட உனக்குப் பிராணாஹூதி அளித்தார்.''

**எங்களுக்குள் பேசிக்கொண்டிருந்த போது M1 கூறியது:**

''வணக்கத்திற்குரிய மாஸ்டரின் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) திருக்காட்சி எல்லோருக்கும் கிடைக்கிறது. எனக்கு ஏன் அது கிடைக்காமல் இருக்கிறது: என்னிடம் என்ன குறை? அது எனக்குத் தெரிந்தால், அதை நீக்கிவிட நான் முயற்சி செய்வேன் அல்லது வணக்கத்திற்குரிய மாஸ்டரே அதை நீக்குவார்.''

**M1 இப்படிச் சொல்லிக் கொண்டிருந்த போது வணக்கத்திற்குரிய மாஸ்டர் வந்தார். அவர் கூறியது:**

''இன்று ஜன்மாஷ்டமி (பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பிறந்தநாள்). M1 -க்குப் பாராட்டுதல்களைக் கூறு. அவர் இப்போது தன் உள்நிலையை கவனித்துப் பார்க்கலாம். அவர் எதைப்பற்றிக் குறைப்பட்டுக் கொண்டிருந்தாரோ அது நீக்கப்பட்டுவிட்டது.'' என்று சொன்னார். உடனே M1 தனது உள்நிலையைக் கவனித்தார். தனது ஜீவன் முழுவதிலும் வணக்கத்திற்குரிய மாஸ்டர் மட்டுமே (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) இருப்பதைக் கண்டறிந்தார்.

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

''மதிப்புக்குரிய A1 - இன் விஷயத்தில், என்ன செய்ய வேண்டுமென்று நீ நினைத்தாயோ, அது சரியானதுதான். அம்மாதிரி மரியாதைக்குரிய மகான் தனது நம்பிக்கையையும், நேர்மையையும் அப்படியே கெடாமல் பாதுகாத்து வைத்திருக்கவில்லை என்றால் அது வருந்தத்தக்கது. நமது வணக்கத்திற்குரிய மாஸ்டர் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) இந்தப் பொறுப்பை உனக்கு மட்டுமே கொடுத்திருக்கிறார். இந்த வேலையை நீ செய்யத் தவறினால், உலக வாழ்க்கையின்போது செய்த நல்ல மற்றும் கெடுதலான செய்கைகளின் கணக்கை சரிபார்க்கும் தீர்ப்பு நாளன்று நீ அதற்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கும். மகான் தன்மையில் இருக்கும் ஒரு மனிதரை வேறுபடுத்திக் காட்டும் அடையாளமானது, அவரை ஒருவர் நெருங்கிச் செல்லும்போது, அப்படிச் செல்பவரின் மனத்தின் செயல்பாடு எந்த வலியையோ அல்லது அதிர்ச்சியையோ கொடுக்காமல் நிறுத்தப்பட்டிருக்கும். (அது என் மனக்காட்சியில் வந்தது). உன் இதயத்தில் மாஸ்டர் பற்றிய உனது மிக மேலான ஞாபகத்தை (சப்தத்தை) மேலும் தீவிரமாக்குவதற்கே அது உன் மனக்காட்சியில் கொண்டு வரப்பட்டது மற்றும் நேற்று நான் என்ன குறிப்பிட்டுச் சொன்னேனோ, அதை உனது நேரடி அனுபவத்திற்குக் கொண்டு வந்தேன். இதன் பலன் என்னவெனில் உனது உடம்பின் அணுக்கூறு ஒவ்வொன்றும் பரமாத்மாவின் (பரம்பொருளின் ஜீவத்தன்மையின்) ஆற்றலை உள் அனுபவமாகப் பெற்று, அதையே நாடி இருக்கின்றது. உண்மையில் இம்மாதிரி நினைத்திருப்பதன் (சப்தம் அல்லது அஜபா) நோக்கம் இதுதான். ராம் அல்லது ஓம் என்ற ஒலியை மட்டுமே மீண்டும் மீண்டும் சொல்வதுதான் நோக்கமாக இருந்தால், கிளி கூட அதனால் நன்மை அடைந்திருக்கும். M1 - உம் கூட பயிற்சியளிப்பதில் இந்த ஆளுமைத் திறன் நிறைந்த (நிபுணத்துவம் உடைய) காரியத்தைச் செய்ய வேண்டும். இதுபற்றி அவர் ஒரு குறிப்பு எழுதிக்கொள்ள வேண்டும். இந்த

உள்நிலையை உருவாக்குவதற்கான வழிமுறை ராம்சந்த்தர் பின்பற்றிய அதே முறை தான். உண்மையைச் சொன்னால், இயற்கையே உன்னை (ராம் சந்த்தரை) அந்த நிலைக்கு வடிவமைத்துக் கொண்டிருக்கிறது. இதில் என் பங்கு ஒரு கருவியைப் போலத்தான். இதெல்லாம் வணக்கத்திற்குரிய மாஸ்டரின் ஆசிகளினால்தான்.''

13-8-1944

**நேற்று இரவு என் வேண்டுகோளுக்கு இணங்கி, வணக்கத்திற்குரிய மாஸ்டர் என்னை ஒரு கீழ்நிலைக்குக் கொண்டு வந்தார். இன்று காலை அதைப் பற்றி அவர் கூறியது:**

''நேற்று இரவு நடந்த நிகழ்ச்சிகள் பாராட்டத் தகுந்தவை. நீ கேட்டுக் கொண்டதற்கு இணங்கி நான் ஒரு கீழ்நிலைக்கு உன்னைக் கொண்டு வந்தேன். நீ விரும்பும் போது, மீண்டும் உன்னை மேல்நிலைக்குக் கொண்டு செல்வேன். உனது முழு விருப்பமுடைய ஈடுபாடு எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால், அன்பின் காரணமாக நான் அதுபற்றி எதுவும் சொல்லவில்லை, தடுக்கவும் இல்லை. இப்போதும் கூட உன்னுடைய உயர்நிலையில் எந்த சீர்குலைவும் ஏற்படவில்லை. உனது கவனம்தான் குறைக்கப்பட்டுள்ளது. இன்னும் சற்று அதிக நேரத்துக்கு அந்த உள்நிலைத் தன்மை உன்னிடம் நீடித்திருந்தால், மிக மிக உயர்நிலையில் இருக்கின்ற ஒரு மகான் கூட, அல்லது மிக உயர்ந்த தெய்வீக நிலை உடைய ஒருவர் கூட உன்னுடைய பிராணாஹூதியை தாங்கிக் கொள்ள இயலாதவராக ஆகியிருப்பார். நீயும் யாருக்கும் ஒரு நிமிடம் கூட பிராணாஹூதி அளிப்பதற்குத் தகுதியில்லாதவனாக ஆகியிருப்பாய். உடலை விட்டுச் சென்ற பிறகு வருகின்ற ஒருநிலையை நோக்கி நீ சென்று கொண்டிருந்தாய். சரியானபடி மதிப்பிட்டுக் காணும் அறிவை நீ இழந்திருப்பாய். பரம்பொருளுடன் முற்றிலும் ஐக்கியம் அடைந்துவிட்ட பிறகு இருக்கும் அதே உள்நிலை உண்டாகியிருக்கும். அப்போது என்

வேலையைச் செய்வதற்கு இயலாதவனாக நீ ஆகியிருப்பாய். உன் உடம்பும் கூட அதிக காலம் வேலை செய்திருக்காது. ஒரு சிறிய உந்துதல் கூட, பௌதீக மூலகங்களால் உருவாக்கப்பட்ட கூண்டாகிய இவ்வுடம்பிலிருந்து உன்னை வெளியே பறந்து செல்ல வைத்திருக்கும். ஆன்மீக முன்னேற்றத்தில் உனது இந்த நிலைக்கு வேறு உதாரணம் இல்லை என்று நினைக்கிறேன். நமது மூத்தோர்களாகிய முனிவர்களும் கூட அதுபற்றி கர்வமடைந்திருக்கிறார்கள். எப்படியிருந்தாலும் உன்னுடைய ஆன்மீக முன்னேற்றநிலை என்னிடம் பாதுகாப்பாக இருக்கும். அது என் பொறுப்பில் புனிதமான பொருளாகக் காப்பாற்றி வைக்கப்பட்டுள்ளது. முடிவில் என் உள்நிலையும் கூட இதுவாகவே இருந்தது. ஆனால், அதை நீ ஆரம்பத்திலேயே அடையப் பெற்றிருக்கிறாய். என் ஆன்மீகம் பற்றிய விஷயத்தில் முழுமையான ஐக்கியநிலை கையிலேயே இருப்பதாக நான் புரிந்து கொண்டேன். அதன் பிறகு உடனே அதற்குள் நான் புகுந்துவிட்டேன். நீ அதைச் செய்ய வேண்டிய தேவை இல்லை. உன்னிடம் ஒரு காரணத்துக்காகவே நான் விட்டு வைத்திருந்த உறுதியான குணம் போன்றவை என்னிடம் இருக்கவில்லை. நீ உன் உடம்பைத் தக்கவைத்துக்கொள்ளும்படி செய்வதற்காக அந்தக் குணங்களை அப்படியே வைத்திருக்க வேண்டியது அவசியமாயிற்று. எனவே, இந்தக் காரணத்தினால் மனவருத்தமோ அதாவது மனம் வருந்துவதோ அல்லது குற்ற உணர்வினை மனதில் கொண்டிருப்பதோ கூடாது. இவையனைத்துக்கும் நானே பொறுப்பாளியாக இருக்கிறேன். அனைத்து விஷயங்களும் அதற்கான சரியான சமயத்தில் நடந்து கொண்டிருக்கும். உனக்கு எதுவும் கிடைக்காதபடி தடுக்கப்படவில்லை. சரியாகச் சொன்னால் உனது உள்நிலை மேலும் சிறப்படைந்துள்ளது. அதன் வடிவம் மட்டுமே மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அதாவது, அதன் திசை கீழ்நோக்கி திருப்பிவிடப்பட்டுள்ளது. அதுவே உனது ஆயுட்காலப் பயிற்சியாக

இருந்தது. அது திறக்கப்பட்டவுடன் திடீரென்று பொங்கி எழுந்தது. இதில் உன் தவறு ஒன்றுமில்லை. நான் ஏற்கெனவே உனக்கு அனைத்தையும் அளித்திருக்கிறேன்; மூத்தவர்களாகிய பெரியோர்களும் கூட எதுவும் குறையாக விடவில்லை. இப்போது அனைத்து விஷயங்களும் உன் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்ற அந்த நிலைக்கு நீ கொண்டு வரப்பட்டிருக்கிறாய். நீ கொஞ்சமாகக் கொடுப்பதற்கு விரும்பினால், அந்த அளவு மட்டுமே கொடுக்க உன்னால் முடியும். நிறையக் கொடுக்க வேண்டுமென்று உனக்குத் தோன்றினால் அதுவும் சாத்தியமாகும். இதற்கு முன்பு இது உன் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. யாருக்கு நீ பிராணாஹுதி கொடுத்தாலும் அவரை நோக்கி அது வெள்ளமாகப் பாய்ந்தது; அதற்குமேல் அவருடைய மூளையே சிதறிப்போகும் அபாயமும் அதில் இருந்தது. M1 - க்கான எல்லைகள் பற்றியும் கருத்தில் கொள்ளப்பட்டிருந்தாலும் கூட, உனது இந்தத் தன்மையினால் M1 மிகப்பெரிய அளவுக்கு நன்மையடைந்தார். வேறு எந்த ஒருவருக்கும் அதைத் தாங்கிக்கொள்வது சிரமமாகவே இருந்தது. M1- உம் கூட இதற்குமேல் நன்மை அடைந்திருக்க முடியாது. நிலைமை இவ்வாறு இருப்பதால், உன் உயர்நிலையை குறைக்கும்படி நீ பிரார்த்தனை செய்தது மிகச் சரியானதே. அதை நான் குறைக்க வேண்டுமென்று நீ விரும்பியிரா விட்டால், அதனால் எனக்கு என்ன நஷ்டம் நேர்ந்திருக்கலாம் என்றாலும் சரி, உன்னை ஒரு கீழ்நிலைக்கு நான் ஒருபோதும் கொண்டு வந்திருக்கமாட்டேன். இப்போது, இது உனக்கு எந்த நஷ்டமும் ஏற்படுத்தவில்லை. ஆனால், நான் நன்மையடைந்தேன். நீ எப்போது விரும்பினாலும், அந்த உயர்நிலைக்கு அதே அளவு முனைப்புடன் நான் கொண்டு செல்வேன்; நீ அதை எப்போது விரும்பிக் கேட்டாலும் உனது இப்போதைய நிலைக்கு நான் மீண்டும் கொண்டு வருவேன்; நீ அங்கே எவ்வளவு காலம் இருக்க விரும்புகிறாயோ அதுவரை அங்கே உன்னை நிறுத்தி வைத்திருப்பேன்.''

‘‘ஆண்டுவிழா நடைபெறும்போது தேவை ஏற்பட்டால் நானாகவே உன்னை அந்தப் புள்ளியில் நிலைநிறுத்துவேன். தேவைக்கு ஏற்ற விதத்தில் அந்தப் புள்ளியில் நீயாகவே நின்றிருப்பாய். எனினும், நீ அங்கே நிலையாகத் தங்கியிருக்கமாட்டாய். வேலை முடிந்த பின்னர் உன்னுடைய இன்றைய தன்மைக்குத் திரும்பி இருப்பாய். என்னுடைய ஆயுட்காலத்தில் நானும் அந்த விதமாகத்தான் செயல்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால், எல்லா விஷயங்களின் மீதும் எனக்கு முழுக் கட்டுப்பாடு இருந்தது. நீ அந்தக் கட்டுப்படுத்தும் நிலையை மீறிச் சென்றுவிட்டாய். எந்த ஒரு விஷயமானாலும் அதில் உனது மனநாட்டம் ஒருமுறை வந்துவிட்டால் அதை நீக்குவதோ அல்லது திசைமாற்றுவதோ கடினமாகி விடுகிறது. அது உன் இயல்பாக இருக்கிறது. மேலும், உனது முன்னேற்றத்துக்கும் அதுவே காரணமாகியது. உனது முடிவான நோக்கத்திலேயே நீ மனநாட்டம் கொண்டவனாக நிலைத்திருந்தது கடவுளின் அளவற்ற அருளேயாகும். உனது மனநாட்டம் வேறு ஏதாவது ஒன்றின் மீது இருந்திருந்தால், அதிலும்கூட இதே அளவு தீவிரத்தன்மை இருந்திருக்கும். உனது எளிமை உனது செல்வ வளத்திற்கு ஒரு திரையாக இருந்தது. என் நோக்கம் நிறைவேறுவதற்கு உதவியாக இயற்கை அளித்த ஒரு பாதுகாப்பு முறையாக இது இருந்தது. செல்வந்தர்களாகிய பலர் என்னிடம் வந்தார்கள். ஆனால், உன்னைத் தவிர வேறு யாரும் முன்னேற்றமடையவில்லை. நான் உனக்குச் சொல்கிறேன். இது அனுபவம் சார்ந்த ஒருவிஷயம். அதாவது, செல்வவளம் மிகுந்தவர்களிடமிருந்து ஆன்மீகத்தை அதிகமாக எதிர்பார்க்க முடியாது. ஒருவகையான செல்வம் ஒருவரிடம் இருக்கும்போது, இன்னொன்றின் மீது நாட்டம் கொள்வது சிரமமாகி விடுகிறது. கடவுளை நாடுகிறவர்கள் சாப்பாடு மற்றும் வாழ்வதற்கான சாதாரண வழிகளாகிய தேவைகளை அடைவதற்குக் கூட ஏன் அஞ்சுகிறார்கள். அது பற்றி ஏன் கவலைப்பட்டு, மன அமைதி

கெடுகிறார்கள் என்பதற்கு இதுதான் காரணம். இது பொதுவாக கவனித்து அறிந்த ஒரு கணிப்பு. நீ ஒருவன் மட்டுமே அதற்கு விதிவிலக்கு. எப்படியாயினும், ஒரு செல்வந்தனை சரியான வழியில் நிலைநிறுத்த என்னால் மட்டுமே முடிந்தது என்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த உதாரணம் உன் பரம்பரையில் காணமுடியாது. இது என் தியாகத்தின் பலன் ஆகும். இச்சமயத்தில் என் அன்பு நிரம்பித் ததும்பும் நிலையில் இருக்கிறது. ஆகவே, நீ இப்படி அவ்வளவு தியாகம் செய்திருக்கும்போது, என்னிடம் இருப்பதுபோலவே, இந்த உள்நிலை உன் கட்டுப்பாட்டில் இருக்கும். ஆயினும், அதனால் உன்னுடைய பொறுப்பு அதிகரித்து விடுகிறது; அதையும் கவனத்தில் கொள்ளவும். இப்போதுதான் இதே உத்தரவு வணக்கத்திற்குரிய என் மாஸ்டரால் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) எனக்கு இடப்பட்டது. அவருடைய கட்டளைகளின்படி நடப்பதையே எனது முதல் மற்றும் மிக முக்கியமான கடமையாகக் கருதிச் செய்கிறேன். அவருடைய கட்டளை சம்பந்தமாக, நான் வேறு எதுவும் செய்ய இயலாதவனாக – அவருடைய உத்தரவை மீற முடியாதவனாக இருக்கிறேன். உன்னுடைய பொறுப்பை நிறைவேற்றுவதில் நீயும் முழு வெற்றியடைவாய் என்பதில் முழு அக்கறையுடன் நான் இருப்பேன் என்பதில் சந்தேகமில்லை. வணக்கத்திற்குரிய மாஸ்டரின் இதயம் உனக்காக முழு உற்சாகத்துடன் இருக்கிறது. உன் மீதான அவருடைய அன்பு, என் மீது அவருக்கு இருப்பதை விட சற்றும் குறைவானது அல்ல; அதை விட அதிகம். உனக்காக அவர் விசேஷமாக வற்புறுத்தியது தைரியமடைவதற்கான பயிற்சியை மட்டுமே ஆகும். அதை அவரே உன்னிடத்தில் நிரப்பியும் இருக்கிறார். எதையும் குறையாக விடவேண்டாம் என்று எனக்கு அறிவுறுத்தியிருக்கிறார்."

''கடிதப்போக்குவரத்தின் மூலமாக, என் வாரிசுகளாக சொல்லிக் கொள்கிறவர்களை சரிப்படுத்த முடியும் என்னும் பட்சத்தில், அவர்களை

ஒவ்வொருவராக உன்னிடம் அழைத்து வந்து, ஆண்டு விழா நடக்கும் காலம் வரையில் சரியான, தகுந்தவிதத்தில் தயார்படுத்த வேண்டும் என்பதே என் நோக்கமாக இருந்தது. அது உனக்கும் கூட மிகவும் உதவியாக இருந்திருக்கும். இப்போது கடவுளே உனக்கு உதவியாக இருப்பதாகக் கருது. ஆண்டு விழா வருவதற்குள் M1 - ஐ நான் மிகப்பெரிய அளவுக்கு தயார் செய்து விடுவேன். இவர்கள் அனைவரும் தேவைப்பட்ட சமயத்தில் உன்னை ஏமாற்றி விட்டார்கள். இதற்காகத்தானா நான் அவர்களை வளர்த்தேன்? R2 - உம் கூட ‘சட்டை உரிக்கப்படாத பாம்பு போல’ என்ற பொன்மொழியை நினைவுபடுத்துகிறார். அவரிடமிருந்து இதைத்தான் எதிர்பார்க்க முடியும்! இம்மாதிரி மனத்தின் குறைபாடு உள்ளவர்களிடமிருந்து நம்மை கடவுள் காப்பாற்றுவாராக! வேறு யார் உன்னுடன் இருந்தாலும் இல்லாவிட்டாலும், நான் உன்னுடன் இருப்பதை ஒருபோதும் கைவிடமாட்டேன். இப்போது அவர்களை நல்வழிப்படுத்த எந்த முறையைப் பயன்படுத்துவது என்று என்னால் புரிந்து கொள்ள சிந்திக்க முடியவில்லை. (அவர்களுடைய உள்நிலை பற்றிய ஒரு மதிப்பீடு மனக்காட்சியில் வந்தது). நீயே அதை சிந்தித்து, எனக்கு ஆலோசனை கொடு. இந்த மனிதர்கள் தங்கள் விசித்திரமான மனக்கட்டமைப்புகளையும், கருத்துக்களையும் வைத்துக்கொண்டு ஒரு பக்கமாக ஒதுங்கி உட்கார்ந்திருக்கிறார்கள். எந்த ஒரு விஷயத்தையும் அல்லது யாரையும் பற்றி யாருக்கும் எந்த அக்கறையும் இல்லை. குரு பதவி என்பதில் அவர்கள் போதை மயக்கத்தில் இருக்கிறார்கள். உண்மையைச் சொன்னால், அவர்கள் என் வேலையைச் செய்வதில் சுறுசுறுப்பாக இல்லை. ஆனால், தங்கள் புலன் உணர்வுகளைப் பின்தொடர்வதில் (உடல் சார்ந்த இச்சைகளில்) ஈடுபட்டிருக்கிறார்கள் மற்றும் புலன் உணர்வுகளின் இனிமையான சுகத்தை அனுபவித்துக் கொண்டு அதுவேதான் அனைத்தும் என்று நினைத்திருக்கிறார்கள்.

ஆன்மீகத்தில் ஒரு சாயல்கூட அவர்களிடம் இல்லை. அந்தச் சீர்கேடு மிகவும் முன்னதாகவே அடையப்பட்டுவிட்டது. இந்த முறையைப் பின்பற்றும் மக்களும், அதையே முறையான ஆன்மீகமாகக் கருதுகிறார்கள். எனது இந்தப் பிரதிநிதிகள் பற்றி நான் அடிக்கடி சொல்லிக்கொண்டே இருந்திருக்கிறேன். இப்போது என் நோக்கம் அவர்களுடைய உள்நிலையைத் தெரிவிப்பது மட்டுமேயாகும். என்னுடைய முக்கிய நோக்கம் இறந்துவிட்டது. மரியாதைக்குரிய A1 - ன் உள்நிலை நேற்றிரவு நல்லவிதமாகவே இருந்தது.''

**14-8-1944**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

'' C1- க்கு ஒரு அடிமையாக இருப்பதில் S1எளிதில் கட்டுப்படுத்தக் கூடியவராக இருப்பது அவருடைய (S1- ன்) சொந்தக் கூட்டமும் விரிவடைவதற்காகத்தான். சத்தியநிலையைத் தேடுகிறவர் யாருமில்லை. S1 - தன்னை பூரணமானவனாகக் கருதுகிறார். இதில் ஒரு ரகசியம் இருக்கிறது. ஒருவர் சுயநல நோக்கம் இல்லாமல் பயிற்சியளிக்கும்போது மட்டுமே அதில் பலன் இருக்கிறது. இது நேர்மை – உண்மையாக இருத்தல் (Khuloos) என்று சொல்லப்படுகிறது. நான் உடலின் பந்தத்திலிருந்து விடுதலை அடைந்த பின்னர் (அதாவது உயிர் துறந்தவுடன்) உனக்கு காலரா நோய் வந்துவிட்டது. அதற்கு முன்பாகவே வயிற்றுப்போக்கு என்ற விதத்தில் அதற்கான அறிகுறிகள் தோன்றிவிட்டன. அது ஏனென்றால் உன்னை திடீரென்று சக்தியால் நிரப்பியிருந்தேன். அதன் காரணமாக கடந்தகாலப் பதிவுகளின் (சம்ஸ்காரங்களின்) சேர்த்து வைக்கப்பட்டிருந்த அசுத்தங்கள் சுத்திகரிப்பில் நீக்கப்படுவது துவங்கியிருந்தது. என்னிடமிருந்து இடம் மாற்றப்பட்டிருந்த அந்த சக்திக்கு இடம் கொடுப்பதற்காக இப்படிச் செய்ய வேண்டியிருந்தது. அப்படி உனக்கு உடல் நலமில்லாதிருந்த சமயத்தில்

நான் உன்னுடனேயே இருந்தேன் என்பதும், உனக்கு வலியும், துன்பமும் உண்டாக்காமல், இந்த பயங்கரமான நோயைக் கடந்துவரச் செய்தேன் என்பதும் சரியானது. அந்தச் சமயத்தில் உனக்கு மார்பின் (Marphine - injection) என்ற மயக்கமருந்து ஊசியை உனக்கு கொடுத்திருக்கக்கூடாது. அது உலகப்பொருள் சார்ந்த மயக்கநிலை. அது அந்த சுத்திகரிப்பாகிய செயல்முறையில் பாதிப்பை உண்டாக்கியது. இதனால், நீ குணமடைவது தாமதமாகியது. இல்லையென்றால் அந்த சக்தி விரைவிலேயே கிரகித்துக் கொள்ளப்பட்டிருக்கும். உன்னுடைய குரு (நான்) காலமான பிறகு உனக்குள் எல்லையற்ற சக்தியை நீ உள்ளுக்குள் அனுபவித்துக் கொண்டிருந்தாய் என்பதை – நீ உனது நாட்குறிப்பில் எழுதியிருந்தாய். இந்த நாட்குறிப்பு சிலருடைய கைகளில் கிடைத்து, அவர்களால் பரிசீலனை செய்யப்பட்டது. அதிலிருந்து ஒரு குறிப்பை N1 புரிந்து கொண்டுவிட்டார். வேறு யாரும் அதைப் புரிந்து கொண்டிருக்க முடியாது. ஆன்மீகத்தில் (நான் உன்னுடன்) ஒன்றுபட்டிருக்கும் தன்மையே சரியாகக் கண்டுபிடிக்கும் திறமை N1- க்கு இருந்தது. முன்னெச்சரிக்கை இல்லாமற்போனதால் இப்படி நடந்துவிட்டது. வருங்காலத்தில் இந்தவிதமான நாட்குறிப்பு பற்றிய விஷயம் அவரது குருவைத் தவிரவேறு யாருக்கும் தெரிவிக்கப்படுவதும் கூடாது; நாட்குறிப்பு வேறு யாருக்கும் அனுப்பப்படுவதும் கூடாது. குறிப்பாக தனது உள்நிலை பற்றி, தனது வழிகாட்டி தவிர வேறு யாருக்கும் M2 வெளிப்படுத்தக் கூடாது என்று M2 - வுக்கு தெரிவிக்க வேண்டும். மற்றவர்களுக்கும்கூட என் உத்தரவு இதுதான். இம்மாதிரி அனுபவங்களினால் இப்போது என் மனம் மிகவும் சோர்ந்திருக்கிறது.''

''உன் பதிவுகளை (சம்ஸ்காரங்களை) திடீரென்று வெளிக்கிளம்பி பலனளிப்பதற்காக, உன் கனவுகளில் அவற்றைக் கொண்டு வந்தேன். அவை உருவாகுவது மிகவும் முன்பே நின்றுவிட்டது. உன் விஷயத்தில், மிகப் பலமுறை நீயும் நானும் சேர்ந்தே அவற்றின் பலனை

அடைவதற்கான வழிமுறையைக் கூட நான் பயன்படுத்தியிருக்கிறேன். சாதாரண அளவில் (குறைந்த அளவில்) இந்தப் பதிவுகள் நீ தொடர்ந்து உயிர்வாழும்படி வைத்திருப்பதற்காக விட்டுவைக்கப்பட்டிருந்தன. நீ இந்த உடலை கைவிட்டு விடாமல் இருப்பதற்காக, குறிப்பிட்ட சில தடுப்புமுறைகளும் கையாளப்பட்டன. நீ நிலைபெற்றுள்ள இந்தப்புள்ளியை சுத்திகரிப்பு செய்யப்படாமல் யாருமே சென்றடைய முடியாது. பதிவுகள் உருவாகாதபடி தடைகளை உண்டாக்குவதன் மூலமாக, நீ எங்கு நிலைபெற்றிருக்கிறாயோ அந்த எல்லையை ஒருவர் அடைய முடிவது எப்படி என்கிற இதுவும் என்னுடைய கண்டுபிடிப்புதான். இது மிகவும் புதுமையான விஷயம்; இது மக்களின் புரிந்து கொள்ளும் தன்மைக்கு அப்பாற்பட்டதாகவே இருக்கும். (இது என் மனக்காட்சியில் வந்தது; பதிவுகள் மேகத்துண்டுகள் போல சிறு மேகங்கள் போல ஒரு எல்லைக்குள் நீந்திக் கொண்டிருப்பதாகத் தோன்றியது.) உன் முன்னால் தெரிகின்ற உனது உள்நிலையின் அமைப்பு இது. அந்த எல்லை உடைக்கப்பட்டுவிட்டால் உடலில் இருந்து உயிர் உடனே பறந்துவிடும். இது மிகவும் சூட்சுமமான விஷயம். அதைச் சிந்திப்பதற்கான / புரிந்து கொள்வதற்கான திறமை மக்களுக்கு சிறிதும் இல்லை. பலன்தரும் செயல்முறைக்கு இடம் தராமல், உனது பதிவுகள் எவ்வளவு குறைவாக இன்னும் இருக்கின்றன என்பதை இப்போது நீ பார்த்தாய். சரியாகச் சொன்னால் அவை முக்கியமான ஆற்றல் அளிக்கப்பட்டுள்ளன. (இது என் மனக்காட்சியில் வந்தது; இந்தப் பதிவுகள் நீடித்து இருக்கச் செய்வதற்காக, அவற்றினுள் மின்சாரம் போன்ற ஒரு சக்தி ஊடுருவிச் செல்வதை அது வெளிப்படுத்தியது). உள்ளே வரும் இந்த ஆற்றல் முடிவுக்கு வரும்போது இப்பதிவுகள் பலனளிப்பதும் நிறைவடையும். நீயும் மேலான சத்திய உலகிற்கு உன் பயணத்தில் முன்னேறிச் செல்வாய்.’’

ஒரு குறிப்பிட்ட செயல்நுட்பத்தைப் பயன்படுத்துவதால் பதிவுகளுக்கு ஆற்றலை அளிக்கும் வழியைத் தடை செய்ய முடியும் என்று ஒரு எண்ணம் என்மனதில் தோன்றியது. உடனடியாக மாஸ்டரின் உத்தரவு வந்தது. ‘‘பதிவுகளுக்கு முக்கியமான ஆற்றலை அளிக்கும் அந்த வழியை தடைசெய்யும்படியாக ஒருபோதும் எதுவும் செய்யாதே. இந்தக் காரணத்தினால்தான் அதுபற்றிய செயல்திட்டம் உன் காட்சிக்குக் கொண்டுவரப்படவில்லை. சில விஷயங்களையாவது என் கைகளில் விட்டுவிடு. நான் உன்னிடமிருந்து வேலை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அந்தச் செயல்திட்டம் தானாகவே உன் மனக்காட்சியில் வந்தவுடன், அதற்கான குறிப்பிட்ட செயல்நுட்பத்தை நீ கிரகித்துக் கொண்டு விட்டாய். இது என் எண்ணத்திற்கு ஒவ்வாததாக இருந்தாலும் கூட, அது உன் மனத்தின் சிறந்த செயல்திறன் ஆகும்.’’

## M1 - குறுக்கிட்டுக் கூறியது:

‘‘ஒரு நிபுணத்துவம் மிக்க திறமையை மறைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.’’

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறிய பதில்:

‘‘ராம் சந்த்தரிடமிருந்து நான் எந்த செயல்திறனையும் மறைத்ததில்லை. ஆயினும், அவருடைய மனத்தின் சுபாவம் அவரை அதுபோலச் செய்ய விடாது. அன்பின் மூலமாக எந்த ஒருவருக்கும் ஆதரவாகக் கட்டுப்படுமாறு அவரைச் செய்ய முடியும். அவருடைய மனப்பான்மையில் இறுகிய தன்மை இல்லை. அப்படி ஒரு மனிதர் கிடைப்பாரானால், எந்த ஒருவரிடமிருந்தும் என் செயல்திறன்களை மறைத்து வைக்கமாட்டேன். என் இதயம் தெய்வீகமான காருண்யம் (தயாளகுணம்) நிறைந்ததாக மாறியிருக்கிறது. அதே விசேஷத் தன்மைகள் (ராம் சந்த்தரிடம்) வளர்ச்சியடையத் துவங்கியுள்ளன. உன்மீது ஒருநாள் நான் ஒரு விசேஷ உள்நிலையை உருவாக்கினேன். அது பற்றி முன்பே குறிப்பிட்டுச்

சொல்லப்பட்டுள்ளது. கடைசி பந்தம் கூட தங்கவிடாமல் செய்வதே அதன் நோக்கமாக இருந்தது (அந்த ஞானோதயத்தின் அறிகுறி பின் தொடர்ந்தது). உனக்கு அது நினைவிருக்கலாம்; அது நீ இறந்து விடுவதற்கு ஆசைப்பட்டதைக் குறிப்பிடுகிறது. உண்மையில் அது முழுமையான ஒன்றுபட்டநிலை (ஐக்கியநிலை) பெறுவதற்கான ஆசைதான். இப்போது எந்த பந்தமும் மீதம் இல்லை. உன் மார்புக்கூடு முற்றிலும் தூய்மையாக இருக்கிறது. யார் விரும்பினாலும் அதைக் கவனித்து அறியலாம். தெய்வீகப் பிரகாசம் அதில் ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. துருவ நட்சத்திரப் பதவி (குதுப் / Qutub) அடையப்படும் வரை, பிறருக்குப் பயிற்சி அளிப்பதற்கான திறமை உண்மையில் வருவதில்லை. அந்த நோக்கத்தை அடைய முடியும். ஆனால், இன்னொருவரை ஆன்மீக நிலைகளைக் கடக்கச் செய்வதற்கான உரிமையும், திறமையும் அங்கு இருப்பதில்லை. 'குதுப்'புக்கு உதவியாளர், (துருவ பதவியில் இருப்பவருக்கு உதவியாளர்) என்று கூறப்படுவதன் பொருள். M1- குறிப்பிட்டது அல்ல. அதாவது இதற்கு குதுப்பின் பிரதிநிதியாக இருப்பவர் என்று பொருளல்ல. உதவியாளர் என்பது உண்மையான பொருள், இந்த இருவரின் – அதாவது குரு மற்றும் சீடனின் – உள்நிலை ஒரேமாதிரியாக மாறிவிடுவது என்பதுதான்.''

''இன்று நான் K….. சென்றிருந்தேன். அங்கு காணப்படுகின்ற நிலைமை, 'சக்ரவர்த்தி கஜினி முகம்மதுவுக்கு நகைச்சுவையாகக் கண்டறியும் திறமை கிடையாது; அவருடைய அன்பைப் பெற்ற அடிமை ஆயாஸுக்கு, நெற்றியில் வசீகரமான சுருள்முடித் தொங்கலும் கிடையாது' என்ற இரண்டுவரிக் கவிதைக்கு ஏற்றவாறு இருக்கிறது. N1 - தனது சொந்த செயல்களுக்காக வருந்தி அழுது கொண்டிருக்கிறார். எந்த ஒரு சக்தியும் அவர்கள் உதவிக்கு வரவில்லை. அழிவு ஆரம்பமாகிவிட்டது. ***(அந்த இரண்டுவரிக் கவிதை ஆஃப்கானிஸ்தானில்***

*ஒரு புகழ்பெற்ற மன்னன் சம்பந்தப்பட்டதாகும். கஜினி முகம்மது என்ற அம்மன்னன் தனது அடிமைகளில் ஒருவனாகிய ஆயாஸ் என்பவன் மீது அதிக அன்புடன் இருந்தான். இதனால் சபையில் இருந்த மற்றவர்களுக்கு ஆயாஸ் மீது பொறாமை உண்டாயிற்று. எனவே தனது பிரியமான அடிமையின் மேலான சிறப்பை செயல்முறையில் நிரூபிப்பதற்காக, தனது தலைநகராகிய கஜினியின் வழியாகச் சென்ற ஒரு கூட்டத்தாரைப் பற்றி தகவல் அறிந்து வருமாறு, தனது சபையினரை ஒவ்வொருவராக அனுப்பினான். அவர்கள் அனைவரும் அரசன் கேட்ட ஒரே ஒரு தகவல் மட்டும் அறிந்து வந்தார்கள். வேறு தகவல்களை அவர்கள் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை. ஆயாஸும் அப்படியே ஒரே ஒருகேள்விக்கு மட்டுமே பதில் அறியச் சென்றவன், அந்தக் கூட்டத்தார் பற்றி எல்லாத் தகவல்களையும் அறிந்து கொண்டு வந்தான்.)''*

''குளிர்காலத்தில் தாமரைப் பூவின் பச்சைப் பழத்தில் உள்ள, வெள்ளை நிற நடுப்பகுதியை M1 – பயன்படுத்தலாம். அவரது உடல்நலக் குறைவுக்கு இதுவே மருத்துவக் குறிப்பு. அது அவருக்கு நன்மையளிப்பதாக இருக்கும்.''

## 15-8-1944

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

''ஆன்மீகப் பயிற்சியளிப்பதில் எந்த ஒருவரும் கிரகித்துக் கொள்வதற்கும், தாங்கள் அதிலிருந்து விலகாமல் வைத்துக் கொள்வதற்கும் முடியாத ரகசியங்களை உனக்கு நான் சொல்கிறேன். இவைவேறு எங்கும் காணப்பட முடியாதவை. என் ஆயுளில் ஏராளமான நேரத்தை, கடவுளின் படைப்பாகிய உலகமக்கள் நன்மையடைவதற்காக, இந்த வழிமுறைகளைக் கண்டுபிடிப்பதில் ஈடுபடுத்தினேன். கடவுளின் படைப்பாகிய அனைத்தின் மீதும் அன்பினால் என் இதயம் பொங்கி வழிந்து கொண்டிருக்கிறது.''

(இதற்குப் பிறகு பயிற்சியளிப்பதில் இரண்டு ரகசியமான வழிமுறைகள் எனக்கு வெளிப்படுத்தப்பட்டன.)

''மேலே கூறப்பட்ட இந்த ரகசியமான வழிமுறைகள் ஆன்மீகப் பயிற்சியில் மிகவும் ரகசியமானவை. இவை எல்லோருக்கும் சொல்லக்கூடியவை அல்ல. இவை அனைவருக்கும் நன்மை செய்யவும் முடியாது; இதன் பெருமையை யாரும் அறிந்துகொள்ளவும் முடியாது. இவை ஒருவருடைய நெஞ்சிலிருந்து மற்றவரின் நெஞ்சுக்கு – ஒரே ஒருவருக்கு மட்டுமே தெரிந்திருக்க வேண்டும். N1- க்கு இம்மாதிரி விஷயங்கள் பற்றி சிறிதளவும் தெரியாது. B1- க்கு உன் மீது அன்பு இருக்கிறது. சில சமயங்களில் அவர் உன்னை நாடி நினைக்கின்றார்.''

## M1- ன் பணிவான கருத்து:

''B1- இன் அன்பு செல்வ வளத்தின் காரணமாக வந்தது. அவர் எப்போதாவது யாராவது ஏழையின் மீது அன்புடன் இருந்திருக்கிறாரா?''

## வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

''கதை சொல்வது ஏராளமாக நடந்திருக்கிறது. ஆயினும், கடுமையாக தாக்கிப் பேசும் இந்தப் பழக்கத்தினால் M1 நிறைய நஷ்டத்தை அனுபவித்திருக்கிறார். இந்தப் பழக்கத்தை அவர் விட்டுவிட வேண்டும். மனதைக் கவரும் விதத்தில், ஆனால், உண்மையிலிருந்து விலகாமல் அவர் பேசவேண்டும். எது எது என்னவென்று அறிவதற்கு என்னை அவர் முன்மாதிரியாக எடுத்துக்கொள்ளலாம்.''

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:

''மதிப்புக்குரிய A1 விஷயத்தில் நீ பின்பற்றிய செயல்நுட்பம் புதியதாகவும், பாராட்டத்தக்கதாகவும் இருந்தது. அதை கவனித்து நமது வணக்கத்திற்குரிய மாஸ்டர் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) மிகவும்

மகிழ்ச்சியடைந்தார். உன்னைவிடச் சிறப்பான விதத்தில் வேறு யாரும் ஆன்மீகப் பயிற்சியளிக்க முடியாது என்று நான் அறிந்திருக்கிறேன்; இது ஒரு தெய்வீக வரம். அதற்கு போதுமான அளவு எப்படி நன்றி தெரிவிப்பது? ‘இந்த நன்னெறி மிக்க நடத்தையை ஆயுதங்களின் வலிமையால் அடைய இயலாது.’ (பாரசீக மொழியில் உள்ள ஈரடிச் செய்யுளின் ஓரடி)’’

(அதற்குப் பிறகு மற்றொரு செயல்நுட்பத்தை மாஸ்டர் வெளிப்படுத்தினார்.)

‘‘இந்த செயல்நுட்பத்தை வேறு யாருக்கும் தெரிவிக்கக்கூடாது. ஏனென்றால் இதை மக்கள் இன்பம் தேடுவதற்குப் பயன்படுத்த ஆரம்பித்து விடுவார்கள். இது உடனடி விளைவை உண்டாக்குகிறது. இந்த வழிமுறையை பிரிசெப்டர்களுக்குக்கூட தெரிவிக்கக்கூடாது. ஒட்டுமொத்தப் பயிற்சியையும் ஒரு நிமிடத்தில் முடிவடையச் செய்கின்ற திறமை உனக்கு இருக்கிறது என்பதை நான் உறுதியாகச் சொல்கிறேன். (அந்த செயல்திட்டம் என் மனக்காட்சியில் வந்தது.) முதலில் இருந்தே உன் பயிற்சியை நான் இந்தவிதத்தில் தான் வைத்திருந்தேன். இப்போதும் கூட அதேமாதிரி தான் இருக்கிறது. இது அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய தகுதி வேறு யாருக்கும் இல்லை.’’

‘‘உன் உடல்நிலை மோசமான நிலையில் இருப்பதற்கு மேலும் ஒரு காரணம் இருக்கிறது. உனது ‘சமநிலை பெற்ற தன்மையின் (சம்ய அவஸ்தா) விளைவு உன் உடம்பின் அனைத்து உறுப்புக்களையும் பாதித்திருக்கிறது. அந்த பாதிப்பின் காரணமாக அவற்றின் செயல்பாடும் குறைந்து போயிருக்கிறது. உதாரணமாக, உனக்கு சாப்பிடுவதில் விருப்பமே இல்லை. நீ எதைப் பற்றியும் அக்கறை - கவனம் இல்லாத நிலையில், அதாவது பசி முதலிய விஷயங்களில் உன் கவனம் ஈர்க்கப்படாத அளவுக்கு இருக்கிறாய். உனது உள்ளுறுப்புக்கள் மற்றும்

அவை சம்பந்தமான செயல்முறைகள் அனைத்தின் விஷயத்திலும் இதே காரணம் பொருந்துகிறது.''

(இதற்குப் பிறகு விசேஷமான உத்தரவுகள் – குறிப்பான ஆலோசனைகள் அடங்கிய ஒரு கடிதத்திற்கான வாசகங்களை வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறி எழுதச்செய்தார்)

## 14-8-1944 என்ற தேதியில் M2 எழுதிய கடிதத்திற்குப் பதிலாக வணக்கத்திற்குரிய மாஸ்டர் சொல்ல எழுதியது:

''அன்புள்ள என்னவரே, எப்போதும் பத்திரமாக மற்றும் மகிழ்ச்சியாக இருங்கள். உங்கள் கடிதத்தில் உள்ள விஷயம் முழுவதும் வணக்கத்திற்குரிய மாஸ்டரிடம் சமர்ப்பிக்கப்பட்டது மற்றும் படித்துக் காட்டப்பட்டது. அவரிடமிருந்து வந்த பதில் கீழ்க்கண்டவாறு:

''ஒரு சாதகரிடத்தில் ஐக்கியநிலை ஆரம்பமாகியிருக்கும்போது, குருவுடன் குடும்ப உறவு (அவருடைய குடும்பத்தில் ஒருவன் என்ற மனப்பாங்கு) துவங்குகிறது. இது படிப்படியாக அதிகரித்து சீடன் மற்றும் குருவிடம் நெருக்கமான உறவின் உணர்வை செயல்முறையில் காட்டும் அளவுக்குச் செல்கிறது. அதையும் கடந்தபிறகு குருவாக மாறும் திறமையை சீடன் அடையப்பெறுகிறார். நீ இதை கூர்ந்து கவனித்தால் எனக்கும் M1- க்கும் இடையே ஒருவிதமான உறவுமுறை இருப்பதைக் காண்பாய். அதுவே, அவரை தியானிப்பதற்குப் போதுமானதாக இருக்கும். 'ஒருவரை மட்டுமே பற்றிக்கொண்டு இரு; அவரையே உறுதியாகப் பற்றிக்கொண்டு இரு.' என்று ஒரு புகழ்பெற்ற பழமொழி இருக்கிறது. எண்ணங்கள் சிதறிக் கொண்டே (பலவிதங்களில் பரவிக்கொண்டே) இருக்கும் வரையில், குறிப்பிடத்தக்கதாக (விசேஷமாக) எதுவும் நடக்காது. (நடக்க இயலாது). ஆன்மீகப் பயிற்சியின் நோக்கம் முழுவதும் எல்லாப் பக்கங்களிலிருந்தும் எண்ணங்களை விலக்கிக்கொண்டு, அதை ஒரே திசையை நோக்கி நாட்டம்கொள்ளச் செய்து, அந்தத் திசையிலிருந்து

எண்ணங்களின் ஆற்றலானது, இவ்விதமாக எந்த மூலசக்தியுடன் இணைக்கப்பட்டுள்ளதோ, அதற்குள் பாயும்படி செய்வதேயாகும். மகான்கள் அடைந்திருக்கும் நிலைகளில் வேறுபாடு இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், சீடனுக்கு குருவின் உயர்நிலை மிக மேலானதாகவே இருக்கிறது. சீடனுக்கு குருவுடைய உயர்வு, தாழ்வு பற்றி எந்த சம்பந்தமும் இல்லை. அவனுடைய எண்ணங்கள் அனைத்தும் குருவின் மீதே நிலைகொண்டிருக்க வேண்டும். ஆனால், உன் இதயத்தில் இந்த மும்மூர்த்திகள் இருக்கிறார்கள்! உன்னுடைய பார்வையை உன் நோக்கத்தின் மீது நிலைநிறுத்து. உண்மையான அன்புக்கு ஒரே ஒரு இலக்கு (நேசிக்கப்படுகிறவர்) மட்டுமே இருக்கமுடியும்! மஜ்னூவின் இதயத்தில் லைலாவைத் தவிர வேறு எண்ணமில்லை என்ற நிகழ்ச்சி உனக்குத் தெரிந்திருக்கும். அந்தச் சமயத்தில் லைலாவை விட அழகான பெண்கள் இல்லையா? ஆனால், மஜ்னூ தன் காதலால் அடையப்பெற்ற நன்மை எதுவாயினும் அதுஅந்தக் கறுப்பு நிறமுடைய அழகற்ற – ஆனால், அவனால் நேசிக்கப்பட்ட லைலாவிடமிருந்து மட்டுமே கிடைத்தது. ஒரே ஒருவரைத் தவிர வேறு யாருக்கு இதயத்தைக் கொடுத்தாலும் அது அன்புக்கு எதிரானது. 'அன்பு என்பது என்ன? நேசிக்கப்படுகிறவருக்கு மட்டுமே சொந்தமானவராக இருப்பது தான். தன் இதயத்தை இன்னொருவரின் கைகளில் கொடுத்துவிட்டு, அதற்கு என்ன ஆயிற்று என்பது பற்றி எந்தக் குழப்ப உணர்வும் இல்லாதிருப்பது அது' (பாரசீகமொழி ஈரடிக் கவிதை)''.

''உன் வழிகாட்டி M1 முழுமையடையாதவர். அனைத்து புள்ளிகள் மற்றும் ஆன்மீக நிலைகளின் வழியே உன்னை முன்னோக்கி வழிநடத்திச் செல்வதற்குத் திறமையற்றவர் என்று நீ நினைக்கிறாயா? அப்படியிருந்தால் நான் ஒருபோதும் உன்னை அவர் கையில் ஒப்படைத்திருக்கமாட்டேன். அது என்னுடைய சொந்தத் தூண்டுதல்தான், அது எப்படியோ அவரைச் சென்றடைந்திருக்கிறது. உனக்கு M1- ஐப்

பற்றிய நினைவைத் தவிர வேறு எந்த எண்ணமும் முறையானதல்ல. உனது எதிர்பார்ப்புக்கள் என்னவாக இருந்தாலும், அவரிடமிருந்துதான் நீ அதைப் பெறவேண்டியிருக்கும். யாராவது உனக்கு ஏதாவது கொடுத்தாலும் அவர் மூலமாக மட்டுமே கொடுப்பார்கள். நானும் அப்படியேதான் செய்வேன். ஒரு சீடனுக்கு தன் குருவைத்தவிர வேறு நண்பர் இல்லை. இது என் அனுபவமாகும். உள்ளத்தைக் கவர்கிறவர்கள் எத்தனையோ பேர் இருக்கலாம். ஆனால், ஒருவருடைய நோக்கம் யார் மூலமாக அமையப்படுகிறதென்றால் அது குருவின் மூலமாக மட்டுமேயாகும். இது இப்படி இருப்பதனால், நீ எப்போதும் இந்தக் கோட்பாட்டின் படியே நடக்கவேண்டும். அதில்தான் உனது மேன்மை இருக்கிறது. என் எண்ணத்தின் நோக்கம் ஒரு சரியான மனிதரை உனக்கு அளிப்பதுதான். அவரையே நீ அனைத்துமாக எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்வளவுதான் நான் சொல்வேன். வருங்காலத்தில் (உன்மீது) இப்படி ஒரு புகார் கூறப்படும் சந்தர்ப்பம் வரக்கூடாது. இதை ஒரு எச்சரிக்கையாக எடுத்துக்கொள்.''

''உன்மீது நிச்சயமாக எனக்குப் பிரியம் இருக்கிறது. யாரிடமிருந்து மட்டுமே நீ அனைத்தையும் பெறுவாயோ, அந்த வழிகாட்டியை (குருவை) நீ நேசிப்பதில் மட்டுமே எனது மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது. அவருடைய கட்டளைகள் எதுவாயினும் சரி. அதைப் பின்பற்றி நடப்பதே உன் கடமை. 'உன் குரு அப்படிச் செய்யும்படி கட்டளையிட்டால், நீ வழிபடும் இடத்தில் இருக்கும் விரிப்பை மதுபானத்தினால் வர்ணம் பூசு' – என்ற பாரசீகப் பொன்மொழியை நினைவில் வைத்துக்கொள். உன் கடிதத்தில் விவரிக்கப்பட்டுள்ள இந்தவிதமான புகார்கள் (குற்றச்சாட்டுக்கள்) உனக்குத் (உள்நிலைக்குத்) தகுந்தது அல்ல. உன்னை நான் இன்னும் மேலானவனாகச் செய்ய விரும்புகிறேன். ஆகவே, உன்னை மேலான மனிதரிடம் ஒப்படைத்திருக்கிறேன். அவருடைய உள்நிலை பற்றி உனக்குத் தெரியாது. அது எனக்கு மட்டுமே நன்கு தெரியும். அவரை

எனக்குச் சொந்தமானவராகவே நான் கருதுகிறேன் என்பதை நினைவில் வைத்துக்கொள். ஒரு சீடனின் கடமை என்ற விதத்தில், நீ எனக்கும் அவருக்கும் இடையே வேறுபாட்டை உண்டாக்குவது மரியாதைப் பண்புக்கு எதிரானது. உனது முன்னேற்றத்துக்காக உன் குரு என்னென்ன வழிமுறைகளையும், செயல்திட்டங்களையும் தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருக்கிறார் என்பது உனக்குத் தெரியாது. அது அவரது அன்பேயாகும். உன்னை அவரிடம் மட்டுமே ஐக்கியப்படுத்திக் கொள்ள முயற்சி செய்வாயாக. அதுவே உனக்கு அனைத்தையும் கிடைக்கச்செய்யும். அவரிடம் கவர்ச்சித்திறன் கிடையாது. இதனால் நீ ஏமாறவேண்டாம். உனது பாதையில் என்ன பிரச்னைகள் வந்தாலும் சரி, அவையனைத்தையும் உன் குருவிடம் மட்டுமே தெரிவிக்கவும். வேறு எந்த விஷயம் பற்றியும் உனக்கு சம்பந்தமில்லை. கவிதைகள் எழுதுவது நல்ல விஷயம்தான்; ஆனால், அதில் தீவிரம் கொள்வது தவறு. இக்கடிதத்தை மீண்டும் மீண்டும் படிக்கவும். இது ஒரு சாதாரண விஷயமல்ல. உண்மையின் சாராம்சமேயாகும்.''

16-8-1944

**சில குறிப்பிட்ட விளக்கங்கள் அளிக்கும் விதத்தில் வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறிய குறிப்புரைகள்:**

''சுய மனநிறைவுடைய நிலை (இஷ்டேக்னியா / Isteghnea) : இது அனைத்து உள்முகத் தூண்டுதல்களும் அமைதியடைந்திருக்கும் உள்நிலையாகும். இதனால் அனைத்துப் புலன் உணர்வுகளும் தங்கள் சொந்தநிலைகளில், செயலற்றுவிட்டதுபோலத் தோன்றும்படியாக, ஓய்ந்து இருக்கும் நிலையாகும். சோம்பலின் காரணமாக இந்தநிலை வந்தால், புலன்கள் செயலற்றவையாக அல்லது செயல்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதுபோலத் தோன்றாது.''

## புலன் உணர்வுகளுக்கான விதிமுறை:

''ஹதீஸ் - இ - நஃப்ஸா / Hadees – e - Nafsa). இது ஒரு சிலந்தியைப் போல தன்னை வலையில் சிக்கவைத்துக் கொண்டிருக்கின்ற ஒருவருக்குப் பொருந்தும். அவரைச் சிக்கவைத்திருக்கும் வலையைக் கிழித்து எறிந்தாலன்றி அப்படியே அது இருக்கும். இதிலிருந்து விடுபடுவதற்கான செயல்முறையானது, புலன் உணர்வுகளுக்கான நடத்தை செயல்பட ஆரம்பித்த உடனேயே, எல்லாவற்றையும் சூழ்ந்திருக்கின்ற (கடவுள் பற்றிய) எண்ணத்தில் ஆழ்ந்துவிடுவதேயாகும். இங்கே குறிப்பிட்டுள்ள இந்த எண்ணமானது ஒரே சிந்தனையுடையதாக இருப்பது என்ற பொருளை உடையது. அதாவது, ஒருவனின் வாழ்க்கையில் இருக்கும் அனைத்தின் மீதும் மேலோங்கியிருப்பதாகும். அந்தப் புலன் உணர்வுகளின் செயலை சுத்திகரிப்பு செய்வதற்கான வழி, பிராணாஹுதி சக்தியின் மூலமாக அந்த வலையின் நூல் இழைகளை அறுத்தெறிவதில் இருக்கிறது. இதை ஒருவர் தனக்குத்தானே பயன்படுத்த முடியும். மிகப்பெரியோர்கள், முக்கியமானவர்கள்கூட இந்தப் புலன் உணர்வுகளின் வலைக்குள் அகப்பட்டிருக்கிறார்கள். அதிலிருந்து விடுதலை பெறுவதற்கு மேலும் ஒருவழி இருக்கிறது. அதாவது, அது சிக்கலான வலையின் இழைகளை, தனது குருவிடத்தில் ஐக்கியம் அடையச் செய்வதேயாகும். இது மிகவும் சக்திவாய்ந்த ஒரு செய்முறைக் குறிப்பாகும். அதை ஒரு சமயம் நான் பயன்படுத்தியிருக்கிறேன். என் ஆயுட்காலத்தில் ஒரே ஒரு முறை இந்தக் குறைபாடு என்னிடம் இருந்தது. இந்தக் சிக்கலான வலையின் இழைகளை குருவிடம் ஐக்கியமடையச் செய்வதற்கான வழிமுறையில், அவற்றை குருவோடு இணைப்பு பெறும்படி கொண்டு செல்வது அடங்கியுள்ளது. இது யாரும் அறியாத, நானே கண்டுபிடித்த ஒரு செயல்முறைக் குறிப்பு ஆகும்.''

''குறிக்கோளை அடைவதற்கான பாதையில் ஒரு சாதகர் மேலும் ஒரு விஷயத்தை நேருக்கு நேராகச் சந்திக்க வேண்டியுள்ளது. அதாவது,

ஆன்மீக உள்நிலையில் ஒருவிதமான மனச்சோர்வை அவர் உணர்கிறார். இந்த நிலை வரும்போது பெரும்பாலும் தியானம் மற்றும் பயிற்சி செய்வதை அவர் விட்டுவிடுகிறார். இதைச் சரிசெய்வதற்கு மாஸ்டரின் உருவத்தை தியானம் செய்வது நன்கு சோதித்து அறியப்பட்ட பலனளிக்கும் செயல்முறையாகும். நமது கூட்டத்தாரில் இந்த நிலை வரும்போது மக்கள் பெரும்பாலும் பயிற்சி செய்வதை விட்டுவிடுகிறார்கள். இதயத்தின் உள்நிலை வளர்ச்சியடையும்போது, சத்தியநிலையின் விளைவுகள் இதயத்திற்குள் வந்திறங்கும்போது இந்த (மனச்சோர்வு) நிலை உருவாக்கப்படுகிறது. அப்போது சூட்சுமத்தன்மை அதிகரிக்கத் துவங்குகிறது. (தியான நிலையின்) போதை போன்ற உணர்வு குறையத் துவங்குகிறது. இந்த உள்நிலை ஆரம்பிக்கும்போது, அதில் ஆனந்தமயமான உற்சாகம் தூண்டப்பட வேண்டும். இதனால், சாதகர் அந்த மனச்சோர்வின் சிரமத்தை உணராமலிருப்பார். உண்மையில் அந்த மனச்சோர்வு ஒரு குறைபாடல்ல. இந்த நிலை வளர்ச்சியடைய ஆரம்பிக்கும்போது, என் முகத்தைப் பார்ப்பதைக் கூட சகித்துக்கொள்ள முடியாமல் மக்கள் என்னைக் கைவிடும் நிலை பெரும்பாலும் வந்துவிடுகிறது. உன்னிடம் பயிற்சி பெற விரும்பி வருகிறவர்கள் மற்றும் உன்னிடமிருந்து பிராணாஹூதி பெறுகிறவர்கள் இந்த நிலைக்கு வருவார்கள்; ஆனால் புகார் கூறும் அளவுக்கு மனச்சோர்வை வளர்த்துக்கொள்ள மாட்டார்கள். அதனால், உன்னைப் பார்க்கவும் விரும்பாத அளவுக்குப் போகமாட்டார்கள் என்று உனக்கு நல்லாசிகள்அளிக்கின்றேன். உன்னிடத்திலும் இந்த நிலை இருக்கிறது. (அது என் மனக்காட்சியில் வந்தது). ஆனால் இந்தக் குறைபாட்டை நீ ஒருபோதும் வளர்த்துக்கொள்ளவில்லை. உண்மையில் போதுமான அளவுக்கு ஆன்மீக மனப்பான்மைகளைப் பெற்றிராத மனிதர்களிடத்தில் மற்றும் ஏனோதானோவென்று இதில் பற்றுக்கொண்டு, இரண்டாம் பட்சமான அக்கறையுடன் இருப்பவர்களிடத்தில் இந்தக் குறைபாடு

வளர்ச்சியடைகிறது. அசலான (உண்மையான) ஆன்மீக மனப்பான்மையை நிஜமாகவே பெற்றிருக்கும்பட்சத்தில் மேன்மையான கடவுள் பற்றுடைய தன்மைக்காக உள்ளார்ந்த விருப்பம் வளர்ச்சியடைகிறது. அதே அளவுக்கு சூட்சுமமான உள்நிலைகளும் வளர்ச்சியடைகின்றன. தனது இப்போதைய உள்நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அதற்கு முந்தையநிலை பலமடங்கு கடினத்தன்மை உடையதாக இருந்தது என்பதை அவர் கண்டறிகிறார். ஒவ்வொரு நிலையிலும் இதே அனுபவம் உனக்குக் கிடைத்தது. அதன் முடிவாக வேறு யாரிடமிருந்தும் பிராணாஹூதி பெறுவதற்கு விருப்பமில்லாமல் ஆனது. ஒரு மரியாதைப் பண்புக்காகவே அதற்கு இணங்கி ஒரு சிட்டிங்கில் உட்கார வேண்டியிருந்தது. பெரும்பாலும் அது தவிர்க்கப்பட்டது. மிகவும் முன்னேற்றமடைந்த அறிவுத்திறன் காரணமாக இந்தநிலை வளர்ச்சியடைகிறது.''

**ஒரு கேள்விக்குப் பதில் கூறும் விதமாக மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

''இது சம்பந்தமாக S1 - க்கு இயற்கையான நாட்டம் இருந்தது. அதை நான் அவருக்குள் வற்புறுத்தினேன். அவர் தன்னோடு கொண்டிருந்த, அன்பின் உணர்ச்சியில் கிளர்ச்சியடைவதை நாடும் தன்மை மாறிவிட்டது. வணக்கத்திற்குரிய என் மாஸ்டருக்கு (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) நான் ஒருவன் மட்டுமே கிடைத்தேன். எனக்கு நீ மட்டுமே கிடைத்தாய். உனக்கான களத்தை நான் உருவாக்கினேன். இப்போது உனக்கு உதவியாக – சேவை செய்பவர்களாக இருக்கக் கூடியவர் யாரோ, அவரை இவர்களிலிருந்து நீ பொறுக்கியெடுக்கலாம். இந்த மக்கள் சாதகமற்ற சூழ்நிலைக்கு ஆளாகாமல் இருந்திருந்தால் அவர்களில் சிலரோ அல்லது பெரும்பாலானவர்களோ ஒரு நல்ல ஆன்மீகநிலையில் இருந்திருப்பார்கள். அவர்கள் தியானமும் மற்ற பயிற்சிகளும் தாங்களே தனியாகச் செய்திருந்தால் கூட, ஆன்மீகத்தில் பெருமளவு

சம்பாதித்திருக்க முடியும் (உயர்வடைந்திருக்க முடியும்) என்ற அளவுக்கு இந்த ஆன்மீக அருளை அவர்களிடம் நிரப்பியிருந்தேன். ஆன்மீகச் செல்வத்தை யாருக்கு நான் அளித்திருந்தேனோ, அவர்களில் பெரும்பாலோருக்கு இதுவரையில் அதை ஜீரணித்துக்கொள்ள (உட்கிரகித்துக்கொள்ள) முடியவில்லை என்ற உன் எண்ணம் சரியானதே ஆகும். ஒரு சமயம் என் தந்தையின் இறந்த தினத்தன்று அவருக்கு மரியாதையுடன் திவசம் நடந்து கொண்டிருந்த சமயத்தில் நீ ஃபடேகருக்கு வந்தாய். நான் ஒரு அறையில் என் முன்னால் சொம்பு நிறையத் தண்ணீர் வைத்துக்கொண்டு என் தந்தைக்கும், முன்னோர்களுக்கும் ஆன்மீக நிறைவு அளிப்பதில் முனைப்புடன் இருந்தேன். நீ அங்கேயே உடனடியாக அதற்கான செயல்முறையை கிரகித்துக் கொண்டாய். அச்சமயத்தில் விடுபட்டுப்போன ஒரு விஷயத்தை இப்போது உனக்குச் சொல்கிறேன். ஏதோ ஒரு சாதகருக்கு பிராணாஹூதியைப் பெறுகின்ற சமயத்தில் மூளை சூடாகிப்போனால் – அப்படி நேராமல் கடவுள் காப்பாராக – நான் உனக்கு செயல்முறையில் காட்டிய இந்த வழிமுறை அப்போது உதவியாக இருக்கும். ஒரு கோப்பை அல்லது சொம்பில் தண்ணீர் நிரப்பி வைத்துக்கொண்டு – அந்தச் சொம்பு அல்லது பாத்திரம் செம்பு, பித்தளை, மற்றும் துத்தநாகம் கலந்த (அதாவது வெண்கலப்பாத்திரமாக இருப்பது நல்லது – அந்தத் தண்ணீரின் குளுமையை (குளிர்ச்சியை) ஒரு மிகவும் சூட்சுமமான வடிவில் நிலைப்படுத்திக் கொண்டு அதை அந்த சாதகரின் மூளையை நோக்கித் திசைதிருப்ப வேண்டும். இரண்டு அல்லது மூன்று முறை இப்படிச்செய்தால் அவருடைய மூளைச்சூடு குறைந்து அவர் குணமடைவார். பைத்தியம் பிடித்தவர்களுக்கும் மருத்துவம் இதுதான். ஆனால், அதன் பயன்பாடு தடுக்கப்பட்டுள்ளது. வெளிப்புற நடவடிக்கை மூலமாக, முன்னோர்களுக்கு நன்மையளிப்பதில் இது ஒரு நல்ல

செயல்நுட்பமாகும். ஆனால், அனைவராலும் இதைப் பயன்படுத்த முடியாது.’’

**மற்றொரு கேள்விக்கு விடை சொல்லும் விதமாக வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

‘‘N1- க்கு இந்தச் செயல்நுட்பம் பற்றித் தெரியாது. உனக்கு இது வெளிப்படுத்தப்பட்டதை அவர் தனக்கு சாதகமாக்கிக் கொண்டு, அதில் தன் சாமர்த்தியத்தைக் காட்டினார். தன் கௌரவத்தை நீடித்துக் கொள்வதற்காக அவர் ஏதோ ஒன்றை உருவாக்கினார். முதன்முதலில் உனக்கு மட்டும் அது வெளிப்படுத்தப்பட்டது. தீட்சை அளிப்பதற்கு M1- க்கு அல்லது வேறு யாருக்காவது அனுமதி கொடுப்பது சம்பந்தமாக N1- இடம் நான் எதுவும் சொல்லவில்லை. இதெல்லாம் அவரே கற்பனை செய்தவை. நான் தயாரித்து வைத்த களம் எதுவாயினும் அது K.......உள்ள மனிதர்களால் பாழாக்கப்பட்டது. அந்தச் சமயத்திலிருந்தாவது அந்த சீடர்களுக்கு சாதகமான (ஆன்மீகச்) சூழ்நிலை கிடைக்கத் துவங்கியிருந்தால் அவர்களிடத்தில் புத்துயிர்ப்பு (புத்துணர்வு) அதிகரித்திருக்கும். இப்போது அவர்களுடைய முக்கியமான ரத்தக் குழாய்களிலேயே ஊடுருவிப் புகுந்திருக்கின்ற இதற்கு முன்பு இருந்த தன்மையை சுத்திகரிப்பு செய்து நீக்க வேண்டும். அதேபோல முன்னேற்றமும் கொடுக்க வேண்டும். அவர்களை சுத்திகரிப்பது சாதாரணமான எந்த ஒருவரும் செய்யக்கூடிய காரியமல்ல. நீ இந்த முக்கியமான காரியத்தை மிகச் சிறப்பாகச் செய்ய முடியும் என்று நான் நம்புகிறேன். ஆனால், அதற்கு மக்கள் உன்னை நாடிவர வேண்டிய தேவை இருக்கிறது. அவர்கள் உன்னை நாடி உன்னைச் சார்ந்து இல்லாதபோது, வலுக்கட்டாயமாக இந்தச் செயலை நீ ஆரம்பித்தால், அப்போது அவர்களுடைய நரம்பு மண்டலம் துண்டுகளாக சிதறிப் போய்விடும். என் நோக்கத்தை நிறைவேற்றுவதற்குத்

தகுதியுடையவர்களாக அவர்கள் இருக்கமாட்டார்கள். அவர்களிடத்தில் உலகியல் தன்மை பெருமளவுக்கு. பரவி ஆன்மீகம் பற்றி இனி எந்த அக்கறையும் இல்லாத அளவுக்குப் போயிருக்கிறது. உலகியல் நாட்டத்தின் வெப்பமே அனைத்தும் ஆகும் என்று நினைக்கும் அளவுக்கு அவர்கள் வந்துவிட்டார்கள். அந்தோ! ‘தலையை மொட்டையடித்துக் கொள்கிற எல்லோருமே சுதந்திரத்தின் போதையை அறிவதில்லை’ என்ற பாரசீக மொழி இருவரிச் செய்யுளைத்தான் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது.’’

‘‘உண்மையான விதத்தில் ஆன்மீகத்தின் சுவையை அவர்களில் யாரும் பெறவில்லை. அவர்கள் கெடுக்கப்படாமல் இருந்திருந்தால் அவர்களில் பலர் இதற்குள் அதை அடைந்திருப்பார்கள். இந்த வேலை M1- இடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகக் கருதும்படி M1- இடம் சொல்லவும். அதற்காக சமுதாய சந்திப்புக் கூட்டத்திற்குப் பயன்படும்படியான மேற்கோள் வாசகங்களை வகைப்படுத்தி எழுதி, அதை அவர்களுக்குப் படித்துக் காட்ட வேண்டும். எங்கே உண்மை இருக்கின்றதோ அங்கே பயம் தேவையில்லை. நமது குழுவினரிடத்தில், முறைப்படி ஏதோ கடமைக்காகச் செய்வது மட்டுமே மீதியிருக்கிறது. அவர்கள் இங்கு வந்து சிறு தூக்கம் போட்டு விட்டுப்போய் விடுகிறார்கள். இது பிரிசெப்டர்களின் தவறுதான்; இல்லை, அவர்களே இதைத்தவிர அதிகமாக ஒன்றும் செய்வதில்லை என்பதால், இது அவர்களின் தவறும் இல்லை. இப்போது அவர்கள் வேலை செய்யும் களத்துக்கு முன்வரலாம். ஒரு திறந்த இதயத்துடன் உன்னுடன் தங்களை அவர்கள் ஒப்பிட்டுப் பார்க்கலாம். அப்படிச் செய்தால் அதன்பிறகு தாங்கள் உண்மையில் ஏமாற்றப்பட்டிருக்கிறோம் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்வார்கள். மாபெரும் பழங்கால மகான்களிடம் கூடக் காணமுடியாத விசேஷமான ஒன்றை என் பிரியமான ராம் சந்த்தருக்கு நான் அளித்திருக்கிறேன்; அதாவது ராம் சந்த்தருடன் தியானத்திற்கு உட்காருவது அலுப்பையும்

தராத, தியானத்திலிருந்து எழுந்து ஓடிவிடவேண்டும் என்ற விருப்பத்தையும் ஏற்படுத்தாத ஒருவிதமான அருளுடன் அவரை இணைக்கும். ஆயினும், பிரம்மவித்யையை (பரம்பொருளைப் பற்றிய விஞ்ஞானம்) அடையப்பெறும் அதிர்ஷ்டம் இல்லாத ஒருவர் நிர்ப்பந்தத்தினால் (கட்டாயப்படுத்துவதால்) அல்லது மிரட்டலின் பயமுறுத்துவதன் காரணமாக மட்டுமே உன்னிடம் வந்திருப்பவர், இங்கிருந்து ஓடிவிட விரும்புவது இதற்கு சம்பந்தமில்லாத வேறு விஷயம். ராம் சந்த்தரிடம் விளங்குகின்ற ஒரு சிறப்பான விஷயத்தை இப்போது சொல்கிறேன். அவரிடமிருந்து வெளிப்படுகின்ற அருள், தனது புலன்கள் ஒரு தூக்க நிலையை அடைந்துள்ள ஒரு மனிதர், தற்செயலாக ஒரு கனவில் யாரையாவது நாடச்செய்யும்படியாக ஒருவிதத்தில் செல்கிறது. இந்தத் தன்மை என்னிடத்திலும் இருந்தது. இந்தவிதமான பிராணாஹுதிகள் எல்லா இடங்களிலும் கிடைக்காது. இம்மாதிரி அருள் மிக்க மனிதர்களோடு ஒன்றுபட்டிருக்கும் அதிர்ஷ்டம் பெற்றிருப்பவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாவர். இதைவிட நான் இன்னும் என்ன சொல்ல வேண்டும்? அதுபற்றிப் பேசுவதனாலேயே அந்த அனுபவத்தை அடையலாம். (அது என் மனக்காட்சியில் வந்தது). இது உயிர்வாழ்க்கையில் மரண நிலையாகும். அது எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய அதிர்ஷ்டம் அல்ல. எத்தனையோ உயர்ந்த மகான்கள் இந்த நிலைக்காக ஏங்கிக் கொண்டே இருந்தார்கள்.''

17-8-1944

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''என்னிடமிருந்து அருளின் நன்மையைப் பெறுவதற்கு இன்னொரு வழிமுறை இருக்கிறது. (அந்த வழிமுறை சொல்லப்பட்டது) எனினும் இதை ரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டும். இதுபற்றி மேலும் ஒரு விஷயம் இருக்கிறது. என்னுடன் நேரடி இணைப்பு உடையவர்கள் மற்றும் என்னுடன் தொடர்பு உடையவர்கள் மட்டுமே இதனால்

நன்மையைப் பெற முடியுமே தவிர யாரோ ஒரு குப்பனோ, சுப்பனோ, ரங்கனோ அல்ல. இந்த வழிமுறை என் வணக்கத்திற்குரிய மாஸ்டரால் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) சொல்லப்பட்டது. அதில் இன்னும் ஒரு விஷயம் இருக்கிறது. இந்த வழிமுறையை அறியாதவர்களாக, ஆனால் தங்கள் எண்ணத்தை என் மீது நாட்டம் கொள்ளச் செய்திருப்பவர்கள் - அதில் அன்பு இருக்கவேண்டும் என்ற நிபந்தனை உண்டு என்பது உண்மை - இதனால் நன்மையைப் பெற முடியும்.''

## M1 – உடனே என்னிடம் (ராம் சந்த்தரிடம்) கூறியது:

''இப்போது பார்! லாலாஜி சாகேப் அவர்களை நான் இதயபூர்வமாகக் கொள்ளையடிக்கப்போகிறேன்.''

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

''ராம் சந்த்தர் என்னைக் கொள்ளையடிக்கத் தேவையில்லை. அவருடைய திசையை நோக்கி (அவர் இருக்கும் இடத்திற்கு) என்னிடம் இருந்து தானாகவே ஒரு தடையற்ற சக்தி பாய்ந்து கொண்டிருக்கிறது. (சற்று இடைவெளி). நீ இன்று மனதில் எரிச்சலுடன் (சீற்றத்துடன்) இருந்ததால், நானும் சீற்றம் உடையவனாக மாறியிருக்கிறேன். இல்லையென்றால் இம்மாதிரி சிறிய விஷயங்களை நான் பொருட்படுத்தவே மாட்டேன். உனது இந்தப் பழக்கத்தை விட்டுவிடு. இந்த அளவுக்கு எரிச்சலை நான் விரும்பவில்லை. இன்று உன்னுடைய எரிச்சல் நீண்ட நேரம் நீடித்திருந்தது. சாதாரணமாக அது இந்த அளவு போகாது. இப்போதுதான் உன் பழக்கத்தைப் பற்றி நான் மனதில் கவனித்துப் பார்த்தேன். உனக்குக் கோபம் வரும்போது நீ சாப்பிடுவதைத் தவிர்க்கிறாய். அந்தக் கோபத்தை விடமுடியவில்லை என்று உணரும்போது அந்த எரிச்சலை என்னிடம் சமர்ப்பித்து விடுகிறாய். உன்னை அமைதியாக வைத்திருப்பது உன் சக்திக்கு உட்பட்டதாக இருக்கும்போது, கோபம் வரும் சமயத்திலும் நீயே அதை கவனித்துக்

கொள்ளவேண்டும். கோபம் என்பது முழுவதும் மோசமான ஒரு விஷயம் அல்ல. அதைப் பயன்படுத்துவதற்கு நியாயமான காரணம் இருக்க வேண்டும்.''

''ஒரு மனிதன் வாழ்க்கையின் கோட்பாடுகளை எல்லாவகையிலும் மகிழ்ச்சியான நடத்தையின் ஒரு சிறுகாட்சியை அளிக்கும்படியாக ஒரு இனிமையான மனச்சார்புடன் கட்டமைத்துக்கொள்ள வேண்டும். இதில் நடுநிலைப் பண்புடன் (நிதானத்துடன்) இருப்பது மேலும் நன்மையளிக்கும். அதாவது, நமது ஐந்து புலன்களாகிய படை முழுவதையும் நிதானத்துடன், - எதிலும் எல்லை மீறாமல் – வைத்திருப்பது, எரிச்சல் – சீற்றம் - அடைதலையும் கூட தக்க வைத்துக்கொள்வது என்ற பொருளில் இதைச் சொல்கிறேன். இதற்கான காரணத்தை நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். சில சமயங்களில் ராம் சந்த்தரிடம் கொஞ்சம் வலிமையான (கோபம், சீற்றம் முதலிய) ஆற்றல் உருவாகுவது மனித சுபாவம். அது ஏனென்றால் மானிட வாழ்க்கையின் விதை அழிக்கப்படாமலிருப்பதுதான்.''

**அதன்பிறகு வணக்கத்திற்குரிய மாஸ்டர் வாழ்க்கையில் பின்பற்றப்பட வேண்டிய சில கோட்பாடுகளைக் குறிப்பிட்டுச் சொன்னார்.:**

''1) குழந்தைகளின் மீது பாசத்துடன் இருப்பது மற்றும் வளர்ப்பது ஆகிய விஷயங்களில் இதயம் அழுக்கடையாதபடி ஈடுபட வேண்டும். அவர்களின் மீது வைக்கும் அன்பு அவர்களுக்கும், தனக்கும் துன்பத்தை ஏற்படுத்தாதபடி இருக்க வேண்டும்.

2) ஒருவருடைய வாழ்க்கைத் துணை ஒருவருடைய உதவியாளராக இருக்கவேண்டும். அதாவது, குடும்பமாகிய வண்டியில் ஒருவர் ஒரு சக்கரமாகவும் மற்றவர் இன்னொரு சக்கரமாகவும் விளங்கும்படியாக இருக்க வேண்டும்.

3) தான் வசிக்கின்ற பகுதியில் மற்றும் அண்டை வீடுகளில் வாழ்கின்ற மனிதர்களுடன் உறவு முறையானது அவர்கள் தனக்குச் சொந்தமானவர்கள் போலவும், அதே மாதிரி அவர்களும் உங்களைத் தங்கள் சொந்தமெனக் கருதும்படியாகவும் பராமரிக்கப்பட வேண்டும். நண்பர்களின் விஷயத்திலும் இதே கோட்பாட்டினை அனுசரிக்க வேண்டும்.

4) உறவினர்களுடனான பந்தங்கள் உறவு என்ற அந்தக் கயிறு அறுந்து விட்டதுபோல உணராத ஒருவிதத்தில் தொடர வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் அவர்களுடைய துன்பம் மற்றும் வேதனையில் அவர்களுடன் துணை நிற்க வேண்டும். அனைவரிடமும் இப்படித்தான் இருக்க வேண்டும். ஆனால், அவர்களுடன் பணம் சம்பந்தமான பற்றுவரவு வைத்துக் கொள்ளக்கூடாது. அவர்களுக்குத் தேவையான சமயத்தில், கொடுத்த பணம் திரும்பி வராவிட்டாலும் மனவருத்தம் உண்டாகாது அல்லது உறவுமுறை கெட்டுவிடாது என்ற அளவுக்கு பணம் கொடுத்து உதவி செய்யலாம்.

5) தனது முதலாளி (நிறுவன உரிமையாளர்) அல்லது மூத்த அதிகாரிகளுடன் நடந்துகொள்ளும் விதம் அவர்களுக்குக் கீழ்ப்படியாமை பற்றிய எந்த எண்ணத்திற்கும் இடம் கொடுக்காதபடி இருக்க வேண்டும். இந்தப் பணிந்து நடக்கும் மனப்பான்மையினால் அடைகின்ற நன்மை எதுவாயினும் அதை கடவுளிடமிருந்து வருவதாகவே கருதவேண்டும்.

6) அது மதிக்கப்படாது (அல்லது அதற்கு மதிப்பளிக்கப்படாது) என்று மனதில் தோன்றுகிறபோது, அறிவுரை சொல்லக்கூடாது. தீவிரமான நோய்வாய்ப்பட்டு இருப்பவர்களுக்கு, இதைச் செய்யாவிட்டால் அந்த நோயாளியின் நிலைமை கைமீறிப்போய்விடும் என்று நம்பினாலன்றி, யாரும் கேட்காமலே ஏதாவது மருத்துவ ஆலோசனை சொல்லக்கூடாது.

இப்படி கேட்கப்படாமலே மருத்துவ அறிவுரை கூறும் பழக்கம் ஷாஜஹான்பூரின் சமுதாய வட்டங்களில் நிறைய இருக்கிறது.

7) தனிப்பட்ட சேவையை அப்படி சேவை செய்பவருக்கு தானும் திருப்பிச் செய்ய முடிகிற அளவுக்கு மட்டுமே ஏற்றுக்கொள்ள வேண்டும். வேறு வழியில்லை அல்லது ஒன்றும் செய்ய இயலாது என்றால் அப்போது அது வேறு விஷயம்.

8) தன்னுடைய ரகசியத்தை ஒருவர் யாருக்கும் தெரிவிக்கக்கூடாது. மேலும், அவரிடமிருந்து ஏதோ மறைக்கப்படுகிறது என்ற நம்பிக்கையை ஏற்படுத்தாதபடியும் அதைப் பாதுகாக்க வேண்டும்.

9) தேவையற்ற பற்றுக்கள், ஈடுபாடுகள் இல்லாமல் ஒரு எளிமையான வாழ்க்கையை நடத்த வேண்டும்.

10) சாத்தியமான அளவுக்கு கவலைப்படாமல் இருங்கள். அப்படியே கவலை வந்தாலும், அது கடவுளின் பக்கமிருந்து வருகின்றது எனக் கருதி, அதற்காக அவருக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

11) உணவு மற்றும் பானங்களில் சமமான சுவையை – தீவிர விருப்பம் மற்றும் வெறுப்பு இல்லாதபடி – வளர்த்துக்கொள்ள வேண்டும். சாப்பிடுவதில் நியாயமான அளவு பற்றிய கவனம் மனதில் நிலைத்திருக்க வேண்டும்.

12) மாஸ்டருக்கு அனைத்தையும் சமர்ப்பித்துவிட வேண்டும். இங்கே பணத்தை நான் குறிப்பிடவில்லை. மாஸ்டருடையதாக இருக்கின்ற அனைத்தும் தன்னுடையதும் ஆகும் என்பதாகக் கருதி நடந்து கொள்ள வேண்டும்; பார்த்துக் கொள்ள வேண்டும்.

13) மாஸ்டருடைய மனைவிக்கு புனிதமான மூத்தவர் என்ற விதத்தில் மரியாதை அளிக்கப்பட வேண்டும். இவ்விஷயத்தில் மிகச் சிறந்தது

மாஸ்டரின் குடும்பத்தில் உள்ள அனைவரையும் தனது சொந்தக் குடும்பத்தினர் போலவே கருதி, குடும்ப உறவுமுறைகளின் கோட்பாடுகளை என்ன அனுமதிக்கிறதோ அவற்றைப் பின்பற்றி நடக்க வேண்டும். இது மாஸ்டரின் சந்ததியாருக்கும் பொருந்தும்.

14) சத்சங்கத்து (தான் சார்ந்திருக்கும் ஆன்மீக ஸ்தாபனத்தில் இருக்கின்ற) சகோதரர்களை நடத்தும் / நடந்துகொள்ளும் விதம் இனிமையான தன்மையை உருவாக்குவதாக மற்றும் அவர்களின் ஆன்மீக முன்னேற்றத்தை ஆதரிப்பதாக இருக்கவேண்டும். நேரடியாக எதிர்ப்பது மிக மோசமான ஒரு செயலாகும்.

15) புலன் உணர்வுகளின் விஷயத்தில் கண்டிப்பாக நடந்து கொள்வதே நியாயமானது. பெண்களுக்குப் பயிற்சியளிப்பதிலும், நான் பின்பற்றியது போல இதே கண்டிப்பான வழிமுறையை அனுசரிக்க வேண்டும். இது சம்பந்தமாக நான் எப்போதுமே எச்சரிக்கையாக இருந்தேன்.

''ஏராளமான அனுபவத்திற்குப் பிறகு இந்தக் கோட்பாடுகளைக் கண்டறிந்தேன். இந்தக் கோட்பாடுகள் என்னால் உருவாக்கப்பட்டவை. இவற்றை நான் அவ்வப்போது குறிப்பிட்டுச் சொல்லிக் கொண்டிருந்தேன். ஆனால் யாரும் இவற்றை சரியாகப் பின்பற்ற முடியவில்லை.''

## M1- ன் பணிவான கேள்வி:

''மரியாதைக்குரிய ஒரு கவுஸ் (Ghous) (பரிஷத்) - இன் கேள்வியாகிய, 'ஒரு ஹிந்து மகானும் கூட கவுஸ் - உல் - ஆஜம் / Ghous - Ul - Azaam (மகா பரிஷத்) - ஆக மாறமுடியுமா? என்பதைக் கேட்டவுடன், பழங்காலத்து ஹிந்து மகான்களும், ரிஷிகளும் இந்த அதிகபட்சமான முன்னேற்றதை அடைய இயலாமல் குறையுடையவர்களாக

இருந்தார்களா? ஹிந்து மதமே முழுமையற்றதாகவும் தாழ்ந்த தரமுடையதாகவும் இருந்ததா? என்ற எண்ணங்கள் என் மனதில் கடைய ஆரம்பித்துவிட்டன.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறிய விளக்கம்:**

''கவுஸ் - உல் - ஆஜம் (Ghous - Ul - Azaam) என்பவர் ஒரு குறிப்பிட்ட சமயத்தில் ஒரே ஒருவர் மட்டுமே இருப்பார். இந்தப் பதவி எல்லோருக்கும் கிடைத்துவிடாது. கவுஸ் (Ghous) என்பவர் கூட அரிதாகவே இருப்பார். இந்த கவுஸ் - ஐ விட எண்ணிக்கையில் கொஞ்சம் அதிகமாக இருப்பவர்கள் குதுப் - உல் - அக்தப் (Qutub – Ul -Aqtaab) என்ற துருவாதிபதிகள் ஆவர். அதையடுத்து குதுப் (Qutub) (துருவா) என்பவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம் என்றாலும், இன்னும் அதிகம். பழங்காலத்திலும், ஹிந்துமதம் மேலோங்கியிருந்த போது, இதே ஏற்பாடு – அதன் வழிமுறை சற்று வேறாக இருந்தாலும் - நடைமுறையில் இருந்தது. அவர்கள் தேவைப்பட்ட சமயத்தில் பரமாத்மாவை (பரம்பொருளின் ஜீவத்தன்மையை / (Ultimate Being / Zaat) நாடிச் சார்ந்திருந்து, அதன் நிலையை சிறந்த திறனுடைய செயல்பாட்டுக்குக் கொண்டு வந்தார்கள். அந்தக் குறிப்பிட்ட சமயத்தில் தேவைப்படுவது என்ன என்பதை அவர்கள் மிகச்சரியாக மதிப்பீடு செய்தார்கள். அந்தத் தேவைக்குத் தகுந்தவாறு இயற்கையின் உதவியைக் கேட்டார்கள். இந்தவிதமாக அதனுடன் சம்பந்தப்பட்ட சக்தி நேரடியாக வேலை செய்தது. ஆனால், அந்தக் காலம் சீர்கேடு அடைந்து கொண்டே போனது. அந்தச் சிறப்புத் தகுதிகளும், சக்திகளும் படிப்படியாக நலிவடைந்து கொண்டே சென்று கடைசியில் அந்த அமைப்பே மறைந்து போய்விட்டது. அதற்குப் பிறகு இயற்கை வேறு ஒரு வழியில் அதிர்வுகளை உண்டாக்கியது. இதனால் சூஃபி மார்க்கம் என்பது மக்களுடைய உணர்வு நிலையில் வந்திறங்க ஆரம்பித்தது. அதனுடைய வேர்கள்

நிலைநாட்டப்பட்டன. இந்த முன்னேற்றத்தை உண்டாக்குவதற்கு மகான்களும், ஞானிகளும் அவ்வப்போது தோன்றினார்கள். ஆயினும், பழங்காலத்து ஹிந்துமத மகான்களும், ரிஷிகளும் அடைந்திருந்த ஆன்மீக மேன்மை இப்போது சாத்தியமில்லாத விஷயமாகிவிட்டது என்பது உண்மை. அவர்கள் அடைந்திருந்த உயர்நிலையானது பரமாத்மாவுடன் நேரடியானதாக இருந்தது. தனிமனித வாழ்வின் (ஜீவிதத்தின்) சக்திக்கூறுகளைப் பிளப்பதன் மூலமாக அவரது சுயம் (ஆன்மா) பரமாத்மாவிடம் நேரடியாகப் பறந்து சென்று அங்கிருந்து வேலையை நடத்திக் கொள்வது என்கிற இதுவும் கூட அடிக்கடி நிகழ்ந்தது. அதனுடன் ஒப்பிடும்போது சூஃபி மார்க்கம் இரண்டாவது வரிசையில் இருக்கிறது. எனினும், ஒரு பழமொழி கூறுவதுபோல 'வேலையே இல்லாமல் இருப்பதை விட, சம்பளமில்லாமல் வேலை செய்வதுமேலானது'. இப்போது இயற்கை அந்தத் திசையை நோக்கித் திரும்பியிருக்கிறது. இதன் காரணமாக அதையே நாம் நிலையானதாக எடுத்துக்கொள்ள வேண்டும். உண்மையைச் சொல்லும்படி என்னிடம் நீ கேட்டால், இந்தவிதமாக அதை உனக்கு விவரிப்பேன்; அதாவது ஆன்மீகத்தில் ஹிந்து மதத்தின் வேதகால மகரிஷிகள் அடைந்திருந்த முன்னேற்றத்துக்கு இணையான வேறு உதாரணம் கிடையாது.''

**மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

''கடவுள் எதுவும் செய்வதில்லை என்று நான் எங்கோ குறிப்பிட்டுச் சொல்லியிருப்பதாக M1- இப்போது சொன்னார். அந்தக் கருத்து சம்பந்தமான உள்நிலைத்தன்மை பிரியமுள்ள ராம் சந்த்தருக்கு வெளிப்படுத்தப்பட்டது. அந்த உள்நிலைத்தன்மையின் மீது அவருக்கு ஆளுமை அளிக்கப்பட்டது. இந்தவிதமான திட்டங்களை எல்லோருக்கும் வெளிப்படுத்த வேண்டாம் என்றும் அவருக்கு அறிவுறுத்தப்பட்டது. ஆயினும் இதற்கான தகுதியை ஏற்கெனவே பெற்றிருப்பவர்களுக்கு இதை வெளிப்படுத்தலாம். ராம் சந்த்தர் அத்தகுதியைப் பெற்றிருந்தார்.

எனவே, அது அவருடைய சிந்தனைக்குக் கொண்டுவரப்பட்டது. அதுவும் ஒரு ரகசியமாகும். இயற்கையில் அதிர்வு என்ற வடிவத்தில் இருக்கின்ற அந்த மூலகத்தை இயங்கச் செய்வதற்கு, தன்னிடத்தில் இயங்கும் தன்மை அருளப் பெற்றுள்ள ஒன்று மட்டுமே பயனளிப்பதாக இருக்கமுடியும். என் ஆயுட்காலத்தில் எனக்கு அறிமுகமாகாமல் இருந்த இயற்கையின் பற்பல ரகசியங்கள் இப்போது வெளிப்படுத்தப்படுகின்றன. இவற்றையும் நான் உனக்குத் தெரிவித்திருக்கிறேன். நீண்டகால இடைவெளிக்குப் பிறகு மிகவும் அரிதாக அதிர்ஷ்டவசமாக கவுஸ் – உல் – ஆஜம் (Ghous - Ul - Azaam) என்ற பதவி தோன்றியிருக்கிறது. வழக்கமாக இப்படித் தோன்றுவதற்கு அதிக காலம் எடுத்துக் கொள்கின்ற எல்லாம் வல்ல இயற்கையின் அருளின் அலைகள் விரைவில் உருத்தோற்றம் பெறவேண்டும் என்று கடவுளிடம் நான் பிரார்த்தனை செய்தேன். ஏராளமான சிந்தனை மற்றும் கவனமான ஆராய்தலுக்குப் பிறகு தங்களை முற்றிலும் கடவுளுக்காகவே தியாகம் செய்து கொண்டிருக்கின்ற பக்தர்களின் கைகளில்தான் அது இப்போதும் இருக்கிறது என்கிற மனத்தெளிவை நான் பெற முடிந்தது. அந்தச் சமயத்தில் இந்த கவுஸ் – உல் – ஆஜம் என்ற பதவிநிலை என்னிடத்தில் உருவாகியிருந்தது. கடவுளின் படைப்பின் மீதான அன்பில் என் இதயம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. அதற்கான (அந்தநிலையை எய்துவதற்கான) வழிகளையும் செயல்முறைகளையும் நான் விசாரணை செய்யத் துவங்கினேன். கடவுளின் அருள் வெளிப்படுகின்ற இந்த நாளை என்னிடம் கொண்டு வருவதற்கு வணக்கத்திற்குரிய என் மாஸ்டர் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) எனக்கு உதவி செய்தார். இந்தப் பதவியின் உண்மை நிலை (அதன் பொருள்) எனக்கு மட்டுமே தெரியும்; அந்தப் பதவி நிலையிலும் கூட நான் ஓய்வு காணவில்லை. என் துணிச்சலான காலடிகள் எப்போதும் முன்னோக்கிச் சென்று கொண்டே இருந்தன. அது எந்த அளவுக்கு என்றால்

கவுஸ் – உல் – ஆஜம் என்பதையும் விட மேலான நிலை என் கட்டுப்பாட்டில் வரும் அளவுக்கு இருந்தது. அப்போது, என் இதயம் அனைவரும் அந்த நிலைக்கு வரவேண்டும் என்று மிகவும் ஏங்கிக்கொண்டு இருந்தது. ஆனால், இறைவனின் சித்தம் எதுவோ அதற்கு இசைந்ததான விஷயம் மட்டுமே நடக்கிறது: (உருது மொழியில் உள்ள இரண்டுவரிச் செய்யுளில் ஒரு வரி).''

''இந்தப் பதவிநிலையின் உண்மைத்தன்மையின் இயல்பை மொத்தமாக கிரகித்துக்கொள்வதற்கு பிரியமுள்ள ராம் சந்த்தராலும் கூட முடியவில்லை. இதன் காரணம். அதற்குள் மூழ்கி, உங்களுக்கெல்லாம் பரிசளிப்பதற்கு முத்துக்களைச் சேகரிப்பதற்கு இந்தப் பரிதாபமான மனிதருக்கு (ராம் சந்த்தருக்கு) ஓய்வு நேரம் இல்லை. அவையனைத்தும் மற்றவர்களின் நன்மைக்காகவே இருக்கின்ற தனது வேலையில் மூழ்கியிருப்பதைக்கூட அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவருடைய எதிரிகளால் அவர்மீது எய்யப்படுகின்ற பெருந்தீமைகளை எதிர்ப்பதற்கு, சமாளிப்பதற்கு அவருடைய மனதில் எவ்வளவு அழுத்தம் உண்டாகிறது என்பதையும் மக்களால் உணரமுடியவில்லை. அவருடைய மூளையில் இதனால் உண்டாகும் களைப்பை நான் அடிக்கடி நீக்க வேண்டியிருக்கிறது. உலகியல் ஆற்றலினால் ஒருபோதும் செய்ய இயலாத ஒரு வேலையை அவர் செய்து கொண்டிருக்கிறார். ஆயினும் உலகமக்களின் நல்வாழ்வுக்காக தனது இதயத்தையும் மனத்தையும் செலவழிப்பதற்கே அவர் பௌதீக வாழ்க்கைக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறார் என்பதை நான் அறிவேன். என்னைத்தவிர வேறுயாரும் அவருடைய வேலைக்காக அவருக்குப் பரிசளிக்க முடியாது. ஒரு மாஸ்டருடன் இணைந்திருப்பதில் இருக்கும் பிரச்னைகள் இவை. மக்கள் விரும்பி ஏங்குகின்ற இந்தப் பதவி சௌகரியமானதும், சுலபமானதும் அல்ல. K....... என்ற இடத்தில் ஆன்மீக வழிகாட்டியாக வேலை செய்ததற்கான அனுமதி இருநூறு ரூபாய்க்குக் கிடைக்கிறது.

நான் மேலே குறிப்பிட்ட காரியத்தை யாராவது செய்வார்களானால், அவருக்கு எத்தனையோ நூறு ரூபாய்களைக் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன். யாரிடமாவது இயற்கையான நல்ல குணங்கள் இருப்பதைக் கண்டால், அவை எதுவாயினும் அவற்றை நான் வளர்ச்சியடையச் செய்து கொண்டே இருப்பேன். N1 அதைக் கெடுத்துக் கொண்டே இருந்தார். நீ என்னுடைய வழிமுறையை மட்டுமே பின்பற்றவேண்டும்.''

## 18-8-1944

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''தன்னை பக்தனாகவும் கடவுளை பக்திக்குரியவராகவும் கருதியிருப்பது மனிதப்பண்பு. மக்கள் இதை மறந்துவிட்டு கடவுளை தங்கள் தேவைகளை நிறைவேற்றும் ஒரு சாதனமாகக் கருதுகிறார்கள். தெய்வங்கள், வழிகாட்டிகள் (குருமார்கள்) ஆகியோருக்கும் இதே சித்திரிப்பு பொருந்த முடியும். இதுபற்றி நான் ஏற்கெனவே உனக்குச் சொல்லியிருக்கிறேன். மக்கள் என்னுடைய படத்திற்கு மலர்கள் தூவி, மாலைகளால் அலங்கரிக்க ஆரம்பிக்கும் உதாரணத்தை எடுத்துக் கொள் அல்லது உன் கணக்குப்பிள்ளை அவருடைய குருவின் மரத்தாலான பாதுகைகளை வணங்கி வழிபடத் துவங்குவதைப் பார். இந்த உதாரணங்கள் அடிமைத்தனமான விலங்கு போன்ற வழிபாடு என்ற வகையின்கீழ் வருகின்றன. இம்மாதிரி மனிதர்களிடத்தில், யாருடைய நிழல் அல்லது சின்னம், ஒரு திடப்பொருளாக வழிபடுவதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறதோ அந்த மனிதரிடத்தில் உண்மையில் பற்று அல்லது அன்பு நிலைத்திருப்பதில்லை. அதில் உள்ள சத்தியம் பார்வையிலிருந்து நீங்கிவிடுகிறது. காலப்போக்கில் இம்மாதிரி திடப்பொருட்களை வழிபாடு செய்வதே பிரபலமாகிவிடுகிறது. மாஸ்டரையும் பக்தனையும் இணைக்கின்ற ஆற்றல் எதுவென்று புரிந்துகொள்வதற்கு முயற்சி செய்யப்படும்பொழுது அது ஆராய்ந்தறியும்

திறமையாகிறது. இந்த விஷயத்தின் மையம் (முக்கியமான அம்சம்) அதுதான். இது ஆராாந்தறியும் திறமையின் (பகுத்தறிவு என்பதன்) தூய்மையாக்கப்பட்ட வடிவம் என்ற விளக்கத்தைக் கொண்டதாகும். மற்ற அனைத்தும் இதற்குக் கீழே அடுத்தநிலையில் இருப்பவையாகும்.''

**19-8-1944**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''உனக்கு உதவி செய்வதற்கு M1- ஐப் போல இன்னும் ஒருவர் இருக்க வேண்டும் என்பது என் தீவிரமான ஆசை.''

**மதிப்புக்குரிய K1- ஐப் பற்றி நான் ஆலோசனை தெரிவித்தபோது வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறிய கருத்து:**

''அவர் அதற்குத் தகுதியானவரல்ல. அவருக்கு ஒரு விசித்திரமான, எதையாவது பற்றி கவலைப்பட்டுக் கொண்டே இருக்கும் குணம் இருக்கிறது. அதன் காரணமாக அவர் எதுவும் செய்வதில் நாட்டம் கொள்வதில்லை. இதனால், அவர் இதற்குப் பயன்படமாட்டார். ஆயினும், தன் வேலையில் செயல் முனைப்புடன் இருப்பதாக வாக்குறுதி அளித்து, இந்த வேலையை மிகவும் விருப்பத்துடனும், மரியாதையுடனும் ஏற்றுக் கொண்டால், அவரை உன் உதவியாளராக வைத்துக்கொள்வதில் தவறில்லை.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

''நான் எழுதவேண்டுமென்று உறுதி எடுத்துக்கொண்ட என் புத்தகங்களில் சாதாரண மக்களின் சிந்தனைக்கும் புரிந்துகொள்ளும் திறனுக்கும் அப்பாற்பட்டதான தலைப்புக்களில் விஷயங்களை நான் விரிவாகக் கூறியிருக்கிறேன். இந்தக் கட்டுரைகளை அச்சிட வேண்டும் என்ற நோக்கம் கொண்டு, அவ்வேலையை எடுத்துக்கொள்ளும்போது எங்கே நான் அசலாக எழுதியதே இருக்கிறது; எங்கே நான் வெறுமே

ஏதோ ஒரு கருத்தை விரிவாக்கியிருக்கிறேன் என்பதை ஒவ்வொன்றாக உனக்குச் சொல்வேன். எப்படியாயினும் யாராவது அதைப் பயிற்சியில் கொண்டுவந்தால், இரண்டுமே நன்மையளிப்பதாகவே இருக்கும். நான் அவற்றை அச்சிட்டு வெளியிடுவதற்கு எண்ணியிருந்தேன். ஆனால், நிதி வசதியில்லாமையினால் அதைச் செய்ய முடியவில்லை. எனது காலத்திற்குப் பிறகு வெளியிடப்பட்டுள்ள பதிப்புக்கள் என் இதயத்தின் விருப்பத்திற்கு எதிரானவை. இந்தச் சில புத்தகங்களை அச்சிட்டு வெளியிட்டதன் பின்னணியில் இருக்கும் நோக்கம் வேறு; அது மக்களைக் கவர்வதற்காகவும் தங்கள் சொந்த முக்கியத்துவம் மற்றும் இருப்பதாகச் சொல்லப்படும் தகுதிச் சிறப்பைக் காட்டுவதற்காகத் தான். அதை அச்சிட்டு வெளியிடுவதற்கும் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்வதற்கும் உனக்கு மட்டுமே உரிமை இருக்கிறது. மிகவும் உயர்ந்த விலைமதிக்க முடியாத குறிப்புக்களை நான் தயாரித்து வைத்திருக்கிறேன். அதை மக்கள் பார்த்தால் திகைத்து மயங்கிவிடுவார்கள். இவையனைத்தும் J1 - இன் பொறுப்பில் இருக்கின்றன. இது சம்பந்தமாக என் அனுபவம் மிகவும் தீவிர கவனம் உடையதாக இருந்தது. சரியான வழியில் உண்மையான விஷயத்தைக் கண்டெடுப்பதில் நான் ஒருபோதும் தவறியதில்லை. அதற்குப் பிறகு அதில் சந்தேகத்தின் சாயல் அல்லது பிழை இருந்ததில்லை. அந்தக் கையெழுத்துப் பிரதிகளை அச்சிடாமல் தடுப்பதை M1 - மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறார். அவற்றைப் பதிப்பிப்பதற்கான சரியான நேரம் வரும் வரையில் அவர் அப்படியே செய்து கொண்டிருக்க வேண்டும். ஆன்மீகத்துடன் சேர்த்து உலகியல் செல்வத்தையும் உன்னை நோக்கித் தள்ளியிருக்கிறேன். ஆகையால் இவற்றை அச்சிட்டு வெளியிடுவதில் உனக்கு சிரமம் எதுவும் இருக்காது. எதிர்பார்க்காத இடங்களிலிருந்து வரும் குறைந்த வருமானத்தின் மூலமாகவே இந்தச் செலவைச் செய்ய முடியும். இந்தக் காரியத்துக்கு M1- ஐ விடச் சிறந்தவர் வேறு யாரும்

இருப்பதாக நான் கருதவில்லை. அவர் அதை எனக்குச் செய்யும் சேவையாகக் கருதலாம். அதற்காக கடவுள் அவருக்கு ஈடு செய்வார்.''

''இந்த நோக்கத்திற்கு முதலில் தேவைப்படுவது, உன் சகோதரர் J1 உன் கட்டுப்பாட்டிற்குள் வருவதுதான். அப்பொழுது என் புத்தகங்களைப் பதிப்பிடுவது சாத்தியமாகும். எனக்காக பணத்தை மட்டும் அல்ல, உன் சொந்த வாழ்க்கையையே தியாகம் செய்வதற்கு நீ தயாராக இருக்கிறாய் என்பதை நான்புரிந்து கொண்டிருக்கிறேன். ஆனால், நானே உன் மீது ஏராளமான பொறுப்புக்களின் சுமையைக் கொடுத்திருக்கிறேன். அதைக் கடவுள் நிறைவேற்றி வைப்பார். ஒரு தனி மனிதர் எல்லா வேலைகளையும் செய்ய முடியாது. அவருக்கு உதவியாளர்கள் இருப்பது அவசியம். வேறு யாரும் செய்யமுடியாத வேலை உன்னிடம் ஒப்படைக்கப்படுகிறது. உன்னால் செய்யமுடியாத மற்ற எளிய வேலைகள் மற்றவர்களுக்கு ஒதுக்கித்தரப்பட வேண்டும். M1- இன் மீது நான் எவ்வளவு பிரியமுடன் இருக்கிறேன் என்பதைக் காட்டுவதற்கு என் இதயத்தைத் திறந்து காண்பிக்க இயலாமலிருக்கிறேன். மற்றவர்கள் உன்னுடன் ஒத்துழைக்கவில்லை. அப்படிச் செய்திருந்தால் அவர்களுக்கும் இதே நிலை (என் பிரியம்) கிடைத்திருக்கும். M1 - வயதானவர், முதுமையால் தளர்ந்தவர் மற்றும் குடும்ப விஷயங்களினால் சிரமப்படுகிறவர் என்பதை நான்புரிந்து கொண்டிருக்கிறேன். ஆனால், இவற்றுடன் கூடவே இந்த நிலைமைகள் அவருடைய (ஆன்மீகத்துக்கு) நன்மையானவை என்பது நிரூபிக்கப்படுகிறது என்றும் சொல்கிறேன். அவருக்காக நான் இவற்றுக்கு வசதி செய்து தருகிறேன். ஏற்பாடுகளும் செய்கிறேன். அவர் மனச்சோர்வு அடைவதே கூடாது. நிகழ்கின்ற அனைத்து விஷயங்களிலும் காலம் ஒரு முக்கியமான இடம் வகிக்கிறது. ஸ்ரீ ராமபிரானின் வாழ்க்கை வரலாற்றில் அவருடைய ஆயுட்காலத்திலும் துன்பம் இல்லாமல் போகவில்லை என்பதைத் தெரிவிக்காமல் மறைக்கப்பட்டதா? எனது

பிரியமான ராம் சந்த்தரின் நிலை விசேஷமானது. அதைவேறு எதற்கும் ஒப்பிட முடியாது. அவருடைய பராமரிப்புக்காக நான் வசதி செய்திருக்கிறேன். அது மிக விரைவில் தெரியவரும் என்றாலும், M1- இப்போது செல்வ வளத்தை விரும்பினால் அதை நான் கொடுக்க முடியும். அவருக்கு இது ஏற்கெனவே தெரிய வந்திருப்பதும் சாத்தியம்தான். ஆனால், நான் மீண்டும் சொல்கிறேன். உலகியல் மற்றும் ஆன்மீகம் ஆகிய இரண்டு செல்வங்களும் ஒன்று சேர்ந்து கிடைக்காது. இதற்கு நானே உதாரணமாக இருக்கிறேன். எனது உத்யோகத்தின் (நான் பார்த்த வேலையின்) மூலமாக கடவுள் எனக்குத் தேவையான அனைத்தும் அளித்திருந்தார் என்றாலும் நான் விட்டுச் செல்லும் அளவுக்கு பெரும் செல்வத்தை என்னால் சம்பாதிக்க முடியவில்லை. நான் உலகைவிட்டுச் செல்லும்போது கடனும் எனக்கு இருந்தது. ராம் சந்த்தருக்கு வணக்கத்திற்குரிய நமது மாஸ்டர் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) அவர் இரண்டு விதமான செல்வங்களிலும் நிறைந்து இருக்க வேண்டுமென்று அருள் செய்திருந்தார். இதன் காரணம் என்னவெனில் அவர் (ராம் சந்த்தர்) அனைத்தையும் அடைந்திருந்தாலும் தன்னை ஏழையாகவும், எந்த வளங்களும் இல்லாதவரும் ஆகவே கருதியிருந்தார். அவர் தன் செல்வவளத்தை ஒருபோதும் கவனித்ததில்லை. என் ஒருவனை மட்டுமே தனக்குச் சொந்தமென்று கருதினார். கடவுள் அவருக்குக் கொடுத்திருந்தது எதுவாயினும், இனி இன்னும் அவருக்குக் கொடுக்கப்போவது எதுவாயினும் அதை மற்றவர்களின் சேவைக்காக என்றே அவர் எடுத்துக்கொண்டார். ஒருசமயம் தன் மனைவிக்கும் குழந்தைகளுக்கும் தேவையான உடைகளை வாங்கக்கூட ஏற்பாடு செய்ய இயலாத ஒரு பிரச்னையான சூழ்நிலையில் அவர் இருந்தார்; ஆனால், அப்போதும் யாருக்குத் தேவைப்பட்டதோ அவர்களுக்கு உதவி செய்வதிலிருந்து அவர் பின்வாங்கவில்லை. அவர் செய்தது தவறா? சுரியா? என்பது இங்கே

கேள்வி அல்ல. ஆன்மீகத்துடன் கூடவே அவரது செல்வ வளமும் அதிகரித்தது. இதையெல்லாம் நான் வெறுமனே சொல்லவில்லை. என் வழக்கம்போல அவருக்கு பிராணாஹூதியாகவும் அளித்தேன். இதை M1- க்கு உணரச் செய்வதற்காக, செல்வ வளமுடைய மக்களிடையே, அனைத்தும் கடந்த ஆன்மீக மண்டலத்திலும் முன்னேற்றமடையக்கூடிய ஒரு மனிதரைக் காண்பது அரிது என்று நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அப்படி ஒருவர் இருப்பாரானால் அந்த ஒருவர் ஆன்மீகச் செல்வத்திலும் மிகவும் நிறைவு பெற்றவராக இருப்பார்; அப்படி ஒரு உதாரணத்தைக் காண்பது மிகவும் சிரமமாகவே இருக்கும். இது கடவுளின் வரம். 'தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருப்பதால் அவர் மகத்தானவராகவும், மிகப்பெரியவராகவும் இருக்கிறார்' (உருதுமொழி இரண்டுவரிச் செய்யுளில் ஒரு பாதி).''

''இப்போது உலகம் மற்றும் காலத்தின் நேர்மையற்றதன்மை பற்றி உனக்குச் சொல்கிறேன். அது அனுபவபூர்வமான விஷயம். ராம் சந்த்தர் எல்லோரையும் தன் சொந்தமாகவே கருதியிருந்தார். ஆனால் பாவம். அவருக்கு அதற்குப் பதிலாக எதுவுமே கொடுக்கப்படவில்லை. ஏதோ ஒரு சமயத்தில் அப்படி ஏதாவது கொடுக்கப்பட்டாலும், அது சுயநல மனப்பான்மையினால் அழுக்குப்பட்டிருந்தது. உண்மையான வழியில் அவர்மீது யாருக்கும் அன்பு இருக்கவில்லை. அனைவரும் அவரை சுமை தாங்கும் ஒரு விலங்காக ஆக்கிவிட்டார்கள். இந்தப் பட்டியலில் M1- ஐ நான் விட்டுவிடுகிறேன். அவர் (ராம் சந்த்தர்) தனது சக்திக்கும், திறமைக்கும் ஏற்றதான எந்தவிதமான சேவைக்கும் தயாராக இருந்தார். இதைக்கூட யாருமே பாராட்டவில்லை. எல்லாவற்றையும் கூர்ந்த அறிவுடன் புரிந்துகொள்கிறவராக இருந்தாலும், இந்த மனிதர்களுக்கு எதிராக எந்தக் கெடுதலான எண்ணத்தையும் அவர் மனதில் அனுமதிக்காமல் தன்னை பலவீனமாகக் கருதினார் என்பதைக் கவனிப்பது மிகவும் இதமளிப்பதாய் இருக்கிறது. என் மகன் J1- ன்

உதாரணமே நமக்கு எதிரில் இருக்கிறது. ராம் சந்த்தருடைய தகுதிக்கு ஏற்ற அளவுக்கு J1- அவரை நேசிக்கவில்லை. இந்த உலகம் முழுவதும் J1- ஐ கைவிட்டாலும் ராம் சந்த்தர் அவரை விட்டுச் செல்லமாட்டார் என்று முழுமையான நம்பிக்கையோடு நான் சொல்ல முடியும். இதை J1- உம் கூட உணர்ந்தே இருக்கிறார். இம்மாதிரி நடந்து கொள்வது J1- ன் கௌரவத்துக்கு அழகல்ல. அவர் என் மகன். எனவே, அவரை சரியான பாதைக்குக் கொண்டு வருவதற்காக அறிவுரை என்ற விதத்தில் இதைச் சொல்ல எனக்கு உரிமை இருக்கிறது. மற்றவர்களை, அவர்கள் விருப்பப்படி விட்டுவிட்டேன்.''

''இப்போது சொல், இம்மாதிரி ஒரு உள்நிலைத்தன்மை உடைய ஒரு மனிதருக்கு இயற்கை எப்படி உதவி செய்யாமலிருக்கும்? பயனற்ற புகழ்ச்சிகளின் பொழுதுபோக்கில் ஈடுபடுவது என் நோக்கமில்லை. மிக உயர்ந்த கலாசார சித்திகளைப் பெற்ற ஒரு அபூர்வமான மனிதரின் குணங்களைப் பற்றிய ஞானத்தால் அனைவரையும் நன்மையடையச் செய்வதே என் நோக்கம். மேலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்ட விஷயத்தில் விடுபட்டுப்போன ஒருவிஷயம் இங்கு கவனிக்கப்பட வேண்டியிருக்கிறது. அதாவது, இந்தப் பயிற்சிகள் அனைத்தையும் செய்யும்போது ராம் சந்த்தர் தன் புலன்களை பெருமளவு செயலற்ற நிலையில் வைத்திருந்தார். எனவே, இந்தப் புலன்களின் விஷயமாகவும் கூட எந்தப் பதிவுகளும் அவருக்கு உண்டாகவில்லை. இது மிக விசேஷமான ஒரு விஷயம். அவருடைய பெருமையைப் பற்றிக் குறிப்பிடுவதற்கு, எவ்வளவுதான் சொன்னாலும், அது போதுமானதாக இருக்காது என்றாலும் கூட, இங்கே அவரைப் பாராட்டுவது மட்டுமே என் நோக்கமல்ல. வணக்கத்திற்குரிய மாஸ்டருடைய அருளை அவர்களை நோக்கி ஈர்ப்பதற்காக மற்றும் அவரை நாடிச் சார்ந்திருப்பதற்காக, மக்கள் அவரைப்போல மாறுவதற்கு முயற்சி செய்ய வைப்பதே என் நோக்கமாகும்.''

‘‘ஏற்கெனவே நான் சொல்லி எழுதச் செய்திருக்கின்ற வாழ்க்கைக் கோட்பாடுகளைப் பின்பற்றுவதில் ஒரே ஒரு வழிமுறை தான் மிகச் சிறந்தது; ஆனால் அது மிகவும் சிரமமானதும் ஆகும். தனது உணர்ச்சி வேகமுடைய மனச்சார்புகளை யாரைப்பற்றியும் மற்றும் எதைப் பற்றியும் அக்கறை அல்லது சிந்தனை இல்லாத அளவுக்கு அமைதிப்படுத்திவிடுவது அந்த வழிமுறையில் அடங்கியுள்ளது. இந்த (உணர்ச்சி வேகங்கள் அடங்கிப்போன) உள்நிலையின் சுவை சில சமயங்களில் ராம் சந்த்தருடன் இருக்கும்போது கிடைக்கிறது; அது ஏற்கெனவே M1- க்குக் கிடைத்திருக்கிறது.’’

**M1 - உம் நானும் உரையாடிக் கொண்டிருந்தபோது ஆன்மாவும் உலகமும் கடவுளின் கட்டளையால் தோன்றியவை என்று மதிப்புக்குரிய கஃபார் சாஹேப் தெரிவித்துள்ள ஒரு கருத்து பற்றி ஒரு பேச்சு வந்தது. அப்போது வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

‘‘உங்கள் சிந்தனை முற்றிலும் சரியானதே. இந்த இரண்டு வார்த்தைகள் சம்பந்தமாக, ‘கடவுள்’ என்ற வார்த்தைக்கு முன் ‘கட்டளை’ என்ற வார்த்தையை வைப்பது தவறு. சாதாரண உரையாடலில் கூட ‘கடவுளின் கட்டளை’ என்பதைப் பயன்படுத்தவதே சரியானது. அப்போது இந்த சிக்கலான பிரச்னை தீர்ந்துவிடும். பொருள் அகராதியின்படி கடவுள் (அராபிய மொழியில் குதா / Kudha) என்ற வார்த்தைக்கு ‘தானாகவே வந்தது’ என்று பொருள் மற்றவை அனைத்தும் அதற்குப் பிறகு உருவாகியவை. அரசாளும் தலைமையான சக்தியைத் தன்னிடத்தில் கொண்டிருக்கின்ற ஒன்று தோற்றம் பெறும்போது, அதன் செயல்பாடுகள் முழுவதையும் நடத்துவதற்காக அதிலிருந்து முதல் தடவையாக என்ன வெளிவருகிறதோ அதுவே கட்டளையாகும். முகம்மதியர்கள் அராபிய மொழியில் இதற்கு ‘குன் (Kun)’ என்று பெயரிட்டார்கள். கடவுளை

அடுத்து உடனே பின்தொடர்ந்த இந்த சக்தியை ஹிந்துக்கள் 'மாயை' அல்லது 'மகாமாயை' என்றார்கள். பரமாத்மாவில் பரம்பொருளின் ஜீவத்தன்மையில் – தோன்றிய 'க்ஷோபம்' (Kshobha / கலக்கம்) என்பதை தனக்குள் அசைவற்ற இயக்கம் என்று சொல்லலாம். அது தோன்றிய உடனேயே அதிர்வுகள் ஆரம்பமாகிவிட்டன. மாயையின் முடிவான (அல்லது முதல்) நிலை இதுதான். அதன்பிறகு பராமரிப்பு, வளர்ச்சி ஐக்கியமடைந்து ஒடுங்குதல், சிருஷ்டி (படைப்பு) ஆகியவற்றுக்கான சக்திகள் தோன்றின. இந்தத் தலைப்பில் கூறப்படும் விஷயம் வளர்ந்து கொண்டே போகிறது. எனவே அதை சுருக்கமாகச் சொல்கிறேன். கடவுளுக்குப் பின் உடனே தோன்றிய சக்திதான் அசலான உத்தேசத்தின் (அதன் அடிப்படை அல்லது வேரில் சங்கல்பம் இருந்தது) கட்டளையாக இருந்தது. இதற்கு மேல் நான் என்ன சொல்வது? இதுவரையில் எந்த ஒருவருடைய சிந்தனைக்கும் தோன்றாத ஒன்றினை உன் எண்ணம் பதிவு செய்திருக்கிறது. கடவுளின் படைப்பிற்கு சேவை செய்வதற்கான சந்தர்ப்பத்தை கடவுள் உனக்கு அளிப்பாராக! என் பெயரை நீ வாழவைப்பாயாக! அப்படி ஆவதாக!''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:

''இதைக் கேட்டவுடன் நான் ஆனந்தத்தில் துள்ளிக் குதித்தேன். இந்த சூட்சுமமான புள்ளியில் என்னைத் தியாகம் செய்துவிட நினைத்தேன். மக்களைத் திகைப்படையச் செய்யும்படியாக இம்மாதிரி சிக்கல்களைத் தீர்ப்பதில் நீ கருவியாக இருப்பாய். இந்தப் புள்ளிகளை விரிவாக்கம் செய்யும் பழக்கத்தை வளர்த்துக்கொள். இவற்றைப் படித்தறிந்து கொண்டே இரு. அதுவே அனைத்தையும் வெளிப்படுத்தும். எந்த ஒரு புத்தகமாயினும் அதைப் படிப்பதற்கு உனக்கு அனுமதியளிக்கிறேன். செய்தித்தாள்களைப் படிப்பது சம்பந்தமாக உனக்கு எந்தத் தடையும் இல்லை. உனக்கு நன்மையளிக்கக்கூடிய தலைப்புக்களைத்தான் அதில் நீ தேர்ந்தெடுப்பாய். ஆனால், இந்த அனுமதி அனைவருக்கும் அல்ல. நீயும்

அதனை அனைவருக்கும் அனுமதியளிக்கக்கூடாது. உன் வழிபாடு என் வழியைப் பின்பற்றுவது; இது நீண்டகாலமாகவே இப்படி இருந்து வருகிறது. உன் தந்தையின் அறிவுக்கூர்மையாகிய திறனும் உனக்கு இருக்கிறது. இந்தத் திறனை மட்டுமின்றி அவரிடமிருந்து சில குறைபாடுகளையும் நீ வாரிசுரிமையாகப் பெற்றிருக்கிறாய்.''

''அந்தோ! உன்னிடமிருக்கும் இந்த அம்சத்துக்கு யாரும் எந்தத் தூண்டுதலும் (ஊக்குவிப்பும்) தரவில்லை. நான் உனக்குக் குருவாக இல்லாதிருந்தால் இந்த மக்கள் உன்னை மிகமிகக் கீழான நிலைக்கு எடுத்துச் சென்றிருப்பார்கள். தற்செயலாக, இப்படி நடந்திருந்தால், என் இதயத்தில் என்ன மாதிரி உணர்வு தோன்றியிருக்குமோ, என்னால் வெளிப்படுத்திச் சொல்ல முடியவில்லை. இந்தச் சிறப்பு அம்சத்தை திடத்தன்மை அடையச் செய்வதற்கு முயற்சி செய்யப்பட்டது. என் பிரதிநிதியாக, என் பதவிக்கு உரியவராக இருப்பவர் ஒரு மேலான நிலையை அடையப் பெற்றால், அது அவர்களுக்கும் ஒரு நன்மதிப்பை, மரியாதையைப் பெற்றுத் தரும் என்பதை அந்த மூடர்கள் புரிந்துகொள்ளவில்லை. என் பெயர் ஒளிவீசும் படி செய்வதற்கு அவரை நல்லபடி உருவாக்குவது தங்கள் கடமை என்பதை அவர்கள் அறியவில்லை. அவர்களுக்கு நான் செய்த சேவைகளுக்கு எனக்கு அவர்கள் பரிசாகக் கொடுத்தது இதுதான். இந்தப் பெரிய பாவம் ஒருபோதும் மன்னிக்கப்படாது. எனக்குச் செய்யப்பட்ட தீமைகளுக்காக நான் யாரிடம் சென்று அழுவது? இவ்வுலகில் இதற்கு வேறு உதாரணம் இல்லை. நமது வணக்கத்திற்குரிய மாஸ்டரின் ஆன்மீக சந்ததியின் கிளை உன்னுடன் முடிந்துவிட இருந்தது. K.......யில் இருப்பவர்கள் எப்படியிருந்தாலும் எதையும் பயன்படுத்திக் கொள்ளாமல் விடவில்லை. இப்போது நான் சொன்னதை என் வளர்ப்புமகன் (K1) கவனத்திற்குப் போகும்படி செய். பெண்கள் சொல்லும் பழமொழி ஒன்று இப்போது என்நினைவுக்கு வருகிறது. 'என்னை மேலே கொண்டு செல். என்னை

மேலே கொண்டு செல்; நான் உனக்கு மரணத்தைத் தருவேன்' (ஹிந்தி பழமொழி). இது என் விஷயத்தில் முழுவதும் உண்மையாகிவிட்டது. யார் வேண்டுமானாலும் இதை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளலாம். கடவுளின் அருளினால் அவர் என் பெயரை விளங்கச் செய்தார். வாழ்க்கையில் எனது கோட்பாடு, 'பொறுமையாக அவரையே நம்பிச் சார்ந்திருந்து, அவர் நினைவில் மன நிறைவுடன் அமைதியுடன் இருப்பவர்களுக்கே கடவுளின் அருள் நன்மையளிக்கிறது' என்பதாகவே இருந்தது.''

''ஆண்டுவிழாவில் நீ வெளிப்படையாக ஒரு சவால்விடு. உன்னை எதிர்த்து நிற்கும் துணிவு யாருக்கு இருக்கிறது என்பதை நான் பார்க்கிறேன். அச்சமயத்தில் உன்னுடைய ஒரு கணநேரப் பார்வையின் ஆற்றலைக்கூட யாராலும் தாங்க முடியாத ஒரு நிலையில் அங்கு உன்னை நான் நிலைநிறுத்துவேன். அது உன் வேண்டுகோளுக்கு இணங்கி உன்னை எங்கிருந்து நீ கீழே கொண்டு வந்தேனோ அந்த நிலையின் சக்தியாகும். அந்த ஒரு முன்னேற்ற நிலையில் அது அப்படியே நீடித்து இருந்திருந்தால், அதைத் தாங்கும் சக்தி யாருக்குமே இருக்காது. இப்போதும்கூட அந்த நிலைக்குப் போவது உன் கைகளில் தான் இருக்கிறது. ஆனால், அம்மாதிரி எண்ணம் உன்னிடம் தோன்றுவதற்கு நான் விடவில்லை. ஆயினும், தேவைப்படும் சமயத்தில் எப்போதும் உன்னோடு என் ஆற்றல் இருக்கிறது; அது அந்த நிலைக்கு மேலும் கூட இருக்கிறது. அந்த சக்தியை செயல்முறையில் காட்டுவதற்கான சந்தர்ப்பத்தை கடவுள் எனக்கு அளிக்காமல் இருப்பாராக. இந்த உழைப்புக்காக M1- க்கு பெருமளவு இழப்பீடு தருவதாக நான் வாக்குறுதியளிக்கிறேன்.''

''S1 மற்றும் C1- க்கு ஒரு வாரத்திற்குள் தங்கள் மனப்போக்கை அவர்கள் சரிசெய்து கொள்ளவில்லையென்றால் அவர்களுடைய ஆன்மீக

நிலை முழுவதையும் நான் பறித்துக்கொள்வேன் என்று கடிதம் எழுதிவிடு. அவர்களுக்கு அனுப்புகின்ற தகவலின் உள்ளடக்கம் இப்படி இருக்க வேண்டும். ‘உங்களின் செயல்கள் இதயத்தின் மீது சுமை ஏற்படுத்துவதாக மாறிக் கொண்டிருக்கின்றன. இப்போது பொறுமை கடந்துபோய் விட்டது. எனவே, ஒரு வாரத்திற்குள் உங்கள் நடத்தையை திருத்திக் கொள்ளுமாறு எச்சரிக்கப்படுகிறீர்கள். இல்லையென்றால் உங்களுடைய ஆன்மீக மேன்மை முழுவதையும் பறித்துக் கொள்ளும்படி எனக்கு உத்தரவுகள் வந்துள்ளன. நான் அதன்படியே செய்வேன். அதற்குப் பிறகு இன்னும் அதிகமான தண்டனைக்கும் நீங்கள் தகுதி உடையவர்களாவீர்கள். இதை ஒரு கடுமையான எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ளுங்கள். பிரிசெப்டர்களாக வேலை செய்வதற்காக உங்களுக்கு அளிக்கப்பட்ட அனுமதி ரத்துசெய்யப்படுகிறது. இதெல்லாம் உங்கள் செயல்களின் விளைவுதான். யாருக்குக் கண்கள் இல்லையோ, அவர்களிடம்தான் தந்திரம் பலனளிக்கும். (இந்தக் கடைசி வாக்கியம் C1- க்கு மட்டும் எழுத வேண்டும்). இதற்கு ‘மாஸ்டரின் சேவகன் – ராம்சந்த்தர்’ என்று கையெழுத்து இட்டு அனுப்பவும். இரண்டு கடிதங்களையும் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அவர்கள் இதைக் கண்ட பிறகும் சரியாக நடந்து கொள்ளவில்லையென்றால், அவர்களின் ஆன்மீக மேன்மையை நீக்கிவிடும்படி ஞாயிற்றுக்கிழமை உனக்கு உத்தரவு கொடுப்பேன்.’’

‘‘மோசஸ் என்ற தீர்க்கதரிசி தெய்வீக ஒளி மின்னலைப் பார்த்தார். அதைப் பற்றிய கதைகளில் அதை ஏராளமாகப் புகழ்ந்திருக்கிறார்கள். ஆயினும் நுணுக்கமாகக் கவனிக்கும் கண்களுக்கு, அது நிகழ்வுநிலை சக்தியத்தின் (phenomenal reality / மாயையின்) அதிநுட்பமான நிலை என்பது புரியும். ஒரு தீர்க்கதரிசி அதை அனுபவித்ததன் காரணமாகவே இந்த அளவு அது புகழ்பெற்றுள்ளது. பரம்பொருளின் ஜீவத்தன்மை மகாமாயா (பர நிகழ்வுநிலை சத்தியம் / para phenomenal) என்ற

புள்ளியில் பிரதிபலிப்பதால் தோன்றும் ஒளி மின்னல்தான் அது. இதிலிருந்து ஒருவர் மேலும் முன்னேறி பள்ளத்தாக்குகள் மற்றும் மேடுகளின் முடிவு நிலையை கவனித்தால், அவர் புத்துணர்வு அடைவார். இங்கே எல்லா விஷயங்களும் ஒரு முடிவுக்கு வருகின்றன. பரம்பொருளின் ஜீவத்தன்மைக்கு நுழைவாயிலாக இருக்கும் ஒருவிதமான சக்தி பாய்வதுமட்டுமே மீதியிருக்கிறது. ‘டெல்லி (போய்ச் சேரவேண்டிய இடம்) இன்னும் வெகுதூரத்தில் இருக்கிறது’ (இது ஒரு பழமொழி). இந்த தெய்வீக மின்னலின் ஒருகாட்சியைப் பெறுவதற்கு (மோசஸ் கண்ட அந்த ஒளி மின்னலைக் காண்பதற்கு) உனக்குத் தீவிர ஆவல் இருந்தது. ஒரு மிக விசேஷமான விதத்தில் உனக்கு அந்த ஆவல் இருந்ததால், நீ ஏற்கெனவே அதைக் கடந்து முன்னேறிச் சென்றிருந்தாலும், அந்த ஒளி மின்னலை உன் பார்வைக்குக் கொண்டுவரும்படி நான் கட்டாயப்படுத்தப்பட்டேன். இதை உனக்குச் சொல்வதன் நோக்கம் என்னவென்றால், நீ ஏற்கெனவே எதை அடையப் பெற்றிருக்கிறாயோ, அதைப் பார்க்கும்போது இது சிறிதும் விசேஷமற்றது என்பதை நீ புரிந்து கொள்ளும்படி சொல்வதுதான். இது நான் விவரித்துள்ள ஒரு உண்மை. இதற்கு மேல் விவரிப்பதற்கு இந்த நாவுக்கு சக்தியில்லை. இந்த விஷயத்தை பரம்பொருளின் ஜீவத்தன்மையிலிருந்து நான் சொல்லியிருக்கிறேன். இதன் நோக்கம் அதை உன் சிந்தனைக்குக் கொண்டு வருவதுதான். M1- ம் கூட அந்த நிலையைக் கடந்து அடியெடுத்து வைத்திருக்கிறார். இதுவரையில் இந்தப்புள்ளியை வேறு எந்த சீடரும் சென்றடையவில்லை. நேரடியாகவும் நீ அங்கிருந்து உத்தரவுகளைப் பெறமுடியும். ஆனால், அதைக் கிரகித்துக் கொள்வதற்கு வேண்டிய திறன் இல்லை. இப்போது அது சாத்தியமில்லை. உன் பௌதீக உடலை விட்டுச் சென்ற பிறகு தான் அம்மாதிரி திறன் வளர்ச்சியடையும்.’’

‘‘மதத்தில் தீவிரப் பற்று (மதவெறி) மற்றும் பிரிவினை (பேதம் காணும்) உணர்விலிருந்து என் வாழ்க்கை எப்போதுமே விடுபட்டிருந்தது. உண்மையைச் சொன்னால் இந்தியாவில் மோசஸ் போன்ற எத்தனையோ மெய்ஞ்ஞானிகள் இருந்திருக்கிறார்கள். ஆனால், ஹிந்துக்களின் வீழ்ச்சிக்கு ஒரு சிறப்பான காரணம் என்னவெனில், மக்களிடையே அற்புத நிகழ்ச்சிகளுக்கான விருப்பம் வளர்ச்சியடைந்து, அவர்களுக்கு அது ஒன்று மட்டுமே சத்தியம் என்று தோன்றி விட்டதுதான்.’’

## 22-8-1944

### வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

‘‘பரமாத்மாவுடன் (பரம்பொருளின் ஜீவத்தன்மையுடன்) உனது தொடர்பு மிகவும் ஆழ்ந்து சென்றுள்ளது; அதில் உனது காலடிகள் மேலும் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. இப்போது நீ என்னுடைய நிலைக்கு வந்துகொண்டிருக்கிறாய்; கிட்டத்தட்ட அந்த நிலைக்கு வந்து விட்டாய். இதற்கு முந்திய உனது உள்நிலை அப்படியே தொடர்ந்திருந்தால் இப்போதைய நிலைக்கு உன்னை மேலே கொண்டு வருவது சிரமமாக இருந்திருக்கும்.’’

‘‘இப்போது நம்மோடு இருப்பவர்களில் சில நல்லவர்களும் இருக்கிறார்கள். சிலர் உன்னிடமிருந்து விலகிப் போவார்கள். அவர்களைப் பற்றி நீ கவலைப்பட வேண்டியதில்லை. R5 - க்காக தனது பிரார்த்தனைகளை M1- தொடர்ந்து செய்யலாம். இல்லையென்றால் கடைசியில் உனக்கு அதற்கான உத்தரவுகள் கொடுப்பேன். ஒரு விஷயம்பற்றி உனக்கு இப்போது அறிவுரை சொல்கிறேன்; அதாவது, ஏதாவது ஒரு நல்ல காரியம் பற்றிய எண்ணம் உனக்கு வரும்போது உடனடியாக அதைச் செய்துவிடு. அதற்கு இன்னும் நிறைய நேரம்

இருக்கிறது; எனவே, பிறகு அதைச் செய்து முடிக்கலாம் என்று காத்திருக்காமல், தள்ளிப்போடாமல் உடனே செய்துவிடு.''

பிரபஞ்ச சிருஷ்டியைப் பரிபாலிக்கின்ற, பாதுகாக்கின்ற தெய்வமாகிய மகாவிஷ்ணு, ஆதிசேஷன் எனப்படும் ஆயிரம் தலை கொண்ட நாகப்பாம்பை படுக்கையாகக் கொண்டு பாற்கடலில் படுத்திருக்கின்றார்; ஸ்ரீ மகாலக்ஷ்மி (செல்வவளத்தின தெய்வம், மகாவிஷ்ணுவின் மனைவி) அவருடைய களைப்பு நீங்கும்படியாக கால்களைப் பிடித்து விட்டு சேவை செய்கிறாள் என்று கூறப்படுவது பற்றி அதன் கருத்தை விளக்குமாறு நான் கேட்டுக்கொண்டபோது,

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''இவையனைத்தும் உருவகமாகச் சொல்லப்பட்டவை. பாற்கடல் என்பது ஆன்மீகமாகிய சமுத்திரத்தைக் குறிப்பிடுகிறது. நாகப் பாம்பு புலன்களின் ஆசையைக் குறிப்பிடுகிறது. செல்வவளத்தின் தெய்வமாகிய மகாலக்ஷ்மி என்பது நிகழ்வுநிலை சத்தியத்தைக் (மகாமாயை / phenomenal reality) குறிப்பிடுகிறது. அவள் பகவானின் பாதங்களைத் தொட்டு சேவை செய்கிறாள். அதாவது, புலன்களின் ஆசையை ஜெயித்துள்ள ஒருவருக்கு மாயை அடிமையாகிறது என்று பொருள். உன்னுடைய வேண்டுகோளுக்கு இணங்கி இப்போது பரவலாகக் காணப்படுகிற கலைத்திறன் வெளிப்பாட்டிற்கு நான் அர்த்தம் சொன்னேன். இது தவிர மற்றவை அனைத்தும், மக்களிடையே தங்கள் கௌரவத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காக மத குருமார்கள் உருவாக்கிய திட்டங்களே ஆகும். இயற்கையில் எந்த ஒரு இடத்திலும் அப்படி ஒரு அமைப்பு (பாற்கடல் முதலியன) கிடையாது. காலம் தாழ்வு நிலையடைந்தபோது, கடினத்தன்மை அதிகரித்துக் கொண்டே சென்று, கற்சிலைகள் உருவாகி மனிதனின் அறிவுத்திறனை அழித்து விட்டன. அந்த மக்கள் இந்தச் சிலைகளையே அனைத்துமாகக் கருதத்

துவங்கிவிட்டார்கள். சீர்கெட்டுப்போன நிலையின் அறிகுறி இதுதான். கைலாச மலையை (அழிக்கும் தெய்வமாகிய மற்றும் இந்த உலகமாகிய நாடகம் முழுவதையும் நடத்துகிறவராகிய சிவபெருமானின் இருப்பிடமாகக் கருதப்படுவது) பிரபஞ்ச சிருஷ்டி அனைத்துக்கும் மூலமான புலன் உணர்வு எங்கிருந்து ஒளியைப் பெறுகிறதோ அந்த மனத்தின் வேராக நினைக்கலாம்'' (அதாவது கைலாசமலை மனத்தின் வேராக உருவகிக்கப்படுகிறது).

''எல்லாப் பொருட்களிலும் ஒரே விலையைக் குறிப்பிடும் சீட்டு இருப்பதாக (அதாவது எல்லாம் ஒரே மதிப்புடையவையாக) C1 - நினைத்திருக்கிறார். அவருடைய எதிராளிகள் தங்கள் உச்சத்தில் இருந்தபோது அவருக்கு நான் உதவி செய்துகொண்டிருந்தேன். உன்னைப் பற்றிய எந்தவிசேஷமான அறிவும் அவருக்கு இல்லையென்றாலும் கூட, நீ என்ன சொல்ல வேண்டியிருந்ததோ, அதற்காக மரியாதையுடன் இருக்க வேண்டும். நீ அவருடைய சகோதரனாக இருப்பதால் குறைந்தபட்சம் அதை மகிழ்ச்சியடைவதற்கான ஒரு சந்தர்ப்பமாக நினைத்து நடந்திருக்க வேண்டும். நமது உடனிருக்கும் சகோதரர்கள் அனைவரையும் பாசம் உடைய பார்வையோடு நோக்கி, அவர்களுடைய சிறப்புக்களை மேம்படுத்த உதவி செய்திருக்க வேண்டும். யாரிடமாவது ஏதாவது விசேஷமான சிறப்புத் தன்மை இருந்தால் அவர் (C1) கடவுளிடம் பிரார்த்தனை செய்வதன் மூலமாக அதை வளர்ச்சி பெறச் செய்வதற்கு முயற்சி செய்திருக்க வேண்டும். அந்த யாரோ ஒருவர் அவருடைய நன்மைக்காக ஏதாவது சொல்லியிருந்தால் அவர் அதை கவனமுடன் கேட்டு ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். இங்கே ஒருவரின் முக்கியத்துவம்பற்றிய கேள்விகிடையாது. என் பார்வையில் அனைவரும் சமம் அல்லது வேறு வார்த்தைகளில் சொன்னால், நான் அனைவரையும் பாசமுள்ள பார்வையில்தான் பார்க்கிறேன். C1- இதையே பின்பற்றி நடந்திருக்க வேண்டும். நான் அவரிடம் சொல்வதை நிறுத்திவிட்டேன்.

என் வேலையின் முன்னேற்றத்தக்கு என்னைச் சேர்ந்த மக்களே தடைகளை உருவாக்க வந்திருப்பது மிகவும் வருந்தத்தக்க ஒரு விஷயம். எப்படியாவது இவர்கள் (S1 மற்றும் C1) உன்னுடைய தோழமையில் இருக்கும் ஒரு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டிருந்தால் தங்கள் வாழ்க்கையின் ஈடேற்றத்தை அவர்கள் எய்தியிருப்பார்கள். அவர்களுக்கு இதயம் இருந்திருந்தால், உன்னிடம் வரும் வாய்ப்பு அவர்களுக்கு இல்லை என்றாலும் கூட, உன்னையே அவர்களிடம் போகும்படி நான் உத்தரவு கொடுத்திருப்பேன்.''

## M1 - இன் உள்நிலை பற்றிய ஒரு கேள்விக்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறிய பதில்:

''எல்லாமே தனது சத்தியநிலையில் ஐக்கியமடைவதற்கு முயற்சி செய்கின்றன. அதற்குப் போதுமான அளவு முன்னேற்றநிலையை ஒரு மனிதர் பெற்றிருந்தால் இந்த அனுபவத்தை அவர் பெறுவார். அவருடைய உள்நிலை உயர்ந்த நெருக்க நிலையை உடையதாகும். அது பரமாத்மாவுடன் (பரம்பொருளின் ஜீவத்தன்மையுடன்) அவருடைய உறவு பற்றிய செய்திகளை அது கொண்டு வருகிறது. எனினும், இது கரையில்லாத ஒரு மகாசமுத்திரம். இந்த உள்நிலையே போதுமானது என்று நினைக்கக் கூடாது; முன்னேற்றத்துக்கு எல்லையே இல்லை. இந்தப் பாதை முழுவதையும் கடந்து சென்ற பிறகும், இன்னும் முன்னேற்றமடைவதற்கான சாத்தியம் இருக்கிறது.''

## 23-8-1944

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

''என் ஆயுட்காலத்திலேயே உன்னை துருவநிலைப் பதவிக்கு (Qutub) உயர்த்தி, அதற்கும் மேலேயும் கொண்டு சென்றேன். ஆனால், அதன் உணர்வு உனக்குக் கிடைக்கும்படி செய்யவில்லை. அதை உணர்ந்தறியக்கூடிய கண்களும் கூட பார்வை மங்கியிருந்தன. இப்போது

M1- க்கு ஒரு ஆரம்பம் இருக்கிறது. புகார் செய்வது, (குறை சொல்வது) நியாயமற்றது. அது பெற்ற பரிசுகளுக்கு நன்றியில்லாத தன்மையாக அது இருக்கும். உலர்ந்து போன புல்புதருக்குப் பின்னால் ஒரு மலை முழுவதும் மறைக்கப்பட்டுள்ளது. துருவப்பதவியின் தன்மை மனிதனின் தொடர்புக்கு வெகு அருகில் இருக்கிறது. இது யாருக்குமே தெரியாத ஒரு ரகசியம். அது பற்றி நான் உனக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அதை ரகசியமாக வைத்திருக்க வேண்டியது தேவையாக உள்ளது. என் அனுபவத்திலிருந்து அதைக் கற்றுக்கொள்.''

''நான் உனது வேண்டுகோளை ஏற்றுக்கொண்டேன், அதை நிறைவேற்றியிருக்கிறேன் என்பதில் உனக்கு இப்போது மகிழ்ச்சி தானே! அவர் (M1) முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறார். முன்னேற்றத்துக்கான வாயில் திறந்திருக்கிறது. அவர் தன்மீது நியமித்துக் கொள்கிற சுயக்கட்டுப்பாட்டின் அளவுக்கு ஏற்றபடி ஆன்மீக உயர்பதவிநிலை அடையப்படும். ஆயினும் இனிமேல் யாருக்காகவும் இம்மாதிரி சிபாரிசு (பரிந்துரை) செய்யாதே. இங்கே அது கையைவிட்டுப் போகின்ற விஷயங்கள் பற்றிய ஒரு செய்தியாகும். இந்தப் பதவிக்கு எல்லோரும் தகுதியானவர்கள் அல்ல. M1- க்காகவும் கூட, தன் கட்டுப்பாட்டை மீறிப் போய்விடாமலிருப்பதற்காக நான் பல உபாயங்களைக் கையாள வேண்டியிருந்தது. அன்பு சம்பந்தமாக குறை கூறுதல் ஏதுமில்லை. எனக்கு குறை சொல்லும் சுபாவம் இருக்கிறது, அவ்வளவுதான். B1- இந்தப் பதவிநிலைக்கு சிறிதும் தகுதியானவர் அல்ல. அவரிடத்தில் ஒருபோதும் உன் முயற்சிகளை வீணாக்கக்கூடாது. R2- க்கும் கூட, அவர் சரியான பாதைக்கு வந்து விட்டாலும், அவருக்கு அவசரப்பட்டு இந்தப் பதவிநிலையைக் கொடுத்துவிடக் கூடாது. ஏராளமான சிந்தனை மற்றும் தீவிர ஆலோசனைக்குப் பிறகே வேலை செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. இந்த உலகம் மிகவும் நுணுக்கமான (சிக்கலான) குணமுடையது. நீ எல்லோரையும்

இதயத்தில் சுத்தமானவர்கள் என்று நினைக்கிறாய். அது உண்மை இல்லை. எனவே, நான் மீண்டும் சொல்கிறேன். நான் அதற்கான உத்தரவுகள் கொடுத்தாலன்றி சக்திகளை யாருக்கும் கொடுக்கக்கூடாது. சில சமயங்களில் நீ கட்டுப்பாடில்லாமல் மாறிவிடுகிறாய். இந்தப் பழக்கத்தை விட்டுவிடு.''

நான் அவரிடம் எனக்கு அந்த விஷயத்தில் உதவி செய்யும்படி பிரார்த்தனை செய்தேன்.

### அதன் பிறகு வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:

''நான் அதைப் பார்த்துக் கொள்கிறேன். நீ கட்டுப்பாடில்லாமல் போவதற்கு இனி நான் விடமாட்டேன். தற்சமயத்துக்கு சக்திகளைப் பெறும் தகுதியுடையவர்களாக யாரும் இல்லை. இதை ஒரு கடுமையான எச்சரிக்கையாக எடுத்துக்கொள். அப்படி யாராவது இருந்தால் (இருக்கும்போது) நான் உனக்குச் சொல்வேன். யாருக்காவது தகுதியிருப்பதாக நீ நினைத்தால் - அது சரியா என்பதில் உனக்கு சந்தேகம் இருந்தால், என்னிடம் கேட்டு அதை சரிபார்த்துக்கொள். இந்த வட்டத்திற்குள் (கூட்டத்தில்) கடவுளை நோக்கிய பாதையில் நல்ல முன்னேற்றம் அடையத் தக்கவர்களாக இருப்பவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். மற்றவர்கள் எல்லாம் இதை ஒரு பழக்கமாகச் செய்து வருகிறார்கள். மிகவும் அரிதான அந்த விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர், உன்மீது நாட்டம் கொண்டவர்களாக இருப்பார்கள். அவர்களுக்கு சுயநலமான நோக்கம் இருக்காது. இதை அனுபவம் உனக்கு இதை சொல்லும். நானும் கூட உனக்குச் சொல்லிக்கொண்டிருப்பேன். உன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இந்தக் கடமை, சாதாரணமான ஒரு காரியம் அல்ல. 'அசாதாரணமான இணையற்ற பதவி நிலையைப் பெற்றிருப்பவர்களுக்கு அசாதாரணமான தொல்லைகளும், பெரும்

சிரமங்களும் காத்திருக்கும்' (உருதுமொழி இரண்டுவரிச் செய்யுளில் ஒருவரி).''

''நான் வாழ்ந்த காலம் நன்றாக இருந்தது. ஆனால், உன் காலம் அவ்வளவு நல்லதாக இல்லை. அதனால்தான், அனைத்து விதமான சக்திகளும் உன்னிடம் நிரப்பப்பட்டுள்ளன. அந்த ஒவ்வொரு சக்தியும், அதற்குரியதான சிறப்பு நிலையின் உச்சத்தில் இருக்கின்றன. இதுவரையில் வேறு யாருக்கும் இந்தப் பேரருள் கிடைக்கவில்லை. வருங்காலத்திலும் கூட அப்படி யாரும் இதைப் பெறுவார்களா என்பது நிச்சயமில்லை. உனக்காக இயற்கையே என்னைக் கட்டாயப்படுத்தியது. இல்லையென்றால் உனக்கும் இது கிடைத்திருக்காது. இந்த அளவுக்குப் பண்பாடுள்ள ஒரு மனிதரைக் காண்பேன் என்பதில் எனக்கு சிறிதளவே நம்பிக்கை இருந்தது. எனக்கும் உனக்கும் இடையே வேறுபாடு நிச்சயமாக இருக்கத்தான் செய்யும். வணக்கத்திற்குரிய என் மாஸ்டர் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) என்னைக் கண்டுபிடித்தார்; நான் உன்னைக் கண்டுபிடித்தேன் என்று ஒரு இடத்தில் நான் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். வருங்காலத்தில் இந்த அளவுக்குச் சிறப்பான ஒருவரைக் கண்டறிவது மிகக்கடினம் என்பது இதன் பொருளாகும். மோசமான காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. மக்களின் மனதில் அமைதியற்ற தன்மை வளர்ந்துகொண்டிருக்கிறது. இதில் மிகக் கவனமான – எச்சரிக்கையான அணுகுமுறை தேவைப்படுகிறது. எனினும், கடவுளின் அருளைப் பற்றிய அவநம்பிக்கை இருக்கக்கூடாது. அவரால் எதுவும் செய்ய முடியும். இதுவே என் கோட்பாடாக இருந்தது; இருக்கிறது. மக்கள் இன்னும் நேசிப்பதற்கு (அன்பு செலுத்துவதற்கு) கற்றுக்கொள்ளவில்லை. வற்புறுத்தித் திணிப்பதன் மூலமாக சிறிதளவு முன்னேற்றம் உண்டாக்கப்பட்டிருக்கிறது. நமது மார்க்கத்தில் ஏராளமான மக்களை அனுமதிக்க வேண்டிய தேவை இல்லை. இங்கே உள்ளே வருகிறவர்கள், சரியானவர்களாக இருக்க வேண்டும். உனக்குக் கெட்ட

பெயர் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கக்கூடாது. நான் என் வாழ்நாளில் செய்தது எதுவாயினும், அது வணக்கத்திற்குரிய எனது மாஸ்டரின் கட்டளைகளுக்குக் கீழ்படிந்து நடந்த செயலாகவே இருந்தது. அதேபோல, நீயும் எனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். முடிந்த வரை மக்களுக்கு தீட்சை அளிப்பதில்லை என்ற எண்ணம் உனக்கு இருக்கிறது. இந்த எண்ணம் ஓரளவுக்கு சரியானதுதான். ஏனென்றால், இம்மாதிரி தீட்சை அளிக்கப்பட்டவர்களுக்கான பொறுப்பு அதிகமாகி விடுகிறது. ஒருவர் போதுமான அளவுக்கு ஆன்மீக முன்னேற்றம் அடைந்திருக்கும்போது, அவர் வீழ்ச்சியடைவதற்கான அபாயம் கடந்து விட்டபோது மட்டுமே அவருக்கு தீட்சை அளிக்க வேண்டும் என்ற உன் எண்ணத்தை நான் பாராட்டுகிறேன். இந்த எண்ணத்தைப் புரிந்து கொண்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். மற்ற விஷயங்களிலும் இதுவே என் விருப்பமாகும். ஆயினும், யாருக்கு நான் ஏற்கெனவே தீட்சை அளித்திருக்கிறேனோ, அவர்களைக் கவனித்துக்கொள்வது உன் கடமை என்று கருத வேண்டும். அது எனக்கு நீ செய்கின்ற தேவையாக இருக்கும். எனினும், யார் இதற்குத் தகுதியற்றவர்களாக இருக்கிறார்களோ, அவர்களை நமக்கு அவப்பெயரை ஏற்படுத்தக் காரணமாக இல்லாதபடி நமது கூட்டத்திலிருந்து ஒதுக்கிவிட வேண்டும் என்ற உத்தரவையும் இதனுடன் அளிக்கிறேன். அப்படி அவர்களை ஒதுக்கிவிடுவது அவர்களுக்கான என் கடமையிலிருந்தும் என்னை விடுபடச்செய்யும். (இந்த வாக்கியங்களை தேவைப்படும் போது உடனே கண்ணில்படும்படியாக நோட்டுப்புத்தகத்தில் சிவப்பு மையினால் எழுதிவைக்க வேண்டும்.) அவர்களில் சிலர் ஏற்கெனவே வழிமாறிப் போய்விட்டார்கள். இன்னும் சிலர் N1- க்கு பலியாகி விட்டார்கள். அவர்களிடமிருந்து எதையும் எதிர்பார்க்காதே. இதில் தவறு ஏதும் இல்லாதிருப்பதற்காக, நான் உனக்குக் குறிப்புக்கள் கொடுப்பேன். நான் ஏற்கெனவே

சுட்டிக்காட்டியது போல இவற்றை (எழுதிவைக்கும் குறிப்புக்களில்) சேர்க்க வேண்டியதில்லை. தேவை என்று நான் உணரும் பட்சத்தில் ஆண்டு விழாவில் அந்த அறிவிப்பைச் செய்யும்படி செய்வேன். நீ எல்லாக் குறிப்புக்களையும் தயாராக வைத்திரு. ஆண்டு விழாவின் போது உன்னைப் பிரச்னைகளிலிருந்து விடுபட்டு வைப்பதற்கு முயற்சி செய்யப்படும். தற்செயலாக ஏதாவது பிரச்னை வந்தால், அதனால் மனம் பதறத்தேவையில்லை. நான் எல்லாவற்றையும் கவனித்துக்கொள்வேன்.''

''மோசமானவர்களின் நட்பைப் பற்றி – தீயவர்களுடன் பழகுவது பற்றி, இன்று தூங்கிக் கொண்டிருந்தபோது 'தபலா' என்ற இசைக்கருவியின் ஒலியைக் கேட்டதை இப்போது நீ குறிப்பிட்டுச் சொன்னாய். உண்மையில் அது ஒரு எண்ணப்பதிவின் விளைவு தான். அதை நான் சுத்திகரிப்பு செய்து நீக்கிவிட்டேன். இங்கே பிறருடன் பழகுவதன் விளைவை நீ பார்த்திருக்கிறாய். அதைப் பற்றி ஒரு கருத்து கூட மனதில் தோன்றாதவர்களைப்பற்றி நான் என்ன சொல்வேன்? பெரும்பாலான மனிதர்களிடத்தில் நல்ல தோழமையா? கெடுதலான நட்புறவா? என்பது பற்றி ஆராய்ந்தறியும் உணர்வே சிறிதும் இல்லை. நுட்பமாகக் கவனித்துப் பார்க்கையில் இது நல்லது என்பதுபற்றிய ஒருவனின் கருத்துக்கு எதிரானதாக இருக்கும் எந்த நட்புறவும், தோழமையும் தீமையானதுதான். நீ சென்றிருந்த அந்த (A......என்ற) இடத்தின் சூழ்நிலை மிக மோசமானது. அங்குள்ள ஒவ்வொரு அணுத்துகளும் புலன் சார்ந்த விஷயங்களின் ஆற்றலினால் பாதிக்கப்பட்டுள்ளது; எனினும் உன்னைப்போல அத்தனை விரைவில், வேறு ஒருமனிதர் அதன் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கமாட்டார்; அந்த எண்ணப் பதிவை உணர்ந்திருக்கமாட்டார் என்பதும் என் உறுதியான கருத்தாகும். அந்தப் பதிவுக்கு நீ ஆட்பட்டுவிடவில்லை; அதை வெட்டியெறிந்துவிட்டாய் என்பது வேறுவிஷயம். இயன்ற அளவுக்கு மோசமானவர்களின் தோழமையிலிருந்து ஒதுங்கியிருப்பதே

அனைவருடைய கடமையும் ஆகும். இதில் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருப்பது (வேறு வழியில்லை என்பது) வேறு விஷயம். உண்மையில் உனக்கு அம்மாதிரி இடங்களுக்குப் போவதுபற்றி தடை எதுவும் இல்லை. ஏனென்றால், உன் சக்தி அந்தச் சூழ்நிலையிலிருந்து அந்தப் பதிவுகளை அழித்துவிடும். ஆனால், உன்னைப்போல் மற்றவர்களும் அங்கே சென்றால் அது எவ்வளவு தீமையானதாகும் என்பதை நினைத்துப்பார். மொத்த விலைக்கடை சந்தைக்கு நீ போகும் வழியில், உன்னை ஒரு காரணத்துடனே அந்த இடத்திற்கு அழைத்துச் சென்றேன். அந்த இடத்தின் சூழ்நிலை மிக மிக மோசமாக, குற்றங்களும், தீமைகளும் மலிந்ததாக இருந்தது. அதைச் சுத்தம் செய்வதற்கு நான் விரும்பினேன். மற்றவர்கள் அதிலும், பயிற்சியில் புதிதாகச் சேர்ந்தவர்கள் உன்னோடு இருந்திருந்தால் உனக்கு இப்படி உத்தரவு கொடுத்திருக்க மாட்டேன். எனவே, மோசமானவர்களுடன் பழகுவதைத் தவிர்ப்பதில் எல்லோரும் கவனமாக இருக்கவேண்டும் என்பதே இதன் கருத்து.''

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் சொல்லி எழுதச்செய்த ஒரு கட்டுரை:

இந்த உலகம் குறுகலான மற்றும் இருண்ட அயனிகள் (மின்சக்தி உடைய அணுத்துகள்கள் அல்லது அணுக்கூறுகள்) அடங்கியுள்ள ஒரு இடமாகும். ஆனால், இவற்றினுள் ஒரு சிறு மின்னல் தன்மையும் உள்ளது. இதன் பொருள் என்னவெனில், மாயா மற்றும் புருஷா (ஸ்தூலமான செயல்பாடுகளின் கோட்பாடு மற்றும் செயலற்று சாட்சியாக விளங்கும் ஊடகம்) ஆகிய இரண்டும் சிருஷ்டியின் ஆரம்பத்திலிருந்து இன்று வரையில் ஒன்று சேர்ந்து இருக்கின்றன என்பதேயாகும். விவேகமுடைய, தொலைநோக்கு உடையவர்களாய், தெய்வீகப்பாதையில் முன்னேற்றத்தை விரும்புகிறவர்கள், எவற்றில் ஒளி இடம் பெற்றுள்ளதோ அந்தப் பகுதியில் உள்ள அயனிகளை மட்டும் தங்கள்

பார்வையில் வைத்திருக்கிறார்கள். அவர்கள் அதன் நன்மையைப் பெறுகிறார்கள். இதற்கு மாறாக உலகியல் விஷயங்களிலும், பயனற்ற சிக்கல்களிலும் ஈடுபட்டிருக்கிறவர்கள் அந்த அயனிகளில் இடம் பெற்றுள்ள இருளான பகுதியில் தொடர்புடையவர்களாக இருக்கிறார்கள். தங்களுக்குள் அந்த இருள் சம்பந்தமான விளைவுகளை தொடர்ந்து அனுமதித்துக் கொண்டே இருக்கிறார்கள். இதனால், ஒருவிதமான இருள் தன்மையில் உச்சி முதல் பாதம் வரையில் தங்களுடைய சிக்கல்களுக்குக் காரணமாகிறார்கள். இந்த உள்நிலை படிப்படியாக உயர்ந்து திடத்தன்மையை அடைகின்றது. தனது எண்ணங்களுக்கு ஏற்றவாறு ஒருவன் தனக்குள் பதிவுகளை அனுமதிக்கிறான்; அதற்குத் தக்கபடி சக்தியை ஈர்த்துக் கொள்கிறான்; இதன் விளைவாக அவன் இருள் தன்மையினால் சூழ்ந்துகொள்ளப்படுகிறான்; இப்படி, மெதுவாக மாயா சம்பந்தமான பதிவுகள் அவனை முழுமையாகப் பற்றிக் கொள்கின்றன. இவ்வாறு ஒருவன் தனக்குள் சேர்த்துக் கொண்டிருக்கின்ற இந்த அணுக்கூறுகள், தங்களுக்குச் சாதகமான ஒரு சூழ்நிலையைப் பெற்று வளர்ச்சியடைந்து கொண்டே போகின்றன. ஒருவனுடைய உடலின் அணுக்கூறுகளைப் பாதிக்கின்ற, இந்தத் திடத்தன்மையின் பதிவு, மெல்லிய தசைப்படலம் எனப்படுகின்ற மூளையின் நுட்பமான உறையில் திரண்டு வந்து குவிகிறது. இதன் விளைவு ஆரம்பமாகும்போது, அறிவுக் கூர்மையின் மூல விதை இடம் பெற்றுள்ள மனித மூளையின் அந்தப் பகுதி அதனால் பாதிப்படைகிறது. அதன் செல்வாக்கினால் அதன் பிரதிபலிப்புகள் ஆழமாகப் பதிக்கப்படுகின்றன. போதுமான அளவு ஆழத்தை அது அடையப் பெற்றிருக்கும்போது, இந்தச் செயல்முறைக்குப் பலியாகி இருப்பவர், பழக்கத்தை உருவாக்கிக் கொண்டதன் காரணமாக, வெளிப்புற பாதிப்புகளை விரைவாக ஏற்றுக் கொள்ளத் துவங்குகினர்; அப்போது இந்த விஷயங்கள் பதிவுகளாக, (சம்ஸ்காரங்களாக) மாறத்

துவங்குகின்றன. இந்த விஷயங்களின் உள்வரத்து தொடரும்போது, இந்த எண்ணத்திலேயே தொடருவதைத் தடை செய்யக்கூடிய ஒருவரின் நட்புறவு கிடைக்காவிட்டால், அப்போது அவரது உள்நிலை இன்னும் விரைவாக மோசமடைந்து மிகவும் மோசமானது என்ற நிலையடைகிறது. அதிர்ஷ்டவசமாக மிக உயர்ந்த தகுதிச் சிறப்புடைய ஒரு முழுமையான மாஸ்டரை சந்தித்தால் அவன் தனக்குள் சேர்த்துக் கொண்டுள்ள, முழுமையான இருள் தன்மையானது அந்த மாஸ்டருடைய பிராணாஹூதியினால், ஒளிபெறத் துவங்குகிறது. அதன் பிறகு சாதகருடைய எண்ணம் இருள் தன்மையிலிருந்து விடுபட்டு, அதற்குப் பதிலாக ஒளியாகத் தன்மை மாற்றம் அடைய ஆரம்பிக்கிறது. இதன் பலனாக ஆரம்பத்திலிருந்து இதுவரையில் இருள் தன்மையைக் கவர்ந்து இழுப்பதிலேயே முனைப்பாக இருந்த சக்தி இப்போது தனக்குள் ஒளியை அனுமதிக்கத் துவங்குகிறது. இவ்விதமாகவே ஒருவனின் வளர்ச்சி உண்டாக்கப்படுகிறது. போகப்போக லட்சியம் அடையப்படுகிறது. அதாவது, இருளில் இருந்து அவர் ஒளியை நோக்கி நகரத்துவங்குகிறார். அவருடைய சொந்த சக்தியும் அதே திசையில் வேலை செய்ய ஆரம்பிக்கிறது.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

''தீமை நிறைந்த விஷயங்களை தவிர்க்கவும், நன்மையானவைகளை ஏற்றுக் கொள்வதற்கும் உதவியாக உனக்கு விவரிக்கப்பட்ட இது இயற்கையின் ரகசியமாகும். என் உலக வாழ்க்கை முடிந்த பிறகும் கூட, தொடர்ந்து எவ்வாறு நான் அறிவுரைகளைக் கொடுத்து வருகிறேன் என்பதை மக்கள் அறியச் செய்வதற்காக இந்தக் கட்டுரையை எனது நோட்டுப் புத்தகத்திலும் கூட எழுதிவைக்க வேண்டும். இந்தக் கட்டுரையில் முதலில் வரும் சில வார்த்தைகள் மட்டும் என்னுடையவை; மீதியுள்ள விஷயங்கள் ராம் சந்த்தருடையது மட்டுமேயாகும். சாதாரண மனிதர்களுக்காகப் பயன்படுத்துகின்ற

வார்த்தைகளை மாஸ்டரை மிகுந்த வணக்கத்துடன் குறிப்பிடும்போது பயன்படுத்தக்கூடாது. அவரை அப்படி சாதாரண நிலையில் இருப்பவராகவும் நினைக்கக் கூடாது. அவரை அப்படி உயர்ந்தவராகக் கருதியிருப்பது குருவுக்கு தன்னை ஒரு அடிமையாகக் கருதியிருப்பதன் (குருபசு) அறிகுறியாக இருக்கும்.''

**26-8-1944**

**ஃபடேகரில் இருக்கும் வணக்கத்திற்குரிய மாஸ்டரின் மகன் J1 - ன் கவலைக்கிடமான உடல் நிலை சம்பந்தமாக அவருடைய அறிவுறுத்தல்கள்:**

(அவருடைய மகன் J1, 28-8-1944 அன்று மரணமடைந்தார்).

'' M1 - ஃபடேகருக்குச் செல்ல வேண்டும். என்னுடைய உத்தரவின் பேரில்தான் அவர் (M1) அங்கே வந்திருப்பதாக அவர்களிடம் சொல்ல வேண்டும். அவரிடம் (M1) ரூ.150 கொடுத்து அனுப்பவும். நீ (ராம் சந்த்தர்) அங்கே செல்வது சரியாக இருக்கும் என்று நான் கருதவில்லை. அங்கே எவ்வளவு பணம் தேவைப்பட்டாலும் சரி. அது உன் கவனத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டும். நீ அவருக்காக மனம் வருந்த வேண்டாம். இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் போது துன்பங்கள் வந்தாக வேண்டும். முதிர்வு பெற்ற பதிவுகளின் (சம்ஸ்காரங்களின்) பலன்களை நிச்சயமாக அனுபவித்தாக வேண்டும். (அதுவே போகம்) அது பற்றி ஒருஅறிவுரை: 'ஒவ்வொரு காரியத்தையும் செய்து கொண்டிருக்கும் போதும் கூட, அந்த ஒவ்வொன்றிலிருந்தும் எவன் தன்னை விடுபட்டவனாக வைத்திருக்கிறானோ அந்த மனிதனே மேலானவன் ஆவான்!''

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் M1 - க்கு தொடர்ந்து கூறிய அறிவுறுத்தல்கள்:

''வலி மற்றும் பலவீனத்தின் காரணமாக ராம் சந்த்தர் அங்கே வர அனுமதிக்கப்படவில்லை என்பதை J1- இடம் தெரிவிக்கவும். J1- ன் உடல்நிலை பற்றிய ஒரு கவலை ஏற்கெனவே இருக்கும் போது, ராம் சந்த்தரின் பலவீனம் பற்றிய இரண்டாவது கவலையும் உருவாக விடவேண்டாம் என்று ஒரு யோசனையில்தான் இவ்வாறு செய்யப்பட்டது. ராம் சந்த்தர் அங்கே வருவதற்குத் தயாராக இருந்தபோதிலும், அவரது வயிற்றுவலி கடுமையாக இருந்ததால், நான் அவர் பிரயாணம் செய்ய வேண்டாமென்று தடுத்துவிட்டேன். உங்களைப் (J1) பார்க்கச் செல்லும்படி லாலாஜி சாகேப் எனக்கு (M1- க்கு) உத்தரவிட்டார். மேலும் அவர் கூறியது என்னவெனில் பணம் பற்றிய விஷயத்தை ராம் சந்த்தரைத் தவிர வேறு யாருக்கும் தெரிவிக்கக்கூடாது என்பதாகும்.''

## இதைத் தொடர்ந்து மாஸ்டர் எனக்காகக் (ராம் சந்த்தர்) கூறியது:

''மனிதனை, மனிதனாக C1- கருதுவதில்லை என்ற அளவுக்கு C1- தன்னுடைய தலையை திருப்பி வைத்துக் கொண்டிருக்கிறார் மற்றும் தன்னையே ஆன்மீகத்தின் தெய்வமாக நினைத்திருக்கிறார். உன்னை அவர் நடத்திய விதம் பழங்கால மகாமுனிவர்களுக்கும் கூட அதிருப்தியை உண்டாக்கியிருக்கிறது. இப்போது தனது நல் வாழ்வுக்கு ஏற்பட்டுள்ள அபாயம் பற்றி அவர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவருடைய போதையை நீக்கச் செய்யவல்ல அந்த சக்தியை நேற்றிரவு நான் உனக்கு அளித்தேன். இப்போது, லட்சியத்துடன் மிக அதிகபட்ச நெருக்கத்தை அடைந்துள்ளவராயினும், எந்த ஒரு மகானுடைய ஆன்மீக உள்நிலையையும் ஒரு விநாடியில் பறித்துவிடும் சக்தி உன்னிடம் இருக்கிறது. இப்போது, அவர் (C1) எந்த அடிப்படையில் அதைத் தக்க வைத்துக்கொள்ள முடியும் என்று பார்க்கிறேன். இப்போது, அவர்

முகத்தைப் பார்க்கவும் நான் விரும்பவில்லை. அவர் செய்துள்ள வரம்பு மீறிய செயல் சாதாரணமானது அல்ல. அவர் உன்னைப் பற்றி குறைகூறி எழுதியிருப்பது எதுவாயினும் அது என்னைப் பற்றி எழுதப்பட்டதேயாகும். இனிமேலும் எனது தொடர்புச் சங்கிலியில் இம்மாதிரி ஒரு மனிதரை நிறுத்தி வைத்துக்கொள்ள நான் விரும்பவில்லை. அவரைப்பற்றி இவ்வளவுதான் நான் சொல்வேன்; அடுத்து இரண்டாவது ஆசாமிக்காக (S1) நான் காத்திருக்கிறேன்.''

## 28-8-1944

### வணக்கத்திற்குரிய மாஸ்டரின் அறிவுறுத்தல்கள்:

''இரவு நேரத்தில் சகோதர சகாக்களுக்கு நீ பிராணாஹூதி அளிக்கிறாய். இதை ஒரு சில நேரங்களில் தவிர்த்துவிடலாம். அவர்களுக்கு தனித்தனியாக பிராணாஹூதி அளிப்பதற்காக நீ என்னையும் சார்ந்திருக்கின்றாய். இதுவும் கூட ஒவ்வொரு நாளும் செய்வது தேவையில்லை. வாரத்தில் ஒரு நாள் செய்வது போதுமானது. ஆயினும், எப்போதாவது யாருக்காவது பிராணாஹூதி அளிக்க நீ விரும்பினால் அதற்குத் தடை ஒன்றுமில்லை.''

### தனித்தனி சகாக்கள் பற்றிய என் விசாரிப்புக்கு பதில் சொல்லும் விதமாக வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:

''S6 - நல்ல மனிதர்தான். ஆனால், ஊடுருவிப் பார்க்கும் அறிவுத்திறன் அவருக்கு இல்லை. அவரும் S2 போலவே இருக்கிறார். S5 - உன்னுடைய சகாயத்தை நாடி வந்தால் நன்கு வளர்ச்சியடையலாம். M5 - பிரிசெப்டர் ஆவதற்கான அனுமதிக்காக C1 - க்கு கடமைப்பட்டிருக்கிறார். ஆனால், அவருடைய அனுமதியினால் அவரிடம் எந்தப் பயனும் ஏற்படவில்லை. உன் மீது நம்பிக்கை வைத்து அவர்

வந்தால் – அதாவது, உன்னை எனது பிரதிநிதியாகவும், என் பதவிக்கு வாரிசாகவும் அவர் நம்பினால் – பிறகு உன் அறிவுறுத்தல்களின்படி நடந்தால் அவர் நல்ல முன்னேற்றத்தை அடைவார். இப்போது அவருக்கு அனுமதியளிக்காமல் காத்திரு. நீ என் பிரதிநிதி என்ற பொது அறிவிப்புக்குப் பிறகு அதுபற்றிக் கவனிக்கலாம். சற்று மேலான மனிதர்களில் R3 - ம் ஒருவராவார், அவர் எளிமையாகவும், நல்ல நம்பிக்கை உடையவராகவும் இருக்கிறார். பிரிசெப்டராக பணி செய்ய அனுமதியளிப்பதுபற்றி நான் கொஞ்சம் கண்டிப்புடன் இருக்கிறேன். அவருக்கு இப்போது அனுமதி அளிப்பதற்குத் தயக்கத்தை உணர்கிறேன். ஏதோ ஒரு சமயத்தில் அவருக்கு அனுமதியளிப்பதாக இருந்தாலும், அது நிபந்தனைக்கு உட்பட்ட அனுமதியாக இருக்க வேண்டும். நீயும் அதுபோல மக்களிடம் கண்டிப்பாக இருக்க வேண்டியதாக வரும். எந்தவிதமான கண்டிப்புடன் இருக்க வேண்டும் என்பதை நான் உனக்குச் சொல்வேன். நிகழ்ச்சிகள் விரைவாக நடந்து கொண்டிருக்கின்றன. உனக்கு எதிர்ப்பு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. தங்கள் செயல்களுக்கான உடன் விளைவுகளை அவர்கள் அனுபவிப்பார்கள். C1 நல்ல பரம்பரையைச் சேர்ந்தவரல்ல (அது பற்றிய விவரம் மனக்காட்சியில் வந்தது). உண்மையான ஒரு மனிதர் தவறு செய்யமாட்டார். இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில்தான் பூஜாரிகள் குலத்தினரை ஆன்மீகப் பயிற்சி அளிப்பதற்குத் தகுதி உடையவர்களாக பெரியோர்கள் மதித்தார்கள். ஆனால் இப்போது அவர்களுடைய இனத்திலும் கலப்பு ஆரம்பித்து விட்டது. இது காலத்தின் நிலவரம்.''

**நான் கேட்டதற்குப் பதிலாக வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''அதற்கான நேரம் வரட்டும். இவையனைத்தும் சரியாகி அமைந்துவிடும். நீ செய்து கொண்டிருப்பது எதுவாயினும் அதைத்

தொடர்ந்து செய். நான் இப்போது J1- இடம் போகிறேன். உன் உடல்நிலையைக் கவனித்துக்கொள். (அன்றைய தினம் J1- உயிர் நீத்தார். ஆனால், அந்தச் செய்தி பிறகுதான் வந்தது).

30-8-1944

## வணக்கத்திற்குரிய மாஸ்டரின் அறிவுறுத்தல்:

''இன்று C1- உடைய ஆன்மீகநிலை முழுவதையும் பறித்துக்கொள். (அதற்கான வழிமுறை கொடுக்கப்பட்டது.) அம்மாதிரி ஒரு மனிதரை, நமது பயிற்சிமுறையில் தக்க வைத்துக்கொள்ள நான் விரும்பவில்லை. அவருடைய தொடர்பைத் துண்டித்துவிடு. தீட்சையளிக்கப்பட்டவர்களின் பட்டியலில் இருந்து அவருடைய பெயரை நீக்கிவிடு. ஆண்டு விழாவில் இதைப் பற்றி ஒரு அறிவிப்பும் செய்துவிடு. அவர் என்னைச் சார்ந்தவர் அல்ல. ஆண்டுவிழாவில் மேலும் என்ன செய்ய வேண்டும் என்பதை நான் உனக்குச் சொல்வேன். அவர் மீண்டும் மீண்டும் தவறுகளைச் செய்து கொண்டிருந்தார். நானும் அவரை மன்னித்துக் கொண்டிருந்தேன். ஆனால், இந்தத் தவறு மன்னிக்கக் கூடியது அல்ல. என்னால் அவருக்கு அளிக்கப்பட்டிருந்த அனைத்து நலன்களையும் நான் விலக்கிக்கொள்கிறேன். இந்த வேலையை இன்றே செய்து முடித்துவிடு.''

## J1 - பற்றி விசாரித்ததற்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர்:

''மனம் வருந்தாதே. பிரார்த்தனை மட்டும் செய்.'' என்று உத்தரவிட்டார்.

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் மேலும் கூறியது:

''S2 - க்கு கீழ்க்கண்டவாறு ஒரு கடிதம் எழுது: '3-7-44 ஆம் தேதியில் உங்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதற்கு நீங்கள் உரிய கவனம் செலுத்தவில்லை. அதில் என்ன எழுதப்பட்டிருந்ததோ அது உங்கள் நன்மைக்காகவே என்பதை நான் புரிந்து கொண்டிருக்கிறேன்.

காலம் இப்போது மாறியிருக்கிறது. நீண்ட காலமாக ஒரு கவனிப்பாரற்ற தன்மை இருந்திருக்கிறது. இப்போது நமது வேதனையின் அழுகுரல் விண்ணுலகை எட்டியிருக்கிறது. நமக்குத் தேவைப்பட்ட பலன் வெளிப்பட்டிருக்கிறது. அது நமக்கு சாதகமான நிலையைக் கொண்டு வந்திருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளத் தவறினால் பிறகு குறை சொல்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்காது. இதற்கு முன்பு அனுப்பப்பட்ட கடிதத்துக்கு முறைப்படியான பதில் தந்திருக்க வேண்டும். தயவு செய்து, இப்போதாவது ஒரு ஆரம்பம் செய்யுங்கள். பகல் நேரத்தில் திசைமாறித் திரிந்தவன் மாலையில் வீட்டுக்குத் திரும்ப வந்துவிட்டான் என்றால் அவனைக் காணாமற் போனவனாகக் கூறமுடியாது. எனவே, மேலும் ஒரு வாய்ப்பு உங்களுக்குத் தரப்பட்டுள்ளது. நன்மையளிக்கும் விஷயங்கள் கூட இனிமையற்றவையாகக் கருதப்படும்படியாக நமது ஆன்மீக சத்சங்கத்திற்கு (சாதகர்களின் கூட்டத்திற்கு) என்ன நேர்ந்துவிட்டது என்பதை கடவுளே அறிவார். இதற்கான காரணம் மக்கள் தங்களைத் தாங்களே எல்லாமாக இருப்பதாகக் கருதியிருப்பதாக இருக்கலாம் அல்லது தங்கள் சகோதரர்களை முக்கியமற்றவர்களாக நினைத்திருப்பதாக இருக்கலாம். இவ்விஷயத்தில் ஒருவர் (பாலை மட்டும் பிரித்து எடுத்து தண்ணீரை ஒதுக்கி விடுகின்ற) அன்னப்பறவையின் குணத்தைப் பின்பற்ற வேண்டும். இந்தப் பண்பு ஒருவரிடத்தில் வளர்ச்சியடையவில்லையென்றால், அவன் தனது மாஸ்டரிடமிருந்து உண்மையான விதத்தில் பயிற்சியைப் பெறவில்லை என்று பொருள். உங்களை பிரதிநிதியாக ஆக்கியது அவருடைய கருணையும், பெருந்தன்மையுமே ஆகும். அவர் எப்போது விரும்பினாலும், அந்தப் பதவியிலிருந்து உங்களைக் கீழே இறக்குவதும் அவருடைய உரிமையே. நான் சொல்ல விரும்புவது இவ்வளவுதான். இதற்குமேல் நீங்கள்தான் என்னசெய்வது என்பதைத் தீர்மானிக்க

வேண்டும். (குருவின் கட்டளையை) ஏற்றுக்கொள்வதில் நன்மை இருக்கிறது. நன்மையளிக்கக் கூடிய ஒன்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இன்னமும் S1 - ஐ நான் தனியே பிரித்து வைத்திருக்கிறேன். சகிக்கமுடியாத எல்லைக்கு அவர் இன்னும் போகவில்லை.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர் மேலும் கூறியது:

''என் பார்வை எந்தப்பக்கம் திரும்பினாலும், அங்கே வருந்தத்தக்க நிலையை மட்டுமே அது பார்க்கிறது. இங்கே என்ன செய்ய வேண்டும் என்பதே எனக்குப் புதிர்போல இருக்கிறது. கடுமையாக, கண்டிப்பாக நடந்துகொள்ள வேண்டும் என்றால், அது என் வழக்கம் இல்லை. ஏதும் செய்ய முடியாத நிலையில், எதையும் செய்ய வேண்டியதாக இருக்கலாம். அதையும் உன் மூலமாகத்தான் செய்யவேண்டும். R2 - நன்றாக மேலேறி வந்திருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அவரை இன்னமும் முழுமையாக நம்ப முடியாது. ஏனெனில், அவர் இன்னும் ஒருமுறை செல்வதாக சாத்தானிடம் (N1) வாக்குறுதி அளித்திருக்கிறார். அவர் K.......என்ற இடத்திலிருந்து திரும்பி வந்த பிறகு அவரை எடை போட்டுப் பார் (மதிப்பிட்டுப் பார்). எந்த ஒரு நிச்சயமான கருத்தையும் உருவாக்கிக் கொள்ள இயலாத அளவுக்கு ஒருவிதத்தில் நிகழ்ச்சிகளில் மாற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. முன்பு ஒரு நாள் R2 - விடம் தேவைக்கு அதிகமாகவே நீ சொல்லிவிட்டாய். அதை நான் குறையாக (தவறான செயலாக) எடுத்துக்கொள்ளவில்லை. சந்தர்ப்பம் அப்படி அமைந்து விட்டது. இனி, உன் ரகசியத்தை வெளிப்படுத்த வேண்டாம். சற்று நடிப்பதையே தொடர்ந்து செய்.''

**கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுச் சொன்ன பிறகு வணக்கத்திற்குரிய மாஸ்டர் விடை பெற்றுச் சென்றார்:**

''இன்னும் சில நாட்களுக்கு நான் மேலுலகிற்குச் செல்ல முடியாது. ஒருவிதமான வருத்தமடையும் தன்மையை உண்டாக்கிக் கொண்டு நிகழ்ச்சிகள் உருவாகி வருகின்றன. நான் முற்றிலும் உன்னை மட்டுமே நாடிச் சார்ந்திருப்பவனாக மாறியிருக்கிறேன் மற்றும் உன்னை மட்டுமே நன்றாக என்னால் உருவாக்க முடிந்தது என்பதில் மனநிறைவுடன் இருக்கிறேன் என்பதை நான் உணர்கிறேன்; புரிந்து கொள்கிறேன். ஆண்டு விழா சமயம் வரும் வரையில் நான் காத்திருப்பேன். அதற்குப் பிறகு வணக்கத்திற்குரிய மாஸ்டரின் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) அனுமதியைப் பெற்று, அவர் சொன்னபடியே செய்வேன். இந்தக் காலகட்டத்தில் நீ இங்கு செய்துள்ள உழைப்பு ஒரு கல்லைக்கூட மெழுகாக மாற்றுவதற்குப் போதுமானதாகும். தனது தோட்டக்கலையை உரிய சிந்தனைக்குப் பிறகு விரிவுபடுத்தும்படி M1 - இடம் சொல்லவும். (இங்கு தோட்டக்கலை என்பது புதிய உறுப்பினர்களை சேர்த்து, பயிற்சியளித்து முன்னேறச் செய்வதைக் குறிக்கிறது.) இதில் எனக்கு நிறைய அனுபவம் இருக்கிறது. பருத்தியை (பஞ்சை) சுத்தம் செய்கிறவர்களையும், நூல் நூற்பவர்களையும் (அதாவது பண்பாடற்ற முரட்டு மனிதர்களை) சேர்த்து நமது கூட்டத்தை நிரப்ப வேண்டிய தேவை இல்லை. சிங்கம் போன்றவர்களை மட்டுமே அவர் (M1) இங்கு அனுமதிக்க வேண்டும். ஒரே ஒரு சிங்கத்தையாவது அவர் உருவாக்குவதற்கு முடிந்தால் அவரது பொறுப்பு முடிந்துவிடுகிறது. நீ தனியாக உன் உலகினை (சாதகர்களின் வட்டம்) அமைத்துக்கொள்ள நான் அனுமதிக்கிறேன்; ஆனால், இப்போது அதுபற்றி M1 - க்கு நான் கூறிய குறிப்புக்களை நினைவில் கொள்ளவும்.''

**பொது அறிவிப்புக்குப் பிறகு நான் இந்த வேலையை ஆரம்பிக்கலாமா? என்று நான் கேட்டதற்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

‘‘பொது அறிவிப்பு செய்வது நடக்குமா? என்பது பற்றியே எனக்கு சந்தேகம் இருக்கிறது. கடவுள் உனக்கு வெற்றியளிப்பாராக. இந்தப் பொது அறிவிப்பையும், உன் பணியையும் உன்னுடைய மாமியே (அல்லது) அத்தை (வணக்கத்திற்குரிய மாஸ்டரின் மனைவியே) கூட விரும்ப மாட்டாள் என்பது எனக்குப் புரிகிறது. இப்போதைய காலம் நன்மையளிப்பதாக இல்லை. அந்தோ! உன் இதயத்தை யாருமே புரிந்துகொள்ளவில்லை. என்னிடம் இருக்கின்ற அனைத்தையும் மற்றும் பெரியோர்களிடம் இருந்து (பழங்காலத்து மாமுனிவர்களிடமிருந்து) நான் பெற்றுள்ள அனைத்தையும் உனக்கு மாற்றிக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன்.’’

இப்படிச் சொன்ன வணக்கத்திற்குரிய மாஸ்டர் என்னைக் கண்கள் மூடியபடி உட்காரும்படி சொன்னார். நான் அப்படியே செய்தேன். அப்போது மணி பிற்பகல் 2.15மணி. தொடர்ந்து அவருடைய உத்தரவு இது: ‘‘இன்று மாலை நீ சாப்பிட வேண்டாம். பால் மற்றும் கற்கண்டை மட்டும் சாப்பிடு. இன்று உன் விதியை நான் தீர்மானித்துவிட்டேன். நன்மை பெற விரும்புகின்றவர் யாராயினும் அவர் உன்னையே நாடிச் சார்ந்திருப்பாராக. இப்போது பொறுப்பு முழுவதும் உன்னுடையது மட்டுமே ஆகும். இன்று அனைத்து விஷயங்களுக்காகவும் உன்னை நான் தயார் செய்திருக்கிறேன். என் கூட்டத்தினரிடையே இதேமாதிரி நிலைமை தொடருமானால், அந்த அனைவரிடமிருந்தும் ஆன்மீகநிலையை நீக்கிவிடு. அவர்களுடைய இணைப்பையும் துண்டித்துவிடு. இப்போது அவர்கள் வேறு இடம் தேடிச் சென்றுவிடலாம் என்று தெரிவித்துவிடு. உன்மீது நம்பிக்கை வைத்து வருகிறவர்களுக்கு இதிலிருந்து விதிவிலக்கு உண்டு. உன்னுடைய வேலையைத் தடை

செய்கிறவர்களுடைய ஆன்மீக நிலைகளையும் கூட நீக்கிவிடு. யாருடைய விஷயத்திலும் சிறிதளவும் தயவு காட்டத் தேவையில்லை. உன்னால் துண்டிக்கப்பட்ட தொடர்பை வேறு யாராலும் திரும்பவும் இணைக்க முடியாது என்று வாக்குறுதியளிக்கிறேன். பழங்கால மாமுனிவர்களும் இதை ஒப்புக்கொள்வார்கள். B1- ஐயும், இந்தப் பட்டியலில் நான் சேர்த்திருக்கிறேன். தேவைப்பட்டால் இதே நடவடிக்கையை அவர் மீதும் எடுக்கலாம். (அப்படி நடந்தால்) உன்னால் துண்டிக்கப்பட்ட இணைப்பை அவருடைய வணக்கத்திற்குரிய மாஸ்டரால் கூட மீண்டும் இணைக்க முடியாது. அவருடைய ஆன்மீக உள்நிலை அவரிடமிருந்து பறிக்கப்படுவதைத் தடுப்பதற்கு எந்த ஒரு சக்தியாலும் முடியாது. இப்போது எந்த ஒருவரும் நினைத்துப் பார்க்க முடியாத அம்மாதிரி ஒரு சக்தியை நீ பெற்றிருக்கிறாய்; அதற்குச் சமமான வேறு எந்த சக்தியும் இல்லை. இதெல்லாம் ஒரு நகைச்சுவையான விஷயம் என்று மக்கள் நினைத்திருந்தார்கள். உன்னைக் காண்பதற்கு விசேஷமான கண்கள் தேவை. அத்தகைய திவ்ய திருஷ்டி பெற்ற (தெய்வீகப் பார்வைத்திறன் பெற்ற) கண்கள் இதுவரையில் யாருக்கும் வாய்க்கவில்லை. இதுமட்டுமன்றி உன்னுடைய எளிமையினால் மக்கள் ஏமாந்து போகிறார்கள்.''

## தொடர்ந்து வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

''நீ, M1 - ஐ உருவாக்கியிருக்கிறாய். இதேபோல இன்னும் ஒருவரை உருவாக்குவதற்கு முயற்சி செய். என்னுடைய வேலையைத் தொடர்ந்து செய்வதற்கு இரண்டு பேர் போதுமானவர்களாக இருப்பார்கள். எனது பிரதிநிதிகள் அனைவரும் தகுதியற்றவர்களாகிவிட்டார்கள். அவர்களில் ஒருவர் (M1 - ஐக் குறிப்பிட்டு) எப்படியோ முன்னேறிவிட்டார்; அது உன் தோழமையால் அவருக்குக் கிடைத்தது. மேலும், அவருக்கு உன் மீது அன்பும் இருக்கிறது. இந்த அன்புக்காக நீ அவருக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும். அவர் (M1) மிகவும் நன்றாக முன்னேறியிருக்கிறார்.

என்னுடைய பரம்பரையினர் மாறிவிட்டது போல் வேறு யாருக்கும் இந்த நிலையை கடவுள் அளிக்காமல் இருக்கட்டும்.''

**நான் பணிவோடு அவரிடம் தெரிவித்தது:**

''என் சகோதர சகோதரிகள் முன்னேற்றம் அனைவதற்காக நான் எல்லாவிதங்களிலும் முயற்சி செய்வேன்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''உன்னுடைய நோக்கம் நல்லது தான். ஆனால், அவர்கள் உன்னை நாடி வராதிருப்பதற்கு நான் என்ன செய்வேன்? இந்தக் காரணத்துக்காக மட்டுமே, அதாவது, மக்கள் இருட்டிலேயே இருந்துவிடக் கூடாது என்பதற்காகவே (நீ தான் என் பிரதிநிதி என்பதை) பொது அறிவிப்பு செய்ய வேண்டி உள்ளது; மேலும், அதிகமாக தேவைப்படுகிறது. இதெல்லாம் அவர்கள் நன்மையடைவதற்காகச் செய்யப்படும் ஒரு ஏற்பாடுதான். இல்லையென்றால் நீ ஏற்கெனவே முழுமையாக உருவாக்கப்பட்டு விட்டதால், உனக்கு இது முக்கியமில்லை. உன் உடல்நிலையின் தன்மை என்ன; அதற்குப் பதிலாக இவ்வளவுதான் பலன் கிடைத்திருக்கிறது. இதை என்ன சொல்வது? சரி, நான் இப்போது போகிறேன். C1 - சம்பந்தப்பட்ட வேலையை இன்றே முடித்துவிடு. ஏதாவது தேவைப்பட்டால் என்னிடம் ஆலோசனை கேட்டுக்கொள்.''

**2-9-1944**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''M1- இன் இதயத்தில் அவர் முன்னேற்றமடையாமல் இருப்பதாகக் கருதியிருக்கும் அந்த வருத்தமான உணர்வை நீக்குவதற்கு வேண்டிய அனைத்து முயற்சிகளும் செய்தேன். நேற்று இரவு முழுவதும் இதே வருத்த உணர்வு தொடர்ந்து இருந்தது. இப்போதும் கூட அதே நிலைதான்

அவரிடம் இருக்கிறது. சக்தியின் எழுச்சி செயல்முறையில் காட்டப்பட்டுள்ளது. இப்போது என் அனுபவத்தைக் கேள். அனைத்து சக்திகளையும் அடைந்திருந்தும் என் பிரபுவின் சிறிதும் முக்கியத்துவமற்ற – எந்தச் சிறப்புத் தன்மையும் இல்லாத ஒரு வேலைக்காரனாகவே என்னைக் கருதியிருந்தேன். அவருடைய சித்தத்திற்கே நான் ஆட்பட்டிருந்தேன். என் நிலை எதுவாக இருந்தாலும் அதில் நான் மகிழ்ச்சியோடு இருந்தேன். இவையனைத்துக்காகவும் அவருக்கு நன்றி செலுத்தினேன். இதன் விளைவாக அனைத்து வேலைகளும் அதற்கு என் எண்ணத்தை அல்லது கவனத்தை நான் கொடுக்கவில்லையென்றாலும் அவை தாமாகவே செய்து முடிக்கப்பட்டன. முயற்சிகளும், பிழைகளும் சேர்ந்த ஏராளமான அனுபவத்திற்குப் பிறகு நான் பின்பற்றிய ஒரு உபாயம் இது (நான் பயன்படுத்திய ஒரு கருவி). இதில் பிழை ஏற்படுமோ என்ற அச்சம் எதுவும் இல்லை. மேலும், கடவுளின் சித்தத்திற்கே ஆட்பட்டிருப்பதுவே மனிதப் பண்பு. இதுவே அவருக்கு உண்மையான சேவை. உங்களுக்கெல்லாம் இது ஒரு தகுந்த உதாரணமில்லையா? இந்த மனோநிலையினால் அதை அடைவது மற்றவர்களுக்கெல்லாம் சிரமமான விஷயமாக இருந்த அம்மாதிரி மிகப்பெரிய பலன்களை நான் அடையப் பெற்றேன். இது முக்கியத்துவம் கொடுத்து பின்பற்றத் தகுந்த ஒரு வழியல்லவா? M1 - தனது வருத்தத்திற்கான காரணத்தை ஒருபோதும் தேடவில்லை; இல்லையென்றால் அப்படித் தேடியிருந்தால், அங்கேயே அதற்கான பதிலைக் கண்டறிந்திருப்பார்.''

''சிறிது மேல்நிலைக்கு உயர்கிறவர் யாராயினும், தன் பார்வையில் அதே அளவுக்கு கீழ்நிலையையும் காண்பார். இது இயற்கையின் ஒரு ரகசியம். தன் மாஸ்டருடன் ஒட்டியிருக்கின்ற ஒரு மனிதர், உயர்ந்த முன்னேற்ற நிலையை அடைகின்றார்; எனினும், தன்னை தாழ்வாகவே நினைக்கிறார் என்றால், இதுவே ஒரு சிறப்பான நிலையல்லவா? இதன்

காரணம் இப்போது நான் சொன்னதுதான். அங்கே என்ன இருந்தாலும் அதற்கான தீவிர மோகம் உன்னுடையதாகவே இருக்கவேண்டும். அது அப்படி இருக்கும்போது வருத்தப்படுவதற்கான சந்தர்ப்பம் எங்கே இருக்கிறது? யாராவது ஏதாவது ஒன்றில் முழுத் திருப்தி அடைந்திருக்கும் போது, முன்புபோல அதே அளவு இன்பம் (சந்தோஷம்) இதிலிருந்து கிடைப்பதில்லை. போகப்போக அதை ஏதோ சாதாரண விஷயமாக அவர் நினைக்கிறார். இந்த நிலைதான் வருந்தும் நிலை அல்லது வீழ்ச்சியடைந்த தன்மை என்று அறியப்பட வேண்டும். அதுமட்டுமின்றி உயர்வான இடத்தில் இருப்பதை விட, தாழ்வான நிலையில் இருப்பது மேலானது. இங்கேதான் பக்தி இருக்கிறது. இங்கேதான் பூரணத்துவம் பற்றிய கருத்து இருக்கிறது. இதைவிட அதிகமாக நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? இது M1 - க்குச் சொல்லப்பட்ட ஒரு ரகசியம். துணிவைப் பற்றிய விளக்கத்தை நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். முன்பே சிறு குறிப்புகளாக எழுதப்பட்டு, இவை நோட்டுப் புத்தகங்களில் உள்ளன. அது மனம் வருந்துதலுடன் இணைக்கப்படாமல் இருந்தால் M1 - ன் புகாருக்கு (குறைக்கு) என்ன நேர்ந்திருக்கும்? அப்போது அந்த மனநிலை மட்டுமே தங்கியிருக்கும். இது ஒரு தெய்வீக வரமல்லவா? தனது விசேஷத்தன்மைபற்றிய உணர்வை ஒருவர் இழந்திருக்கும்போது எந்த உருவத்திலும் தனது அகங்காரம் சார்ந்த உணர்வுநிலையை நேரடியாகவோ, மறைமுகமாகவோ தவிர்த்திருக்கும்போது, அவர் செய்வது எதுவாயினும், அது அவர் என்ன செய்து கொண்டிருக்க வேண்டுமோ, அதுவாகவே அமைந்துவிடுகிறது. கடவுளால் அருளப்படுகின்ற இந்த உள்நிலையானது அனைத்திலும் மிகச்சிறந்த ஒன்றாகும். அதைஅடைவதற்கு அனைவரும் முயற்சி செய்ய வேண்டும்.''

''ஒரு உள்நிலையிலிருந்து இன்னொன்றுக்கு முன்னேறும்போது ஒருவிதமாக அசைவற்ற தன்மையின் அனுபவம் அப்போது உண்டாகிறது.

ஒரு ஒப்பீட்டினால் அதை நீ புரிந்துகொள்ள முடியும். ஒரு நதியில் ஒரு கரையில் ஒருவர் நின்றிருக்கிறார்; மறு கரையை அடைவதற்கு அவர் ஆற்றைக் கடக்க வேண்டும். அதற்கு அவர் செய்ய வேண்டிய முதல் வேலை ஒரு படகைக் கண்டறிவதுதான். பிறகு அப்படகில் அவர் உட்கார்ந்து கொள்கிறார். அவர் அப்படகில் உட்கார்ந்திருக்கும்போது, அந்த ஆற்றங்கரைக்கு வந்து சேருவதற்காக ஓட்டமும் நடையுமாக வந்த அந்த அசைவை – இயக்கத்தை அவர் உணர்வதில்லை. இது இடையில் வரும் நிலை (Barzakh) என்று அறியப்படுகிறது. நமது மார்க்கத்தில், முன்னேற்றப் பாதையின் ஒவ்வொரு கட்டத்திலும் இது நிகழ்கிறது. சிலர் இந்த இடையில் வரும் நிலையை உடனே கடந்து சென்று விடுகிறார்கள். அவர்களுக்கு இதைப் பற்றித் தெரிவதில்லை. மற்றவர்கள் அதைக் கடப்பதற்கு அதிக நேரம் எடுத்துக்கொள்கிறார்கள். எப்படியிருந்தாலும், நம்பிக்கை உறுதியாக இருந்தால், நாளுக்கு நாள் அன்பு அதிகரித்துக் கொண்டிருந்தால், என்றாவது ஒரு நாளில் அனைவருமே குறிக்கோளை அடைகிறார்கள். அதை அடைவதற்கு முன்பு இந்தப் பக்கத்தில் இருக்கும்போது முதிர்ச்சியின்மை எவ்வளவு இருக்கிறதோ அதே விகிதத்தில் அங்கும் அதுநிகழ்கிறது. இந்தப் பயிற்சி அமைப்பில் எண்ணற்ற சூட்சுமமான புள்ளிகள் இருக்கின்றன. உண்மையான சாதகர் ஒருவர் சந்திக்கின்ற பிரச்னை எதுவாயினும், அவையனைத்தும் சாதகமானவை என்று இந்த வாக்குறுதியையும் நான் அளிக்கிறேன். மாஸ்டரின் மீது ஒருவரின் அன்பு மற்றும் நம்பிக்கைக்கு ஏற்றவாறு முன்னேற்றம் உண்டாகிறது. முன்னேற்ற நிலைகளும் கூட அதற்கு ஏற்றபடியே தான் அமைகின்றன. A - புள்ளியிலிருந்து B - புள்ளிக்கு முன்னேறும் ஒரு மனிதர், அதே பாதையில் A - யிலிருந்து B - க்குச் செல்லும் இன்னொரு மனிதர் அடையப்பெறுகின்ற அதே நிலையை அடைவதில்லை. வெளித்தோற்றத்துக்கு இந்த இருவரும் சம்பந்தப்பட்ட அதே புள்ளியை அடைந்திருப்பதாகச் சொல்லப்பட்டாலும்,

அவர்களுடைய உள்நிலைகளுக்கு இடையே இருக்கும் வேறுபாடானது, அவர்களிடம் காணப்படும் அன்பு மற்றும் மாஸ்டர் பற்றிய நினைவின் அளவு அதிகமாக இருப்பது அல்லது குறைந்திருப்பதன் தன்மைக்கு ஏற்றவாறு இருக்கிறது. அந்த இருவருக்கும் மாஸ்டர் தன் கடமையை சமமாகவே நன்றாகச் செய்திருக்கிறார்; இருவரையுமே குறிக்கோளை அடையச் செய்திருக்கிறார். ஆனால், அந்த சீடர் சுயக்கட்டுப்பாட்டிலும், தனது சொந்தக் கடமையை நிறைவேற்றுவதிலும் எந்த அளவு குறைபாட்டுடன் இருக்கிறாரோ, அந்த அளவு பின்தங்குகிறார். இந்தக் கோட்பாடுகளைக் கொண்டு அனைவரும் தங்களைத் தாங்களே அளவிட்டுப் (சீர்தூக்கிப்) பார்த்துக் கொள்ளலாம். தங்களிடத்தில் இருக்கின்ற சுயக்கட்டுப்பாடு, நம்பிக்கை, அன்பின் அளவு இவற்றின் விகிதத்தைக் கொண்டு தங்கள் நிலையை அறியலாம். இனி வரும் காலத்தில் மக்கள் தங்கள் மாஸ்டரின் மீது ஆட்சேபணைகள் (குறைகள்) சொல்லாதிருப்பதற்காக இந்த விஷயங்களை இன்று நான் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். நான் இன்று உங்களுக்குச் சொல்கிறேன், தன்னைப் பற்றிய அனைத்தையும் தன் மாஸ்டரின் பொறுப்பில் விட்டுவிடுவதே, எல்லாவற்றிலும் மிகச்சிறந்த வழியாகும். நம்பிக்கை மற்றும் அன்பு ஆகிய அனைத்தும் அவருக்குள் (அவரது நினைவில்) மறைந்து போக, அவர் என்ன செய்துகொண்டிருக்கிறார் என்பதே அந்த சாதகருக்குத் தெரியாமல் போய்விடுவதாகிய இதுவே மிகச் சிறந்தது. இதன் பொருள் அவர் முழுமையாக மாஸ்டரின் கவனிப்பின்கீழ் இருக்கிறார் என்று பூரணமாக அவரைச் சார்ந்து இருக்கும் நிலை என்பதேயாகும். இதுவே முழுமையான சரணாகதி என்று சொல்லப்படுகிறது. மாஸ்டரின் மீது எந்தப் புகாரும் (குறை காணுதலும்) இருப்பதில்லை. தனது சொந்த முன்னேற்றத்துக்காகவும் எதுவும் செய்ய வேண்டியதாக இருப்பதில்லை. அவரை எங்கே கொண்டு செல்ல மாஸ்டர் விரும்புகிறாரோ அங்கே

அவரை அழைத்துச் செல்லலாம். சீடர் எதைப் பற்றியும் கவலைப்படாமல் (எதையும் சிந்திக்காமல்) மாஸ்டரோடு இருக்கிறார். மேலே குறிப்பிட்ட மிகச்சிறந்த ஒன்றை விட சற்று மதிப்புக் குறைந்த இன்னும் ஒரு வழிமுறை இருக்கிறது. நன்மையோ தீமையோ எது வந்தாலும் சரி, அனைத்தும் மாஸ்டரிடமிருந்தே வருகின்றன என்று கருதும் மனப்பான்மை அது.

‘‘M1- ன் பலவீனத்தையும், துணிவின்மையையும் நீக்குவதற்காக நான் எவ்வளவு முயற்சி செய்தேன் என்று யாருக்குத் தெரியும்? எல்லோருக்கும் கிடைக்காத ஒரு உயர்நிலையை அவருக்கு அளித்தேன். கடவுளிடமிருந்து கிடைத்த வரத்துக்கு நன்றியில்லாதவராக மாறுவதைத் தவிர்ப்பதற்காக, அவருக்கு நன்றி தெரிவிக்கும்படியும் கூடச் சொன்னேன். ஆனால், அவர் (M1) குறை கூறும் தனது பழக்கத்தை இம்மியளவும் விடவில்லை. பழக்கம் என்று சொல்லும்போது, தனது உள்நிலை (முன்னேறாதிருப்பது பற்றி) அவர் குறை சொல்வதைத்தான் குறிப்பிடுகிறேன். இதனால் என் எண்ணம் எவ்வளவு தூரம் போகிறதோ, அந்த சாத்தியமான அளவுக்கு அனைத்து சூட்சும நிலைகளையும் அவருக்கு முன் வைத்திருக்கிறேன். வருங்காலத்தில் அவர் இம்மாதிரி குறைகளைச் சொன்னால் நான் வருத்தமடைவேன். இம்மாதிரி குறைகளைச் சொல்வது தனது உள்நிலை பற்றிப் புரிந்து கொள்ளாதிருக்கும் நிலையாகும். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு படியிலும் குறைபாடுகள் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு அவரேதான் முயற்சி செய்ய வேண்டும். அவருக்கு சங்கல்ப சக்தி இருக்கிறது, அது போதுமான அளவு வளர்ச்சியடைந்திருக்கிறது. அவரைப்போல ஒரு உதாரணமான மனிதரை, நம்முடைய மார்க்கத்தில் மட்டும் அல்ல, வேறு எங்கும் கூடக் காண்பது சிரமம் என்றும் நான் உறுதியாகச் சொல்வேன். அவர் ஒருவிசேஷ நிலையில் இருப்பதாக அவர் தன்னைப் பற்றி அறிந்து

கொள்ளவேண்டும். அவருடைய பதவிநிலை அவருக்குத் தெரியும். அதை மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டிய தேவையில்லை. நான் அந்த நிலையில் இருந்தபோது மக்கள் புரியாமல் விந்தையாக உணரும்படி வெளியே புலப்படும்படியான வெற்றிகளை அடைந்திருப்பேன். ஆண்டு விழாவின் போது M1 - ன் பதவிநிலை பற்றிய ஒரு அறிவிப்பும் செய்ய வேண்டும். அவரைப் பரிசோதிக்கக் கூடிய திறமை உடையவர் யாராயினும் அவரை சோதித்துப் பார்க்கலாம் என்று கூற வேண்டும். M1- க்கு இணையாக இந்தப் பதவி நிலையில் நம் மார்க்கத்தில் யாரும் இல்லை என்று நான் உறுதியாகச் சொல்வேன்.''

''அன்புள்ள J1- ன் மரணத்திற்காக நானும் கூட மிகவும் வருந்துகிறேன். கடவுளின் சித்தத்திற்கு எதிராக எதுவும் செய்ய முடியாது. எனது பிரியமான நீயும் கூட மன அமைதி பெறவேண்டும். ‘அவர் இறந்துவிட்டார்’ ( Inteqal) என்ற வார்த்தை உன் இதயத்தில் மிகத்தெளிவாக வந்திறங்கியது என்றாலும் இந்தக் கெட்ட செய்தியை நான் வேண்டுமென்றே உனக்குத் தெரிவிக்காமலிருந்தேன். உனக்கு மன ஆறுதல் கொடுக்க வேண்டும்; துன்பம் தரக்கூடாது என்பது என் நோக்கமாக இருந்தது. அதனால், அதை மறைத்துவிட்டேன். ஏதாவது கெட்ட செய்தியோ, அசம்பாவிதமோ (பெருந்துன்பம் தரும் சம்பவமோ, அது உண்மை தானென்று பலரால் உறுதி செய்யப்பட்டாலன்றி பிறருக்குத் தெரிவிக்கக்கூடாது என்பதை மனதில் வைத்துக்கொள். ‘ஆந்தை மற்றும் காக்கையின் (தீய சகுனம் காட்டும் பறவைகள்) கெட்ட செய்திகளை நம்ப வேண்டாம்’ (ஒரு பாரசீகப் பொன்மொழி) என்ற உன் கருத்து சரியானது. எப்படியிருந்தாலும் எதுவும் செய்ய இயலாத நிலை என்பது வேறு விஷயம். குழந்தைகளின் பாதுகாப்பு, வாழ்க்கை நிலை பற்றி கவலைப்படாதே. அனைத்தையும் அளிக்கின்றவர் கடவுள்தான்.”

‘‘K2 - ஐப் பற்றி, அவருடைய மூளை திறக்கவில்லை என்ற உன் கருத்து சரியானது. இதன் காரணம் என்னவெனில் குறிப்பிட்ட பாடத் திட்டத்திற்கு தன்னை தயார்படுத்திக் கொள்வதற்காக, மனப்பாடம் செய்த ஞாபகங்களைக் கொண்டு எப்படியோ நுழைவுத் தேர்வில் வெற்றியடைந்திருப்பதுதான். எனவே, விரிவான மன வளர்ச்சிக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. மனதின் (மூளையின்) சரியான வளர்ச்சி குழந்தைப் பருவத்திலேயே உண்டாகிறது. அந்தச் சமயத்தில் (அதை வளர்ப்பதற்குச்) செய்யப்படும் முயற்சி மட்டுமே, பிறகு உதவி செய்கிறது.’’

‘‘ஆண்டு விழாவுக்கான (பண்டாரா) ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்பை நீயே எடுத்துக்கொண்டால் சிறப்பாக இருக்கும். இந்த ஆண்டு வழக்கம்போல நடக்கும்படி நீ விட்டுவிடலாம். ஏனெனில் ‘கூண்டுக்குள் அடைபட்டிருக்கும் பெண் கிளியின் குரலை யார் கவனிக்கப் போகிறார்கள்!’ நீ அதற்கு (விழாவுக்கு) பண உதவி செய்யலாம். வருங்காலத்தில், பண்டாராவை என் பெயரால் உன்னை அதற்கு தலைமை வகிப்பவனாகக் கருதி ஏற்பாடு செய்யலாம். இந்த ஆண்டு அதற்கான குறிப்பிட்ட சமயத்தில் நடைபெறும் மற்றும் வருங்காலத்திலும் ஒவ்வொரு ஆண்டிலும் ஏற்பாடு செய்யப்படும் என்று அனைவருக்கும் கடிதம் எழுதித் தெரிவிப்பது கட்டாயக் கடமையாகும். இது என் நினைவாகச் செய்யப்படுவது, இதைச் செய்யாமல் விட்டுவிடக் கூடாது. இந்த ஆண்டு இந்தக் கடிதப் போக்குவரத்து என் வளர்ப்பு மகனின் பெயரால் (K1பெயரால்) செய்யப்பட்டால் சிறப்பாக இருக்கும். M9 - க்கு இதற்கான திறமை இல்லை. அவர் மனதில் இது பாரமாக உணரப்படாமலிருப்பதற்காக அவரை உதவியாளர்களில் ஒருவராக சேர்த்துக் கொள்ளலாம். பண்டாராவுக்கு (ஆண்டு விழாவுக்கு) முன்பு யாராவது ஒருவர், இது விஷயமாக ஆலோசனை கேட்பதற்காக உன் அம்மாவிடம் (J1 - ன் தாய்) செல்ல வேண்டும். இந்தக் கடிதங்கள்

தேவையான அளவு முன்னதாகப் போய்ச் சேரும்படியாக அவ்வளவு விரைவில் இந்த ஆலோசனை செய்யப்பட வேண்டும். உன்னுடைய வட்டத்திற்குள் இந்த வேலைக்கு நீ மிகச் சரியானவன் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், சரியான உதவியின்றி உன்னால் அங்கு ஏதும் செய்ய முடியாது. இதன் காரணமாகவே, M1 - ஐ நான் முன்னிலைப் படுத்துகிறேன். இந்தக் காரியத்துக்கான நேரமும் அவருக்கு இருக்கிறது. எங்கெல்லாம் அழைப்பிதழ்கள் அனுப்பவேண்டும் என்பதை நான் உனக்குச் சொல்வேன். இந்த விஷயம் முழுவதையும் உன் கையில் நீ எடுத்துக்கொள்வதை நான் விரும்புகிறேன். இந்த வேலையை உங்கள் இருவரிடமும் (ராம் சந்த்ரா மற்றும் M1) நான் ஒப்படைக்கிறேன்.''

**4-9-1944**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''சுவாமிஜி (முன்னேற்றமடைந்த துறவி) மிகவும் பண்படாத ஒரு விதத்தில் (ஆன்மீக உள்நிலையினால்) நிரப்பப்பட்டிருக்கிறார். இப்படி திணிக்கப்பட்ட உள்நிலையை நீக்கிய பிறகு, இப்போது பயிற்சியளிக்கத் துவங்கினால் அது உனது வழிமுறையின் கீழ் இருக்கும். K2 - ன் உள்நிலை முன்னேறிக் கொண்டிருக்கிறது. அவருடைய புரிந்து கொள்ளும் திறன் மலரும்படி செய்யப்பட வேண்டும் என்ற எண்ணம் இன்று காலை உனக்கு உண்டாயிற்று. அது விஷயமாக நீ ஒரு முயற்சியும் செய்தாய். அந்த வேலையை நான் செய்து முடித்திருக்கிறேன். இப்போது அதை அப்படியே தொடர்ந்து பராமரித்து வருவது அவர் கையில் இருக்கிறது. அதற்கு அவர் கவனம் கொடுத்து, அதை வளர்த்துக் கொண்டே போனால் சூட்சுமமான புள்ளிகளை அவர் கவனித்தப் பார்க்கும் திறன் பெறுவார்.''

## புதிய பயிற்சியின் வழிமுறை

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

''இப்போது உனக்கு பிராணாஹூதி அளித்தேன். அதனால், ஒரு உயர்நிலையோடு சேர்ந்த அதிர்வலைகளை நீ அனுபவித்தாய். இது உண்மையான சக்தி. இந்த சக்தியின் சக்திக்கூறுகளை ஒரு சாதகனுக்குள் நிரப்ப முடியும்.''

**நான் கேட்ட ஒரு கேள்விக்கு விடையாக வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''குப்ரா (Kubra) எனப்படும் பிரம்மாண்ட மண்டலத்தைக் கடந்திருக்கின்ற ஒருவருக்கு மட்டுமே இந்தச் செயல்நுட்பத்தைப் பயன்படுத்த முடியும். உலியா (Ulia) எனப்படும் பரப்பிரம்மாண்ட மண்டலத்தில் அவருடைய நிலையில் சக்தியை ஊடுருவச் செய்வது விரும்பத்தக்கதாகக் கருதப்படுகிறது. அதற்குக் கீழ்ப்பட்ட நிலையில் உள்ள ஒரு மனிதருக்கு இந்தச் செயல்நுட்பத்தைப் பயன்படுத்தவது தவறாகிவிடும். இந்த விஷயத்தை ஆரம்பத்திலேயே உன் அனுபவத்திற்கு நான் கொண்டு வந்தேன். இது பரப்பிரம்மாண்ட மண்டலத்துக்கு மட்டுமே உரியதாகும். அதற்கு மேல் இன்னொரு வழிமுறை இருக்கிறது. பிரம்மாண்ட மண்டலத்தில் ஊடுருவியுள்ள துகள்கள் இதைவிட ஒளி குறைந்தவை. சரீர (உடல் சார்ந்த) மண்டலத்துக்குச் (Sughra) சொந்தமானது என்று பேசப்பட்ட ஐந்து மகிழ்ச்சியான உள்நிலைகளுக்கு வேறு ஒருவிதமான பயிற்சியின் வழிமுறை தேவைப்படுகிறது. அதையும் கூட நான் இப்போது உன் அனுபவத்துக்குக் கொண்டு வந்தேன். இவற்றை விளக்கிச் சொல்வது சிரமமாகும். நடைமுறை (செயல்முறை)யில் மட்டுமே இதைப் புரிந்து கொள்ளும்படி செய்யமுடியும். சுருக்கமான குறிப்புகளாக நீ எழுதிவைத்துக் கொள்ளலாம்.''

### 1) இருதயம் அல்லது இதயம் (க்வல்பா /Qalba):

இதயம் என்ற புள்ளியில் ஊடுருவியுள்ள துகள்கள் சிறிதளவு இருள்தன்மை உடையவையாக உள்ளன. ஆனால், அவை கடினத்தன்மை அல்ல. அங்கே கடினத்தன்மை இருந்தால் அவை திடப்பொருளின் துகள்களாகும்.

### 2) ஆத்மா (ரூஹ் / Rooh or Soul):

இந்தத் துகள்களின் வெளி உறை மட்டும் உதிர்கிறது.

### 3) அக்னி அல்லது நெருப்பு (ஸிர்ரா / Sirra):

இந்தப் புள்ளியில் (இச்சக்கரத்தில் / Plexus) உள்ள துகள்கள் வெப்பத்தின் பெரும்பகுதியும், பிரகாசமாக எரியும் நெருப்பின் உஷ்ண அலைகளும் வெளியேற்றப்பட்டுவிட்டது போன்ற ஒருவிதத்தில் இருக்கின்றன. இந்தப் புள்ளியின் தன்மை கூர்மையாக்கப்பட விரும்பினால் அப்பிரகாசம் அப்படியே இருப்பதற்கு அனுமதிக்கப்படுகிறது. அதாவது வெளியேற்றப்படுவதில்லை அல்லது தொடப்படுவதில்லை எனலாம்.

### 4) அபா (Apah) அல்லது தண்ணீர் சக்கரம்: (கஃபி / Khafi)

இந்தப்புள்ளியில் மேலே கூறப்பட்ட நெருப்பின் மூலகங்கள் மாற்றமடைந்து நெருப்புபற்றிய ஒரு பயத்தை அல்லது ஒரு எண்ணத்தை மட்டும் கொடுக்கின்றன. அதைத் தெரிவிப்பதற்கு வார்த்தைகள் இல்லை.

### 5) வாயு அல்லது காற்று சக்கரம்: (அக்ஃபா / Akhfa)

இது காந்த சக்கரம் அல்லது தொண்டையில் உள்ள சக்கரம் என்றும் கூறப்படுகிறது. இங்கே அத்துகள்கள் மின் ஒளிபோல ஒருவிதமான நீலநிற ஒளியுடையவையாக மாறுகின்றன. அதுபற்றி இந்த அளவுக்குத்தான் சொல்ல வேண்டும். (இதைக் குறிப்பிடுவதற்கு சூஃபி மார்க்க நூல்களில் பயன்படுத்தப்படும் வார்த்தைகள் அடைப்புக்குறிக்குள்

தரப்பட்டுள்ளன. கடைசி மூன்று புள்ளிகள் பற்றிய விஷயத்தில் இந்தப் புள்ளிகளின் ரகசியமான அல்லது சிலருக்கு மட்டுமே வெளிப்படுத்தப்படுகிற இயற்கையான தன்மையை மட்டுமே அவை குறிப்பிடுகின்றன.

''இதுவும் கூட எல்லா இடங்களிலும் பயன்படுத்தக்கூடாத ஒரு வழிமுறையாகும். மிகவும் சிலருக்குத்தான் இதற்குத் தகுதி இருக்கிறது. அவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். இங்கே எல்லா சக்திகளும் வளர்ச்சியடைகின்றன. எனவே, பொதுவாக இதைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. இதன் சிறு பகுதிகளை சில சமயங்களில் இங்கும் அங்குமாகப் பயன்படுத்தலாம். ஆனால், எங்கே அதைப் பயன்படுத்த வேண்டும் என்பதைக் கண்டுபிடிப்பது சிரமமான விஷயம். இது இப்படி இருப்பதால் இதைப் பயன்படுத்தாமல் இருப்பதே மேலானது. N1 - இடம் ஒரு சக்கரத்தில் மட்டும் நான் இதைப் பயன்படுத்தினேன். அதன் விளைவு நமக்கு முன்னால் தெரிகிறது. இம்மாதிரி பல விஷயங்களை என் நெஞ்சுக்குள் சுமந்திருந்தேன். இந்த அனைத்தையும் ஒதுக்கி வைத்துக்கொள்ளாமல் நான் அளித்துவிடக்கூடிய யாரும் எனக்குக் கிடைக்காததால் எனக்கு இதில் உதவியாக யாருமில்லை. எனது இறுதிக் காலத்தில் உன்னிடத்தில் அனைத்து சக்கரங்களிலும் இந்தச் செயல் நுட்பத்தைப் பயன்படுத்தினேன். இதுதான் ரகசியம். இதைப் பற்றி வெளிப்படையாகப் பேச வேண்டிய அவசியமில்லை. மேலும், எல்லோராலும் இதைப் பயன்படுத்த முடியாது. இதற்கும் மிகப்பெரும் திறமை தேவை. இந்த ரகசியத்தை தன் மனதிற்குள் மட்டும் வைத்துக்கொள்ளும்படி M1 - இடம் கூறவும். அரக்கர்கள் இதில் மிகவும் ஆளுமை பெற்றிருந்தார்கள். ராவணன் இந்த ஐந்து மகிழ்ச்சியான உள்நிலைகளிலும் ஆளுமை பெற்றவனாக இருந்தான். இந்த சக்தி மிகவும் வலிமையோடு அவனிடம் நிரம்பியிருந்தது.''

**ஒரு கேள்விக்கு விடையாக வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

‘‘N1- இன் பயிற்சியில் நான் இதய சக்கரத்தை மட்டுமே எடுத்துக் கொண்டிருந்தேன். அவர் அந்த ஒரே புள்ளியில் தங்கியிருந்து பெருமளவுக்கு தன் சக்தியை மேம்படுத்திக் கொண்டார். எனினும் நீ என்னிடமே மிகவும் அதிகமான நாட்டமும் பற்றும் உடையவனாக இருந்தாய். எனவே, நீ தானாகவே முன்னேற வாய்ப்பு இருக்கவில்லை. இதன் காரணமாக உன்னை வளர்ச்சி பெறச் செய்வது என் கடமையாக மாறிவிட்டது. நீ அந்த உள்நிலைகளை தனித்தனியாக அனுபவித்துக் கொண்டு இருக்கவில்லை. ஏனென்றால், இந்த சக்திகள் அனைத்தும் எங்கிருந்து பெறப்படுகின்றனவோ அந்த மிக மேலான உயர்ந்த சக்தியாக வளர்ச்சியடைந்திருந்தாய். இந்த சக்திகளை உடையவராக இருக்கின்ற ஒருவருடன் ஏதாவது முரண்பாடு அல்லது சர்ச்சை தோன்றும்போது அந்த அனுபவம் வரமுடியும்.’’

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் குறிப்பிட்ட கருத்து:**

‘‘ஒரு உரையாடலின்போது அல்லது பேசும்போது அதில் மனம் செலுத்தாமல் இருப்பது மௌனம் என்று சொல்லப்படும். அதாவது, தேவைப்படும் விதத்தில் உரையாடல் நடந்து கொண்டிருக்கும் போது ஒருவர் அதில் ஆர்வம் அல்லது ஈடுபாடு இல்லாதிருப்பது மௌனம். உன்னிடமிருந்து விடைபெற்று இன்று மாலை என் மாஸ்டரிடம் நான் சென்றபோது, J1- இன் குழந்தைகள் பற்றிய பிரச்னை அப்போது ஆலோசிக்கப்பட்டுக் கொண்டிருந்தது (ஆலோசனையில் இருந்தது.) இக்குழந்தைகளைப் பற்றிய சிந்தனை வணக்கத்திற்குரிய மாஸ்டருக்கு (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) நிறைய இருக்கிறது. நீ என் இடத்தில் இருப்பதால் அவர்கள் மீது அக்கறை கொண்டு பார்த்துக்கொள்ள வேண்டியது உன் கடமையாக ஆகிறது. இக்குழந்தைகள் சிறப்பாக வளர்வார்கள். உன் தாயார் (அதாவது லாலாஜியின் மனைவி)

ஒருபோதும் துன்பத்துக்கு ஆளாகாதபடி நீ பார்த்துக்கொள்ள வேண்டும். அவளை எப்போதும் உனது மதிப்புக்குரிய மூத்த பெண்மணியாகக் கருத வேண்டும். அவளும் உன் மீது பாசத்தையும், நெருக்கத்தையும் வளர்த்துக் கொள்வாள்.''

## 5-9-1944

### வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

''நிலையாக இருக்கும் தன்மையை மக்கள் பெரும்பாலும் புரிந்து கொள்ளவில்லை என்றே நினைக்கிறேன். இந்தப் பிரச்சினை இப்போது வந்திருப்பது நல்லது. நிலைத் தன்மை என்பதன் உண்மையான பொருள் தங்கியிருத்தல் என்பதாகும். அதாவது, மாஸ்டர் என்ன அளித்திருக்கிறாரோ அது தங்கியிருக்கப் போகிறது. இதற்குமேல் அதற்குப் பொருள் ஒன்றுமில்லை. M1- விளக்கிச் சொல்ல விரும்பியதாகிய, அந்த நிலையின் உண்மைத்தன்மை என்பது சத்தியம் (சத்திய நிலை) அனுபவத்திற்கு வரப்போகிறது என்பதாகும். இந்த நிலை M1- க்கு கிடைக்கவில்லை என்று அவரால் (M1- இனால்) சொல்லமுடியுமா? சத்திய நிலையையும் மக்கள் தவறான விதத்திலேயே எடுத்துக்கொள்கிறார்கள். அதைக் கவரும் தன்மை மற்றும் கூர்ந்த தன்மை போன்ற வார்த்தைகளோடு இணைத்து அர்த்தம் செய்து கொள்கிறார்கள். இது முற்றிலும் தவறானது. சத்தியநிலை அங்கே தங்கியிருக்கும் போது, அனுபவத்திற்கு வருகின்ற உள்நிலைத்தன்மை சூரியனும், அதனுடைய பிரதிபலிப்பும் போன்றது எனலாம். நிலை என்பது ஒரு உண்மைத்தன்மைக்கு கீழான நிலையில் இருப்பதாகும். அதற்கு நிலைத்தன்மை கிடையாது. இது வர்ணனைக்கு அப்பாற்பட்ட உள்நிலையாகும். அனுபவத்தின் மூலமாக இதைப் புரிந்துகொள்ள முடியும். சத்தியநிலை பற்றிய ஒரு அறிகுறியை மட்டுமே இதுகொடுக்க முடியும் என்றாலும் இதுவும் ஒரு விசேஷமான நிலைதான். M1- துருவ

நட்சத்திர நிலையில் (Qutub) போதுமான அளவுக்கு நீந்திக் கடந்திருக்கிறார். ஆனால், அது பற்றிய வெளிப்புற வர்ணனையை அவர் கட்டமைத்துச் சொன்னால் நான் மகிழ்ச்சியடைவேன். அவருடைய குணத்தில் கொஞ்சம் மிருதுவான தன்மை தேவைப்படுகிறது. இந்தத் திறமை அவரிடம் இருக்கிறது. அதை நோக்கி அவர் தனது சங்கல்பத்தை சற்று திசை திருப்ப வேண்டும். அதாவது, இப்படிச் சொல்வதால் அவரது குரலில் கடுமை இருக்கக்கூடாது என்று பொருள். அவர் ஆன்மீகப் பணி செய்ய வேண்டி இருப்பதால், அவருடைய சீடர்களும் அவரைப்போலவே நடந்து கொள்ளும்படி ஆகிவிடக்கூடாது. அதாவது இப்படி குரலில் கடுமை காட்டுவதுதான் ஒரு நிலையான விதிமுறை என்று அவர்கள் கருதும்படியாக இது சங்கிலித் தொடராக ஆகிவிடக் கூடாது. உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் நிறைய பிரச்னைகளை சந்திக்க வேண்டியிருக்கும்.''

''பேச்சில் மிருதுவான தன்மையை வளர்த்துக் கொள்வதற்கான செயல்நுட்பம் நம் குணத்தில் அதிகபட்ச தன்னடக்கம் மற்றும் பணிவை உண்டாக்கிக்கொள்வதே ஆகும். இது எந்த ஒருவருடைய இதயத்துக்கும் எந்தத் தீங்கும் ஏற்படுத்தும் சிறு நாட்டமும் இன்றி, பேசும் வார்த்தைகளும்கூட யாருடைய மனத்தையும் (உள்ளத்தையும்) சிறிதளவும் புண்படுத்தாமல் இருக்கும் விதத்தில் ஒரு அன்பு உணர்வில் இதயம் நிரம்பப்படுவதற்காகவே ஆகும். M1- ஆல் இப்படிச் செய்யமுடிந்தால் அது என்னை அப்படியே பின்பற்றுவதாக இருக்கும். அது அனைவருடைய கடமையும் ஆகும். இதுவே 'குருவைப் பின்பற்றுதல்' என்று சொல்லப்படுகிறது. இது என் விசேஷமான வழியாக இருந்தது. வேறு யாரும் பின்பற்றாத ஒரு வழியாக இருந்தது. ஆயினும் நீ (ராம் சந்த்தர்) அதைப் பின்பற்றுவதற்கு நான் அனுமதித்திருக்க மாட்டேன். இது கடுமையாக இருக்கும் தன்மையை நீங்கச் செய்துவிடும். எனது முழுமையான வறுமையின் குணத்தை நீ இதுவரையில் புரிந்து

கொள்ளவில்லை. இதன் காரணமாக, அடிக்கடி நீ குழப்பமடைகிறாய். இது கீழ்க்கண்டவாறு இருக்கிறது. தன் எஜமானின் முன்னிலையில் ஒரு அடிமை இருப்பதுபோல, சிறிதும் முக்கியமில்லாதவனாக என்னைக் கருதி நடத்தும்படியாக ஒருவிதத்தில் அவரிடம் நான் எப்போதும் உடனிருந்தேன். வெளிப்புறக் கவர்ச்சி பற்றி எனக்கு அக்கறை இல்லை. என் வீடு உள்பட என் உடைமைகள் அத்தனையும் அவருடையதேயாகும் என்று கருதி எந்தச் சூழ்நிலையாயினும் நான் மகிழ்ச்சியோடு இருந்தேன். நீயும் கூட கடவுள் உனக்கு அளித்திருப்பது எதுவாயினும் அது அவருடையதே (அல்லது என்னுடையதே) என்று கருதி எப்போதும் நன்றியுடன் இருக்க வேண்டும். வீரசிவாஜி இதற்கு ஒரு உதாரணம். அவருடைய குரு (சமர்த்த குரு ராமதாஸர்) அவரிடம் தன் உணவுக்காகப் பிச்சை கேட்டபோது, தன் செல்வம் அனைத்தையும் அரச பதவி உட்பட முழுமையாக அவரிடம் சமர்ப்பித்துவிட்டார். அதன் பிறகு இவையனைத்தையும் குருவுக்கு மட்டுமே உரியவை என்று கருதி நடந்து கொண்டார். இது பாராட்டத்தகுந்த உதாரணமாகும். இது என் கருத்தை மிகச்சரியாகத் தெரிவிக்கின்றது. இப்படிச் சொல்வதால், N1- செய்வதுபோல நீயும் இவையனைத்தும் லாலாஜியுடையது மட்டுமேயாகும் என்று கூச்சல் போட வேண்டும் என்று நான் சொல்வதாக அர்த்தமில்லை. இந்த உணர்வு மனதில் இருக்க வேண்டும்; மனோபாவத்தில் ஒரு துறவுநிலையின் உண்மையான உணர்வு இருக்க வேண்டும். இது வைராக்கியத்தின் மிக உன்னதமான வடிவமாகும். இதனால் நீ மனம் தளர வேண்டாம். உன்னுடைய உள்நிலைத் தன்மை இப்படித்தான் இருக்கிறது. இந்த உணர்வு ஏற்கெனவே உன்னிடம் இருக்கிறது. சுற்றிலும் இருக்கின்ற முட்புதர்களால் அதன் உயரம் கண்ணுக்குத் தெரியவில்லை. இன்று நான் உனக்குச் சொல்லியிருக்கும் இந்த விஷயம், பயிற்சி முழுவதனுடைய மொத்த சாராம்சமும் ஆகும்; அது மிகவும் உயர்ந்தது. அதை உண்மையான விதத்தில் பின்பற்றுவதற்கு

யாராவது முயற்சி செய்யலாம். அவர் நிச்சயமாக ஆன்மீகப் பயிற்சி அளிக்கக்கூடிய மிக நுட்பமான தன்மையை அனுபவிப்பார். இதற்கான மிகச் சிறந்த வழி நல்லவை அனைத்தையும் கடவுளுடன் இணைத்துவிட்டு, தீய நடத்தையைத் தவிர்ப்பதேயாகும். உன்னுடைய நாட்குறிப்புக்கு என்னுடைய பதிலாக இதை நான் குறிப்பிட்டிருக்கிறேன். இந்தப் பயிற்சி மட்டுமே போதுமானது. இதை ஏதோ சாதாரணமானது என்று நினைக்காதே. உன்னுடைய நாட்குறிப்பிலிருந்து இந்த வாக்கியங்களைக் குறித்து வைத்துக் கொள். இந்தக் கடிதம் முழுவதையும் பிரதி எடுத்து வைத்துக்கொள்வது நல்லது.''

## 27-11-1929 ஆம் தேதி வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் அவர்கள் எழுதிய கடிதத்தின் நகல்.

என் பிரியமானவனே,

எப்போதும் மகிழ்ச்சியோடு, துன்பத்திற்கு ஆட்படாமல் இருப்பாயாக. உனது பதவி நிலையின் வளர்ச்சிக்காக நல்லாசிகள். எனக்கும் பிரியமானவனாகிய உன்னால் எழுதப்பட்டபடி, ஆன்மீக நிலைகள் சம்பந்தமாக உயர்நிலை மற்றும் முன்னேற்றத்தை எய்தியுள்ள உள்நிலைகள் பற்றிய விஷயத்தில் கடவுளின் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் உன்னுடன் இருப்பதாக. இவை கர்வத்தின் (அகங்காரத்தின்) வெளிப்பாடுகள் அல்ல. சரியாகச் சொன்னால் இவை உற்சாகம் அளிப்பவையாகும். இவற்றுக்காக நன்றி தெரிவிக்கப்பட வேண்டும். இதனால் அங்கு கர்வம் இருக்கக் கூடாது. இவ்விஷயங்கள் கடவுள் பற்றியவையாக இருந்தால் அங்கே அகங்காரத்துக்கு இடமில்லை. இவை கடவுளிடமிருந்து வருவதால், ஒருவனுடைய சொந்த விஷயம் எதுவும் அங்கே இருப்பதில்லை. பாரசீக மொழி ஈரடிச் செய்யுள் ஒன்று இப்படிச் சொல்கிறது. ''கருணை நிறைந்த கடவுளால் அது ஒருவருக்கு அளிக்கப்படவில்லையென்றால் ஆயுதங்களின் வலிமையினால் இந்த அதிர்ஷ்டத்தைச் சம்பாதிக்க முடியாது.'' எதையும் அனுபவிக்காதிருக்கும்

உள்நிலை நல்லது. இது நீடித்து இருப்பதாகும். அதிகபட்ச வேதனையினால் அல்லல்படுவது சிறப்பானது. இல்வாழ்க்கையானது சகிப்புத்தன்மை மற்றும் எதையும் தாங்கிக்கொள்ளும் தன்மை இவற்றைக் கற்பிக்கும் பள்ளியாகும். நமது பயிற்சி முறையில் இந்த விஷயங்களைப் பொறுமையுடன் கையாள்வதே 'தவம்' எனப்படுகிறது. அது மற்ற அனைத்துவிதமான தவங்களிலும் மேலானதாகும். துன்பத்தால் வருந்துதல் மற்றும் கோபம் (வெறுப்பு) ஆகியவற்றைவிட பிறரிடமிருந்து ஒதுங்கியிருத்தலே பின்பற்ற வேண்டிய வழியாகும். கைராத் (Ghairat) என்று சொல்லப்படும் இந்த ஒதுங்கியிருக்கும் தன்மை, மற்றவர்களினால் குற்றம் கூறப்படுகிற, வசை மொழிகளால் கண்டனம் செய்யப்படுகிற ஒருவர் உண்மையில் தன்மீது தான் தவறு இருக்கிறது என்பதாகக் கருதி, அதனால் பொறுமை மற்றும் சுயக்கட்டுப்பாட்டை அனுசரிக்கும் பண்பைக் குறிப்பிடுகிறது. மற்றவர்களுக்கு தவம் செய்வதற்காகக் காட்டுக்குச் சென்றுவிடுவது. தனிமையில் ஒதுங்கியிருப்பது ஆகியவை சகிப்புத்தன்மை மற்றும் எதையும் தாங்குவதற்கான வழிகளாகவும், இவ்வுலகத்தின் சீர்கேடுகள் மற்றும் பொருளற்ற தன்மையிலிருந்து விடுபடும் முறையாகவும் இருக்கின்றன. ஆனால், நமக்கு வசைமொழிகள் மற்றும் தூற்றுதல்கள், அவமதிப்புகள் மற்றும் பெரும் தீமைகள், குறைகூறல் மற்றும் இகழ்ச்சிகள் ஆகியவை, குடும்ப உறுப்பினர்களிடமிருந்தும், நண்பர்கள் வட்டத்திலிருந்தும், உலகில் மற்றவர்களாலும் வருவதை சகித்துக் கொள்வதே உண்மையான தவம் மற்றும் தீவிர பயிற்சியாகும். ஆகையால், மன எரிச்சலை கைவிட்டு பொறுமையைப் பின்பற்றவும். அதனையடுத்து இறைவன் அருளால் தானாகவே அவர் விருப்பத்துக்கு அடிபணிந்திருப்பதும், சரணாகதியும் பின்தொடரும்."

நல்லாசிகளுடன்,

ஃபடேகர், 27-11-29. ராம் சந்த்ரா

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:**

‘‘நான் உடல் நீத்துச் சென்ற பிறகு நானும் கூட உனக்கு இதை வெளிப்படுத்தினேன். சக்தியும், ஞான வெளிப்பாடும் உடனடியாக பலனளிப்பவையாக மாறிவிட்டன. ஆயினும், எதிர்ப்பாளர்கள் இதைக் கவனித்து அறிந்து கொண்டுவிடுவார்கள் என்று உணர்ந்ததால், உன்னை அச்சமயத்தில் வெளிப்படுத்துவது என் நோக்கமாக இல்லை என்பதால், அந்த உள்நிலைத்தன்மையை நான் மறைத்து விட்டேன். வணக்கத்திற்குரிய என் மாஸ்டரும் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) இதே அறிவுரையைத்தான் கூறினார்.’’

‘‘நேற்றிரவு முதல் R2 - ஐ கவனத்தில் எடுத்துக்கொள்ள ஆரம்பித்திருக்கிறேன். தவறுக்காக வருந்தும் தன்மையுடன் இருப்பதோடு வருங்காலத்தில் இப்படி ஒரு தவறைச் செய்யாதிருக்க உறுதி எடுத்துக் கொள்ளும்படி அவரிடம் சொல்லவும். என் முன்னிலையில் அவரிடமிருந்து அந்த வாக்குறுதியைப் பெற்றுக்கொள். அப்படி அவர் வாக்குறுதி அளித்த பிறகுதான், மேற்கொண்டு எதையும் நீ சொல்ல வேண்டும். நான் ஒருபோதும் ராம் சந்த்தரை (உன்னை) விட்டு விலகி இருக்கவில்லை என்பதைச் சொல். அவர் எதைச் சொன்னாலும் அதுவே எனது கட்டளையாக இருக்கும். இந்த விஷயத்தை வேறு எங்கும் அவர் தெரிவிக்க வேண்டிய தேவையில்லை; அதை மீறி அவர் சொன்னால் எனது கடும் கோபத்திற்கு ஆளாவார். என்னுடைய ஆன்மீகப் பணி அனைத்தையும் ராம் சந்த்தரிடம் மட்டுமே ஒப்படைத்திருக்கிறேன் என்று தெளிவாக அவரிடம் சொல்லவும். அவருக்குப் பணிந்து நடப்பது எனக்குப் பணிந்து நடப்பதாகும். சோம்பலாகக் கிடந்த காலம் முடிந்துவிட்டது. அவருடைய மாமாவை (N1- ஐ) ஆன்மீகத்தை விட்டே ராம் சந்த்தர் மூலமாக துடைத்தொழித்துவிட்டேன். அதையடுத்த பின் விளைவுகள் பிறகுதான் தெரியவரும். ராம் சந்த்தரை எனது பிரதிநிதியாக ஏற்கெனவே நான் நியமித்துவிட்டேன். ஆனால்

இப்போதைக்கு எந்த இடத்திலும் இதை வெளியே தெரிவிக்கக்கூடாது என்று அவரிடம் தெளிவாகக் கூறிவிடு. இதில் R2 - க்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால், (R2) அவருடைய விருப்பம்போல உன்னை பரிசோதித்துக்கொள்ளலாம்.''

''இவர் (R2) K….. என்ற இடத்திற்குப் போவது நிச்சயமாக என் கருத்துக்கு எதிரானது. நீ என்னுடைய மிகச்சிறந்த உயிர்வாழும் பதிவாக (சான்றாக) இருக்கிறாய். இப்போது முதல் சத்சங்கம் (ஆன்மீகப் பயிற்சிக்காக சாதகர்கள் ஒன்று கூடும் ஒருஇடம்) M1 - இன் வீட்டில் நடைபெறும். R2 - கூட ஆன்மீகப் பலனை M1 - ஐ சார்ந்து பெற்றுக்கொள்ள வேண்டும். உள்முகக் குழப்பம் வெளியேற்றப்பட வேண்டும். என்ன இருந்தாலும், M1 - ஒரு மூத்த சகோதரர். அவரை நான் என்னுடையவராக ஆக்கியிருக்கிறேன். மேலும், அவர் துருவா (குதுப் / Qutub) என்ற ஆன்மீகப் பதவிநிலையில் இருக்கிறார் என்பதும் அறிந்துகொள்ளப்பட வேண்டும். M1- ஐப் பற்றி அறியாத நிலையில் R2 - இருக்கக்கூடாது. R2 தனது வாக்குறுதிக்கு உண்மையானவராக (விசுவாசம்) உடையவராக உருவாகி, ராம் சந்த்தருக்கு கீழ்படிந்து நடப்பதன் மூலமாக, எனக்குக் கீழ்ப்படிந்து நடந்தால், அவரை பூர்ணமான ஈடேற்றம் அடைந்தவராக நான் மாற்றுவேன் என நான் வாக்குறுதி அளிக்கிறேன்.''

''பிரிசெப்டராகப் பணிபுரிவதற்கான அனுமதியை அவரிடமிருந்து நான் பறித்துக்கொண்டுவிட்டேன். மற்றவர்களுக்கும் அப்படியே செய்திருக்கிறேன் என்பதை அவரிடம் சொல்லவும். இப்போது ராம் சந்த்தர் யாருக்கு அனுமதியளிக்கிறாரோ, அது மட்டுமே அதிகாரப்பூர்வமாக இருக்கும். ராம் சந்த்தருக்கு நான் எல்லா அறிவுரைகளும் கொடுத்திருக்கிறேன். (தேவையான எல்லாக் குறிப்புக்களும் கொடுத்திருக்கிறேன்). தேவைப்பட்டால் மற்றும்

தேவைப்படும்போது மேலும் உதவிக் குறிப்புக்கள் கொடுப்பேன். இவையனைத்தும் சீடர்களின் நன்மைக்காகவே. R2 முற்றிலும் R1- இன் செல்வாக்கின்கீழ் (அவர் சொற்படி) நடப்பவராக இருந்தார். எனவே, ராம் சந்த்தரைக் கொலை செய்யவும் தயாராக இருந்தார். என் சக்தி ராம் சந்த்தரிடம் இல்லாது போயிருந்தால் R2 என்னை ஒளியிழந்தவனாகச் (Be - Chiragh) செய்திருப்பார். இப்போது நான் சொல்லிக் கொண்டிருப்பவை அனைத்தும் R2 - வுக்காகவே சொல்கிறேன். நான் சொன்னவை மறுபடியும் சொல்லப்படாமல் இருக்கும் சாத்தியம் உண்டு. இந்தவிஷயம் எல்லா இடங்களிலும் தெரிவிக்கப்பட வேண்டிய விஷயமல்ல. இந்தக் காலகட்டத்தில் R2 - இடம் வேலை செய்து கொண்டிருந்த என் சக்தியை நான் மங்கச் செய்ய வேண்டியிருந்தது. அது ஏனெனில், யாரோ ஒருவரைக் கொல்வதற்காக அவருடைய மாமன் அவருக்குக் கொடுத்திருந்த சக்தி. என் சக்தியோடு சேர்ந்து வலிமை பெற்றுவிடக்கூடாது என்பதற்காகவே ஆகும். எனவே, அவருக்கும் மற்றவர்களுக்கும் செய்யப்பட்ட இந்த செயல்கள் எல்லாம் – அதாவது அவர்களுடைய பிரிசெப்டர் பணிக்கான அனுமதியையும், ஆன்மீக நிலைகளையும், பறித்தது ஆகியவை – அவர்களுடைய நன்மைக்காகவே என்பதை மீண்டும் R2 - இடம் சொல்லவும். தீவிரவாதியாக மாறுவதை R2 - கைவிட வேண்டும். என் ஆயுட்காலத்தில் இருந்த நிலைமை வேறாக இருந்தது. அப்போது R2 - இன் இந்த குணத்தை நானே சரியான விதத்தில் கையாண்டேன். இப்போது அவருக்கு என்ன சந்தேகங்கள் வந்தாலும், அவற்றை ராம் சந்த்தரிடம் கேட்டு தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். நானும்கூட இங்கே அவருடன் இருக்கிறேன். அவரை (ராம் சந்த்தரை) பரிசோதிப்பதாக இருந்தாலும் சரி, வேறு என்னவாக இருந்தாலும் அதை அவர் கேட்கலாம். நான் காத்திருக்கிறேன்....''

‘‘தனக்கு சரியான வழி காண்பிக்கும்படி கடவுளிடம் அவர் (R2) ஒரு மாதம் பிரார்த்தனை செய்யுமாறு சொல்ல வேண்டும். இதே சமயத்தில் M1 – இன் உயர்ந்த தன்மையையும், அவர் இவ்வகையில் மூத்தவராக இருப்பதையும் R2 – இன் கவனத்திற்கு ஏதோ ஒரு வழியில் கொண்டு வரப்பட வேண்டும். ராம் சந்த்தரைப் பற்றிய உண்மை இப்போது எந்த விதத்திலும் வெளிப்படுத்த வேண்டிய தேவையில்லை. ராம் சந்த்தரின் பணி மற்றும் அதில் அவருடைய சாதனைகள் பற்றி R2 – க்குச் சொன்னால் அவர் மேலும் மேலும் வியப்பு அடைவார். நான் ஒரே ஒருவரைத்தான் எனது பிரதிநிதியாக மற்றும் என் பதவிக்கு உரியவராகத் தயார் செய்திருக்கிறேன். அந்த ஒருவர் மட்டுமே நீடித்து நிலைத்திருப்பார். (ராம் சந்த்தரைப் பற்றி) நான் இவ்வளவு கூறியது போதுமானது என்று கருதுகிறேன். இதனால், மற்றவர்கள் முன்னேற இயலாது என்று அர்த்தமில்லை. நான் ஒரே ஒருவரிடம் மட்டுமே என் முழு சக்தியோடு ஐக்கியமாகியிருக்கிறேன் என்பதே இதன் பொருள். என்னுடன் தொடர்பு உடையவர்கள், என்னை நேசிக்கிறவர்கள் (என்னை மதிப்பவர்கள்) வேறு எங்கும் போக வேண்டிய தேவை இல்லாமல் என்னுடன் மட்டுமே இருக்க வேண்டும் என்று இப்போது நான் விரும்புகிறேன். என்னால் உருவாக்கப்பட்டுள்ள ராம் சந்த்தரிடமிருந்து நன்மை பெறுவதற்கு, வேறு யாருடனாவது தொடர்புடைய மனிதர்களும் கூட வருவதில் தவறில்லை. என்னால் உருவாக்கப்பட்டு, வளர்ச்சியடைய வைக்கப்பட்டுள்ள மனிதர்களிடம் வர விரும்பாமலிருக்கும் மனிதர்கள் எனக்குத் தேவையில்லை. அவர்கள் எந்த வழியைப் பின்பற்ற விரும்புகிறார்களோ, அதில் தாராளமாகப் போகலாம்.’’

6-9-1944

## 28-8-44 ஆம் தேதி காலம் சென்ற அன்புச் சகோதரர் J1 -கூறியது:

‘‘நான் முக்தி அடைந்துவிட்டேன். உலகியல் சிக்கல்களிலிருந்து நான் விடுதலை பெற்றுவிட்டேன். என் மரணத்தால் நேர்ந்த சோகமான அதிர்ச்சியைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. D2 - ஐ உன் பொறுப்பில் நான் ஒப்படைக்கிறேன். இந்தக் காரியத்தை சரியாக கவனித்துச் செய்யக்கூடியவர்கள் வேறு யாரும் இருப்பதாகத் தோன்றவில்லை. என் சீடர்கள், அவர்கள் யாராக இருப்பினும், வெறும் ஒரு சம்பிரதாயத்துக்காக அங்கு இருக்கிறார்கள். அவர்கள் உன்னை நாடி வந்தால் அவர்களுக்குப் பயிற்சி கொடு. சமாதியை நிர்வகிக்கும் பொறுப்பு உன்னிடம் ஒப்படைக்கப்படுகிறது. பள்ளியை நிர்வகிக்கும் பொறுப்பை இன்ஸ்பெக்டர் ஐயாவிடம் ஒப்படைக்கவும். அவர் அதை ஏற்றுக்கொண்டால் நன்றாக இருக்கும். இல்லையென்றால் அதன் பிறகு கடவுள் சித்தப்படி நடக்கட்டும். நீ விரும்பினால் நான் இப்போது உனக்குக் கூறியதை மதிப்புக்குரிய மாமா (K1) வுக்கு அனுப்பலாம். ஆனால், லாலாஜி சாகேப் உன்னை வெளிப்படுத்தும் வரை அதை ரகசியமாக வைத்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.’’

‘‘என் வீட்டிற்கு M3 - போகக்கூடாது என்று உறுதியாகத் தடுக்கப்பட வேண்டும். ஆயினும், அதைக் கேளாமல் அவர் அங்கு சென்றால், அவர் அங்கு வரப்போவதை முன்பே அறிவிக்காமல், அவர் வீட்டுக்குள்ளே செல்லக்கூடாது. நான் இப்போது உன்னிடம் கூறியது அல்லது நான் சொல்வது எதுவாயினும் ஃபடேகருக்கு அது தெரிவிக்கப்பட வேண்டுமா? கூடாதா? என்பது வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் அவர்களின் அனுமதிக்கு உட்பட்டதேயாகும். நான் கடன்பட்டவனாகவும் இருக்கிறேன். இதுவரையில் அந்தக் கடனை நான் தீர்க்க முடியவில்லை. என்னுடைய

சொந்த அனுபவத்திலிருந்து நான் உனக்கு ஒரு விஷயம் சொல்கிறேன். அதாவது இவ்வுலகில் யாருமே யாரிடமும் (உண்மையான) பாசம் உடையவராக இல்லை. மனிதர்கள் பெரும்பாலும் சுயநலம் மிக்கவர்களாகவே இருக்கிறார்கள்.''

''நீ எப்போது என்னை விரும்பி அழைத்தாலும், வணக்கத்திற்குரிய லாலாஜி அவர்களைப் போல நானும் வருவேன். என் வேலை அனைத்தையும் நான் உன்னிடம் விட்டிருக்கிறேன். எனது ஈமச் சடங்குகளுக்கு பணத்தை வீணாகச் செலவழிக்கக்கூடாது. ஏழை மக்களுக்கு உணவு கொடுக்கலாம். இந்த விஷயத்தை குறிப்பாக என் அம்மாவிடம் தெரிவிக்க வேண்டும். உன் அண்ணியைப் (J1 – இன் மனைவி) பார்த்துக் கொள்ளவும். இந்தப் பொறுப்பை நீ தாங்க முடியவில்லையென்றால் (ஏற்றுக்கொள்ள முடியவில்லையென்றால்) ஊழித்தீர்ப்பு நாளன்று நீ இதற்குப் பதில் சொல்லவேண்டியிருக்கும். நான் சொல்ல வேண்டியிருப்பது எதுவாயினும், அதை அவ்வப்போது சொல்லிக்கொண்டிருப்பேன்.''

''D2 – இடம், நான் அவனை ஷாஜஹான்பூரில் உள்ள ஸ்ரீ ராம் சந்த்தர் ஜியிடம் சரணாகதியாக ஒப்படைத்திருக்கிறேன் என்பதை அவன் புரிந்து கொள்ளச் செய்யவேண்டும். அவருக்குப் பணிந்து நடப்பது எனக்குப் பணிந்து நடப்பதாகும். உன்னை (D2) ஆன்மீக வளர்ச்சியின் உச்சநிலை வரையில் அழைத்துச் செல்லும் சக்தியும் திறமையும் ராம் சந்த்தராவுக்கு இருக்கிறது. நானும் ஒரு தவறு செய்துவிட்டேன். அதற்காக உன்னிடம் (ராம் சந்த்தரிடம்) மன்னிப்புக் கேட்கிறேன். என்னுடைய உலக வாழ்க்கையின் போது உன்னுடைய அன்பை என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை. இப்போது முக்தியடைந்திருக்கும் நிலையில் அதை நான் உணர்கிறேன். போதுமான அளவு சிந்தனைத்திறன் இல்லாததால் என் ஆயுட்காலத்தில் அதற்கு நஷ்ட ஈடு செய்ய என்னால்

முடியவில்லை. இப்போது அதைச் செய்வதாக நான் வாக்குறுதியளிக்கிறேன்.''

## வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் கூறியது:

''J1– கூறியது சரியானது. நீ அதற்கிணங்க நடக்க வேண்டும். அவரிடமிருந்து வந்த செய்திகளை சம்பந்தப்பட்டவர்களுக்கு இன்றே அனுப்பிவிடு. அதன் துவக்கம் கீழ்க்கண்டவாறு இருக்க வேண்டும். 'J1 – பூரணமான முக்தி அடைந்திருக்கிறார் என்பதை அனைவரும் தெரிந்து கொள்வார்களாக. ஒரு சகோதரராக அவன் என்னிடம் கூறியவை பின்வருமாறு உள்ளன. அவற்றை அனைவரும் வார்த்தைக்கு வார்த்தை பின்பற்றி நடக்க வேண்டும்.''

''J1 ஒரு விஷயத்தைக் குறிப்பிட மறந்துவிட்டார். அதை நான் உனக்குச் சொல்கிறேன். அது இதுதான் – அதாவது, நான் எழுதி வைத்துள்ள கையெழுத்துப் பிரதிகள், அவை எதுவாக இருந்தாலும், அழிக்கப்படவோ, வேறு யாருக்கும் கொடுக்கப்படவோ கூடாது. அவை முற்றிலும் பத்திரமாக வைத்திருக்கப்பட வேண்டும்.''

''J1 – இன் கடன்களைக் கொடுத்துத் தீர்ப்பது உன் கடமையாகும். ஆனால், ஒரே ஒருவருக்குத்தான் பணம் தர வேண்டும் என்னும் போது, இரண்டு பேருக்குப் பணம் தர வேண்டியதாக இல்லாமல், கவனமாக அதைச் செய்யவேண்டும். அந்தக் கடன் தொகையும் மிக அதிகமில்லை. உன்னால் அதைத் தீர்க்கமுடியும். மற்றபடி J1 என்ன கூறினாரோ அதை வார்த்தைக்கு வார்த்தை பின்பற்ற வேண்டும்.''

''நான் ஃபடேகர் சென்றிருந்தேன். அந்த இடத்தில் நடைபெற்ற விஷயங்கள் அனைத்தும் என் பார்வைக்கு வந்தன. J1 – இன் மறைவு என் பொறுப்பை அதிகமாக்கியிருக்கிறது. ஒவ்வொருவரும் தங்கள் போக்கில் பெருமை பேசிக்கொள்கிறார்கள். J1 – மறைவிற்கான

அனுதாபம் ஒருபுறம் ஒதுக்கப்பட்டுவிட்டது. தங்கள் சொந்த விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதிலேயே அவர்கள் மும்முரமாக இருக்கிறார்கள். நீயும் கூட கவனமாக, எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இப்போது ஷாஜஹான்பூர் மற்றும் ஃபடேகர் ஆகிய இரண்டு இடங்களின் பொறுப்பும் உன்னிடம் உள்ளது. மக்கள் ஏராளமான இடையூறுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். உனது தாயைப் போன்ற மதிப்புக்குரிய பெரிய அம்மா மிகவும் எளிமையான பெண்மணி. இப்போது அவருடைய மூளையும் கூட மயங்கியிருக்கிறது. பதிவுத் தபாலில் இன்று ஒருகடிதம் உனக்கு வந்திருக்கிறது. நன்கு சிந்தித்த பிறகு, இது சம்பந்தமாக நீ என்ன செய்ய வேண்டுமென்பதைச் சொல்கிறேன். மூன்று நாட்களுக்கு உன் வேலையை நிறுத்திக்கொள். உன் மனத்திற்கு ஓய்வுகொடு. நான் ஃபடேகருக்குப் போகிறேன். இன்று பிற்பகல் திரும்பி வருவேன். படுக்கையையும் தயாராக வைத்திரு. நான் என்ன உத்தரவுகள் கொடுப்பேன் என்று யாருக்குத் தெரியும்?''

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் பிறகு கூறியது:

''நான் ஃபடேகரிலிருந்து வருகிறேன். 'மஜ்னுவின் பரிதாபமான வாழ்வில் (உயிரில்) இருமடங்கு துயரமும் பாவமும் இருக்கிறது' (பாரசீக மொழி ஈரடிச் செய்யுள்). இனி நீ அங்கு போகவேண்டாம். இன்று அங்கு போகும் திட்டத்தை ஒத்திவைத்துவிடு. நிலைமையைக் கவனிப்பதற்காக J1- ஐ அங்கே விட்டு வந்திருக்கிறேன். J1- மாதிரி ஒரு மனிதர் எனக்கும் கூட தேவையாக இருந்தது. (என் கண்களில் கண்ணீர் திரண்டது). எத்தனையோ முறை இதை நீ புரிந்து கொள்ளும்படியாகச் செய்திருக்கிறேன். R2 - ஐ உடனடியாகக் கூப்பிடு.''

## அன்பான சகோதரர் J1 - கூறியது:

''அங்கே நிலைமை மோசமாக இருக்கிறது. தனிமனித விருப்பங்களின் விளையாட்டு அதிகரிக்கத் துவங்கியிருக்கிறது. மரியாதைக்குரிய மூத்த

சகோதரர் M1 – இன் உள்ளுணர்வு மிகச்சரியாக இருக்கிறது. என்னால் கூட நிலைமையை அந்த அளவுக்குப் புரிந்துகொள்ள முடியவில்லை. உடனடியாக அனைத்தையும் தலைகீழாகப் புரட்டித் தள்ளிவிட வேண்டுமென்று நான் நினைத்தேன். ஆனால், வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் என்னைத் தடுத்துவிட்டார். அவர் அனைத்தையும் உனக்கு அளித்திருக்கிறார். நானும் கூட உனக்கு ஒன்றினைக் கொடுக்கிறேன். அதை மரியாதையுடன் தந்த பரிசாக (Nazrana) ஏற்றுக்கொள். என் முன்னால் தியானத்திற்கு உட்கார்.''

## தியானத்திற்குப் பிறகு அவர் (J1) கூறியது:

''உன்னை நான் சக்தியால் நிரப்பியிருக்கிறேன். சில சமயங்களில் என்னிடமிருந்தும் கூட சேவை பெற்றுக்கொள். இதுவரை நீ எப்படி என்னிடம் இருந்தாயோ அப்படியே தொடர்ந்து என்னிடம் நடந்துகொள். வேறு வழியில்லாததால் லாலாஜி சாகேப் என்னை B1 – இடம் ஒப்படைத்திருந்தார். இப்போது அவருடைய மறைமுகமான விளையாட்டு வெளியே தெரிந்துகொண்டிருக்கிறது. மரியாதைக்குரிய சகோதரனே, உன் அன்பின் இந்த உயர்நிலை பற்றி என் ஆயுட்காலத்தில் எனக்குத் தெரிந்திருந்தால் என் ஜீவன் முழுவதையும் உனக்கே தியாகம் செய்திருப்பேன். அப்படி அறியாமற் போனது நிச்சயமாக என் தவறுதான். நான் நெருங்கிய உறவுகளுக்கு முக்கியத்துவம் தந்துவிட்டேன். இப்போது எனக்கு ஒரு தீவிரமான ஆசை இருக்கிறது. அந்த அயோக்கியர்கள் வசிக்கின்ற அந்தப் பகுதி முழுவதையும் நீ தலைகீழாக மாற்ற வேண்டும். (நாசமாக்க வேண்டும்). இது என் இதயத்தின் விருப்பம். நானும் கூட எப்போதும் உன்னுடன் இருப்பேன்; உன் ஒவ்வொரு வேலையிலும் உதவியாக இருப்பேன். அந்தப் பகுதி முழுவதையும் அழிக்க வேண்டுமென்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். என்னுடைய சீடர்களிடையே, அது சரியான

சமயம் என்று நீ எப்போது கருதுகிறாயோ, அப்போது என் சார்பாக அவர்களுக்கு நீ அனுமதி கொடுக்கலாம். இந்த அழிவு வேலையில் நீ ஈடுபட்டிருக்கும்போது நான் உனக்குப் பாதுகாப்பாக நிற்பேன். வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்ததில் R2 – மிகச்சரியான காரியம் செய்துள்ளார் என்று என் சார்பில் அவருக்குத் தெரிவிக்கவும். அவர் அந்த மனிதர்களுடன் அகப்பட்டிருந்தால் அவருக்கு முக்தி (விடுதலை) கிடைத்திருக்காது.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

'' J1 உன்னிடம் கூறியதற்கான சரியான சந்தர்ப்பம், இன்னும் அங்கு ஏற்படவில்லை. J1 இப்போதுதான் உன்னைப் பற்றி ஒரு விஷயத்தை என்னிடம் சொன்னார். நானும் அதை ஒப்புக்கொண்டேன். J1– இன் எந்த ஒரு சீடனும், அவரது பிரதிநிதியாக நியமிக்கப்படுவதற்குத் தகுதி உடையவனாக இல்லை. இதனால், எல்லாக் கோணத்திலிருந்தும் இந்தப் பதவி உனக்கு அளிக்கப்படுவது சரியாகவே இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதுவே அவரது விருப்பமாக இருந்தது; நானும் அதை ஏற்றுக் கொண்டேன். என் சார்பில் நீ செயல்படுவது போலவே அவர் சார்பாகவும் நீ செயல்படவேண்டும். அவர் பெயரால் நீ தீட்சையும் அளிக்கலாம். அவர் தனது சக்தி முழுவதையும் உனக்கு மாற்றிக் கொடுத்திருக்கிறார்; நானும் அதற்கு சம்மதமளித்தேன்."

**அன்புள்ள J1 கூறியது:**

''ஆண்டு விழாவின் போது சில விஷயங்களை மாற்றாமல் வைத்திருக்கும்படி நான் சொல்கிறேன். அதில் முதலாவது விஷயம் சாந்தி பாடம் எனப்படும் உலக அமைதிக்கான பிரார்த்தனையாகும். அதன் பிறகு என்னால் உருவாக்கி அறிமுகப்படுத்தப்பட்ட கோட்பாடுகளைப் பின்பற்றுவது முக்கியமாகும். என்னுடைய சமாதியைக் கட்டுவதில் தவறு இல்லை. ஆனால், அப்படிச் செய்தால்

அதன் பிறகு எல்லோரும் அவர்கள் யாராயினும் தனது சமாதியைக் கட்டச் சொல்வார்கள். எனவே, இந்த ரகசியத்தை D2 – க்கு தவறான சிந்தனைக்கு ஆட்படாமலிருப்பதற்காக அவருக்குத் தெரிவிப்பதே சரியாக இருக்கும்.''

''நான் என் உடலை நீத்தபோது, என் ஆன்மா பறந்து சென்று தனது உண்மையான இருப்பிடத்தைச் சென்றடைந்தபோது, நீ ஏற்கெனவே அங்கே இருப்பதைப் பார்த்து நான் வியப்படைந்தேன்.''

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

''ஃபடேகருக்குப் போகும் உன் எண்ணத்தை விட்டுவிடு. பயணத்தை ஒத்தி வைத்துவிடு. இன்னும் சிறிது காலம் அங்கு இருக்கும் நிலைமையை முழுமையாக நான் கவனித்தறிந்தேன். இப்போது நீ சொல்வதை அவர்கள் யாருமே கேட்கமாட்டார்கள். M1 – ஆல் கூட தன் முயற்சிகளை பலனளிக்கச் செய்ய இயலாது. நீங்கள் இருவருமாகச் சேர்ந்து ஏதோ திட்டம் போடுகிறீர்கள் என்று அது பிரசாரம் செய்யப்படும். உன் தாயாரைப் போன்றவளின் (லாலாஜியின் மனைவி) மனமும் சரியாக வேலை செய்யவில்லை. அவருக்கு ஏற்பட்டுள்ள அதிர்ச்சி மிகப் பெரியதாகும். என் வளர்ப்பு மகன் K1– உம் எந்த விதத்திலும் சிறப்பானவனாக யாராலும் கருதப்படவில்லை. அந்தப் பெரிய மனிதர் B1 - வேறு அங்கே இருக்கிறார். மக்கள் அவர் மீது தீவிர பக்தியுடன் இருக்கிறார்கள். அவர் உன் பணிக்கு ஏதாவது இடையூறு செய்தால், அவரையும் (தண்டிக்கப்பட வேண்டியவர்களின்) கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும். நான் இப்போது அமைதியாக, சரியான சந்தர்ப்பத்துக்காகக் காத்திருக்கிறேன். J1– ஐ பெரும்பாலும் உன்னுடனே இருக்குமாறு விட்டு வைத்திருப்பேன். அவர் அங்கே (ஃபடேகருக்குப்) போகவேண்டியதில்லை. R2 – இடம் இப்போது ராம் சந்த்தரையே நாடிச் சார்ந்திருக்கும்படி சொல். அவரால் தான்

அனைத்தையும் செய்ய முடியும். இப்படிச் சொல்வதால் R2, M1- உடன் தன் தொடர்பை விடவேண்டும் என்று அர்த்தமில்லை. இதை ஒரு கடமை என்ற விதத்தில் நான் சொல்கிறேன்.''

## 7-9-1944

### அன்புள்ள சகோதரர் J1 - கூறியது:

''என் சிறிய தந்தை (சித்தப்பா) K1 - க்கு எழுதியிருக்கும் கடிதத்தில் உள்ளபடி நடந்துகொள்ளுமாறு D2 - க்கு ஒரு கடிதம் எழுதவும். D2 - ஐப் பற்றி எனக்கு மிகவும் அக்கறை இருக்கிறது. அவன் குடும்ப விஷயங்களைக் கவனித்துக்கொள்ள வேண்டும். என் ஜெய்ப்பூர் தலைப்பாகையை யாருக்கும் கொடுக்க வேண்டாம் என்று என் அம்மாவிடம் சொல்லவும். அது கவனமாகப் பாதுகாக்கப்பட வேண்டும்.''

### வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

''என் சார்பில் R2 - க்கு ஒரு 'சபாஷ்' சொல்லவும். அவர் சரியாகவும், சிறப்பாகவும் வந்துவிட்டார். இல்லையென்றால் J1- கூறியபடி, ஜமோகா (Jamoga) என்ற தீய சக்தியின் (கல்வியறியாத இந்திய மக்களிடையே சிறு குழந்தைகளைக் கொல்லும் தொண்டை அடைப்பான் நோய் (டெடனஸ்) உண்டாக்குவதாகக் கருதப்படுகிற பேய்.) பிடியில் அகப்பட்டிருப்பார். ஃபடேகரில் நிறைய முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளைச் செய்திருக்கிறேன். எனவே, உன் மனதில் (உள்ளத்தில்) கலக்கம் உண்டாக்கிக் கொள்ளவேண்டாம். M1 - ஐயும் இதனால் மிகவும் அவதிப்பட வேண்டாம் என்று சொல். 'பாம்பையும் கொல்லவேண்டும், அதை அடித்த தடியும் உடையாமல் காக்கவேண்டும்' என்பதே எப்போதும் என் கொள்கையாக இருந்தது. நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும். நேற்று இரவு M1 - எனக்கு மிகவும் தொல்லை கொடுத்துவிட்டார். ஆனால், அதுவும் அவருடைய அன்பின் காரணமாகத்தான் அவருடைய

இதயத்தை வளர்த்துக் கொண்டிருந்த இந்த எண்ணத்துடனேயே அவர் தூங்கச் சென்றார். நீ அவருடைய மன இடையூறை நீக்கிவிடு. உனது மரியாதைக்குரிய அம்மாவிடம் (வணக்கத்திற்குரிய லாலாஜியின் மனைவி) உனது பிராணாஹூதி நன்கு வேலை செய்துள்ளது. இப்போது அவள் மனம் நிம்மதியடைந்திருக்கிறது. J1 – இன் மனைவிக்கு இதற்குமேல் அதிகமாக எதுவும் செய்ய வேண்டாம்.''

## R2 – இன் கேள்வி:

''வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் உயிர் நீத்த பொழுது அவருடைய சாம்பலை சமாதியில் வைத்தபொழுதும் நான் அங்கே இருக்கக்கூடாது என்று ஏன் தடுக்கப்பட்டேன்?''

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறிய பதில்:

''அந்தச் சமயத்தில் இது ஒன்றுதான் சரியான வழியாக இருந்தது என்று R2 – இடம் சொல்லவும். அவருடைய வழிகளில் பலவற்றை K...... இல் இருப்பவர்கள் விரும்பவில்லை. நீயும் R2 – ம் என்னைப் பார்ப்பதற்கு L......என்ற இடத்திற்கு வந்துவிட்டு, அங்கிருந்து K...... என்ற இடத்திற்குச் சென்றீர்கள். அது இரவு நேரம். N1 – அங்கு ஒரு கட்டிலில் உட்கார்ந்து பிரசங்கம் (சொற்பொழிவு) செய்து கொண்டிருந்தார். K4 - உம் அங்கே இருந்தார். உடல்நலக் குறைவால் நான் படும் வேதனையைக் கண்டு, என் உடம்பை விட்டு உயிர் நீங்கி விடுவதே மேலானது என்ற எண்ணம் N1 - இன் இதயத்தில் உண்டாயிற்று. இது என் வேதனை காரணமாக எழுந்த எண்ணமாக இருந்தாலும், இது அன்புக்கு எதிரானது. அவருக்கு (N1 - க்கு) என் உடல்நிலை பாதிப்பு பற்றி அதிர்ச்சி எதுவும் இல்லை. என்னுடன் ரத்த உறவு உடையவராக இருப்பதால் என் பக்கத்தில் இருந்து, என் சிரமத்தைக் குறைக்க முயற்சிக்க வேண்டியது அவருடைய கடமை. அதற்குப் பதிலாக எனக்குச்

சேவை செய்வது மற்றவர்களிடம் விடப்பட்டது. இது முறையான நடத்தையல்ல. இதை எல்லோரும் தங்கள் சிந்தனையில் வைத்திருக்க வேண்டும். என்னுடைய உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக, நான் கடுமையான வேதனையில் இருந்தபொழுது, இந்த மனிதன், இனிமேல் எனது ஆன்மீகப்பணியை அவர் மட்டுமே செய்து கொண்டிருப்பார் என்று உரத்தகுரலில் அறிவித்துக்கொண்டிருந்தார். மக்கள் ஏற்கெனவே அவர்மீது மிகவும் மதிப்பு கொண்டிருந்தார்கள். இதனால் இந்த நிலையைக் கடப்பது அவருக்கு மிகவும் சுலபமாக மாறிவிட்டது. வருங்காலத்தில், இம்மாதிரி மனிதர் யாராவது மேலே வந்தால் அவர் தலை தூக்க முடிவதற்கு முன்பே அவரை முழுமையாக அழிக்க நான் உனக்கு அனுமதியளிக்கிறேன். இந்தவிஷயத்தில் மென்மையான அணுகுமுறை தேவையில்லை. அவருடைய ஆன்மாவைக் கைப்பற்றிக்கொள். அதற்கான வழிமுறையை நான் உனக்குக் கொடுத்திருக்கிறேன்.''

## M1 - வணக்கத்துடன் கூறியது:

''வணக்கத்திற்குரிய மாஸ்டர் உடலை நீத்தபிறகு, நான் B.....என்ற இடத்துக்குப் போயிருந்தேன். அப்போது சித்தப்பா (N1) என் உயிர் ஏற்கெனவே – (அதாவது வணக்கத்திற்குரிய மாஸ்டர் உடல் நீத்துச் சென்ற பிறகு) முடிந்துவிட்டது, இப்போது உயிரற்ற வெறும் கட்டமைப்புதான் இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னார்.''

## வணக்கத்திற்குரிய மாஸ்டரின் விளக்கம்:

''அவர் சொன்ன இக்கருத்து மிகவும் சரியானதே. M1- இன் ஆற்றலை N1- பறித்துக் கொண்டுவிட்டார். இதற்கு எதிராக தன் ஆற்றலை R2 - க்குள் திணித்துவிட்டார். ஆனால், அந்த ஆற்றல் என்ன என்பதை

வார்த்தைகளில் வெளிப்படுத்த இயலாது. உனக்கு (ராம் சந்த்தருக்கு) இதெல்லாம் தெளிவாகத் தெரியும். நீ அதைச் சொல்லலாம்.''

**நான் பணிவுடன் சொன்னது:**

''அவர் R2 - இன் கடவுள் பற்றையும் நல்ல ஆன்ம நிலையையும் கடினத்தன்மையாக மாற்றிவிட்டார். இதன் விளைவாக R2 தனக்குள் ஏதோ நிரப்பப்பட்டிருப்பதாக உணர்ந்தார்.''

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''N1 தன் மீதான மற்றவர்களின் நம்பிக்கையை N1 நிலைநிறுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. அதுவே R2 - க்கு தீமையை உண்டாக்கியது. இப்போது அவர் (R2) எதிரணியினருக்குச் சொந்தமான யாருடனும் தியானத்திற்கு உட்காரக் கூடாது என்று அறிவுறுத்தப்பட வேண்டும்; இதை நான் எல்லோருக்குமே சொல்கிறேன். இது சம்பந்தமாக உதவிக் குறிப்புக்கள் தேவைப்பட்டால் ராம் சந்த்தரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். R2 - இன் விஷயத்தில் வளர்ச்சிக்கான பாதை இப்போது திறந்திருக்கிறது; இனிமேலும் சிறப்பான காலமும் அவருக்கு இருக்கிறது. முன்னேற்றமடைவதற்கு அவர் முயற்சிக்கலாம். எனக்கும் கூட அவர் மீது அன்பு இருக்கிறது. R2 எனக்குப் பணிந்து நடக்காமல் போயிருந்தால், என் பணிக்கு ஏதாவது தடை செய்திருந்தால், அவரை அழித்துவிடுமாறு நான் கட்டளையிட்டிருப்பேன். நம்பிக்கை இல்லாதவர்களுக்கான கடைசி ஆயுதமாக இதை நான் ஆக்கி வைத்திருக்கிறேன் என்பதை அவரிடம் சொல்லவும். R2 - இன் மீதான உன் அன்புதான் அந்த ஆயுதம் செயல்படுத்தப்படுவதிலிருந்து அவரைக் காப்பாற்றியது. இல்லையென்றால் அவரது அழிவு தானாகவே ஆரம்பித்திருக்கும். அன்புக்கு இலக்காக இருப்பவரின் விளைவு மட்டுமே, இந்த விஷயத்துக்குப் போகிறது என்பதால் N1 முதலானவர்களுக்கு நான் செய்து கொண்டிருந்தது எதுவாயினும் அது R2 - க்கும்

சென்றடைந்திருக்கும் என்பது இயற்கைதான். எனவே, N1 - க்காக செய்யப்படும் விஷயம், அப்பாவிகளாகிய அவருடைய சீடர்களை பாதிக்காதவாறு எனது விசேஷ சக்தியை ஈடுபடுத்துகிறேன்.''

## 8-9-1944

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறிய அறிவுறுத்தல்கள்:

''M2 - இடம் காணப்பட்ட குறைபாடு, சரி செய்யப்பட்டுவிட்டது என்று M1- இடம் சொல்லவும். இப்போது M2 - க்கு அவர் தொடர்ந்து பயிற்சியளிக்கலாம். இந்த ஆண்டு நமது ஆண்டு விழாவில் அவர் கட்டாயம் கலந்து கொள்ளவேண்டும். இந்த ஆண்டு விழாவில் கலந்து கொள்கிறவர்களின் எண்ணிக்கையை சாத்தியமான அதிகபட்ச அளவுக்கு அதிகரிப்பது நலமாக இருக்கும். அவருக்கு அனுப்பப்படும் கடிதங்களில் காணப்படும் உத்தரவுகளுக்கும், அறிவுரைகளுக்கும் தகுந்தவாறு அவர் (M2) நடந்துகொள்ள வேண்டும் மற்றும் ஒரே ஒருவருக்கு மட்டுமே தன் இதயத்தைத் தர வேண்டும். இந்த விஷயத்திலிருந்துதான் அவருக்கு கூறவேண்டிய அனைத்தும் வரும். அவருடைய மேன்மைக்காக சொல்லப்படும் இந்த அறிவுறுத்தல்கள் அனைத்தும் என்னிடமிருந்து வருவதாக அவர் எடுத்துக்கொள்ள வேண்டும். இரவு நேரம் இப்பயிற்சிக்கு நல்லது. M2 தனது குருவின் நினைவை மனதில் நிலைநிறுத்திக் கொண்டு தூங்க வேண்டும். அனைத்தையும் தனது மாஸ்டரின் சித்தப்படியே நடக்கட்டும் என விட்டுவிட வேண்டும். 'ஒருவரையே பற்றி நில்; அதையும் விரைவாகச் சென்று பற்று' என்ற பாரசீகப் பொன்மொழியில் கூறப்பட்ட கருத்தை அவர் பற்றி நிற்க வேண்டும். M1 - இடமிருந்து அவர் என்ன பெற்றுக்கொண்டிருக்கிறாரோ அதைவிடச் சிறந்த ஒன்றை வேறு எங்கும் அவர் பெற முடியாது. அவருடைய இதயத்திலிருந்து மற்ற அனைவரைப் பற்றிய எண்ணத்தையும் அவர் நீக்கிவிட வேண்டும். S1, C1 அல்லது

வேறு யாரோ ஒருவர் மாஸ்டர் என்று கருதப்பட்டவரின் பெயரால் செய்துள்ள தீட்சைகள், உன்னை (ராம் சந்த்தரை) நோக்கி, திசைமாற்றப்பட வேண்டும்.''

''இப்போது மற்றவர்களுக்குப் பயிற்சியளிக்க M2 - க்கு நிபந்தனைக்குட்பட்ட அனுமதியளிக்கவும். என் சார்பில் அதை நீ செய்யவும். உனது மரியாதைக்குரிய சகோதரர் அதற்கு சோதிக்கப்பட வேண்டும்; ஏற்றுக் கொள்ள வேண்டும். இதில் தாமதம் செய்வதற்குத் தேவையில்லை. நான் அதை உறுதிப்படுத்தி, M2 - க்கு 8–9–1944 என்ற இந்தத் தேதியில் காலை 10 மணிக்கு நிபந்தனைக்குட்பட்ட அனுமதியளிக்கிறேன்.'' (M1 மற்றும் ராம் சந்த்தரின் கையொப்பங்கள்)

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:

''யார் அதை அவருக்குள் திணித்தாரோ அந்த மனிதருக்கே அந்த கடினத் தன்மை திரும்பிச் சென்றிருக்கிறது என்று R2 - இடம் சொல்லவும். உனக்காக நான் R2 - ஐ இப்போது நான் சுத்திகரிப்பு செய்திருக்கிறேன். இனி நீ (ராம் சந்த்தர்) அவருக்கு பிராணாஹூதி அளிக்கலாம். L1 - க்கு அவர் (M1) என்ன செய்து கொண்டிருந்தாரோ அதைத் தொடர்ந்து செய்யும்படி M1 - இடம் சொல்லவும். இனி அவர் உபயோகமாக இருக்கமாட்டார் என்று நினைத்து அவர் உற்சாகமிழக்க வேண்டும் என்று இதற்குப் பொருளல்ல.''

## அன்புள்ள சகோதரர் J1 கூறியது:

''வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் அவர்களுக்கு R2 கொடுத்த வாக்குறுதியில் உறுதியாக இருக்குமாறு என் சார்பில் அவரிடம் சொல்லவும். மாஸ்டரைத் தவிர வேறு யாராலும் அவருக்கு உதவி செய்ய இயலாது. நமது சத்சங்கம் (ஆன்மீக சகோதரத்துவம்) சம்பந்தமாக நிலவும் விவகாரங்கள் எனக்கு மிக நன்றாகத் தெரியும். மாஸ்டருடைய

அபிமானத்துக்குத் தகுதியுடையவர்கள் அங்கு யாருமில்லை. லாலாஜி சாகேப் யாரைத் தன்னுடையவராக எடுத்துக் கொண்டிருக்கிறாரோ, அவரை மட்டுமே இப்போது நாம் நாடிச் சார்ந்திருக்க வேண்டும். யாரும் யாரிடத்திலும் உண்மை அபிமானமுடையவராக இருப்பதில்லை. அதுவே என் அனுபவம். நம்பிக்கை ஒன்று மட்டுமே, உடல் நீங்கிய பிறகு உன்னுடன் வருகின்ற நண்பர்கள், உறவினர்கள் அனைவரும், கணவன் – மனைவியாக இருந்தாலும் கூட தங்கள் சுயநல எண்ணங்களுடன் இருக்கிறார்கள். தன் இதயத்தை இழந்துவிட்டவர் யாரோ அந்த ஒருவருக்கே இதயத்தைக் கொடுக்க வேண்டும். ‘பூரணத்துவத்தை அடைந்திருக்கின்ற ஒருவரிடம் தான் அன்பு என்றால் என்ன என்ற இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும். அதேபோல, தன் இதயத்தை இழந்துவிட்ட ஒருவரிடம் தான், இதயம் எப்படி இழக்கப்படுகிறது என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டும்.’ (உருதுமொழி ஈரடிச் செய்யுள்)’’

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

‘‘பெரிதும் உழைத்து ராம் சந்த்தரை நான் உருவாக்கியிருக்கிறேன் என்று R2 - இடம் சொல்லவும். அபாயகரமான பள்ளத்தாக்கு போன்ற அந்த நிலையிலிருந்து காப்பாற்றி வெளியே அழைத்து வந்தது என் துணிச்சலினால்தான். செய்யப்பட்டிருக்கின்ற காரியம் அனைத்தும் உங்கள் நன்மைக்காகத்தான். எங்கிருந்து ராம் சந்த்தரை நான் பாதுகாப்புடன் வெளியே கொண்டுவந்தேனோ அந்த அபாயகரமான பள்ளத்தாக்கை நோக்கி யாருமே போவதை நான் விரும்பவில்லை. (K……என்ற இடத்தின் சாத்தான்கள் சம்பந்தப்பட்ட பள்ளத்தாக்கு பற்றிய என் குறிப்பு இது.) அங்கு ஒவ்வொரு படியிலும் கொள்ளைக்காரர்கள் இருக்கிறார்கள். அங்கே சென்றவர்கள் யாரும் கறைபடியாமல் திரும்ப முடியாது.’’

**சகோதரர் J1 - குறிப்பிட்ட கருத்து:**

''நானும் கூட இதை ஒப்புக்கொள்கிறேன்.''

**9-9-1944**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''நான் ஃபடேகரிலிருந்து வருகிறேன். அங்கே நிலைமை வழக்கம்போல இருக்கிறது. சமாதியில் ஏராளமான குப்பைகள் சேர்ந்திருக்கின்றன. அதைச் சுத்தம் செய்யுமாறு சொல்லி D2 - க்கு கடிதம் எழுதவும். M1 - மனநிறைவுடன் இருக்க வேண்டும். இன்று ஏதோ ஒரு சமயத்தில் R2 - ஐக் கூப்பிடு. அவர் உன்னை அவ்வப்போது வந்து பார்ப்பதை நான் விரும்புகிறேன். உன் வீட்டில் (உன் மனைவியிடம்) உன்னைப் பற்றிய ஏதாவது விஷயத்தை வெளிப்படுத்தலாம். ஆன்மீக சகோதரத்துவம் அதிகரிக்கும் என்று M1 - இடம் சொல்லவும். இங்கு யார் வருகிறார்களோ அவர்களை வரவேற்கப்பட வேண்டும். அவர்களுக்கு M1 தனது நேரத்தை ஒதுக்க வேண்டும். வருகின்ற எல்லோருக்கும் பயிற்சியின் வழிமுறையைச் சொல்லத் தேவையில்லை. இந்த உத்தரவுகள் உனக்கும் (ராம் சந்த்தருக்கும்) சேர்த்துத்தான். யார் இங்கு வருகிறார்களோ அவர்களின் கடினத்தன்மை நீக்கப்பட வேண்டும். புதிதாக வருகிறவர் M1 - இடம் செல்லவேண்டும். பொது சத்சங்கத்தில் உயரிய சாத்திரங்களிலிருந்து சுருக்கமான வடிவில் உள்ள அரிய விஷயங்களை M1 வெளிப்படையாக சொல்லக்கூடாது. இம்மாதிரி விஷயங்கள் விசேஷ ஆன்மீகக் கூட்டங்களில் பேசுவதற்காகவே இருக்கவேண்டும். சூழ்நிலை மாறிக் கொண்டிருக்கிறது. நீங்கள் இருவரும் நேற்றிரவு சிறப்பான முறையில் ஆன்மீகப் பணியாற்றியிருக்கிறீர்கள். நான் உத்தரவிட்டாலன்றி பயிற்சியளிப்பதற்கான அனுமதியை இப்போது யாருக்கும் அளிக்கக்கூடாது.''

**கேள்வி:**

‘‘என்னிடம் அழிவுக்கான வேலை அளிக்கப்பட்டிருக்கும்போது, பிராணாஹூதி கொடுக்கலாமா?’’

**மாஸ்டரின் பதில்:**

‘‘நீ ஒரே திசையில் முனைப்பாக இருப்பதனால், உனக்கு நியமிக்கப்பட்ட வேலையில் உனது சக்தியும் பிராணாஹூதியும் ஒருமுகப்பட்டு விடுவதனால், வேறு யாருக்கும் பிராணாஹூதி அளிப்பது உனக்குத் தடை செய்யப்பட்டுள்ளது. அப்படி ஒரு சந்தர்ப்பம் ஏற்படும் போது, உன்னிடம் வருகிறவர்களை M1 – இடம் அனுப்பவும். R2 இதயப் புள்ளிக்கு அப்பால் முன்னேறவில்லை. J1 தன்னிடம் இருந்த அனைத்தையும் உனக்கு (ராம் சந்த்தருக்கு) மாற்றிக் கொடுத்து விட்டார். J1 அப்படி உனக்கு அனைத்தையும் கொடுப்பதற்கு முன்பு M1 – இன் வேண்டுகோளை நிறைவேற்றுவது சாத்தியமாகி இருக்கக்கூடும். ஆனால், இப்போது இந்த விஷயத்தில் வற்புறுத்தல் இருக்கக்கூடாது. நான் எவ்வளவோ உறுதிப்படுத்திச் சொல்லியிருந்தும் கூட M1 தனது உள்நிலையை உணர்ந்து கொள்ளவில்லை. அவருடைய அதிர்ஷ்டமாக அவருக்குக் கிடைத்துள்ள இந்தநிலை, வேறு யாரும் அடைவதற்கு மிகவும் சிரமமானது என்று கூறும் என் வார்த்தைகளில் அவர் நம்பிக்கை கொள்ளலாம். இப்போது இதைச் சரியான முறையில் பயன்படுத்துவது அவர் கைகளில்தான் இருக்கிறது. M1 – ஐப் பாராட்டிப் புகழ வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. அவரைப்போல இன்னும் ஒருவரை உருவாக்குவதில் தான் என் மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது. நீ (ராம் சந்த்தர்) உடலை நீத்துச்சென்ற பிறகு, இப்படி இன்னொருவரை உருவாக்குவது அல்லது வளர்ச்சிபெறச் செய்வது பற்றிய செயல்முறையில் எனக்கு அக்கறை இருக்காது என்பதால், இப்போதே இதைக் காண நான் விரும்புகிறேன்.”

## M1 – இன் பணிவான கருத்து:

''மாஸ்டர் தனது உடலை நீத்தபிறகும் தனது பிரதிநிதியுடன் தொடர்ந்து இருக்கிறார். அதுவும், தனது பிரதிநிதி உடலை நீத்துச் செல்லும் வரையில் அவருடன் இருக்கிறார் என்ற எண்ணம் அல்லது ஞானம் ஒருவேளை மாமாவுக்கு (அல்லது சித்தப்பாவுக்கு) (N1– க்கு) இல்லாமற் போயிருக்கலாம்.''

## வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

''இந்த ஞானம் என்னைத் தவிர அல்லது நான் யாருக்கு அதைக் கொடுத்தேனோ அவரைத்தவிர வேறு யாருக்கும் இருக்கவில்லை. இது இயற்கையின் நிர்வாகப்பணி. எல்லோருக்கும் அது தெரிவிக்கப்படுவதில்லை. தீட்சைகள் (பயிற்சியின் துவக்கம்) முடிந்த அளவு குறைவாக இருக்க வேண்டும். நன்மையை விநியோகிப்பதில் தவறில்லை. அதை நீ விரும்புகிற எந்த ஒருவருக்கும் கிடைக்கச் செய்யலாம் அல்லது உன்னை நாடிச் சார்ந்திருக்கிற ஒருவருக்குக் கொடுக்கலாம். அது உன்னுடைய (M1 – இன்) தனி உரிமையாகும். உன்னால் (ராம் சந்த்தரிடம்) தீட்சை அளிக்கப்பட வேண்டியவர்கள் ஒன்றிரண்டு பேர் இருக்கிறார்கள். R6 – க்கு என் சார்பில் நீ தீட்சையளிக்கலாம். ஆயினும், தனது வாழ்க்கையின் இறுதி நேரத்தில் இருக்கின்ற எந்த ஒருவருக்கும் தீட்சையோ அல்லது இதயத்தை நிரப்பும் பிராணாஹூதியோ அளிக்க வேண்டாம். ஏனெனில், அவனிடம் / அவளிடம் மீதியிருக்கும் பதிவுகள் (சம்ஸ்காரங்கள்) உனக்கு மாற்றப்பட்டுவிடும் சாத்தியம் இருக்கிறது; இதனால் நீ அந்த விளைவுகளை அனுபவிக்க வேண்டிவரலாம். விசேஷமாக என்னிடம் பக்தி உடையவர்களான, ஏற்கெனவே தீட்சை அளிக்கப்பட்டவர்களின் விஷயத்தில் இந்த முறையைப் பின்பற்றுவது சரியாக இருக்கும். என்னிடம் வருபவர்களை அழுக்கற்றவர்களாகச் செய்து அனுப்பிவிட்டு,

அவர்களுடைய பதிவுகளின் விளைவுகளை நானே ஏற்று அனுபவிப்பது எனது துணிவான செயலாக இருந்தது. உன்னை இந்தக் கஷ்டத்திற்கு ஆளாக்க நான் விரும்பவில்லை. பதிவுகளை எரித்து அழிப்பதும் கூட முடியும். ஆயினும், அது இயற்கையின் விதிக்கு எதிரானது. உன் தந்தையின் சம்ஸ்காரங்களை நேற்று இரவு நீ எரித்து அழித்தது தவறு. நீ விரும்பினால் அடிக்கடி உன் மனதில் தோன்றிக் கொண்டிருக்கும் எண்ணத்திற்கு ஏற்றவாறு, இப்போது நீ உண்மையில் நிலைபெற்றிருக்கிறாயோ அந்த நிலைக்கு மேலே கொண்டு வரலாம். உன் தந்தைக்கு செய்ய வேண்டிய கடனை நீ செய்துவிட்டாய். நேற்று இரவு அவரை ஒரு கனவில் நீ கண்டாய். அவர் அப்போது சொன்னது உண்மையான பேரானந்தத்தின் உருக்குலைந்த வடிவமாகும். அதுவே, அவருடைய கடைசி பதிவாகும். (கடைசி சம்ஸ்காரமாகும்) தன் ஆயுட்காலத்தில் எப்போதும் எதை அவர் எதிர்த்து வந்தாரோ அந்த நன்மையை எதிர்பார்த்து அவர் இன்னும் ஒரு புதிய பிறவி எடுக்காமலிருக்கிறார். தன் மரண சமயத்தில் உன்னிடமிருந்து சிறிது பயனை அவர் எடுத்துச் சென்றிருக்கிறார். நான் உனக்குக் குறிப்பிட்டுச் சொன்ன அந்தக் கடைசி சம்ஸ்காரம், அவரது எண்ணத்தினால் மட்டுமே வந்தது. அதை உதறித் தள்ளிவிடுவதால் அது எளிதில் மறைந்துவிடும். ஆனால், இதை நீ மூன்று நாட்களுக்குப் பிறகு செய். உலகை விட்டுச்சென்ற மீதியுள்ள முன்னோர்களுக்கு அருளை பிராணாஹூதியாக அளித்துக் கொண்டு இரு. உன் தந்தையின் விஷயத்தில் நீ செய்ததுபோல, அம்மாதிரி நடைமுறையில் ஈடுபடத் தேவையில்லை. உன் தாயாருக்கு இதில் நம்பிக்கை இருந்தால், இதை அவரிடம் நீ சொல்லலாம்''.

**அன்புள்ள J1 குறிப்பிட்ட கருத்து:**

''நேற்று இரவு சகோதரர் M1 மிகச் சிறப்பாக தன் பணியைச் செய்தார்.''

### என் (ராம் சந்த்தரின்) கேள்வி:

''இப்போது ஃபடேகரில் இருக்கும் மதிப்புக்குரிய B1 உண்மையாகவே மக்களுக்கு நன்மையளிக்க விரும்புகிறாரா?''

### வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

''B1 நல்ல நோக்கங்கள் உடையவராக இருக்கிறார். ஆனால், அதனுடன் கூடவே அவைகளுக்காக தான் புகழப்படுவதையும் விரும்புகிறார். மேலும், ஒர குருவாக மாறுவதன் மூலமாக தன் செலவுகளுக்கு வழி செய்துகொள்ள விரும்புகிறார். தனது மரியாதையை அதிகரித்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தையும் உடையவராக இருக்கிறார். தன் குழந்தைகளுக்கும் கூட அந்த மரியாதை கிடைக்க வேண்டுமென விரும்புகிறார். உண்மையைச் சொன்னால், அந்தக் குடும்பத்தினர் முழுவதும் இந்த விஷயத்தில் நிபுணர்களாக இருக்கிறார்கள்.''

''பண்டாராவில் (ஆண்டு விழாவில்) உன்னைப்பற்றிய செய்தி வெளிப்படுத்தப்படும்போது, உனது பிரதிநிதித்துவம் சம்பந்தமான தகவல், ஒவ்வொரு மூலை முடுக்குக்கும் எடுத்துச் செல்லப்பட வேண்டும். யாராவது அதைப்பற்றி ஏதாவது கேள்வி கேட்டால், அப்போது உன் பெயரை மட்டுமே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். எவ்வளவு அதிகமான மக்கள் அதைப் பற்றித் தெரிந்துகொள்கிறார்களோ, அந்த அளவுக்கு அவர்களுக்கு நன்மை கிடைக்கும். உனது பிரதம மந்திரியாக இருக்கும் பதவியை M1 – க்குத் தருகிறேன். அவர் தன் கடமை பற்றிய உணர்வுடன் இருக்க வேண்டும். R2 நன்கு பிரசாரம் செய்யக்கூடியவர். ஆனால், உனக்கு அது தேவையில்லை. எனக்கும் A1 - க்கும் இடையே இருந்ததுபோல, ஒரு தொடர்பு உனக்கும் M1 – க்கும் இடையே இருக்க வேண்டுமென நான் விரும்புகிறேன். தனது குணத்தில் கடுமையை விட்டுவிட அவரால் (M1) முடிந்தால் அதே மாதிரி தொடர்பு வளரும்.

எக்காரணம் கொண்டும் K4 - க்கு M1 தீட்சை அளிக்கக்கூடாது. மற்றவர்கள் சம்பந்தமாக, அவர் விருப்பப்படி செய்யலாம். K3 - அந்தவிதமான வேலைக்காக அவர் வரவில்லை என்பதால், பூஜை போன்ற வழிபாடுகளில் நாட்டம் கொள்ளக் கூடாது.''

10-9-1944

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''இது ஒரு புதியவிதமான தீட்சை. இதை பிரியமான ராம் சந்த்தரால் நான் பயனடையப் பெற்றேன். இதைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. பதிவுகளை எரித்து விடும் திறமை பெற்றவராகிய, மாஸ்டரால் கட்டளையிடப்பட்டுள்ள ஒருவர் மட்டுமே இதைச் செயல்படுத்த முடியும். ஒருவர் தானாகவே மாஸ்டரின் உத்தரவின்றி இதைச் செய்ய முடியாது. அன்புள்ள ராம் சந்த்தர், தனது தந்தை இறந்து கிட்டத்தட்ட பன்னிரண்டு வருடங்களுக்குப் பிறகே, மாஸ்டரின் சார்பில் தன் தந்தைக்கு தீட்சையளித்தார்.'' (அவருடைய தந்தை இறந்த தேதி ஜனவரி 7,1933)

''அவர்களுடைய மனப்பான்மைகள் உள்முகமானவையாக மாறும் வரை மான்தோலின் மீது உட்கார்ந்து தியானம் செய்யக்கூடாது என்று தனது சீடர்களுக்கு M1 - கூறவேண்டும் என்று சொல்லவும். இது ஒரு பழைமையான முறை. இதை நான் கைவிட விரும்பவில்லை.''

''மேலுலகில் தீட்சை அளிக்கப்படுவதற்குத் தகுதியுடைய சில மனிதர்கள் இருக்கிறார்கள். இம்மாதிரி மனிதர்களின் தனியான ஒரு பட்டியலே இருக்கும். உன் அப்பாவின் பெயரும் அதில் இருக்கும். (ஆன்மீக) சந்திர மண்டலத்தில் வசிப்பவர்கள் உன்னை நாடி வந்து கொண்டிருக்கிறார்கள்; உன் அருளைப் பெற ஆசைப்படுகிறார்கள். ஏதாவது ஒரு சமயம் அந்தப் பக்கம் கவனம் செலுத்து. அதனுடைய தூண்டுதல் மற்ற (ஆன்மீக) மண்டலங்களையும் அடைந்திருக்கிறது.

நான் உனக்கு ஒரு வழிமுறை கொடுக்கிறேன். அதன் மூலமாக ஆன்மீக நன்மை அவர்களுக்குத் தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருக்கும். உன்னுடைய பணியின் எல்லை மிகவும் விரிவானது.''

''நேற்று இரவு M1 – க்கு நீ அளித்த பிராணாஹுதியின் விளைவாக, அவர் குதுப் (Qutub / துருவா) என்ற நிலைக்கும் மேலாக முன்னேறியிருக்கிறார். இந்த நிலையில் இப்போது அவர் காத்திருக்கவேண்டும். அது அவருக்கு நன்மையளிப்பதாக இருக்கும். குதுப் என்ற பதவி இப்போது பின்தங்கிவிடப்பட்டுள்ளது. இன்று காலை நீ அவருக்குச் சொன்னதை அவர் பயிற்சி செய்ய வேண்டியது அவசியமானது. அவருடைய திருப்திக்காக இதைப் பற்றி அவருக்குச் சொல்ல வேண்டும். இந்த ஆன்மீக உள்நிலையில் படிப்படியாகத் தேய்வது என்பது கிடையாது. இந்தக் குறிப்பிட்ட தியானம் சம்பந்தமான 'கவனித்தல்' என்பது அவருடைய சொந்த ஆலோசனைக் குறிப்பு.''

## 11–9–1944

## வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது:

''இப்போது R2 சரியாக இருக்கிறார். உங்கள் இருவர் மீதும் (ராம் சந்த்தர் மற்றும் M1 மீது) அபிமானம் அதிகரிக்கத் துவங்கியிருக்கிறது. இன்றைய தினமும் கூட நீ யாருக்கும் பிராணாஹுதி அளிக்க வேண்டாம். பால் மட்டுமே சாப்பிட வேண்டும். இந்த உணவுக் கட்டுப்பாட்டிலேயே உன்னை சில நாட்கள் தொடர்ந்து வைத்திருக்க வேண்டிய தேவை ஏற்படலாம் என்பதும் சாத்தியம். தேவைக்கு ஏற்றபடி அதுபற்றி இன்று உனக்குச் சொல்வேன். இன்று பகல் நேரத்தில் தூங்க வேண்டாம். சோடா அருந்துவதில் தவறு இல்லை. குடலில் ஒரு குறிப்பிட்ட குறைபாட்டுத்தன்மை வளர்ச்சியடைவதை அது தடுத்துவிடும். ஒரு பெரிய நோக்கத்தைக் கருத்தில் கொண்டுதான் உன்னை பால் மட்டும் சாப்பிடும் இந்த உணவுக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டியுள்ளது. இது

பற்றிய அறிகுறி ஏற்கெனவே உனக்குக் கிடைத்துள்ளது. மேலும் சில தகவல்களும் உனக்குக் கிடைக்கும். ஃபடேகரில் உன் தாயார் (வணக்கத்திற்குரிய லாலாஜியின் மனைவி) மனதில் நிச்சயமாக துக்கம் இருக்கிறது என்றாலும், இப்போது அமைதியுடன் இருக்கிறார்.''

**அன்புள்ள சகோதரர் J1 கூறியது:**

''நேற்று இரவு முழுவதும் நான் உன்னுடன் இருந்தேன். வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் அவர்களும் அங்கே இருந்தார். இதன் விளைவு மிக நல்லதாக இருக்கும். மரியாதைக்குரிய சகோதரா, (ராம் சந்த்தர்) எனது எதிர்பார்ப்புகளும் கூட உன்னோடு இணைந்திருக்கின்றன. உன் உயிரை நான் பாதுகாப்பேன். எந்த நேரத்திலும் உன்னைத் தனியே விட்டுச் செல்லமாட்டேன். நான் இன்னும் அதிக சுதந்திரமாக இருப்பேன். M3 – ஐ எந்தக் காரணம் கொண்டும் வெளியே விடவேண்டாம். நான் அதுபற்றி ஒரு குறிப்பு கொடுக்கும்போது, வேலையைத் துவங்கு. நானும் கூட உன்னிடம் குறைவு எதையும் இருக்கும்படி விடவில்லை. மரியாதைக்குரிய சகோதரர் M1 – க்கும் கூட போதுமான அளவு செய்திருக்கிறேன். வணக்கத்திற்குரிய லாலாஜிசாகேப் பயிற்சியின் திசையை மாற்றியிருக்கிறார். பதிப்பிக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விநியோகிக்கப்படக் கூடாது.''

**ஆன்மீக உயர் மண்டலங்களில் வசிப்பவர்களுக்கு பிராணாஹூதி அளிக்கும் வழிமுறையை வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறினார்:**

''அவர்கள் அனைவரையும் எண்ணத்தின் மூலமாக சுற்றிலும் வளைத்துக் கொண்டு, வணக்கத்திற்குரிய மாஸ்டரே அவர்களுக்குப் பிராணாஹூதி அளித்துக் கொண்டிருப்பதாக ஒரு உறுதியான கருத்தை மனதில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.''

**அன்புள்ள J1 கூறிய இரண்டாவது வழிமுறை இது:**

''பிராணாஹூதி அளிப்பவரின் சூட்சும சரீரம் அங்கே நிலைநிறுத்தப்பட வேண்டும். அங்கிருந்து பிராணாஹூதி அளித்துக் கொண்டே இருக்குமாறு கட்டளையிடப்பட வேண்டும் மற்றும் நிறைவடைந்து கொண்டிருக்கின்ற பிராணாஹூதி எப்பொழுது எந்த அளவு வளர்ச்சியடைந்துள்ளது (அதாவது எந்த அளவில் உள்ளது) என்பது பற்றிய மதிப்பீட்டைச் சுட்டிக்காட்டும்படி செய்ய வேண்டும். ஏதாவது ஒரு குறிப்பிட்ட உயர்ந்த ஆன்மீக மண்டலம் பற்றிய வேலையில் இந்த வழிமுறையைப் பயன்படுத்தலாம். வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் கொடுத்துள்ள வழிமுறை, உன்னுடைய கடமைகளில் ஒரு பகுதியாக இருக்கிறது. அதை எப்போதும் நீ கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். (கவனத்தில் வைத்திருக்க வேண்டும்.) ஏதாவது ஒரு ஆன்மா ஒரு விசேஷமான வழியில் உன்னை நாடிச் சார்ந்து நின்றால், நீயும் அதற்கேற்ற படி அந்த ஆன்மாவை நாடியிருக்க வேண்டும். ஆன்மீக சந்திர மண்டலத்தக்குச் சொந்தமான ஒரு பெரியவர் பரமாத்மாவிடம் (Zatt) ஆன்மீக சந்திரமண்டலத்தில் வசிப்பவர்களாகிய தங்களுக்கு ஆன்மீக நன்மையளிப்பதற்காக யாரையாவது நியமிக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்தார். இதனால்தான் வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் உன்னை அந்த நோக்கத்திற்கு நியமித்தார். அவர்களுக்கும் இந்த விஷயத்தை தெரிவித்தார். இப்போது நீ உன் கடமை பற்றி விழிப்புடன் இருப்பாயாக. மதிப்புக்குரிய சகோதரரின் (M1 – இன்) வேலையின் எல்லை அதிகமாகிக் கொண்டிருக்கிறது.''

**நாங்கள் உரையாடிக் கொண்டிருந்தபோது R2 சொன்னது:**

''நான் K.......என்ற இடத்துக்குச் சென்றபோது, N1 (சித்தப்பா அல்லது மாமா) என்னிடம், M1 தனது மாஸ்டருக்கு எதிரானவராக மாறிவிட்டதால் அவர் விஷயத்தில் முடிவான பயன் நன்றாக இருக்காது

என்று சொன்னார். இந்தவிஷயம் வணக்கத்திற்குரிய மாஸ்டருக்குத் தெரிவிக்கப்பட்டது. அப்போது மாஸ்டரின் வார்த்தைகள் இறங்கி வந்தன. ''எந்த ஒரு சிறு பகுதியையும் விட்டுவைக்காத அளவுக்கு இம்மனிதர் (N1) பெருந்தீமைகளை உண்டாக்க முயன்றார். M1- இன் மீது அவர் எய்த அம்பு (செய்த தீமை) அதன் இலக்கை அடைந்துவிட்டது. அதன் விளைவாகவே அவருடைய மதிப்பீட்டின்படி, சற்று முன்பு R2 கூறியதுபோல, M1- இன் சக்தி பயனற்றதாகிவிட்டது என்று அவர் நினைத்தார். M1 தனது நம்பிக்கையை தனது இறுதிக்காலம்வரை குலையாமல் வைத்திருக்க இயலாது என்பதே N1- இன் சந்தேகமாக இருந்தது. M1- க்கு ஆதரவாக என்னுடைய சக்தி அங்கு பின்னணியில் இருந்தது. இறுக்கமான அந்தக் கயிற்றை நான் சற்று தளர்த்தினேன் என்பதில் சந்தேகமில்லை. இதற்கான காரணம் என்னவெனில், எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவுடன் நான் ஒருவரை (ராம் சந்த்தரை) தயார் செய்து கொண்டு இருந்தேன். அவருடைய (ராம் சந்த்தரின்) ஆற்றல் அவர்கள் (N1 முதலிய) அனைவரையும் வீழ்த்திவிடும் என்ற குறிக்கோளுடன் அதில் ஈடுபட்டிருந்தேன். அவர் (N1) செய்த காரியம் எதுவாயினும் அதன் பலன்களை அவர் அடைவார். இந்த விஷயம் சம்பந்தமாக முன்பே நிறைய குறிப்பிட்டிருக்கிறேன். M1- ஐ கீழே இழுத்துத்தள்ள N1- இனால் முடியவில்லை. மேலும் அவர் செய்த முயற்சிகளும் இத்திசையில் இருக்கவில்லை. (N1 - இனால் M1- க்குச் செய்யப்பட்ட தீமை என் காட்சிக்கு வந்தது. மேலான ஆன்மீக உயர்நிலைகளை எய்தியுள்ள ஒருவராகிய ஓமர் மீது (Y) உயர்வுக்கும் தாழ்விற்கும் இடையே வெளிப்படையான எந்த வேறுபாடும் தெரியவிடாமல் அவருடைய உயர்நிலையை நசுக்கி விடுவதற்காக ஜையத் (Zaid / x) ஒரு அழுத்தத்தைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். இப்படி Yயின் (ஓமரின்) பார்வையிலிருந்து அவரது

உயர்நிலை இனம் காண முடியாதபடி மறைக்கப்பட்டிருக்கும்போது அவருடைய எண்ணம் தாழ்வான ஒன்றுடன் நெருங்கத் துவங்குகிறது. அந்தத் தாழ்வான நிலையின் கடினத்தன்மை அவருடைய மனப்பான்மையில் பரவுவதற்கு ஆரம்பித்துவிடுகிறது). நீ ஓரளவுக்கு (ஆழ்ந்த உள்ளுணர்வில்) ஈர்ப்பு நிலையில் இருந்தபோதும் கூட என்னைப் பற்றிய நினைவை நீ விடவில்லை. K.......என்ற இடத்தில் உனக்கு உருளைக் கிழங்கு சூப்பில் கலந்து கொடுக்கப்பட்ட மருந்தின் விளைவாக உனக்கு தலை சுற்றலும், குமட்டல் உணர்வும் உண்டாகி நீ சிரமப்பட்டாய். அப்போதும், என் நினைவு உனக்கு நீங்கவில்லை. இம்மாதிரி உள்நிலை யாரிடம் உண்டாக்கப்பட்டிருக்கிறதோ அந்த மனிதர் முடிவில் தனது ஈடேற்றத்தை எதிர்பார்க்க வேண்டும்.''

## R2 – பற்றி வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

''R2 - தன் மனத்தின் சார்பு நிலையை N1– இன் பக்கம் திருப்பிய போது, N1 தனது விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு இப்போது ஒரு சரியான கருவி தனக்குக் கிடைத்துவிட்டது என்று மிகவும் அகமகிழ்ந்தார். எனவே R2- க்கு அவர் செய்த முதல் விஷயம் அவருடைய இதயத்தின் தீவிரப்பற்றை என்னிடமிருந்து (லாலாஜியிடமிருந்து) தன் பக்கம் (N1) திரும்பச் செய்ததேயாகும். N1- இனால் R2- க்குச் செய்யப்பட்ட பெருந் தீமை இதுவேயாகும். N1 இந்தத் தந்திரத்தைக் கையாண்டபிறகு, R2- இன் தீவிரப் பற்றை N1- இன் மீது அதிகரிக்கச் செய்வதன் மூலமாக தனது பலன்களை அது உருவாக்கத் துவங்கியது. பிறகு பிரிசெப்டராகப் பணிசெய்வதற்கான அனுமதி என்ற கவர்ச்சிகரமான தூண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அது நான் அளித்திருந்த அனுமதியை எதிர்மறையாக பாதித்தது. தேவைப்படும் சமயத்தில் பயிற்சியளிப்பதற்கென்று என்னால் அளிக்கப்பட்ட அந்த அனுமதியை ஒரு கற்பனையான வழியில், அபிவிருத்தி செய்து அதை

ஒவ்வொரு நிலையிலும் R2 - க்குக் கொடுத்துவிட N1 எண்ணியிருந்தார். இதை R2, N1- க்கு ஆதரவாக இருக்கும் ஒரு குழுவை உருவாக்கி இதன் மூலமாக M1- க்கு பலத்த அடி கொடுத்து அவரைத் தனிமைப்படுத்துவதற்காகவே செய்தார். N1- இன் அரசியல் சூழ்ச்சி பற்றி நான் கொடுத்துள்ள வர்ணனை இதுவே. N1, R2- ஐ கடினத்தன்மையால் நிரப்பினார். அது அவரிடத்தில் (R2) கூரிய தன்மையைத் தூண்டுவதற்குப் போதுமான திடப்பொருள் துகள்களைக் கொண்டிருந்தது. R2 - க்குள் திணிக்கப்பட்ட இந்த திடத்தன்மை கொண்ட துகள்கள் முக்கியமாக உலகியல் விளைவுகளை உள்ளடக்கியவையாக இருந்ததால், இவை மெல்லிய தூய்மையின் துகள்களை அழுத்தி நசுக்கிவிட்டன. இந்த உள்நிலையிலேயே போதுமான அளவுக்கு அவர் தங்கிவிட்டதன் காரணமாக, R2 - ன் மனப்பான்மை வலிமை பெற்றுவிட்டது. அவருடைய சிந்தனையும் அதனுடன் நெருங்கிவிட்டது. R2 - இன் இந்தக் கடினத்தன்மையின் நிலை ஆற்றல் நிறைந்ததாக இருந்ததால், பிரியமான ராம் சந்த்தரால் அதிலிருந்து நான் பறித்துக்கொள்ளப்பட்டேன். எனக்குத் தீமை உண்டாக்குவதற்காக வடிவமைக்கப்பட்ட அம்சங்களை நானே பறித்தெறிந்துவிட்டேன். இந்த ஏமாற்று வேலையின் பிடியிலேயே இருப்பதற்கு R2 விரும்பியிருந்தால், பிரியமான ராம் சந்த்தரின் உயிருக்கு ஒரு முடிவை உண்டாக்கி, என் ஆன்மீக வம்சத்தின் விளக்கை அணைத்திருந்தால் அதற்கு முயற்சி செய்தது அவருடைய மிகப்பெரிய தவறு மற்றும் பெரிய முட்டாள்தனமும் கூட ஆகும். என் சார்பில் N1 - க்கு உறுதியாகக் கண்டனம் செய்யும்படி மீண்டும் ஒருமுறை R2 - விடம் சொல்லவும்.''

12-9-1944

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''கடந்த மூன்று நாட்களில் பிரியமான ராம் சந்த்தரின் விஷயத்தில், மூத்த மகான்கள் நாற்பது நாட்களில் செய்து முடித்துக் கொண்டிருந்த ஒரு அரிய காரியத்தை செய்து முடித்திருக்கிறேன். பெரும்பாலும் இந்தப் பயிற்சிக்கு உட்படுகிறவர்கள் முழுமையான உபவாசம் (பட்டினி) இருக்க வேண்டுமென்ற விதிக்கு உட்படுத்தப்பட்டார்கள். இந்த மூன்று நாட்களில், சாத்தியமாகக் கூடிய அனைத்து சக்திகளும் அவருக்குள் நிரப்பப்பட்டுள்ளன. என்னுடைய நோக்கம் என்னவென்பதை உடனே உணர்ந்து கொண்டுவிட்ட ராம் சந்த்தரின் திறனுக்கு வாழ்த்துக்கள். அதை வெளிப்படுத்தக் கூடாது என்று நான் தடை செய்திருக்கிறேன். இதன் காரணமாக அவர் (ராம் சந்த்தர்) அதைப் பற்றி எதுவும் சொல்லாமல் தவிர்த்தார். இப்போது முதல் பிரியமான ராம் சந்த்தரிடமிருந்து வெளிப்படப்போகின்ற அம்மாதிரி காரியங்கள் மகாபரிஷத் (கவுஸ் - உல் - ஆஜம் / Ghous – ul - Azaam) என்ற பதவிக்குப் பொருத்தமுடையதாக இருக்கும் என்ற செய்தியை M1- க்குத் தெரிவிக்கவும். அவரை அத்திசையை நோக்கிச் சார்ந்து இருக்கவேண்டாம் என்று நான் எச்சரிக்கை செய்திருக்கிறேன். அவருடைய அன்னமய கோசம் (ஸ்தூல உடம்பில் உள்ள அருவமாகிய கவசம்) உடைத்துச் சிதற வைக்கப்பட்டு விட்டது. யாரிடமாவது இந்த நிலையை உருவாக்க வேண்டுமானால் அந்த நோக்கத்திற்காகத் தேவைப்படும் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில், உப்பு சேர்த்துக் கொள்வதைத் தவிர்க்க வேண்டும். இதன் காரணமாகவே ராம் சந்த்தர் இந்தக் கால கட்டத்தில் உப்பு சேர்த்துக்கொள்வதை நான் தடை செய்தேன். அவருடைய உடல் நலத்தைக் கருதி கடைசி நாளில் மட்டும் சோடா தண்ணீர் குடிப்பதற்கு அனுமதித்தேன். எனது பிரியமான ராம் சந்த்தரை எல்லாவிதங்களிலும் ஒரு உண்மையான வழியில் நான்

முழுமை பெறச் செய்திருக்கும் இந்த நாள் மிகப்பெரிய மகிழ்ச்சிக்குரிய நாளாகும். எந்த ஒரு மூத்த மகனாக இருந்தாலும் சரி, அவர் தீமை செய்யக்கூடிய அற்புதச் செயல்களை நிகழ்த்த ஆரம்பித்தால் அவரது ஆன்மீக சக்திகளைப் பறித்துக் கொள்ளும் அதிகாரமும் அவருக்கு இருக்கிறது. யாராக இருந்தாலும், எந்த விதத்தில் வேண்டுமானாலும் ராம் சந்ததரை பரிசோதனை செய்யலாம், கவனித்து அறியலாம் என்று நீ (M1) இப்போது முழு மனதோடு உறுதியாக அறிவிக்கலாம். ராம் சந்த்தரை இன்று நான் முழுமை பெறச் செய்திருக்கிறேன் என்று மறுபடியும் எழுதிக்கொள். ராம் சந்த்தர் உன்னுடன் (M1) நீண்டகாலமாக நட்புறவுடன் இருந்திருக்கிறார் என்பதைச் சொல்வதிலும் கூடத் தவறு இல்லை. ராம் சந்த்தரும் M1 - உடன் நட்புறவில் இருந்ததில் நன்மையடைந்திருக்கிறார் என்ற இந்த உண்மையிலிருந்து கிடைத்திருக்கும் நன்மையை M1 கவனிக்க வேண்டும். இந்தக் குறிப்பை நான் சொல்லியிருப்பது M1 - ஐயும் கூட அனைவரும் நினைவில் வைத்திருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவே ஆகும்.''

**நான் வணக்கத்துடன் கூறியது:**

''9.9.1944ஆம் தேதி, M1- க்கும் ராம் சந்த்தருக்கும் இடையே உள்ள உறவு, உங்களுக்கும் (வணக்கத்திற்குரிய மாஸ்டர்) A1 - க்கும் இடையே இருந்தது போல இருக்கவேண்டும் என்று நீங்கள் விரும்புவதாக, வணக்கத்திற்குரிய மாஸ்டர் சொன்னீர்கள்.''

**பதில்:**

''அது இருவருமே ஒருவரை மற்றவர் பெரியவராகக் கருதி நடந்து கொண்டு, ஒருவருக்கொருவர் மரியாதையுடன் இருக்க வேண்டும் என்ற கருத்தில் சொல்லப்பட்டது.''

## L1 - சம்பந்தமான அறிவுரைக் குறிப்பு:

''L1 (ஒரு நோயாளி) - க்கு நலமளிப்பதற்கான வழிமுறை என்னவெனில், L1 - ஐ அமைதித் தன்மையில் போர்த்தி மூடவேண்டும். இதை M1 - செய்ய வேண்டும். பிறகு L1 - இன் நரம்பு மண்டலத்தை மெதுவாக ஒரு சாந்த நிலைக்குக் கொண்டு வரவேண்டும். ஒருநோயாளிக்கு நன்மை செய்வதற்குப் பிரார்த்தனை செய்வதாக இருந்தால் அங்கே செம்பு, பித்தளை கலந்து செய்யப்பட்ட ஒரு வெண்கலப் பாத்திரத்தில் தண்ணீர் நிரப்பி, அந்த நோயாளி அத்தண்ணீரில் தனது முகத்தின் பிரதிபலிப்பை அதில் காணச் செய்து, அதன் பிறகு அவரது உடல் நலத்துக்காகப் பிரார்த்தனை செய்ய வேண்டும். எனினும், தன் வாழ்க்கையின் இறுதிநிலையில் இருக்கும் ஒருநோயாளிக்கு, அவர் குணமடைய வேண்டும் என்ற பிரார்த்தனை பயன்தராது. அவருக்கு அவருடைய ஆயுட்காலத்தில் அவர் செய்த தீமைகளுக்கு மன்னிப்பு வேண்டி இறைஞ்சி பிரார்த்தனை செய்ய வேண்டும். காச நோய் உடைய நோயாளிக்கு இந்த முறையைக் கையாள்வது கண்டிப்பாகத் தடை செய்யப்படுகிறது. எனினும், பிரார்த்தனை செய்ய வேண்டியிருக்குமானால் அப்போது பிரார்த்தனையிலிருந்து நமது சொந்த எண்ணத்தை நீக்கிய பிறகு செய்யலாம். T.B. தொற்று நோய் உடையவர்களுக்கு கடமை என்ற விதத்தில் தனியாகப் பிரார்த்தனை செய்ய வேண்டும். அப்போது தண்ணீர் நிரம்பிய பாத்திரத்தை அங்கே வைத்திருக்கத் தேவையில்லை.''

**முக்தியடைந்த ஆன்மாக்களுக்கு இயற்கையின் ரகசியங்கள் அனைத்தும் தெரிந்திருக்குமா? என்பதைப் பற்றி பேசிக்கொண்டிருந்தோம். அப்போது வணக்கத்திற்குரிய மாஸ்டர் குறிப்பிட்டுச் சொன்னது:**

''தலைப்பாகை அணிவிக்கும் கௌரவம் ஒருவருடைய ஞானத்தின் சிறப்புக்கு ஏற்ப அளிக்கப்படுகிறது. (பாரசீகப் பொன்மொழி). யார் சுதந்திரமாகப் போகிறாரோ (முக்தி பெற்றவர் யாரோ) அவருக்கு இயற்கையின் ரகசியங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன; ஆனால், அவர்களும் அறியாத இன்னும் ஏதோ ஒன்று எஞ்சியிருக்கிறது!''

**13-9-1944**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''இறை தூதர் முகம்மது நபிக்குப் பிறகு ஆயிரம் ஆண்டுகள் கழித்துத்தோன்றிய மகான் (இவர் இஸ்லாமிய மார்க்கத்தில் ஆன்மீக வழிமுறையைக் கண்டறிந்து பிரபலப்படுத்தியவர்) M1 - இன் மீது தன் அருளைப் பொழிந்துள்ளார் என்ற மகிழ்ச்சியான செய்தியை அவருக்குத் தெரிவிக்கவும். நேற்று மாலை வணக்கத்திற்குரிய என் மாஸ்டர் இங்கு வந்திருந்தார். வணக்கத்திற்குரிய ஆதிகுருநாதரும் கூட (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) சில நிமிடங்கள் இங்கு வந்து இருந்தார். மகாபரிஷத் என்ற பதவியை உனக்கு (ராம் சந்த்தருக்கு) அளித்ததை உறுதிப்படுத்துவதற்காக அவர்கள் வந்தார்கள். ஆன்மீக வழிமுறையைக் கண்டறிந்த இஸ்லாமிய மகான் வழியின் முன்னோர்களாகிய குருநாதர்கள் அனைவரும் என் வேலையை உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். இது இறை தூதருக்கு தெரிவிக்கப்பட்டது. அவரும் தனது ஒப்புதலைக் கொடுத்திருக்கிறார். அந்த இஸ்லாமிய ஆன்மீக மகான் பிரியமான ராம் சந்த்தருக்கு தனது தொடர்பை அளித்திருக்கிறார். M1 - க்கும் அவருடைய அருள்

கிடைக்காமல் போய்விடவில்லை. தன் செல்வம் தன் கையை விட்டுப் போய்விட்டது என்பதை N1 - இப்போது நிச்சயமாக அறிந்து கொண்டுவிட்டார். அவருக்கும் சில அறிவுறுத்தல்களைக் கொடுக்கும் நோக்கத்துடன் நான் R2 - ஐ அழைத்திருக்கிறேன். அந்த அறிவுரைகள் பின்வருமாறு:

''ஷாஜஹான்பூரைச் சேர்ந்த மக்களிடத்தில் M1 - க்கு எப்போதுமே மிகவும் நல்ல எண்ணங்களும், நல்ல நோக்கங்களும் உண்டு. இந்த மக்களின் ஆன்மீக முன்னேற்றத்துக்காக அவர் எப்போதுமே முயற்சி செய்துகொண்டிருந்தார். ஆனால், இந்த மக்கள் அதற்காக அவரை ஒருபோதும் பாராட்டியதும், புகழ்ந்ததும் இல்லை. M1 - யார் யாருடைய ஆன்மீக வளர்ச்சிக்காகப் பிரார்த்தனை செய்துகொண்டே இருந்தாரோ அவர்களில் R2 - ம் ஒருவராக இருந்தார். அவருடைய முயற்சிகள் மற்றும் பிரார்த்தனைகளின் விளைவாகத்தான் நல்ல பலன்களை உடைய இன்றைய தினம் எனக்குக் கிடைத்தது. அவருடைய துணிவையும், நல்லெண்ணங்களையும் நான் பாராட்டுகிறேன். R2 - அவரை (M1 - ஐ) நாடிச் சார்ந்திருக்க வேண்டும் என்று நான் உத்தரவிடுகிறேன். பயிற்சியளிப்பதற்காக அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த அனுமதி, இடையில் பறிக்கப்பட்டிருந்த அனுமதி, நேற்றைக்கு முந்திய தினம் இரவு 9 மணிக்கு திருப்பித் தரப்பட்டுள்ளது. அது சம்பந்தமாக சில விஷயங்களை அவர் கவனத்தில் கொள்ள வேண்டும். M1 இல்லாத சமயத்தில் R2 சத்சங்கம் நடத்த வேண்டும். (தனி மனிதர்களுக்கோ அல்லது குழு தியானத்திற்கோ) சிட்டிங் கொடுப்பதும் செய்யவேண்டும். இதைப் பற்றிய M1- இன் அறிவுரைகளை அவர் பின்பற்றவேண்டும். தன்னிடம் இருக்கும் ஒரு குறைபாட்டை நீக்கிக் கொள்ள அவர் (R2) முயற்சிக்க வேண்டும். இதில் M1 - இன் உதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவர் எதை எடுத்துக் கொண்டாலும், அதை மிக விரைவில்

பற்றிக்கொள்கிற அவரது பழக்கம் பற்றி அவர் வளர்த்துக் கொண்டுள்ள சுய முக்கியத்துவம்தான் அந்தக் குறைபாடு. அவரிடம் ஆன்மீகப் பயிற்சி பெறுகின்றவர்களுக்கு இது கெடுதலானது. இதைப் பற்றி R2 சிந்திக்க வேண்டும். M1 அவருக்கு என்ன வேலை கொடுத்தாலும் அதைத் தன் கடமையாகக் கருதிச் செய்யவேண்டும்.''

**ஹிந்து பஞ்சாங்கத்தின்படி புரட்டாசி மாதத்தில் (ஆங்கிலமுறைப்படி செப்டம்பர் அல்லது அக்டோபர்) வரும் மகாளய அமாவாசையன்று, நம் குடும்பத்தின் இறந்துபோன மூதாதையர்களுக்கு நீர்க்கடன் (தர்ப்பணம்) செய்தல் என்ற சடங்கு சம்பந்தமாக (இது அவர்களுக்கு மரியாதையுடன் செய்கின்ற ஒரு கடமை). வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறிய கருத்து:**

''பிரிந்துபோன ஆன்மாவுக்கு அமைதியளிப்பதற்கு மிகச்சிறந்த வழி முன்பு நோயாளிகளுக்காகக் கூறப்பட்டதுபோல அதே மாதிரி வழிதான். அதை தன் முன்னால் ஒரு பாத்திரத்திற்குப் பதிலாக ஒரு டம்ளரில் பன்னீரை நிரப்பி வைத்துக்கொண்டு செய்வது சிறந்தது. அது தன் விளைவை (பலனை) மேல்நோக்கிச் செலுத்துவதற்கு மேலும் பொருத்தமானது. J1 - க்காக M1 - இந்த முறையைப் பின்பற்ற வேண்டிய தேவை இல்லை. J1 - க்காக அவர் என்ன செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளதோ அதையே அவர் (M1) தொடர்ந்து செய்யட்டும். இந்தச் சமயத்தில் J1 - ஐ நான் அமைதியடையச் செய்திருக்கிறேன்.''

**14-9-1944**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''நேற்றும், இன்று இதுவரையிலும் அனைவருடைய சக்திக்கும் அப்பாற்பட்டதாகிய காரியங்களைச் செய்திருக்கிறேன். R2 இப்போது நல்லபடியாக வந்திருக்கிறார். அவருக்கு பிராணாஹூதி அளிக்கவேண்டிய தேவை இருக்கிறது. G2 - உடன் ஆன்மீகத் தொடர்பு வைத்துக்கொள்ளத் தேவையில்லை என்று B7 - க்கு கடிதம் எழுத வேண்டும். இதை நான் M1 - இடம் விட்டுவிடுகிறேன். அவர் என்ன எழுத விரும்புகிறாரோ அது எதுவாயினும் எழுதலாம். G2 - தனது ஆன்மீக உள்நிலைத்தன்மையை இழந்திருக்கிறார். நீண்டகாலமாகவே அவர்மீது எனக்கு சலிப்பு ஏற்பட்டுவிட்டது.''

''சங்கல்பத்தின் செயல்கள், அதை யார் செய்கிறாரோ அவர் அது பற்றிய அறியாத நிலையில் செய்யும்போது, மிக உயர்ந்த நிலையில் இருப்பவை என்று சொல்லலாம். அப்போது அந்த வேலை செய்யப்பட்டு விடுகிறது. விசேஷமான சந்தர்ப்பங்களைத் தவிர, வேறு சமயங்களில், ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் அவற்றைச் செய்ய நான் அனுமதிப்பதில்லை. விசேஷமான கடும் எதிர் நடவடிக்கைக்கான ஒரு சந்தர்ப்பம் நேர்ந்தால் அப்போது உனக்கு என் அனுமதி உண்டு. இன்று காலை உங்கள் அனைவருடைய உரையாடலையும் கேட்டுக் கொண்டிருந்தேன். உங்களுக்குச் சொல்ல வேண்டியது எதுவுமில்லை. அப்படியிருந்தால் அது எனக்கும் தெரியாததாகவே இருக்கலாம். இதன் காரணம் வெளிப்படையானது. அதை மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டியதில்லை. நீ விரும்பினால், எந்த ஒரு சமயத்திலும் உன்னை நான் தனியே விட்டுச் செல்ல மாட்டேன் என்பதை எழுதி வைத்துக் கொள்ளலாம். உன் மூளைக்கு ஓய்வு கொடுப்பதற்காக, சில சமயங்களில் நான் லேசாக விலகி நிற்கிறேன். இப்படி நான் கொஞ்சம் விலகி

நிற்பதன் காரணம், நீ என்னையே சார்ந்து நிற்கும் பழக்கத்தை வளர்த்துக்கொண்டு, உன் சொந்த எண்ணத்தின் ஆற்றலை ஈடுபடுத்துவதை மொத்தமாகக் கைவிட்டு விடாதபடி தடுக்க வேண்டும் என்பதுதான். எப்போதெல்லாம் தவறு ஏற்படுகிறதோ, அப்போது உடனே அதை நான் சுட்டிக்காட்டுவேன். இதுவும் கூட நான் கண்டுபிடித்த ஒரு புதிய முறையாகும்.''

''ஏதாவது ஒரு சமயத்தில் M1- க்கு ஒரு குறிப்பிட்ட சக்தியை நான் அளிப்பேன். அவருடைய குடும்பத்தில் நடந்து கொண்டிருப்பவை அனைத்தும் என் பார்வையில் உள்ளன, இவையெல்லாம் இப்போது குறிப்பிடப்படுகின்றன. இதில் கொஞ்சம் என் வழியில் செல்ல விடுங்கள்; இவையனைத்துக்கும் தகுந்தமாதிரி ஒரு நிர்வாகத்தை நான் பார்த்துக் கொள்வேன். என் ஆயுட்காலத்தில் எத்தனையோ கஷ்டங்களை நான் அனுபவித்திருக்கிறேன். இவற்றில் சில கஷ்டங்கள் அவருக்கும் இருப்பதாக M1- எடுத்துக்கொள்ளலாம். பிரச்னைகள் எப்போதும் அப்படியே இருப்பதில்லை. எல்லாவற்றுக்கும் அதற்கென ஒரு காலம் உண்டு. M1- இவற்றைக் கடந்து சென்ற பிறகு திரும்பிவர வேண்டியதில்லை. கஷ்டங்களின் மூலமாக என் இதயம் நன்கு பழுத்தது. (கனிந்தது) உலக வாழ்க்கை என்ற இந்தக் கூட்டிலிருந்து பறந்து சென்றுவிடவேண்டும் என்ற தீவிர ஆசை எனக்குள் அடிக்கடி தோன்றியது. மேலும் அப்படிப் பறந்து விடுவது என் கட்டுப்பாட்டிலும் இருந்தது. ஆயினும் என் மாஸ்டரின் கட்டளைகளுக்கு எதிராக நான் ஏதும் செய்ய இயலாதவனாக இருந்தேன். எனது பிரியமான ராம் சந்த்தர் விஷயத்திலும், இந்த முடிச்சை நான் தளர்த்தவில்லை. இதன் காரணம் மிகவும் வெளிப்படையானது. தனது பிரதிநிதியாக – பதவிக்கு அடுத்த வாரிசாக வருகிறவருக்கும் அதுபற்றி ராம் சந்த்தருக்குத் தெரியும்வரை இந்த முடிச்சைத் தளர்த்துவதற்கு, அவருக்கும் தடை இருக்கிறது. வணக்கத்திற்குரிய என் மாஸ்டர் என் மீது முழு நம்பிக்கை

கொண்டிருந்தார். அதனால், இதை என் கட்டுப்பாட்டில் விட்டிருந்தார். என் ஆயுட்காலத்தில் என்னை நான் பெருமளவுக்கு என்னை மறைத்துக்கொண்டு, மிகவும் பணிவோடு இருந்தேன். யாருக்கும் எந்தத் தீமையும் செய்யும் நாட்டமில்லாதவனாக இருந்தேன். 'மக்கள் தங்கள் காலின் கீழ் நசுக்கிச் செல்லும் எறும்பாக இருப்பேன் நான். அது கொட்டினால் மக்கள் வலியினால் துடித்து அழச்செய்கின்ற குளவியல்ல' (பாரசீக மொழி ஈரடிச்செய்யுள்) என்ற இந்தக் கோட்பாட்டினை என் ஆயுள் முழுவதும் பின்பற்றினேன். இன்னமும் அதுபற்றிய எண்ணத்தைத் தக்க வைத்திருக்கிறேன். ஆனால், கடுமையாக இருக்கும்படி அல்லது தண்டிக்கும்படி மாஸ்டர் சொல்லும் கட்டளைக்கு எதிராக எதுவும் செய்ய இயலாதவனாக இருந்தேன். M1 விரும்பினால் இந்த ஈரடிச் செய்யுளில் இருப்பது போல நடந்துகொள்ளலாம். உன் விஷயத்தில் தற்காலிகமாக நான் அனுமதியை நிறுத்தி வைத்துக்கொள்கிறேன். ஒருபோதும் அதற்கு ஒப்பாமல் இருப்பதும் சாத்தியமே. உனக்கு மிகவும் புதுமையான ஒரு வழிமுறையில் பயிற்சியளித்திருக்கிறேன். தெளிவாகப் புரிந்து கொள்வதற்காக ஒவ்வொரு விஷயத்தையும் உன் பார்வைக்குக் கொடுத்துக் கொண்டே உன்னை மேலும் மேலும் உயர்வடையச் செய்தேன். மற்றவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கும் இதே முறையைப் பின்பற்ற நான் விரும்பினேன். ஆனால் உன்னைத் தவிர இதற்குத் தகுதியுடையவராக வேறு யாரையும் நான் காணமுடியவில்லை. இந்தப் புதிய வழியிலான பயிற்சியின் பயனாக, நீ அளிக்கும் பயிற்சியும் கூட ஒரு புதிய விதமாக இருக்கிறது. உன்னிடம் பயிற்சி பெறுகின்றவர் யாராயினும், தன்னிடம் மெய்ஞ்ஞான வெளிப்பாட்டிற்காக (கஷாஃப் / Kashaf) மிக மேலான திறமையை வளர்த்துக்கொள்வார்கள். இவ்விதமாக இந்தத் திறமை மிகவும் பரவலாக பரிணமிக்கும். உன்னிடமுள்ள அடிப்படையான திறமையும், நான் உனக்கு அளித்திருப்பதும் மற்றவர்களுக்கும் போகும். கடவுள்

விரும்பினால் இதே விதமான பயிற்சியை இன்னும் பலருக்கும் இப்படியே மேலும் மேலும் அவர்கள் கொடுப்பார்கள்.''

(ஜீரண மண்டலத்தின் குறைபாட்டுக்கும், வாயுத்தொல்லைக்கும் ஒரு மருத்துவக் குறிப்பு சொல்லப்பட்டது.)

**அதையடுத்து வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''உன் நாடித் துடிப்பைக் கவனித்தப் பிறகு இந்த மருத்துவக் 'குறிப்பு உனக்குக் கூறப்பட்டுள்ளது. எனவே, அது உனக்காக மட்டுமே. R2 - ம் இந்த மாதிரி தொல்லையால் அவதிப்படுகிறார். அவரும் இதை முயற்சி செய்யலாம்.''

**15-9-1944**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''இப்போது M1- இன் பதவிநிலை உயர்த்தப்பட்டுள்ளது. இப்போது அவரது நிலை துருவாதிபதி (குதுப் - உல் - அக்தப் / Qutub – Ul - Aqtaab) என்பதாகும். ஒரு சாதகரின் பதவி நிலை எவ்வளவு உயர்வாக இருக்கிறதோ அதற்கேற்றபடி அவருக்குப் பிராணாஹுதி அளிக்கும் நேரம் குறைவாக இருக்க வேண்டும் என்று ராம் சந்த்தருக்கு எச்சரிக்கை செய்கிறேன். M1- இன் விஷயத்தில் அவரது பதவிநிலையை உயர்த்த நான் எண்ணும் போதெல்லாம், அவருக்கு நீ ஒரு நிமிடம் சிட்டிங் கொடுக்க வேண்டும். அவரைச் சீர்திருத்தும், எண்ணங்களை சுத்திகரிக்கும் நோக்கத்திற்காக, சிட்டிங் நேரத்தை அதிகரிக்கும் அதிகாரம் ராம் சந்த்தருக்கு இருக்கிறது. இதன் காரணம் என்னவெனில், பிராணாஹுதியைப் பெறுகின்ற அம்மனிதர், அதற்குமேல் அதிகம் தாங்கும் சக்தி உடையவராக இருக்கமாட்டார். வியப்பை உண்டாக்குவதற்கு இதில் எதுவுமில்லை. இதற்கு முன்பு ராம் சந்த்தரைப் பற்றி நான் ஏற்கெனவே நிறையச் சொல்லியிருக்கிறேன். அவர் எந்த

எண்ணத்தை நிலைநிறுத்தினாலும், அது காலப் போக்கில் (அதற்கு உரிய காலத்தில்) நிச்சயமாக நடந்தேறும். M1- க்கும் கூட இந்த முன்னெச்சரிக்கையை அனுசரிப்பது எப்போதும் அவசியமேயாகும். அவரும் கூட இதன்படியே நடக்கவேண்டும். பிரியமான ராம் சந்த்தரின் சுமைகளைப் பங்கிட்டுக்கொள்வதற்கு இன்னுமொரு மிகவும் மதிப்புடைய இன்னும் ஒருவரை (M1- ஐ) நான் தயார்படுத்தியிருக்கிறேன் என்று R2 - இடம் சொல்லவும். R2 - உம் கூட M1 - ஐ நாடிச் சார்ந்திருக்க வேண்டும். துருவாதிபதி என்ற நிலைக்கு M1- ஐக் கொண்டு செல்வதாக M1- க்கு நான் வாக்குறுதி அளித்திருந்தேன். இப்போது அதை நிறைவேற்றியிருக்கிறேன். இந்த நிலை மிகப்பெரிய ஒரு சமுத்திரம் போன்றது. அவர் (M1) இதில் மேலும் மேலும் சென்று கொண்டே இருக்க வேண்டும். இந்தச் சமயத்தில் இன்னும் ஒரு மனிதரும் கூட உன்னை நாடி வருவதற்கு இதயபூர்வமாக விரும்பவேண்டும் என்று எனக்கு ஆசை இருந்தது. ஆயினும் அது நடைபெறவில்லை. ராம் சந்த்தரின் ஆயுள் முடியும் வரையில் நான் இங்கே வருவதும் போவதும் நிற்காமல் தொடரும். அவரை நாடி வருகிறவர்கள் நேரடியாக என்னிடமிருந்து நன்மையைப் பெறுவார்கள். என்னை அழைக்கும் திறமை வேறு யாருக்கும் இல்லை. J1 - உம் கூட இந்த இடத்தில் தொடர்ந்து பயணம் செய்து கொண்டிருப்பார். தற்காலிகமாக அவர் இங்கு வருவது தடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தத் தடை எப்போதும் இப்படியே இருக்காது.''

''R2 - இடம் அவ்வப்போது தன் தாயாரைக் கவனிக்கும்படி சொல்லவும். ஆனால் அவளுடைய பதிவுகள் (சம்ஸ்காரங்கள்) அவரைப் பாதிக்காதபடி கவனமாக இருக்க வேண்டும். கவனக் குறைவினால் அப்படி ஒரு தவறு நேர்ந்து, அவளுடைய பதிவுகள் அவருக்குள் புகுந்துவிட்டால், அதன் விளைவை சுத்திகரிப்பில் நீக்கவேண்டும்.

அம்மாதிரி ஒரு விளைவை சுத்திகரிப்பில் நீக்கும் திறமை உடைய இருவர் (M1- மற்றும் ராம் சந்த்தர்) இங்கு இருக்கிறார்கள். இதைப் பற்றி அறிவை இவ்விதமாகப் பெற முடியும். அதாவது, ஒருவருக்கு பிராணாஹூதி அளித்த பிறகு அசுத்தமான தன்மை உள்ளே உணரப்பட்டால் அல்லது ஒருவிதமான அருவெறுப்பு உணர்வு மனதில் உண்டாகி, மகிழ்ச்சியின்மையை ஏற்படுத்தினால் (வழக்கமாக பிராணாஹூதிக்குப் பிறகு மகிழ்ச்சிதான் உண்டாகும்) அப்போது அது யாருக்கு பிராணாஹூதி அளிக்கப்பட்டதோ அம்மனிதருடைய சம்ஸ்காரங்களின் அல்லது பதிவுகளின் விளைவுதான் என்பதைப் புரிந்து கொள்ளலாம். R2 - இன் உள்நிலைத் தன்மை அவருடைய மாமா (அல்லது சித்தப்பா) R1 - இன் காரணமாக மிகவும் தாழ்மை நிலையடைந்துவிட்டது. அதற்கு மிகவும் பழக்கமாகிவிட்டதால் R2 - அந்தத் தாழ்வு நிலையை அறிய முடியவில்லை. இப்போது அது நீக்கப்பட்டிருப்பதால் மேலான தன்மையின் சுவையைப் பெற ஆரம்பித்திருக்கிறார். உண்மையான மூலத்திலிருந்து நான் வந்த போது உங்களுக்கெல்லாம் தன் மரியாதையைத் தெரிவிக்குமாறு J1 என்னிடம் கேட்டுக்கொண்டார். M1 - ன் கூடவே இருப்பதன் காரணமாக ராம் சந்த்தரின் ஆன்மீக நிலையை M1 அறிவார் என்பதை R2 - இடம் சொல்லவும். எனது பிரியமான ராம் சந்த்தரின் ஆன்மீக நிலையை R2 - இன் திருப்திக்காக இங்கே சொல்கிறேன்.''

''ராம் சந்த்தரின் ஒவ்வொரு நரம்பும், நரம்பிழையும் (நரம்பு இழையும்) என்னிடம் ஐக்கியமாகி உள்ளன. நானும் கூட அம்மாதிரி உயர்வு பெற்ற நிலையை அவருக்கு அளித்திருக்கிறேன். அதைப் புரிந்து கொள்வதற்குத் தேவையான சிந்தனைத் திறன் மற்றும் புரிந்து கொள்ளும் திறன் மக்களிடம் இல்லை. அவருக்கு சமமாக இருப்பதாகச் சொல்லிக் கொள்ளத்தகுந்தவர் வேறு யாரும் இப்போது இல்லை. அவர் தனது

பணியைச் செய்யும் மண்டலம் இந்த உலகிற்குள் அடங்கியது அல்ல. சரியாகச் சொன்னால் அவருடைய ஆட்சி நிர்வாகம் முக்தி பெற்ற ஆன்மாக்களின் ஆட்சிக்கு உட்பட்ட உலகம் மற்றும் இன்னும் பல மண்டலங்களிலும் விளங்குகிறது. சாத்தியமான 'அதிகபட்ச முழு அளவுக்கு அவருக்குள் நிரப்புவதில் நான் எதையும் விட்டு வைக்கவில்லை. இப்போது, ஆன்மீக நிலைகளைப் பற்றிய விஷயமாக 'கவுஸ் – உல் – ஆஜம் / Ghouse - Ul - Aazam' என்ற வார்த்தையை மக்கள் புத்தகங்களில் படித்திருக்கலாம் அல்லது எங்கேயாவது கேள்விப்பட்டிருக்கலாம். ராம் சந்த்தர் அந்த நிலையைக் கடந்திருக்கிறார். இறைதூதர் முகம்மது நபிக்குப் பின் ஆயிரம் ஆண்டுகள் சென்ற பிறகு தோன்றிய புது கண்டுபிடிப்பாளராகிய மகான் ஒருவரைத் தவிர, மாபெரும் உயர் மகான்கள் வேறு யாரும் அந்த நிலை வரையில் மேலேறி வர முடியவில்லையென்றால், அதைக் கடப்பதைப் பற்றி என்ன சொல்வது? ஆன்மீகத்தில் இதுவே மிக உயர்ந்த மற்றும் கடைசியான நிலையாகும். அதற்கு அப்பால் என் கண்டுபிடிப்பு இருக்கிறது. அந்தக் கண்டுபிடிப்புக்குத் தகுந்தவாறு நான் அவரை அங்கே (அதாவது ஆன்மீகத்தின் கடைக்கோடி எல்லைக்கும் அப்பால்) கொண்டு சென்றிருக்கிறேன். அவருடைய வெளித் தோற்றமாகிய பௌதீக உடம்பு மட்டுமே இந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. 'கவுஸ் – உல் – ஆஜம் / Ghouse – Ul - Aazam' எனப்படும் இந்த நிலைதான் இதய மண்டலத்தின் கடைக்கோடிப் புள்ளியாகும்.''

## R2 - வணக்கத்துடன் கூறியது:

'' 'டஜ்கிரா – இ – கவுஸியா / Tazkira – e - Ghousia' என்ற ஆய்வுக் கட்டுரையில் ஒரு மூத்த மகான் தன் வாழ்வின் இறுதிக் காலத்தில் ஆன்மீகத்தை கேலிபேசி குறை கூறியிருக்கிறார். இதன் பொருளைப் புரிந்துகொள்ள முடியவில்லை.''

**மாஸ்டரின் பதில்:**

''அந்த ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள அந்த மனிதரின் உள்நிலை அகங்காரத்தினால், கடினத்தன்மையடைந்து விட்டது. அவர் தனது தாழ்வான திறமையின் காரணமாக, 'நானே பரம்பொருள் (அஹம் பிரம்மாஸ்மி)' என்று அலறத் துவங்கினார். அந்தக் கடினத் தன்மையின் தீவிரம் குறையத் துவங்கியபோது, நெருங்கி வரும் மரணத்தின் காரணமாக அனுபவித்த கஷ்டங்களினால், அந்த ஒருவிதமான பிரமை கொண்ட நிலையில், தன் சிந்தனைக்கு வந்ததையெல்லாம் சொன்னார். நமது பயிற்சி முறையில் 'அஹம் பிரம்மாஸ்மி' (நானே கடவுள் அல்லது பரமாத்மா) என்ற இந்த உள்நிலை நமது ஆன்மீக முன்னேற்றத்தின் ஒவ்வொரு படியிலும் வருகிறது. ஆனால், தேர்ந்த வழிகாட்டி (குரு) அதை வற்புறுத்தவில்லை. எந்த ஒரு மேலான உயர்நிலை அதன் உச்சத்தை அடைந்தாலும் (அஹம் பிரம்மாஸ்மி என்ற) இதே ஒலி அங்கிருந்து வெளிப்படத் துவங்குகிறது; யாராவது அதை கவனிக்கிறார்களா? அல்லது உணர்கிறார்களா? என்பது வேறு விஷயம். எனினும் கடைசியில் இந்த உள்நிலைத் தன்மை அதன் முழுமையான கனிந்த அல்லது பக்குவமான வடிவத்தில் எய்தப்படுகிறது. அதுவே உண்மையான உள்நிலையாகும். (சுயத்துடன் ஒன்றுபட்டநிலை, அதாவது நான் என்பது கடவுள், பிரம்மன், பரம்பொருள் அல்லது அவன் என்பதுடன் ஒன்று கலந்த நிலையாகும்). அந்த உள்நிலைத் தன்மைக்கு மேலாகக் கடந்து சென்று விட்டால், இது உள்முக அனுபவத்திலிருந்து கிட்டத்தட்ட நழுவி விழுந்துவிடுகிறது.''

**17-9-1944**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''நான் வாக்குறுதியளித்த அந்த சக்தியை அவருக்கு அளித்திருக்கிறேன் என்ற செய்தியை M1 - க்குத் தெரிவிக்கவும்.''

‘‘ஒரு குறிப்பிட்ட புள்ளியை சுத்திகரிக்க வேண்டியிருந்தால், அதே புள்ளியிலிருந்து பிராணாஹூதி கொடுக்கவும். ஒரு சாதகரை எந்த நிலையினைக் கடக்கச் செய்ய வேண்டியிருந்தாலும், இதயத்தின் அந்தப் புள்ளியிலிருந்தே பிராணாஹூதி கொடுக்கவேண்டும்.’’

## 18–9–1944

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

‘‘சில குறிப்பிட்ட காரணங்களினால் உன்னை அவர் வரச்சொல்லி அழைத்திருந்த விழாவில் கலந்து கொள்ள உன்னால் இயலாதிருக்கிறது என்று S1- க்குக் கடிதம் எழுது. மோசமான அனுபவங்களின் விளைவாக இதயம் நொந்திருக்கிறது. அவருடைய மோசமான செயல்களின் பயன்களை S1- ம் அடையச் செய்வதே சரியானது என்று இப்போது நான் கருதுகிறேன். இருக்கின்ற முடிச்சுக்களை அவிழ்க்க முயற்சிப்பதற்குப் பதிலாக மேலும் சிக்கல்களை உருவாக்க அவர்கள் முயற்சிக்கிறார்கள். எல்லோரும் தங்களது சொந்த போதை மயக்கத்தில் தன்னை மறந்திருக்கிறார்கள். மிகுந்த சிந்தனைக்குப் பிறகு S1 - இன் ஆன்மீக நிலையை முற்றிலும் நீக்கிவிடவேண்டும் என்ற முடிவுக்கு நான் வந்திருக்கிறேன். இது இன்றே செய்யப்பட வேண்டும். M1- இடம் அவரும் கூட எச்சரிக்கையோடு தன் பணியைச் செய்ய வேண்டும் மற்றும் அவருக்கு நியமிக்கப்பட்ட கடமைகளுக்கு முதலிடம் கொடுக்கவேண்டும் என்று சொல்லவும். முடிந்தவரையில் எல்லா நேரமும் அந்தக் கடமைகளைச் செய்வதிலேயே அவர் முனைப்போடு இருக்க வேண்டும். அந்த முக்கியமான வேலைகளை மிக விரைவில் செய்து முடிக்க நான் விரும்புகிறேன். இனிமேல் முடியாதென்ற நிலையை சகிப்புத் தன்மை எட்டியிருக்கிறது. சில குறிப்பிட்ட விஷயங்களைக் கருதி இதுவரையில் S1- ஐ நான் விட்டு வைத்திருந்தேன். S1 மற்றும் C1 ஆகிய இருவரும் பிரம்ம வித்யாவின் (முடிவான சத்தியநிலை பற்றிய விஞ்ஞானம்)

பயிற்சியைப் பெறுவதற்குத் தகுதியானவர்கள் அல்ல. மாஸ்டரைப் பின்பற்றி நடக்கும் கட்டுப்பாட்டின் காரணமாக, நான் ஒன்றும் செய்ய இயலாதிருந்தேன். உன்னிடமிருந்து பிரம்ம வித்யாவைக் கற்றுக்கொள்கிறவர்களுக்கு, பயிற்சியளிப்பதற்கு நீ அனுமதியளிக்க வேண்டாம். அது உனது பிரதிநிதியாக உன்னையடுத்து வரப்போகிறவரின் வேலையாக இருக்கும். விசேஷமாக யாராவது இருந்தால், நீ என்னிடம் ஆலோசனை கேட்கலாம். என்னுடைய கஷ்டங்களைப் பற்றிய சரியான மதிப்பீட்டை யாரும் செய்ய முடியாது. இப்போது எனக்கு பௌதீக உடம்பு இல்லையென்பதால் இந்தக் கஷ்டங்களை நான் அனுபவிப்பதில்லை. பயிற்சியளிப்பதற்கு அனுமதி பெற்றிருப்பதால் கடவுளின் படைப்புக்கு இம்மனிதர்கள் நன்மை செய்யக் கூடியவர்களாக இருப்பார்கள் என்று நான் நினைத்தேன். ஆனால், என் அனுபவம் அதற்கு எதிர்மாறான தீர்மானத்தையே எனக்குத் தந்தது. நமது மார்க்கத்தைச் சேர்ந்த மனிதர்களின் நிலையே இப்படி இருக்கும்போது மற்றவர்களை நான் என்ன குற்றம் சொல்லமுடியும்? கடைசி ஆயுதத்தை நான் பயன்படுத்தும்படி கட்டாயப்படுத்தப்படாமலிருப்பதற்கு கடவுள் கருணை நிறைந்திருப்பாராக. ஆனால், அதற்கான அறிகுறிகள் நல்லதாகத் தோன்றவில்லை. சில மனிதர்களின் விஷயத்தில் அந்தக் கடைசி ஆயுதத்தைப் பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்படுவது சாத்தியம்தான். தனது ஆன்மீகப் பதவிநிலை பறிக்கப்பட்டுவிட்டது என்பதே C1 அறிந்து கொண்டிருக்கிறார். அவருடைய தைரியம் குறைந்துவிட்டது. ஆனால், தனது இந்த பலவீனம் மற்றவர்களுக்குத் தெரியும்படி அவர் விடவில்லை. இதன் பொருள் தெளிவானது. அதாவது என்னுடையவர்கள் என்று நான் நம்பி வேலையை ஒப்படைப்பதற்கு ராம் சந்த்தர் மற்றும் M1 ஆகிய இரண்டு பேரைத் தவிர வேறு யாரையும் நான் கண்டறிய முடியவில்லை.’’

‘‘வேலை செய்வதற்காக M1-க்கு நான் ஒரு வழிமுறையைத் தருகிறேன்.’’ (முன்னெச்சரிக்கையோடு சேர்த்து அந்த வழிமுறை விவரிக்கப்பட்டது.)

‘‘இப்போது எனக்கு பௌதீக உடம்பு இல்லை. எனவே, என்னைப் போலவே பார்த்து நடந்துகொள்வது இயலாது. இப்போது உங்களின் முன்னே ராம் சந்த்தர் உதாரணமாக இருக்கிறார். அவருடைய அனுபவத்தைப்போல, அதே மாதிரி நடந்துகொள்ள ஆரம்பித்தால், அதில் ஏராளமான நன்மை உண்டாகும். M1 - இன் கூருணர்வுத்திறன் திறக்கப்பட்டுள்ளது. (தூண்டப்பட்டுள்ளது) அதில் பயிற்சி தேவைப்படுகிறது.’’

## இதைத் தொடர்ந்து விசேஷ அறிவுரை கொடுக்கப்பட்டது:

‘‘இந்தச் செயல் நுட்பத்தை வேறு யாருக்கும் தெரிவிக்கக்கூடாது. ஏனெனில், இதனால் மக்கள் சரியான பாதையை விட்டு விலகி, வழிதவறிச் சென்று, நம் மார்க்கத்தில் தடைசெய்யப்பட்டுள்ளதாகிய, அற்புதங்களை நிகழ்த்தும் வழியில் போக ஆரம்பித்துவிடுவார்கள் என்பதால் இது தீமையை உண்டாக்கும். ஒருவரைப் பின்பற்றி நடப்பதில், எதைப் பின்பற்றி நடக்கிறோமோ அந்த மனிதரின் உண்மைத் தன்மையும் கூட, தன்னையறியாமலே நம்மீது ஒரு நிழலைப்போல, தன் விளைவை ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறது. எதைப் பின்பற்றுகிறோமோ அதை இது வலிமைப்படுத்துகிறது. மேலும் அனைவராலும் இந்தச் செயல் நுட்பத்தைப் பயன்படுத்த இயலாது.’’

‘‘இப்போது நீ ஒரு வியப்பான காரியம் செய்திருக்கிறாய். நான் மகிழ்ச்சியினால் விம்முகிறேன். இந்தப் பிரபஞ்சத்தின் முடிவு வரையில் பௌர்ணமி நிலவு போல உன் பெயர் பிரகாசிக்கும்படி கடவுள் செய்வாராக. நீ உருவாக்கியுள்ள இந்த வழிமுறை இன்றைய தினம் வரையில் யாருடைய மனத்திலும் ஒருபோதும் தோன்றியதில்லை என்று முழு அத்தாட்சியுடன் நான் சொல்ல முடியும். ஒருவருடைய ஆன்மீக

நிலையைப் பறித்துவிடுவதற்கு இதைவிடச் சிறந்த வேறு ஒரு முறை இருக்க முடியாது. இதுதான் உண்மையான கூருணர்வுத் திறன் என்று சொல்லப்படுகிறது என்பதை M1 - இடம் சொல்லவும். ஆயினும் இந்த வழிமுறையை எல்லோராலும் பயன்படுத்த முடியாது. மிகவும் சிரமமாக இருந்த ஒரு வேலையை இச்சமயத்தில் நீ செய்திருக்கிறாய். நான் அதன் செயலை கவனித்துக் கொண்டு இருந்தேன். அதிலிருந்து ஒரு நன்மையும் கிடைத்திருக்கிறது. ஆனால் அந்தக் குறிப்பிட்ட நன்மையைப் பெறுவதற்காக இந்த வழிமுறையைப் பயன்படுத்தக்கூடாது. ஆயினும் (அந்த நன்மையை சேகரித்துக் கொள்வது சம்பந்தமாக) உன் சங்கல்ப சக்தியின் மூலமாக நீ என்ன செய்ய விரும்புகிறாயோ, அதைச் செய்வதற்கு என் அனுமதி உண்டு. பெரும் எண்ணிக்கையிலான மனிதர்களின் ஆன்மீக நிலைகளை, தன் சங்கல்பத்தினால், ஒரே நிமிடத்தில் பறித்துக்கொள்வதை சாத்தியமாக்குகின்ற ஒரு வழிமுறை இது. ஆயினும் இது தடை செய்யப்பட்டுள்ளது. இந்த வழிமுறையை யாருக்கும் கூறாமல், தன் நெஞ்சிலேயே வைத்திருக்கும்படி M1 - க்கு எச்சரிக்கை செய்துவிடு.''

''யாரிடமாவது அல்லது எந்த இடத்திலாவது என்னை திசை திரும்பச் செய்வதற்கு நேற்றிரவு நீ ஆலோசனை கூறிய வழிமுறை மிகவும் பயனளிக்கக் கூடியது. அந்த வழிமுறையைப் பின்பற்றும்போது, சத்சங்கம் (கூட்டுதியானம்) நடத்துவதற்காக எல்லா இடங்களிலும் ஒரு மனிதரை நியமிக்க வேண்டிய தேவை இருக்காது; ஆயினும் மிகச் சிறப்பான வகையில் நோக்கம் நிறைவேற்றப்படும். சத்சங்கம் நடத்துவதில் இந்தப் புதிய முறையைக் கண்டறிந்ததற்காக நீ பாராட்டை சம்பாதித்திருக்கிறாய். எனது வணக்கத்திற்குரிய மாஸ்டர் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) இதை மிகவும் விரும்புகிறார். எனவே, உடனடியாக இந்த முறையை அறிமுகப்படுத்து. தற்சமயம் இதை ஒப்புக்கொள்வதற்கும், பின்பற்றுவதற்கும் மிகச் சிலர்தான்

இருக்கிறார்கள் என்பது பற்றி கவலைப்பட வேண்டாம். இதை M1 - நாள்தோறும் பயிற்சி செய்ய முடியுமானால், மிக நல்லதாக இருக்கும். இதற்கென நிர்ணயிக்கப்படும் நேரம், வழக்கமாக சத்சங்கம் நடைபெறும் சமயத்திலேயே வருமானால், அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் அங்கேயே, அப்போதே M1 - இனால் இந்தப் புதியமுறை ஆரம்பிக்கப்படலாம். இன்று வரையில் யாருடைய மனத்திலும் தோன்றாத ஒரு புதியமுறை இது; அது எனக்கும் புகழைக் கொண்டு வந்திருக்கிறது. நாள்தோறும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இந்தமுறையைப் பின்பற்றுவது உனக்குத் தேவையில்லை. ஒருவரை முன்னேற்ற நிலைகள் அனைத்தையும் கடக்கச் செய்வதற்கு இந்த வழிமுறை மட்டுமே போதுமானது என்று நான் நினைக்கிறேன்.''

''எனது பிரதிநிதி மற்றும் பதவிக்கு தாங்களே உரியவர்கள் என்று கோருவதில் பலர் மிகவும் முனைப்போடு இருக்கிறார்கள். என் சீடர்கள் என்று சொல்லப்படுகிறவர்களின் கூட்டத்தில் – ராம் சந்த்தரைப்போல உதாரணம் ஏதாவது இருக்கிறதா? தங்களை என் பிரதிநிதியாக – பதவிக்கு உரியவர்களாகக் கருதுகின்ற இம்மனிதர்களின் பெருமை வெறும் பொய்யானது. என்னுடைய கஷ்டங்களின், (தவம், நியமங்களின்) பலனை நான் கண்டுவிட்டதாக உணர்கிறேன். அவரைப் (ராம் சந்த்தரை) பார்க்கும் போது உள்ளே நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இதுவே எனது ஒரே மனத்திருப்தியாகும். எனது ஆன்மீக வம்சத்தில் (பரம்பரையில்) இனி வரப்போகிறவர்களுக்கு இந்த மார்க்கத்தை பிரபலமாக்கி புகழ்பெற விளங்கச் செய்ய வேண்டும் என்று விசேஷமாக அறிவுறுத்த வேண்டும்.''

''இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்பு, உன்னுடைய பணிக்குப் பரிசளிப்பதாகக் கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது. அதாவது பூரணத்துவம் (குறையற்ற முழுமைநிலை) உனக்கு

அளிக்கப்பட்டுள்ளது. நீ புதிதாகக் கண்டறிந்த வழிமுறையைப் பற்றி வணக்கத்திற்குரிய என் மாஸ்டரிடம் நான் தெரிவித்தபோது, அவர் ஆனந்தத்தால் துள்ளிக்குதித்து, என்னைக் கட்டியணைத்துக் கொண்டு, 'என்ன ஒரு அற்புதமான மனிதனை நீ உருவாக்கியிருக்கிறாய்!' என்று வியந்து பாராட்டினார். பிறகு உன்மீது கவனம் செலுத்தி சில நிமிடங்கள் பிராணாஹூதி கொடுத்து, 'அவரை (ராம் சந்த்தரை) கடவுள் எல்லா விதத்திலும் ஈடேற்றுவாராக!' என்று ஆசீர்வதித்தார். நீ முன்னேற்றத்தின் கடைக்கோடி எல்லைக்கு வந்திருக்கிறாய். உனது பிரதிநிதிகளில் எந்த ஒருவரும் இந்த நிலைக்கு வர இயலாமல் போகலாம் என்பதை நான் புரிந்து கொள்கிறேன். நீ தூய்மையான நேர்மை மற்றும் உண்மையின் (Khuloos) – ஒரு மாதிரியாக இருக்கிறாய். உன்னிடமிருந்து பல புதிய கண்டுபிடிப்புகள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். உனது இந்த பரம்பரைச் சங்கிலி (இந்த மார்க்கம் மற்றும் பயிற்சிமுறை) ஒரு பிரகாசத்தை அடையும். மூத்த மாஸ்டர்கள் அனைவரும் இது விஷயமாக இறைதூதர் முகம்மது நபியிடம் பரிந்துரைக்க வேண்டும் என்று ஒருமனதாக நினைக்கிறார்கள். உனது வேதனை நிறைந்த, தளர்ந்த நிலையிலும் கூட அம்மாதிரி ஒரு உன்னதத் தரமான நிலையை எய்தியிருக்கிறாய். இது மிகமிகப் பெரிய முனிவர்களுக்குக் கூட சிரமமானது. உன்னை என் உயிராகவே நான் கருதுகிறேன். என் அன்பு வீணாகிப் போய்விடவில்லை. குறைந்தபட்சம் ஒரே ஒருவராவது அதிலிருந்து உருவாகியிருக்கிறார்.''

''பிரிசெப்டர் பணிக்காக S2 - க்கு அளிக்கப்பட்டிருந்த அனுமதி நீக்கப்பட்டுள்ளது. S1 - இன் ஆன்மீகநிலை முழுமையாகப் பறிக்கப்பட்டுள்ளது.''

19–9–1944

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''நேற்று இரவு நீங்கள் இருவரும் (ராம் சந்த்தரும் M1- உம்) செய்த பணி முதல் தரமாக இருந்தது. S1- இன் வீட்டில் ஒரு விழாவுக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. அந்தத் தேதிகளில் M1 - ஐ அங்கே சென்று நியமிக்கப்பட்ட வேலையைச் செய்யுமாறு சொல்லவும். J1 உங்கள் இருவருக்கும் தன் மரியாதையைத் தெரிவித்தார். வணக்கத்திற்குரிய என் மாஸ்டரின் பரம்பரை உறவை நீ அடைந்திருக்கிறாய். உனக்காக மூத்த மாஸ்டர்கள் இறைதூதர் முகம்மது நபியை நாடிக் கொண்டிருக்கிறார்கள்.''

''மனத்தின் சுபாவங்களை (மனப்பாங்குகளை) அமைதிப்படுத்துவது நோக்கமாக இருக்கும் போது மற்றும் மனிதன் தீவிர உணர்ச்சிகளை நிதானப்படுத்துவதற்கு (அதாவது மனதின் பல்வேறு தீவிரப் பசிகளைக் குறைத்து நிதானத்தை உண்டாக்குவதற்கு) விரும்பும் போது, உலியா (Ulia) எனப்படும் பரப்பிரம்மாண்ட மண்டலத்தின் புள்ளியிலிருந்து பிராணாஹுதி அளிக்கவேண்டும்.(சற்று இடைவெளி) ஆ! இதுதான் 'அன்பு' என்று சொல்லப்படுவது! M1 - க்கு விசேஷ பிராணாஹுதி அளிக்க வேண்டும் என்பது என் நோக்கமாக இருக்க, ராம் சந்த்தர் தானாகவே (அவருக்கு நான் எந்த ஒரு குறிப்பான அறிவுரையும் தராமலே) மிகச் சரியாக அதே காரியத்தைச் செய்ய ஆரம்பித்திருக்கிறார். உனக்கு (M1- க்கு) இப்போது அனுபவத்திற்கு வந்து கொண்டிருப்பது எதுவோ அதுவே உலியா என்பதன் உள்நிலைத்தன்மையாகும். அந்தோ! ராம் சந்த்தரிடமிருந்து நன்மையை அடையப் பெறாமலிருக்கின்ற, துரதிருஷ்டசாலிகளுக்கு என்ன செய்ய முடியும்? என்னால் விரும்பப்படுகிற எண்ணங்கள் மட்டுமே அவரிடத்தில் தோன்றத் துவங்குகின்றன. உதாரணமாக ஃபடேகர் பற்றி அங்கு காட்டுத்தனமான

தன்மையின் மேலாதிக்கம் நிலவுகிறது என்ற செய்தியை நான் கொண்டு வந்தேன். அது நீக்கப்படவேண்டும் என்பதே என் விருப்பமாக இருந்தது. உடனே என்னைக் கேட்காமலே ராம் சந்த்தர் அதை அப்படியே செய்தார். வருங்காலத்தில் ராம் சந்த்தர் எதைச் செய்தாலும், அது என் விருப்பப்படியே செய்யப்பட்டது என்று கருதப்பட வேண்டும். ஆன்மீக உறவுமுறைக்கு இதுவே உதாரணம். உலகியல் உறவுமுறைக்கு S1 - உதாரணமாக இருந்தார். இப்போது S1 - க்கு அந்த உறவும் இல்லை. இந்த நிலை மாறும் உலகை விட்டு நான் சென்றவுடன் அவருக்கு இந்த உறவு மறைந்துவிட்டது. அவர் எடுத்துக் கொண்டது எதுவாயினும், அதை முடிவு வரையில் (கடைசிவரை) மதிப்புடன் செய்கிறவனே மனிதன் ஆவான். உன்னுடைய (ராம் சந்த்தரின்) இப்போதைய நிலையைப் பற்றி நான் இன்னும் எதுவும் சொல்ல முடியாது. இதைவிட இன்னும் அதிகமாகச் சொன்னால் அது கடவுளுக்கு அவமரியாதையாகிவிடும். நீ எங்கெல்லாம் நடந்து செல்கிறாயோ அங்கு உனது காலில்படும் தூசு கூட பலனளிக்கும் தன்மையை எய்திவிடும். இந்த ஒரு சிறப்புத் தன்மை இறைதூதர் ஹஸ்ரத் முகம்மது நபியிடம் இருந்தது. ராம் சந்த்தர் மேலும் ஒரு முறையைக் கண்டறிந்திருக்கிறார் என்ற செய்தியை M1 - இடம் தெரிவிக்கவும். அதைப் பற்றி ராம் சந்த்தர் உன்னிடம் குறிப்பிடும் போது நீ (M1) அதை ரகசியக்குறிப்பு எழுதி வைத்துக்கொள்.''

**20-9-1944**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''மகிழ்ச்சியான செய்தி! ராம் சந்த்தர் (அனைத்து மகான்களாலும்) ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒருவராக (மக்பூல் / Maqbool) – ஆகியிருக்கிறார். இந்தச் சமயத்தில் அவர் அடுத்தடுத்து மூன்று கண்டுபிடிப்புகளைச் செய்திருக்கிறார். கடைசியாக அவர் செய்திருப்பது தங்க எழுத்துக்களால் எழுதப்படத் தகுதியுடையது. கடவுளின் படைப்புக்கு அது மேலும் மேலும்

நன்மைகளைச் செய்யும். இந்தக் கடைசி கண்டுபிடிப்பில், திடீரென்று, ஒரே முயற்சியில் புலன் உறுப்புக்கள் மற்றும் அவற்றின் சக்தி முழுவதையும் உள்ளே இழுத்துக் கொள்ளப்படாதவாறு தடுப்பதற்காக அவற்றின் எல்லை பற்றிய ஒரு மதிப்பீட்டை வைத்திருக்க வேண்டிய தேவை இருக்கும். தேவையான அளவு எவ்வளவோ அவ்வளவு சக்தியைத் தொடாமல் விடவேண்டும். இதை மாஸ்டருடைய பதவிக்குரியவர் மற்றும் பிரதிநிதியாகிய ஒருவரைத் தவிர வேறு யாரும் செய்ய இயலாது. ஏனெனில், அவருக்கு வழிகாட்டுவதற்கு அவருடைய மாஸ்டரின் சக்தி எப்போதுமே துணை இருக்கும்.''

''இந்த மூன்று கண்டுபிடிப்புக்களில் ஒன்று அரசியலில் அதிகம் பயன்படக்கூடியதாகும். இது M1 - இனால் கூறப்பட்ட ஆலோசனையாகும். ராம் சந்த்தரும் அந்த ஆலோசனையின்படி இதை சிந்தித்தார். மற்றபடி அதில் ஆன்மீக நன்மை ஒன்றுமில்லை. இதைப் பற்றி சிந்திப்பதற்கு M1- க்கு இன்னும் அதிக நேரம் கொடுக்க வேண்டும். இதனால் அவர் அதில் சில சீர்திருத்தங்களைச் செய்து கொடுக்க முடியும். பிரியமான ராம் சந்த்தர் வெளிப்படுத்தியுள்ள மற்ற இரு கண்டுபிடிப்புகளும் அற்புதமானவை. அதில் அவர் இப்போது செய்துள்ள திருத்தத்தை நான் மிகவும் விரும்பினேன். இதையும் ரகசியமான குறிப்புக்களில் சேர்த்துக் கொள்ளலாம்.''

''18-9-1944 ஆம் தேதியன்று S2 - க்கு பிரிசெப்டர் பணிக்கான அனுமதி நீக்கப்பட்டுவிட்டது என்று அவருக்குக் கடிதம் எழுதவும். 3-7-1944 மற்றும் 30-8-1944 ஆகிய தேதிகளில் ராம் சந்த்தர் அவருக்குக் கடிதங்கள் அனுப்பியிருந்தார். ஆனால், அதற்கு S2 - பதிலளிக்கவில்லை. அந்தக் கடிதங்கள் பற்றி கவனமும் செலுத்தவில்லை என்பதையும் அதில் குறிப்பிடுங்கள். அவருக்கு எழுதப்பட்டது எதுவாயினும் அது என் உத்தரவினால் தான் என்று

எழுதவும். அவர் இனிமேலும் பயிற்சியளிப்பதைத் தொடர்வாரானால், அது முறையற்ற செயலாக இருக்கும்; அது என் தண்டனைக்குரியதாகும். விரும்பத்தக்க உள்நிலைத் தன்மைகள் மற்றவர்களுக்கு உண்டாக முடியாது என்று அவர் நினைத்துக் கொண்டிருக்கிறாரா? அப்படியானால், அவருடைய பார்வை தேவையான அளவுக்கு விரிவடையவில்லை என்று பொருளாகும். இக்கடிதத்தை என் சார்பில் M1- எழுதுவது சிறப்பாக இருக்கும்.''

**22-9-1944**

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''துருவ நட்சத்திர மண்டலம் (துருவ லோகம்) என்பது உயரிய ஆன்மீக முன்னேற்றமடைந்தவர்கள் இருக்கின்ற இடமாகும். இந்த ஆன்மீக மண்டலத்தை உன்னுடைய பணிக்கு உட்பட்ட இடமாகக் கருது. இந்த மண்டலத்தில் இருப்பவர்களுக்கு பௌதீக உடம்புகள் இல்லை. இன்று வாயு மண்டலத்தின் முழு கட்டுப்பாட்டு அதிகாரத்தை உனக்கு அளிக்கிறேன். (அந்த மண்டலத்தின் இருப்பிடம் பற்றிய ஒரு கருத்துடன், இதன் செயல்திட்டம் மனக்காட்சியில் வந்தது). இதன் செயல்திட்டம் உன் பார்வைக்கு வந்திருக்கிறது. வாயு என்ற மூலப்பொருளுக்கு (பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய வாயுவுக்கு) அசையும் தன்மையை அளித்துக் கொண்டிருக்கின்ற (விசேஷ இயக்கத்தைத் தருகின்ற) மிக மேலான தன்மையுடைய மண்டலம் இதற்கு அப்பால் இருக்கிறது. அந்த மிக மேலான தன்மையுடைய மண்டலத்தை வாயு என்ற மூலப்பொருளின் 'மூளை' என்று சொல்லாம். ஓரளவுக்கு அது சரியான மொழிபெயர்ப்பாக (விளக்கமாக) இருக்கும். இந்த மண்டலம் மனித உடம்பிலும் இருக்கிறது. இந்த மண்டலத்தில் தன்னை ஒன்றுபடுத்திக்கொள்வதன் மூலமாக காற்றில் மிதக்கும் சக்தி எனப்படும் பறக்கும் தன்மையை அடைவதற்கு ஒரு பயிற்சி இருக்கிறது. அது அனைவருக்கும் கொடுக்கப்படுவதில்லை.''

‘‘ஒருவருடைய உள்நிலை பற்றி அறிந்துகொள்ளும் முறை என்னவெனில், முதலில் அம்மனிதருக்கு சிறிது பிராணாஹூதி கொடுத்து, அவருடைய உள்நிலைத் தன்மை எதுவாயினும், அது தன்னை வெளிப்படுத்துகிறது என்ற எண்ணத்தை மனதில் கொண்டிருக்க வேண்டும். இதைச் செய்தபிறகு, தன்னை அம்மனிதரின் பக்கம் கவனம் திரும்பியிருக்கச் செய்ய வேண்டும் (அதாவது அம்மனிதரின் உள்நிலையில் கவனம் செலுத்த வேண்டும்.) பிறகு, தன்னிடமிருந்து அம்மனிதருக்குப் பாய்ந்து கொண்டிருக்கும் சக்தியின் விளைவு எவ்வளவு மேன்மையாக இருக்கிறது என்பதைக் கவனித்தறிய வேண்டும். ஆயினும், பிராணாஹூதி அளித்துக் கொண்டிருப்பவர் – அதாவது பிரிசெப்டர், யாருக்கு பிராணாஹூதி கொடுக்கிறாரோ அம்மனிதரின் ஒவ்வொரு உள்நிலையையும் பற்றிய உணரும் அறிவு உடையவராக இருக்க வேண்டும். விசேஷமானவர்களால் பயன்படுத்தக்கூடிய மற்றும் ஒரு சிறப்பான முறையும் இருக்கிறது. இதுபற்றி பிரியமான ராம் சந்த்தர் அடிக்கடி குறிப்பிட்டிருக்கிறார். அது பிராணாஹூதி பெறுகிறவரின் உள்நிலை பற்றிய அறிவை உடனடியாகப் பெறுவதற்காக, அந்த உள்நிலையை விரிவாக்குவதை உள்ளடக்கியுள்ளது. M1 - இன் ஒரு கேள்விக்குப் பதிலாக இங்கே என்னால் கூறப்பட்டுள்ள இந்த விஷயம் பற்றி பிரியமான ராம் சந்த்தர் நன்கு சிந்திக்க வேண்டும் என்று கட்டளையிடுகிறேன். இதைவிட மேலான ஒன்றைப் பற்றி அவர் (ராம் சந்த்தர்) சிந்திக்க இயலக்கூடும் என்பதும் சாத்தியமே.’’

### நான் பணிவுடன் கூறியது:

‘‘பூரணமானதாக அல்லது ஒட்டுமொத்தமானதாக இல்லாவிட்டாலும் கூட, இதற்கு இன்னும் ஒரு வழிமுறையும் இருக்க முடியும். அதாவது, தனது ஆற்றல் மிக்க மேலான தன்மை மட்டுமே அதன் விளைவை மற்றவரிடம் ஏற்படுத்தும்.’’

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் மகிழ்ச்சியாக வியந்து சொன்னது:**

‘‘இதோ பார் பிரியமான ராம் சந்த்தர், எத்தனை விரைவில் ஒரு கண்டுபிடிப்பைச் செய்திருக்கிறார். இதைவிடச் சிறந்த வழிமுறை வேறு எதுவும் இருக்க முடியாது; ஆனால், நிச்சயமாக இது சம்பந்தமாக முக்கியமாகத் தேவைப்படுவது என்னவென்றால், இதைக் கண்டறிவதற்கான பார்வைத்திறன் தான். அது ராம் சந்த்தருக்கு என்னால் அளிக்கப்பட்டுள்ளது. இந்த மூன்றாவது முறையானது, இறந்துபோன ஒருவரை பிரேத பரிசோதனை செய்வதற்கு ஒப்பானது. அதில் ஒரு அறுவை சிகிச்சை நிபுணர் உடம்பின் உள்ளுறுப்புக்களை வெளியே எடுத்துப்பார்த்து மரணத்திற்கான உண்மைக் காரணத்தைக் கண்டுபிடிக்கிறார். அதுபோலவே, இங்கே ஒரு சாதகரின் உள்நிலையை கவனித்தறிவதற்கு, அது வெளியே வெற்றிடத்தில் கொண்டுவரப்பட்டு, பிராணாஹூதியின் மூலமாக விநியோகிக்கப்படுகிறது. அந்தப் பிராணாஹூதி அதற்குரிய இதயத்தின் புள்ளியிலிருந்து கொடுக்கப்பட வேண்டும். அதன் பிறகு அந்த உள்நிலையில் எந்த சக்திக்கூறுகள் (துகள்கள்) இன்னமும் கடினத்தன்மையில் உள்ளன, எந்த சக்திக்கூறுகள் மேலான உயர்நிலையை அடைந்து தமது உள்நிலையை வெளிப்படுத்தக் கூடியவையாக ஆகியுள்ளன என்பதை நுணுக்கமாகக் கவனித்து அறிய வேண்டும். அதன் உள்நிலையை வெளிப்படுத்தக்கூடிய திறனைப் பெற்றுள்ள சக்திக்கூறுகள், அவற்றிலேயே இருக்கும் மேலான புனிதத் தன்மையின் விழிப்படைந்த நிலைக்கு வந்துள்ளன என்று எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தச் செயல்நுட்பத்தை பிரம்மாண்ட (குப்ரா / Kubra) மற்றும் பரப்பிரம்மாண்ட (உலியா / Ulia) மண்டலங்களில் பயன்படுத்த முடியும். பிரியமான ராம் சந்த்தரின் ஆன்மீக சக்திக்கூறுகள் (க்வான்டா/ Quanta) பற்றிய கொள்கை மிக அதிசயமானது மற்றும் மிகவும் பயனுறுதி உடையது. இந்த அம்சத்திற்குள் இதுவரை எந்த ஒருவருடைய அகப் பார்வையும் (ஞான திருஷ்டியும்)

ஊடுருவிச் சென்றதில்லை; வேறு யாரும் இதைப் பயன்படுத்தியதும் இல்லை. என்னைக் கேட்டால் ஆன்மீகப் பயிற்சியின் முழுமையான மொத்தக் கருத்தும், சாராம்சமும் இதுவே என்று சொல்வேன். இதன் மூலமாக விரும்பிய விளைவை உடனடியாக அடையப் பெறமுடியும். இதன் மூலமாகவே கடவுள் நிலை வரையில் மேலேறிச் செல்வதும் சாத்தியமாகும். லட்சியத்தை அடைவதற்கு இதுவே வழி.''

''அவருடைய அறிவுத் திறனை ஊடுருவச் செய்வதற்காக பிரியமான ராம் சந்த்தரிடம் ஒரு கேள்வி கேட்டேன். நவீனமான முறைகளில் அதற்கு அவர் பதிலளித்தார்.''

''சுஹ்ரவர்தியா குடும்பத்திலிருந்தும் கூட ஆன்மீகப் பயிற்சியளிப்பதற்கு பிரியமான ராம் சந்த்தருக்கு அனுமதி கிடைத்திருக்கிறது. இதன் காரணமாக அந்தக் கூட்டத்தாருடன் சேர்ந்துகொள்ள விரும்புகிறவருக்கு, மிகவும் நன்மை உண்டாகும். இதுவும் கூட ஒரு புதியமுறைதான். யாருடைய உள்நிலை குழம்பியிருப்பதாகக் கண்டறியப்படுகிறதோ அவருக்கு தானாக ஏதும் செய்வதற்குப் பதிலாக அந்த மனிதரை தலை முதல் கால்வரையில் மிக உயர்நிலை சக்திக்கூறுகளுடன் (க்வாண்டா / Quanta) இணைப்பதை இது உள்ளடக்கியிருக்கிறது. இது அந்த மனிதரை மெதுவாக நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்துவிடும். இயற்கையாகவே இது நடக்கும்.''

''அவரது மதிப்புக்குரிய பெரியம்மா (வணக்கத்திற்குரிய லாலாஜியின் மனைவி) ஆன்மீகப் பயிற்சியளிக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்ற ராம் சந்த்தரின் ஆலோசனையை நான் ஏற்றுக்கொண்டு அதற்கு சம்மதிக்கிறேன். அவள் தீட்சையளிக்க இயலாது. சத்சங்கம் நடத்துவதற்கு மட்டுமே அனுமதி உண்டு. பெண்களுக்கு அவள் மட்டுமே பயிற்சியளிக்க வேண்டும். இதுபற்றிய ஒரு அறிவிப்பை பெண்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். M1- இதற்கு சான்றளிப்பார். ஏதாவது விசேஷமான பிரச்னை

வந்தால், ராம் சந்த்தரிடம் ஆலோசனை கேட்க வேண்டும். ராம் சந்த்தர் பெண்களுக்கு பிராணாஹூதி அளிக்க விரும்பினால், என் வழக்கப்படி, அவர்களை ஒரு திரைக்குப் பின்னால் உட்காரச் செய்து, அதன் பிறகு சிட்டிங் கொடுக்க வேண்டும். பெண்களுக்கு சிட்டிங் கொடுப்பதற்கு மற்ற அனைவரும் தடை செய்யப்படுகிறார்கள். ஃபடேகரில் வசிப்பவர்கள் சத்சங்கத்தை விரும்பினால், தங்கள் பெரியம்மாவிடம் (லாலாஜியின் மனைவி) சிட்டிங் பெறலாம். ஆனால், அவர்கள் திரைக்குப் பின் உட்கார வேண்டியதில்லை. இது பற்றி பொது அறிவிப்பு செய்ய வேண்டிய தேவை இல்லை. ஃபடேகரில் இருப்பவர்களுக்கு தனித்தனியே இதைத் தெரிவிக்கலாம். அவள் அளிக்கும் பயிற்சி, நடத்தும் சத்சங்கம் ஆகிய வேலைகளில் B1 அல்லது M3 குறுக்கிடக்கூடாது. அவர்களுக்கு அதில் சம்பந்தம் எதுவுமில்லை. M1 கொஞ்சம் முன்னதாகவே அங்கே போகவேண்டியதாக இருக்கலாம். இதைப்பற்றியெல்லாம் அவரே தீர்மானிக்க வேண்டும். வருங்காலத்தில் பெண்களுக்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது. D2 - ம் கூட அவளிடமிருந்து (லாலாஜியின் மனைவியிடமிருந்து) சிட்டிங் எடுத்துக் கொள்ளலாம்.''

## 24-9-1944

## அன்புள்ள சகோதரர் J1 - கூறியது:

''கடந்த சில நாட்களில் நான் நிறைய இடங்களுக்குச் சென்று, அங்கு நமது சத்சங்க நிலைமை பற்றி ஆய்வுசெய்தேன். (இங்கு சத்சங்கம் என்பது வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் அவர்களுடன் தொடர்புடையவர்களாக ஆன்மீகப் பயிற்சி பெறுகிறவர்களின் அமைப்பைக் குறிக்கிறது.) இங்கு பிரிசெப்டர்களாக பணிபுரிகிறவர்களாகிய எந்த ஒருவரும் தன் வேலையை செய்யக் கூடியவர்களாக இருப்பதை நான் காண முடியவில்லை. அதாவது தங்கள் வேலையை சரியாகச் செய்கிறவர்கள் யாரையும் நான் காண

முடியவில்லை. இதனால் ஒரே ஒருவருக்கு மட்டுமே தலைமைப் பதவி தந்து, அந்த நோக்கத்திற்கு அவர் ஒருவரை மட்டுமே வைத்திருப்பது சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன், மற்ற அனைவரும் அவருடைய வழிகாட்டுதலின் கீழ் வேலை செய்ய வேண்டும். நிலைமையை சரிப்படுத்துவதற்கு இதைத் தவிர வேறு வழி இல்லை. வணக்கத்திற்குரிய மாஸ்டர் லாலாஜி சாகேப் அவர்கள், கடவுளின் பதவியையே தாங்கள் எடுத்துக்கொண்டுவிட்ட, பெரிய பதவிகளில் இருப்பவர்களிடமிருந்து ஆன்மீக நிலையை நீக்கியிருப்பது மிகச்சரியான செயலாகும். இதே வழிமுறையை மற்றவர்களின் விஷயத்திலும் கையாள்வது சாத்தியம். மற்றவர்கள் என்று சொல்லும்போது ஒரு மாஸ்டராக வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் அவர்களுடன் நேரடித்தொடர்பு இல்லாதவர்களைத்தான் குறிப்பிடுகிறேன்.''

## 25-9-1944

**வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:**

''தன் உடலின் உஷ்ணத்தை (சூட்டை) அமைதியாகவும், நிதானமாகவும் வைத்திருக்கின்ற ஒருவன், கூருணர்வுத் திறன் என்ற திறமையைப் பெற்றவனாக இருக்கிறான். ஒரு விசேஷ விதமான இளகும் தன்மையோடு சேர்ந்திருக்கும் எளிமையும் கூட ஒரு அவசியமான உள்நிலைத் தன்மையாகும். குழந்தைகளிடத்தில் முதலிலிருந்தே பெரும்பாலும் இந்தக் குணம் இருக்கிறது.''

''பயிற்சிக்காக இந்த மார்க்கத்திற்குள் ஒருவரை அனுமதிப்பதற்கு முன்பு, பிரம்மவித்யா என்ற (முடிவான சத்தியநிலை சம்பந்தமான விஞ்ஞானம் மற்றும் ஒழுங்குமுறைக் கட்டுப்பாடு என்ற) இப்பயிற்சியை கிரகித்துக் கொள்வதற்கு (உள் வாங்கிக்கொள்வதற்கு) அந்த சாதகருக்கு இருக்கும் திறனை மதிப்பிட்டு முடிவெடுக்க வேண்டும். இதை இயற்கையால் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள நரம்பு மண்டல அமைப்பு

மற்றும் மனத்தின் உருவமைப்பு இவற்றிலிருந்து கண்டறியலாம். இது பொதுவான ஒரு விஷயம். ஒரு பயிற்சியாளரின் பார்வையில் இது உடனடியாகத் தெரிய வேண்டும்.''

''இயற்கையுடன் இசைந்திராத, அதனால், நரம்பு மண்டலத்தில் காணப்படுகிற உஷ்ணத்தின் அளவை, கவனிப்பில் இருக்கின்ற அந்தச் சாதகரின் ஆன்மீக நோயின் பலமான விளைவு என்று எடுத்துக்கொள்ள வேண்டும். இம்மாதிரி மனிதர்களுக்கு தொட்டிக் - குளியல் (tub - bath) என்ற கொள்கை மூலமாக நிவாரணம் தருவது நல்லது. இயற்கை வைத்திய முறை மருத்துவர்கள், உடம்பில் இருக்கும் சீழ் தான் உஷ்ணம் என்று சொல்கிறார்கள். அதற்கான முறையான வழிகளின் மூலமாக தண்ணீரின் உதவி கொண்டு இது நீக்கப்படுகிறது. அதன் விளைவான நிவாரணத்துக்கு இது நல்ல பலன்தரக் கூடியது. அந்தப் பிரச்னையின் தீவிரத்தின் அளவுக்கேற்றபடி, அந்த நோயை நீக்குவதற்கான முயற்சியைக் கொடுப்பது, பயிற்சி அளிப்பவரின் அனுபவத்துடன் சம்பந்தப்பட்டது. இந்த விஷயத்தில் ஒரு விசேஷ முன்னெச்சரிக்கை தேவைப்படுகிறது. ஆன்மீகப் பாதையில் முன்னேற்றத்துக்கு ஒரு தடையாக இருக்கக் கூடியதை மட்டுமே நீக்குவதற்கு, அதற்குத் தக்கபடி அந்த உஷ்ணத்தை சுத்திகரிப்பில் அகற்றும் திறமை தேவைப்படுகிறது. உடலைப் பாதுகாப்பதற்கும், பராமரிப்பதற்கும் இயற்கை அளித்திருக்கும் இயற்கையான உடல் உஷ்ணத்தை நீக்கிவிடாதிருக்க கவனத்துடன் இருக்க வேண்டும். இந்தவிஷயங்களில் ராம் சந்த்தர் முழுமையான நிபுணத்துவம் உடையவராக இருக்கிறார் என்று கருதுகிறேன். சூட்சுமமான கவனிப்புத் திறன் மற்றும் மிகச்சரியான அகப்பார்வை இவற்றுக்கு அவர் ஒரு உதாரணமாக இருக்கிறார். இப்போது குறிப்பிடப்படுவது போன்ற ஒரு சாதகரின் நோயை நீக்குவதற்கு, தன்னால் இயலாமலிருப்பதாக ஒரு பயிற்சியாளர் உணரும்போது, அவர் அந்த மனிதரை ராம் சந்த்தரிடம் அனுப்ப வேண்டும். மேலே

சொல்லப்பட்டது போன்ற ஒரு தவறை அவர் (ராம் சந்த்தர்) ஒரு போதும் செய்யமாட்டார். இந்தப் பயிற்சி எல்லோரும் செய்யக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது. இம்மாதிரி நோயினை நீக்குவதற்கு இப்போது அவர் தெரிவித்த வழிமுறையை விடச் சிறந்த ஒருமுறை இதுவரையில் வேறு யாருடைய சிந்தனைக்கும் வரவில்லை. இது அவரிடம் (ராம் சந்த்தரிடம்) விளங்குகின்ற இயற்கையான வரம்.''

## 26-9-1944

### வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது:

''இந்தப் புதிய கண்டுபிடிப்பை வணக்கத்திற்குரிய என் மாஸ்டரிடம் (ஹஸ்ரத் பூ அலி ஷா கலந்தர்) குறிப்பிட்டுச் சொன்னேன். அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்து உன்னை வாழ்த்தினார். இதைப் பயிற்சியில் அறிமுகப்படுத்தும்படி அவர் சொன்னார். இது விசேஷமான மற்றும் மிகவும் பலனளிக்கக்கூடிய ஒரு வழிமுறையாகும். இதற்கு முன்பு இது யாருடைய சிந்தனையிலும் தோன்றவில்லை. இதை ரகசியமான குறிப்புக்களில் சேர்த்துக்கொள்ள வேண்டும். இது எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்யக்கூடாது. இதைப் பயிற்சி செய்யக்கூடிய திறமை உடையவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். இது முற்றிலும் திருத்தமாக இருக்கிறது. இந்தப் பயிற்சியைச் செய்வதால் M1- நன்மையடைவார். இதில் திருத்தம் சம்பந்தமான ஆலோசனை குளிர்காலத்தில் (மற்றும் குளிர்மிகுந்த சூழ்நிலையில்) பொருத்தமாக இருக்கமுடியாது. உனது மிக முக்கியமான கண்டுபிடிப்பு இந்த பூமி (உலகம்) சம்பந்தமானது. இன்னொரு கண்டுபிடிப்பை இரண்டாவது முக்கியமான ஒன்று என்று சொல்லலாம்.''

### M1-ன் கேள்வி:

''மனம் தனது ஒருமுகப்பட்ட நிலையில் தெய்வங்கள் மற்றும் தேவதைகளின் (பெண் தெய்வங்களின்) தெளிவான வடிவங்களையும்,

அதே போல மூத்த மாஸ்டர்களையும் காட்சியில் கொண்டு வருகிறது. (வடிவமைக்கிறது). மூத்த மகான்களும் அவதாரங்களும் கூட தங்கள் உண்மையான வடிவங்களை மனத்திற்கு வெளிப்படுத்தலாம். இந்த இரண்டுக்கும் இடையே வேறுபாடு கண்டறிவதற்கான வழி என்ன?''

## மாஸ்டரின் பதில்:

''மனம் தனது சக்திக்குத் தகுந்தபடி, உலகைவிட்டுச் சென்றுவிட்ட மாஸ்டரை காட்சியில் கொண்டு வருகிறது என்றால், அப்போது சொந்த மனத்தினால் உருவாக்கப்பட்ட வடிவத்திலிருந்து வரும் மாஸ்டரின் கனிவான அருளின் தனித் தன்மையானது அந்தத் தொடர்பில் உள்ளடங்கியதாக இருக்கும். அது மாஸ்டரின் உண்மையான வருகை நேர்ந்தால் ஆற்றலைப் பெறத் துவங்கும். மனதினால் உருவாக்கப்பட்ட இன்னொரு முறையில் இது அப்படி இருக்காது. மாஸ்டர் உண்மையாகவே உங்கள் முன்னால் இருக்கும்போது இதயத்தில் தூய்மையான நேர்மைப் பண்பு (குலூஸ் / Khuloos) வரும் மற்றும் மனதின் எண்ணப்போக்கில் தானாகவே லேசான தன்மை தோன்றும். இதற்கு மாறாக ஒருவன் தானே மனதில் உருவாக்கிக்கொள்ளும் போது இந்த மாதிரியான எதுவுமே தோன்றாது. தெய்வங்களும், தேவிகளும் தாங்களாகவே ஒருவரைத் தேடிவரும் விஷயத்தில், அந்தத் தெய்வம் அல்லது தேவியின் குறிப்பிட்ட விசேஷ குணம் அவருடைய இதயத்தில் உயர்வடையத் துவங்கும். அவருடைய மனப்பாங்கும் அதற்கேற்றவாறே உருவாக்கப்படும். ''

''இதுவரையில் மக்கள் தங்கள் மனங்களால் உருவாக்கப்பட்ட வடிவத்தையே நான் என்று கருதி மிகவும் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். நான் அவர்கள் முன்னே உண்மையாகவே வந்தபோது, என்னை அடையாளம் தெரிந்துகொள்ளும் நுண்ணறிவு யாருக்குமே இல்லாமல் போயிற்று.''

## M1- இன் கேள்வி:

''உடலால் மறைந்து போன மாஸ்டரை அவர் பிரிந்து சென்று விட்டார் என்று கருதுகின்ற ஒரு சகோதரருக்கு மாஸ்டருடைய மகத்துவத்தை நிலைநிறுத்துவதற்காக இதன் மூலமாக மாஸ்டரின் பெருஞ் சிறப்பையும், தீட்சையையும் அவருக்கு உணரச் செய்வதற்கு தவறாத பரிந்துரை ஏதாவது இருக்கிறதா?''

**(இங்கே M1 ஒரு அனுபவத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார். 30 அல்லது 31-12-1942 என்ற தேதியில் விடியற்காலை 4 மணிக்கு B என்ற ஜில்லாவில் K……என்ற இடத்தில் S1 மற்றும் M1 ஆகிய இருவரும் தியானத்தில் உட்கார்ந்திருந்தபோது, S1 - க்கு ஒரு மனக்காட்சி உண்டாயிற்று. அதில் வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் M1 - ஐயும் C1- ஐயும் பார்த்து தன்னுடைய பரம்பரை (வம்சம்) வீணாகிப்போயிற்று என்று சொல்கிறார். ஆயினும், எதுவும் சொல்லாமல் அவர் S1 - ஐ மட்டுமே அவர் பார்க்கிறார். இதை S1 தன்னைப் பொறுத்தவரையில் தான் சரியாகவே இருப்பதாகவும், மாஸ்டர் குறை கூறியது, மேலே குறிப்பிட்ட M1 மற்றும் C1 ஆகிய மற்ற இரண்டு பேரைத்தான் என்றும் பொருள் கூறினார்.)**

## வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில்:

'' S1 எதற்கும் பயனற்றவராக மாறிவிட்டார். C1 உடன் அவர் சேர்ந்து பழகுவது நல்லதல்ல. இவர்கள் இருவருமே என்னைப் பின்பற்றவில்லை. K……..என்ற அந்த இடத்தில் S1 - க்கு நான் மகிழ்ச்சியான ஒரு உண்மையைப் பற்றி குறிப்பு கொடுத்தேன். இது அவருடைய இதயத்தைத் தொடும். எனவே, அவர் தன்னை சீர்திருத்திக் கொள்ளத் துவங்குவார் என்று நினைத்தேன். அப்போது என் ஆன்மீக வம்சம் முழுவதையும், உன்னையும் (ராம் சந்த்தரையும்) கூடச்

சேர்த்துத்தான் நான் சொன்னேன். இது ஏனென்றால், நான் இவ்வுலகில் இருந்தபோதிலும் உன் இதயத்தை நீ வேறு யாருக்கோ கொடுத்திருந்தாய் என்பதால்தான். வருங்காலத்தில் இந்த விஷயத்தில் கடுமையான முன்னெச்சரிக்கை இருக்கவேண்டும். அது எப்படியிருந்தாலும் யாருக்கோ உன் இதயத்தைக் கொடுத்ததில், ஏதோ ஒரு விசேஷம் இருந்தது. நீயும் உன் இதயமும் உண்மையில் முழுமையாக என்னிடம் ஈர்க்கப்பட்டதாகவே இருந்தன. அன்பின் அமைதியற்ற தன்மையினால், மற்றவர்களை நீ நாடியிருந்தாய். உனது உள்நிலைத் தன்மையில் எளிமையும் சேர்ந்திருந்தது. இதனால் நீ மன்னிப்பைப் பெற்றாய். இல்லாவிடில் மற்றவர்களைப் போல நீயும் என் தண்டனைக்கு ஆளாகி இருப்பாய்.''

## The End

(ஷாஜஹான்பூர் ஸ்ரீ ராம் சந்த்தர் ஜியின் சுயசரிதம் பாகம் 2 – ல் முதல் தொகுதி 'உருவாக்கம்' என்பது இங்கு முடிவடைகிறது. இரண்டாவது தொகுதியாகிய 'பொது அறிவிப்பு' 7–10–1944 ஆம் தேதியிட்ட முதல் குறிப்புடன் தொடங்குகிறது. அது இதைத் தொடர்ந்து வெளிவரும்.

–தொகுப்பாசிரியர்.)